மேல்நிலைப் பணவியல்

(ADVANCED CURRENCY)

பி. அப்துல் ரஸாக்

தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்

த. பா. நி. (க.வெ.) வரிசை எண்—82865

மேல்நிலைப் பணவியல் 1

(பட்டப் படிப்பிற்குரியது)

ஆசிரியர்

பி. அப்துல் ரசாக், எம். காம்.,
வணிகவியல் பேராசிரியர்,
மன்னர் கல்லூரி,
புதுக்கோட்டை.

தமிழ்நாட்டுப் பாடநூல்

First Edition — November, 1978
Number of Copies — 2000
T.N.T.B.S. (C.P.) No. 828

© Government of Tamilnadu

ADVANCED CURRENCY

P. ABDUL RAZAK

Price Rs. 10-40

Published by the Tamilnadu Textbook Society under the Centrally Sponsored me of Production of books and regional languages at the level, of the Government of istry of Education and tment of Culture)

s been printed on made available by the dia.

TERS

அணிந்துரை

(திரு. செ. அரங்கநாயகம், தமிழகக் கல்வி அமைச்சர்)

தமிழைக் கல்லூரிக் கல்வி மொழியாக ஆக்கிப் பதினெட்டாண்டுகள் ஆகிவிட்டன. குறிப்பிட்ட சில கல்லூரிகளில் இளங்கலை வகுப்புவரை மாணவர்கள் தங்கள் பாடங்கள் அனைத்தையும் தமிழிலேயே கற்று வந்தனர். 1969ஆம் ஆண்டிலிருந்து அறிவியல் பாடங்களையும் தமிழிலேயே கற்பிக்க ஏற்பாடு செய்துள்ளோம். தமிழிலேயே கற்பிப்போம் என முன்வந்துள்ள கல்லூரி ஆசிரியர்களின் ஊக்கம், பிற பல துறைகளில் தொண்டுசெய்வோர். இதற்கெனத் தந்த உழைப்பு, தங்கள் சிறப்புத் துறைகளில் நூல்கள் எழுதித்தர முன்வந்துள்ள தூலாசிரியர்கள் தொண்டுணர்ச்சி இவற்றின் காரணமாக இத்திட்டம் நம்மிடையே மகிழ்ச்சியும் மனநிறைவும் தரத்தக்க வகையில் நடைபெற்று வருகிறது. இவ்வகையில் கல்லூரிப் பேராசிரியர்கள் கலை, அறிவியல் பாடங்களை மாணவர்களுக்குத் தமிழிலேயே பயிற்றுவிப்பதற்குத் தேவையான பயிற்சியைப் பெறுவதற்கு மதுரைப் பல்கலைக்கழகமும் சென்னைப் பல்கலைக் கழகமும் ஆண்டுதோறும் எடுத்துவரும் பெருமுயற்சியைக் குறிப்பிட்டுச் சொல்லவேண்டும்.

வரலாற்றியல், அரசியல், உளவியல், பொருளியல், மெய்ப் பொருளியல், புவியியல், புவியமைப்பியல், மக்களியல், கணிதவியல், இயற்பியல், வேதியியல், உயிரியல், வானியல், புள்ளியியல், விலங்கியல், தாவரவியல், பொறியியல், சட்டவியல் ஆகிய எல்லாத் துறைகளிலும் மூலநூல்கள், மொழிபெயர்ப்பு நூல்கள் என்று இரு வகையிலும் தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம் நூல்களை வெளியிட்டு வருகிறது.

இவற்றுள் ஒன்றான மேல்நிலைப் பணவியல் என்னும் இந்நூல் தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனத்தின் 828ஆவது வெளியீடாகும். கல்லூரித் தமிழ்க் குழுவின் சார்பில் வெளியான 35 நூல்களையும் சேர்த்து இதுவரை 863 நூல்கள் வெளிவந்துள்ளன. இந்நூல் மைய அரசு, கல்வி, சமூக நல அமைச்சகத்தின் 'மாநில மொழியில் பல்கலைக்கழக நூல்கள் வெளியிடும் திட்ட'த்தின்கீழ் வெளியிடப்படுகிறது.

தமிழில் பயிலும் மாணவர்கள் உலக மாணவர்களிடையே சிறந்த இடம் பெறவேண்டும் என்பதே நம் குறிக்கோளாகும். கல்லூரிகளிலும் பல்கலைக்கழகங்களிலும் கலையியற் பாடங்களையும், அறிவியற் பாடங்களையும், தொழில்நுட்ப அறிவுப் பாடங்களையும் பயிலுகின்ற மாணவர்கள், அவற்றைத் தமிழில் பயிலவேண்டும் என்பதை வலியுறுத்தி வருவதற்குக் காரணம், தமிழறிவு வளர வேண்டும் என்பதைவிட, தமிழ் மக்களின் அறிவு ஆற்றல் எளிதாக, விரைவாக வளரவேண்டும் என்பதுதான். 'எதிலும் தமிழ்; எங்கும் தமிழ்' என்னும் குறிக்கோளை நிறைவேற்ற வேண்டிய கடப்பாடு தமிழக ஆசிரியப் பெருமக்களையும் மாணவர்களையும் சார்ந்ததாகும். தமிழ்நாட்டுப் பல்கலைக்கழகங்களின் பல்வகை உதவிகளுக்கும் ஒத்துழைப்புக்கும் நம் மனம் கலந்த நன்றி உரியதாகுக!

செ. அரங்கநாயகம்

பொருளடக்கம்

பக்கம்

1. பணத்தின் தோற்றம் ... 1

ஆதிகுடிகளின் பணம்—பண்டைக்கால குடிகளின் பணம் — நிலமானிய ஆட்சி முறையில் பணம், கி. பி. 500-1100 — மறுமலர்ச்சிக் காலத்தில் பணம், கி. பி. 1100-1600—பதினேழு மற்றும் பதினெட்டாம் நூற்றாண்டுகளில் பணம் — போர் மற்றும் புரட்சிக் காலங்களில் பணம், 1775-1815 —நெறியான பணமுறைக் காலம், 19ஆம் நூற்றாண்டு — இருபதாம் நூற்றாண்டில் பணம்.

2. பணத்தின் தன்மையும் பணிகளும் ... 13

பணத்தின் இலக்கணம்—பணத்தின் பணிகள்— முதலாளித்துவப் பொருளாதார அமைப்பில் பணம்— பொது உடைமைப் பொருளாதார அமைப்பில் பணம்.

3. பணத் திட்டங்கள் (அ) ... 30

பணத் திட்டங்களின் வகைகள்—திட்டப் பணமும் கடன் பணமும்—பணத் திட்டங்களின் உள்நாடு மற்றும் பன்னாடு - ஆய்வு — உள்நாட்டுப் பொன் திட்டத்தின் நன்மைகள்—நம்பிக்கை — பணவாக்க முறை தானாக இயங்குதல்—விலை நிலைபெறுதல்— உள்நாட்டுப் பொன் திட்டத்தின் தீமைகள்— விரும்பத்தக்க காலத் திட்டம்—தானாகச் செயல்படுதலின் விளைவுகள்—விலை மட்டத்தில் அலைவுகள்— பொன் திட்டத்தின் வகைகள் — பொற்காசுத் திட்டம்—பொன் வடிவில் பணத்தின் அலகு— பொன்னைக்கொண்டு பொற்காசுகளைப் பெறுதல்— பொற்காசு ஒரு சட்ட நாணயம்—தடையிலா பொற் சந்தை—கடன் பணம் பொன்னாக மீட்கப்படுதல்— (கிரஷெஹம் விதி)—பொற்கட்டித் திட்டம்—பொன்

பக்கம்

மாற்றுத் திட்டம்—பொன் மாற்றுத் திட்டத்தின் சிறப்புகள்—குறைபாடுகள் — பன்னுட்டுப் பொன் திட்டம் — பன்னுட்டுப் பொன் திட்டத்திற்கான அவசியக்கூறுகள் அல்லது பொன் திட்ட ஆட்டத் தின் விதிகள்—பொன் திட்டம் பல நாடுகளால் பின் பற்றப்படுதல் — தேவையான பொன் இருப்புப் பரவலாக இருத்தல் — தடையிலா அயல்நாட்டு வாணிகம்—பன்னுட்டுக் கடன் சுமை தவிர்க்கப்படு தல் — உள்நாட்டில் பொருளியல் நிகழ்ச்சி — நன் மைகள்—விலைமட்டம் சமநிலைப்படுத்தப்படுதல்— விலை–பொன் இடப்பெயர்ச்சிக் கோட்பாடு— பன்னுட்டு மாற்றுச் சாதனமும் மதிப்பளவையும்— குறைகள் — பொன்திட்டம் முறிவடைதல் — பன் னுட்டு வாணிபத்திற்குத் தடைகள்—சமமற்ற பொன் பகிர்வு — விலைக் கட்டுப்பாடு — பொன்மாற்றுத் திட்டம் ஆளப்படுதல்—பன்னுட்டு அளவில் கடன் படுதல்—நிலையற்ற அரசியல்—மந்த நிலை — இரண் டாம் உலகப்போரும் பொன்னும்.

4. பணத் திட்டங்கள் (ஆ) ... 61

இரு உலோக முறை—இரு உலோக முறையின் இயல்புகள்—இரு உலோக முறைக்கு ஒட்டிய கூற்று —பண இருப்புக் கூடுதலாக்கப்படுதல் — நிலையான விலைமட்டம்—நாணயமாற்று வீதத்தில் சமநிலை— இரு உலோக முறைக்கு வெட்டிய கருத்து—நடை முறையில் ஓர் உலோக முறை — மதிப்பு வீதப்பாடு நிர்ணயித்தல் முடியாமை—நடை முறையில் இரு உலோக முறை — கிரஷெஹமின் விதி — வெள்ளி நாணயத் திட்டம் — ஓர் உலோகத் திட்டம் —தாள் பணத்திட்டம் அல்லது ஆணைப் பணத் திட்டம் அல்லது மேலாண்மைப் பணத்திட்டம்— ஆணைப் பணத்தின் நிறைகள்—குறைகள்—பன் னுட்டு வாணிபத்தில் குழப்பங்கள்—மிகையான அளவு தாள் பணம் வெளியிடப்பட்டதால் தோன் றும் அபாயம்—தாள் பண வெளியீடு—செலாவணி முறைக் கருத்து—வங்கிமுறைக் கருத்து—தாள் பண வெளியீட்டு முறைகள்—எளிய வைப்புமுறை— பெரும நம்பக வெளியீட்டு முறை—நிலைபெயரா

பக்கம்

நம்பக வெளியீட்டு முறை—வீத அளவுக் காப்பு முறை—குறுமக் காப்புமுறை—மேலுதிய வைப்பு முறை.

5. பணத்தின் மதிப்பு (அ) குறியீட்டெண்கள் 81

பொருளின் விலையும் பணத்தின் மதிப்பும்—குறியீட்டெண்கள்—விலைவாசிகளின் குறியீட்டெண்கள் அமைத்தல்—தள ஆண்டு தேர்ந்தெடுத்தல்—குறியீட்டெண் அமைக்கப்படும் முறை—நிறையிட்ட குறியீட்டெண்—குறியீட்டெண் தயாரிப்பதிலுள்ள சிக்கல்கள் — குறியீட்டெண்களின் பயன்கள்.

6. பணத்தின் மதிப்பு (ஆ) பண அளவுக் கோட்பாடு ... 97

நடவடிக்கைகள் கோட்பாடு—ஃபிஷரின் மாற்றுச் சமன்பாடு (அல்லது பேரச் சமன்பாடு)—ஃபிஷரின் மாற்றுச் சமன் பாட்டிலுள்ள எடுகோள்கள் — சமன்பாட்டிலுள்ள காரணிகள் - விளக்கம்—பண அளிப்பை நிர்ணயிக்கும் காரணிகள் — பணச்சுழல் வேகம் (V)—வாணிப அளவு (T) — விலைமட்டம் (P)—பண அளவுச் சமன்பாட்டின் குறைபாடுகள்.

7. பணத்தின் மதிப்பு (இ) ரொக்க இருப்புக் கோட்பாடு ... 121

பண அளவுக் கோட்பாட்டில் ரொக்க இருப்புச் சமன்பாடு—பிகுவின் கூற்றும் சமன்பாடும்—கீன்ஸ் தந்த சமன்பாடு—இராபர்ஸனின் சமன்பாடு—ரொக்க இருப்புக் கோட்பாட்டின் மதிப்பீடு—சிறப்புகள்—குறைபாடுகள் — பேரச் சமன்பாடும் ரொக்க இருப்புச் சமன்பாடும்.

8. பணத்தின் மதிப்பு (ஈ) பணத்தின் பண்டக் கோட்பாடு 134

பொன்னின் அளிப்பு — பொன் உற்பத்தியின் தெகிழ்ச்சி—பொன்னின் தேவை — பண்டக் கோட்பாட்டை மாற்றுரிமையற்ற காகிதப் பணத்திற்குப் பொருத்துதல்—பண்டக் கோட்பாடு மதிப்பீடு.

பக்கம்

9. நாட்டு வருமானம் ... 142

ஒரு சிறு பொருளாதாரத்தில் சுழல் ஓட்டம்—நாட்டு வருமான ஓட்டம்—சேமிப்பும் முதலீடும்—சுழல் ஓட்டத்தில் சேமிப்பும் முதலீடும்—நாட்டு வருமானக் கணக்குகள் — நாட்டு மொத்த உற்பத்தி—நாட்டு நிகர உற்பத்தி—காரணி விலையில் நாட்டு வருமானம்—ஆள்சார் வருமானம் — செலவழிப்பு வருமானம்.

10. வருமானம் நிர்ணயித்தல் (அ) நுகர்வுச் சார்பு ... 153

நுகர்வுச் சார்பு — இறுதிநிலை நுகர்ச்சி மற்றும் சேமிப்பு நாட்டங்கள் — சராசரி நுகர்வு மற்றும் சேமிப்பு நாட்டங்கள்—சமநிலை வருமானம் நிர்ணயித்தல்—கசிவுகள் — வருமானம் நிர்ணயித்தல் (வரைபட அணுகுமுறை)—முதலீட்டுப் பெருக்கி.

11. வருமானம் நிர்ணயித்தல் (ஆ) முதலீட்டுச்சார்பு ... 170

மூலதனச் சொத்தின் திறன்—முதலீட்டுச் சார்பு—முதலீடும் வட்டி வீதமும்—வணிகக்கோட்டின் வட்டி நெகிழ்ச்சி—வேகப்படுத்தி (முடுக்கி)—பெருக்கியும், வேகப்படுத்தியும்-பின்னிய செயல்கள்—பெருக்கி-வேகப்படுத்தி ஆய்வின் நிபந்தனைகள்—அரசின் வரவு-செலவு திட்டத்தினால் ஏற்படும் விளைவுகள்—அரசுச் செலவுகளினால் ஏற்படும் விளைவு—வரிகளால் ஏற்படும் விளைவு—அரசு மாற்றுகைகளின் விளைவு.

12. வீக்கமும் வாட்டமும் ... 193

தேவை-இழுப்பு வீக்கம்—செலவு-உந்து வீக்கம்—வீக்க இடைவெளி—வீக்க இடைவெளியும் மெய் வீக்கமும் — வீக்கத்தின் வகைகள் — வீக்கத்தின் விளைவுகள் — ஒப்பந்தத் தொடர்புகள் — உற்பத்தி முறையில் மாற்றம்—ஏனைய விளைவுகள்—வாட்டம்-வாட்டத்தின் விளைவுகள்—வீக்கமும் வாட்டமும்—வீக்கத்தையும் வாட்டத்தையும் கட்டுப்படுத்தும் முறைகள்.

பக்கம்

13. பணமும், வாணிபச் சுழலும் ... 227

வாணிபச் சுழல் — ஒரு மாதிரிச் சுழல்—கீழ்த் திருப்புமுனை — மேல் வீச்சு — சரிவும் மந்தமும்—முடிவு.

14. பணவாக்கக் கைகோள் ... 236

பொருள் வடிவில் ஒரு பணத்தின் அலகு நிலைப் பேராக்கம் செய்யப்படுதல்—விலை மட்டமும் பணக் கைகோளும் — நடுநிலையான பணக்கொள்கை—முழு வேலை மட்டம் எய்துதல்—பொருளாதார முன்னேற்றம்—நாணயமாற்று வீதம் நிலைப்படுத்தப் படுதல்—மாற்றுக் கைகோளான அரசிறைக் கைகோள் — குறைபாடுகள் — பிரச்சினைகள் — பணவாக்கக் கைகோளும் அரசிறைக் கைகோளும்.

15. இந்தியச் செலாவணியின் வரலாறு ... 258

வெள்ளித் திட்டம், 1835-92—ஒரே மதிப்புள்ள ரூபாய்—தாள் செலாவணிச் சட்டம், 1861—மேன்ஸ் ஃபீல்டு குழு—வெள்ளித் திட்டத்தின் வீழ்ச்சி—ஃபௌலர் குழு, 1898—பொன் மாற்றுத் திட்டம்—பொன் மாற்றுத் திட்டம் முறிவடைதல்—பாபிங்டன் ஸ்மித் குழு — ஹில்டன் யங் குழு—செலாவணி மாற்றுத் திட்டம், 1927-35—இரண்டாம் உலகப்போர் — பன்னாட்டுப் பண நிதியும் இந்தியச் செலாவணியும்—தாள் பண வெளியீடு—பதின்மான முறை — பிற நாடுகளில் பதின்மான முறை—செலாவணி வெளியீடு—ரூபாயின் மதிப்புக் குறைப்பு.

16. பணச் சந்தை ... 290

பணச் சந்தையின் அமைப்பு — வளர்ச்சிபெற்ற பணச் சந்தையின் இயல்புகள்—பணச் சந்தையின் பணிகள்—இலண்டன் பணச் சந்தை — அமைப்பு முறை— வங்கிகள் — ஏற்பகங்கள் — கழிவகங்களும்

மாற்றுச் சீட்டுத் தரகர்களும் — நியூயார்க் பணச் சந்தை — இந்தியப் பணச் சந்தை — இயல்புகள் (குறைகள்)—இந்திய மாற்றுச்சீட்டுச் சந்தை—ஆய்வுக் குழு—நிபந்தனைகள்—மாற்றுச்சீட்டு முறை வளர்ச்சிக்கான வழிமுறைகள்.

17. மைய வங்கி ... 313

மைய வங்கியின் இலக்கணம்—மைய வங்கியின் பணிகள் — பண வெளியீடு — அரசு வங்கி—உறுப்பு வங்கிகளின் ரொக்க இருப்புப் பாதுகாவலன்–நாட்டின் அன்னியச் செலாவணி இருப்புப் பாதுகாவலன் — இறுதி நிலைக் கடன் ஈவோன் — வங்கிகளின் தீர்வகம்—கடன் கட்டுப்படுத்துநர்—கடன் கட்டுப்பாட்டு முறைகள் — கடன் அளவுக் கட்டுப்பாட்டு முறைகள் : வங்கி வீதக் கொள்கை ; வெளிச் சந்தை நடவடிக்கைகள் ; ரொக்க இருப்பு வீத மாறுதல் ; கடன் தன்மைக் கட்டுப்பாட்டு முறைகள்: கடன் பங்கீடு ; நேரடி நடவடிக்கை ; குறும அளவு துணைக் காப்பு வைத்தல்; நுகர்வோர் கடன் நெறிப்படுத்தப்படுதல்; வரம்புத் தேவைகளை நெறிப்படுத்தல் ; அறிவுறுத்தல்; பொது விளம்பரம்—மதிப்பீடு—மைய வங்கி நாட்டுடைமையாதல்—இந்திய ரிசர்வ் வங்கி—ரிசர்வ் வங்கி அமைத்தல் — செலாவணியின் புற மதிப்பு நிலைப்படுத்தப்படுதல்—வளர்ச்சி நிதி நிறுவனங்கள்—அரசு மற்றும் வணிகத் துறைகளுக்குக் கடன் அளித்தல்.

18. வணிக வங்கியும் பண அளிப்பும் ... 353

முதன்மைப் பணிகள் — துணைப் பணிகள்—முகமைப் பணிகள்—பொதுப் பயன்பாட்டுப் பணிகள்—வங்கிய முறை—வைப்புகளின் வளர்ச்சி—கடன் விரிவாக்கம்—கடனுக்குக் கொள்கை—கிளைகள் விரிவாக்கம்—கடனுக்கம் — ரொக்க ஓட்டமும் வைப்பு மாற்றமும்—கடன் (வைப்புகள்) பெருக்க எல்லைகள்—முற்றுரிமை வங்கியில் கடன் பெருக்க எல்லைகள்—பல வங்கிகள் கொண்ட முறையில் ஒரு வங்கியின் கடன் விரிவாக்க எல்லை—வரையறைகள்.

பக்கம்

19. செலுத்து நிலை ... 380

செலுத்துநிலைக் கணக்குப் பதிவு செய்தல்—செலுத்துநிலை எப்போதும் சமமாக இருக்கும்—நடப்புக் கணக்கு—பணிகள்—மூலதனக் கணக்கு—செலாவணிப் பொற்கணக்கு—இந்தியாவின் செலுத்துநிலை, 1972-73—இறக்குமதிகள்—ஏற்றுமதிகள்—கட்புலனாகா இனங்கள்—மூலதன நடவடிக்கைகள்—செலுத்து நிலையில் சமநிலைக்கேட்டை திருத்தம் செய்தல்—நிலையான மாற்று வீதம்—விலை-பொன்-இடப்பெயர்வுக் கோட்பாடு—நிலையான மாற்று வீதத்தில் வருமான மாற்றங்கள்—மாறும் நாணய-மாற்று வீதங்கள்—வாங்குந்திறன் சமநிலைக் கோட்பாடு—திறனாய்வு—நாணயமாற்றுக் கட்டுப்பாடு—நாணயமாற்றுத் தடைகள்—அன்னியச் செலாவணி பங்கீடு செய்யப்படுதல்—பல நாணய மாற்று வீதங்கள்—இருவீத முறை.

20. அன்னியச் செலாவணி ... 415

நாணயமாற்று நடவடிக்கைகளின் வகைகள்—நாணயமாற்று நடவடிக்கைகளுக்கான அவசியம்—நட்டத்தடைப் பேரம்—சமமாக்கிய நடை இருப்புகள்—நாணயமாற்று வீதம்—மாற்று வீதம் நிர்ணயிக்கப்படுதல்—ஆர்பிட்ரேஜ்—மும்முனைச் செலாவணி மாற்றம்.

21. பன்னாட்டுப் பணநிதி ... 431

கீன்ஸ் திட்டம்—ஒயிட் திட்டம்—பன்னாட்டுப் பணநிதி-தொடக்கமும் செயல் முறையும்—பணநிதியின் நோக்கங்கள்—மேலாண்மை—பணநிதியின் கடனளிப்பு நடவடிக்கைகள்—துணைநிற்கும் உடன்பாடுகள்—பன்னாட்டுச் செலாவணிக் காப்பிருப்புகள்—சிறப்பு எடுப்பு உரிமைகள்—SDR மாற்றங்கள்.

மேற்கோள் நூற்பட்டியல் ... 446

கலைச்சொற்கள் ... 449

1. பணத்தின் தோற்றம்

(Evolution of Money)

பணத்தின் வரலாற்றையும் அது வளர்ந்த விதத்தையும் நோக்குங்கால் ஒரு குறிப்பிட்ட காலத்தையோ, குறிப்பிட்ட நாட்டையோ காரணமாகக் கூற முடியாது. பல்வேறு நாடுகளில் பல்வேறு காலங்களில் பல்வேறு வகைப் பணங்கள் கையாளப்பட்டிருக்கின்றன. வாணிபம் தொடங்கிய காலத்திலிருந்தே பணமும் உருவாகியிருக்கிறது. மேலை நாட்டுப் பொருளாதார சமுதாயத்தை எடுத்துக் கொண்டால் பணம் இரு நிலைகளில் வளர்ந்திருக்கிறது. ஒரு நிலையில், பயன்பாடுடைய பொருள்களே பணமாக பயன்படுத்தப்பட்டுள்ளன. மற்றொரு நிலையில் பயன்பாடற்ற பொருள்கள் கருத்தளவுப் பணமாக (abstract forms) கையாளப்பட்டுள்ளன. தற்காலத்திலும் இரண்டாவது நிலையில் கூறப்பட்டதுதான் நடைமுறையில் பணமாக ஆளப்படுகிறது. மேலை நாடுகளில் பணம் வளர்ந்த விதத்தைப் பார்த்தால் வாணிகர்களின் கூட்டு முயற்சியும் அரசுக் கொள்கைகளும்தான் காரணமெனப் புலப்படுகிறது.

பண வளர்ச்சிக்கு ஒரு குறிப்பிட்ட காலத்தைச் சுட்டிக்காட்ட முடியாவிட்டாலும் அது எவ்வாறு பல சமூகத்தினரிடையே படிப்படியாக வளர்ந்து வந்துள்ளது என அறியலாம். சமூகத்தினரிடையே பல பண்டங்கள் எந்த அளவுக்குப் பயன்பட்டதோ, அதன் அடிப்படையில் அப் பண்டங்களுக்குப் பணத்தின் நிலையே அளிக்கப்பட்டுள்ளது. ஒரு பொருள் பணமாக இருக்க வேண்டுமென்றால் அது எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்படத்தக்கதாகவும், உறுதியுடையதாகவும், இடமாற்ற எளிமையுடையதாகவும், பகுப்புடைமை செயயதக்கதாகவும், இருத்தல் அவசியம். நாடோடிப்புற வாசிகள் (முல்லைப்புறம்) வீட்டு விலங்குகளைப் பணமாகக்கொண்டனர். குடியேற்ற அமெரிக்க நாட்டில் (Colonial America) புகையிலையும், ஐரோப்பிய நாடுகளில் சிகரெட்டும் (போர்க்காலங்கள் வரைக்கும்) பணமாகக் கையாளப்பட்டிருக்கின்றன. நாளடைவில், பணத்தை மிகையான அளவுக்கு எவன் வைத்திருந்தானோ, அவனே செல்வந்தன் என அழைக்கப்பட்டான். நுகர்வுப் பண்டங்களைவிட உலோகங்களிடம் பணத்திற்குத் தேவையான சிறப்பம்சங்கள் கூடுதலாக இருந்ததால் நாள

டைவில் பொன்னும் வெள்ளியும் பணமாகப் பயன்படுத்தப்பட்டன. இவைகள் கிடைப்பதற்கரிய பொருளானதாலும் மக்களால் பண மாக ஏற்றுக்கொள்ளப்பட்டன. பொருள்கள், பணிகள் மாற்றப் படுவதற்காகக் கண்டுபிடிக்கப்பட்ட ஓர் ஊடாடு கருவிதான் பணம் என்று மீண்டும் குறிப்பிடத் தேவையில்லை. 'தொடக்கத் தில் பணம் ஒரு தெய்வமாகக் கருதப்பட்டு வணங்கி வரப்பட்டா லும் இறுதியில் வாணிக நடவடிக்கைகளுக்கான இடையீட்டுக் கருவியாகப் பயன்படுத்தப்பட்டு இன்றும் அப்படியே செயல்பட்டு வருகிறது.'

ஆதிருடிகளின் பணம் (Money in primitive societies)

மனித இன ஆய்விலிருந்து பார்த்தால் பொருளாதாரத்திற்குப் பணத்தின் அவசியம் தேவையில்லாதிருக்கும்போதே, பயன் பாடற்ற பொருள்கள் பணமாகக் கையாளப்பட்டிருப்பது தெரிய வருகிறது:

(1) அமெரிக்க இந்தியப் பழங்குடிகளுள் பெரும் பாலானோர் சோழி உருண்மணிகளையும் (wampum of beads), கிளிஞ்சிற் சிப்பிகளையும் (shells) பணமாக உபயோகித்திருக் கிறார்கள். பணத்திற்குத் தேவையான சிறப்பியல்புகள் முழுதும் இவைகளில் இருந்ததால் பணமாக ஆளப்பட்டிருக்கின்றன. இந்தியர்களைப் பொறுத்த வரையில் சோழி உருண்மணிகளின் சேர்க்கை (accumulation) செல்வமாகக் கருதப்பட்டது. கடவுள் வழிபாட்டிற்கும் அலங்கார வேலைகளுக்கும் அவைகள் பயன்படுத் தப்பட்டதால் எவரிடம் மிகையான அளவுக்கு அம் மணிகள் இருந் தனவோ அவரே பெரும் செல்வந்தர் எனக் கருதப்பட்டார். 17ஆம் நூற்றாண்டில் அமெரிக்கக் குடியேற்ற நாடுகளில் வெள்ளையர்கள் இந்தியாவுடன் கொண்ட வாணிப உறவு நடவடிக் கைகளுக்கும், உள்நாட்டு வாணிப நடவடிக்கைகளுக்கும் சோழி மணிகளைக் கையாண்டனர். நாளடைவில் எளிய முறையில் மணிகள் தயாரிக்கப்பட்டதால், சோழியின் மாற்று மதிப்புக் குறையலாயிற்று.

(2) வட கலிஃபோர்னியாவின் யூராக் இந்தியர்கள் (Yurok Indians) மரங்கொத்தியின் தலையுச்சித் தோலையும் (Woodpecker scalps), எரிமலைக் கரும்பளிங்குப் பாறையின் ஒரு பகுதியையும் (obsidian blades) பணமாக உபயோகித்தனர். இவை களுக்கு தெய்வீக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது. சந்தை நடவடிக்கைகளுக்காகப் பணம் ஆளப்பட்டாலும், வினை முறை

களுக்குத்தான் (ceremonies) அது முதன்மையாக ஆளப்பட்டது. மகன் இறந்த பின்னும் அவனது புதை குழியில் பணத்தையும் இட்டனர். இதற்குக் காரணம் இறப்பிற்குப்பின் அவனது மேலுலக வாழ்க்கை மகிழ்ச்சிகரமாக இருக்கும் என்பதற்காகத் தான். திருமணத்தின்போது மணமகனை அடையுமுன் மணமகன், மணமகள் வீட்டிற்குப் பணமாகப் பயன்படுத்தப்பட்ட அப்பொருள் களைக் கொடுப்பது வழக்கமாக இருந்து வந்திருக்கிறது.

(3) தென் பசிஃபிக்கின் (south pacific) யாப் தீவு பழங்குடி மக்கள் (natives of the island of Yap) வட்டக்கற்பாலங்களைப் (round chunk of stone) பணமாகக் கையாண்டனர். அக் கற்களின் வெளித்தோற்றம் வெகு அழகாக இருந்ததால் அவைகள் பரிவர்த்தனைச் சாதனமாகப் பயன்படுத்தப்பட்டன. பொருளாதார நடவடிக்கைகள் அனைத்தும் இதன்மூலம் பரிவர்த்தனை செய்யப்பட்டாலும் சில தேர்ச்சி நடவடிக்கைகளான மீன் பிடி தொழில், தச்சு வேலைத் தொழில் போன்றவைகளுக்குத்தான் அது முக்கிய மாகத் தேவைப்பட்டது. சில கற்களின் பருமன் பெரிதாக இருந்ததால் பரிவர்த்தனை செய்யும்போது அக் கற்களின் உரிமையாளர்கள் தங்களின் உரிமைகளை மட்டும் மாற்றிக் கொண்டார்கள்.

பண்டைக்காலக் குடிகளின் பணம் (Money in the Societies of Antiquity)

அஸிரியா (Assyria), பாபிலோனியா, பெர்சியா, எகிப்து போன்ற நாடுகளின் பழங்குடி மக்கள் வாழ்க்கையை யொட்டித்தான் (கி.மு. 4000) மேலைநாட்டு நாகரீகம் வளர்ந்திருக்கிறது. ஒவ்வொரு நாட்டிலும் பொருளாதாரமும் நாகரீகமும் நல்ல முறையில் இருந்திருக்கின்றன. குறிப்பாக, வேளாண்மைத்துறையில் முன்னேற்றம் காணப்பட்டிருக்கிறது. அப் பழங்குடி மக்கள் உலோகங்களைப் பணமாக உபயோகித்திருக்கிறார்கள். பொன்னும் வெள்ளியும் கையாளப்பட்டிருக்கின்றன. கி.மு. 2000-ல் பாபிலோனியாவில் முதன் முதலாக வெள்ளிப் பணம் கையாளப்பட்டிருக்கிறது. நாணயமாக அச்சிட்டு வெளியிடாமல் குறிப்பிட்ட எடையில் உலோகக் கட்டியாகப் புழக்கத்தில் விடப்பட்டுள்ளன. 'ஷெக்கில்கள்' (Shekels) மற்றும் 'டேலண்டுகள்' (Talents) என்ற கணக்கலகுகளின்படி (Units of account) யூதர்கள் நாணயம் வெளியிட்டிருக்கின்றார்கள். இடையில் உலோகக் கட்டியின் உண்மை எடையை உணர்த்துவதற்காக அதன் மேல் முத்திரையிட்டு வெளியிட்டிருக்கின்றார்கள். பழைய ஏற்பாட்டில் யூதர் வகுப்பினர்களும் (Hebrew tribes of the old Testament)

எகிப்து மற்றும் கிரேக்க நாட்டவர்களும் உலோக நாணயங்களை நடைமுறையில் கையாண்டனர். நாளடைவில் பவுன் லிவர் (Livre), லீரா (Lira), பென்னி (Penny) மற்றும் மார்க் (Mark) எனப் பல்வேறு பண அலகுகள் (குறிப்பிட்ட எடையில்) பெயரிடப்பட்டு வழக்கிலிருந்தன. தற்காலத்தில் மாற்றுச் சீட்டும் பண விடையும் வழக்கிலிருப்பது போல் பாபிலோனியர்களும் கொடுக்கல்-வாங்கல் மற்றும் கடன் பேரங்களுக்கு அவ்வகைச் சீட்டுகளை உபயோகித்திருக்கிறார்கள்.[1]

தேவைக்கேற்றபடி அந்தந்த நாடுகளில் நாணயம் அச்சிடல் வழக்கிலிருந்திருக்கிறது. சுமார் 5000 ஆண்டுகளுக்கு முன்பே நாணயங்கள் புழக்கத்திலிருந்திருப்பதாக வரலாற்று ஏடுகள் குறிப்பிடுகின்றன. உலோக நாணயத்தின் தூய்மைக்கு மட்டும் பொறுப்புறுதி அளிக்கும் வகையில் கி. மு. 700-ல், ஆசியாவில் லிதிய அரசு (Lydia Kingdom) நாணயங்களை அச்சிட்டு இருக்கின்றது. கி.மு. 600-ல் கிரேக்கர்கள் ஒரே அளவான எடையில் தூய்மையான வெள்ளி உலோகத்தில் நாணயங்களை அச்சிட்டனர். ஸ்பார்த்தாவில் (Sparta) இரும்பினாலான நாணயங்களை அச்சிட்டுப் புழக்கத்தில் விட்டனர். பொதுவாக இவ்வகை நாணயங்களின் உலோக அடக்க மதிப்பு முகமதிப்பினின்றும் குறைவானதே யாகும். கிரேக்க வணிகர்கள் ஏட்டுக் கடன்களையும், கடனுறுதிச் சீட்டு முறையையும் தோற்றுவித்திருக்கின்றனர். உரோமப் பேரரசு காலத்தில் நாணய அச்சீட்டு உரிமை சிறு பேரரசர்களிடம் இருந்ததால் நிருவாகக் கேட்டின் விளைவாக ஆங்காங்கே கள்ள நாணயங்கள் வியாபாரிகளால் அச்சிடப்பட்டன. நிறை உரு நாணயங்களிலிருந்து (full-bodied coins) உலோகங்கள் சுரண்டப்பட்டும், தூள் போட்டு எடுக்கப்பட்டும், மதிப்புக் குறைப்பு (debasement) செய்யப்பட்டது. முடிவில், வெள்ளி நாணயங்களை எடுத்துக் கொண்டால் அதன் உள்ளிருப்பு 2 சதவீதம் வெள்ளிதான் காணப்பட்டது. இப்படியாக உலோக நாணயங்களின் வெளியீடு இறுதியில் நிறுத்தப்பட்டது. மீண்டும் பணமில்லாப் பொருளாதார நிலை உருவாயிற்று.

நிலமானிய ஆட்சிமுறையில் பணம், கி.பி. 500-1100 (Money in the age of Feudalism)

நாணய அச்சீட்டு முறை நிறுத்தப்பட்டதால் பண புழக்கமும் குறையலாயிற்று. அதன் விளைவாக, வாணிகமும் மற்றும்

[1] Paul Einzig, 'Primitive money in its Ethnological, Historical and Economic Aspects', 1949, pp. 211—215.

பண உதவி கொண்டு நடக்கக்கூடிய பேரங்களும் அழியலாயிற்று. மேற்கு ஐரோப்பாவில் நிலமானிய ஆட்சி முறையில் பண அலகாக விளங்கியது பண்ணை நிலம் (Manor). ஒவ்வொரு பண்ணை நிலமும் தன்னிறைவு கொண்டதாகும். உரோமப் பேரரசின் வீழ்ச்சிக்குப்பின் வாணிகமும், வியாபாரமும் வீழ்ச்சியடைந்தன. இஸ்லாம் ஆதிக்கம் தொடங்கியவுடன் மத்திய தரைப்பகுதி களில் வியாபார வகுப்பினர் பெரிதும் பாதிக்கப்பட்டனர். ஐரோப் பாவில், 'பணமும் இல்லை; சந்தையுமில்லை' என்ற நிலை ஏற்பட்ட தால் திருக்கோயில் கொள்கையான இலாபம் பெறும் எந்தத் தொழிலையும் கடும்வட்டி வாங்குதல் அல்லது பாவச் செயலுக்குச் சமமெனக் கருதுதல் கடைப்பிடிக்கப்பட்டது. பண்ணை நிலத் தைச் சாரா வாணிப நடவடிக்கைகளுக்குப் பட்டு, மற்றும் நறு மணச் சரக்குகள் சிறு அளவில் பணமாக உபயோகிக்கப்பட்டன. பண வெளியீட்டு முறை உரிமை, நிலமானியக் கோமகன்களிடம் (Feudal Lords) பிரித்துக் கொடுக்கப்பட்டது. கிழக்கில் பைசாண்டின் பேரரசிலும் (Byzantine Empire of the East), இஸ்லாமியர்களின் கீழுள்ள பகுதிகளிலும் வாணிபமும் பணப் புழக்கமும் பெருகலாயிற்று. இவ்விரண்டு பகுதிகளிலும்-பொற் காசுகள் புழங்கின. ஆனால், ஐரோப்பாவில் வெள்ளிக் காசுகள் தான் புழக்கத்திலிருந்தன.

மறுமலர்ச்சிக் காலத்தில் பணம், கி.பி. 1100—1600 (Money in the Renaissance)

இஸ்லாமிய மற்றும் பைசாண்டியம் பகுதிகளில் வாணிப மறுமலர்ச்சியும், மாநில அரசுகளும் ஏற்பட்டதால் 12ஆம் நூற்றாண்டின் இறுதியில் பணம் மீண்டும் மிகையான அளவுக்கு உபயோகப்படுத்த வேண்டியதாயிற்று. வழக்காற்றொழிவு (desue-tude) ஏற்பட்ட பொற்காசுகள் மீண்டும் அச்சிடப்பட்டன. ஐரோப் பாவில் முழு அளவில் முடிஅரசு ஏற்பட்டதால் நாணய அச்சீட்டு முறை ஒருமுகப்படுத்தப்பட்டது. 16ஆம் நூற்றாண்டில் இங்கிலாந்தில் எலிசபெத்-I முதன்முதலில் அம் முயற்சியை மேற்கொண்டார்.

இத்தாலிய வாணிப மறுமலர்ச்சியால் கடன் நடவடிக்கை களிலும் கருத்தளவுப் பணத்திலும் முன்னேற்றம் காணப்பட்டது. அங்கு முன்முதலில் 12ஆம் நூற்றாண்டில் வங்கிகள் நிறுவப் பட்டன. அவ் வங்கிகளின் முக்கிய பணி பணமாற்றம் (change) செய்வதாகும். வாடிக்கையர்களுக்கு ஒரு வகைப் பணத்திற்கு மறுவகைப் பணத்தை அளிப்பதாகும். வாடிக்கையர்கள்

அளிக்கும் நாணயங்கள் அல்லது உலோகக் கட்டிகளைப் பெற்றுக் கொண்டு அவர்கள் கணக்கில் வரவு வைத்துத் தேவையான போது வேறு நபர்களுக்குப் பணமாகவோ, கணக்கில் வரவு வைத்தோ அவ் வங்கிகள் பணிகளைச் செய்திருக்கின்றன. ஆனால், அவ் வங்கிகள் கடன் ஏதும் கொடுக்கச் சூழ்நிலைகள் ஏற்படா விட்டாலும், இத்தாலி, ஸ்பெயின் மற்றும் ஏனைய தெற்கு வாணிபப் பகுதிகளிலுள்ள வங்கிகள் கடன் அளிக்கும் பணிகளையும் மேற் கொண்டன. பணமாகவோ, உலோகக் கட்டியாகவோ கடனாளி களுக்கு அளிக்காமல் ஏட்டு அளவில் அவர்கள் கணக்கு வரவு செய்யப்பட்டு நடவடிக்கைகள் சரி செய்யப்பட்டன. வங்கிகள் தங்கள் வசமுள்ள வைப்புகளின் ரொக்க இருப்பிலிருந்து ஒரு குறிப்பிட்ட சதவீதம் வரைக்கும் கடனுக்கம் (credit creation) செய்து கடன் உதவி அளித்து வந்தன. ரொக்கப் பணமாகக் கொடுக்கல்–வாங்கல் நடைபெறுமல் காசோலைகள் மூலம் வாணிப நடவடிக்கைகள் நடைபெற்றன.

பதினாறும் நூற்றாண்டுத் தொடக்கத்தில் புது உலகில் அரும் பொருள்கள் (Treasures) கண்டு பிடிக்கப்பட்டதால் ஒரு பணப் புரட்சியே ஏற்பட்டது. பெரு மற்றும் மெக்ஸிகோ (Peru and Mexico) நாடுகளிலிருந்து கிடைப்பதற்கரிய உலோகங்கள் மிகையான அளவு கிடைத்ததால் வாணிபத்தில் ஒரு புதுத் திருப்பமே ஏற்பட்டது. விலைகள் அதிகரித்தன; பணத்தின் அளவு கூடுதலாயிற்று; வாணிபம் மற்றும் தொழில்கள் வளர்ச்சி யுற்றன. சமூக வாழ்க்கையிலும் மறுமலர்ச்சி ஏற்பட்டு, நில மானிய ஆட்சியில் பொருள்கள், பணிகள் வடிவில் பரிமாற்றம் செய்யப்பட்டவை பணவடிவில் உணர்த்தப்பட்டன. அனைத்து நடவடிக்கைகளுமே பணமூலம் நடைபெற்றதால் நிலமானிய ஆட்சிமுறை (மேற்கு ஐரோப்பா) படிப்படியாகக் குறைந்தது. பணமும், பணமுறையும் படிப்படியாக ஆதிக்கம் செய்ததால் தனிநபரின் சுதந்திரமும், முதலாளித்துவ முறையும் வளர்ச்சி யுற்றன.

'டாலர்' ஒரு பணத்தின் அலகாகப் பதினாறும் நூற்றாண்டில் தான் கண்டுபிடிக்கப்பட்டு புழுதப்பட்டது. இச் சொல், ஸ்பெயின நாணயத்திற்குக் குறியிடப்பட்ட (applied) ஜெர்மானியப் பெயரிலிருந்து ஆங்கில மயமாக்கப்பட்டதாகும்.

பதினேழு மற்றும் பதினெட்டாம் நூற்றாண்டுகளில் பணம்

ஐரோப்பாவின் தெற்குப் பகுதியில் வாணிபமும், வங்கியியலும் வளர்ச்சியடைந்தது போல் பதினேழாம் நூற்றாண்டில் வட

ஐரோப்பியப் பகுதிகளிலும் வங்கியியலும் பணவியலும் வளர்ச்சி யடையத் தொடங்கின. இங்கிலாந்தில் வங்கிகள் தொடங்கப் பெற்றதற்குப் பொற்கொல்லர்கள்தான் வித்தாவர். அப் பொற் கொல்லர்கள் மக்களிடமிருந்து நாணயங்களையும் உலோகக் கட்டி களையும் பாதுகாப்பிற்காக வைப்புகளாகப் பெற்றுக் கொண்டு, வரவுச் சீட்டுகளையோ, வைப்புகள் மீட்கக்கூடிய காகித இரசீது களையோ அளித்து வந்தனர். வரவுச் சீட்டுகளும், இரசீதுகளும் மாற்றுத்தன்மையைக் கொண்டிருந்ததால் கொடுக்கல்- வாங்கல் நடவடிக்கைகளுக்கு அவைகள் பணம் போல் ஊடாடு கருவி களாகப் பணிபுரிந்தன. வைப்பாளர்கள் தங்கள் பேரங்களை அச் சீட்டுகள் மூலம் தீர்த்துக் கொண்டதால் பொற்கொல்லர்கள் தங்கள் வசமுள்ள வைப்பின் இருப்புகள் வாளாவிருப்பதை உணர்ந்து அவைகளைக் கடனுக்குக் கொடுக்க முன்வந்தனர். இந்த வகையில் நாட்டின் பணப்புழக்கத்தை அதிகரிக்கச் செய்தனர். பதினேழாம் நூற்றாண்டு இங்கிலாந்தில் வங்கியியல் முன்னேற் றத்துக்கு எடுத்துக்காட்டாக 'இங்கிலாந்து' வங்கி (Bank of England) 1694-ல் நிறுவப்பட்டது வரலாற்றுமிக்க ஒன்றாகும்.

பதினேழாம் நூற்றாண்டில், செலாவணி நெறிகேடு இருந் தாலும் தொடக்க காலங்களில் இருந்த அளவுக்கு இல்லை. பண மதிப்பு அடிக்கடி மாறிக் கொண்டே இருந்தது. உலோக உற்பத்திக் குறைவினால் பணத்தின் அளவு குறைந்ததால் விளைந்த வாட்ட நிலையைத் தடுப்பதற்காகப் பணமதிப்பில் மாற்றம் செய்ய வேண்டியிருந்தது. ஆனால், நாணய அச்சீட்டு முறையில் பொன்னுக்கும் வெள்ளிக்கும் உள்ள விகிதத்தை முறைப்படி பணத்துறையினர் நிறைவேற்றி வந்தனர். உலோகங்களின் மதிப்பு சந்தையில் ஒரு நிலையில் இல்லாமல் மாறியதால் நாணய அச்சக வீதத்தையும் (Mint–par value) மாற்றம் செய்ய வேண்டி யிருந்தது.

பதினேழாம் நூற்றாண்டில் மற்றுமொரு குறிப்பிடத்தக்க நிகழ்ச்சி என்னவென்றால் அரசுப் பற்றாக்குறையை (Government deficits) நிறைவு செய்ய காகிதச் செலாவணி வெளியீடு செய்த தாகும். வணிகர்கள் செலுத்தல்கள் (payments) நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக அரசு கடனுறுதிச் சீட்டுகளான கருவூல ஆணைச் சீட்டுகளை (exchequer orders) இங்கிலாந்து அரசு வெளி யிட்டது. 1690-ல் மஸாச்சுஸெட்ஸ் (Massachusetts) குடியேற்ற அரசு காகிதச் செலாவணியை வெளியிட்டது. அவ்வகைத் தாள் பணம் அமெரிக்கக் குடியேற்ற நாடுகளில் 18ஆம் நூற்றாண்டில் புரிவர்த்தனைச் சாதனமாக விளங்கியது.

இங்கிலாந்தில் மேலும் குறிப்பிடத்தக்கதென்னவெனில் வங்கிக் கடன் வசதிகளை அரசுக்கும் நீட்டிக்கச் செய்ததாகும். இங்கிலாந்து வங்கி 'அரசுக்கு ஒரு வங்கியாகவும்' பணிபுரியும்படி அதன் விதிமுறைகள் மாற்றம் செய்யப்பட்டன. இங்கிலாந்து வங்கியிடமிருந்து, அரசு கடன் வாங்குகிறதென்றால், அந்த வங்கி வைப்புகளை உண்டாக்குகிறது என்று பொருள். அப்படி வைப்புகள் உண்டாக்கப்பட்டால் பண அளிப்பை அதிகரிக்கச் செய்யும்.

போர் மற்றும் புரட்சிக் காலங்களில் பணம், 1775 — 1815 (Money in the age of Revolution and War)

அமெரிக்க மற்றும் ஃபிரெஞ்சுப் புரட்சிகள், நெப்போலியன் காலத்தியப் போர்கள், அமெரிக்காவிலும், ஃபிரான்ஸிலும் மற்றும் இங்கிலாந்திலும் பணவெழுச்சியையும், நிதிப்பற்றாக்குறையையும் உண்டாக்கின. அமெரிக்காவிலும், ஃபிரான்ஸிலும் புரட்சி அரசுகள் மிகையான அளவுக்குத் தாள் பணத்தை வெளியிட்டன. இதன் விளைவு அமெரிக்காவில் விலைமட்டம் அளவுகடந்து உயர்ந்தது. பணத்தின் மதிப்பு ஏறத்தாழ பூச்சியத்திற்கு (Zero) வந்துவிட்டது. போருக்குப்பின் பொருளாதார மந்தம் ஏற்பட்டதால் மீண்டும் தாள் பணத்தை வெளியிடும்படி ஆகிவிட்டது. இதற்கு மக்களிடமிருந்து பலத்த எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டது.

ஃபிரான்ஸில் புரட்சி அரசு நில உரிமை பிணை முறிகளான (bonds) அசைநட்டுகளை (assignats)[1] வெளியிட்டது. செல்வந்தர்கள் மற்றும் திருக்கோயில்களிடமிருந்து நிலங்களையும் சொத்துக்களையும் அரசு மேற்கொண்டதற்கு (seizing) ஈடாக அந்த அசைநட்டுகளை வழங்கியது. 1793-க்குப் பிறகு அயல்நாட்டுப் போர்களும், உள்நாட்டுப் பணவெழுச்சியும் நிகழ்வுற்றதால் தாள் பணவெளியீடு அதிகரிக்க வேண்டியதாயிற்று. இதன் விளைவினால் பண வீக்கம் ஏற்பட்டு, விலைகள் உயர்ந்து பண மதிப்பு பூச்சியத்திற்கு வந்துவிட்டது. ஆனால், 1797-ல் மேலும் தாள் பணம் வெளியிடுதல் நிறுத்தப்பட்டது. 1799-ல் நெப்போலியன் ஆட்சிக்கு வந்தபின் அயல்நாட்டு வினைகளுக்கு (Foreign Adventures) நிதி அளித்து வந்ததுடன், பொன் அடிப்படையில் ஃபிராங்கின் மதிப்பை நிலைபெறச் செய்து வந்தார். இச் செயலைச் செய்து முடிப்பதற்கு

[1] **Assignats:** A bond issued during the French Revolution representing Confiscated Land, formerly the property of the clergy, the King or emigre nobles, and assigned to the holders of the bonds. There was a gross overissue of the bonds, which were used to supplement coins, and a steep rise in prices occurred, the value of the bonds eventually declining to nothing.

உறுதுணையாக இருந்தது 'ஃபிரான்சு வங்கி' (Bank of France) ஆகும். நெருக்கடியான காலத்தில் நெப்போலியனின் அரசுக்கு அவ் வங்கி கடன் கொடுத்தது.

அமெரிக்காவும் ஃபிரான்சும் வீக்க நிலையை ஒடுக்குவதற்காக விலைவாசியை நிலை பேராக்கம் செய்தும், தாள் பணத்தைச் சட்டப் பணமாக்கியும் எடுத்த முயற்சிகள் பலனளிக்கவில்லை. ஆனால் இரு நாடுகளுமே பதின்மான நாணயமாக்கு முறையை (Decimal coinage system) மேற்கொண்டதன் மூலம் ஓரளவுக்கு நெருக்கடியைச் சமாளித்தன.

1794—1815-ல் ஃபிரான்சு நாட்டுடன் போரிட்டதால் பிரிட்டிஷ் அரசும் பற்றுக்குறை நிதிக்கு இலக்காகியது. ஆனால், இங்கிலாந்து வங்கியிடமிருந்து கடன் பெற்று அப் பற்றுக்குறை நிறைவு செய்யப்பட்டது. இக் கடன் அளிப்பு, வங்கித் தாள்களையும் (Bank notes) வங்கி வைப்புகளையும் மேலும் அதிகரிக்கச் செய்தது. 1815-ல் வீக்கநிலை காரணத்தால் விலைவாசிகள் உயர்ந்து, 1790-ல் இருந்த நிலையைவிட இருமடங்காகின. பிரிட்டனில் 'தொழிற்புரட்சி' (Industrial Revolution) காரணமாக பண அதிகரிப்பு உற்பத்திப் பொருட்களின் அதிகரிப்பால் ஈடு செய்யப்பட்டது.

நெறியான பணமுறைக் காலம்—19ஆம் நூற்றாண்டு (The age of Sound Money)

வாட்டர்லூ (Waterloo) போருக்குப் பிறகு ஐரோப்பா போர் ஆதிக்கத்திலிருந்து முற்றிலும் விடுபட்டு ஒரு நூற்றாண்டு காலத்திற்கு இன்புற்றிருந்தது. பொருளாதார வாழ்க்கையில் முதலாளித்துவக் கொள்கையே எங்கும் பரவியது. நிலமானிய ஆட்சிக் கொள்கையும் வணிகத் தத்துவமும் (Mercantalism) கைவிடப்பட்டன. மக்களால் ஆளக்கூடிய குடி அரசே விரும்பப் பட்டது; தனிமனிதன் சுதந்திரம் பாதுகாக்க வலியுறுத்தப்பட்டது. அமெரிக்காவிலும் ஐரோப்பாவிலும் பண அலகு ஒரு குறிப்பிட்ட அளவு பொன் அல்லது வெள்ளி வடிவில் உணர்த்தப்பட வேண்டும் எனக் கொள்கை அளவில் ஏற்றுக் கொள்ளப்பட்டன. அரும் உலோகத்தின் நிறை உரு நாணயங்கள் அடிப்படையில் பண அலகுகள் விவரிக்கப்பட்டு வெளியிடுதல் வேண்டும் என்ற கொள்கையை இரு கண்டங்களுமே ஏற்றுக்கொண்டன. உலோகத்தின் மதிப்பும், நாணயத்தின் மதிப்பும் சமமாக இருந்தன. தடையிலாமல் எந்த அளவுக்கும் உலோகக்கட்டிகளை நாணயமாக்கிக் கொள்ளலாம்; ஓரிடத்திலிருந்து வேறு இடத்திற்கு

எடுத்துச் செல்லலாம்; நாணயங்களை எவ்விதக் கட்டுப்பாடு மில்லாமல், எந்த அளவுக்கும் உருக்கிக் கொள்ளலாம். இதே அடிப்படையில் 'திட்டப் பணத்தை' (Standard Money) ஒவ் வொரு நாடும் உருவாக்கியது. ஒவ்வொரு நாட்டிலும் பணத்தின் அளவு அந்த நாட்டிலுள்ள பொன்னின் இருப்பைப் பொறுத்து இருந்தது. பொன் இருப்பு அதிகமானால் பணத்தின் அளவும் அதிகமாகும். பொன் இருப்பு குறைந்தால் பணத்தின் அளவும் குறையும். இப்படிச் செய்வதனால் ஒரு நாட்டில் விலைவாசி மட்டம் நிலைப்படுத்தப்பட்டுக் கட்டுப்படுத்தப்படுகிறது. வீக்க நிலை ஏற்படுவது தவிர்க்கப்படுகிறது. தாள் பணம் வெளியீடு தேவை யில்லாமல் போய்விடுகிறது. தாள் பண வெளியீட்டால் ஏற்பட்ட விளைவுகளைப்பற்றி முன்பே பார்த்திருக்கிறோம்.

இருந்தாலும், ஒரு நாட்டுப் பொருளாதாரம் பணத்தை மட்டும் நம்பியிருந்தால் முன்னேற்றம் காண முடியாது. வங்கித் தாள் களையும் வணிக வங்கிகளின் வைப்புகளையும் நாடித்தான் இருக்க வேண்டியிருக்கிறது. அதிகமான அளவுக்கு வங்கி வைப்புகள் பெருகா வண்ணம், அதாவது கடனுக்கம் மிகையாகச் செல் லாதபடி, பணவாக்கக் கொள்கை மற்றும் அரசிறைக் கொள்கை மூலம் (Monetary policy and Fiscal policy) கட்டுப்படுத்துதல் வேண்டும். கடன் நடவடிக்கைகளின்றி எந்தப் பொருளா தாரமும் வளர்ச்சி பெற முடியாது.

உலோகத் திட்டம் கடைப்பிடிக்கப்படுவதிலேயே பல்வேறு முறைகள் கையாளப்பட்டன. ஃபிரான்சும் அமெரிக்காவும் 'இரு உலோகமுறை'த் (Bimetallism) திட்டத்தைக் கையாண்டன. அதாவது, பணத்தின் அலகு பொன்னாலும் வெள்ளியாலும் தனித் தனியே உணர்த்தப்பட்டது. இத் திட்டத்தில் உள்ள ஒரு பெருங் குறை என்னவென்றால் ஏதாவதோர் உலோகத்தின் மதிப்பு உயர்ந்தால் அது புழக்கத்திலிருந்து மறைந்துவிடும். இங்கிலாந்து நாடு இவ் விடர்ப்பாட்டை வேறு விதத்தில் களைந்தது. பொன் அடிப்படையில் பவுனையும், வெள்ளி நாணயங்களையும் அதன் அகமதிப்பு புறமதிப்புக்குக் குறைவாக இருக்கும்படி வெளி யிட்டது. இதே முறையை ஏனைய நாடுகளும் கடைப்பிடித்தன. 1900-ல் பொன் திட்டத்தை ஒரு பொதுவான திட்டமாக எல்லா நாடுகளும் ஏற்றுக் கொண்டன.

19ஆம் நூற்றாண்டில் பணக் கொள்கை ஒரு முரண்பாடு கொண்டதெனக் கூறலாம். தன்னிச்சையாகப் பணம் அதிகரிக்க விடாமல் உலோக அடிப்படையில் அதன் அளிப்பு ஒழுங்கு

படுத்தப்பட்டது. ஆனால், மிகையான பணத்தேவையை வணிக வங்கிகளின் தாள் பணமும் வைப்புகளும் ஈடு செய்கின்றன. அத் தாள் பணமும் வைப்புகளும் பொன்னால் மீட்கக் கூடியவை களாகும். எனவேதான் 19ஆம் நூற்றாண்டின் பணவாக்க முறை ஒரு நெறியான முறை எனக் கூறப்படுகிறது. வாணிகத் தேவைக் கேற்றபடி வங்கிகள் பண வசதியை அளித்து வந்ததால் பொருளாதார முன்னேற்றம் காண முடிந்தது.

இருபதாம் நூற்றாண்டில் பணம்

அமெரிக்காவிலும் ஏனைய தொழில்சார் நாடுகளிலும் 1900-லிருந்தே பண அளிப்பு முறையில் (composition of Money supply) எவ்வித மாற்றமும் ஏற்படவில்லை. ஆனால், பணவாக்க முறை களில்தான் பெருமளவுக்கு மாற்றங்கள் இடம்பெற்றன. தனி யார் வங்கிகள் சூழ்நிலைக்கேற்பப் பணவாக்கக் கொள்கைகளைக் கையாண்டு கடனுக்கம், கடனெடுக்கம் போன்ற ஏற்பாடுகளை அவைகளாகவே மேற்கொண்டன; அரசுக் கட்டுப்பாட்டுக் கொள்கையின் மூலமும் பணவாக்கமுறை நெறிப்படுத்தப்பட்டது. இம்மாற்றங்களும் ஏற்பாடுகளும் முதல் உலகப் போர்க்காலத் திலும், பொருளாதார மந்தகாலமான 1930-லும்தான் மேற் கொள்ளப்பட்டன.

முதல் உலகப் போரில் ஈடுபட்ட நாடுகள், தாள் பணமும் வங்கி வைப்புகளும் பொன்னை மாற்றிக் கொள்ளப்படும் உரிமை யைத் தற்காலிகமாக நிறுத்தி வைத்தன. போர்க் காலப் பண வீக்கம், போருக்குப் பின் மிகையான பணவீக்கம் ஆகியவை களின் அனுபவத்தால் விலைமட்டத்தையும் பண மதிப்பையும் நிலைப்படுத்த அந் நாடுகள் எத்தனித்தன. மீண்டும் பொன் திட்ட நிலையை அடைய விரும்பினாலும் முயற்சி திருவினையாகவில்லை. வாட்ட நிலைக் கொள்கையினால் வேலையில்லாப் பிரச்சினையும், சமூகக் குழப்பமும் 1925-ல் ஏற்பட்டன. பிரிட்டனும் மற்றும் சில நாடுகளும் பொற்காசுகளைப் புழக்கத்திலிருந்து திரும்ப எடுத்துவிட்டன. ஆனால், மக்கள் தங்கள் விருப்பப்படி வைப்பு களையும், தாள் பணத்தையும், வேண்டுமானால், பொற்கட்டி களாக மாற்றிக் கொள்ளலாம். இருந்தபோதிலும் பொன் இருப்பு மொத்தப் பொறுப்புகளுக்குக் குறைவாகவே இருந்தது.

1929-ல் மந்தகாலம் தொடங்கியதால் ஒவ்வொரு நாட் டிலும் பொன்னுக்குத் தேவை அதிகமாயிற்று. மக்கள் தங்கள் வசமுள்ள தாள் பணத்திற்குப் பதிலாகப் பொன்னை அடைய விரும்பினர். பெரும் நாடுகளிலேயே பொன் பற்றாக்குறை

ஏற்பட்டதால் 'மாற்றுந் தன்மை' (Convertibility) ரத்து செய்யப்பட்டது. பொன் திட்டத்தைக் கைவிடாததால் பல பொருளாதார இன்னல்கள் ஏற்பட்டன. கடன் கட்டுப்பாட்டு முறைகளைக் கொண்டுவந்தும், பணத்தின் அளிப்பு அளவைக் குறைத்தும் பொன் இருப்பு பாதுகாக்கப்பட்டது. இதன் விளைவு என்னவென்றால் நாட்டில் உற்பத்தி பாதிக்கப்பட்டுப் பொருளாதார நிலை இன்னும் மோசமாகியது. வேறு வழியில்லாமல், முடிவில், பொன் திட்டம் கைவிடப்பட்டது. அதிலிருந்து பண முறையில் நெறிகேடு உண்டாகத் தொடங்கியது. அரசுத் தலையீடு நேரடியாக ஏற்படத் தொடங்கியது. இரண்டாம் உலகப் போர்க் காலத்திலும் வீக்க நிலை உண்டாகியது. அவற்றைத் தடுப்பதற்கும் அரசிறைக் கைக்கோளும் பணவாக்கக் கைக்கோளும் பயன்படுத்தப்பட்டன.

2. பணத்தின் தன்மையும் பணிகளும்

(The nature and Functions of Money)

பணத்தின் இலக்கணம்

மனிதன் படைத்தவைகளில் மிகவும் அடிப்படையானதும் முக்கியமானதும் 'பணம்' ஆகும். ஒவ்வோர் அறிவியல் துறைக்கும் ஓர் அடிப்படையான கண்டுபிடிப்பொன்று உண்டு. பொறித்துறையில் சக்கரமும், அறிவியல் துறையில் நெருப்பும், அரசியலில் வாக்குச் சீட்டும் அடிப்படையான கண்டுபிடிப்புகள். அதுபோன்று பொருளாதாரத்தில் இன்றியமையாத கண்டுபிடிப்பு 'பணம்' எனலாம். பண்டமாற்று முறையில் (barter system) உள்ள சிக்கல்களையும் இடர்ப்பாடுகளையும் களையும் பொருட்டுத் தான் பணம் கண்டுபிடிக்கப்பட்டது. பணத்தைப்பற்றி ஒவ்வொரு வரும் அறிந்திருந்தாலும் அதற்கான இலக்கணத்தை ஒரு சிலரே விளக்கக்கூடும். அதுவும் நிறை குறையான விளக்கம்தான் அவர்கள் தர முடியும். பணம் செலுத்துதல்கள் மூலம் உற்பத்திப் பொருள்கள் உற்பத்தியாளர்களிடமிருந்து நுகர்வோருக்குச் செல்ல முடிகிறது. பொருள்களின் உற்பத்திக் காரணிகளுக்கு (factors) ஈட்டிய தொகையிலிருந்து ஒரு பகுதி அளிக்கப்படு கிறது. மேலும் பண வருமானங்கள் மற்றும் பணச் செல்வம் (monetary wealth) அடைய வேண்டுமென்ற ஆவல் பொரு ளாதார எந்திரத்திற்கு (economic machine) ஒரு சக்கரம் போலவும், ஒரு விசைப் பொறிபோலவும் (engine) அமை கின்றன. பணவேட்கை ஒரு தொழிலாளியின் ஊக்க சக்தி யையும், தொழில் முனைவோன் மேன்மேலும் முதலீடு செய்வ தற்குத் துணிவையும் வளர்க்கிறது. எவ்வகையில் பணி களைச் செய்வது, எந்தெந்த பணிகளைச் செய்வது, எப்பணிகளில் வேலையாள்களைத் தெரிந்தெடுத்து அமர்த்துவது போன்றவைகளை விலைவாசிகளும் வருமானங்களுமே நிர்ணயம் செய்கின்றன. இப்படியாக உலகில் உள்ள ஒவ்வொன்றும் இடம் பெறுவதும் நகர்வதும் பணத்தால்தான் என்று கூறலாம். ஆக்கலும் அழித் தலும் பணத்தால்தான் என்று கூறினாலும் மிகையாகாது.

அவ்வளவு வலிமை வாய்ந்த பணத்தைப்பற்றி விரிவாக அறிய வேண்டியது இன்றியமையாததேயாகும். பணம் ஒரு

பண்டமாக விளங்கினாலும், பண்டத்திற்கும் பணத்திற்கும் வேறுபாடு உள்ளது என்பதை அனைவரும் அறிவோம். பணம் எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும். ஆனால், ஒரு குறிப்பிட்ட பண்டத்தை எல்லோரும் ஏற்றுக்கொள்ள வேண்டிய அவசியமில்லை. பணத்திற்கு அகராதியின் விளக்கமாவது: 'எந்த ஒரு பொருளாவது ஒரு பரிவர்த்தனைச் சாதனமாக (Medium of exchange) அல்லது மதிப்பளவையாக (Measure of value) அல்லது மதிப்பின் குறியீடாக (denominator) வழக்கமாகவோ அல்லது மரபு வழக்கமாகவோ பயன்படுத்தப்பட்டால் அது பணமாகும்.[1] இவ் விளக்கத்தில் உட்கருத்து இருந்தாலும் தெளிவு இல்லை எனலாம். பணத்தின் பணிகளைக் கருத்தில் கொண்டு 'பணம் என்பது, பணம் எதைச் செய்கின்றதோ அதுதான்', (money is what money does) எனப் பேராசிரியர் வாக்கர் (Prof. Walker) கூறுகின்றார். 'எப்பொருளாயினும், அது பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்டு, பல்வகைப் பொருள்களையும் பணிகளையும் வாங்கப் பயன்படுமானால் அதனைப் பணமெனலாம்'[2] எனக் கிரௌதர் கூறுகிறார். 'பொருளுக்காகச் செலுத்துவதற்கும், வேறு வாணிபப் பொறுப்புகளுக்குக் கொடுப்பதற்கும், எதைப் பயன்படுத்தி அது ஏற்றுக்கொள்ளப் பெறுகின்றதோ அதுதான் பணம்' என்று டி. எச். இராபர்ட்சன் கூறுகிறார்.[3] பல்வேறு வகைகளில் இப்படியாகப் பல்வேறு பொருளாதார அறிஞர்கள் பணத்திற்கு இலக்கணம் வகுக்கின்றனர். எந்த இலக்கணமாக இருந்தாலும், பணம் செய்யும் பணிகளில் மிக முக்கியமானவைகள் இரண்டு எனலாம். ஒன்று அது ஓர் அலகு அல்லது மதிப்பளவை என்பதாகும். பொருளாதார மதிப்பில் பொது அளவுகோலாக விளங்குவது பணம். எடுத்துக்காட்டாக ரூபாய், டாலர், ஃபிராங்கு, பீஸோக்கள் (Pesos), பவுன் போன்றவையாகும். மற்றொன்று பணம் ஒரு பரிவர்த்தனைச் சாதனம் என்பதாகும். பொருள்கள், பணிகள் விற்கப்படுவதற்கும் வாங்கப்படுவதற்கும் பணம் பரிவர்த்தனைச் சாதனமாகப் பயன்படுகிறது. வேதியியலில் கிரியா ஊக்கியின் (catalyst) பணி என்னவோ அதேபோல்தான் பொருளாதார உலகில் பணமும். பணத்தின் அலகுக்கும் பணம் மாற்றப்படுவதற்கும் (exchange) உள்ள வேற்றுமையை உணர வேண்டும். நம் நாட்டுப் பணத்தின் அலகு ரூபாய். பணமாற்றமாக விளங்குவது பணம், சில்லறை நாணயங்கள், வங்கி வைப்புகள் (காசோலை மூலம் நடத்தப்படுபவை) முதலியவை. ஒரு பண்டம் பணமாக விளங்குகிறதா இல்லையா என அறிய

[1] 'An outline of Money' by G. Crowther, page 1 (1962).
[2] பணம் — சிறு விளக்கம், பக்கம் 25.
[3] Money by D. H. Robertson, p. 3.

வேண்டுமானால் அது மாற்றுச் செலுத்துதல்களுக்குப் பயன் படுத்தப்படுகிறதா எனப் பார்க்க வேண்டும். அப் பண்டம் எது வாக வேண்டுமானாலும்—பென்சில், உலோகம், கயிறு, நூல், இரப்பர் போன்றவை—இருக்கலாம்.

பணத்தின் பணிகள்
(Functions of Money)

பணத்தின் பல வகைகள் புழக்கத்தில் இருந்தபோதிலும், ஒவ்வொன்றும் குறிப்பிடத்தக்க பணியை அல்லது பணிகளைச் செய்கின்றது. அவ்வாறு செய்யப்படும் பணிகளைக் கீழ்க்கண்ட வாறு தொகுத்துப் பின் அவைகளைத் தனித்தனியே விவரிக்க லாம் :

1. பணம் ஒரு பரிவர்த்தனைச் சாதனம் (Money as a medium of exchange).
2. பணம் ஒரு மதிப்பளவை (Money as a measure of value).
3. பணம் ஒரு மதிப்பின் வைப்பு (Money as a store of value).
4. பணம் ஒரு பின் செலுத்தும் திட்ட அளவை (Money as a standard of deferred payment).
5. பணம் வகையுடைமைக்கு ஒரு பொறுப்புறுதி (Money as a guarantor of solvency).

1. பணம் ஒரு பரிவர்த்தனைச் சாதனம்

பணம் செய்யும் பணிகளில் 'பரிவர்த்தனைச் சாதனமும்' மதிப்பளவையும்தான் தலையான பணிகள் எனக் கூறலாம். பழங் காலத்தில் விளங்கிய பண்டமாற்று முறையில் ஏற்பட்ட இடர்ப் பாடுகளைக் கொண்டு பார்க்கும்போதுதான், பணத்தின் பணியான பரிவர்த்தனைச் சாதனத்தின் முக்கியத்துவம் நன்கு புலப்படும். பண்டமாற்று முறையிலுள்ள மிக முக்கியமான இடர்ப்பாடு மாற்றுவதற்காக உள்ள இரண்டு பொருள்களின் மதிப்பை அளவிடும் போதுதான் ஏற்படும். எடுத்துக்காட்டாக, இருபது வகைப் பொருள்களை ஒன்றுக்கொன்று மாற்றும்போது 'ஆ' பொருளுக்கேற்ப 'அ' பொருளை மதிப்பிடுவதும், 'இ' பொரு ளுக்கேற்ப 'அ' பொருளை மதிப்பிடுவதும், 'இ' பொருளுக் கேற்ப 'ஆ' பொருளை மதிப்பிடுவதும், 'ஈ' பொருளுக் கேற்ப 'ஆ' பொருளை மதிப்பிடுவதும், இப்படியாக 90 விகிதங்கள் ஏற்படுத்த வேண்டும். ஆனால், உலகில் அப் பொருள்கள் 'விலை'

என்ற வடிவில் பணத்தால் மதிப்பிடப்படுகின்றன. அவ் விருபது வகைப் பொருள்களுக்கும் இருபது விலைகள் நிர்ணயிக்கப்பட்டு ஒன்றுடன் ஒன்று மாற்றப்படுகின்றன. இம் முறையில் ஒரு பொருளின் மதிப்பு மற்றொரு பொருளின் மதிப்பினின்றும் வெகு எளிதாக, தெளிவாக வேறுபடுத்திக் காட்ட முடிகிறது. மாற்றப் படக்கூடிய பொருள்கள் தேவையான அளவுக்குப் பகுத் தெடுக்கப்படுவதும், தேவையுள்ளோர்களுக்கு 'இரட்டை விருப்பப் பொருத்தம்' ஏற்படுத்தப்படுவதும் பண்டமாற்று முறையில் அரிதாகும். எடுத்துக்காட்டாக, புள்ளிமான் வைத் திருப்பவன் கோதுமை பெற வேண்டுமென்று நினைத்தால் கோதுமை வைத்திருப்பவனை அணுக வேண்டும். கோதுமை வைத்திருப்பவன், தன்னிடமுள்ள இருப்பைக் கொடுக்கவேண்டு மென்று நினைத்தாலும் அவனுக்குப் புள்ளிமான் தேவைப்பட்டால் தான் கொடுக்க முன்வருவான். இருவருடைய விருப்பமும் இணைந்து வந்தால்தான் அந்த நடவடிக்கை ஏற்பட வாய்ப்புண்டு. மூன்றாமவனுக்குப் புள்ளிமான் தேவைப்படலாம்; ஆனால், அவனிடம் கோதுமை இருக்காது. இவனிடம் இருக்கும் பொருளை, கோதுமை வைத்திருப்பவனுக்குத் தேவைப்பட்டால் கொடுத்து விட்டு அவனிடமிருந்து கோதுமையைப் பெற்றுப் பிறகு அக் கோதுமைக்குப் பதில் புள்ளிமானை அடைய லாம். இந்த நடவடிக்கைகள் அனைத்தும் ஒரே இடத்தில் நடைபெற்றால் ஓரளவுக்குச் சமாளிக்கலாம். பற்பல இடங் களுக்குச் செல்ல வேண்டுமென்ற அவசியம் ஏற்பட்டால் பண்ட மாற்று முறையில் உள்ள சிக்கல்களைக் கூற வேண்டிய அவசி யமே இல்லை. இருவருடைய விருப்பம் ஒத்திருந்தாலும் மாற் றப்பட வேண்டிய ஒரு பொருளின் எடுத்துக்காட்டாக கோது மையின் அளவு குறைந்து அதன் மதிப்புக் கேற்றபடி புள்ளி மானின் மதிப்பு அமையாமல் உயர்ந்து இருந்தால், புள்ளி மானை கோதுமையின் மதிப்புக் கேற்றபடி பகுத்தெடுக்க முடியாது. அப்படிப் பகுத்தெடுத்தால் அது ஒரு முழுமை யான புள்ளிமானாக இருக்க முடியாது. இப்படியாகப் பண்ட மாற்று முறையிலுள்ள குறைபாடுகளையும் 'பரிவர்த்தனைச் சாதனம்' மூலமாக அகற்றிவிடலாம். அதுவே பணமாகும். அது எவ்வாறு நடைபெறுகிறது என்பதனைக் கீழ்க்கண்டபடி விவரிக் கலாம்.

பொதுவான வாங்கும் திறன் (Generalised Purchasing Power): பணம் பரிவர்த்தனைச் சாதனமாக விளங்கும்போது, 'பொரு ளுக்குப் பொருள்' என்ற மாற்று நடவடிக்கை, விற்றல் வாங்கல் என்று இரண்டு நடவடிக்கைகளாகப் பிரிக்கப்படுகின்றது.

ஒருவன் தன்னிடம் தேவைக்கு மேல் ஒரு பொருள் வைத்திருந்தால், அதனை விலை வைத்து விற்றுவிட்டுத், தேவையான வேறு ஒரு பொருளை விலை கொடுத்து வாங்கி விடலாம். தேவைக்கு மேலுள்ள பொருளை விற்கும் போது "ஒரு பொதுவான வாங்கும் திறன்" அல்லது பணம் அடைய முடிகிறது. அந்தத் திறனைக் கொண்டு எந்தப் பொருள் வேண்டுமானாலும் எவரிடமிருந்தாலும் வாங்கிக் கொள்ள முடிகிறது.

உற்பத்தித் துறையிலும் தொழில் நன்கு வளர, பணம் பெரிதும் உதவி புரிகிறது. தொழில் முயல்வோன் (Entrepreneur) தனது தொழிலுக்குத் தேவையான தொழில் நுட்ப வேலைகளில் மிகுதியான கவனம் செலுத்த முடியும். பொருளை உற்பத்தி செய்தவுடன். எந்த அளவுக்கு அப் பொருளினின்றும் பணியாளர்களுக்குச் சம்பளமாகக் கொடுப்பது, கட்டடத்திற்கு வாடகையாகக் கொடுப்பது போன்ற பிரச்சினைகளுக்குக் கவனம் செலுத்த வேண்டியதில்லை. ஏனென்றால் எல்லாவற்றையும் பணமாக மாற்றி அளிப்பதால், தொழில் முயல்வோன் தனது காலத்தையும் திறனையும் தொழில் நுட்பத் துறையின் மேல் செலுத்த முடியும். இதேபோல் ஆங்காங்கே பொருளுக்குப் பதில் பணத்தின் மூலமாக எல்லா நடவடிக்கைகளும் செய்யப்பட்டால் நாட்டின் பொருளாதாரம் தங்கு தடையின்றி வளர முடியும்.

(2) பணம் ஒரு மதிப்பளவை :-

பொருள்கள் மாற்றப்பட வேண்டிய சமுதாயத்தில் பொருள்களை மாற்றுவதற்கு ஏதுவாக ஒவ்வொரு பொருளையும் மதிப்பீடு செய்ய வேண்டியிருக்கிறது. அவ்வாறு செய்வதற்கு ஓர் அளவுகோல் தேவைப்படுகிறது. அளவு கோல் தான் "விலை" என்ற வடிவின் பணமாகும். எப்படிப் பொருள்களின் எடையைக் கிராம், கிலோ கிராம், குவிண்டால் என்று கணக்கிடுகிறோமோ, தொலைவை மில்லி மீட்டர், மீட்டர், கிலோமீட்டர் என்று அளக்கிறோமோ, கொள் அளவை மில்லி லிட்டர், லிட்டர் என்று கணக்கிடுகிறோமோ அப்படியே பொருள்களின் மதிப்பையும் பணத்தின் மூலம் அறிகிறோம். ஆனால் பண்டமாற்று முறையில் பொருள்களுக்கிடையேயுள்ள மதிப்பை அறிவது மிகவும் கடினம். அப்படி அறிந்தாலும் உலகிலுள்ள அனைத்துப் பொருள்களுக்கும் உள்ள மதிப்பின் வேறுபாடுகளை ஒரு நீண்ட பட்டியலில் எழுத வேண்டியிருக்கும். அப்படி எழுத முடியுமா என்று பார்த்தால் முடியாததேயாகும். எனவே ஒரு பொதுவான "திட்ட மதிப்பை"க் (Standard of Value) கண்டுபிடித்து அதன் மூலம் பொருள்களை மதிப்பிட்டால்

பண்டமாற்று முறையிலுள்ள பிரச்சினைகள் தீர்ந்து விடும். அந்தத் திட்ட அளவு தான் பணமாகும்.

பணம் ஒரு பரிவர்த்தனைச் சாதனமாகவும், திட்ட அளவாகவும் (மதிப்பளவாகவும்) ஏறத்தாழ ஒரே சமயத்தில் தனது பணிகளைச் செய்கிறது. உண்மையில் பார்க்கப் போனால் பொருள்களின் மதிப்பீட்டிற்குப் பின்தான் (பணத்தினால்) பரிவர்த்தனைப் பணியே தொடங்குகிறது. எனவே இரண்டு பணிகளும் ஒன்றுடன் ஒன்று இணைந்து செயல்படுகின்றன. சில சமயங்களில் பணம், பரிவர்த்தனைச் சாதானமாக ஆவதற்கு முன்பே மதிப்பளவாக இயங்குகிறது. எடுத்துக் காட்டாகப் பழங்காலங்களில் கால் நடைகள் (Cattle) பரிவர்த்தனைச் சாதனமாகப் பயன்படுத்தப் படாமல் திட்ட அளவாக மட்டும் பயன்படுத்தப்பட்டன. பல ஆண்டுகளாக 'ஹட்சன் பே கம்பெனி' (Hudson's Bay Company) யின் வியாபார இடங்களில் (trading area) பண்டமாற்று முறையில் மாற்றப்பட்ட பொருள்களுக்கு நீர் நாயின் தோல் (Seaver skin) தான் மாற்றுவீதமாகக் (exchange ratio) கையாளப்பட்டது.[1] பண்டமாற்று முறையில் பழங்காலத்தில் பரிவர்த்தனைச் சாதனத்தைப் புறக்கணித்தாலும் இந்தப் பண உலகில் புறக்கணிப்பது என்பது இயலாததாகும். இரண்டையும் (பரிவர்த்தனைச் சாதனத்தையும் திட்ட அளவையும்) சட்டப்பண அலகில் (Legal monetary unit) விவரிக்கப்பட வேண்டும். அதாவது டாலர், பவுன், பிராங்க், ரூபாய், மார்க் போன்று பண அலகு தான் ஒரு நாட்டின் திட்ட மதிப்பாகும். மேலும் ஒரு வியாபார நிறுமத்தின் சொத்துகளும் பொறுப்புகளும் பணத்தால் அளவிட்டுப் பார்த்தால் தான் அதன் உண்மை (பொருளாதார) நிலைமை நன்கு விளங்கும். அப்படி மதிப்பிடாமல் வேறு எந்த முறையில் மதிப்பிட்டாலும் உண்மை நிலைமையை அறிய முடியாது. எனவே, பணம் ஒரு மதிப்பளவையாக இருந்து தனது பணியைச் செவ்வனே செய்கிறது.

(3) பணம் ஒரு மதிப்பின் இருப்பு :-

பணம் பரிவர்த்தனைச் சாதனமாக இருந்து பணிபுரியும் போது தன்னுள் இரண்டு காரணிகளை அடக்கியுள்ளது. பொருளோ பணியோ (Service) பணத்திற்காக விற்கப்படுகிறது; அதே பணத்தைக் கொண்டு வேறு பொருளோ பணியோ வாங்கப்படுகிறது. முடிவில் பார்த்தால் பொருளுக்குப் பொருள்தான் மாற்றப்

1. Cf, J. L Laughliu, **New Exposition of Money, Credit, and Prices** Vol. I. (Chicago : University of Chicago Press, 1931) Pages 12—14.

படுகிறது. பணம் இடையிலிருந்து பொருள்களை மாற்றுவதற்கு ஒரு சாதனமாக அமைகிறது. நடவடிக்கைகள் (transactions) ஏற்படுவதற்காகத்தான் பணம் விரும்பப்படுகிறதே தவிர, பணத்திற்காகப் பணம் விரும்பப்படுவதில்லை; அப்படி விரும்பப்படுவது மிகவும் அரிதே. மறு பொருள்கள் வாங்கப்பட வேண்டியவைகள், ஒருசில பொருள்கள் விற்கப்பட்டபின் உடனே வாங்கப்படவேண்டுமென்பதில்லை. சிறிது காலந் தாழ்த்தித் தேவைப்பட்டபோது வாங்கிக்கொள்ளலாம். காலந் தாழ்த்தித் தேவைப்பட்டாலும், அச் சமயத்தில் அப்பணத்திற்கு மதிப்பிருந்து பிறரால் ஏற்றுக்கொள்ளப்படவேண்டும். அவ்வாறு ஏற்றுக் கொள்ளப்படவில்லையானால் அதைப் பணம் என்று கூற முடியாது. எனவேதான் பணம் ஒரு 'மதிப்பின் வைப்பு' (மதிப்பின் நிலைக்களன்) எனக் கூறப்படுகிறது

ஒரு தொழிலாளி தனது உழைப்பிற்காக நாள்தோறும் அல்லது வாரந்தோறும் அல்லது திங்கள் தோறும் வாங்கும் சம்பளத்தை உடனடியாகச் செலவிடுவதில்லை. தனக்குத் தேவைப்பட்டபோது சேமித்து வைத்த பணத்திலிருந்து விரும்பிய பொருளை வாங்குகிறான். சில பருவங்களில் சில பொருள்கள் மலிவாகக் கிடைக்கும். அச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி மொத்தமாகக் கூடுதலான அளவுக்கு அப்பொருள்களை வாங்குகிறான். அக்காலங்களில் பணத்திற்கு மதிப்பு இருப்பதால்தான் அப்பொருள்களை வாங்க முடியும். இல்லையேல் வாங்க முடியாது. ஆனால் பணத்தின் மதிப்பு, பெற்றபோது இருந்த அளவுக்குச் செலவிடும்போது இருக்குமா எனப் பார்த்தால் கேள்விக் குறியாகத்தான் இருக்கும்? மதிப்பு உயரலாம் அல்லது குறையலாம். அப்படி மதிப்பு உயருவதற்கும் குறைவதற்கும் காரணம் அப்பணமோ கடன் பணமோ (Credit money) எனக் கூறலாம். புழக்கத்தில் பணம் மிகுதியாக இருந்தால் நுகர்வோருக்கு வாங்கும் திறன் கூடுதலாகிறது. அதாவது, அவரவர் கையில் பணம் கூடுதலான அளவுக்கு இருக்கிறது எனப் பொருள்படும். அப்படியிருப்பதால் பொருள்களை வாங்குவதற்குப் போட்டி ஏற்பட்டு அப்பொருள்களின் மதிப்பு கூடுதலாகிறது. அதாவது பணத்தின் மதிப்பு குறைந்து விட்டது எனப் பொருள். இதனால் பண வசதியற்றோர் பல இன்னல்களுக்குள்ளாகிறார்கள். பொருள்களுக்குக் கூடுதலான விலை கொடுத்து வாங்குகிறார்கள். இதைக் கட்டுப்படுத்த வேண்டுமென்றால் புழக்கத்திலிருக்கும் கூடுதலான பணத்தையும், கடன் பணத்தையும் குறைக்க வேண்டும். சேமிப்பை மிகுதிப்படுத்த வேண்டும். இச் செயல்களைக் கடன் கட்டுப்பாடு (Credit Control) முறையின் மூலம் அரசே நிறைவேற்ற வேண்டும். அப்படிச் செய்தால்

பணத்தின் மதிப்பு கூடுதலாகாமலும், குறையாமலும் ஒரே நிலையில் இருக்கும்.

எனவே ஒருவன் பொருள்களை சேமித்து வைப்பதற்குப் பதில் பணத்தைச் சேமித்து வைக்கலாம். பணத்தைச் சேர்த்து வைத்தால் தேவைப்பட்டபோது எப்பொருள்களை வேண்டுமானாலும் வாங்கிக் கொள்ளலாம். பண்டமாற்று முறையில் இச் செயல்கள் நடைபெறுவதென்பது நினைக்க முடியாததாகும். பணம் ஒரு மதிப்பின் வைப்பாக இருந்து தனது பணியை மேற்கூறிய இரண்டு பணிகளுடன் சேர்ந்து செய்கிறது.

(4) பணம் ஒரு பின் செலுத்தும் திட்ட அளவு:-

பணத்தின் நான்காவது பணியான பின் செலுத்தும் திட்ட அளவு, பரிவர்த்தனைச் சாதனத்துடன் நெருங்கிய தொடர்பு கொண்டுள்ளது. அவ்வப் போது ஏற்படக்கூடிய ரொக்க நடவடிக்கைகளுக்குப் (Cash transactions) பணம் மாற்றும் சாதனமாக இயங்குகிறது. அதே போல கடன் நடவடிக்கைகளுக்கும் (Credit transactians) ஒரு குறிப்பிட்ட தொகையை எதிர் காலத்தில் செலுத்துவதற்கு அதே பணம்தான் தேவைப்படுகிறது. தற் காலத்தில் நடவடிக்கைகளில் பாதிக்கு மேல் கடன் பேரில்தான் நடைபெறுகின்றன. தனிப்பட்ட நபர்களிலிருந்து சிறுகடைகள், பெரிய நிறுவனங்கள் (Big Companies) மற்றும் அரசுவரை எல்லாமே கடன் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளன. வங்கிகளை எடுத்துக் கொண்டால், அவைகள் பொது மக்களிடமிருந்து பணத்தைப் பெற்றுத் திரும்பக் கடனாகத் தேவைப்பட்டோருக்கு அளிக்கின்றன. பொதுப் பயன் நிறுவனங்கள், அரசுக் கூட்டுறவு நிலவள வங்கிகள் (Co-operative Land Development Banks) போன்றவைகள் 5, 10, 20 ஆண்டுக் கடன் பத்திரங்களைப் (Debentures) பொது மக்களுக்கு அளித்து பணத்தைப் பெறுகின்றன. அந்தந்தக் கால முடிவில் அந்நிறுவனங்கள் அக்கடன் பத்திரங்களுக்குரிய முதலையும் வட்டியையும் சேர்த்துத் திருப்பிக் கொடுத்து விட்டுக் கடனீட்டுப் பத்திரங்களை மீட்கின்றன. இச் செயல்கள் அனைத்தும் பணத்தால் குறிப்பிடப்பட்டு நடைபெறுகின்றன. இப்படியாகப் பணம் ஒரு பின் செலுத்தும் திட்ட அளவாகப் பணி புரிகிறது. ஆனால் இப்பணி ஒழுங்காகச் செயல்பட வேண்டுமானால் பணத்தின் மதிப்பில் ஏற்றத் தாழ்வு இன்றி இருக்க வேண்டும்.

(5) பணம், வகையுடமைக்கு ஒரு பொறுப்புறுதி :-

இந்தப் பணிக்கும், பணம் ஒரு 'பின் செலுத்தும் திட்ட அளவு' என்ற பணிக்கும் அவ்வளவாக வேறுபாடு இருக்காது. இரண்டும்

ஒன்றுபோலவே தோன்றும். பின் செலுத்து முறையில் கடன்கள் குறிப்பிட்ட காலத்திற்குப்பின் பணத்தால் செலுத்தப்படுகின்றன. ஆனால் பணம் ஒரு வகையுள்ளவனுக்கு (Solvent) பொறுப்புறுதியாக இருக்கும்போது, ஆங்கேயும் அவன்பட்ட கடன்களை தீர்ப்பதோடுமல்லாமல், அவனுடைய நொடிப்பில்லா நிலைக்கும் (Solvency) ஒரு பொறுப்புறுதியாகவும் உள்ளது. அதாவது ஒருவன் கடன் கொடுக்கும்போது வாங்குபவனின் 'வகை' (கையிருப்பு) எந்த அளவுக்கு இருக்கிறது என்று பார்த்துத்தான் கடனை அளிக்கிறான். ஒரு வியாபார நிறுவனத்தை எடுத்துக் கொண்டால் அது வகையுள்ளதென்று அறிய வேண்டுமானால் அது ரொக்கமாக (பணமாக) எவ்வளவு வைத்திருக்கிறது எனப் பார்க்க வேண்டும். அதனுடைய இருப்புநிலைப் (Balance sheet) பட்டியலைப் பார்த்தால் சொத்துகளின் மதிப்பு, பொறுப்புகளின் மதிப்பை விடக் கூடுதலாக இருக்கும். இருப்பினும் அது 'ஒரு திடமான நிறுவனம்' (Sound Business) என்று கூறிவிட முடியாது. எத்தனையோ சொத்துக்களின் உண்மைவிலை, ஏட்டின் விலையைவிடக் குறைவாகவே இருக்கும். தேவைப்படும்போது அவைகளை விற்றால் கிடைக்கும் தொகை கொடுக்கப்படவேண்டிய பொறுப்புகளுக்குக் குறைவாகவே இருக்கும் அதாவது, கையிருப்பு பொறுப்புகளுக்குப் போதாததாகும். ஆகவே, ஒருவன் வகையுள்ளவன் என அறிவதற்கு அவன் பணமாக எவ்வளவு வைத்திருக்கிறான் எனப் பார்க்க வேண்டும். பணம் கூடுதலானால் அவனுடைய வகையும் கூடுதலாகிறது. எந்த நேரத்திலும், எந்த வகை எதிர்பாராக் கடன்களையும், பொறுப்புகளையும் செலவுகளையும் சந்திக்க இயலும். வங்கிகளை எடுத்துக் கொண்டால் பணம் செலுத்தி வைப்புகள் (Deposits) வைத்திருப்பவர்களின் தேவையை அவ்வப்போது சமாளிக்க நாள்தோறும் ஒரு குறிப்பிட்ட விகிதப்படி இருப்பை ரொக்கமாக அவைகள் வைத்திருக்கின்றன. தாள் பணத்தை அச்சடித்து வெளியிடும் அரசும், தன்னுடைய பொறுப்புகளுக்கு நிகரான இருப்பினை நாணயங்களாகவும் பொன்னாகவும் வைத்திருக்கிறது. முடிவாகக் கூறின், ஒருவனுடைய அல்லது ஒரு நிறுவனத்தினுடைய அல்லது ஒரு அரசினுடைய செல்வத்தை உறுதிப்படுத்த பணம்தான் பெரும் பங்கு வகிக்கிறது. இவைகள் அனைத்தும் வகையுள்ளவைகள் எனக்கூற, பணம் பொறுப்புறுதி அளிக்கிறது.

முதலாளித்துவப் பொருளாதார அமைப்பில்பணம்: (Moneyin the Capitalistic economy)

பொதுவுடைமைப் பொருளாதார (Socialistic economy) அமைப்பில் காணப்படும் 'மையத் திட்டவாரியம்' (Central Planning

board). முதலாளித்துவ அமைப்பில் இருக்காது. உற்பத்திக் காரணிகள் அனைத்தும் தனியார் உடைமையில் இருக்கும். தனியாருக்கு முழு சுதந்திரம் உண்டு. விருப்பப்படி பொருள்களை உற்பத்தி செய்யலாம். உற்பத்தியளவில் எந்தவிதக் கட்டுப்பாடும் இருக்காது. விருப்பமான வேலையர்களைப் (labourers) பணியில் ஈடுபடுத்தலாம்; ஊதியம் நிர்ணயிப்பதற்கு எவ்வித வரம்புமிருக்காது; முதலீடு செய்வதிலும் இலாபம் ஈட்டுவதிலும் அளவு கிடையாது; இதே போல் செலவு மற்றும் சேமிப்பு செய்வதிலும் முழு உரிமையுண்டு. சட்டத்திற்குப் புறம்பான செயல்களைத் தவிர வேறு அனைத்துச் செயல்களிலும் முதலாளித்துவ நாட்டில் தனி மனிதனுக்கும் உற்பத்தி நிறுவனங்களுக்கும் முழு சுதந்திரம் உண்டு. எந்த விதக் கட்டுப்பாடுமில்லாமல் மக்களின் தேவை நிறைவு செய்யப்படும். பொருளாதாரம் விரயமில்லாமலும் (Economic waste) உற்பத்தி சீராக அமைகிறது என்றுல் நம்மையெல்லாம் வியப்பில் ஆழ்த்துகிறதென்றே கூறலாம். ஒரு கட்டுப்பாடற்ற திட்டமுறையில் உற்பத்தியின் அழிப்பும் நுகர்வோரின் தேவையும் எப்படி சம நிலையில் இருக்க முடிகிறது? போதுமான அளிப்பு இருந்தாலும் எப்படி நுகர்வோரின் விருப்பத்திற்கேற்ப உற்பத்திப் பொருள்கள் செய்யப்படுகின்றன? ஒரு குறிப்பிட்ட அளவு உற்பத்தி செய்யப்பட்ட பொருள், எப்படி அதே பொருளுக்கான வரையற்ற தேவையைச் சமாளிக்க முடிகிறது? இவ் வினுக்களுக்கான விடையை ஆய்வு செய்து நோக்குங்கால் "பணம்" என்ற விடை கிடைக்கக் கூடும். திட்ட வரியமும், திட்டங்களும் இல்லாவிட்டாலும் திட்டமிட்டதைப் போன்று பொருளாதார நடவடிக்கைகள் செம்மையாக நடைபெறுவதற்கு முக்கிய காரணம் பணமே ஆகும். பொதுவுடைமைப் பொருளாதார அமைப்பில் கண்டிப்பான திட்டங்களால் பயன் இல்லாமற் போகலாம். ஆனல், முதலாளித்துவ பொருளாதார அமைப்பில் பொருளியல் வளர்ச்சி சிறப்புற்று விளங்குவதற்குப் பணமே தூண்டுகோலாக அமைகிறது என்று கூறுவார்கள். பணம் என்ற ஆவல், திட்டங்களைத் தானுகவே அமைக்கச் செய்தும், சரி செய்தும் நாட்டில் உற்பத்திக்கு வழி வகுக்கிறது.

நுகர்வோரின் தேவைக் கேற்ப எப்படி உற்பத்தி மேற் கொள்ளப்படுகின்றது எனப் பார்ப்போம். முதலாளித்துவ நாட்டில் ஒரு பொருள் உற்பத்தி செய்யப்படுகிற தென்றுல் இலாப நோக்கு இருப்பதால் தான். இலாபம் ஈட்டும் அளவு என்பது பொருள்களின் அடக்க விலைக்கும் விற்பனை விலைக்கும் உள்ள வேறுபாட்டைக் குறிக்கும். விற்பனை விலை அதிகமானுல் இலாபம் அதிகமாகும். உற்பத்தியாளர்களுக்குக் கூடுதலான

இலாபம் கிடைக்கும். மிகையான இலாப வேட்கை மேன்மேலும் முதலீடு செய்ய உற்பத்தியாளர்களைத் தூண்டும் குறிப்பிட்ட விற்பனை விலைக்கு ஒரு பொருள் விற்கப்படுகிற தென்றால் அவ் விலையில் நுகர்வோர் அப்பொருளை வாங்குகிறார்கள் என்று பொருளல்லவா? இவ்வாறு, பொருள் உற்பத்தி தேவைக்கு ஏற்றாற் போல் அமைகிறதென்று கூறலாம். ஒரு அளவுக்கு மேல் பொருளின் விலை சென்றால் நுகர்வோர் வாங்குவதை நிறுத்தத் தொடங்குவர். உற்பத்தி செய்யப்பெற்ற பொருள்கள் சந்தையில் முடங்க ஆரம்பிக்கும். பின் உற்பத்தியாளர்கள் தங்கள் விற்பனை விலையைக் குறைக்கத் தொடங்குவர்; அதற்கேற்ப உற்பத்தியையும் குறைப்பர். எனவே உற்பத்தி என்ற முறையில் நுகர்வோர் அங்கீகரிக்கப்படாத இயக்குநர்கள் என்று கூறலாம், இதன் கருத்து எந்தவிதத் திட்டமோ, கட்டுப்பாடோ இல்லாமல் தேவையும், அளிப்பும் சம நிலையில் இருக்கின்றன என்பதாகும்.

நுகர்வோர் விருப்பத்திற் கேற்ப எப்படிப் பொருள்கள் செய்யப்படுகின்றன என்பது அடுத்த வினாவாகும். அவர்கள் எத்தகைய பொருள்களுக்கு உயர் விலை அளிக்க முன் வருகின்றனரோ அத்தகைய பொருள்களை மட்டுமே உற்பத்தியாளர்கள் உற்பத்தி செய்வர். நுகர்வோர் விரும்பாத அல்லது குறைவான விலையில் மட்டுமே வாங்குவதற்கு முன்வரக் கூடிய பொருள்களை உற்பத்தி செய்ய முன் வரமாட்டார்கள். நுகர்வோர்களின் விருப்பத்தை அறிய வேண்டுமென்றால் அவர்கள் அளிக்க முன் வரும் விலையைக் கணக்குக்கு எடுத்துக் கொள்ள வேண்டும். விலை பணத்தின் மூலம் உணர்த்தப்படுவதால் உற்பத்தியின் போக்கை நிர்ணயிப்பதற்குப் பணம் பெரிதும் உதவுகின்றது. நுகர்வோர் விருப்பு வெறுப்புகளைப் புரிந்துகொண்டும், ஊகம் செய்தும் உற்பத்தியாளர்கள் பொருள்களின் உற்பத்தியை அமைத்தால் இலாபம் அடைவர், ஊகம் தவறுகப் போய்விட்டால் நட்டம் ஏற்படும். தனி ஒரு நபரின் விருப்பு வெறுப்புகள் உற்பத்தியை நிர்ணயிப்பதில்லையாயினும், நுகர்வோர் பலரின் விருப்பு வெறுப்புகளுக்கு ஏற்ப உற்பத்தி அமைகின்றது எனக் கூறலாம். ஒவ்வொரு பொருளும் எந்த அளவுக்குப் பயன்பாட்டை அளிக்கின்றதோ, அந்த அளவுக்கு நுகர்வோர் விலை கொடுக்க முன் வருவர். அதைப் பொறுத்து உற்பத்தி அமைகிறது.

விலைமட்ட அடிப்படையைக் கொண்டு உற்பத்திப் பொருள்கள் நிர்ணயிக்கப்பட்டதுபோல் அதே விலை மட்டத்தைக் கொண்டு உற்பத்திக் காரணிகளும் உற்பத்தியில் ஈடுபடுத்தப் படுகின்றன, அதிக அளவு ஊதியமோ, கைம்மாறோ அளிப்

பதன் மூலம் உற்பத்திக் காரணிகளில் ஈர்க்கப்படுகின்றன. மாறாக, எந்த உற்பத்தித் தொழில் அதிக அளவு ஈட்டம் கொடுக்கிறதோ அதை நோக்கி உற்பத்திக் காரணிகன் செல்கின்றன எனக் கூறலாம். அதாவது, உற்பத்திக் காரணிகள் உற்பத்தித் துறையில் ஈடுபடுத்தப்படுவதற்குக் காரணம் விலை மட்டமே ஆகும்.

தேவையை முழுதும் நிறைவு செய்ய முடியாத அளிப்பு எவ்வாறு பகிர்ந்தளிக்கப்படுகிறதென்று விவரிப்போமானால் ஈண்டும் விலைமட்டமே காரணமாக அமைகிறது. ஒரு குறிப்பிட்ட வகைப் பொருளுக்கு உற்பத்தியை விட தேவை அதிகமாக இருக்கிறதென்றால் மக்களின் வாங்குந்திறன் மிகையாக உள்ளது எனலாம். தேவை அதிகமாகிறது என்றால் அது ஒரு குறிப்பிட்ட விலையில் தான் இருக்க முடியும். அவ வகைப் பொருளின் விலையை உயர்த்துவதன் மூலம் தேவையைக் குறைக்கச் செய்யலாம். உயர்த்தப்பட்ட விலையில் எல்லோராலும் அப் பொருளை வாங்க முடியாது. ஒரு சில பணம் படைத்தவர்களால்தான் வாங்க முடியும். இவ்வாறு, ஒரு குறிப்பிட்ட அளவு உற்பத்திப் பொருளின் அளிப்புக்கேற்றபடி தேவை சரி செய்யப்படுகிறது. இதிலிருந்து அறிவதென்ன வென்றால் அளிப்பும் தேவையும் சமமாக ஆகும்வரையில் விலைமட்டம் மாறும். விலை வேறுபாடு காரணமாக, பற்றாக்குறைப்பொருள் பலருக்குப் பகிர்ந்து அளிக்கப்படுகிறது.

மக்களிடையேயுள்ள சேமிப்பு மன்பான்மையும், செலவிடும் மனப்பான்மையும் விலை மட்டத்தால்தான் நிர்ணயிக்கப்படுகின்றன. இவ்விடத்தே விலை மட்டம் என்பது வட்டி வீதத்தைக் குறிக்கும். வட்டி வீதம் மூலதனத்திற்கான தேவையையும், அளிப்பையும் நிர்ணயிப்பதன் மூலம் மக்களிடப் சேமிப்பு நாட்டத்தையும், நுகர்வு நாட்டத்தையும கட்டுப்படுத்துகின்றது.

பண்டங்களின் விலையை அடிப்படையாகக் கொண்டே உற்பத்தி செய்யப்பட வேண்டிய பொருளும் பொருளின் அளவும் நிர்ணயிக்கப்படுகின்றன. உற்பத்தித் துறையில் உற்பத்திக் காரணிகள் ஈடுபடுத்தப்படுகின்றன. பொருளுக்கான தேவையும் அளிப்பும் சமநிலை அடைகின்றன. அதேபோல் பணத் தேவையும், பண அளிப்பும் ஒன்றுக்கொன்று சமமாகின்றன. இவ்விதசமநிலைப் போக்குகள் பொருளாதாரத்தில் இடம் பெற வேண்டுமானால் பணம் என்ற கருவி உபயோகப்படுத்தப்பட வேண்டும். பணமே

கையாளப்படாத பண்டமாற்று முறையில் விலை நிர்ணயம் என்ற பிரச்சனைக்கு இடமே இல்லை. ஆகவே, நாட்டின் பொருளாதார வளர்ச்சியைத் திட்டமிட்டு உருவாக்கும் திட்ட வரியமற்ற முதலாளித்துவ அமைப்பில் பணம் ஒரு அடிப்படைத் தேவை என்பது நன்கு தெளிவாகின்றது.

பணம், பொருளாதாரத்தில் பரிமாற்றம் செய்து கொள்ளும் மக்களை விற்குநர்கள், (Sellers), வாங்குநர்கள் (Buyers) என இரண்டு பிரிவுகளாகவும், பண்டமாற்றுச் சந்தையை அளிப்பு, தேவை என்று இரண்டாகவும் பிரிக்கிறது. முன்பே பார்த்தது போல் விலை வட்டம் என்பது தேவை, அளிப்பு சக்திகளைப் பொறுத்து நிர்ணயம் செய்யப்படுகின்றது.

உலகில் கடன் சந்தை (Credit Market) வளர்ச்சிக்குப் பணம் முக்கியத் தேவையாக அமைகிறது. 'பொருளுக்குப் பொருள்' என்ற அடிப்படையில் பண்டமாற்று முறையிலும் கடன் நடவடிக்கை இடம் பெற்றது. ஆனால் பொருளைக் கடனாகப் பெற்றுப் பிற்காலத்தில் வட்டியுடன் சேர்த்துப் பொருளாகவே அளிப்பது மிகவும் கடினமான செயலாகும். எண்ணற்ற பொருள்கள் எண்ணற்ற தரங்களில் அவ்வப்போது உற்பத்தி செய்யப்படுவதால் பண்டமாற்று முறையில் கடனைத் தீர்ப்பதென்று கடனீந்தோர், கடனாளி ஆகியோரிடையே சிக்கலான பிரச்சினையாகும். ஆனால் விற்றல், கொடுக்கல், வாங்கல் போன்ற நடவடிக்கைகள் பணத்தின் மூலம் உணர்த்தப்பட்டால் எந்தவித இடர்ப்பாடோ—சர்ச்சையோ ஏற்பட வாய்ப்பிருக்காது. பண அங்காடியில் கடன் அளவும் வட்டி வீதமும் பணத்தின் அடிப்படையைக் கொண்டு நிர்ணயிக்கப்படுவதால்தான் கடன் சந்தை வளர்ச்சியுறத் தொடங்கியது.

முதலாளித்துவ அமைப்பில் உற்பத்தி, நுகர்வு, பகிர்வு, ஆகியவை விலை மட்டத்தை அடிப்படையாகக் கொண்டு நிர்ணயிக்கப்படுவதால் முதலாளித்துவம் செம்மையாகச் செயல்படுவதற்குப் பண அடிப்படையிலான விலையே முக்கிய காரணமாகும். வேலைப் பகுப்பு முறையும், சிறப்புத் தேர்ச்சியும் பணத்தின் தோற்றத்திற்குப் பின்னரே நடைமுறைக்கு வந்தன. பணத்தின் மூலம் பரிவர்த்தனை நடைபெறுவதால் உற்பத்தியாளர், நுகர்வோரின் உழைப்பும் நேரமும் கணிசமான அளவில் சிக்கனப்படுத்தப்படுகின்றன.

பணத்தின் தீமைகள்: பணம் ஒரு பரிவர்த்தனைச் சாதனம் என்பதை மறந்து மக்கள் பணமாயையுள்ளாகின்றனர். பணம்

ஓர் உண்மையான செல்வம் என்று கருதிப் பணத்தைச் சேமித்து வைக்கிறார்கள். சில போது இந் நிலை வீணாகி விடுகிறது. பணவீக்கம் ஏற்பட்டு, சந்தையில் பொருள் கிடைக்கவில்லை என்றால் பணச் சேமிப்பால் எவ்விதப் பயனும் கிடையாது. பணப் பெருக்கினால் முதலீடு பெருகி உற்பத்தி பெருகும் என்பது இல்லை. அதே போல் கூலிகள் உயர்ந்தும் மக்கள் பணத்தால் நலமடையாமல் போகலாம். பணத்திற்குப் பதில் பண்டங்களாகவே கொடுக்கப் பட்டால் இந்நிலை ஏற்படாது. கூலிகள் உயர்ந்தும் போதுமான தேவையை நிறைவு செய்ய முடியாமல் போகிறது என்றால் பணத்தின் மதிப்பு வீழ்ச்சியுற்று இருக்கிறது என்று பொருள். பணத்தின் மதிப்பு இறங்காது என சேமித்து வைத்தால் நாளடைவில் அதன் மதிப்பு பாதிக்கும். கீழாக விழத் தொடங்கலாம். இதனால் பணம் நம்பிக்கைக் கேடு செய்ய வல்லது எனலாம்.

பணத்தின் மதிப்பு ஏறும்போது பண்டங்கள் மலிவாகக் கிடைக்கும். ஆனால் வியாபாரிகள் வணிக மந்தத்தால் பாதிக்கப் படுவார்கள். தொழில் இலாபகரமாக இருக்காது; முதலீடு குறையும்; முதலீடு குறைந்தால் நாட்டில் வேலை வாய்ப்பும் குறையும்; இதனால் நாட்டு வருமானமும் குறையும். இதற்கு மாறுகப் பணத்தின் மதிப்பு குறைந்தால் பண்டங்களின் விலை ஏறத்தொடங்கும். விலை ஏற்றத்தால் வணிகர்கள் இலாபமடையக் கூடும். நடுத்தர வகுப்பினரும் ஏழைகளும் பாதிக்கப்படுவர். இப்படியாக, பண மதிப்பு மாற்றத்தினால் சமூகத்தில் பல பகுதிகளில் பலவிதமான கேடுகள் விளையும்.

வாணிபச் சுழல்கள் ஏற்படுவதற்குப் பணமே முக்கிய காரணமாகும். சேமிப்புத் தொகை யாவுமே முதலீடு செய்யப்பட்டால் வாணிபச் சுழல்கள் ஏற்பட வாய்ப்பில்லை. சேமிப்புத் தொகைக்கும் முதலீட்டிற்கும் இடையே வேறுபாடுகள் இருப்பதால்தான் வாணிபச் சுழல்கள் ஏற்படுகின்றன.

சிலர் செல்வச் செருக்குடன் இருப்பதற்கும், சிலர் வறியவர்களாக இருப்பதற்கும் பணம் தான் காரணம். இலாப நோக்குடன் பொருள்கள் உற்பத்தி செய்யப்படுவதால் மிகையான இலாப மளிக்கும் பொருள்கள் மட்டுமே உற்பத்தி செய்யப்படவும், இலாபமளிக்காத, ஆனால் மக்களுக்கு இன்றியமையாத பொருள்களின் உற்பத்தி தவிர்க்கப்படுவதற்கும் பணமேதான் காரணமாகும். தற்காலத்தில் அன்றாட வாழ்க்கையில் சட்டத்திற்குப் புறம்பான செயல்களும், தரக்குறைவான செயல்களும் நடைபெறுவதற்கு அப் பணமேதான் காரணமாகும்.

மனிதனுல் படைக்கப்பட்ட பணம், முறையாகக் கையாளப் பட்டு, பணவாக்கக் கொள்கை மற்றும் அரசைக் கொள்கை மூலம் கட்டுப்படுத்தப்படவில்லை யென்ருல் பொருளாதார அழிவுப் பாதைக்கு வழிவகுத்து மனிதனையே அழித்துவிடும். அவன் இடும் ஏவல்களை நிறைவேற்றும் பணியாளாகப் பணம் இருக்க வேண்டுமே தவிர, பணத்தின் பணியாளராக அவன் இருக்கக் கூடாது.

பொது உடைமைப் பொருளாதார அமைப்பில் பணம் :

கார்ல் மார்க்ஸ், லெனின் போன்ற பொதுவுடைமை வாதிகள் பணத்தின் மேல் வெறுப்புக் கொண்டிருந்த போதிலும் நடை முறையில், பொருளாதாரத்தில் தொழில் வளர்ச்சிக்குப் பணம் ஒரு அடிப்படைத் தேவையாகும் எனச் சோவியத் ருஷ்யா உணர்ந்தது. பொதுவுடைமைப் புரட்சியாளர்கள் (Bolsheviks) ருஷ்யாவில் 1917—ல் ஆட்சிக்கு வந்த காலத்தில் ருஷ்யப் பொரு ளாதார நிலை மிகவும் குழப்பமான நிலையில் இருந்தது. முன்பே வீக்க நிலையிலிருந்த பொருளாதாரம் மிகை வீக்க நிலைக்கு வந்து விட்டது. புரட்சிக்காரர்கள் அரசுச் செலவினங்களுக்காக மிகுதி யான அளவுக்குப் பணத்தை வெளியிட்டதால் அந்நிலை ஏற்பட் டது. விலைமட்டம் இரண்டு மூன்று திங்களுக்கொரு முறை இரண்டு மடங்காகிக் கொண்டே (1918 முதல் 1921 வரைக் குள்) சென்றது. அதே சமயத்தில் பணமே கையாளப்படாத ஒரு இயற்கையான பொருளாதாரமாக மாற்றப்பட வேண்டும் என்ற நம்பிக்கையுடன் கொடையாகப் பொருள்களை மக்களிடையே வழங்கும் பணியை அரசு மேற்கொண்டது.[2] ஆனல் அந் நம் பிக்கை எந்த விதப் பயனையும் அளிக்கவில்லை.

பணம் கையாளப் பெறும் முறை முற்றிலும் நிறுத்தப்பட வேண்டு மென்ற கொள்கை உள்பட பொதுவுடைமைக் கொள் கையின் வேறு பல கோட்பாடுகளும் கைவிடும்படியான ஒரு புதிய பொருளாதாரக் கொள்கை (New Economic Policy) 1921—இல் உருவாக்கப்பட்டது. மையத்திட்டங்களும் ஒருங் கிணைப்பும் பெருமளவுக்கு 1920—இல் மேற்கொண்டபோது பணவியல் மற்றும் வங்கியல் முறைக்கு முக்கியத்துவம் கொடுக்கப் பட்டது. இன்றும் அதே நிலைதான் ருஷ்யாவில் இருந்து வருகிறது. ஆனல் பண வாக்கக் கொள்கையும் வங்கியில் செயல் முறையும் அரசுக் கட்டுப்பாட்டுத் திட்டங்களுக்குள்ளாகத்தான். நடைபெற

[2] Paul B. Trescott, "Money, Banking and Ecomic Welfare", — Page 17.

வேண்டும். இருப்பினும், தடையிலாப் பொருளாதார முறையில் பணம் செய்யக்கூடும் பணிகளில் பெரும்பாலானவை பொதுவுடைமைக் கொள்கையுடைய நாட்டிலும் காணப்படுகிறது. எவ்வளவு பொருள் உற்பத்தி செய்யப்பட வேண்டும், எப்போது உற்பத்தி செய்யப்பட வேண்டும், எந்த முறையில் உற்பத்தி செய்யப்பட வேண்டும் என்ற திட்ட ஆணைகள் வேண்டுமானால், உற்பத்திச் செலவைப் பொருட்படுத்தாமல், பண உதவியின்றிப் பிறப்பிக்கலாம். ஆனால் பரிவர்த்தனை என்று வரும்போது பணத்தின் உதவியை நாடித்தான் ஆக வேண்டியிருக்கிறது. பணத்தின் உதவியின்றிப் பரிவர்த்தனைச் செய்வதென்பது எவ்வளவு கடினம் என்று முன்பே பார்த்தோம். கூலிகளும் சம்பளங்களும் பணத்தின் மூலம்தானே உணர்த்தப்பட வேண்டியிருக்கிறது. அப்போதுதான் நுகர்வோர் நுகர்ச்சிப் பொருள்களைச் சந்தையில் வெகு இலகுவாக வாங்க முடியும்.

பொதுவுடைமைக் கொள்கையுடைய நாடு என் ருல் அனைத்துப் பொருள்களும் பணிகளுமே கைம்மாறு இல்லாமல் நடைபெறுகின்றன என்று பொருளல்ல. ஒரு சில உணவுப்பொருள்கள் வேண்டுமானால் கொடையாக அளிக்கப்படலாம். பெரும்பாலான பொருள்களுக்கும் பணிகளுக்கும் விலை கொடுத்துத்தான் வாங்கவும் விற்கவும் வேண்டும். நுகர்வோரின் தேவைக் கேற்றவாறு உற்பத்தி அமைவதில்லை என்ருலும் திட்டக் குழு அதிகாரிகள், நுகர்வோரின் கோரிக்கையை அவ்வளவாக நிராகரிப்பதில்லை. இதற்கு மாருக விலைவாசிகளை அதிகப்படுத்துவதன் மூலம் நுகர்வோரின் தேவை கட்டுப்படுத்தப்படுகிறது. விலைவாசிகளும், வருமானங்களும் பணத்தின் மூலம் உணர்த்தப்படுவதாலும் தனிப்பட்ட நபர்களுக்குள் அவைகள் வேறுபடுவதாலும் தான் பொருள்கள் ஒருவரிடமிருந்து வேறு ஒருவருக்கு மாறுகின்றன.

'உழைப்புக் கேற்ற ஊதியம்' அல்லது ''ஊதியத்திற் கேற்ற உழைப்பு'' என்று இருந்தால்தான் நாட்டில் உற்பத்தியைப் பெருக்க முடியும். வேறு எந்த விதக் கட்டாயத்தினலும் வேலையர்களின் திறமையையோ. உற்பத்தியையோ அதிகரிக்க முடியாதென ருஷ்யர்கள் குறிப்பாக உணர்ந்தனர். அதன்படியே இன்றும் செய்து வருகின்றனர். ஆனால் கூலி, வருமானம் போன்றவை அரசாலேயே கட்டுப்படுத்தப்பட்டு நிர்ணயம் செய்யப்படுகின்றன. இவை முதலாளித்துவ நாட்டில் சுதந்திரமாக நிர்ணயம் செய்யப்படுவதுபோல் பொதுவுடைமை நாட்டில் கிடையாது.

திட்டக் குழுவினர் வரைந்துள்ள எல்லைக்குள் இலாப ஈட்டத்தைப் பொறுத்து உற்பத்தித் துறையினர் தங்கள் உற்பத்தியில் கவனம் செலுத்துகின்றனர். இலாப ஈட்டம் அதிகமாகக் கொடுக்கக் கூடும் பொருளாக இருந்தால் அதன் உற்பத்தியை அதிகப்படுத்துகின்றனர்; குறைவாகக் கொடுக்கக் கூடியதாக இருந்தால் உற்பத்தியையும் குறைக்கின்றனர். ஆனல் எந்த அளவு உற்பத்தி செய்தாலும் ஒரு எல்லைக்கு மேல் போகக் கூடாது. மேலும் உற்பத்திச் செலவுக்கும், வெளியாக்கத்திற்கும் (Our put) விற்பனை விலைக்கும் கணக்குகள் நெறியாக இருத்தல் அவசியமாகும். திட்டமிட்டபடி இலாபம் முழுவதும் கிடைத்து அதில் ஏதேனும் உபரியான இலாபமிருப்பதாகக் கணக்கிட்டால் அந்த இலாபம் பணியாளர்களுக்கும் மேலாண்மைத் துறையுள்ளவர்களுக்கும் பிரித்துக் கொடுக்கப்பட வேண்டும். தடையிலாப் பொருளாதாரத்தில் உள்ளபடி இல்லாமல் பொதுவுடமைப் பொருளாதாரத்தில் உற்பத்திக்கும் விலை மட்டத்திற்கும் எவ்விதத் தொடர்புமில்லை. விலை எதுவாக இருந்தாலும் திட்டமிட்டபடி தான் உற்பத்தி அமைகிறது. ஆனல் ஆங்காங்கே சிறு அத்துமீறல்கள் புறக்கணிக்கத்தக்க அளவுக்கு இருக்கலாம். முடிவில் பொதுவுடைமைக் கொள்கையுடைய நாடுகளில், குறிப்பாக ருஷ்யாவில், பணம் ஒரு மதிப்பளவையாகவும், பரிவர்த்தனைச் சாதனமாகவும் தான் பயன்படுத்தப்படுகிறதே தவிர, உற்பத்தியின் அளவையும் அளிப்பீடு செய்வதையும் நிர்ணயிக்கும் கருவியாகப் பயன்படுத்தப்படுவதில்லை என்று கூறலாம்.

3. பணத் திட்டங்கள்
(Monetary Standards)

பணத் திட்டம் என்றால் என்ன என்பதைப் பற்றி அறியு மிடத்துப் பணம் ஒரு மதிப்பளவுகோலாக விளங்குகிறதுஎன்பதைக் கண்டு கொள்ள வேண்டியிருக்கிறது. பொருளாதார மதிப்பு பணத்தின் மூலமாகவே குறிக்கப்படுகிறது. அதாவது பொருளா தார மதிப்பின் அளவு கோல் பணமாகும். அப்பணம் பல அலகு களாக—ரூபாய், வெள்ளி, டாலர், பவுன் போன்றவை—குறிப்பிடப் படுகின்றது. பணத் திட்டம் என்பது ஒரு குறிப்பிட்ட மதிப்பளவு கோலை அடிப்படையாகக் கொண்ட பணவாக்க முறையைக் (Monetary System) கொள்வதாகும். மதிப்பளவு கோலின் பெயரையும், சில்லறை நாணயங்கள் மற்றும் அரசாங்கத் தாள் பணம் அச்சிட்டு வெளியிடல் கிடைத்தற்கரிய உலோகங்கள் வாங்குதல், விற்றல், ஏற்றுமதி இறக்குமதி செய்தல் மற்றும் அவைகளை ஒழுங்குபடுத்துதல், வங்கிகள் கடன் ஆக்கம் செய்தல் அல்லது குறைத்தல், வங்கி வைப்புக்களை கூடுதலாகப் பெறுதல் அல்லது குறைப்பு செய்தல் போன்ற பணவாக்கத் தன்மை (Monetary Character) களின், ஒழுங்குகளையும் பணத்திட்டம் கொண்டுள்ளது.

பணத் திட்டங்களின் வகைகள் (Types of Monetary Standards) :

பணத் திட்டங்களை இரண்டு பெரும் பிரிவுகளாகப் பிரிக்கலாம்: ஒன்று 'பண்டத் திட்டங்கள்' (Commodity Standards) : மற்றொன்று 'ஆணைத் திட்டங்கள்' (Fiat standards). பண்டப் பணத்தில் அதன் முக மதிப்பும், வாங்கும் சக்தியும் சம அளவில் இருக்கும். எடுத்துக் காட்டாக, ஒரு நாடு பொன்னைப் பணமாகக் கையாண்டால், ஒரு குறிப்பிட்ட பொன் நாணயத்தின் (Gold Coin) வாங்கு திறனும், அந்நாணயப் பண்டத்திலுள்ள உலோக மதிப்பும் ஒன்றாகும். வெள்ளியைப் பணமாகக் கொண்டால் அம் முறைக்கு வெள்ளித் திட்டம் என்றும், பொன்னையும் வெள்ளியையும் சேர்த்துச் செலாவணி நாணயமாக ஆட்சி செய்தால், அம்முறைக்கு 'இரு உலோக செலாவணித் திட்டங்கள் (Bimetallic Standards) என்றும் பெயர்படும்.

ஆணைச் செலாவணித் திட்டத்தில் பண்டத்தின் முக மதிப்பும், பண்டத்தின் மதிப்பும் சம அளவில் இரா. இவ்வகைப் பணம் அச்சிடப்பட்டுப் புழக்கத்தில் விடப்படும் முக்கிய நோக்கம் 'பணம் ஒரு மாற்றுச் சாதனமே' என்பதால்தான். ஒரு பவுன் பொன் நாணயத்தை மாற்றி உலோகமாகப்பெற விரும்பினால் அதற்குச் சமமான அளவில் உலோகம் வாங்க முடியாது. சற்றுக் குறைவாகத்தான் வாங்க முடியும். நாட்டில் தேவையான அளவுக்கு ஒரு குறிப்பிட்ட உலோக நாணயத்தைக் கையாளத் தேவையான உலோகம் கிடைக்காததால்தான் இவ்வகை ஆணைச் செலாவணித் திட்டம் கையாள வேண்டி இருக்கிறது. அமெரிக்காவில் 1862 முதல் 1879 வரை இவ்வகைத் திட்டம் உபயோகப்படுத்தப்பட்டது.

திட்டப் பணமும், கடன் பணமும்: (Standard Money and Credit Money)

திட்டப் பணம் என்பது ஏனைய வகைப் பணங்களை நேர்முகமாகவோ அல்லது மறைமுகமாகவோ இறுதியில் மீட்கக் கூடியதாகும். அதே போழ்து அதனை வேறு எதனாலும் மீட்க முடியாததும் ஆகும். (Standard money may be defind as the money of ultimate redemption of all other kinds of money, either directly or indirectly). ஒரு நாடு பொன் – நாணயத் திட்டத்தைக் கையாண்டால் பொன் நாணயங்கள் திட்டப் பணமாகும்; பொற் கட்டித் திட்டத்தை (Gold Bullion Standard) ஒரு நாடு ஆட்சி செய்தால், திட்டப் பணம் என்பது காப்பிருப்பாக (Reserve) வைக்கப்பட்டிருக்கும் பொற் கட்டிகளைக் கொண்டதாகும்; ஆணைச் செலாவணித் திட்டத்தை ஒரு நாடு ஆட்சி செய்தால் திட்டப் பணம் என்பது அரசுக் காகிதப்பணம் அல்லது வங்கித்தாள் பணம் (Bank Notes) அல்லது இரண்டையும் சேர்த்துக் குறிக்கும்.

திட்டமற்ற பணவகைகள் கடன் பணமாகும். திட்டப் பணத்தை அடைவதற்கு உறுதியளிக்கப்படும் பணம் கடன் பணமாகும். கடன் பணத்தை ஆட்சி செய்வது திட்டப் பணத்தின் அளவைப் பொறுத்திருக்கிறது. அதன் அடிப்படையில்தான் கடன் பணம் உண்டாக்கப்படுகிறது. அரசும், வங்கி நிறுவனங்களும் தற்காலத்தில் கீழ்கண்ட கடன் பணங்களை உண்டாக்கி வெளியிடுகின்றன:

(1) அரசுக் கடன் பணம்—(அ) திட்டப்பணத்திற்கு ஈடாக உறுதித்தாள்கள் அளித்தல் (ஆ) துணை நாணயங்கள் (SUBSIDIARY COINS)

(2) வங்கிக் கடன் பணம்— (அ) வங்கிப் பணம் (ஆ) வங்கித் தேவை வைப்புக்கள் (Bank Demand Deposits).

அரசுக் கடன் பத்திரத்தில் உறுதித்தாள் பணங்களும் துணை நாணயங்களும் இடம் பெறுவதுண்டு. சிறு வணிக நடவடிக்கைகளுக்காகத்துணை நாணயங்கள் அச்சிடப்பட்டுவெளியிடப்படுகின்றன. இவ் வகை காசுகளின் முகமதிப்பு அவைகளின் உலோக மதிப்பை விடச் சற்றுக் கூடுதலாகவே இருக்கும்; திட்டப்பணத்தால் மீட்கப்படக்கூடியவையாகும். திட்டப்பணமாக மீட்கக்கூடும் என்பதற்காக மட்டும் அந்தக் காசுகளுக்கு மதிப்புக் கொடுக்கப்படவில்லை; அதனுடைய அளிப்பு வரையறுக்கபபட்டு அரசால் வெளியிடப்படுவதால் மதிப்புக் கொடுக்கப்படுகிறது; எல்லோரும் ஏற்றுக்கொள்கிறார்கள். சிற்சில சமயங்களில் அரசு காகிதக் கடன் பணங்களையும், அச்சிட்டு வெளியிடுவதுண்டு. இவைகள் கடைசியில் திட்டப்பணமாக மாற்றப்படக்கூடும். அமெரிக்காவில் 1890-ல் வெளியிட்ட கருவூல நோட்டுகளும் (Treasury Notes), வெள்ளிச் சான்றிதழ்களும் (Silver Certificate) இதற்கு எடுத்துக் காட்டுகளாகும். இங்கிலாந்தில் முதல் உலகப் போர் காலத்தில் வெளியிட்ட கருவூல நோட்டுகள் 1928—வரைக்கும் கையாளப் பட்டன. (retained); கனடாவில் 1934-இல் மைய வங்கி ஏற்படுத்தும் வரைக்கும் கருவூல நோட்டுகள் வெளியிடப் பட்டன.

கடன் பணம் பெருக்குவதில் முக்கியப் பங்கு வகிப்பது வங்கிகளே. மைய வங்கி நோட்டுகள், இங்கிலாந்து வங்கி நோட்டுகள், இந்திய ரிசர்வ் வங்கி நோட்டுகள் போன்றவை அந்தந்த நாடுகளில் மாற்றுச் சாதனமான கடன் பண வகையைச் சேர்ந்தவைகளாகும். இவ் வகை நோட்டுகள் சில நாடுகளில் வேறு வகைப் பணங்களாக மாற்றுரிமை பெற்றிருந்தன. வேறு சில நாடுகளில் அவைகளுக்கு மாற்றுரிமை இல்லை. முன்னதற்கு இந்திய நோட்டுகளையும், பின்னதற்கு இங்கிலாந்து நோட்டுகளையும் கூறலாம்.

காசோலைக்குட்பட்ட தேவை வைப்புகளும் (Demand deposits subject to cheques) கடன் பண வகையைச் சேர்ந்தவையாகும். இங்கிலாந்து, அமெரிக்கா போன்ற நாடுகளில் 90 சத விகித (90 விழுக்காடு) வணிக நடவடிக்கைகள் காசோலை மூலமாகவே நடைபெறுகின்றன. எனவே, காசோலைகளும் மாற்றுச் சாதனமாகப் பணிபுரிகின்றன.

திட்டப் பணத்திற்கும் கடன் பணத்திற்கும் உள்ள வேறுபாடு நிரந்தரமானதல்ல. அவைகள் சூழ்நிலைக்கேற்ப மாறுபடும். ஒரு காலத்தில் திட்டப்பணமாக இருந்தது வேறொரு காலத்தில் கடன் பணமாக மாறுகிறது. அமெரிக்காவில் உள்நாட்டுப் போருக்கு முன்னர், 371.25 குன்றிமணி (Grains) கொண்ட ஒரு வெள்ளி டாலர் திட்டப் பணமாக இருந்தது. ஆனால் அதே வெள்ளியைக் கொண்ட அந்த டாலர் இப்போது கடன் பணமாக இருக்கிறது. இதேபோல் 1879 வரைக்கும் பச்சைப் புறத்தாள்கள் (Green backs)* திட்டப் பணமாகக் கையாளப் பட்டன. எப்போது அவைகள் பொன்னுக்கு மீட்கமுடியும் எனக் கொள்ளப்பட்டதோ, அப்போதே அவைகள் கடன் பணமாகவும், பொற்காசுகள் திட்டப்பணமாகவும் மாறின. கைமாறும் பணம் கிடைப்பதற்கரிய உலோகமாக மீட்கப்படுவதை எப்போது அரசு நிறுத்தி வைக்கிறதோ, பணத்தின் முகமதிப்பும் அதன் உலோக மதிப்பும் எப்போது சமமாக இல்லையோ, அப்போதே புழக்கத் திலுள்ள கடன் பணம் தானுகவே திட்டப் பணமாக மாறுகிறது.

பணத் திட்டங்களின்—உள்நாடு மற்றும் பன்னாடு—ஆய்வு :

எவ்வகைப் பணத் திட்டத்தையும் ஆளுவதற்கு ஒவ்வொரு நாட்டிற்கும் உரிமை இருந்தாலும், ஆளக்கூடிய குறிப்பிட்ட பணத் திட்டம், மற்ற நாடுகள் ஆளுகின்ற பணத் திட்டங்களின் அடிப்படையைப் பொறுத்திருக்கிறது. ஒரு குறிப்பிட்ட பணத்திட்டத்தை, எடுத்துக் காட்டாக, பொற்கட்டித் திட்டத்தை ஒரு நாடு மட்டும் கையாண்டால் ஏற்படுகின்ற, மற்றும் நிகழ்கின்ற நிலையானது (Situation), அதே திட்டத்தை மற்ற நாடுகளும் கையாளுகின்ற போது ஏற்படுகின்ற நிலைக்கு மாறுபடும். இந்நிலை ஏற்படுவதற்கு, முக்கிய காரணம், பணம் ஒரு மாற்றுச் சாதன மாகவும், மதிப்பளவையாகவும் உள்நாட்டில் மட்டும் இருக்காமல், பன்னாட்டு அளவிலும் பணி புரிவதால்தான். பன்னாட்டு அளவில் மாற்றுச் சாதனமாக இயங்குகிறபடியால் உள்நாட்டுச் சூழ் நிலையைக் கட்டாயமாகப் பாதிக்கிறது. ஆனால் உள்நாட்டுப் பணத் திட்டத்திற்கும், பன்னாட்டுப் பணத்திட்டத்திற்கும் உள்ள வேறு பாட்டை முழுமையாக வேறுபடுத்திக் கூற முடியாது. இருப்பினும், இரண்டுக்கும் உள்ள வேறுபாட்டைச் செயற்கை வடிவிலாவது விவரித்தால் தெளிவு காணலாம். நாம் பொதுவாக அறிய வேண்டியது என்னவென்றால் "வேறு நாடுகள் கையாளாத பணத் திட்டத்தை ஏன் ஒரு நாடு மட்டும் ஆள நினைக்கின்றது? அல்லது

* Greenbacks: An American fiduciary note issue, First issued by the U. S. Treasury in 1862.

மற்ற நாடுகள் ஆளுகின்ற பணத் திட்டத்தையே ஏன் ஒரு நாடு ஆட்சி செய்ய நினைக்கின்றது?'', என்பதாகும்.

நாம் முதலில் மூன்று கூறுகள் அடங்கிய பொற்காசுத் திட்டம் (Gold Coin Standard), பொற் கட்டித் திட்டம் (Gold Bullion Standard) மற்றும் பொன் மாற்றுத் திட்டம் (Gold Exchange Standard) அடங்கிய பொன் திட்டத்தை உள்நாட்டு அளவில் ஆய்வு செய்து விவரிப்போம். அதற்குப்பின் பன்னாட்டு அளவில் பொன் திட்டத்தைப் பற்றிப் பார்க்கலாம்.

உள்நாட்டுப் பொன் திட்டத்தின் நன்மைகள்:

பொன் திட்டத்தைக் கையாண்ட நாடுகள், பொதுவாக, நன்மையையே அடைந்ததாகக் கூறப்படுகிறது. ஒரு நாடு மட்டும் அத்திட்டத்தை ஆட்சி செய்தபோது ஒரு சில நன்மைகளும், பல நாடுகள் ஆட்சி செய்த போது வேறு சில நன்மைகளும் ஏற்பட்டு இருக்கின்றன. நாம் முதலில், ஒரு நாடு மட்டும் தனித்திருந்து பொன் திட்டத்தை ஆட்சி செய்ததால் ஏற்பட்ட நன்மைகளை விவரிப்போம். (1) பொது மக்களிடையே பணவாக்க முறையில் நம்பிக்கையை அதிகப்படுத்தியது. (2) பணவாக்கக் கட்டுப்பாட்டு முறைகளை அரசோ மைய வங்கியோ பயன்படுத்த வேண்டிய அவசிய மேற்படவில்லை. ஏனென்றால் பணவாக்கக் கட்டுப்பாட்டு முறைகள் தானாகவே செயல்படுத்தப்பட்டிருக்கின்றன. (3) பொன்னினின்றும் விலகிய வேறு எந்தப் பணத் திட்டத்தைக் கையாண்டாலும் விலைவாசி மட்டம் பொன் திட்டத்தின் கீழ் இருப்பதைப் போல் அவ்வளவு நிலையாக இருக்காது. அதாவது பொன் திட்டத்தின் கீழ் விலைவாசி மட்டம் ஒரு நிலையில் (Stable) இருந்தது.

நம்பிக்கை (Confidence):

பொன் திட்டம் பணவாக்கத் துறையில் மக்களிடையே நம்பிக்கையை வளர்க்கிறது. பொன் ஒரு பணமாக விளங்குவதால் மட்டும் அது மக்களால் ஈர்க்கப்படவில்லை; பொன்னின் தன்மையையும் அதன் உள் மதிப்பையும் பொறுத்து அதற்கு மதிப்புக் கொடுக்கப்படுகிறது. பொன்னினால் என்னென்ன பொருட்கள், ஆபரணங்கள் எந்தெந்த வடிவில் வடித்தெடுக்கப்படுகின்றன எனக் கூற வேண்டியதில்லை. அதே போழ்து, மாற்றுரிமையற்ற தாள் பணத்திற்கும் எந்தவித மதிப்பும் இல்லை எனக் கூறுவது மிகையாகாது. அது சாதாரண தாள்தானே! அதற்கு மதிப்பை நாமே கொடுத்துப் பணமாக உபயோகிக்கிறோம்.

மேலும் பொன் திட்டத்தில், காகிதப்பணம், வங்கியின் தேவை வைப்புகள் போன்ற ஏனைய பண வகைகள் தாராளமாக ஏற்றுக் கொள்ளப்படுகின்றன. ஏனென்றால் இவ்வகைப் பணங்களைக் கொடுத்துப் பொன்னை எவ்வித கட்டுப்பாடில்லாமல் பெறமுடியும். இதனால் பொன் திட்டத்தின் மதிப்பு இன்னும் உயருகிறது. மேலும் நாட்டுத் தேவைக்கு மேல் பணம் அச்சிடப்பட்டுப் புழக்கத்தில் விடப்படுமோ என்ற அச்சம் நீக்கப்படுகிறது. ஏனென்றால் பண வெளியாக்கம் பொன்னின் இருப்பைப் பொறுத்து வரையறுக்கப் படுகிறது. எனவே பண வீக்கம் ஏற்படுவதற்கு வாய்ப்பில்லை.

பணவாக்க முறை தானாக இயங்குதல்:

பணவாக்க முறையை ஒழுங்குபடுத்துவதும், கட்டுப்படுத்துவதும் அரசு மற்றும் மைய வங்கியின் பணியாகும். ஒழுங்குபடுத்துவதென்பது சாதாரண காரியமன்று; எவ்வளவோ இன்னல்களுக்கும், எதிர்ப்புகளுக்குமிடையில் செய்ய வேண்டியிருக்கிறது. ஆனால் எந்தவித இடர்ப்பாடுமில்லாமல் பணவாக்க முறை கட்டுப்படுத்தப்படுகிறதென்றால் அது வரவேற்கக் கூடியதே யாகும். பொன் திட்டத்தைப் பணமாகக் கொண்டால் கடன் கட்டுப்பாடு மற்றும் பணவாக்க முறை தானாகவே ஒழுங்குபடுத்தப்படுகிறது. பணம் பெருகினாலோ அல்லது குறைந்தாலோ பொன் திட்டத்தில் அவசியமில்லை. ஏனென்றால் பொன்னின் இருப்பு நிலைக்கேற்றவாறே பண அளிப்பு கூடி குறைகிறது. வங்கி நோட்டுகள், கைக்கு கைமாறும் பணங்கள் போன்றவைகளின் முக மதிப்புக்குச் சரியாகவோ அல்லது ஒரு குறிப்பிட்ட சத வீதத்திற்கு ஏற்றாற்போலவோ பொன் இருப்பு வைக்கப் படுகிறது. உற்பத்தி காரணமாகவோ அல்லது இறக்குமதி காரணமாகவோ பொன்னின் இருப்பு உயர்ந்தால் பண அளிப்பும் கூடுதலாகும். இதனால் பொருளாதாரம் பாதிக்கப்போவதில்லை. இதே போல், ஏற்றுமதி காரணமாகவோ அல்லது முடக்கம் காரணமாகவோ பொன்னின் இருப்புக் குறைந்தால், பண அளிப்பு குறைக்கப்பட்டு அல்லது புழக்கத்திலிருந்து மீட்கப்பட்டு, பண வாக்க முறை கட்டுப்படுத்தப்படுகிறது. இச் செயல்கள் அனைத்தும் தானாகவே பொன் திட்டத்தில் நடைபெறுகின்றன. அரசோ மைய வங்கியோ நடவடிக்கைகள் எடுக்கத் தேவையில்லை.

விலை நிலை பெறுதல் (Stability of Price level):

ஒரு குறிப்பிட்ட பணத்திட்டத்தை ஆட்சி செய்வதால் நெடுங் காலத்தில் விலை மட்டம் தேவையான அளவு நிலையாக

இருக்க முடிகிறது. விலை மட்டம் மாறுவதற்கு முக்கிய காரணம் மக்களின் வாங்குந்திறன் மாறுவதால்தான். பணப் புழக்கம் அதிகமிருப்பின் வாங்குந்திறன் மிகுதியாகி விலைமட்டம் உயர் கிறது. விலை மட்டம் உயர்ந்தால் பொருளாதார நிலையே மாறு வதற்கு இடமுண்டு. ஒரு குறிப்பிட்ட வகுப்பினரோ அல்லது தொழில் நிறுவனங்களோ முதலில் பாதிக்கப்பட்டுப் பின்னர் அனைத்துப் பொருளாதாரமுமே பாதிக்க வாய்ப்பு ஏற்படுகிறது.

பொன் திட்டத்தால் விலை மட்டம் முற்றிலும் நிலையான அளவில் இருக்க முடிகிறது எனக் கூற முடியாது. அமெரிக் காவிலும் மற்ற நாடுகளிலும் பொன் திட்டம் கையாளப்பட்ட காலத்தில் விலைவாசி குறியீட்டெண்களில் ஏற்ற இறக்கங்கள் பெருமளவுக்குக் காணப்பட்டன. இருப்பினும், பொன் திட்டத் தால் விலை மட்டம் நிலையாக இருக்கும்படி செய்யப்படுகிறது எனக் கூறப்படுகிறது. இதற்குக் காரணத்தை அறிந்தால், ஏனைய பணத்திட்டத்தைவிடப் பொன் திட்டத்தில் விலைமட்ட ஏற்ற இறக்கம் குறைவாகவே இருக்கும். பொன் திட்டத்தில் விலை மட்டம் நிலையானதாக இருக்கிறது எனக் கூறக்காரணம் உலகில் பொன் இருப்பு (Gold Stock) மாறுமலிருப்பதுதான். ஆண்டு தோறும் உற்பத்தி பெருகினாலும் அது சொல்லத்தக்க அளவில் பெருகுவதில்லை; புறக்கணிக்கக் கூடிய அளவில்தான் உற்பத்தி கூடுகிறது. 1940 ல் பொன்னின் உற்பத்தி, கூடுதலான அள வுக்குப் பெருகியது எனக் கூறப்படுகிறது. அந்த ஆண்டில் கூட பொன்னின் மொத்த இருப்பில் 5 சத விகிதத்திற்கும் குறை வாகத்தான் உற்பத்தி பெருகி இருக்கிறது. எனவே, விலை வாசி உயர்வதற்கு வாய்ப்பில்லை; விலை மட்டம் ஓரளவிற்கு நிலை யாக இருக்க முடிகிறது. இதே நிலை வேறு எந்த திட்டத்தைக் கடைப்பிடித்தாலும் இருக்க முடியாது.

பொன்னின் உற்பத்தி மக்கள் பெருக்கத்திற்கும், வியாபாரத் தேவைக்கும் ஏற்றாற்போல் இணையாக இல்லாவிட்டால் விலை மட்டத்தில் ஏற்ற இறக்கம் மிகுந்து காணப்படும்.

உள்நாட்டுப் பொன் திட்டத்தின் தீமைகள் :

பொன் திட்டத்தைத் திறனுய்வு செய்வோர், பொன் திட்டத் தினுல் ஏற்பட்ட நன்மைகள் பார்வைக்குத்தான் அப்படித் தெரி கின்றதே தவிர உண்மையில் அப்படிக் கூற முடியாது என விவரிக்கின்றனர். நன்மைகளை விடத் தீமைகள்தான் அதிகம் எனப் பொன் திட்டத்தின் தீமைகளைக் கீழ்க்கண்டவாறு சுட்டிக் காட்டுகின்றனர் :—

(1) பொன் திட்டம் ஒரு 'விரும்பத்தக்க காலத்திட்டம்' (Fair weather Standard) எனலாம்: பொருளாதார நெருக்கடி காலங்களில் இத் திட்டம் கைவிடப்பட்டால் (Suspension) மக்களிடையே ஒரு வகை பீதியை உண்டு பண்ணும்; (2) பொன் திட்டம் பணவாக்க முறையில் தானாகச் செயல்படுவதில்லை. அப்படியே செயல்பட்டாலும் நன்மைகளை விடத் தீமைகளே அதிகமாகும்; (3) ஒரு நாட்டில் பொன் திட்டத்தின் கீழ் விலை மட்டம் நிலையான அளவில் ஏன் வைக்கப்படுகிறது என்பதற்கு முக்கியமான காரணங்கள் ஏதுமில்லை.

விரும்பத்தக்க காலத்திட்டம் :

பொன் திட்டத்தின் நன்மைப் பகுதியைப் பார்க்கும் போது அது மக்களிடையே நம்பிக்கையை வளர்க்கிறது எனப் பார்த்தோம். அதை எதிர்த்துத்தான் இது ஒரு விரும்பத்தக்க காலத் திட்டம் எனக் கூறப்படுகிறது. சாதாரண காலங்களில்தான்—செழிப்பு, நல்ல ஊதியம், அதிக லாபம் மற்றும் முழு வேலை வாய்ப்பு—பொன் திட்டத்தின் மேல் மக்கள் நம்பிக்கை வைக்கிறார்கள். எப்போது பொருளாதார நெருக்கடி ஏற்பட்டு மந்தம் நிலவுகிறதோ அப்போதே பொன் திட்டத்தின் மேலுள்ள நம்பிக்கை குறைய ஆரம்பிக்கிறது. என்ன தான் அரசிடமும், வங்கிகளிடமும் பொன் இருப்பு இருந்தாலும், மந்த காலத்தில் மக்கள் தங்கள் கையிலுள்ள தாள் பணத்திற்கோ அல்லது வேறு வகைப் பணத்திற்கோ பொன்னை அடைய விரும்புவர். இப்படி எல்லோரும் அடைய விரும்பினால் அரசாங்கம் மற்றும் வங்கிகள் ஆகியவைகளின் பொன் இருப்பு குறைய ஆரம்பிக்கும். இப்படியான பொன் வெளியாக்கத்தைத் தடுக்க உடனே அரசு பொன் திட்டத்தை நிறுத்தி வைக்க அல்லது கைவிட ஆணைகள் பிறப்பிக்கும்; ஆணைகள் பிறப்பிக்காவிட்டாலும் பொன் திட்டம் கைவிடப்படப்போகிறது என்ற வதந்தி பரவினாலே மக்களிடத்தில் பீதி ஏற்பட்டுவிடும். எல்லோரும் பொன்னைப் புதுக்குவதற்காகத் தங்களிடம் உள்ள பணத்திற்குப் பொன்னை மாற்ற விரும்புவர். பிறகு பொருளாதாரச் சீர்கேட்டிற்குக் காரணம் வேண்டுமா என்ன? திறனாய்வு செய்வோர் சுருக்கமாகக் கூறுவதாவது :

"நம்பிக்கை வேண்டப்படாத போது பொன் திட்டம் நம்பிக்கையைத் தோற்றுவிக்கிறது; போர் மற்றும் பொருளாதார நெருக்கடி காலங்களில் பொன் திட்டம் தற்காலிகமாகக் கைவிடப்படுதலை 'அது சிறந்த வழி' என இலகுவாக ஏற்றுக் கொள்ளப்படுகிறது." (In a word, say the critics "the gold

Standard engenders confidence only when confidence is not needed; and in times of war and economic crisis, the suspension of the standard is too easily accepted as the "way out")

தானாக செயல்படுதலின் விளைவுகள் :

பொன் திட்டத்தின் கீழ் பணவாக்க முறை முதல் உலகப் போர் வரை தானாகச் செயல்பட்டு ஒழுங்குபடுத்தப்பட்டது எனக் கூறலாம்; ஆனால் போர்க்காலத்திலும் அதற்குப் பின்னும் பணப் புழக்கம், வெளியாக்கம் முதலியன தானாக ஒழுங்குபடுத்தப் பட்டது எனக் கூறுவது மெய்யான கூற்று இல்லை எனத் திறனாய்வு செய்வோர் கூறுகின்றனர். அரசும், மைய வங்கியும் அந்தந்த நாடுகளில் பணத்துறையை மேலாண்மை செய்து வந்திருக் கின்றன. பணப் புழக்கத்திற்கு ஏற்றவாறு பொன்னின் இருப்பைச் சரி செய்வதும், பொன்னின் இருப்புக்கு ஏற்ற வாறு பண அளிப்பைக் கூட்டவோ அல்லது பணத்தைப் புழக் கத்திலிருந்து மீட்கவோ செய்வதும், விலைவாசியை நிலை பெறச் செய்வதும் போருக்குப் பின்னர் அரசுக்குப் பெரும் பிரச்சனையாகி விட்டது. இச்சமயத்தில் தானாகச் செயல்படும் கொள்கை கடைப்பிடிக்கப்பட்டால் தீமைகள்தான் அதிகம் விளையுமே தவிர நன்மைகள் ஏற்படா. பொன்னின் இருப் பளவு அதிகரித்தால் கைமாறும் பணத்தின் அளவையும், வங்கியின் தேவை வைப்புக்களையும் மிகுதிப் படுத்த வேண்டும்; பொன்னின் இருப்பு குறைந்தால் இவைகளும் குறைக்கப்பட வேண்டும். ஆனால் பணத்துறைக்குத் தேவையான பொன்னின் அளவிற்கும் எவ்வித சம்பந்தமுமில்லை. பொன்னின் அளிப்பில் மாற்றம் ஏற்படுவது அதன் உற்பத்திச் செலவு, அரசு கொடுக்கும் விலை, கலைகளிலும், தொழிலகங்களிலும் அது உபயோகப் படுத்தப்படும் விதம், பதுக்கல் ஆகியவைகளைப் பொறுத்திருக் கிறது. புதிய பொன்—படுகைகள் கண்டு பிடிப்பாலோ அல்லது பொன் தாதுப்பொருள்களிலிருந்து பொன்னைப் பிரித்தெடுக்கும் முறையில் முன்னேற்றம் கண்டாலோ பொன்னின் உற்பத்தி பெருகும்; ஆனால் உற்பத்தி பெருகி இருப்பதால் பணத்தின் தேவையும் அதிகமாகும் எனக் கூற முடியாது. உற்பத்திப் பெருக்கமானது மக்களின் வாங்கும் சக்தியை அதிகப்படுத்தும்; அது விலைவாசியைத் தாக்கும்; பின் பொருளாதாரத்தில் வீக்க நிலையை உண்டுபண்ணும்.

பொற் சுரங்கங்கள் குறைந்து செல் விளைவு விதிக்குட்பட்ட தாகும். சுரங்கங்கள் ஆழச்செல்லச் செல்ல ஒரு அலகு உற்பத்திக்குச் செலவு விளைவை விட மேல் நோக்கிச் செல்லும்.

அதாவது இலாபகரமாக இராது; நட்டம் ஏற்பட ஆரம்பிக்கும்; சுரங்கங்கள் மூடப்பட வேண்டிய நிலை ஏற்படும். இதனால் உற்பத்தி குறையும். எனவே, பொன்னின் இருப்பில் சேர்க்கை இருக்காது. அதே போழ்து மக்களின் தேவை அதிகரிக்கும். பொன்னின் இருப்பு குறைவதால் புழக்கத்திற்கான பணத்தின் தேவையும் குறையுமென்று கூறமுடியாது. எனவே, பொன் திட்டத்தில் பணவாக்க முறை தானாகவே செயல்படுகிறது எனக் கூறுவது சரியல்ல; பணத்துறையினரால், பணவாக்கக் கைக் கோளினால் மேலாண்மை செய்யப்படுகிறது.

விலை மட்டத்தில் அலைவுகள் : (Fluctuations in Price Level)

விலை மட்டம் நிலையாக இல்லாமல் போவதற்குக் காரணம் பணத்தின் அலகு ஒரு குறிப்பிட்ட பொன்னின் அளவுக்குச் சமமாக இணைக்கப்பட்டதுதான் எனப் பொன் திட்டத்தைத் திறனாய்வு செய்வோர் குறிப்பிடுகின்றனர். விலை மட்டத்தில் ஏற்ற இறக்கம் ஏற்படுவதற்கு முக்கிய காரணம் பொன் திட்டம்தான் எனக் கூறப்படுகிறது. தேவை மற்றும் அளிப்புக் காரணிகளுக்குப் பொன் இலக்காவதால் விலை மட்டமும் அதற்கேற்றாற்போல் மாறுபடுகிறது. உலக உற்பத்தியில் பொன்னின் அளவு மாறாமலிருக்கிறது என்றாலும், ஆண்டுதோறும் உண்டாகும் உற்பத்தி புறக்கணிக்கத்தக்கதாக இருந்தாலும் (இருக்கிறது என்றாலும்) விலை மட்டத்தில் எதிர்வீதத்தில் பொன் உற்பத்தி நிலை இருக்கிறது என்றாலும், ஒரு நாட்டில் பொன் இருப்பு நிலை மாறாமலிருக்கும் எனக் கூற முடியாது எனப் பொன் திட்டத்தைக் குறை கூறுவோர் விவரிக்கின்றனர். உலகப்பொன் இருப்பு அனைத்து நாடுகளுக்கும் சமமாகப் பிரித்துக் கொடுக்கப்பட்டும், ஆண்டுதோறும் உற்பத்தி செய்யப்படும் பொன்னை அந்தந்த நாட்டு மக்கள் தொகைக்கு ஏற்றவாறு வரையறுத்துப் பங்கீடு செய்தும் வந்தால் ஒருக்கால் விலைவாசி மட்டத்தை நிலைபெறச் செய்யலாம். ஆனால் இவை களெல்லாம் நடைமுறையில் நடக்கக் கூடியவைகளில்லை எனத் திட்டவட்டமாகக் கூறலாம்.

பொன் திட்டத்தின் வகைகள் :

பணத் திட்டங்களில் ஒன்றான பொன் திட்டத்தைக் கையாண்டால் ஏற்படக்கூடிய நன்மைகளையும் தீமைகளையும் சென்ற பத்திகளில் அறிந்தோம். அவைகளை நன்கு பரிசீலனை செய்த பின் பொன் திட்டம் மக்களால் விரும்பப்படுகிறது என ஒரு நாட்டின் அரசு முடிவு செய்து, அத்திட்டத்தை ஆளுகின்றது. பொன் திட்டத்தின் முக்கிய நோக்கம், ஒரு பண அலகின் வாங்கும்

திறன், அதன் முகமதிப்பிற்கும் அதில் அடங்கியுள்ள (பொன்) உலோகத்தின் விலைமதிப்பிற்கும் சமமாக இருக்கச் செய்வதாகும். பொன் திட்டத்தில் பல வகைகள் உள்ளன. குறிப்பாக அவைகள் பொன் காசுத் திட்டம் (Gold Coin Standard), பொற் கட்டித் திட்டம் (Gold Bullion Standard), பொன் மாற்றும் திட்டம் (Gold exchange standard) என்பனவாகும். இவைகள் ஒவ்வொன்றும் பொன் திட்டத்தின் கீழ் வந்தாலும், அவைகளுக்குள் சில முக்கிய வேறுபாடுகள் இருக்கின்றன. அவைகளைப் பற்றிக் கீழே விரிவாகக் காண்போம் :—

பொற்காசுத் திட்டம்

முதல் உலகப் போருக்கு முன்னர் பெரும்பாலான நாடுகளிலும், அமெரிக்காவில் 1933-வரைக்கும் பொற் காசுத் திட்டம் கடைப் பிடிக்கப்பட்டது. இத் திட்டத்தின் முக்கிய அம்சங்கள் (Features) கீழ் வருமாறு :

1. பணத்தின் அலகு ஒரு குறிப்பிட்ட பொன்னின் அளவிற்குச் சமமாகக் குறிப்பிடப்படுதல் ;

2. பொன்னைக் கொண்டு தடையில்லாமல் பொற்காசுகளைப் பெறுதல் அல்லது அச்சிட்டுக் கொள்ளுதல் ;

3. அரசு மற்றும் தனியார் பொறுப்புகளுக்குப் பொற்காசுகளைச் சட்டமுறை நாணயமாகச் செலுத்துதல்;

4. தடையிலாப் பொற் சந்தை (Free Gold Market) ;

5. எல்லா வகைக் கடன் பணங்களையும் சம மதிப்பில் பொற் காசுகளாகப் பெற முடிதல் (Credit money redeemable at par in gold coin)

பொன் வடிவில் பணத்தின் அலகு:

பணத்தின் அலகு பொன் வடிவில் மட்டும் இருந்தால் போதாது. சட்ட பூர்வமாக ஒரு குறிப்பிட்ட பொன்னின் அளவிற்குச் சமமாகக் குறிப்பிடப்படுதல் வேண்டும். அதாவது பொன் நாணயத்தின் முகமதிப்பும் அதிலுள்ள பொன்னின் மதிப்பும் சமமாக இருக்கும்படி சட்டம் இயற்றப்படல் வேண்டும். எடுத்துக்காட்டாக இங்கிலாந்தில் முதல் உலகப்போர் வரைக்கும் பொற்காசுத் திட்டம் நடைமுறையில் இருக்கும் போது 1 பவுன் என்பது 123·2744 குன்றிமணி எடையுள்ள பொன்னுக்குச் சமமாக இருந்தது. அமெரிக்க ஐக்கிய நாடுகளில் 1933-க்கு

முன் ஒரு டாலர் என்பது 25·8 குன்றிமணி எடையுள்ள பொன்னுக்குச் சமமாக இருந்தது.

பொன்னைக் கொண்டு பொற்காசுகளைப் பெறுதல்:

மக்கள் தங்கள் கையிலுள்ள பொன் உலோகத்தை நாணய அச்சகத்தில் கொடுத்து அதற்குச் சமமாகப் பொற்காசுகளைப் பெறலாம்; அல்லது தங்கள் உலோகத்தை வைத்துக் கொண்டு நாணயமாக அச்சிட்டுக் கொள்ளலாம். இதில் எவ்விதக் கட்டுப்பாடுமில்லை. எவ்வளவு பொன் உலோகம் வேண்டுமானலும் எடுத்துச் செல்லலாம். தடையில்லாமல் நாணயம் அச்சிடுவதின் சிறப்பு என்னவென்றால் பொற்காசின் முகமதிப்பும் அதில் அடங்கியுள்ள பொன் உலோகத்தின் சந்தை விலையும் சமமாக இருக்கும். பொன் உலோகத்தின் சந்தை விலை கூடுதலாக இருந்தால் மக்கள் தங்களிடமுள்ள நாணயங்களை அச்சகத்திற்கு எடுத்துச் சென்று (பொற்காசுகளை) உருக்கி உலோகமாக மாற்றி வெளியில் விற்க ஆரம்பித்துவிடுவர். அப்படி விற்கப்படும்போது பொன்னின் அளிப்பு சந்தையில் அதிகமாகும். உடனே விலை குறைய ஆரம்பிக்கும். பின் நாணயத்தின் மதிப்பும், உலோகத்தின் மதிப்பும் சமமாக இருக்க நேரிடும். பொன் உலோகத்தின் சந்தை விலை குறைந்தால் மேற் கூறியவைகளுக்கு மாறுக செயல் நடைபெறும். கடைசியில் சமத்துவம் ஏற்படும். பொன்னை உருக்குவதற்கும், நாணயமாக அச்சிடுவதற்கும் ஏற்படக்கூடிய செலவுகளினால் அவ்வப்போது நாணயத்தின் மதிப்பும் உலோகத்தின் மதிப்பும் சமநிலையில் இல்லாமலிருக்கலாம். அவ்வகை வேறுபாடு மிகவும் சிறிய அளவில்தான் இருக்கும். அவைகள் புறக்கணிக்கப்படலாம்.

பொற்காசு ஒரு சட்ட நாணயம்:

பொற்காசுக்கு ஒரு சட்டமுறைத் தன்மையை அளிப்பது மிகவும் அவசியமாகும். பொற்காசின் முக மதிப்பும் உள்மதிப்பும் சமமாக இருந்தாலும் அரசினால் அங்கீகரிக்கப்பட வேண்டும். இல்லையெனில் ஏதாவதொரு சமயத்தில் மக்களாலோ அரசினாலோ வரி அல்லது ஏதாவது கடன் பொறுப்புகளுக்கு அவ்வகைக் காசுகள் மாற்றுச் சாதனமாக ஏற்றுக் கொள்ளப்படாமல் போகலாம். மேலும் ஏனைய வகைப் பணங்கள் எல்லாம் சட்டப் பணத்தை அடிப்படையாகக் கொண்டுதான் படைக்கப்படுகின்றன. சட்ட முறைத் தன்மையுடைய ஒரு கடன் பணத்தின் மதிப்பு சட்ட முறைத் தன்மையற்ற அதே அளவுள்ள ஒரு பொற்காசின் மதிப்பை விட அதிகமானது எனக் கூறத் தேவையில்லை.

தடையிலாப் பொற்சந்தை:—

தடையிலாப் பொற்சந்தை என்றால் மக்களுக்குப் பொன் தொடர்பாக முழு உரிமை அளித்தலாகும். பொன்னை வாங்குவதற்கோ, விற்பதற்கோ, அயல் நாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்கோ, அயல் நாடுகளிலிருந்து இறக்குமதி செய்வதற்கோ, பொன்னைக் கொண்டு நாணயச் சாலையில் நாணயங்களை அச்சிட்டுக் கொள்வதற்கோ, நாணயங்களை உருக்கிப் பொன்னாக மாற்றி வைத்துக் கொள்வதற்கோ மக்களுக்கு முழு உரிமை அளிக்கப் படுகிறது. எந்தவிதத் தடையுமில்லாமல் எவ்வளவு வேண்டு மானாலும் பொன்னைக் கையாளலாம்.

தடையிலாப் பொற்சந்தையின் முக்கியத்துவம் என்னவென்றால் நாணயங்களின் முக மதிப்பும் அவைகளின் உலோக அடக்க சந்தை மதிப்பும் சமமாக இருத்தலேயாகும். மேலும் தடையிலா ஏற்றுமதியும் இறக்குமதியும் இருப்பதால் உலகமெங்கும் அதன் மதிப்பு ஒரே அளவாக இருக்க முடிகிறது. ஒரு நாட்டிற்கும் மற்றொரு நாட்டிற்கும் பொன்விலையில் வேறுபாடு காணப்பட்டால் அவ்வேறுபாடு போக்குவரத்துச் செலவு, காப்பீட்டுச் செலவு (Insurance) போன்றவைகளினால்தான் இருக்க முடியும். பொன்னுக்குத் தடையிலாச் சந்தை இருந்தால் தான் தடையிலா நாணய அச்சீடு காண முடியும்.

கடன்பணம் பொன்னை மீட்கப்படுதல்—கிரஷாம் விதி (Gresham's Law)

கடன் பணம்—எடுத்துக்காட்டாகத் தாள் பணம்— பொன்னை எப்போது வேண்டுமானாலும் மீட்க முடியும் என்று இருந்தால்தான் எல்லா வகைப் பணங்களும் புழக்கத்தில் இருக்க முடியும்; மக்களால் ஏற்றுக் கொள்ளப்படும். கடன் பணத்தின் ஒவ்வொரு பிரிவும் (Denominations) பொன் நாணயத்தின் ஒவ்வொரு பிரிவும் சமமாக இருத்தல் அவசியம். இல்லையென்றால் மக்கள் கடன் பணத்தை விரும்பாமல் பொற் காசுகளையே அடைய விரும்புவர். அப்படி அடைய விரும்பினால் ஏனைய பணங்கள் புழக்கத்தில் இருக்க முடியாமல் போய்விடும். பொற்காசுக்கும் கடன் பணத்திற்கும் மதிப்பில் சிறு வேறுபாடு இருந்தாலும் பணத்துறை ஆட்சியில் (Monetary System) கிரஷாம் விதிப்படி குழப்பமேற்பட வழி வகுக்கும்.

ஒரு நாணயத்தின் சந்தை மதிப்பு உயர்ந்து, அதனால் அது புழக்கத்திலிருந்து மறைந்து, சந்தையில் குறைந்த மதிப்புடைய நாணயம் புழக்கத்திலிருப்பதை கிரஷாம் விதி எனக் கூறப்படு

கிறது. இவ்விதிப்படி, ஒரே காலத்தில் பலவகைப் பணங்கள் புழக்கத்திலிருந்தால், அவைகளின் சட்டமுறை மாற்று விகிதத்திற்கும், சந்தை மாற்று விகிதத்திற்கும் வேறுபாடு இருந்தால், எந்தப் பணத்தின் உலோக மதிப்பை விடச் சட்ட மதிப்பு அதிகமாக இருக்கிறதோ அப்பணம் புழக்கத்திலிருந்து மற்றதைத் துரத்தி விடும். இதையே சுருக்கமாகக் கூறினால், 'கெட்ட பணம் நல்ல பணத்தைத் துரத்தும்' (Bad money drives out good money) எனலாம். ஏனைய பண வகைகளை விடப் பொன்னுக்கு வாங்கும் சக்தியும், மதிப்பு நிலைக்களனும் அதிகமானதால், மக்கள் தங்கள் சேமிப்புகளுக்குக் கடன் பணத்தையே கையாண்டு, பொன்னை இருப்பாக வைக்க முயலுவர். மேலும் அயல் நாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய பொன்னையே பயன்படுத்துவர். ஏனென்றால் அயல் நாட்டில் பொற்கட்டியின் முழுமதிப்பும் பொன் நாணயத்திற்கு அளிக்கப்படும். அதே போழ்து கடன் பணத்தை வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்தால் அதன் முழு முகமதிப்பினின்றும் வட்டம் (Discount) நீக்கிதான் ஏற்றுக் கொள்ளப்படும். உள் நாட்டை எடுத்துக் கொண்டால், பொன் நாணயங்களுக்கு மதிப்பு உயர்ந்துதான் இருக்கும். அதாவது கடன் நாணய மதிப்பினின்றும் ஒப்பிட்டு நோக்கின் இதன் மதிப்பு முனைமத்துடன் (Premium) புழக்கத்திலிருக்கும். எனவே, கிரஷஹம் விதிப்படி, இரு நாணயங்களின் முக மதிப்பு ஒன்றுகச் சமம் எனச் சட்டப்படி அறிவிக்கப்பட்டாலும், அவைகளின் உள்மதிப்பு மாறுபட்டால், உயர் மதிப்புள்ள நாணயம், குறைந்த மதிப்புள்ள நாணயத்தால் விரட்டப்படும். இச்செயல் நிகழ்வது இயற்கையே. ஆகையினால் பலவகைப் பணங்கள் புழக்கத்திலிருந்தால் விலை மட்டம் பணத்திற்குப் பணம் மாறுபடும். இதைத் தவிர்த்தல் என்பது எளிதல்ல. விலை மட்டத்தில் நிலை பேராக்கம் அடைய வேண்டுமானால் ஒரே வகைப் பணம் இருத்தல் இன்றியமையாததாகும்.

பொற்கட்டித் திட்டம்:

திருத்தப்பட்டதும் சிக்கனமானதுமாகிய பொன் திட்டம் தான் பொற்கட்டித் திட்டம் ஆகும். இங்கிலாந்து நாட்டில் 1925—31-லும், பிரான்ஸில் 1928-லும், அமெரிக்க ஐக்கிய நாடுகளில் 1934-லும் இத்திட்டம் கடைப்பிடிக்கப்பட்டது. இத் திட்டத்தில் பணத்தின் அலகு ஒரு குறிப்பிட்ட பொன் அளவில் சட்டமுறைப்படி நிர்ணயிக்கப்பட்டுப் பேரங்கள் பொற்கட்டிகளால் நடைபெறுகின்றன. அதாவது, பொன்னின் விலை பொற்காசுகளின் அடிப்படையிலன்றி, பொற்கட்டியின் அடிப்படையில் நிர்ணயிக்கப்படும். எடுத்துக்காட்டாக, இங்கிலாந்தில், அப்போது ஒரு அவுன்சு பொற்கட்டியின் விலை £ 3—17—10½தான். ஆனால்

அந்தப் பொன்னை நாணயமாக அச்சிடத் தேவையில்லை. நாணயத்துக்குப் பதில் காகிதப் பணம் அல்லது வேறு பணம் புழக்கத்திலிருக்கும். உள்நாட்டுப் புழக்கத்திற்கு அச்சிட்ட பொன் நாணயங்கள் தேவையில்லை என்ற காரணத்தால்தான் இப்பொற் கட்டித் திட்டம் உருவாயிற்று. பொற்கட்டியை விற்க விரும்புவோரிடமிருந்து மைய வங்கி £ 3—17—9 வீதத்தில் தாள் பணத்தைக் கொடுத்துப் பொன்னை வாங்கும்; அவுன்சுக்கு £ 3—17—10½ வீதத்தில் தாள் பணத்தைப் பெற்றுக் கொண்டு பொன்னை விற்கும். தேவையின் போது மக்கள் வங்கியிலிருந்து பொன் பெறலாமாகையால் பொன்னின் விலை £ 3—17—10½க்கு மேல் ஏற வழியில்லை. £ 3—17—9 விலையில் வங்கிக்குப் பொன்னை விற்கக் கூடுமாதலால் பொன் விலை இறங்க வழி இல்லை. இத்திட்டப்படி, தனித்தனி வங்கிகளின் தாள் பணத்திற்குப் பொன் மாற்றம் செய்ய முடியாது. இருந்த போதிலும், 400 அவுன்சு எடையுள்ள பொற் கட்டிகளுக்கு— மதிப்பு £ 1669— தாள் பணம் மாற்றிக் கொள்ளலாம் என்ற வரம்பு விதிக்கப்பட்டிருந்தது. அமெரிக்காவில் இந்த 400 அவுன்சு பொன்னின் விலை $ 14,000 ஆகும். இப்படி வரையறை செய்யப்பட்டதன் முக்கிய நோக்கம் உண்மையிலேயே பொன் தேவைப்படுபவர்களுக்கு— தொழில் மற்றும் அங்கிய செலாவணிகளுக்காக—மட்டும் பொன்னை அளிக்க வேண்டுமென்பதற்காகத்தான். இதிலிருந்து அறிவதென்ன வென்றால் இங்கிலாந்தில் £ 1669க்குக் குறைவாக வைத்திருப்பவர்களும், அமெரிக்காவில் $ 14,000க்குக் குறைவாக வைத்திருப்பவர்களும் பொற் கட்டிகளைப் பெற முடியாது என்பதுதான்.

பொன் மாற்றுத் திட்டம்:

பொற் காசுத் திட்டம் மற்றும் பொற் கட்டித் திட்டம் ஆகியவைகளைப் போலவே பொன் மாற்றுத் திட்டத்திலும் பணத்தின் அலகு ஒரு குறிப்பிட்ட அளவு பொன்னைக் கொண்டுதான் நிர்ணயிக்கப்படுகிறது. இத் திட்டத்தில், ஒரு நாட்டின் பணம், பொற்காசுத் திட்டம் அல்லது பொற் கட்டித் திட்டம் கொண்டிருக்கிற மற்றொரு நாட்டின் பணமாக மாற்றப்படுகிறது (Convertible). அந்த நாட்டின் பணத்தைக் கொண்டு பொன் பெறவோ, விற்கவோ முடிகிறது. உள்நாட்டுப் பணத்தைக் கொண்டு நேரடியாகப் பொன்னை வாங்கவோ, விற்கவோ முடியாது; மறைமுகமாகத்தான் நடத்த முடியும். எடுத்துக்காட்டாக, 1900க்குப் பிறகு இந்தியா பொன் மாற்றுத் திட்டத்தை ஆண்டபோது, அதன் ரூபாய்க்கு நேரடியாகப் பொன் மாற்றம் செய்யப்படாமல், ஆங்கிலேயப் பவுன், ஸ்டெர்லிங் மூலமாக முதலில் மாற்றப்பட்டுப் பிறகு பொன்னாக மாற்றம்

செய்யப்பட்டது. அப்போது இங்கிலாந்து பொற்காசு திட்டத்தைக் கையாண்டது.

பொற் காசுத் திட்டத்தையோ, பொற் கட்டித் திட்டத்தையோ ஆட்சி செய்ய முடியாத ஏழை நாடுகள்தான் இவ்வகை பொன் மாற்றும் திட்டத்தைக் கையாண்டன. ஹாலண்டு நாடுதான் முதன் முதலில் 1877-ல் இத் திட்டத்தைக் கையாண்டதாகக் கூறப்படுகிறது. பொன் மாற்றுத் திட்டத்தின் முக்கிய முனைப்புக் கூறுகள் (Features) கீழ் வருமாறு :—

(1) நாட்டின் திட்டப் பணத்தின் அலகு ஒரு குறிப்பிட்ட பொன்னைக் கொண்டதாகும்; அதன் வடிவில்தான் நிர்ணயம் செய்யப்பட்டது. இச் சிறப்பு எல்லாவகைப் பொன் திட்டங்களுக்கும் பொருந்தும்;

(2) பொற் காசுகள் புழக்கத்திலில்லை; புழக்கத்திலுள்ள தாள் பணத்திற்கும் பொற் கட்டிகள் காப்பிருப்பாக வைக்கப்படவில்லை;

(3) பணத்துறை அதிகாரிகள் வெளி நாட்டில் வங்கியிருப்பாகப் பொன்னை வைத்திருத்தல்;

(4) மைய வங்கியால் வெளியிடப்பட்ட தாள் பணங்களும், துணை நாணயங்களும் குறைந்த அளவுக்குத் தேவைப்பட்டபோது வெளிநாட்டுப் பணமாக ஒரு குறிப்பிட்ட நாணய மாற்று வீதத்தில் மாற்றிக் கொள்ளுதல்;

(5) மைய வங்கியோ, அரசோ உள் நாட்டுப் பணத்தைக் கொண்டு வெளிநாட்டு மாற்றுச் சீட்டை (Foreigin Drafts) வாங்குதல் அல்லது விற்றல்.

பொன் மாற்றுத் திட்டத்தின் சிறப்புகள்: ஏனைய திட்டங்களை விட இத்திட்டத்தில் முக்கிய சிறப்புக் கூறுகள் காணப்படுகின்றன. முதன் முதலில் முக்கியமாகக் கூறினால் இத்திட்டம் ஒரு எளிமையான, சிக்கனமான திட்டம் எனலாம். ஏழை நாடுகள் எந்தவித பொன் இருப்பு இல்லாமலேயே இத்திட்டத்தை மேற் கொள்ளலாம். இரண்டாவதாகப் பொருளாதார நெருக்கடி காலங்களில் வெகு இலகுவாகப் பணவாக்கம் செய்ய வழி செய்ய முடிகிறது. மூன்றாவதாக, பொற்காசுத் திட்டத்திலுள்ள எல்லா வகை நன்மைகளும் பொன் மாற்றுத் திட்டத்திலும் காண முடிகிறது. நான்காவதாக, வெளிநாட்டு வங்கிகளில் பொன் இருப்பு வைப்பதனால் வட்டி கிடைக்க ஏதுவாக இருக்கும். ஐந்தாவதாக,

பன்னாட்டுச் செலுத்தல்கள் (International payments) இத் திட்டத்தின் மூலம் எந்தவிதக் கடினமுமில்லாமல் நடைபெற முடியும்.

பொன் மாற்றுத்திட்டத்தின் குறைபாடுகள் : இத் திட்டத்தின் மிகப் பெரும் குறைபாடு என்னவென்றால், பொன் இருப்பு இல்லாததால் அல்லது தேவையான அளவு இல்லாததால் மக்கள் நம்பிக்கை இழக்க நேரிடும். இரண்டாவதாகப் பொன்திட்டம 'ஒரு தானே இயங்கும் திட்டம்' என்ற சிறப்பியல்பு பொன் மாற்றுத் திட்டத்திற்குக் கிடையாது. மூன்றாவதாக, உள்நாட்டுப் பணம் வெளிநாட்டுப் பணத்தின் தயவையே முழுவதும் நம்பியிருக்க வேண்டியிருக்கிறது. இது ஒரு குறைதான். நான்காவதாக, பொன் மாற்றுத் திட்டத்தையுடைய நாட்டுப் பணம் மூல நாட்டுப் பணத்துடன் இணைக்கப்பட்டு மாற்று வீதம் நிர்ணயிக்கப்படுவதால் அந்நாட்டுப் பணத்தில் ஒரு நிலையும், நம்பிக்கையும் காண முடியாமற் போகும். ஐந்தாவதாக, பொன் காப்பிருப்புகள், அந்நியச் செலாவணி காப்பிருப்புகள் போன்ற பல்வகை இருப்புகள் இருப்பதால் பன்னாட்டு நடவடிக்கைகளைத் தீர்ப்பது அவ்வளவு எளிதல்ல.

—X—

பன்னாட்டுப் பொன் திட்டம்

பொன்திட்டம் உள்நாட்டில் பயன்படுத்தப்படுவதை விடப் பல நாடுகளிலும் பயன்படுத்தப் படுவதுதான் மிக முக்கியமானதாகும். ஒரு நாடு மட்டும் தனியாக, ஏனைய நாடுகள் பொன் திட்டத்தைக் கையாண்டாலும், பொன் திட்டமில்லாமலேயே வணிகம் மற்றும் ஏனைய நடவடிக்கைகளை நடத்திச் செல்ல முடியும். எத்தனையோ நாடுகள் தாள் பணத்தையே மாற்றுச் சாதனமாகவும், மதிப்பளவையாகவும் கொண்டு இயங்கி வந்திருக்கின்றன. இந்தத் தாள் பணம் வேறு எதனாலும், எடுத்துக் காட்டாகப் பொன்னால், மீட்க முடியாததாகும். இது தெரிந்திருந்தும் மக்கள் அதை மாற்றுச் சாதனமாக ஏற்றிருக்கிறார்கள். [இந் நாளில் இதுதான் எல்லா நாடுகளிலும் விதியாகும்].

ஆனால், பொன்னாக மாற்றப்பட முடியாத தாள் பணத்தைக் கொண்ட நாடுகள் வெளிநாடுகளுடன் வணிகத் தொடர்பு கொள்ளும் போது எத்தனையோ இடர்ப்பாடுகளை மேற்கொள்ள வேண்டி வரும். உள் நாட்டில் ஏற்றுக் கொள்ளப்பட்ட தாள் பணம் வெளி நாடுகளிலும் ஏற்றுக் கொள்ளப்படுமா? என்று பார்த்தால் ஐயம்தான் எழும். ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது

எனவே கூறலாம். அப்படி ஏற்கப்படவில்லையென்றால் வணிபத் தொடர்பு கொள்ள முடியாது. ஆகவேதான், அனைத்து நாடுகளும் ஒருங்கே ஏற்றுக் கொள்ளும் மாற்றுச் சாதனமும், மதிப்பளவையு மாகிய பொன் திட்டத்தை மேற் கொள்ள பெருமுயற்சி எடுத் திருக்கின்றன. பொன்னுக்கு இருக்கக்கூடிய சிறப்பியல்புகள் தான் பணத்திற்கு இருக்க முடியாதல்லவா? பொன் திட்டத்தைக் கைவிட்டால் நாடுகளுக்கிடையே ஏற்படும் குழப்பத்தைச் சொல் லவுமா வேண்டும்? [இப்போது உலகமெங்கும் குழப்பம் தான் ஏற்படுகிறது]. முதல் உலகப் போருக்கு முன் பொன் திட்டம் ஒன்றுதான் பன்னாட்டுத் திட்டமாக அமைய முடியும் எனப் பொருளியல் வல்லுநர்களும், அரசு அதிகாரிகளும் கருதினர். உலகப் போர் காலத்தில் தற்காலிகமாகப் பொன் திட்டம் கைவிடப்பட்டாலும், போர் ஓய்வுக்குப் பின் மீண்டும் அத் திட்டம் கொண்டு வரப்பட வேண்டும் எனப் பல துறையினர்களும் பரிந் துரைத்தனர். அத் திட்டம் நன்கு செயல்பட வேண்டுமானால் கீழ்க்கண்ட அவசியக் கூறுகள் (Requisites) இருக்க வேண்டும்:—

பன்னாட்டுப் பொன் திட்டத்திற்கான அவசியக் கூறுகள் அல்லது பொன் திட்ட ஆட்டத்தின் விதிகள்:

இவ்வத்தியாயத் தொடக்கத்தில் உள் நாட்டுப் பொன் திட்டத்தைப் பற்றியும் அது வெற்றியுடன் செயல்பட வேண்டிய நிபந்தனைகளையும் ஆய்வு செய்தோம். அதே கோட்பாட்டைப் பன்னாட்டு அளவில் பொன் திட்டம் வெற்றிகரமாகச் செயல்படு வதற்கான அவசியக் கூறுகளை விரிவாக்கி ஆய்வு செய்வோம். அவைகளாவன :—

(1) பொன் திட்டத்தைப் பல நாடுகள், குறிப்பாகப் பெரும் நாடுகள், முதன்முதலில் பின்பற்ற வேண்டும்; (2) தேவையான அளவு பொன இருப்பு இருக்க வேண்டும்; அதுவும் பல நாடு களில் பரவலாக இருத்தல் வேண்டும்; (3) அயல் நாட்டு வாணிகத்தில் கூடுமான அளவு தடை ஏதும் இருக்கக் கூடாது; (4) பன்னாட்டுக் கடன்கள் பெருமளவு இருப்பது தவிர்க்கப்பட வேண்டும். (5) பொன் திட்டத்தையுடைய நாடுகளின் உள்நாட்டுப் பொருளாதாரம் நெகிழ்வுத் தன்மை (Flexibility) கொண்டதாக இருத்தல் வேண்டும்; (6) ஒவ் வொரு நாட்டிலும் நிலையான கொள்கை கொண்ட அரசு அமைப்பு இருத்தல் வேண்டும்.

பொன் திட்டம் பல நாடுகளால் பின்பற்றப்படுதல்: உள்நாட்டுப்பொன் திட்டம் செவ்வனே செயல்படத் தேவையான பல நாடுகளும்

கடைப்பிடிக்க வேண்டும்; குறிப்பாகப் பெரும் நாடுகள் பின்பற்ற வேண்டும். கூடுதலான எண்ணிக்கையில் நாடுகள் தங்களின் நாணயச் செலாவணி முறையைப் பொன்னுடன் இணைத்தால் பன்னாட்டு அளவில் மாற்றுச் சாதனமாகவும், மதிப்பளவையாகவும், பொன் பயன்படக் கூடுதலான அளவு வாய்ப்புண்டு. பொன் திட்டம் கையாளுவதிலும் ஒரே வகையைக் கையாண்டால் தான் பலனுண்டு. ஒரு நாடு பொற்காசுத் திட்டத்தையும், வேறொரு நாடு பொன் கட்டித் திட்டத்தையும், மற்றொரு நாடு பொன் மாற்றுத் திட்டத்தையும் ஆட்சி செய்தால் பன்னாட்டு அளவில் பொன் திட்டம் சிறப்படைய வாய்ப்பு இருக்காது. மேலும் பொன் திட்டம் ஆளக் கூடிய நாடுகளிடையே தடையிலாப் பொற் சந்தை நிலவ வேண்டும். ஏற்றுமதி, இறக்குமதி எவ்வித இடர்ப்பாடுமில்லாமல் நடைபெற வேண்டும்.

தேவையான பொன் இருப்பு பரவலாக இருத்தல்:

எல்லா நாடுகளிலும் பணத்துறைக்குத் தேவையான அளவு பொன் இருப்பு இருந்தால்தான் பொன் திட்டம் வெற்றி நடை போட முடியும். ஆனால் அவ்வாறு இருக்க முடியுமா என்ற வினாவை எழுப்பினால் மாறுகத்தான் கூறமுடியும். பொன் இருப்பின் அளவு அந்தந்த நாட்டின் பொற் சுரங்கங்களின் பொன் படுகைகளின் வளத்தையும், பொன்னைப் பிரித்தெடுக்கும் அறிவியல் முறையையும் சார்ந்திருக்கிறது. நற்பேறாக (Luckily) கிட்டத்தட்ட எல்லா நாடுகளிலுமே தேவையான அளவு பொன் உற்பத்தி இருந்ததனால்தான் இரண்டாம் உலகப் போர் வரைக்கும் பொன் திட்டம் பன்னாட்டுத் திட்டமாக இடம் பெற்றிருக்கிறது. பொன் உற்பத்தியோ இருப்போ தேவையான அளவு இல்லாத நாடுகள் பன்னாட்டுச் செலுத்தல்களைச் செய்ய முடியாததால் பொன் திட்டத்தை மேற் கொள்ள முடியாமற் போகலாம். ஆனால் அவைகளும் பொன் இருப்பு மிகையாக உள்ள நாடுகளிலிருந்து கடன் வாங்கிக் கொண்டு ஏனைய நாடுகள் போல் பொன் திட்டத்தைக் கடைப் பிடிக்கலாம்.

தடையிலா அயல்நாட்டு வாணிகம்: பொன் திட்டம் பன்னாட்டு அளவில் செயல்பட வேண்டுமானால் நாடுகளுக்கிடையே வாணிபத் தொடர்பு எவ்விதத் தடையுமில்லாமல் இருக்க வேண்டும். வாணிகம் தடையில்லாமல் நடைபெற்றால்தான் பொன் இருப்பு தேவையான அளவு இல்லாத நாடு தனது உற்பத்திப் பொருள்களை வெளிநாட்டுக்கு ஏற்றுமதி செய்து பொன்னை அடைய முடியும். கட்டுப்பாடு இல்லாத வாணிகத்தினால் ஒன்று பொன் குறைவாகவுள்ள நாடுகளுக்குப் பொன் கிடைக்க வாய்ப்பு

இருக்கிறது; இரண்டாவது, ஒரு குறிப்பிட்ட வகைப் பொருளை உற்பத்தி செய்ய முடியாத நாடுகள் அப்பொருளை அடைய முடிகிறது. பன்னாட்டு வாணிகத்திற்குத் தடையிருந்தால் இருக்கக் கூடிய பொன்னையும் இழந்து விடுவதற்கு வாய்ப்பு இருக்கிறது.

பன்னாட்டுக் கடன்சுமை தவிர்க்கப்படுதல்: பொன் திட்டம் நிறை வேற வேண்டுமானால் நாடுகள் மிகையான அளவுக்குக் கடன் படுதல் கூடாது. கடன் அளவு அதிகமானால் அதைக் குறைப்ப தற்காக மேலும் மேலும் ஏற்றுமதியை அதிகரித்தல் அவசிய மாகும். அவ்வாறு செய்தால் உள் நாட்டுப் பொருளாதாரம் பாதிக்கப்பட்டு மக்கள் இடர்ப்பாட்டுக்குள்ளாவர். கடன் தொகை கூடுதலானால் வட்டியும் கூடுதலாவதால் ஏற்றுமதியால் கிடைக்கும் வரவு வட்டியையும், முதலையுமே திருப்பிச் செலுத்துவதற்குப் பயன்பட்டு விடும். அப்படியானால் அயல் நாட்டு இருப்பை (Foreign balances) அதிகரிப்பது என்பது இயலாததாகும். மேலும் உலகப் பொருளாதார மந்தம் நிலவினால் ஏற்றுமதிப் பொருளின் விலை சரிந்து அதனால் உண்டாகும் வரவு குறைவதால் கடன் தீர்க்கும் தொல்லை இன்னும் கூடுதலாகும். எனவே, முடியும் வரை ஒரு நாடு தனது கடனை ஓரளவுக்கு மேல் போகாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

உள்நாட்டில் பொருளியல் நெகிழ்ச்சி: பன்னாட்டுப் பொன் திட்டத்தின் மற்றுமொரு அவசியக் கூறு உள்நாட்டுப் பொருளியல் நெகிழ்ச்சியாகும். விலைவாசிகளும், வட்டி வீதமும் காலத்திற் கேற்ப, சூழ்நிலைகளுக்கேற்ப மாறுபட வேண்டும். அப்போதுதான் பொன் இருப்பும் கூடிக் குறையும். பொன் இருப்பு கூடுதலாக உள்ள நாட்டில் குறைக்க முடியும்; எங்கெயெல்லாம் குறைவாக உள்ளதோ அங்கே கூட்ட முடியும். இவைகள் நடைபெற வேண்டுமானால் பொருளாதார நெகிழ்ச்சி தேவை. அச்செயலைப் பணச் செருக்குள்ள நாடுகளில் காணலாம்.

பன்னாட்டுப் பொன் திட்டம் வெற்றி காண தேவையான அவசியக் கூறுகளைப் பார்த்த பிறகு, அத்திட்டத்தினால் ஏற்படும் நன்மைகளையும், குறைபாடுகளையும் இனிப் பார்ப்போம்:—

நன்மைகள்:—

(1) நாணய மாற்று வீதம் நிலைப்படுத்தப்படுதல் (Stability of Exchange rates;)

பன்னாட்டுப் பொன் திட்டம் ஆளப்படும் போது அந்நாட்டு நாணய மாற்று வீதம் நிலைபேருக்கம் செய்யப்படுகிறது. எல்லா

நாடுகளுக்கிடையேயும் நிலையான நாணயமாற்று வீதம் நடை பெறும் எனப் பொறுப்புறுதி கூட (Guarantee) அளிக்கலாம். ஏனென்றால் அனைத்து நாடுகளுக்குள்ளேயும் பொன் ஏற்றுமதியும் இறக்குமதியும் தடையில்லாமல் ஒரு குறிப்பிட்ட விலையில் நடை பெறுகின்றது. அளவற்ற ஏற்றுமதியும், இறக்குமதியும் ஏற்படு வதற்கு ஒரு முக்கிய காரணம் பொன்னை ஒரு பன்னாட்டு மாற்றுச் சாதனமாகவும் மதிப்பளவையாகவும் ஏற்றுக் கொள்வதினால்தான். இப்படியாக, பிரிட்டன் தனது பொன் திட்டத்தை 1931-ல் கைவிடுமுன் (Suspension) ஒரு பவுனுக்கு 113.0015 குன்றிமணி எடையுள்ள தூய பொன் என்று வரையறுத்திருந்தது. அமெரிக்கா, ஒரு டாலருக்கு 23.22 குன்றிமணி தூய பொன் என வரையறுத்திருந்தது. இதே நிலையில் இரு நாடுகளுக்கும் உள்ள நாணய மாற்று வீதத்தைக் கணக்கிட்டால் ஒரு பவுன் என்பது 4·8665 டாலருக்குச் சமம் என்பது புலப்படும். ஆனால் உண்மையில் இரண்டு நாடுகளின் செலாவணிவீதம் அவ்வீதத்தை விடச் சற்று ஏறத்தாழ இருக்கும். காரணம், பொன்னின் ஏற்று மதிச் செலவு (இரு நாடுகளுக்கிடையே) புறக்கணிக்கத்தக்க அளவு மாற்று வீதத்தைச் சற்று வேறுபடுத்திக் காட்டும்.

பொன் மாற்று வீதம் சமநிலையில் மாறும் லிருக்கிறதென்றால் ஏற்றுமதியாளர்களும் தங்கள் பொருள்களுக்கு எவ்வளவு கிடைக்கும் என முன் கூட்டியே எதிர்பார்த்துச் சரக்குகளை வெளி நாடுகளுக்கு அனுப்ப முடியும்; இதேபோல் இறக்குமதியாளர் களும் தாங்கள் வாங்க வேண்டிய சரக்குகளுக்கு எவ்வளவு கொடுக்க வேண்டி வரும் என முன்னமே கணக்கீடு செய்து வைக்க முடியும். நெடுங்கால அயல்நாட்டு முதலீடுகளும், அந்நியச் செலாவணி கொண்ட நெடுங்கால ஒப்பந்தங்களும் குறிப்பிட்ட கால முடிவில் ஒரு குறிப்பிட்ட நாணய மாற்று வீதத்தில் பெறமுடியும் என்ற நம்பிக்கையும் பாதுகாப்பும் ஏற்படு கின்றன. இப்படியாக, ஏற்றுமதியாளர்கள், இறக்குமதியாளர் கள், வங்கியர், முதலீடு செய்வோர் மற்றும் பலர் நிலையான மாற்று வீதத்தால் பாதுகாப்புப் பெறுகின்றனர். நாணய மாற்று வீதம் ஒரு குறிப்பிட்ட நிலையிலிருந்து எப்பக்கம் பெருமளவு மாறினாலும் மேற் கூறியவர்களின் நிலை எண்ணிப் பார்க்கக் கூட முடியாத அளவுக்கு மாறுபடும்; அதனால் ஒரு நாட்டின் அல்லது பல நாடுகளின் மக்கள் வாழ்க்கைத்தரம் சீர்கேடு அடையும். மற்றும் சில நாடுகளில் செல்வம் குவிந்தும் காணப்படும்.

விலை மட்டம் சமநிலைப்படுத்தப்படுதல்: (Parity of Price level)

பொன் திட்டம் பன்னாட்டு அளவில் ஆளப்படுவதால் பல நாடுகளுக்கிடையே விலைமட்டம் ஒருமுகப்படுத்தப்படுகிறது.

அதாவது, நாடுகளுக்கிடையே விலைவாசிகளில் வேறுபாடு இருந்தால் அவைகள் ஒரே அளவில் சமமாக இருக்கும்படி பொன் திட்டம் செய்கிறது. [நாம் இங்கு குறிப்பிடுவது பழைய பன்னூட்டுப் பொன் திட்டத்தை (1914-க்கு முன் இருந்த)] எவ்வாறு விலை வேறுபாடு தவிர்க்கப்படுகிறது என்பதை ஆய்வு செய்தால் பொன் இடப் பெயர்ச்சிக் கோட்பாட்டைப் பற்றிக் காண வேண்டியிருக்கிறது.

விலைபொன் இடப்பெயர்ச்சிக் கோட்பாடு (Theory of Gold movements or the Theory of the price–specie– flow mechanism) : நாடுகளின் செலுத்து நிலைகள் (Balance of payments) மாறுபட்டுப் பாதகமாக இருப்பின் பொன் ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு நகர்த்தப்படுவதால் அந்நிலை சரிசெய்யப்பட்டுச் சமநிலையாக்கப்படுகிறது. இது எவ்வாறு நடைபெறுகிறது? எடுத்துக்காட்டாக, இரு நாடுகளை- இந்தியா மற்றும் பாகிஸ்தான்- எடுத்துக் கொள்வோம். இரு நாடுகளும் பொன் திட்டத்தை ஆள்வதாகவும், இந்தியாவின் செலுத்துநிலை பாகிஸ்தானின் செலுத்து நிலையை விடப் பாதகமாக உள்ளது எனவும் கொள்வோம். அதாவது, இந்தியாவின் இறக்குமதி ஏற்றுமதியை விட அதிகம் எனப் பொருள். (இரு நாடுகளுக்கிடையே மட்டும்). இந்நிலையில் இந்தியா நிகரத் தொகையாகிய பொன்னைப் பாகிஸ்தானுக்குச் செலுத்த வேண்டும். அப்படிச் செலுத்தினால் தன் வசம் உள்ள பொன் இருப்பு குறைய ஆரம்பிக்கும். பொன் இருப்பு குறைந்தால் அதற்குச் சமமான அளவு உள்நாட்டுப் பணப்புழக்கம் குறைக்கப்படும். உள் நாட்டில் பணப் புழக்கம் குறைந்தால் மக்களின் வாங்குந்திறன் குறையும். இதனால் கூலியும், வேலை வாய்ப்பும் குறையும். அவைகள் குறைந்தால் வருமானம் குறையும். இதன் நிகர விளைவு விலை மட்டம் குறைய ஆரம்பித்தல் ஆகும். அதாவது, இந்திய நாட்டுப் பொருள்கள் வெளிநாட்டவருக்கு, குறிப்பாக பாகிஸ்தானியருக்கு, மலிவாகக் கிடைக்கும். எனவே இந்தியப் பொருள்களின் ஏற்றுமதி அதிகமாகும். ஏற்றுமதி மிகுதியானால் பொன் உள் வரக்கூடும். பின் பாதகமான செலுத்து நிலை உயர்ந்து சமநிலையடையும். பாகிஸ்தானே எடுத்துக்கொண்டால், தான் கூடுதலாக இறக்குமதி செய்யும் பொருள்களுக்குப் பொன்னை இந்தியாவுக்கு அளிக்க வேண்டியிருக்கும். இதனால் அந் நாட்டிலிருந்து பொன் வெளிச் செல்லும். அப்படி வெளிச் சென்றால் சாதகமாக இருந்த செலுத்து நிலை படிப்படியாகக் குறைந்து சமநிலையை அடையும்.

இப்படியாக, பொன் வெளிச் சென்றும், உள்வந்தும் விலை மட்டம் சரி செய்யப்பட்டு (நாடுகளுக்கிடையே) செலுத்து நிலை சமநிலையில் வைக்கப்படுகிறது.

பன்னாட்டு மாற்றுச்சாதனமும் மதிப்பளவையும்: உள் நாட்டில் மாற்றுச் சாதனமாகவும் மதிப்பளவையாகவும் மட்டும் ஆளப் படாமல் பன்னாட்டு அளவிலும் பொன் திட்டம் ஆளப்படுவதுதான் மிக முக்கியமானதாகும். பொன் எல்லோராலும் அதன் முக மதிப்பையும் உள் மதிப்பையும் கருதி ஏற்றுக் கொள்ளப்படுவதால் நாடுகளுக்கிடையே ஏற்படும் நிகர பேரங்கள் பொன் அளிப்பு மூலம் தீர்க்கப்படுகின்றன. மேலும் அந்தந்த நாடுகளின் பொருள்களை மதிப்பிட்டு ஒப்பிடும்போது பொன் வடிவில்தான் அளக்கப்படுகின்றன.

குறைகள்:— பன்னாட்டு அளவில் பொன் திட்டம் செயல் பட்டாலும் அதில் குறைபாடுகள் இல்லாமல் இல்லை. அவைகளைக் கீழே காண்போம்:—

முதலில், இத்திட்டம் வாட்டத்தை (Deflation) நோக்கிய ஒரு சார்புத் திட்டம் எனலாம். பொன்னை இழக்கும் நாடு அதனுடைய கடனைச் சுருக்கும்படி கட்டாயப்படுத்தப்படுகிறது; அதனால் வாட்டம் ஏற்பட்டு இன்னல்களுக்கு ஆளாகிறது. ஆனால், பொன்னை மேன்மேலும் அடையும் நாடு அதே போழ்து கடனைப் பெருக்கி வீக்கநிலையை (Inflation) எய்தும்படி கட்டாயப்படுத்தப் படுவதில்லை. இச் சூழ்நிலை போர்க்காலத்தில் உருவாகியிருக் கிறது. எடுத்துக்காட்டாக, இங்கிலாந்திலிருந்து பொன் வெளிச் சென்றதால் அங்கு வருமான வாட்டம் (Income deflation) ஏற்பட்டது. ஆனால் அமெரிக்காவில் பொன் இறக்குமதியால் அங்கே செலாவணிப் புழக்கம் அதிகமாகவுமில்லை, வீக்கம் ஏற் படவுமில்லை. எனவேதான், பொன் திட்டத்தை, வாட்டத்தை நோக்கிய ஒரு சார்புத் திட்டம் எனக கூறலாம்.

இரண்டாவதாக, இத் திட்டத்தால் ஒரு நாட்டில் வீக்கமோ வாட்டமோ ஏற்பட்டால் அது மற்ற நாடுகளுக்கும் பரவுகிறது. ஒரு நாட்டின் பொருளாதார நிலைமையைச் சரிக்கட்டுவதற்காகப் பணத்துறை அதிகாரிகள் ஏதாவதொரு முறையைக் கையாண் டால் அதே முறையை ஏனைய நாடுகள் பின்பற்ற வேண்டி வரும். இல்லையெனில் அந்நாடுகள் பாதிக்கப்படலாம்.

மூன்றாவதாக, பொன் திட்டம் ஒரு 'தானே இயங்கும்' திட்டம் என்பது மிகைப்படுத்திக் கூறப்படுகிறது. கடன் ஆக்கமும் கடன் ஒடுக்கமும் பொதுவாக, பொன் திட்டத்தை ஆளும் நாட்டின் பொருளாதார நிலைபேருக்கத்திற்கு உகந்ததல்ல எனக் கூற லாம். மேலும் மைய வங்கி கடனை ஒடுக்குவதற்கு முயற்சிகளை மேற்

கொண்டு சாதனங்களைக் கையாண்டாலும் விலை மட்டத்தையும், அடக்க விலையையும் குறைக்க முடிவதில்லை; இதே போல் கடனைப் பெருக்கிக் கடன் தேவையை அதிகரிக்க நினைத்தாலும் மைய வங்கியால் முடிவதில்லை. எவ்வளவுதான் பொன் உள் வந்தாலும் அவைகள் வேறு வழிகளின் மூலம் பயன்படுத்தப்படுவதால் கடன் ஆக்கம் ஏற்படவேண்டுமென்ற நிபந்தனையில்லை.

நான்காவதாக, பொன் திட்டம் தானே இயங்கும் தன்மை யுடைய தென்பதால் மிகுதியான அளவு பொன் காப்பிருப்பாக வைக்கப்பட்டிருக்கிறது. பொன் திட்டம் செய்யும் பணிகளை நன்கு மேலாண்மை செய்யப்பட்ட தாள் பணத் திட்டத்திலும் காண முடியுமென்பதால் அந்த அளவுக்குப் பொன் இருப்பை வைக்க வேண்டிய அவசியமில்லை. அவ்வாறு கூடுதலான அளவுக்கு இருப்பு வைக்கப்படுவதால் சமுதாயத்திற்குப் பயன்படாமல் போகிறது; தொழிலகத் தேவைக்குப் பயன்படுத்த முடியாமல் போகிறது.

ஐந்தாவதாக, ஒரு நாட்டின் விலை நிலைபேறுக்கம், நாணய மாற்று வீதத்திற்காக விட்டுக் கொடுக்கப்படுகிறது. பன்னாட்டுப் பொன தீட்டத்தில் விலைபேருக்கமும், நாணயமாற்று நிலை பேருகமும் ஒன்றுக்கொன்று முரண்பட்டதாகும். ஒன்றுக்காக ஒன்று விடப்பட வேண்டி வரும். பொதுவாக நாட்டின் பொருளாதார கொள்கைகள் கட்டுப்படுத்தப்பட வேண்டி வரும்.

இறுதியாக, பொன் திட்டம் ஒரு பழைமையான திட்டமாகும். 19ஆம் நூற்றாண்டிலும் 20 ஆம் நூற்றாண்டு காலத்தின் தொடக் கத்திலும் தான் இது வெற்றி கண்டிருக்க முடியும். தற்போது அறிவியல் முன்னேறிய காலத்தில் 'முழு வேலை வாய்ப்பு' (Full employment) தான் முக்கியம் எனவும், முழு வேலை வாய்ப்பு மட்டம் ஒரு நாட்டின் பொருளாதாரச் செழிப்பை உணர்த்துகிறது எனவும் நிரூபணம் செய்யப்பட்டுள்ளது. எனவே, பண வாக்கக் கொள்கைக்குப் பொன் திட்டம் தேவை என்பது ஒரு பழைய கோட்பாடு எனவும், வேறு எவ்விதத் திட்டத்தாலும் பணவாக்கக் கொள்கையை ஆள முடியும் எனவும் கூறலாம்.

பொன் திட்டம் முறிவடைதல் (Break down of Gold Standard):

முதல் உலகப் போருக்கு முன் (1914) பன்னாட்டு அளவில் பொன் திட்டம் வெற்றியுடன் செயல்பட்டது. ஆனால் போரின் விளைவாகப் பொன்திட்ட ஆட்ட விதிகள் கையாளப்பட முடிய வில்லை. நாடுகளுக்குள் பகைமை தோன்றியதால் வாணிபம்

தடைபட ஆரம்பித்தது. ஒரு சில நாடுகள் பொன் வெளிச் செல்வதை அனுமதிக்கவில்லை. தடையிலா வாணிபமும், பொன் ஏற்றுமதி இறக்குமதியும் பொன் திட்டத்திற்கு மிகவும் இன்றியமையாத அவசியக் கூறுகளாகும். இந்நிலை போர்க் காலத்தில் இல்லாததால் பன்னாட்டு அளவில் பொன் திட்டம் செயல்பட முடியவில்லை. பல நாடுகள் பொன் திட்டத்தைக் கைவிட ஆரம்பித்தன. மாற்றுரிமை யற்ற தாள் பணத்தைக் கையாளத் தொடங்கின. இதன் விளைவு என்னவென்றால் நாணய மாற்று வீதத்தில் ஒரு நிலை காணப்படவில்லை; நாட்டில் வீக்க நிலை ஏற்பட்டது. எடுத்துக் காட்டாக, செர்மனியில் மிகை வீக்கம் ஏற்பட்டதால் போருக்கு முன்னர் இருந்த விலை மட்டத்தை விட 30,000,000,000,000 தடவைகள் போருக்குப் பின் விலைவாசி உயர்ந்திருந்தது. ஐரோப்பிய நாடுகளிலும் கணக்கிலடங்கா அளவுக்கு மாற்றுரிமையற்ற தாள் பணம் புழக்கத்திலிருந்திருக்கின்றது. இதே நிலைதான் ருஷ்யா, ஹங்கேரி மற்றும் ஆஸ்திரியா நாடுகளிலும்.

1914 முதல் 1918 முடிய ஆங்காங்கே நாடுகளில் பொன் திட்டம் கை விடப்பட்டாலும், போர் ஓய்வுக்குப் பின் அத் திட்டத்தை மீண்டும் பன்னாட்டு அளவில் கொண்டு வரப் பல பெரிய நாடுகள் ஆர்வம் கொண்டன. அதில் முக்கிய பங்கு கொண்டவை அமெரிக்க நாடுகள்தான். முதன் முதலில், மீண்டும் 1919-ல் அமெரிக்கா அதைக் கொண்டு வந்தது. இதற்குப் பின், 1923-ல் ஆஸ்திரியாவில் தொடங்கி, 30 நாடுகள் பின் பற்றின. கடைசியாக, பொன் திட்டத்தைத் தொடங்கிய நாடு (சூன் 1928-ல்) பிரான்சு ஆகும். செர்மனி மார்க்கை (Mark) நிலைபேறுக்கம் செய்து 1924-ல் செர்மனி பொன் திட்டத்திற்குத் திரும்பியது. பொன் திட்டச் சட்டம் 1925-ன்படி இங்கிலாந்து பொற்கட்டித் திட்டத்தை 1925-ல் மீண்டும் ஆண்டது.

1928-ல் இறுதியாகப் பொன் திட்டம் மறுமலர்ச்சி அடைந்து பன்னாட்டு அளவில் கையாளப்பட்டாலும் அது நெடுங்காலத்திற்குச் செயல்படவில்லை. 1931-லிருந்தே முறிய ஆரம்பித்து விட்டது. இந்த ஆண்டுதான் இங்கிலாந்து பொன் திட்டத்தை முற்றிலும் கைவிட்டது. இதற்கு முக்கிய காரணம் போர்தான். போரினால் ஏற்பட்ட விளைவுகள் போருக்கு முன்னால் நினைத்துக் கூடப் பார்க்கப்படவில்லை. பொருளாதார நிலையில் மிகைப்பட்ட மாறுதல்கள் நாடுகளில் ஏற்பட்டன. போருக்குப் பின் அமெரிக்க நாடு பொருளாதாரத்தில் வலிமை மிக்க நாடாக விளங்க ஆரம்பித்தது. இதற்குக் காரணம், பொதுவாகக் கூறின், போர்க்

காலத்தில் அமெரிக்கா ஒரு நடுநிலையாக, எதற்கும் ஆதர வாகவோ, பகையாகவோ இல்லாமல் நின்றது. செர்மனியை எடுத்துக் கொண்டால், அது ஒரு 'ஐரோப்பிய தொழிற்கூடம்' என விளங்கியது; ஆனல் போரின் விளைவு, அது முற்றிலும் தோற்கடிக் கப்பட்டதால் பொருளாதாரச் சீர்கேட்டுக் குள்ளாகியது. கடனைப்பற்றிக் கேள்விப்படாத நாடுகள் போரினல் மிகையான அளவுக்குக் கடன்பட ஆரம்பித்தன. அதில் இங்கிலாந்து நாடும் ஒன்று. உலகத்திற்கே கடன் ஈந்தோர் நாடு 'இங்கிலாந்து', என்று அழைக்கப்பட்ட அச் சொல் நியூயார்க்குக்குச் சென்றது. போருக்கு முன்னர் பெயர் தெரியாத நாடுகளெல்லாம் போருக்குப் பின் முக்கிய இடம் வகிக்கத் தொடங்கின. இதே போல் எத்தனையோ ஐரோப்பிய நாடுகள் போருக்குப் பின் இருந்த இடம் காணுமல் மறைந்தன.

புத்துயிர் பெற்ற பொன் திட்டம் மீண்டும் பொருளாதாரக் குழப்பங்களினல் முறிவடையத் தொடங்கியது. அதற்குரிய கார ணங்களை இங்கே விரிவாகக் காண்போம் :—

<u>பன்னுட்டு வாணிபத்திற்குத் தடைகள்</u>:—முதல்உலகப்போர் 'நாட்டுப் பற்றை' மிகுதியான அளவுக்குத் தூண்டியிருக்கிறது. அரசு களின் கொள்கைகள் உலக ஒற்றுமையைப்பற்றி எண்ணிப்பார்த்த தாகத் தெரியவில்லை. ஆங்காங்கே ஒவ்வொரு நாடும் அதனதன் சுயநலத்தில் கவனத்தைச் செலுத்தியது. இங்கிலாந்தின் நிதி நிலை சரி இல்லாததால் அந் நாடும் பன்னுட்டு வாணிகத்தைக் கைவிட்டு உள் நாட்டு வாணிகத்திலே முழுக்கவனம் செலுத்தியது. அமெரிக்க நாடுகள் காப்பு வரிகளின் (Tariff barriers) வீதத்தை உயர்த்த ஆரம்பித்தன; ஏற்றுமதியைக் கூடுதலாக்கு வதற்கு வேண்டிய உதவிகளை அரசு செய்தது. பன்னுட்டு அளவில் வாணிபம், இப்படியாக, நடைபெறுவது தடைபட்டதால் ஒவ் வொரு நாட்டிலும் ஒரு பொருளின் விலை வெவ்வேருக இருந்தன. அதாவது, நாடுகளுக்கிடையே பொருளின் விலையில் வேறுபாடு காணப்பட்டது. விலைமட்டத்தில் நாடுகளுக்கிடையே வேறுபாடு இருந்ததாலும் பன்னுட்டு வாணிபம் வரி விதிப்பு மற்றும் அரசுக் கட்டுப்பாடுகளினல் தடைப்பட்டதாலும், பன்னுட்டு அளவில் நாணயமாற்று வீதத்திற்கு முக்கியமில்லாமல் போயிற்று. ஒரு சில நாடுகளுக்குள் வாணிபம் நடைபெற்ருலும் நாணய மாற்று வீதத்தில் ஒரு நிலை ஏற்பட வாய்ப்பில்லை. எனவே பன்னுட்டுப் பொன் திட்டம் வீழ்ச்சியடைய ஆரம்பித்தது.

சமமற்ற பொன் பகிர்வு (Mal distribution of Gold) :

போரின் கொடுமையால் பொற்செல்வத்தைக் கொண்டிருந்த நாடுகள் பொன்னை இழந்து நிற்க வேண்டியதாயிற்று. மைய மற்றும் கிழக்கு ஐரோப்பாவின் சில புதிய நாடுகள் அவைகளின் தேவைக் கேற்பப் பொன் இருப்பைக் கூட்ட முடியவில்லை. அமெரிக்க நாடுகளும், பிரான்சும்தான் போருக்கு முன் உள்ள நிலையைவிடப் பொன் இருப்பைக் கூடுதலாக வைத்திருந்தன. பொன் இருப்புக் கூடுதலாக அல்லது குறைவாக இருந்த நாடுகள் முழுவதும் 'தானே இயங்கும் பொன் திட்டத்தைக்' கை விடத் தொடங்கின. மெய்யாகவே, 'பொன் திட்ட ஆட்ட விதிகள்' மீறப்பட்டன.

விலைக்கட்டுப்பாடு : பொன் திட்டத்தில் பொன் இருப்புக்குத் தகுந்தாற்போல்தான் பொருள்களின் விலைமட்டம் நிர்ணயிக்கப் படும் என்று முன்பே பார்த்தோம். அவ்வாறு விலை மட்டம் உள் நாட்டு அளவில் சரிசெய்யப்படுவது கூட்டுருக்கள் (Corporations), பிடிப்பு நிறுமங்கள் (Holding companies), தொழில் சங்கங்கள், தொழிலாளர் சங்கங்கள் போன்றவைகளால் தடை செய்யப் பட்டது; பன்னாட்டு அளவில் கார்ட்டெல்கள் (வாணிக நிறுவனக் கூட்டணி) (Cartels) களால் உற்பத்திப் பொருள்களின் பகிர்வும், விலைவாசியும் கட்டுப்படுத்தப்பட்டன. எனவே, பொன் திட்டம் வெற்றியுடன் செயல்பட வாய்ப்பில்லை.

பொன் மாற்றுத் திட்டம் ஆளப்படுதல் : இத் திட்டம் பல நாடு களால் கடைப்பிடிக்கப்பட்டதால் பொன்னின் இடப்பெயர்வு தேவையில்லாமல் போய்விட்டது. வெளி நாட்டவருக்கு அல்லது வெளி நாட்டவரிடமிருந்து அளிக்கப்பட வேண்டிய பொன் ஒரு நாட்டு வங்கியின் மூலம் நடைபெற்றதால் அவ்வப்போது ஏற்படும் ஒவ்வொரு நடவடிக்கைக்கும் (Transaction) பொன்னை அளித்தோ, பெற்றோ செய்ய வேண்டிய அவசியமில்லை. வங்கியின் கணக் கேடுகளின் மூலம் பேரங்கள் சரிக்கட்டப்படுகின்றன. பொன், உண்மையிலேயே வெளிச்சென்று உள் வர வேண்டுமென்ற நிபந்தனையில்லை.

பன்னாட்டு அளவில் கடன்படுதல் : செர்மனியின் இழப்பீடுகள் (Reparations), அமெரிக்காவுக்குச் சில நாடுகள் கொடுக்க வேண்டிய கடனகள் போன்றவை, வெற்றி நடை போட்டுச் சென்ற பொன் திட்டத்திற்கு இடர்ப்பாடுகளாக இருந்தன. வாணிகம் மற்றும் விலைவாசி பொருட்டு வெளிச் செல்லும்

பொன்னை விடப் போரினால் ஏற்பட்ட கடன் மற்றும் இழப்பீட்டுத் தொகைக்காகச்செலுத்தப்பட்ட பொன் பன் மடங்காக இருந்தது. இப்படியாக, ஏனைய நாடுகளிலிருந்து ஏற்றுமதி செய்யப்பட்ட பொன் அமெரிக்காவில் குவிய ஆரம்பித்தது. முன்னமேயே அந் நாடு மிகையான அளவு பொன்னைப் பெற்றிருந்தது; அதோடு இறக்குமதியும் சேரத் தொடங்கியது. பின் அமெரிக்காவின் பொருளாதார நிலையைப்பற்றிக் கூறவுமா வேண்டும்? மாறாக, ஏற்றுமதி செய்த நாடுகளின் பொருளாதார நிலை மேன்மேலும் மோசமாகிக் கொண்டே போனது. மிகவும் பாதிக்கப்பட்ட நாடான செர்மனிக்கு உதவும் பொருட்டு அமெரிக்காவும், பிரிட் டனும் முன் வந்தன. செர்மனி செலுத்த வேண்டிய இழப்பீட்டுத் தொகைக்காக அமெரிக்காவும், பிரிட்டனும் கடனுதவி செய்தன. பிரிட்டன் கடனுதவி செய்ததின் விளைவு அதனையே பாதிக்கலா யிற்று. அயல் நாடுகள் தங்கள் குறுங்கால நிதிகளை பிரிட்டன் கருவூல மாற்றுச் சீட்டுகளிலும் (British treasury Bills), பொன் மாற்றுத் திட்டத்திலும் இட்டு வைத்திருந்தனர். ஆனால் பிரிட்டன் அந்நிதியை நெடுங்காலக் கடனுகச் செர்மனிக்குக் கொடுத்தது. இச்செயல் அதற்கு நிதி நெருக்கடியை உண்டாக்கிச் செலுத்து நிலையைப் பாதகமாக ஆக்கி விட்டது.

1923-ல் செர்மனிக்கு அமெரிக்க உதவி நிறுத்தப்பட்டது. இதனால் இங்கிலாந்து நாட்டிற்குத் தான் பட்ட கடனைத் திரும்பச் செலுத்தச் செர்மனியால் முடியாமற் போனது. மேலும் அயல் நாட்டு மூலதனம் உள்நாட்டை விட்டு வெளிச் செல்வதைத் தடுக் கும் பொருட்டுச் செர்மனி 'கடன் ஒத்தி வைப்புக்' (Morato-rium) கொள்கையை அறிவித்தது. பிரிட்டனின் வரவு — செலவு திட்டத்தில் பற்றுக் குறை ஏற்பட்டது. இனிமேல் பிரிட்டனால் பொன் திட்டத்தைக் கடைப் பிடிக்க முடியாதென்ற ஒரு அச்சம் பெருமளவில் நிலவ, அந்நாட்டில் முதலீடு செய்திருந்த அயல் நாடுகள் தங்கள் குறுங் கால நிதிகளை இலண்டனிலிருந்து திரும்ப எடுக்கத் துவங்கின. 1929—30-ல் அதன் செலுத்து நிலையின் (Balance of payments) நடப்புக் கணக்கு நிறைவு தரும் அளவுக்கு இருந்தது. ஆனால் மூலதனக் கணக்கு, பெருமளவுக்கு மூலதனம் திரும்ப எடுக்கப்படுவதைக் காட்டியது. 1931-ல் நடப்புக் கணக்குப் பற்றுத் தொகையை (Debit balance)யும், மூல தனம் வெளிச் செல்வதையும் காண்பித்ததால் பொன் இருப்பு மிகவும் குறைந்தது. அதன் செலுத்து (இருப்பு) நிலை நெருக்கடி காலங்களில் கீழ் வருமாறு இருந்தது:—

	1929	1930	1931
காண்புறு இனங்கள் (வாணிப நிலை) ... VISIBLE ITEMS (Balance of Trade)	—381	—386	—408
கட்புலனாகா இனங்கள் (Invisible items) ...	+484	+414	+304
நடப்புக்கணக்கில் இருப்பு நிலை (Balance on current Account)	+ 103	+28	—104
மூலதன இடப்பெயர்ச்சி (Capital Movements)	—107	—113	—50
எச்சம் (Balance) ...	—4	—85	—154

மூன்று ஆண்டுகளில் £ 243 மில்லியன் பற்றுத் தொகையை சரிக்கட்ட வேண்டியதாயிற்று. இரண்டு மில்லியன் ஆட்கள் வேலையற்று இருந்த போதும், (பொருளாதார) வாட்டக் கொள்கை (Deflation policy) கடைப்பிடிக்கப்பட்ட போதும், அமெரிக்கா மற்றும் பிரான்சு நாடுகளிலிருந்து இங்கிலாந்து கடன் வாங்க நேர்ந்தது. வாட்டமாக இருந்தும் கூட பொன் வெளியேற்றத்தைத் தடுக்க முடியவில்லை. £ 27 மில்லியன் பொன் இருப்பு குறைந்ததால் செப்டம்பர், 1931-ல் இங்கிலாந்து நாடு பொன் திட்டத்தைக் கைவிட்டது. அப்படி பொன் திட்டத்தைக் கைவிடாமல், பதிலாகப் பவுனின் உள்நாட்டு மதிப்பைக் குறைத்திருக்கலாம் எனப் பொருளாதார வல்லுநர்கள் கருத்துத் தெரிவித்தனர். நாணய மதிப்புக் குறைவினால் கடனீந்தோர் பாதிக்கப்பட்டாலும், நாட்டு நலனைக் கருதிப் பொன் வெளியேற்றத்தைத் தடுப்பதற்காக நாட்டுச் செலுத்து நிலையைச் சரி செய்வதற்காகவும் மதிப்புக் குறைவு செய்திருக்கலாம். 1925 முதல் செலாவணி மிகை மதிப்பு செய்யப்பட்டதற்காகவாவது 1931-ல் மதிப்புக் குறைப்பு செய்திருக்கலாம்.

நிலையற்ற அரசியல் (Political Instability) :

நிலையிலா மற்றும் அமைதியற்ற அரசியல் சூழ்நிலைகளில் பொன் திட்டம் வெற்றி பெற முடியாது. போர்ப் பீதி, குடிமைப்

புரட்சி (Civil) அரசியல் கிளர்ச்சி ஆகியவைகள் பணத்துறைக் கொள்கைக்கு ஊறுவிளைவிப்பதால் பொன் திட்டம் நிறைவேற வாய்ப்பில்லை. உள்நாட்டுப் பொருளியல் நிலை சரியில்லை என்றால் தனிப்பட்டோர், வங்கிகள் மற்றும் கூட்டுருக்கள் தங்கள் சொத்துக்களை (உள்நாட்டில் உள்ளவைகள்) விற்று, வேற்று நாட்டு வங்கிகளில் வைப்புக் கணக்குகளைத் தொடங்குவர். அந் நாடுகளிலும் ஆபத்து இருக்கிறதென்றால். ஆங்கு தொடங்கிய வைப்புக் கணக்குகளை மூடிவிட்டு இன்னும் பல நாடுகளில் கணக்கு வைக்கத் தொடங்குவர். இப்படியாக, 1920க்குப் பின்னும் 1930-க்கு முன்னும் மிகுதியான அளவுக்கு மூலதனம் ஒரு நாட்டை விட்டு மற்றொரு நாட்டுக்கு இடம்பெயர்ந்து கொண்டே இருந்தது. இவ்வாறு இடம் பெயர்வது, சரக்கு இடம் பெயர்வதற்கோ, விலை மட்டத்திற்கோ, செலாவணி காப்புக்கோ எவ்விதத் தொடர்புமில்லாமல் நிகழ்ந்ததால் பொன் திட்டம் முறிய வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது.

மந்த நிலை : 1930-ம் ஆண்டுகளில் உலகைச் சூழ்ந்திருந்த பொருளாதார மந்தமும் பொன் திட்டம் வீழ்ச்சிக்கு ஒரு காரணமாகும். மந்தம் காரணமாக விலைமட்டமும், வேலை மட்டமும் குறைவடைந்ததால் இறக்குமதி தடை செய்யப்பட வேண்டியிருந்தது; அதனால் சுங்க வரிகள் விதிக்கப்பட்டன. அதன் விளைவாக பன்னாட்டு வாணிபம் தடைபட்டது. ஆங்காங்கே நாடுகளின் வங்கி வைப்புகளில் இடப்பட்ட பொன் இருப்பு அந்தந்த நாடுகளால் திரும்ப எடுக்கப்பட்டது. இப்படியாக, மூலதனம் ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்திற்கு நகர்ந்து கொண்டே இருந்தது. இப்படியாக பொன் திட்டம் முறிவடைந்தது. இங்கிலாந்து 1931-லும், அமெரிக்க நாடுகள் 1933-லும், பிரான்சு 1935-லும் பொன் திட்டத்தைக் கைவிட்டன.

இரண்டாம் உலகப் போரும் பொன்னும் :

1930-ம் ஆண்டுகளில் பன்னாட்டு அளவில் பணவாக்க ஒற்றுமைக்கு முயற்சிகள் எடுத்துக் கொண்டாலும், ஒரு பொதுவான பணவாக்கக் கொள்கையை உருவாக்க முடியவில்லை. நாடுகள் பொன் திட்டத்தைக் கைவிட்டதும், பொன்னின் மதிப்பை அதனதன் செலாவணி மூலம் உயர்த்தின. அதாவது, உள்நாட்டு நாணய மதிப்பு குறைப்பு செய்யப்பட்டது. இதன் பலனாக, உலகப் பொன் இருப்பு மதிப்பு மிகையான அளவுக்கு உயர்ந்தது. முற்றிலும் பொன் மதிப்பு மறுமதிப்பு செய்யப்பட்டது.

இரண்டாம் உலகப் போர்க் காலத்தில் மீண்டும் வீக்க நிலை உருவானது; பொன் கொண்டு செலுத்துபவைகள் நிறுத்தப் பட்டன; பன்னாட்டு அளவில் செலுத்துபவைகளுக்குக் கட்டு மானம் விதிக்கப்பட்டது. ஆனால் பன்னாட்டு அளவில் வாணிபம் தடையின்றி நடைபெறவும், மூலதனம் இடம் பெயரவும் பற்பல திட்டங்கள் பெரும் நாடுகளால் வகுக்கப்பட்டன. அதில் வெற்றியும் காணப்பட்டது. 1944-ல் 'பிரிட்டன் வுட்ஸ்' என்ற ஊரகத்தில் நியூ ஹம்ஷயர், அமெரிக்கா (Bretton woods New hampshire, U.S.), ஒரு மாநாடு (Confrencc) நடைபெற்றது. இக்கருத்தரங்கு 1922-ல் நடைபெற்ற ஜெனோவா (Genoa) கருத்தரங்கை விட பல மடங்கு சிறப்புப் பெற்றதாகும். இக் கருத்தரங்கில் உருவானதுதான் பன்னாட்டுப் பணநிதியும் (International monetary fund) 'உலக வங்கி' (World Bank) ஆகும். பண நிதியின் ஆக்கமும் அதன் நோக்கமும் தனியாக ஒரு அத்தி யாயத்தில் விளக்கப்பட்டுள்ளன.

4. பணத் திட்டங்கள் (தொடர்ச்சி) (ஆ)

இரு உலோக முறை (Bimetallism)

இரு உலோகமுறை என்பது திட்டப்பணம் (Standard money) மற்றும் ஏனைய வகைப் பணங்களின் மதிப்பு, பொன் மற்றும் வெள்ளி உலோகங்களின் நிலையான மதிப்பு கொண்டு ஆளப்படுவதாகும். ஒரு நாட்டின் பணம் இரு உலோகங்களிலும்—பொதுவாகப் பொன்னும் வெள்ளியும்-அரசால் விவரிக்கப்படுகிறது. ஒரே காலத்தில் அந்த இரு உலோகங்களும் புழக்கத்திலிருக்கும்; அவைகள் ஒன்றுக்கொன்று மாற்றப்படுபவைகள். இரு உலோக முறை பண்டப்பணத்தின் (Commodity money) வகையைச் சேர்ந்ததாகும். இரு உலோக நாணயத் திட்டத்தில், ஒரு பணத்தின் அலகு, ஒரு குறிப்பிட்ட அளவும் தரமும் உள்ள பொன்னுக்கும், அடுத்தடுத்து, ஒரு குறிப்பிட்ட அளவும் தரமுமுள்ள வெள்ளிக்கும் சமம் என அரசு அறிவிக்கிறது. இரு உலோக மதிப்புகளின் 'நாணய அச்சக விகிதம்' (Mint ratio) அரசால் குறிப்பிடப்படுகிறது. எடுத்துக் காட்டாக, ஒரு டாலர் 24·75 குன்றிமணி (எடையுள்ள) தூய பொன்னுக்கும், 371·25 குன்றி மணி தூய வெள்ளிக்கும் சமம் என்றால் நாணய அச்சக விகிதம் 1க்கு 15 எனப் பொருள்படும். ஒரு அவுன்சு பொன் 15 அவுன்சு வெள்ளிக்குச் சமம் ஆகும். அதாவது, ஒரு அவுன்சு பொன்னைக் பெற்ற கடனை 15 அவுன்சு வெள்ளியாகத் திரும்பச் செலுத்தலாம்.

இரு உலோக முறையின் இயல்புகள்:

(1) இரு வகை உலோகங்களையும் தேவையான அளவுக்கு மக்கள் எவ்விதத் தடையோ, கட்டுப்பாடோ இல்லாமல் நாணயமாக அச்சிட்டுக் கொள்ளலாம். (2) இருவகை உலோகங்களுக்கும் கட்டுப்பாடற்ற சந்தை உண்டு. பொன், வெள்ளி ஆகியவைகளின் உள்நாட்டு வெளிநாட்டுச் சந்தை மதிப்பு ஒரே அளவாக இருப்பதுடன், அவைகளின் அடக்கம் உலோகக் கட்டியின் மதிப்பிற்குச் சமமாகவும் இருக்கிறது. (3) பொற் காசும், வெள்ளிக்காசும் சட்டமுறை நாணயமாகும். (4) எல்லா வகைக் கடன் பணங்களையும் திட்டப் பொன்னாகவோ, வெள்ளி

நாணயமாகவோ பெற்றுக் கொள்ளலாம். எல்லாத் திட்டப் பணங்களுக்கும் ஒரே அளவு வாங்கும் சக்தி உண்டு. (5) முடிவில் பணத்தின் அலகு, ஒரு குறிப்பிட்ட அளவு மதிப்பும் தரமுமுள்ள பொன்னின் மூலமும், வெள்ளியின் மூலமும் உணர்த்தப்படுவதாகும்.

இரு உலோக முறைக்கு ஒட்டிய கூற்று :

பொன் திட்டம், வெள்ளித் திட்டம் ஆகிய திட்டங்களைவிட இரு உலோகத் திட்டம் மூன்று அம்சங்களில் சிறந்தது என இரு உலோகத் திட்டத்தை ஆதரிப்போர் கூறுகின்றனர். (1) உலகப் பண இருப்புகள் (Monetary reserves) விரிவாக்கப் படுகின்றன. (2) பொது விலை மட்டத்தில் ஏற்படும் அலைவுகள் (Fluctuations) மிகமிகக் குறைவு, அதாவது, பணத்தின் மதிப்பு மிகவும் நிலைத்து இருக்கிறது. (3) இரு உலோகத்தைக் கொண்ட நாட்டுக்கும், பொன் மற்றும் வெள்ளித் திட்டங்களைத் தனித்தனியே கொண்ட நாடுகளுக்கும் ஏற்படும் நாணயமாற்று வீதம் (Exchange rate) நிலைபேருக்கம் செய்யப்படுகிறது.

பண இருப்பு கூடுதலாக்கப்படுதல் :

பொன்னை, வெள்ளியோ எந்த அளவு அதிக இருப்பு உள்ளதோ அந்த அளவு ஒரு நாட்டின் பணவாக்கக் கொள்கை சிறப்பாக நம்பிக்கையுடன் இருக்கிறதெனக் கொள்ளலாம். இக் கோட்பாடு அவ்வளவாக இக்காலத்திற்குப் பொருந்தாது என்று கூறினாலும் உலகப் போருக்கு முன் முழுஅளவில் பொருந்தி இருந்தது. பொன் பற்றாக் குறை முதல் உலகப் போர்க் காலத்திலும், அதற்குப் பிறகும் தான் உணரப்பட்டது. பொன் திட்டத்தைக் கைவிட்ட இன்றைய நாளிலும் பொன் இருப்பின் பற்றாக்குறையால் நாடுகள் படும் இன்னலைக் காண்கின்றோம். ஒரு உலோகத்தை மட்டும் அடிப்படையாகக் கொண்டு பணவாக்கத்தை மேற்கொண்ட நாடுகளைவிட இரு உலோகத் திட்ட நாணயச் செலாவணியை மேற்கொண்ட நாடுகள் நன்கு பணத் துறையில் வெற்றி காண முடியும். ஏனென்றால் ஒன்றின் பற்றாக் குறை மற்றொன்றால் ஈடுசெய்யப்படுகிறது. போருக்குப் பின் கடன் பணங்களை உலோகக் கட்டியால் மீட்க முடியாத நிலைகளில் அரசே, 'உலோகத்தால் மாற்ற முடியாது' எனும் ஆணைகளை பிறப்பித்திருக்கின்றன. இதற்கு முக்கியக் காரணம் தேவையான அளவு உலோக இருப்பு இல்லாததுதான். எடுத்துக்காட்டாக 1944-இல் உலகப் பொன் இருப்பு $35,210,000,000 ஆகும். ஆனால் அமெரிக்க நாடுகளில் மட்டும் அரசு மற்றும் வங்கிக்

கடன்பணம்$100,000,000,000,க்கு மேல்புழக்கத்திலிருந்தன. உடனே தேவையான உலோக இருப்பைக் கூட்டுவதற்காக வெள்ளியைக் கணக்குக்கெடுத்துக் கொண்டது ஒரு நல்ல முடிவாகும்.

நிலையான விலைமட்டம் :

இரு உலோகத் திட்டம் கொண்ட நாட்டின் பொது விலை மட்டத்தில் ஏற்படும் அலைவு ஒரு உலோகத்தைக் கொண்ட நாட்டின் விலைமட்ட அளவைவிடக் குறைந்தாகும் பொன் உற்பத்தி, பொன் பதுக்கல், பொன் ஆபரணம் செய்தல் போன்ற வைகளால் ஒரு நாட்டின் பொன் இருப்பில் மாறுதல் ஏற்படும். அம் மாறுதலால் பொன் மதிப்பும் (விலை) மாறுபடும். அதன் விளைவாக, நாட்டின் பொது விலை மட்டமும் மாறுபடும். ஆனால் இரண்டு உலோகங்களையும் பணத்திட்டமாகக் கொண்ட நாட்டில் ஒரு நாணயத்தின் கூடுதல் தேவை மற்றொரு நாணயத்தின் குறைந்த தேவையால் சரி செய்யப்படுவதால் விலை மட்டத்தில் ஏற்ற-இறக்கம் ஒரு நாணயத்திட்டத்தில் உள்ளதைவிட மிகக் குறைவாகவே இருக்கும். அதாவது, பேராக்க வாய்ப்பு மிகவும் கூடுதலாகும். பொன் இருப்புக் குறைந்தால் வெள்ளி குறைந்த அளவுக்கே பயன்படுத்தப்படுகிறதென்று கொள்ளலாம். அதாவது வெள்ளி இருப்பு கூடுகிறது எனப் பொருள்படும். ஆகவே ஒன்றின் பற்றுக்குறை மற்றென்றின் எச்சத்தால் சரிக் கட்டப்படுவதால் உலோக இருப்பு அவ்வளவாக மாறுபடாததால் விலைவாசி மட்டம் ஒரே அளவில் வைக்கப்படுகிறது. எடுத்துக் காட்டாக, இங்கிலாந்து பொன் திட்டத்தைக் கையாளுகின்றது, எனக்கொள்வோம். அதன்பொன் இருப்புநிலை $8,000,000,000 ஆக இருக்கிறது எனவும் கொள்வோம். அமெரிக்கா இரு உலோகத் திட்டத்தை கையாளுகின்றது என்றும், அதன் பொன் இருப்பு $8,000,000,000 ஆக உள்ளது எனவும், வெள்ளி இருப்பு $4,000,000,000 எனவும் கொள்வோம். மேலும் ஒவ் வொரு நாட்டிலும் ஒருஆண்டில் பொன்இருப்பு $1,000,000,000 அதிகமாகியுள்ளதெனக் கொண்டால், இங்கிலாந்தில் இருப்பு நிலை 12·5 சதவீதம் மாறியுள்ளதென்றும், அமெரிக்காவில் இருப்பு நிலை மாற்றம் 8·33 சதவீதம் தான் என்றும் பொருள் படும்.

எனவே, இரு உலோகத் திட்டத்தை அடிப்படையாகக் கொண்ட நாட்டில் உலோக அளிப்பு நிலையில் மாற்றம் ஏற்பட்டாலும், இருப்பு நிலை மாற்ற வீதம் மிகவும் குறைவானதால்

விலைவாசி மட்டத்தில் ஒரு நிலை காண முடியும். இதே நிலை ஒரு உலோகத்திட்டத்தையுடைய நாட்டில் காண முடியாது.

நாணய மாற்று விகிதத்தில் சம நிலை :

இரு உலோகத் திட்டம் கொண்ட நாடு தனது பணத்தின் அலகைப் பொன் வடிவிலும், வெள்ளி வடிவிலும் உணர்த்துவதால் அதன் பண அலகுக்கும், பொன் திட்டத்தைக் கொண்ட நாட்டின் பண அலகுக்கும், வெள்ளித் திட்டத்தையுடைய நாட்டின் பண அலகுக்குமுள்ள தொடர்பை இலகுவாகக் கணக்கியல் மூலம் உணர்த்த முடியும். அவ்வாறு கணக்கிடப்பட்ட நாணய மாற்று வீதத்தில் அடிக்கடி அலைவுகள் இல்லாமல் இருக்க வேண்டுமென்றால் நாடுகளுக்கிடையே தடையிலா உலோக இடப் பெயர்ச்சி இருக்க வேண்டும். பொன் திட்டத்தையுடைய நாடு, வெள்ளி திட்டத்தையுடைய நாடு ஆகிய இரு நாடுகளை மட்டும் எடுத்துக் கொண்டால், பொன் திட்டத்தையுடைய நாட்டில் வெள்ளியின் சந்தை மதிப்பில் ஏதேனும் மாற்றம் ஏற்பட்டால் இரு நாடுகளின் நாணய மாற்று வீதத்தில் அடிக்கடி அலைவுகள் ஏற்படும். இவ்வித அலைவுகள் இரு உலோக முறையைக் கொண்ட நாடுகளில் தென்படாது.

பொன் திட்டத்தையுடைய ஒரு நாடு வெள்ளித் திட்டத்தையுடைய நாட்டுடன் கொண்டுள்ள வாணிபத் தொடர்பைவிட, இரு உலோக முறையை உடைய நாடு, வெள்ளித்திட்டத்தையுடைய நாட்டுடன் கொண்டுள்ள வாணிபத் தொடர்பு கூடுதலாகும் என வலியுறுத்தலாம்.

இரு உலோக முறைக்கு வெட்டிய கருத்து :

நடை முறையில் ஒரு உலோக முறை (Mono-Metallism) .

ஒரு நாடு இரு உலோக முறையைக் கொண்டிருந்தாலும் நடைமுறையில் அது ஒரு உலோக முறையைத்தான் கையாளுகிறது. இது எப்படி என்றால் ஒரு உலோகம் மற்ற உலோகத்தைப் புழக்கத்திலிருந்து அடியோடு துரத்தி விடுகிறது. கிரஷ்ஹம் என்பவரின் விதிப்படி "கெட்ட பணம் நல்ல பணத்தை விரட்டுகிறது" என்பதாகும். இரு உலோகங்கள் எடுத்துக்காட்டாகப் பொன்னும் வெள்ளியும் புழக்கத்திலிருந்தாலும் பொன் "சட்ட நிலை" (dejure) நாணயமாகவும், வெள்ளி "நிகழ்வு நிலை" (defacto) நாணயமாகவும் தான் நடைமுறையில் இருக்கும். பொன்னின் மதிப்பு வெள்ளியின் மதிப்பைவிட உயர்ந்தால்தான் பொன்

மக்களால் பதுக்கப்படுகிறது. புழக்கத்திற்கு வருவதில்லை. எனவே, இரு உலோகத் திட்டத்தில் உண்மையில் ஒரு உலோகந்தான் நடைமுறையில் இருக்கிறது. ஒரு உலோகத் திட்டத்தினுல் என்ன விளைவு காண முடியுமோ அதே விளைவுதான் இரு உலோகத் திட்டத்திலும் காண முடியுமென இத் திட்டத்தைப் பற்றித் திறனுய்வு செய்வோர் கருத்துத் தெரிவிக்கின்றனர்.

மதிப்பு வீதப்பாடு நிர்ணயித்தல் முடியாமை :

இரு உலோகங்களின் மதிப்புக்குரிய வீதப்பாட்டைத் திட்ட வட்டமாக எப்போதும் நிர்ணயிப்பதென்பது இயலாத செயலாகும். ஏனென்ருல் இரண்டு உலோகங்களின் தேவை மற்றும் அளிப்புக் காரணிகள் முற்றிலும் வேறுபாடு கொண்டதாகும். ஒரு குறிப்பிட்ட நாணய அச்சக வீதப்பாடு எந்த நேரத்திலும் ஒரு உலோகத்தின் மதிப்பை உயர்த்தியும் மறு உலோகத்தின் மதிப்பைக் குறைத்தும் காட்டும். ஒரு நாடு மட்டும், எடுத்துக் காட்டாக, சீன நாடு, இரு உலோகத் திட்டத்தைக் கையாளுகிறதென்ருல் ஏனைய நாடுகள் வெள்ளிக்கு ஒரு நிலையான விலையை நிர்ணயிப்பதில்லை. அவ்வமயம் சீன நாட்டு வெள்ளியின் மதிப்பு உயர்ந்தோ, குறைந்தோ அயல் நாட்டவருக்கு விளங்கும். விலை மலிவாக இருந்தால் ஏனைய நாடுகள் அவைகளின் பொன்னுக்கு வெள்ளியைப் பெறும். அதாவது சீனுவில் வெள்ளி இருப்பு குறையும். மாருக, விலைக் கூடுதலாக இருந்தால் மற்ற நாடுகள் தங்கள் வசமுள்ள வெள்ளியைச் சீனுவுக்குக் கொடுத்துவிட்டு அங்கேயிருந்து பொன்னைப் பெறும். அதாவது, சீனு பொன்னை இழக்க நேரிடும். இதிலிருந்து அறிவ தென்னவென்ருல், உலகம் முழுவதும் இரு உலோகத் திட்டம் கையாளப்பட்டால் இரு உலோகத்தை ஆளும் நாட்டிற்கு நன்மை உண்டு. பிற நாடுகள் ஆளாமல் இருக்கும்போது ஒரு நாடு மட்டும் ஆண்டால் சிக்கல் தான். இரு உலோகத்திட்டம் கடைப்பிடிக்கப்பட்டாலும், நாடுகளுக்கிடையே நாணய மாற்று வீதத்தில் ஒருமைப்பாடு (Uniform) இருக்க வேண்டும். அனைத்து நாடுகளும் ஒரே அளவான நாணய மாற்று வீதத்தைக் கடைப்பிடிக்க வேண்டும். அவ்விதம் கடைப்பிடிக்கப்படும் நாணய அச்சக மாற்று வீதம் அவ்வுலோகங்களின் சந்தை விலை வீதத்திற்குச் சமமாக இருத்தல் வேண்டும். அப்படி இல்லையென்ருல் நெடுங்காலத்திற்குப் பொன்னும், வெள்ளியும் புழக்கத்திலிருக்கும் என்று கூற முடியாது. உலகம் முழுவதும் ஒரே சீரான கொள்கை கடைப்பிடிக்கப்படுகிறதா என்ருல் அது கேள்விக் குறியாகத் தான் இருக்கும் ?

இரு உலோக முறையில் கோட்பாடு அளவில்தான் வெற்றி காண முடியுமே தவிர, நடைமுறையில் நீண்ட காலத்திற்குப் பயன்படுத்த முடியாது என்றும் பயன்படுத்தப்படவுமில்லை என்றும் குறை கூறுவோர் சுட்டிக் காட்டுகின்றனர்.

நடைமுறையில் இரு உலோக முறை :

பத்தொன்பதாம் நூற்றாண்டில் இத்திட்டம் கடைப் பிடிக்கப் பட்டது. உலகம் முழுவதும் ஆளப்பட்டாலும் குறிப்பாக ஐரோப்பிய நாடுகளில் (இங்கிலாந்து தவிர) 1875 வரை நடைமுறையில் இருந்தது. அமெரிக்காவில் முதன் முதலாக நாணயமாக்கச் சட்டம், 1792-இன்படி (Coinage act) இரு உலோகத் திட்டம் அமுலாக்கப்பட்டது. பணத்தின் அலகு டாலரில் உணர்த்தப்பட்டு ஒரு டாலரின் மதிப்பு 371·25 குன்றிமணி தூய வெள்ளிக்கும் அல்லது 24·75 குன்றிமணி தூய பொன்னுக்கும் சமம் என அறிவிக்கப்பட்டது. அதாவது பொன் மற்றும் வெள்ளி நாணயங் களின் அச்சக மதிப்பு விகிதம் 1 : 15 என்பதாகும்.[1] இதை முன்னமேயே குறிப்பிட்டோம். 19-ம் நூற்றாண்டின் இறுதியில் மீண்டும் இரு உலோகத் திட்டத்தைக் கொண்டு வர அமெரிக்கா பெரும் முயற்சிகள் எடுத்துக் கொண்டு வெள்ளிக்கு முக்கியத் துவம் கொடுத்தது. ஆனால் பொருளாதார மந்தகாலம் (1930-ம் ஆண்டுகளில்) நிலவியதால் எந்த உலோகத் திட்டத்தையும் கையாள முடியவில்லை. பிரான்சு இரு உலோக முறையை 1803முதல் 1875 வரை கடைப்பிடித்தது. நாணய அச்சக விகிதம் 1:15.5 ஆக இருந்தது. அனைத்துலக கருத்தரங்குகள் 1878-ல் பாரிசிலும், 1893-ல் பிரஸ்ஸல்ஸிலும் நடை பெற்ற தற்குப்பின் மீண்டும் இரு உலோக முறையைக் கொண்டு வர வேண்டுமென முடிவு செய்யப்பட்டது. ஆனால் நாடுகளுக்கிடையே பொருமையும் விரோத எண்ணமும் நிலவியதாலும் பிரிட்டன் முன்னமேயே பொன் திட்டத்தை ஆண்டதாலும், இரு உலோக முறைக்குப் புத்துயிர் அளிக்கப்படவில்லை. 1934-ல் அமெரிக் காவில் வெள்ளி கொள் முதல் சட்டம் (Silver Purchases Act) உருவாக்கப்பட்டது. இச்சட்டப்படி, பொன்னுக்கு வெள்ளி இருப்பை உயர்த்துவதற்காக அரசுக்கு உள் நாட்டிலும், அயல் நாட்டிலும் வெள்ளியை வாங்குவதற்கு உரிமை வழங்கப்பட்டது.

கிரஷ்ஹாமின் விதி (Sir Thomas Gresham's Law) :

உள் மதிப்பில் வேறுபாடு கொண்ட இருவகை நாணயங்கள் சட்ட முறைப்படி ஒரே முகமதிப்பைக் கொண்டுள்ளன என

[1] John M. Culbertson Money and Banking (1972). P. 437.

அறிவிக்கப்பட்டுப் புழக்கத்தில் விடப்பட்டால் உயர்ந்த உள் மதிப்புடைய நாணயத்திற்கு 'நல்ல பணம்' அல்லது குறை மதிப் பாக்கப்பட்ட பணம் என்றும், மற்ற நாணயத்திற்குக் "கெட்ட பணம்" அல்லது மிகை மதிப்பாக்கப்பட்ட பணம் (Overvalued Currency) என்றும் பெயர். இங்கிலேயில் மிகை மதிப்புடைய பணம், குறை மதிப்புடையபணத்தைப் புழக்கத்திலிருந்து விரட்டி விடுகிறது. நல்ல பணம் புழக்கத்திலிருந்து எடுக்கப்பட்டுப் பின் உருவாக்கப்பட்டுப் பணத் துறையைச் சாராத வேறு வேலை களுக்குப் பயன்படுத்தப்படுகிறது. இதுதான் திரு. தாமஸ் கிரஷஹமின் விதியாகும். [2]

ஏழாம் ஹென்றி, எட்டாம் ஹென்றி (Henry VII and Henry VIII) காலங்களில் இங்கிலாந்தில் நிறையற்ற, வடிவம் அற்ற பல்வேறு பணங்கள் புழக்கத்திலிருந்தன. பணத் துறையில் ஒரு புதுத் திருப்பம் கொண்டு வரவேண்டும் என்றும் ஒரே நிறை, ஒரே வடிவம், ஒரே தன்மை கொண்ட நாணயங்கள்தான் புழக் கத்தில் இருக்க வேண்டுமென்றும் எட்டாம் ஹென்றியின் மகள் இராணி எலிசபெத் எண்ணி மேற் சொன்ன தன்மைகளைக் கொண்ட பொன் நாணயங்களை அச்சிட்டு வெளியிட்டார். அச்சிட்டு வெளியிட்டதின் நோக்கம், பல நாணயங்கள் கருவூலத் திற்குத் திரும்ப வந்துவிடும் என்ற நம்பிக்கை, ஆனால் எலிச பெத்தின் திட்டம் பெரும் ஏமாற்றத்தையே தந்தது. மக்கள் புதிய பொற்காசுகளையும் நாணயங்களையும் பதுக்கி வைக்க ஆரம்பித் தனர். மீண்டும் தேய்ந்து போன வடிவற்ற நாணயங்களையே புழக்கத்தில் கையாண்டனர். இதற்குக் காரணம் வினவப்பட்ட போதுதான், நிதி அறிவுரைஞர் கிரஷஹம், 'நல்ல பணம்' கெட்ட பணத்தால் விரட்டப்பட்டது' என்று விளக்கம் தந்தார்.

அமெரிக்காவிலும் இரு உலோக முறை ஆளப்பட்டபோது (1892) பொன்னும் வெள்ளியும் 1 : 15 விகிதத்தில் புழங்கின. நெடுங்காலத்தில் பார்த்தபோது வெள்ளிப் பணம், பொற் பணத்தைப் புழக்கத்திலிருந்து அகற்றிவிட்டது. பிறகுதான் அங்கே பணத் துறையினர் கிரஷஹம் விதி மெய்யாக்கப்பட்டதை உணர்ந்தனர். மேலும் ஒரு எடுத்துக்காட்டுக் கூறலாம் பொது வாக அமெரிக்க நாடுகளின் வெள்ளியின் உலோக அடக்கம் உயர் வாகவும், தூய்மையாகவும் பிற நாட்டு வெள்ளியுடன் ஒப்பிடும் போது காணப்பட்டது.

[2] Sir Thomas Gresham (1519—79) was the finacial adviser to Queen Elizabeth.

அமெரிக்க நாட்டின் வெள்ளிக்கு உள்நாட்டு மதிப்பை விட அயல் நாட்டு மதிப்பு அதிகமாக இருந்தது. இதன் விளைவாக, மிகுதியான அளவுக்கு வெள்ளி அமெரிக்காவிலிருந்து ஸ்பெயின் மற்றும் மேற்கு இந்தியத் தீவுகளுக்கு (Spanish west Indies) ஏற்றுமதி செய்யப்பட்டுப் பதுக்கப்பட்டது. அதற்குப் பதிலாக அங்கேயிருந்து தேய்ந்துபோன (Abraded) நிறை குறைவான (Under weight) ஸ்பெயின் நாணயங்கள் அமெரிக்காவுக்கு அனுப்பப் பட்டன. புழக்கத்தில் இவ் வகை நாணயங்கள் தான் அதிகமாக இருந்தன. கிரஷமின் விதிப்படி அங்கு இறுதியாக நிகழ்ந்தது என்னவெனில் பொன் நாணயங்களும், அமெரிக்க வெள்ளி நாணயங்களும் புழக்கத்திலிருந்து மறையலாயின.

இப் பிரச்சினையை ஒழுங்குபடுத்துவதற்காக 1834-ல் காங்கிரஸ் ஒரு சில நடவடிக்கைகளை மேற்கொண்டது. அதன் விளைவு என்னவெனில் முன்பிருந்ததைவிட நிலைமை மோசமாகி விட்டது. பொன் டாலரின் உள்ளிருப்பு அடக்கத்தைக் (Gold-content of dollar) குறைத்தனர். அதாவது நாணய அச்சக விகிதம் 1:16 எனக் கொண்டு வரப்பட்டது. துரதிஷ்டவசமாகப் பிரச்சினையை சற்று அதிகமாகவே தீர்க்க முற்பட்டதால் (Over correction) பொற் கட்டிச் சந்தையில் பொன்னின் இணை மதிப்பு (Relative value) குறைந்து விட்டது. இதன் முடிவு என்ன வென்றால், பொன் நாணயம், வெள்ளியைப் புழக்கத்திலிருந்து எடுத்து விட்டது.

இவ் வகைத்துப் பிரச்சினைகளுக்கும் தற்காலத்தில் ஒரே வழியைத் தான் உலக நாடுகள் பின்பற்றுகின்றன. நல்ல உலோகத்தோடு குறைந்த மதிப்புடைய உலோகத்தைக் கலந்து காசுகள், அல்லது நாணயங்கள் அச்சிட்டு வெளியிடுகின்றன. அக்காசுகளை உருக்கி நல்ல உலோகத்தை எடுத்து மதிப்பிட்டால், அதன் மதிப்பு அந் நாணயத்தின் முக மதிப்பிற்குக் குறைவாகவே இருக்கும்.

கிரஷ்ஹாம் விதி, ஒரு உலோக முறை, தாள் பணத்திட்டம் ஆகிய முறைகளில் கூட இயங்கும். எம்முறையாயினும், ஒரே முக மதிப்புக் கொண்ட, ஆனால் வெவ்வேறு உள்மதிப்புடைய நாணயங்கள் புழக்கத்தில் ஒரே காலத்தில் தேவையான அளவுக்கு இருத்தல் அவசியம். அவைகள் சட்டப்பணமாகவும் அறிவிக்கப் பட வேண்டும்.

அமெரிக்காவில் உள்நாட்டுப் போர்க்காலத்தில் (Civil war) பச்சைப்புறத் தாள் பணம் (Green backs) வெளியிட்ட போது நடந்ததைப் போல், மாற்றுத் தன்மையற்ற தாள் பணம்

பொன்னைப் புழக்கத்திலிருந்து நீக்கிவிட்டது. இதே போல் மாற்றுத் தன்மையற்ற தாள் பணம், மாற்றுத் தன்மையுடைய தாள் பணத்தை அகற்றிவிடுகிறது.

வெள்ளி நாணயத் திட்டம் (Silver - Coin Standard) :

பொன் திட்டத்தைப் போல் வெள்ளித் திட்டத்தையும் முப் பெரும் பிரிவுகளாகப் பிரிக்கலாம்—வெள்ளி நாணயத் திட்டம், வெள்ளிக் கட்டித் திட்டம் மற்றும் வெள்ளி மாற்றுத் திட்டம் — இந்த மூன்று வகை வெள்ளித் திட்டங்கள் கோட்பாட்டு அளவில் (Theory) இருந்தாலும் பணத்துறை வரலாற்றில் வெள்ளி நாணயத் திட்டம் சிறப்புற்று விளங்கியிருக்கின்றது. 19-ம் நூற்றாண்டு தொடக்கத்தில் இருந்துதான் முக்கியத்துவம் குறைந்திருக்கிறது. மேலைநாட்டு நாகரிகம் (Western Civilization) புத்துயிர் பெறத் தொடங்கிய காலத்திலிருந்து பொன்னை விட வெள்ளியே பரவலாக அனைத்துநாடுகளிலும் பணமாக உபயோகப் படுத்தப்பட்டுள்ளது. 18-ம் நூற்றாண்டு முடிய வெள்ளித் திட்டம் தான் முழுமையாகக் கையாளப்பட்டுள்ளது. பொன் திட்டமும் அடுத்தடுத்தோ, இணைந்தோ செயல் பட்டாலும் அதற்கு இரண் டாம் நிலைதான் கொடுக்கப்பட்டது. ஆனால் வெள்ளித் திட்டத் திற்கு வீழ்ச்சி நிலை ஆரம்பிக்கத் தொடங்கியவுடன் தடை யில்லாமல் வெகு விரைவில் 1870-ல் முறிவடைந்தது. இங்கி லாந்து 1774-ல் சட்ட முறை வெள்ளிப் பணப் புழக்கத்தைக் கட்டுப்படுத்தி வரையறை செய்து பின் அத்திட்டத்தைக் கைவிடத் தொடங்கியது. 1873-ல் வெள்ளி உலோகத்தைக் கொண்டு தடையில்லாமல் நாணயம் அச்சிட்டுக் கொள்ளும் உரிமையை மக்களிடமிருந்து அமெரிக்கா பறித்துக் கொண்டது. ஜெர்மனி 1871-லும், பிரான்சு, பெல்ஜியம், இத்தாலி மற்றும் சுவிட்சர் லாந்து 1874-லும் வெள்ளி நாணயத் திட்டத்தைக் கைவிட்டன. வெள்ளிச் சுரங்கங்கள் மேன்மேலும் கண்டுபிடிக்கப்பட்டன. அவைகளின் வெளியாக்கம் அதிகமாக, அதிகமாக மக்களின் தேவை குறைய ஆரம்பித்தது. அதனால் வெள்ளியின் விலை மிகவும் குறைந்தது.

சீனா, பெர்சியா (Persia), ஹாங்காங் (Hongkong) போன்ற சில நாடுகள் வெள்ளி நாணயத் திட்டத்தை 1935 வரைக்கும் ஆண்டன. ஆனால் மிகையான அளவுக்கு வெள்ளி ஏற்றுமதி அமெரிக்காவுக்குச் செய்யப்பட்டதால், அந்நாடுகள் மேற்படி திட்டத்தைக் கைவிடலாயின.

ஒரு உலோகத் திட்டம்: (Mono Metallism)

ஒரு உலோகத் திட்டமும் பண்டப் பணத்தின் வகையைச் சேர்ந்ததாகும். இத் திட்டம் பொன் அல்லது வெள்ளி ஆகிய உலோகங்களின் வடிவில் மட்டும்தான் புழக்கத்திலிருந்திருக்கின்றது. இரண்டு உலோகங்கள் கலந்து, தனித் தனியாக ஒரே காலத்திலோ கடைப்பிடிக்கப்படவில்லை. பொன் திட்டம், வெள்ளித் திட்டம் என்றுதான் ஆளப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு திட்டத்தைப் பற்றியும் முன்பே விரிவான அளவில் குறிப்பிட்டுள்ளோம்.

தாள் பணத்திட்டம் (Paper Standard) அல்லது ஆணைப்பணத்திட்டம் (Fiat Standard) அல்லது மேலாண்மைப் பணத்திட்டம் (Managed Standard):

மூன்று வடிவங்களில் கொடுக்கப்பட்டுள்ள மேற்கண்ட தலைப்பு ஒரு பொருளையே (Meaning) உணர்த்துகிறது. ஆணைத் திட்டம் மூன்று முக்கியத் தன்மைகளைக் கொண்டுள்ளது; (1) ஆணைப் பணத்தை ஒரு பண்டம் என எடுத்துக் கொண்டால் அதற்கு மிகக் குறைந்த அளவில்தான் மதிப்பிருக்கும் அல்லது முற்றிலும் மதிப்பு இருக்காது; (2) வேறு எந்தப் பண்டத்தாலும் மீட்க முடியாது; (3) அதன் வாங்கும் சக்தி அதன் உள்மதிப்புக்கு ஏற்ற பொன், வெள்ளி ஆகிய பண்டப்பணங்களைப்போல் அல்லாமல் சமமாக இருக்காது. இந்த மூன்று தன்மைகளைப் பற்றியும் சிறிது விளக்குவோம்: முதலில் ஆணைப் பணம் பெரும் பாலும் தாள் பணமாகவே இருக்கும். உலோகப் பணமாக இருப்பது அரிது. சட்ட முறை தாள் பணத்திற்கு அல்லது வங்கித் தாள் பணத்திற்கு உள்மதிப்பு இருக்காது அல்லது மிகமிகக் குறைவாக இருக்கும். உலோகப் பணமாக இருப்பின் அதன் உலோக உள்ளடக்கம் பணத்தின் முகமதிப்பைவிட மிகவும் குறைவு. இரண்டாவதாக ஆணைப்பணம் பொன்னாலோ, வேறு எந்தப் பண்டத்தாலோ மீட்க முடியாது. பண்டப் பணத் திட்டம், கைவிட்டபின்பு ஆணைப் பணந்தான் சட்டப் பணமாக அறிவிக்கப் பட்டு நடைமுறையாக்கப்பட்டது. மேலும் குறிப்பாகக் கூறினால் கடன் பணங்களைப் பொன் வடிவில் மீட்க முடியாது என்று ஒரு நிலை வந்த பின்தான் ஆணைப்பணம ஆளப்படுகிறது. மூன்றாவதாகப் பொன் அல்லது வேறு பண்டத்தின் அடிப்படையைக் கொண்டு ஆணைப்பணம் மதிப்பிடப்படுவதில்லை. பொன்னுக்கும் ஆணைப்பணம் மதிப்பிடப்பட்டு வெளியாக்கம் செய்வதற்கும் எவ்விதத் தொடர்புமில்லை. ஆணைப் பணத்தைப் பொன்னால் மீட்க முடியாவிட்டாலும் கூட, அதனுடைய வாங்கும் திறன் ஒரு குறிப்

பிட்ட அளவு பொன்னுக்குச் சமமாக உணர்த்தப்படுகிறது. இத் திட்டத்தை ஆளும் நாடுகள் அதனதன் பணத்தின் அலகுகளைப் பொன் வடிவில்தான் உணர்த்துகின்றன. ஆனால் பொன்னுக்கு மீட்க முடியாது.

ஆணைப்பணத்தின் நிறைகள் :

உலோகத் திட்டத்தின் குறைபாடுகள் ஆணைப் பணத் திட்டத்தின் நிறைகளாகும். உலோகத் திட்டத்தில் நெருக்கடி வரும்போதுதான், ஆணைத் திட்டம் ஆளப்படுகிறதென முன்பே பார்த்தோம். அத் திட்டத்தை ஆதரிப்போர் நிரந்தரமாகவே ஆணைத்திட்டம் ஆளப்பட வேண்டுமெனக் கருத்துத் தெரிவிக் கின்றனர். ''கடன் பணம் பொன்னால் மீட்க முடியும் என்ற உறுதி தான் பணவாக்கத் துறையில் மக்களிடையே நம்பிக்கையை வளர்க்கிறது'' என்ற கருத்து தேவையற்ற கருத்து என ஏளனம் செய்யப்படுகிறது. நெருக்கடிக் காலங்களில் உலோகத் திட்டம் கைவிடப்படுவதால், அத்திட்டம் விரும்பத்தக்க காலத் திட்டம் (Fair Weather Standard) ஆகும். உலோகத் திட்டமுள்ள நாடு களில் உலோக இருப்பு நிலை மாற்றத்திற்கு ஏற்றது போல் விலைவாசி மட்டம் மாறுவதால் பொதுவிலை மட்டத்தில் ஒரு நிலை காணமுடியாது. பொன் திட்டம் ''தானே இயங்கும்'' திட்ட மாகும். பொன் இருப்பு நிலை இடப் பெயர்வுக்கு ஏற்றவாறு பணத் துறையில் மாற்றம் ஏற்படுகிறது. அவ்வாறு பண வாக்கக் கொள்கையில் அடிக்கடி மாற்றம் ஏற்படுவது ஒரு நாட்டுப் பொருளாதாரத்திற்கு அவ்வளவு நல்லதல்ல. பொன் திட்டத்தை யுடைய ஒரு நாட்டில் பொருளாதார சீர்கேடுகள் ஏற்பட்டால் அது மற்ற நாடுகளிலும் கேடு விளைவிக்கும். மூலதனம் ஒரு நாட்டி லிருந்து வேறு நாடுகளுக்குப் பறந்து செல்லத் தொடங்கும்.

ஆணைத் திட்டத்தை ஆதரிப்போர் கூறுவதாவது : ஒரு நாட்டிற்குத் தேவையான பணத்தின் அளவு, அதன் வாணிபப் போக்கு, தொழிலக அமைப்பு, போக்குவரத்து மற்றும் செய்தித் தொடர்பு, வங்கி வசதிகள் மற்றும் கடன் சாதனங்களின் வளர்ச்சி ஆகியவைகளைப் பொறுத்து இருக்கிறது. இக் காரணிகளுக்கும் பொன் இருப்புக்கும் என்ன தொடர்பு இருக்கிறது? எனவே ஒரு நாட்டின் பொருளாதார வளம், திட்டத்தையுடைய பணக் கொள்கையை விட்டு விலகி இருக்கிறது. உற்பத்தியைப் பெருக்குவதற்கு அதிகமான மூலதனம் மெய்யாகவே தேவைப் பட்டால், பணத்தைப் பெருக்கிக் கொண்டால் போதுமே. பணத்தைப் பெருக்குவதற்கு ஒரு குறிப்பிட்ட அளவு பொன் இருப்பு தேவை என்பது தேவையற்ற விவாதமாகும். அதேபோல்

பணப் பெருக்கம் மிகையாக இருப்பின் பொன் இருப்பைச் சுருக்காமலேயே பணப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்தலாமே; அளவுக்கு மீறிய பணத்தைப் புழக்கத்திலிருந்து அரசு ஆணைகளின் மூலம் திரும்ப எடுத்து விடலாமே. ஒரு நாட்டில் பொருள் வளம், மனித சக்தி போன்றவை மிகுந்து இருந்தாலும் போதுமான அளவு பொன் இல்லாததால் அந்நாட்டின் முன்னேற்றம் தடைபடுகிறது. போதுமான அளவு பொன் இருப்பு வேண்டுமென்பது தேவையற்ற நிபந்தனையாகும்.[3]

உலோகத்திட்டத்தின் தானே இயங்கும் இயல்பைக் கைவிட்டு, அரசின் மேலாண்மையினால் பணவாக்கக் கொள்கையை நிறைவேற்ற முடியும். நாட்டின் வாணிபத் தேவைக்கு ஏற்றவாறு பணத்தைப் பெருக்கவோ, குறைக்கவோ அரசே கட்டுப்பாட்டுத் திட்டங்கள் அடங்கிய கைக்கோளை எடுத்து ஆள முடியும். பொன் திட்டத்தைக் கொண்டு நிலைபேருக்கம் செய்யப்படுவதை விட ஆணைத் திட்டத்தைக் கொண்டு மேலாண்மை என்ற கருவியின் உதவியால் நிலைபேருக்கம் செய்யப்படுவதே மேலாகும். உறுதியாகவும் இருக்கும்.

குறைகள் :

உலோகத் திட்டத்தின் நன்மைகள் தான், ஆணைத் திட்டத்தின் குறைகளாகும். அவைகளைப் பற்றி முன்பே விரிவாகக் கண்டுள்ளோம். இங்கே முக்கியமான இரண்டு திறனாய்வுகளை மட்டும் எடுத்து விவரிப்போம். (1) பன்னாட்டு அளவில் ஆணைப் பணத் திட்டம் கையாளப்பட்டால் பன்னாட்டு வாணிபத்தில் குழப்பம் ஏற்பட வாய்ப்பு உண்டு. (2) எந்த நேரத்திலும் ஆணைப்பணம் மிகையாக வெளியிடப்பட்டுப் புழங்கும் என்ற அபாயம் இருக்கிறது

பன்னாட்டு வாணிபத்தில் குழப்பங்கள் :

ஆணைப்பணத்தின் உலோகங்களின் தொடர்பு விடுபடுவதால், ஏனைய நாடுகளின் பணவாக்கக் கொள்கையுடன் நேரடித் தொடர்பு (link) கொள்ள வாய்ப்பில்லை. உள் நாட்டுப் பண அலகின் மதிப்பிற்கும் வெளி நாட்டுப் பண அலகின் மதிப்பிற்கும் குறிப்பிடத்தக்க தொடர்பு இருக்க முடியாது; ஆனால் (பன்னாட்டுப் பொன் திட்டத்தில்) அவ்வாறு இருக்க வாய்ப்பு உண்டு; நாணய மாற்று வீதத்தில் தடையிலா அலைவுகள் ஏற்பட்டு ஒரு நிலையை அடைய முடியும். இப்படிக் கூறுவதால் ஆணைப் பணத்தில் பன்னாட்டு வாணிபம் தடைப்படும் என்று கூற முடியாது. பொருள் ஏற்று மதிக்குக் கைம்மாறாக அந்த நாட்டுப் பணத்தையே பெற்றுக்

[3] D. H. Robertson, Essays in Monetary theory, 1940 P. 51.

கொண்டு, இறக்குமதியின்போது, அந்தப் பணத்தையே திரும்பச் செலுத்துவதற்குப் பயன்படுத்தலாம். இப்படியாக மூன்றாவது நாட்டிலும் வாணிபத் தொடர்பு கொள்ளலாம். நாடுகளுக் கிடையே அந்தந்த நாட்டுப் பணத்தைப் பெற்றுக் கொள்ளலாம், வாங்கிக் கொள்ளலாம் என்ற உடன்பாடு இருந்தால் வாணிபம் தடையின்றி நடைபெறலாம். பொன்னோ, வெள்ளியோ தேவையில்லை. ஆனால் பின் செலுத்தும் அந்நியச் செலாவணிகள் (deferred payment in foreign currencies) அந்நியச் செலாவணி இருப்பு வைத்திருத்தல் மற்றும் பன்னாட்டு மூலதன மாற்றங்கள் (Capital transfers) ஆகியவைகள், ஒரு கால வரையறைக்குள் நாணய மாற்று வீதத்தில் ஏற்ற இறக்கங்கள் எதிர்பார்க்கப்படுவதால் பெரிதும் பாதிக்கப்படுபவைகள்; அவ்வாறு பாதிக்கப் படுவதால் அம்மூன்று பேரங்களும் (transactions) நிகழ்வது மிகவும் குறைக்கப்படும். இதன் விளைவாக இடஞ்சார் உற்பத்தியில் சிறப்புத் தேர்ச்சி (Specialisation of production) ஆங்காங்கே இருக்காது.

மேலும் ஆணைப்பணத்தில் ஒரு நாடு தனது பணவாக்கக் கொள்கையைச் சரிசெய்வதற்காகத் தனது நாணயத்தின் மதிப்பைக் குறைத்தால் ஏனைய நாடுகளும் அதே கைக்கோளைப் பின்பற்ற வேண்டி வரும். அவ்வாறு செய்தால் நாடுகளுக் கிடையே "பணப் போர்" (currency war) தோன்றும். பணத் துறையில் குழப்பமேற்பட்டு வாணிபம் தடைப்படும்.

மிகையான அளவு தாள் பணம் வெளியிடப்பட்டதால் தோன்றும் அபாயம் :

ஆணைத் திட்டத்தையுடைய நாட்டில் ஒரு குறிப்பிட்ட அளவுக்குமேல் பணம் அச்சிடப்பட்டு வெளியிட வாய்ப்புண்டு. என்னதான் பணவாக்கக் கைக்கோள் பயன்படுத்தப்பட்டாலும் எப்படியும் ஒரு காலத்தில் பணப்புழக்கம் மிகையான அளவுக்கு வந்துவிடும். பணம் அதிகமானால் விலைமட்டம் உயர்ந்து மக்களின் வாங்குஞ் சக்தி குறைந்து, வருமானம் குறைந்து நாட்டில் பணவீக்க நிலை ஏற்படும். இது எப்படி நிகழ்கிறது என்று வீக்கமும், வாட்டமும் என்ற அத்தியாயத்தில் விரிவாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. நாட்டின் செலவு, வருமானத்தை விட அதிகமாகும்போது வரவு-செலவுத் திட்டத்தில் துண்டுவிழும் (deficit). அதை ஈடுகட்டுவதற்காகப் புதிதாகத் தாள் பணம் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது. வேறு எத்தனையோ முறைகள் இருந்தாலும் தாள் பணத்தை அச்சிட்டு வெளியிடுவதையே இலகுவான முறையாக அரசுகள் கொண்டிருக்கின்றன. இதன் விளைவு பொருளாதார சீர்கேடு தான். ஆனால் இவ்வகைக் கொடூர

மான செயல் உலோகத் திட்டத்தில் நிகழ இடமில்லை. ஏனென்றால் பணப்புழக்கம் அவ்வுலோக இருப்பைப் பொறுத்தே அமைந்திருக்கிறது.

எவ்வளவு குறைபாடுகள் தாள்பணத் திட்டத்தில் காணப்பட்டாலும் அது மிகவும் சிக்கனமான திட்டமாகையாலும், அதனுடைய ஏனைய நன்மைகளைக் கருதியும் எல்லா நாடுகளிலும் பரவலாக உலகப் போருக்குப் பின் அத்திட்டம் ஆளப்படுகிறது. தற்போது இத்திட்டம் நடைமுறையில் இருந்தாலும் சுமார் இரண்டு, மூன்று நூற்றாண்டுகளுக்கு முன்பே ஆளப்பட்டுப் பின் இடையில் மறைந்ததின் காரணமாக உலோகத்திட்டம் கடைப் பிடிக்கப்பட்டு இருக்கிறது. உலோகத் திட்டமுறையில் கண்ட குறைபாடுகளாலும், போதுமான அளவு உலோகம் புழக்கத் திற்கு இல்லாதிருந்ததாலும் உலோகத் திட்டம் கைவிடப்பட்டு மீண்டும் தாள் பணத்திட்டமே நடைமுறையாக்கப்பட்டுள்ளது.

பிரெஞ்சுப் புரட்சிக்கு முன் 1788 இல் முதன் முதலாக தாள் பணம் பிரான்சில் வெளியிடப்பட்டது. ஆனால் மக்களின் கடும் எதிர்ப்புக்குப் பின் அத் திட்டம் ஒரு திங்களுக்குள்ளாகவே கைவிடப்பட்டது. ஆனால் புரட்சியின் விளைவாக டிசம்பர் 1789 ஆம் ஆண்டில் மீண்டும் தாள் பணம் வெளியிடப்பட்டது. இத் தாள் பணம் 1796 ஆம் ஆண்டுவரை நடைமுறையில் இருந்தது. இங்கிலாந்தில் வங்கித் தாள் பணம் (Bank notes) 1729-ல் முதன் முதலில் வெளியிடப்பட்டது. அமெரிக்காவில் உள்நாட்டுக் கலகத்தின் (Civil war) போது பச்சைப்புறத் தாள்கள் (Green backs) வெளியிடப்பட்டன. 1863–வரைக்கும் பச்சைப் புறத்தாள்கள் பொன்னால் மீட்கப்பட்டன; ஆனால் 1863 இல் பொன்னால் மீட்கப்படும் தன்மையை இரத்து செய்து விட்டு அதை 'ஆணைப் பணமாக' மாற்றினார்கள்.

தாள்பண வெளியீடு :

தாள் பணத்திட்டத்தில் உண்டாகும் குறைகளைப் பற்றி முன்பே பார்த்தோம். அந்தக் குறைகள் ஏற்படா வண்ணம், உலோகத் திட்டத்தில் கண்டுள்ள நன்மைகளின்படி, தாள் பணம் அச்சிடப்பட்டு வெளியிடல் வேண்டும். மக்களின் நம்பிக்கையைப் பெறும்படியும், தானியங்கு நாணயத்திட்டமாகவும், உறுதிப்பாடு மிக்கதாகவும், நெகிழ்வுத் தன்மையுடையதாகவும், பாதுகாப்புடையதாகவும், சிக்கனமானதாகவும், தாள் பணம் அமைய வேண்டும். இத்தன்மைகளைக் கொண்டு வெளியிடப்படும் தாள்

பணத்திற்கு இருவகையான கருத்துகள் நிலவுகின்றன. (1) செலாவணி முறைக் கருத்து; (2) வங்கி முறைக் கருத்து. இவைகளைப்பற்றிய வாக்குவாதம், இங்கிலாந்தில் 19 ஆம் நூற் றாண்டில் இரு குழுவினர்களுக்கிடையே பெருமளவுக்கு நிகழ் வுற்றது. இன்னும் அவ்விரு கருத்துகளுக்கும் சிறப்பு இருக் கின்றது. அவ்விரு கருத்துகளைப் பற்றியும் விரிவாகப் பார்ப் போம்.

செலாவணி முறைக் கருத்து (Currency Principle):

இக் கொள்கையையுடையோர் இராபர்ட் டாரன்ஸ் (Robert Torrens), கோமகன் ஓவர்ஸ்டோன் (Lord Overstone), G. W. நார்மன் (G. W. Norman) மற்றும் வில்லியம் வார்டு (William ward) ஆகியோர் ஆவர். பணம் என்பது மாற்றுச் சாதனமாகவும், மதிப்பளவையாகவும் மட்டுமிருந்தால் போதாது. அது மக்களிடையே நம்பிக்கையைப் பெற வேண்டும். அந் நம்பிக்கையைச் சாதாரணத் தாள் பணம் உண்டாக்க முடியாது. எந்த அளவுக்குத் தாள் பணம் அச்சிடப்பட்டு வெளி யிடப்படுகிறதோ அந்த அளவுக்கு (100 விழுக்காடு) பொன் அல்லது வெள்ளியிருப்பு வைத்திருக்கப்பட வேண்டுமெனச் செலாவணிக் கொள்கையை உடையவர் கருத்துத் தெரிவிக்கின் றனர். அப்போதுதான் மக்கள் தேவைப்பட்டபோது தங்கள் வசமுள்ள தாள் பணத்திற்குப் பொன் அல்லது வெள்ளியைப் பெற்றுக் கொள்ள முடியும். தாள் பணத்தை வெளியிடுவதின் நோக்கம் சிக்கனத்தையும், எளிமையையும் வெளிப்படுத்தத் தான். உலோகங்களையே பணமாக உருளவிட்டால் நாளடைவில் தேய்மானம் ஏற்பட்டு உலோகப் பணத்தின் எடை குறைந்து வீண் கழிவு ஏற்படும். எத்தனையோ நாணயங்கள் தொலைந்து போகக்கூடும். இதைத் தவிர்ப்பதற்காகத் தான் உலோகங்களை அடிப்படை இருப்பாகக் கொண்டு தாள் பணம் வெளியிடப்படு கிறது. செலாவணிக் கொள்கையிலுல் எந்தவித ஆபத்தும் பொருளாதாரத்திற்கு வர இடமில்லை; நாணய மாற்று வீதம் தானாக இயங்கி ஒரு நிலையில் இருக்க முடியும். நாட்டில் வீக்க நிலை ஏற்பட வாய்ப்பில்லை.

ஆனால் இக் கருத்தை அனைத்து நாடுகளும் பின்பற்ற முடியுமா என்ற வினு எழுகிறது? வளர்ச்சியற்ற மற்றும் ஏழை நாடுகள், போதுமான உலோக இருப்பில்லாத நாடுகள் இக் கொள்கையின் அடிப்படையில் தாள் பணம் அச்சிட முடியாது. அதனுல் தான் பொன் திட்டம், வெள்ளித்திட்டம் முதலியவை அவ்வப்போது கைவிடப்பட்டன.

வங்கி முறைக் கருத்து (Banking Principle) :

இக் கருத்தையுடையோர் தாமஸ் டூக் (Thomas Tooke), ஜான்∴புல்லர்டன் (John Fullerton), ஜேம்ஸ் வில்ஸன் (James Wilson), மற்றும் J. W. கில்பர்ட் (J. W. Gilbert), ஆவர். வங்கிக் கொள்கையின் சார்பாளர்கள், 'தாள் பணத்திற்கு ஈடாக அதாவது நூற்றுக்கு நூறு பங்கு உலோக இருப்பு தேவையற்ற தென்று' கருதுகின்றனர். உள்நாட்டு அளவில் சாதாரணமாக ஒரு மனிதன் தாள்பணத்தைக் கொண்டு விரும்பிய பொருளைப் பெற முடிந்தாலோ நினைத்த செயலை நிறைவேற்றினாலோ, தாள் பணத்தைப் பொன்னாகவோ வெள்ளியாகவோ மாற்று வதற்கு முயற்சிப்பதில்லை. அப்படியிருக்க ஏன் 100 விழுக்காடு உலோக இருப்பு என வங்கிக் கொள்கையினர் வினவுகின்றனர். ஆகையால் வெளியிடுகின்ற தாள் பணத்திற்கு ஒரு குறிப்பிட்ட சதவீத உலோகத்தை இருப்பு வைத்திருந்தால் போதும். தற்காலத்தில், இக் கொள்கையே பரவலாக அனைத்து நாடுகளிலும் பின்பற்றப்படுகிறது. செலாவணி முறைக் கொள்கையை விட இக் கொள்கை இன்னும் சிக்கனமான தெனக் கூறலாம். ஏனென்றால் 'நூற்றுக்கு நூறு உலோக இருப்பு' என்ற விதி தளர்த்தப்படுவதால் தேவையான இருப்பு பொன் அல்லது வெள்ளி வேண்டுமென்று ஒரு நாடு இடர்ப்பட வேண்டாம். ஒரு குறிப்பிட்ட அளவு உலோக இருப்புக்குப் பின் தேவை யான அளவு காகித வெளியீட்டைக் கூட்டவும் குறைக்கவும் எவ்வித நிபந்தனையின்றிச் செய்யலாம்.

செலாவணிக் கொள்கை 'பாதுகாப்பை' (Safety) அடிப்படை யாகக் கொண்டுள்ளது. வரம்பற்ற பண வெளியீடு தடைப் படுத்தப்படுகிறது. ஆனால் வங்கிக் கொள்கை பணப்புழக்க அளவில் 'நெகிழ்வுத் தன்மையை' (elasticity) நோக்கமாகக் கொண்டுள்ளது. இக் கொள்கையிலும் அரசு மேலாண்மையாளர் களாலும், பணத்துறையினர்களாலும் வரம்பற்ற பண வெளியீடு தடுக்கப்படுகிறது. நாட்டுக்குத் தேவையான அளவு கூட்டவும் குறைக்கவும் செய்கின்றனர். பணவாக்கக் கைக்கோளைச் சிறந்த முறையில் பயன்படுத்தினால் நாட்டில் மிகை வீக்க விலை, வீக்க நிலை, வாட்ட நிலை தடுக்கப்படலாம். இதனால் இப்போது எல்லா நாடுகளுமே வங்கிக் கொள்கையைப் பின்பற்றுகின்றன எனக் கூறலாம்.

தாள்பண வெளியீட்டு முறைகள் : (Methods of note—issue)

முன்னர், பண வெளியீட்டு உரிமை வணிக வங்கிகளுக்கும் அளிக்கப்பட்டிருந்தது. நாளடைவில் வணிக வங்கிகள், விதி

களுக்குப் புறம்பாக மிகையான அளவுக்குப் பணத்தை வெளியிடத் தொடங்கின. எனவே அதைத் தடை செய்வதற்காக அவ்வுரிமை அவைகளிடமிருந்து பறிக்கப் பட்டது. எல்லா நாடுகளிலுமே பரவலாகத் தற்போது அவ்வுரிமையை அரசு மேற்கொண்டிருக்கிறது. அரசே நேரடியாகப் பணவெளியீடு செய்யாமல் மைய வங்கியிடம் ஒப்படைத்துள்ளது. எடுத்துக் காட்டாக நமது நாட்டில் 'இந்திய ரிசர்வ் வங்கி' தான் தாள் பணத்தை, (ஒரு ரூபாய் தாள் பணத்தைத் தவிர) அச்சிட்டு வெளியிடுகின்றது. இங்கிலாந்தில் 'இங்கிலாந்து வங்கி' (Bank of England) இப்பணியை மேற்கொண்டிருக்கின்றது. இதைப் போல் அந்தந்த நாட்டு மையவங்கி பணவெளியீடு செய்யும் உரிமையை ஏற்றிருக்கின்றது. பண வெளியீட்டு முறையில் பல வகைகள் உள்ளன. அவைகளாவன: (1) எளிய வைப்பு முறை (Simple Deposit System) (2) பெரும நம்பக வெளியீட்டு முறை (Maximum fiduciary System) (3) நிலை பெயரா நம்பக வெளியீட்டு முறை (Fixed fiduciary System) (4) வீத அளவுக் காப்பு முறை (Proportional Reserve System) (5) குறுமக் காப்பு முறை (Minimum Reserve System) (6) மேலுதிய வைப்பு முறை (Bonus Deposit System).

எளிய வைப்பு முறை:

இம் முறையில் வெளியிடப்படும் தாள் பணத்திற்குச் சமமான அளவிற்குப் பொன்னே, வெள்ளியோ காப்பு இருக்க வேண்டும். இம்முறை செலாவணி முறைக் கொள்கையைத் தழுவியதாகும். எளிய வைப்பு முறை நடைமுறையில் எந்த நாட்டாலும் பின்பற்றப் படவில்லை.

பெரும நம்பக வெளியீட்டு முறை:

ஒரு பெரும அளவு வரைக்கும் பணத்தை வெளியிடுவதற்கு அரசு மைய வங்கிக்கு உரிமை வழங்குகிறது. அப்படி வெளியீடு செய்வதற்கு முன் பொன் இருப்போ, வெள்ளி இருப்போ இருக்க வேண்டு மென்ற நிபந்தனையில்லை. உலோக இருப்பு இல்லாமலேயே ஒரு குறிப்பிட்ட அளவு வரை தாள் பணம் வெளியீடு செய்யலாம். பண வாக்கத் துறையினர் அக்குறிப்பிட்ட பெரும அளவைக் கடந்து தாள்பணம் வெளியிட முடியாது. ஆனால் பெரும அளவு எல்லைக்குள் கூட்டியோ, குறைத்தோ நாட்டுப் பொருளியல் தேவைக்கேற்பப் பணம் அச்சிட மைய வங்கிக்கு உரிமையுண்டு. இம்முறை பிரான்சில் 1870 முதல் 1928 வரையிலும், இங்கிலாந்தில், 1939 முதல் 1941 வரையிலும் கடைப்பிடிக்கப்பட்டது.

நிலையெரா நம்பக வெளியீட்டு முறை :

இந்தத் திட்ட முறையில் ஒரு குறிப்பிட்ட அளவு வரை பொன்னை இருப்பாகக் கொள்ளாமல் பிணையங்களை (Securities) இருப்பாகக் கொண்டு தாள்பணம் வெளியீடு செய்யும் உரிமை மைய வங்கிக்கு வழங்கப்படுகிறது. பெரும நம்பக அளவுக்கு மேல் வெளியிடுகின்ற பண அளவுக்குச் சமமாக மட்டும் பொன் இருப்பு வைக்கப்பட வேண்டும். இம் முறையில் மிகையான தாள் பண வெளியீட்டிற்கும் பணவீக்கம் தோன்றுவதற்கும் இடமில்லை. அதே போன்று தாள் பணம் முழுமையாக மாற்றுதலுக் குரியதாகும். இங்கிலாந்தில் முதன் முதலில் 'வங்கிச் சாசனச் சட்டம்' 1844-ன்படி (Bank charter Act) இந்நிலை பெயரா நம்பக வெளியீட்டு முறை அறிமுகப்படுத்தப்பட்டது. அச்சட்டப்படி நம்பக அளவு வெளியீடு £ 14 மில்லியனாகவும், பின் அவ்வளவு £ 20 மில்லியனாகவும் வரையறுக்கப்பட்டது. இந்தியாவில் 1861-ம் ஆண்டுச் சட்டப்படி நம்பக வரம்பு ரூ. 4 கோடி என வரையறுக் கப்பட்டது. இவ்வரம்பு அவ்வப்போது மாற்றம் செய்யப்பட்டது. 1897-ல் ரூ. 10 கோடியாகவும், 1914-ல் ரூ. 14 கோடியாகவும், 1920-ல் ரூ. 120 கோடியாகவும் வரம்பு அளவு இருந்தது. இத்திட் டத்தின் முக்கிய குறை என்னவென்றால் இது நெகிழ்வுத்தன்மை யற்றதாகும். உலோக இருப்பு கூடினால்தான் பணத்தின் அளவும் கூடும். இல்லையெனில் ஒரே நிலையில்தான் பணப்புழக்கமிருக்கும். இதன் விளைவு, பொருளாதாரச்சீர்குலைவு ஏற்படும். தேவைப்பட்ட போது பணத்தைக் கூடுதலாக வெளியீடு செய்ய முடியாமல் போகிறது.

வீத அளவுக் காப்பு முறை:

வெளியீடு செய்கின்ற மொத்தப் பணத்தின் அளவுக்கு ஒரு குறிப்பிட்ட சதவீதம் பொன்னை வெள்ளியோ காப்பாக வைத் திருந்தும் எஞ்சிய தொகைக்கு அரசுப் பிணையங்களாகவும் வைத் திருந்தால் அம்முறைக்கு வீத அளவுக் காப்பு முறை எனப்பெயர். எடுத்துக் காட்டாக வெளியீடு செய்யும் மொத்தப் பணத்திற்கு 10 சதவீதம் பொன் காப்பு இருக்க வேண்டுமென விதிமுறை இருப்பதாகக் கொள்வோம். மைய வங்கி ரூ. 100 கோடி செலாவணிப் பணம் வெளியிட வேண்டுமானால் ரூ. 10 கோடி மதிப்புள்ள பொன்னையும், ரூ. 90 கோடி மதிப்புள்ள அரசுப் பிணையங்களையும் அல்லது நல்ல வாணிப மாற்றுச் சீட்டுக்களையும் (Bills of exchange) அதனிடம் வைத்திருக்க வேண்டும். இவ் விகித வேறுபாடு நாட்டிற்கு நாடு அதன் அதன் சூழ்நிலை களுக்கு ஏற்ப மாறுபடும். இம்முறை மிகவும் நெகிழ்ச்சித்

தன்மையைக் கொண்டிருக்கிறது. நாட்டின் தேவைக்கேற்ப பணத்தின் அளவை கூட்டவும் செய்யலாம், குறைக்கவும் செய்யலாம். சில நெருக்கடியான காலங்களில் குறும அளவு பொன் இருப்பு நிலை குறைவாக இருந்தாலும், தாள் பணத்தைத் தேவையான அளவு அச்சிட்டு வெளியிட மைய வங்கிக்கு உரிமை அரசால் வழங்கப்படுகிறது.

இத் திட்டம் பிரான்சில் 1938-ல் ஆளப்பட்டது. இந்தியாவில் 1927-ல் கையாளப்பட்டு 1957 வரைக்கும் கடைப் பிடிக்கப்பட்டது. 1957க்குப் பின் இன்று வரை 'குறுமக் காப்பு முறை'யின்படி பணம் வெளியீடு செய்யப்படுகிறது. ஆனல் அமெரிக்கா இன்னும் 'விகித அளவுக் காப்பு முறை' யைத் தான் பின்பற்றுகிறது.

குறுமக் காப்பு முறை :

இந்த முறையில் மைய வங்கி சட்டத்தால் குறிப்பிடப்பட்ட ஓர் அளவிற்குப் பொன்னைக் காப்பாக வைத்துக் கொண்டு எந்த அளவுக்கு வேண்டுமானலும் தாள்பணத்தை வெளியிடலாம். பொன்னேடு அரசுப்பிணையங்களையும் வெளி நாட்டுச் செலாவணி களையும் காப்பாக வைத்துக் கொள்ளச் சட்டம் வழி வகை செய்யலாம். இம் முறை முற்றிலும் நெகிழ்ச்சியுடையதாகும். நாட்டுப் பொருளாதார சூழ்நிலைகளுக்கேற்பப் பண அளிப்பைக் கூட்டவும், குறைக்கவும் செய்யலாம். எனவே, இது ஒரு சிறந்த முறையாகும். குறிப்பாக, வளரும் நாடுகளுக்கு மிகவும் ஏற்றதொன்றாகும். ஆனல் மிகையான அளவுக்குப் பண வெளியீடு செய்ய வாய்ப்பு இருப்பதால் பணவீக்கத்திற்கு இடமுண்டு. தற்போது நமது இந்திய நாடு இந்தக் ''குறுமக் காப்பு முறை''யைத் தான் பின்பற்றுகிறது. இந்திய ரிசர்வ் வங்கிச் சட்டப்படி, மைய வங்கியின் வசம் காப்பாக ரூ. 200 கோடிக்குப் பொற்கட்டி, பொற்காசு, அந்நியச் செலாவணி ஆகியவை இருக்க வேண்டும். இதில் ரூ. 115 கோடிக்குப் பொன் இருப்பு இருக்க வேண்டும்.

மேலாதிய வைப்பு முறை :

இந்த முறையில் ஒரு குறிப்பிட்ட அளவு அரசினது கருவூல (மாற்றுச்) சீட்டுக்களைக் (Treasury Bills) காப்பாக வைத்திருத்தல் வேண்டும். இம் முறை அவ்வளவாக நாடுகளுக்கிடையே முக்கியத்துவம் வகிக்கவில்லை. 1902-ல் நம் இந்தியாவில் ''மேலாதிய வைப்பு முறை'' பின்பற்றப்பட்டிருக்கிறது.

அதற்குப் பிறகு அது கைவிடப்பட்டது. அமெரிக்காவில் 1913-க்கு முன்னால் இம் முறைப்படி வங்கிப்பணம் வெளியிடப் பட்டது.

இதுவரை விளக்கப்பட்ட முறைகளில் எம்முறை மிகச் சிறந்தது என்ற வினா எழலாம்? இதற்கு விடையாக ஒரு குறிப் பிட்ட முறைதான் சிறந்தது எனக் கூற முடியாது. காலச் சூழ் நிலைக்கேற்ப அந்தந்த நாட்டில் அவ்வப்போது ஒவ்வொரு முறை ஏற்றதாக இருக்கலாம். எம் முறை கடைப்பிடிக்கப்பட்டாலும் வெளியாகும் பணம் மக்களிடையே நம்பிக்கையை வளர்க்கும் அளவுக்கும், நெகிழ்வுத் தன்மையை உடையதாகவும் இருத்தல் வேண்டும்.

5. பணத்தின் மதிப்பு
(VALUE OF MONEY)
குறியீட்டெண்கள் (INDEX NUMBERS)

பொருளின் விலையும் பணத்தின் மதிப்பும் :

பணவியல், வங்கியியல் (Money and Banking) ஆகிய இரண்டிலும் எழும் பிரச்சினைகளில் "பணத்தின் மதிப்பு" பற்றிய பிரச்சினை மிக முக்கியமானதாகும். ஏனைய பொருள்களினின்றும் பணத்திற்கு முக்கியத்துவம் மனிதனால் கொடுக்கப்படுவதற்கு முகிய காரணம் பணத்திற்காகப் பணத்தை விரும்பாததே யாகும். அதை ஒரு பரிவர்த்தனைச் சாதனமாகக் கொண்டு ஏனைய பொருள்களை அடையவோ மாற்றவோ முடிகிறது. பணம் தானுகவே ஒரு விதப் பயனுமற்றது. ஒரு 100 ரூபாய் தாளை, சாதாரணத் தாள் தானே என மதித்தால் அதற்கு யாதொரு மதிப்புமில்லை; மாற்றுச் சாதனமாக ஏற்புத் தன்மையைப் (acceptability) பெற்றிருகிற காரணத்தால்தான் அப் பணத்திற்கு மதிப்பு ஏற்படுகிறது.

ஒரு பொருளின் விலை என்பது, ஒரு சில குறிப்பிட்டநேரத்தில் சில நியதனைகளின் பேரில் பணத்திற்காக அப் பொருள் மாற்றப்படுவதைக் குறிக்கும். பொதுவாக, நாம் ஒரு பொருளின் மதிப்பைப்பற்றிக் குறிப்பிடுகையில் அதன் விலையை வைத்துத்தான் குறிப்பிடுகிறோம். ஆனால் அதே மதிப்பு எல்லோருக்கும் எல்லா நேரங்களிலும் ஒரே அளவாக இருக்காது. ஏன்? ஒருவருக்கே ஒரே பொருளின் மதிப்பு பல நேரங்களில் பலவிதமாக மாறுபடும். இதே போல் தான் பணத்தின் மதிப்பும் மனிதனுக்கு மனிதன் வேறுபடுகிறது. திங்கள் தோறும் ரூ. 300 சம்பளம் வாங்கும் ஒரு தொழிலாளிக்குப் பணத்தின் மதிப்பு எந்த அளவுக்கு உயர்ந்து விளங்குமோ அந்த அளவுக்குத் திங்கள் தோறும் ரூ. 3000 சம்பளம் வாங்கும் ஒரு ஊழியருக்கு உயர்ந்து விளங்குமென்று கூற முடியாது. இப்படியாக, பொருள்களுக்கு மதிப்பு

இருப்பது போலப் பணத்திற்கும் மதிப்பு இருக்கிறது. ஒரு பொருளின் விலை பணத்தின் மூலமாக அளக்கப்பட்டு மதிப்பிடப் பட்டாலும், பொருளின் விலையும் பணத்தின் மதிப்பும் ஒன்றாக முடியாது. ரூ. 100 விலையுள்ள ஒரு பொருளின் மதிப்பு ரூ. 50 விலையுள்ள ஒரு பொருளின் மதிப்பை விட இரு மடங்காகாது. விற்பனைக்குரிய பொருள்களுக்கு விலையிடுதலும், அப்படி விலையிடப்பட்ட பொருள்களைப் பணத்தின் மூலம் விற்று மாற்றுவதும் நமது வசதிக்காகச் செய்யப்படுகின்றன. எனவே, பணத்தின் மதிப்பு அதன் வாங்குந்திறனைச் சார்ந்திருக்கிறது. ஒரு மிதி வண்டியின் (cycle) விலை ரூ. 500 என்றாலும் அல்லது ரூ. 500ன் விலை ஒரு மிதி வண்டி என்றாலும் ஒன்றுதான். பொருள்களின் மதிப்பைப் பணத்தின் மூலம் அளக்கிறோம்; ஆனால் பணத்தின் மதிப்பை எவ்வாறு அளப்பது? பணத்தின் மூலமாகவா? அல்லது வேறு "பொது மதிப்பளவை" (Common denominator) மூலமாகவா? பொருள்களுக்குப் பணம் பயன் படுத்தப்படுவது போல் பணத்திற்கு வேறு ஏதும் கையாளப்படுவ தில்லை. பொருளுக்குப் பொருள் பணத்தின் மதிப்பு மாறுபடுகிறது. எனவே பொருள்களைக் கொண்டுதான் பணத்தின் மதிப்பு கணக் கிடப்பட வேண்டும். ஆனால் அப்படியே கணக்கிட்டாலும் உண்மையான மதிப்பைக் கணக்கிட முடியாது. 5 ஆண்டு களுக்கு முன் உள்ள மதிப்பு தற்போதுள்ள பணத்திற்கு இருப்பது இல்லை; குறைவாகவே இருக்கிறது. 1914-ல் ஒரு பவுன் ஸ்டெர்லிங் (Pound sterling) எத்தனை பொருள்களை வாங்கியதோ அதில் சரிபாதிதான் 1920ல் வாங்கியது. இரண்டாம் உலகப் போர்க்காலத்திலும், 1945க்குப் பிறகும் பணத்தின் மதிப்பு குறைய ஆரம்பித்து விட்டது.[1]

பணத்தின் மதிப்பு, பணத்தின் தேவையையும், அளிப்பையும் பொறுத்திருக்கிறது. எப்படிப் பொருள்களின் விலையும், தேவை, அளிப்பு விதிகளைப் பொறுத்து நிர்ணயிக்கப்படுகிறதோ அப்படியே பணத்தின் மதிப்பும் நிர்ணயிக்கப்படுகிறது. பணத்தின் அளிப்பு மிகுதியானால் வாங்கும் சக்தி குறைகிறது; பணத்தின் மதிப்பும் குறைகிறது. இதற்கு மாறாக பணத்தின் அளிப்பு குறைந்து தேவை மிகுதியானால் வாங்கும் சக்தி மிகுதியாகிறது, எனவே, பணத்தின் மதிப்பும் கூடுதலாகிறது. இவை இரண்டுமே நடை பெறுமல் ஒரு குறிப்பிட்ட தேவையான அளவு பண அளிப்பு உள்ள ஒரு நாட்டில் எல்லாப் பொருள்களின்—உடை, உறைவிடம்,

[1] Monetary Theory and Practice — J. L. Hansen (1965) P. 183.

உணவு, வாடகை, கூலி, சம்பளம் முதலியன—விலை உடனடியாகப் பாதியாக்கப்படுகின்றன (Half) என்று வைத்துக் கொண்டால் அப் பொருளகளின் மதிப்பு மாறுது; ஆனால் பணத்தின் மதிப்பு இரு மடங்காகிறது. பணத்தின் மதிப்பு கூடுகிறது அல்லது, குறைகிறது என்றுதான் கூற முடிகிறதே தவிர 'பணத்தின் மதிப்பு' 'இது தான்' என்று திட்டவட்டமாகக் கூற முடிவதில்லை. இரண்டு காலங்களை எடுத்துக் கொண்டு அவைகளை ஒப்பிட்டுப் பார்த்துத் தான் பண மதிப்பின் மாறுதல்களைக் கூற முடியும். பண மதிப்பைப்பற்றிக் கணக்கிடுகையில் பொருள்களின் விலை மாறுதல்களைப் பற்றிக் கவனிக்கப்படல் வேண்டும். பொருள்களின் விலையும் அடிக்கடி அல்லது காலத்திற்கேற்றாற் போல் மாறுபடுகின்றது. அப்படிப் பொருள்களின் விலைவாசி மாற்றங்களை அளந்து கணக்கிடுவதற்குக் "குறியீட்டு எண்" (Index Number) உபயோகிக்கப்படுகிறது. அதைப் பற்றிக் கீழே விவரிக்கலாம்:

குறியீட்டெண்கள்: (Index Numbers):

அனேக பொருள்களின் விலைவாசிகளைப்பற்றிய சராசரிநடப்பை அளந்து அறிய உதவுவது 'குறியீட்டெண்கள்' ஆகும். பண்டங்களின் எண்ணிக்கை அதிகமாக இருந்து விலைவாசிகளை எடுத்துக்கொண்டு குறியீட்டெண்களைக் கணக்கிட்டால் பணத்தின் மதிப்பைப் பெரும் போக்காகத் தான் அளவிட முடியும். அதாவது, துல்லியமாகக் கணக்கிடமுடியாது. அதே பொழுது பண்டங்களின் எண்ணிக்கை குறைவாக இருந்தால் விலைவாசி புள்ளி விவரம் சேகரிப்பது எளிது. குறியீட்டெண் பெறப் பெற்றுப் பணத்தின் மதிப்பில் ஏற்பட்டுள்ள வேறுபாடுகளைத் துல்லிதமாக அறிய முடியும்.

எல்லாப் பொருள்களையும் ஒரே மொத்தமாக எடுத்துக் கொண்டு குறியீட்டெண் கண்டு பிடிப்பதைவிட, பண்டங்களைப் பல தொகுதிகளாகப் பிரித்து ஒவ்வொரு தொகுதிக்கும் தனித் தனியே குறியீட்டெண் தயாரித்துக் கணக்கிட்டால் பணத்தின் மதிப்பு எவ்வாறு இருக்கிறது என அறிய முடியும். எடுத்துக் காட்டாக, தொழிலாளர்களின் வாழ்க்கைத் தரத்தில் ஏற்படும் மாறுதல்களை அளந்தறிய அவர்களுக்கு இன்றியமையாத பொருள்களான உணவு, உடை, உறைவிடம், கரி போன்றவைகளின் சில்லறை விலையை எடுத்துக் கொண்டு 'தொழிலாளர்களின் வாழ்க்கைச் செலவு குறியீடு' (Cost of living index for Working men) தயாரித்தல் வேண்டும். மொத்த வியாபாரிகள் பெருமளவில் கையாளப்படும் பொருள்களுக்குத் தனியாகப் பட்டியல்

தயாரித்து மொத்த விலையைக் கணக்கிட்டு 'மொத்த விற்பனை விலைக் குறியீடு' (Wholesale price index) தயாரிக்கப்பட வேண்டும். அப்போது தான் பெருமளவில் கையாளப்படுகின்ற பொருள்களின் விலையில் ஏற்படும் மாறுதல்களை அவ்வப்போது கணக்கிட முடியும். கச்சாப் பொருள்களின் விலையில் ஏற்படும் மாறுதல்களைக் கணக்கிடத் தனியாகக்குறியீட்டெண் தயாரிக்கப்படுகிறது. பன்னாட்டு வாணிபத்தில் ஏற்றுமதி, இறக்குமதிக்குள்ளாகிற பொருள்களுக்குப் 'பன்னாட்டு வாணிப குறியீடுகள்' கணக்கிடப் படுகின்றன.

விலைவாசிகளின் குறியீட்டெண்கள் அமைத்தல் :
(The Construction of Index Numbers of Prices)

பல புள்ளி விவர வழி முறைகளின் கூட்டமைப்பைக் கொண்டு குறியீட்டெண்கள் தயாரிக்கப்படுகின்றன. அப்படி அமைக்கப்படும் முறையில் ஏராளமான சிக்கல்கள் குறுக்கிடு கின்றன. அச் சிக்கல்களில் சிலவற்றைக் கீழே காணலாம் :—

1. அளக்கப்பட வேண்டிய ஒரு வகுப்பு அல்லது ஒரு பொது வாகத் தொடுக்கப்பட்ட விலைவாசிகளைத் தேர்ந் தெடுத்தல்.
2. பொதுவான தொகுப்பிலிருந்து ஒரு குறிப்பிட்ட பண்டங் களைப் பதிலியாகத் (Representative) தேர்ந்து எடுத்து அவைகளின் விலைவாசிகளைக் கணக்கெடுத்தல்.
3. தேர்ந்தெடுக்கப்பட்ட பண்டங்களின் விலைவாசிகளைப் பற்றிய புள்ளி விவரம் சேகரித்தல்.
4. ஒரு தள ஆண்டைத் (Base year) தேர்ந்தெடுத்து அந்த ஆண்டின் விலைவாசியைக் கொண்டு தேவையான ஆண்டின் அல்லது ஆண்டுகளின் விலைவாசிகளுடன் ஒப்பிட்டுப் பார்த்தல்.
5. தள ஆண்டின் விலை நிலையுடன் ஒப்பிட 'நிறையிட்ட சராசரி விலைவாசிகள்' (Weighted average prices) அல்லது 'நிறையிட்ட குறியீட்டெண்கள்' (Weighted index numbers) கணக்கிடுதல்.

பொதுத் தொகுதியின் விலைகளின் (General group of prices) போக்கை அளந்தறிவதற்காகத் தேர்ந்தெடுப்பவை எந்த நோக்கத்திற்காகக் குறியீட்டெண் தேவைப்படுகிறது என்பதைச் சார்ந்திருக்கிறது. எல்லாப் பண்டங்களின் விலைவாசிகளையும் தெரிந்து பட்டியல் தயாரித்து, எழுதுவது என்பது கடினமான

செயலானதால், ஒரு சில மாதிரி பண்டங்களை மட்டும் தேர்ந் தெடுத்து எழுதுவது மிக எளிதாகும்.

தள ஆண்டு தேர்ந்தெடுத்தல்: ஒரு குறிப்பிட்ட ஆண்டின் சராசரி விலைகளின் வீதப் பாட்டை (percentage) தள ஆண்டின் சராசரி விலைவாசிகளின் வீதப் பாட்டோடு ஒப்பிட்டுப் பார்ப்பதுதான் சாதாரண குறியீட்டு எண்ணின் வேலையாகும். தள ஆண்டு தேர்ந்தெடுப்பதில் சில விதிமுறைகளைப் பின்பற்றினால் விலைவாசி களின் தாரம் பிரியத்தை (relative prices) துல்லியமாக ஒப்பிட்டுப் பார்க்க முடியும். இல்லையெனில் பணத்தின் மதிப்பு சரிவரக் காட்டப்படமாட்டாது. முதலில், தள ஆண்டைத் தேர்ந்தெடுப் பதில் சமீப காலத்திய ஆண்டாகத் தேர்ந்தெடுத்துக் கணக்கிடுவது மிகவும் நல்லது. எடுத்துக் காட்டாக, 1972, 1973, 1974 ஆண்டுகளின் விலைவாசி மாறுதல்களை அறிய 1960-ஆம் காலத்திய விலைவாசிகளை அடிப்படையாகக் கொண்டு அறிவது தான் சிறப்பாகும்; அப்போதுதான் உண்மையில் விலை மாறுதல் களைப் பற்றி ஒரு உட்கருத்து, (idea) கிடைக்கும். அப்படி இல்லாமல் 1930—32 காலத்திய (மந்த காலம்) விலைவாசிகளை அடிப்படையாகக் கொண்டு ஒப்பிட்டுப் பார்த்தால் தெளிவான, உண்மையான விலை மாறுதல்களை அறிய முடியாது. இரண்டா வதாக, மிகவும் விலகிய ஆண்டை (remote base year) தள ஆண்டாகக் கொண்டால், தற்காலத்தில் எத்தனையோ பொருள்கள் புதிதாகக் கண்டு பிடிக்கப்பட்டு உபயோகிக்கப்படுபவைகள் அக் காலத்தில் வழக்கத்திலேயே இல்லாமலிருந்திருக்கும். அப்படி யிருக்க எப்படி அப்பொருள்களின் விலைவாசி மாறுதல்களை ஒப்பிட்டுக் கணக்கிட முடியும்? அதற்கு மாறாக, அருகி லுள்ள (near base year) ஆண்டை தள ஆண்டாகக் கொண்டால் வெகு எளிதாக எப்பொருளுக்கும் ஏற்பட்ட மதிப்பு மாற்றங்களை (தேவையான ஆண்டில்) அளந்து காண முடியும். மூன்றாவதாக, குறியீட்டெண் அமைக்கும்போது ஒரு சில பிழைகள், பேதங் காட்டுகை முதலியன ஏற்படுவதைத் தடுத்தல் முடியாது. மிக நுணுக்கமாகப் பார்த்துத் தயாரித்தாலும் அதில் பிழை கண்டு பிடிக்க முடியும். அப்படியிருக்க அருகிலுள்ள ஆண்டைத் தேர்ந்தெடுக்காமல், மிகவும் எட்டியுள்ள ஆண்டைத் தள ஆண்டாகக் கொண்டால், அப் பிழைகளும் பேதங் காட்டுகையும் பன்மடங்காகப் பெருக்கிக் காண்பிக்கப்படும். குறியீட்டெண் முறையே சரி அல்ல என்ற அளவுக்குக் கூட வந்து விடும். நான்காவதாக, தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய தள ஆண்டு சாதாரண ஆண்டாக இருத்தல் வேண்டும். போர்க்கால

ஆண்டாகவோ, பஞ்சத்தால் பீடிக்கப்பட்ட ஆண்டாகவோ, மிகவும் செழிப்பு உள்ள காலத்திய ஆண்டாகவோ இருத்தல் கூடாது. இவ்வாண்டுகளுள் தள ஆண்டாகக் கொண்டு நடப்பு ஆண்டை ஒப்பிட்டால் விலைவாசி மாற்றத்தில் உண்மை நிலை அறிய முடியாது. எடுத்துக் காட்டாக, 1930 மந்த காலமாதலால் அவ்வாண்டு, ஒப்பிடுவதற்காக தள ஆண்டாகத் தேர்ந்தெடுக்கப் படவில்லை. 1962-ல் சீனாவுடன் போர்க் கொண்டதால் நமது நாட்டில் 1960-ஐ சாதாரண ஆண்டாகக் கொண்டுள்ளோம்.

குறியீட்டெண் அமைக்கப்படும் முறை : பொருள்களுள் தேர்ந்தெடுத்தும் அவைகளின் விலைவாசிகளைக் கண்டறிந்தும், தள ஆண்டைத் தேர்ந்தெடுத்தும் முடித்தபிறகு குறியீட்டெண் தயாரிக்க வேண்டியதுதான் எஞ்சியுள்ள பணியாகும். குறியீட்டெண்கள் தயாரிப்பதின் முக்கிய நோக்கமே எல்லாப் பண்டங்களின் விலைகளும் ஒரே வீதத்தில் மாறுபடலிருப்பதால்தான். ஒரு பொருளின் விலை இருமடங்காகும்; மற்றொன்றின் விலை 30% உயரும்; வேறொரு பொருளின் விலை மாறுபடலிருக்கும்; இன்னும் ஒரு சில பொருள்களின் விலை குறையவும் செய்யும். இந்நிலையில் பொருள்களின் சராசரி விலை நிலைமையைப் பற்றி எவ்வாறு கூற முடியும்? இவ் வினாவுக்கு விடைதான் ''விலைவாசி குறியீட்டெண்கள்'' என்பதாகும்.

எல்லோருக்கும் புரிந்த தெரிந்த விலைவாசி குறியீட்டெண் 'நுகர்வோர் விலைவாசி குறியீடு' ஆகும் (Index of consumer prices). அதாவது 'வாழ்க்கைச் செலவு குறியீட்டெண்' (Cost of living index number) என்பதாகும். கீழ்க்கண்ட அட்டவணையில் '0' ஆண்டிலும், '1' ஆண்டிலும் உள்ள சில நுகர்ச்சிப் பொருள்களின் விலைகள் (கற்பனை) கொடுக்கப்பட்டுள்ளன :—

சில நுகர்ச்சிப் பொருள்களின் விலைகள்

	ஆண்டு '0' (ரூபாய்)	ஆண்டு '1' (ரூபாய்)
ஆட்டிறைச்சி (1 கிலோ) ...	4	... 8½
பால் (1 லிட்டர்) ...	1	... 1½
அங்கி (man's suit) ...	100	... 175
வாடகை (1 திங்கள்) ...	50	... 75
வானொலிப் பெட்டி (6 வால்வுகள்)	500	... 350
ஆகக் கூடுதல் ...	655	610

மேலே கொடுக்கப்பட்டுள்ள ஐந்து வகைப் பண்டங்களின் விலைகளைக் கூட்டி சராசரி எடுத்துப் பார்ப்போமேயானால் ஆண்டு

'0'க்கு (655÷5) ரூ. 131-ம், ஆண்டு '1'க்கு (610÷5) ரூ. 122-ம் சராசரி விலையாக இருப்பதைக் காணலாம். பொது வாக விலைவாசி குறியீட்டெண்கள் அமைக்கப்படும்போது, தள ஆண்டில் நிலவிய விலைகளுக்கு 100 என்ற எண்ணைக் கொடுத்து, அதிலிருந்து பிற ஆண்டுகளின் விலைவாசிகளின் ஏற்ற இறக் கத்தைக் கணக்கிட்டு அறிதலாகும். நமது அட்டவணைப்படி ஆண்டு '0'க்கு உள்ள கூட்டுத்தொகை ரூ. 655க்கு குறியீட்டெண் 100 என்று கொடுக்கப்பட்டால், ஆண்டு '1'ன் கூட்டுத்தொகை ரூ. 610க்கு குறியீட்டெண் 93·13 ஆகும். இது வாய்பாடு (Formula) மூலம் கணக்கிடப்படுகிறது;

$$\text{குறியீட்டெண் } P = \frac{\Sigma P_1}{\Sigma P_0} \times 100$$

P_1 என்பது ஆண்டு '1'ன் ஒரு பொருளின் விலையாகும்.

P_0 என்பது ஆண்டு '0'ன் ஒரு பொருளின் விலையாகும்.

Σ என்பது 'கூட்டுத் தொகை' (Sum of) ஆகும்.

ஆண்டு '1'ல் குறியீட்டெண் 93·13-ஐத்தான் காட்டுகிறது. அதாவது பொருள்களின் விலை, முந்திய ஆண்டை ஒப்பிட்டுப் பார்க்கும் போது, குறைந்திருக்கிறது என்று பொருள்படும். ஆனால் உண்மையில் பார்த்தால் வானெலிப் பெட்டியைத் தவிர எல்லாப் பொருள்களின் விலைகளும் உயர்ந்துதான் இருக்கின்றன. பெரும்பாலான மக்கள் ஒரு ஆண்டில், ஏனைய பொருள்களை ஒப்பிட்டுப் பார்க்கும் போது, வானெலிப் பெட்டியைக் குறைந்த அளவுக்குத்தான் வாங்குவார்கள். இதனால் நுகர்வோர் பெரும் பாலோர் வாழ்க்கைக்கு இன்றியமையாத பொருள்களுக்குக் கூடுதலாகத்தான் செலவு செய்ய வேண்டி வரும். ஆனால் குறியீட்டெண்ணைப் பார்த்தால் அது குறைவாகக் காட்டுகிறது. அதாவது, எல்லாப் பொருள்களையும் சேர்த்துக் கூட்டிச் சராசரி எடுத்துக் கணக்கிடுவது நிறைவு தருவதாகத் தெரியவில்லை. அப்படிக் கணக்கிடப்பட்ட குறியீட்டெண்கள் "நிறையிடாத குறியீட்டெண்" (Unweighted index Number) எனப்படும். அத் தவறு ஏற்படுவதற்கு முக்கிய காரணம் நாம் எடுத்துக் கொண்டு அளவிடும் பொருளின் 'அலகுகளின் நிறையைப்' (units of measurement) பொறுத்து இருக்கிறது. நமது அட்டவணையில் ஆட்டிறைச்சியை 'கிலோ கிராமில்' விலையை நிர்ணயம் செய் துள்ளோம். அப்படி அல்லாமல் 'மெட்ரிக் டன்னில்' (Matric Tonne) அளந்து கணக்கிட்டால் ஆண்டு '0'க்கு ரூ. 4000-ம், ஆண்டு '1'க்கு ரூ. 8500-ம் கிடைக்கும். அதே தொகையை

(விலையை) வைத்து எல்லாப் பொருள்களின் விலையையும் கூட்டிப் பார்த்தால் ஆண்டு '0'க்கு ரூ. 4651-ம், ஆண்டு '1'க்கு ரூ. 9101½-ம் கிடைக்கும். இத் தொகைகளைக் கொண்டு குறியீட்டெண் தயாரித்தால் ஆண்டு '0'க்கு 100-ம், ஆண்டு '1'க்கு 195·7-ம் கிடைக்கும். இக் கணக்குப்படி பார்த்தால், பொருள்களின் விலை உயர்ந்திருக்கின்றது என்பதைக் குறியீட்டு எண் காட்டுகிறது. அதாவது, முதலில் காட்டியதற்கும், இப்போது காட்டியதற்கும் முற்றிலும் வேறுபாடு இருக்கிறது. இதிலிருந்து தெரிவதென்னவென்றால், கொடுக்கப்பட்ட பொருளின் அலகுகள் மாறினால் (change in units) குறியீட்டெண்ணின் மதிப்பும் மாறுகிறது. அவ்வாறு மாறினால் பணத்தின் உண்மையான மதிப்பு கண்டு பிடிக்கப்பட முடியாது.

வேறொரு முறைப்படியும் குறியீட்டெண் அமைக்கப்படுகிறது. இம்முறையில் பண்டங்களை அளவிடும் அலகுகள் தேர்ந்தெடுத்தல் தவிர்க்கப்படுகிறது; ஒவ்வொரு பண்டத்தின் விலையும் சதவீதத்தில் (percentage) கணக்கிடப்பட்டு, தள ஆண்டின் விலையிலிருந்து ஒப்பிடப்படுகிறது. இதனுடைய வாய்பாடு கீழ்வருமாறு:-

$$\text{குறியீட்டெண் } P = \frac{\Sigma \left(\frac{P_1}{P_0}\right)(100)}{N}$$

'N' என்பது பண்டங்களின் எண்ணிக்கையாகும்.

இந்த வாய்பாட்டின்படி நாம் எடுத்துக் கொண்ட பொருள்களுக்குக் கீழ்க்கண்டபடி அட்டவணை தயாரிக்கலாம் :—

விலைகளின் தாரம்பிரியம் : (Relative prices)

பொருள்கள்	ஆண்டு '0'	ஆண்டு '1'
ஆட்டிறைச்சி	100	213
பால்	100	150
அங்கி	100	175
வாடகை	100	150
வாஞெலிப் பெட்டி	100	70
ஆகக் கூடுதல்	500	758

சராசரி விலையைக் கண்டு பிடித்தால் ஆண்டு '0'க்கு 100-ம் ஆண்டு '1'க்கு $\left(\frac{758}{5}\right)$ 151.6-ம் கிடைக்கிறது. அதாவது,

சராசரியாக 5 பொருள்களும் 52 சதவீதம் விலை கூடுதலாகி இருக்கிறது. இம் முறை மற்றுமொரு 'நிறையிடாத குறியீட்டெண்' முறையாகும். இந்த முறையில் ஒவ்வொரு பண்டத்திற்கும் சமமான முக்கியத்துவம்கொடுத்துக் குறியீட்டு எண்தயாரித்திருந்தாலும் (ஒருவரின் வாழ்க்கைச் செலவு குறியீட்டு எண்) மக்கள் ஒவ்வொருவரும் தனித்தனியே அவரவர் விருப்பத்திற்கேற்ப ஒவ்வொரு பொருளுக்கும் முக்கியத்துவம் கொடுப்பதால் குறியீட்டு எண் உண்மை மதிப்பை வெளிப்படுத்தாது.

நிறையிட்ட குறியீட்டெண் (Weighted Index Number)

மேற்கூறிய இரண்டு முறைகளிலும் நிறைவு (satisfaction) காண முடியாததால், பண்டங்களுக்கு 'நிறை' காண (weight) வேண்டியிருக்கிறது. பொதுவாக மக்கள் எந்த அளவுக்கு ஒவ்வொரு பொருளுக்கும் தள ஆண்டில் மொத்தமாகச் செலவு செய்கிறார்களோ அதன் அடிப்படையில் நிறை இடுதல் வழக்கமாகும். எடுத்துக்காட்டாக, ஆட்டிறைச்சிக்கு 15%ம், பாலுக்கு 10%ம், உடையங்கிக்கு 25%ம், வாடகைக்கு 45%ம், வானெலிப் பெட்டிக்கு 5%ம் அளிப்பதாக வைத்துக் கொள்வோம். பின், குறியீட்டெண் கீழ்க்கண்ட வாய்பாடு மூலம் கணக்கிடப்படுகிறது. அதாவது "லாஸ்பியரின் குறியீடு" (Laspeyres Index):-

$$\text{குறியீட்டெண் } P = \frac{\Sigma P_1 Q_0 \times 100}{\Sigma P_0 Q_0}$$

'Q_0' என்பது தள ஆண்டின் 'நிறை' ஆகும். 'Q' என்பது 'அளவு' (Quantity) ஆகும். இந்த வாய்பாட்டின்படி நிறையிட்ட குறியீட்டெண் கீழேயுள்ள அட்டவணையின் வாயிலாகக் கணக்கிடப்படுகிறது.

நுகர்வோர் விலைவாசிக் குறியீடு தயாரித்தல்

(தள ஆண்டின் நிறைகள்)

பொருள்கள்	ஆண்டு '1' விலை (ஆண்டு '0'வின் சதவீதம்)	நிறை	ஆண்டு 1 விலை × நிறை
ஆட்டிறைச்சி	213	15%	32·0
பால்	150	10%	15·0
அங்கி	175	25%	43·8
வாடகை	150	45%	67·5
வானெலிப் பெட்டி ...	70	5%	3·5
ஆகக்கூடுதல்	758	100	161·8

ஆண்டு '1'ல் கிடைக்கப் பெற்ற 'நிறையிடாத குறியீட்டெண்'ணையும் 'நிறையிட்ட குறியீட்டெண்'ணையும் ஒப்பிட்டுப் பார்ப்பது இன்றியமையாததாகும். முன்னதின் எண் 151·6-ம், பின்னதின் எண் 161·8-ம் ஆகும். இந்த வேறுபாட்டிற்குக் காரணம் என்ன? மேலும், எது சிறந்தது? இந்த வேறுபாடு விலை மாறுதல்களால் ஏற்பட்டவில்லை என்பது நன்கு புலனாகும். நிறை இடுதல் முறைதான் இவ்வேறுபாட்டிற்கு முக்கிய காரணம். நிறையிடா குறியீட்டெண் தயாரிக்கும்போது எல்லாப் பண்டங்களுக்கும் சமமான மதிப்பு கொடுக்கப்பட்டது. ஆனால் நிறையிட்ட குறியீட்டெண் தயாரிக்கும் போது வாடகைக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து வானொலிப் பெட்டிக்குக் குறைந்த முக்கியத்துவம் அளிக்கப்பட்டது. இப்படிப் பொருளின் அவசியத்திற்கேற்றபடி நிறை அளிக்கப்பட்டுக் குறியீட்டெண் தயாரிக்கப்பட்டது. இதுவரை நாம் தயாரித்த அட்டவணையில் தள ஆண்டின் நிறையை கணக்கெடுத்துக் குறியீட்டெண் அமைத்தோம். இனி மேல் அண்மை ஆண்டின் (Latest year) நிறையைக் கணக்கிட்டு எவ்வாறு நிறையிட்ட குறியீட்டெண் தயாரிப்பதென்று பார்ப்போம். இதற்கு வாய்பாடு கீழே கொடுக்கப்பட்டுள்ளது. அதாவது பாஷ்சி குறியீடு (Paasche Index) :—

$$\text{குறியீட்டெண் } P = \frac{\Sigma P_1 Q_1 \times 100}{\Sigma P_0 Q_1}$$

அண்மை ஆண்டின் (latest year) பொருள்களுக்கு அளிக்கப்படும் நிறை தள ஆண்டைவிட பெரும்பாலும் மாறித்தான் இருக்கும். ஏனென்றால் மக்களுடைய பழக்க வழக்கம், விருப்பம், வருமானம் முதலியவை மாறி இருக்கும். எடுத்துக் காட்டாக நாம் எடுத்துக் கொண்ட பொருள்களுக்கு (சதவீத) நிறை இவ்வாறு அளிக்கலாம்.

நுகர்வோர் விலை வாசி குறியீடு தயாரித்தல்

அண்மை ஆண்டு நிறைகள்

பண்டங்கள்	ஆண்டு 1 விலை (ஆண்டு 0ன் சதவீதம்)	நிறை	ஆண்டு 1 விலை × நிறை
ஆட்டிறைச்சி	213	25%	53·0
பால்	150	5%	7 5
அங்கி	175	25%	43·8
வாடகை	150	35%	52·5
வானொலிப் பெட்டி ...	70	10%	7·0
ஆகக் கூடுதல்	758	100	163·8

அண்மை ஆண்டு அடிப்படையின் பேரில் கணக்கிடப்பட்ட குறியீட்டெண்ணுக்கும், தள ஆண்டு அடிப்படையின் பேரில் கணக்கிடப்பட்ட குறியீட்டெண்ணுக்கும் வேறுபாடு இருக்கிறது. இந்த வேறுபாடு வராமல் இருப்பதைத் தடுப்பதென்பது முடியாத செயலாகும். பொருள்களுக்கு முக்கியத்துவம் கொடுப்பது என்பது ஆண்டுக்காண்டு மனிதன் வாழ்க்கைத்தரத்திற்கு ஏற்றவாறு மாறிக் கொண்டே போகும். ஒரே நிலையான நிறையைக் கொடுத்து வந்தால் குறியீட்டெண் சரியான நிலையை விளக்கும். பணத்தின் மதிப்பு நன்கு கணக்கிடப்படும்.

இவ்வேறுபாடுகளை நீக்குவதற்காக 'இர்விங்:பிஷர்' (Irwing Fisher) ஒரு நல்ல வழியைக் கூறியிருக்கிறார். அதாவது, லாஸ்பியரின் முறைப்படி தயாரித்த குறியீட்டெண்ணையும், பாஷ்சி முறைப்படி தயாரித்த குறியீட்டடெண்ணையும் சேர்த்து சராசரி கண்டு பிடித்தலாகும். இந்தக் குறியீட்டெண்ணுக்கு ':பிஷரின் நிறைவுக் குறியீட்டெண்' (Fisher's Ideal Index Number) எனப் பெயர். அதன் வாய்பாடு:

$$P = \sqrt{\frac{\Sigma P^1 Q_0}{\Sigma P_0 Q_0} \times \frac{\Sigma P_1 Q_1}{\Sigma P_0 Q_1}} \times 100$$

மேலும் :பிஷர் குறியீட்டெண் தயாரிப்பதற்கு எத்தனை பொருட்கள் கணக்குக்கெடுக்கப்பட வேண்டும் என்று கூறுகிறார். இருபது பண்டங்களுக்குக் குறைவாக எடுத்துத் தயாரிக்கப்பட்ட குறியீட்டெண்கள் அவ்வளவாகப் பயன் தராது; 50 பண்டங்களின் விலை வாசிகளைக் சேகரித்துக் குறியீட்டெண் தயாரித்தல் மிகவும் சிறப்பானது. 50லிருந்து 200 பண்டங்களின் விலைவாசிகளை எடுத்துத் தயாரித்தால் நல்ல குறியீட்டெண் கிடைக்கும். 200 பொருள்களுக்கு மேல் கணக்கிடப்பட்டால் கிடைக்கும் குறியீட்டெண் நாம் விலைவாசி புள்ளி விவரம் சேகரிக்க எடுத்துக் கொண்ட உழைப்புக்கும், செலவு செய்த தொகைக்கும் ஈடு கட்டுமா என்பதே ஐயப்பாடாகும்.[2]

இதுவரை, குறியீட்டெண்கள் தயாரிக்கப்படும் பல முறைகளைப் பற்றிப் பார்த்தோம். எந்த முறையை எடுத்துக் கொண்டாலும் சரியான குறியீட்டு எண்ணை எந்த வல்லுநரும் தயாரித்ததாகத் தெரியவில்லை எனக் கீன்ஸ் 1930-ல் கூறியிருக்கிறார். அதன் காரணங்களை ஆங்காங்கே பற்பல இடங்களில் விளக்கியிருக்கிறோம். இருப்பினும் கீழ்க்கண்டபடி குறியீட்டு எண் தயாரிப்பதில் உள்ள சிக்கல்களைத் தெளிவாகச் சுருங்கக் கூறலாம்.

[2]. Irving Fisher — The Making of Index Number, P, 340

குறியீட்டெண் தயாரிப்பதிலுள்ள சிக்கல்கள்:

(1) சரியற்ற புள்ளி விவரம்:— தேவையான மற்றும் துல்லியமான குறியீட்டெண் அமைக்கப்பட வேண்டுமானால் பொருள்களின் விலைவாசி பற்றிய புள்ளி விவரம் சேகரிக்கப்பட வேண்டும். அப்படிச் சேகரித்து ஒன்று சேர்த்து ஒழுங்கு படுத்த (merging) மிகுதியான அளவு செலவு செய்ய வேண்டும். இது நடைமுறையிலுள்ள முதலாவது சிக்கலாகும். ஒழுங்கான சந்தைகளிலிருந்து (Regulated markets) பண்டங்களின் விலைவாசிகளின் பட்டியலை வெகு சுலபமாகப் பெற முடியும்; ஆனால் ஒழுங்கற்ற சிறிய சந்தைகளிலிருந்து திருப்திகரமான அளவுக்கு விலைவாசிகளின் புள்ளிவிவரம் அடைவது மிகவும் கடினம். இவ்வளவு இன்னல்களுக்கிடையில் சேகரிக்கப்பட்ட புள்ளி விவரம் நிறை குறையாகவும் அல்லது தவருகவும் இருப்பதற்கு வாய்ப்புகள் உண்டு. இருந்தாலும், மிகுதியான பண்டங்கள் கணக்குக்கெடுக்கப்படுவதால், இக்குறைகளைப் புறக்கணிக்கலாம்.

(2) நிறையிடுதல் (Weighting): இரண்டாவது சிக்கல் மக்கள் எந்த அளவுக்குப் பொருள்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கிறார்கள் என்பது. ஒரு பொருளின் விலை மாற்றத்தால் (கூடுதல் விலை) ஒரு குடும்பத்தைவிட மற்றொரு குடும்பம் மிகவும் பாதிக்கப்படலாம். ஒரு தொகுப்புப் பொருள்கள் ஒரு குடும்பத்திற்கு இன்றியமையாததாகும். ஆனால் அதே பொருள்கள் வேறொரு குடும்பத்திற்குச் சாதாரணத் தேவையாகும். அப் பொருள்களின் விலை மாற்றத்தால் முன்னது குடும்பம் சிரமத்துக் குள்ளாகும். எனவே ஒரு நிலையான அடிப்படையில் பொருள்களுக்கு நிறையிடுதல் என்பது மிகவும் சிக்கலான பிரச்சினையாகும். எடுத்துக்காட்டாக, சிகரெட் தொடர்ச்சியாகப் பயன் படுத்தும் ஒருவனுக்கும் சிகரெட் பழக்கமே இல்லாத மற்றொருவனுக்கும், சிகரெட் விலை ஏற்றம் எந்த அளவுக்கு இருவருடைய வாழ்க்கைச் செலவில் பங்கு கொள்கிறது என்பது நன்கு விளங்கும். பின்னவனுக்கு எவ்வளவுதான் விலை ஏறினாலும் அதைப்பற்றிக் கவலையேயில்லை. எனவே, அவனைப் பொறுத்த வரைக்கும் அவன் அதற்கு எந்தவித நிறையும் கொடுக்க மாட்டான். மேலும் சாதாரணத் தொழிலாளர் குடும்பத்தின் விருப்பு வெறுப்புக்கும், நடுத்தரக் குடும்பத்தின் விருப்பு வெறுப்புக்கும் நிறைய வேறுபாடு தென்படும். இரண்டுக்கும் பொதுவாக 'வாழ்க்கைச் செலவு குறியீட்டு எண்' தயாரித்தால் சரியான எண் கிடைக்காது.

பத்து ஆண்டுகளுக்கு முன் எந்தப் பொருள்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து வந்தோமோ, அதே பொருள்களுக்கு

தற்போது, நாகரிக முன்னேற்றத்தாலோ, வாழ்க்கைத் தர முன்னேற்றத்தாலோ, மாற்றுப் பொருள் கண்டு பிடிப்புகளாலோ (Substitutes) அவ்வளவு முக்கியத்துவம் கொடுப்பது இல்லை. இதனால் காலத்திற்கேற்றாற் போல் தள ஆண்டையும் மாற்ற வேண்டியிருக்கும். எடுத்துக் காட்டாக, 1914-ஆம் ஆண்டின் விலைவாசிகளை அடிப்படையாகக் கொண்டு 1922-ஆம் ஆண்டுக்குரிய வாழ்க்கைச் செலவு குறியீட்டெண் பம்பாய் அரசு தொழில் துறை (Department of labour) யால் தயாரிக்கப்பட்டுப் பின் 1930-ல் வழக் கொழிவு செய்யப்பட்டுப் புதிதாக ஒரு வாழ்க்கைச் செலவு குறியீட்டெண் தயாரிக்கப்பட்டது.[5] தற்போது தயாரித்துள்ள அதே குறியீட்டெண் (1960—தள ஆண்டு) 1930-ல் தயாரிக்கப்பட்டதை விட முற்றிலும் மாறுபட்டதாகும். நுகர்வோரின் செயல்முறைகளும், வாழ்க்கைத் தரமும் மாறுவதால் 'நிறை இடுதல்' கடினமான பிரச்சினையாக விளங்குகிறது.

(3) ஈடுசெய் பொருள்களும் புதிய பொருள்களும் :—

சுமார் 50 ஆண்டுகளுக்கு முன் உபயோகப்படுத்தப்பட்ட பொருள்களுக்கும் தற்போது உள்ள அதே வகைப் பொருள்களுக்கும் தரத்திலும், அழகிலும், அளவிலும் எவ்வளவோ வேறுபாடு இருக்கிறது. எடுத்துக்காட்டாக, மோட்டார், பேருந்து, மோட்டார் கார், சைக்கிள், வானொலிப் பெட்டி போன்ற பொருள்கள். 1920-ஆம் ஆண்டின் மோட்டார் கார், சைக்கிள், வானொலிப் பெட்டி ஆகியவைகளுக்கும் 1974-ம் ஆண்டில் உள்ளவைகளுக்கும் எத்தனையோ மடங்கு வேறுபாடு காண முடிகிறது. அந்தக் காலத்தில் (1920-ல்) கையாளப்படாத சில பொருள்கள் தற்போது கண்டுபிடிக்கப்பட்டுக் கையாளப்படுகின்றன. உதாரணத்திற்கு, டிரான்சிஸ்டர், தொலைக்காட்சி (Television), டெரிலின் துணி, மின் தூணைக் கொண்டு இயங்கும் டார்ச் விளக்கு போன்றவை. எனவே, தற்போது குறியீட்டெண் தயாரிக்கும் போது அதிக வழக்கிலில்லாத பொருள்களை நீக்கி விட்டு வழக்கிலிருக்கும் (பெரும்பாலான மக்கள் உபயோகிக்கும்) பொருள்களைச் சேர்க்க வேண்டும். இவ்வளவு சிக்கல்களும் குறியீட்டெண் தயாரிக்கும் போது உள்ளன.

(4) தள ஆண்டு : தள ஆண்டு தேர்ந்தெடுத்தல் எவ்வாறு இருக்க வேண்டும் என முன்னமே பார்த்தோம். அதாவது அவ்வாண்டு, முடிந்த வரை அருகிலுள்ளதாக இருத்தல் வேண்டும்; செழிப்போ (சாதாரணமாக இருப்பதை விடக் கூடுதல்), பஞ்சத்தால் பீடிக்கப்பட்ட ஆண்டாகவோ, போர்க் காலம் அல்லது போர் ஓய்வுற்ற மறு ஆண்டாகவோ இருத்தல்

[5]. M. C. Vaish — Monetary Theory — P. 90.

கூடாது. இதற்கு மாறான ஆண்டைத் தேர்ந்தெடுத்தால் ஒப்பு செய் ஆண்டிலுள்ள விலை மாற்றங்களை நன்கு கணிக்க முடியாது. இப்படியாகப் பல நிபந்தனைக்குட்பட்டு ஒரு சாதாரண ஆண்டைத் தள ஆண்டாகக் கணிப்பது ஒரு சிக்கலான பிரச்சினையாகும்.

(5) கணக்கிடும் போதுள்ள நுட்ப சிக்கல்கள் :
(Technical difficulties)

குறியீட்டு எண் தயாரிக்கும் போது சில கணிதப் பிரச்சினைகள் எழும் (Mathematical problems). அதாவது அருகிலுள்ள ஆண்டைத் தளமாகக் கொண்டு நடப்பு ஆண்டிலுள்ள விலைவாசிக்கான குறியீட்டெண் தயாரித்தால் ஒரு எண் வரும். அதே விலை வாசிகளைக் கொண்டு நடப்பு ஆண்டைத் தள ஆண்டாகவும், தள ஆண்டை நடப்பு ஆண்டாகவும் கொண்டால், முன்னதில் எத்தனை சதவீதம் கூடுதலாகக் காணப்பட்டதோ அதே சதவீதம் குறைவாகிப் பின்னதில் காணப்படுவதில்லை. இதுதான் ஒரு நுட்பப் பிரச்சினையாகும். எடுத்துக்காட்டாக, 1960 தள ஆண்டில் குறியீட்டு எண் 100 எனவும், 1970-ல் குறியீட்டெண் 150 எனவும் கொள்வோம். அதாவது, 1960-ம் ஆண்டை ஒப்பிட்டு நோக்கும் போது 1970-ல் விலைவாசி 50% கூடுதலாயிருக்கிறது எனப் பொருள். இதே வாய்பாட்டைத் திருப்பிப் போட்டால் (Reversal Test), அதாவது, 1970-ஆண்டைத் தள ஆண்டாகவும் 1960-ஆம் ஆண்டை நடப்பு ஆண்டாகவும் கொண்டால், கிடைக்கும் குறியீட்டெண் 66.7 ஆகும். இந்தக் கணக்குப்படி 33·3% தான் விலைவாசி குறைந்திருக்கிறது. ஏன் ? 50% அல்லவா குறைந்திருக்க வேண்டும் ? அப்படிக் குறையவில்லை. இது ஒரு கணிதப் பிரச்சினையாகும். அதைப் பற்றி நாம் இங்கு ஆய்வு செய்ய வேண்டியதில்லை.

மேற் கூறிய சிக்கல்களும், இடர்ப்பாடுகளும் ஓரளவுக்கு நீக்கப்படுகின்றன. எடுத்துக்காட்டாக, ஆல்ஃப்ரட் மார்ஷலின் 'தொடர் குறியீட்டெண்' (Chain Index Number) படி, வழக் கொழிவுற்ற பொருள்கள் அவ்வப்போது பட்டியலிலிருந்து நீக்கப் பட்டுப் புதிதாகப் புகுத்தப்பட்ட பொருள்கள் பட்டியலில் சேர்க் கப்படுகின்றன. மேலும் தள ஆண்டை நடப்பு ஆண்டாகவும், நடப்பு ஆண்டைத் தள ஆண்டாகவும் அவ் வப்போது மாற்றிப் போட்டு (Reversal Tests), எழும் பிழைகளும், தவறுகளும் சரி செய்யப்படுகின்றன. பின்னர்தான் ஒரு 'நிறைவுக் குறியீட் டெண்' (Ideal Index Number) தயாரிக்கப்படுகிறது.

குறியீட்டெண் தயாரிப்பதில் எவ்வளவுதான் இடர்ப்பாடுகளும் தவறுகளும் இருந்தாலும், குறியீட்டெண் ஒரு நாட்டின் பொரு

ளியல் அரசியல் விவகாரங்களுக்கு ஒரு முதுகெலும்பு போல் ஆகும். அதன் பயன்களைக் கீழே விவரித்து விளக்கலாம் :—

குறியீட்டெண்களின் பயன்கள் :

(1) பண மதிப்பு மாற்றத்தை அளவிடுதல் : — கட்டுக்கோப்பான பொருளாதாரத்தை ஒரு நாடு கொள்ள வேண்டுமென்றால் பண மதிப்பு மாற்றம் ஓர் அளவுக்கு மேல் அல்லது கீழ் போகக் கூடாது. பண மதிப்பு உயர்ந்துள்ளதா அல்லது குறைந்துள்ளதா என எவ்வாறு அறிவது ? அதுதான் பண்டங்களின் விலைவாசி களைக் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ள குறியீட்டெண் ஆகும். குறியீட்டெண் எவ்வாறு அமைக்கப்பட வேண்டும் என முன்னமே பார்த்துள்ளோம். விலை உயர்ந்திருந்தால் பணத்தின் மதிப்பு குறைந்துள்ளதென்றும், விலை குறைந்தால் பண மதிப்பு உயர்ந் திருக்கிறது என்றும் கண்டோம்.

(2) ஊழியர், அலுவலர் சம்பளம் நிர்ணயிக்கப்படுதல் :

வாழ்க்கைச் செலவு குறியீட்டெண் நுகர்ச்சிப் பொருள்களைக் கொண்டு (அவசியப் பொருள்கள்) தயாரிக்கப்படுவதால், அதன் எண் உயர்வதைக் கணக்கெடுத்து அலுவலர், தொழிலாளர் முதலானோர்க்குச் சம்பள உயர்வு அரசாலும், வேலை கொடுப் போராலும் அளிக்கப்படுகிறது.

(3) இரண்டு செலாவணிகளின் வாங்குந்திறன் சமநிலை ஒப்பிடுதல் : (Comparing of purchasing power of two Currencies)

இரு நாடுகளின் விலைவாசி குறியீட்டெண்களின் அடிப் படையில், 'நாணய மாற்று வீதம்' (Exchange Rate) நிர்ண யிக்கப்பட்டுப் பன்னாட்டு வியாபாரம் மற்றும் பல நடவடிக்கைகள் நடைபெறுகின்றன.

(4) சமூக மற்றும் பொருளியல் இயல்புகளைப் பற்றி அறிதல் :—

ஒவ்வொரு பிரிவுக்கும் தனித் தனியே குறியீட்டெண்கள் தயாரிக்கப்படுவதால் நாட்டில் வரவு—செலவுத் திட்டம் போடும் போது எந்தவித பேதமின்றி ஒவ்வொரு துறைக்கும் தேவையான அளவுக்கு நிதி ஒதுக்கீடு செய்ய முடிகிறது. 'தேவையான அளவு' எனக் கூறும்போது குறியீட்டெண்ணைக் கண்ணுற்று நிதி ஒதுக்கி முதலீடோ, செலவோ செய்யப்படுகிறது. ஒரு நாட்டின் மக்கள் தொகை அளவுக்கு மேல் சென்றுள்ளதா அல்லது அள வுக்குக் குறைவாக உள்ளதா என அறிய, இரண்டு ஆண்டுகளைத் தேர்ந்தெடுத்து—தள ஆண்டு, நடப்பு ஆண்டு—குறியீட்டெண்

அமைக்கப்படுகிறது. இதே போல்தான் அரசு வரி விதிக்கும் போது, பொருள்களுக்கும், வருமானங்களுக்கும், குறியீட்டெண்ணைக் கணக்கில் கொண்டு வந்து நீண்ட ஆய்வுக்குப் பின் தேவையான தாங்கும் அளவுக்கு வரி இடப்படுகிறது. நமது நாட்டில் ஐந்தாண்டுத் திட்டத்தால் பெற்ற நன்மைகளை அளந்தறிய குறியீட்டெண்கள் பெரிதும் தேவைப்படுகின்றன.

6. பணத்தின் மதிப்பு (தொடர்ச்சி...)


பண அளவுக் கோட்பாடு. (Quantity Theory of Money)

சென்ற அத்தியாயத்தில் பண மதிப்பின் மாற்றத்தை ஒரு ஆண்டிலிருந்து மற்றொரு ஆண்டுக்கு ஒப்பிட்டுக் குறியீட்டெண்கள் உதவியால் கணக்கிட்டோம். பணத்தின் மதிப்பு எந்த அளவுக்கு மாறியுள்ளது என்று தான் பார்த்தோமே தவிர மதிப்பு மாறுவதற்குரிய காரணங்களை ஆய்ந்து அறியவில்லை. அதன் காரணங்களில் ஒன்றான 'சரக்கு நடவடிக்கைகளின் ஆய்வு நோக்கத்தை' (Transactions approach) அதாவது, பண்ட மாற்றுச் சமன்பாட்டை (Equation of Exchange) இவ் வத்தியாயத்தில் காண்போம். பண அளவுக் கோட்பாடு, பண மதிப்பு மாறுவதற்குரிய காரணங்களையும், பொது விலை மட்டம் (General Price Level) நிர்ணயிக்கப்படும் விதத்தையும் விளக்குகின்றது.

பொருளின் உற்பத்தி கூடுதலானால் விலை தானாகவே குறைகிறது; எல்லோரும் மலிவாக வாங்கலாம். இதே போல் உற்பத்தி குறைந்தால் விலை உயர்கிறது. பொதுவாகக் கூறின், ஒரு பொருளின் மொத்த அளிப்பு அளவும் அதனுடைய மதிப்பும் எதிர் வீதத்தில் மாறுகின்றன. இதே போல், பணத்தின் அளிப்பும் கூடுதலானால் அதன் மதிப்பு குறைகிறது, வாங்கும் திறன் குறைகிறது; அளிப்பு குறைந்தால் மதிப்பு கூடுகிறது; வாங்குந்திறன் கூடுகிறது. இதன் தத்துவம்தான் பண அளவுக் கோட்பாடாகும். "ஏனைய காரணிகள் மாறுமலிருந்தால், பணத்தின் அளவு கூடுதலானால் பொருள்களின் விலை உயர்கிறது; பணத்தின் அளவு குறைந்தால் பொருள்களின் விலை குறைகிறது."

பண அளவுக் கோட்பாட்டின் ஆரம்ப காலத்தை ஆய்வு செய்து பார்த்தால் எந்த ஆண்டில் அது உருவெடுத்தது என்றே புலப்படவில்லை எனப் பொருளியல் வல்லுநர்கள் கூறுகின்றனர். இருந்தாலும் 16-ம் நூற்றாண்டு காலத்தில் பணத்தின் மதிப்பை

யும், பொது விலை மட்டத்தையும் இணைத்துக்கோட்பாடுகள் எழுதப் பட்டிருப்பதாக ஆய்வு செய்யப்பட்டிருக்கிறது. பதினாறும் நூற் றாண்டில் புதிய நாடுகளிலிருந்து (New World) பழைய நாடு களுக்கு (Old world) முதன் முதலில் கூடுதலான அளவுக்கு வெள்ளி முதன்மையான செலாவணி நாணயம் கொண்டுவரப் பட்ட பின் தான் பணத்தின் மதிப்பு பற்றிய பிரச்சினை ஆரம்ப மாயிற்று எனப் போடின் (Bodin) கூறுகிறார். மேற்கு ஐரோப் பாவில் பல நாடுகள் தங்களிடம் கூடுதலான பணம் இருப்பதை அப்போதுதான் உணர்ந்தன. பொருள்களின் விலை உயரவும் செய்தன.[1] எனவே, ஆரம்ப கால பண அளவுக் கோட்பாடு (Crude Version of quantity Theory) முதன் முதலாக உருவா யிற்று. இதன்படி பொது விலை மட்டம், பண அளவு மாறு வதற்கு நேர் வீதத்தில் மாறுகிறது என்பது விதியாகும். அதாவது பண அளவில் 25 சதவீதம் கூடுதலானால் விலை வாசியிலும் 25 சதம் கூடும். அல்லது பண அளவு இரு மடங் கானால் விலைவாசியும் இரு மடங்காகும் என்பதாகும். இதை ஒரு வரை படம் மூலம் விளக்கலாம்.



'X' அச்சில் பணத்தின் அளவும் 'Y' அச்சில் விலை மட்டமும் குறிக்கப்படுகின்றன. பணத்தின் அளவு 'OM' ஆக இருக்கும் போது, விலை 'OP' ஆக இருக்கிறது. பணத்தின் அளவு ஒரு குறிப்பிட்ட சதவீதம் உயர்ந்தால் (அதாவது 'M' லிருந்து 'M¹' க்கு $\frac{MM^1}{OM} \times 100$) விலைவாசியும் அதே சம வீதத்தில் உயரு கிறது (அதாவது 'P' யிலிருந்து P^1 க்கு $\frac{PP^1}{OP} \times 100$) பண அள

[1] J. L. Hanson Monetary Theory and Practice (1965) P. 189

வுக் கோட்பாட்டை உறுதிப்படுத்துவது என்ன வென்ருல், விலை மட்டத்தின் பண நெகிழ்ச்சி (Money elasticity of Price level) எப்போதும் நேர் (Positive) என்பதாகும். அதாவது பூஜ்யத்தை விடப் பெரியது (Greater than zero) எனவே பழைய (ஆரம்ப நிலை) பண அளவுக் கோட்பாட்டின்படி பொது விலைமட்டம், பண அளவு மாற்றத்திற்கு நேர்வீதத்தில் மாறுகிறது என்பது புலப்படும்.

நடவடிக்கைகள் கோட்பாடு (Transactions Theory)

நடவடிக்கைகள் கோட்பாடு மிகவும் பழைமையானது என்ருலும், அதற்கு முக்கியத்துவம் அமெரிக்க ஐக்கிய நாடுகளில் தான் கொடுக்கப்பட்டது. மேலும் அக் கோட்பாடு சிறப்படையச் செய்த பெருமை பேராசிரியர்கள் இர்விங் ∴பிஷரையும், எட்வின் டபிள்யூ கெம்மரரையும் (Edwin W. Kemmerer) தான் சாரும்[2] பேரக் கோட்பாடு வல்லுநர்களின் (Transacation Theorists) கூற்றுப்படி பணத்தின் மதிப்பு, பண்டங்களை மதிப்பிடுவது போல் பணத்தேவையையும், அளிப்பையும் சார்ந்து இருக்கிறது என்பதாகும். எப்படி ஒரு பொருளின் விலை, சந்தையில் அதன் தேவைக்கும் அளிப்புக்கும் ஏற்ருற்போல் நிர்ணயிக்கப்படுகிறதோ அப்படியே, ஒரு குறிப்பிட்ட காலத்தில் பணத்தின் மொத்த அளிப்பு அளவையும், மகளின் தேவையையும் பொறுத்துப் பணத்தின் மதிப்பு நிர்ணயிக்கப்படுகிறது. பணத்தின் அளிப்பு அளவை ஆய்வு செய்து நோக்கின், ஒரு குறிப்பிட்ட காலத்தில் சராசரியாக எவ்வளவு பணம் இருந்தது என்றும், அவற்றின் சராசரி சுழல்வேகம் (Velocity) என்ன வென்றும் கண்டு பிடிக்கப்பட வேண்டும். பணத்திற்காக விற்கப்படும் பொருள்கள், செய்யப்படும் பணிகள், சொத்துரிமை மாற்றம் செய்தல் போன்ற நடவடிக்கைகள் பணத்தின் தேவையை விளக்குகின்றன. எனவே நடவடிக்கைகள் கோட்பாடு வல்லுநர்களின்படி, பணத்தின் மதிப்பு அல்லது விலை மட்டம் மூன்று காரணிகளைக் கொண்டு நிர்ணயிக்கப்படுகின்றன என அறியலாம். அவையாவன: (1) இருக்கக்கூடிய சராசரி பணத்தின் மொத்த அளவு (2) அதனுடைய சராசரி சுழல்வேகம், மற்றும் (3) வாணிப அளவு அதாவது பணத்தின் தேவை இவைகளைப்பற்றித் தனித்தனியே பிறகு விவரிக்கலாம்.

இக் காரணிகளின் மூலம் அறிவதென்ன வென்ருல் பணத்தின் அளவு மாற்றம் நேரடியாகப் பண்டங்களின் விலை மாற்றத்திற்குக் காரணமாக அமைவதில்லை. பணப்பெருக்கம் முதலில் நுகர்

2. R. P. Kent-Money and Banking (Sep. 1949) P. 386.

வோரின் செலவு செய்யும் திறனை மிகுதிப்படுத்தி அதன் மூலமாக வீலையைத் தூண்டுகின்றது. இக் கோட்பாடு ஆரம்பகால பண அளவுக் கோட்பாட்டில் சொல்லப்படவில்லை. மேலும் பணத்தின் சுழல்வேகம் பற்றிய கருத்துக்களும் அக் கோட்பாட்டில் தொடப் படவில்லை. இவைகள் இரண்டையும் பழைய கோட்பாட்டுடன் இணைத்துப் புதிதாகப் பண அளவுக் கோட்பாடு ஒன்று விவரிக்கப் பட்டுள்ளது.

1752-ல் டேவிட் ஹியூம் (David Hume), கேண்டிலான் (Cantillon) ஆகியோர் தெளிவான பண அளவுக் கோட்பாட்டைக் கணித்தனர். ஜான் ஸ்டூவர்ட் மில் (John Stuart Mill) என்பவர், 'பண்டங்களை மாற்றுவதற்காகத்தானே தவிர வேறு எந்த வழிகளிலும் பணம் விலைகளில் பங்கு கொள்வதில்லை' எனக் கூறு கிறார்.[3] காஸல் (Cassel) என்பவர் பண அளவு மாற்றத்தினால் ஏற்படும் விளைவுகளைப்பற்றிக் குறிப்பிடும்போது, "தற்போது இருக்கக்கூடும் மொத்தப் பணம் செலுத்தப்படவேண்டியவை களுக்குப் போதுமானதாக இருக்க வேண்டும்; அதற்கு ஏற்றாற் போல் விலை மட்டங்கள் தங்களுக்குள் சரி செய்து கொள்ள வேண்டும்." என எடுத்துரைக்கின்றார்.[4]

19-ம் நூற்றாண்டில் தான் பண அளவுக் கோட்பாடு பற்பல பொருளியல் வல்லுநர்களால் மறுமலர்ச்சியடைந்தது. அதுவும் திருந்திய வடிவில். கடைசியாகப் புத்துயிர் அளித்து, திருந்திய வடிவில் அக்கோட்பாட்டைக் கணித்து நிரூபித்துக் காட்டியவர் பேராசிரியர் இர்விங் ஃபிஷர் ஆவார். முதல் உலகப் போருக்குச் சிறிது காலம் முன்புதான் அவர் அக் கோட்பாட்டிற்கு ஒரு நல்ல வடிவம் கொடுத்து 'வங்கி வைப்புகளுக்கும்' (Bank Deposits) சட்டப் பணத்திற்கும் உள்ள வேறுபாடுகளை விளக்கிக் காட்டி மாற்றுச் சமன்பாடு (equation of exchange) என்ற வடிவில் பண அளவுக் கோட்பாட்டை விவரித்திருக்கிறார். 1920-ம் ஆண்டின் பண வீக்க காலத்தில் (Period of Inflation) இவருடைய கோட் பாடு நிரூபணமானதால் அது முக்கியத்துவம் அடையத் தொடங் கியது. இவரின் நடவடிக்கைகள் கோட்பாடு—பண அளவு, விலை மட்டம் 'பணத்தின் வாங்கும் திறன்' (Purchasing power of money) என்ற நூலில் அழகாக வடிக்கப்பெற்றுள்ளதை நாம் காணலாம்.

[3]. J. S. Mill—Principles of Political Economy P. 65.

[4]. Gustau Cassel — The Theory of Solid Economy. (Rev. Edn) P. 426.

∴பிஷரின் மாற்றுச்சமன்பாடு (அல்லது பேரச்சமன்பாடு)
(Fisher's Equation of Exchange)

பொருளியல் வல்லுநரான ∴பிஷர் மாற்றுச் சமன்பாட்டைக் கீழ்க்கண்டவாறு விளக்குகிறார்:—

$$MV = PT \text{ அல்லது சில காலங்களில் } P = \frac{MV}{T}$$

இந்தச் சமன்பாட்டில் 'M' (பணம்) என்பது ஒரு குறிப்பிட்ட காலத்தில், பிரதேசத்தில், புழக்கத்திலிருக்கும் எல்லாவகைப் பணங்களின் சராசரித் தொகையாகும். V (சுழல் வேகம்) (Velocity) என்பது குறிப்பிட்ட காலத்தில் ஒவ்வொரு பணஅலகும் ஆளும் பேரச் சராசரியாகும்— பண்டங்கள், பணிகள் மற்றும் பத்திரங்கள் (பிணையங்கள்) (Securities) ஆகியவைகளுக்குச் செலவு செய்யப்பட்டவை— இப்படியாக MV என்பது குறிப்பிட்ட காலத்திய மொத்தப் பணச் செலவைக் காட்டுகிறது. அதாவது, மக்களின் மொத்தச் செலவுக்குச் சமமாயிருக்கும். T (வாணிப அளவு) (Volume of Trade), என்பது குறித்த கால எல்லைக்குள் கடம் பெற்ற பேரத்திற்கு உட்பட்ட பண்டங்களின் அல்லது பணிகளின் தொகையாகும் P (விலை) (price) என்பது வாணிபப் பேர ஒரு அலகின் சராசரி விலையாகும். மக்களின் மொத்தச் செலவு (MV), பொருள்கள், பணிகள் மற்றும் பிணையங்கள் ஆகியவைகளின் பண மதிப்புக்குச் (PT) சமமாயிருக்கும். எடுத்துக் காட்டாக ஒரு அலகு (unit), பொருள், பணியின் சராசரி விலை ரூ. 10 வீதம் 500 அலகுகளுக்கு 1000 பண அலகுகள் ஒரு ஆண்டு காலத்தில் சராசரியாக 5 தடவைகளில் செலவிடுவதாக வைத்துக் கொள்வோம். அப்படி என்றால் 500 பொருள்கள் மற்றும் பணிகளுக்குச் செலவிட்ட தொகை ரூ 5000/— ஆகிறது. அதாவது ரூ. 5000 மதிப்புள்ள பொருள்களுக்கு (PT) ரூ. 5000 செலவிடப்பட்டிருக்கிறது (MV) என்பது கருத்தாகும்.

செலவிடப்பட்ட தொகையும். பொருள்களின் மதிப்பும் ஒன்றுதான் என்று கூறுவது ஒன்றும் புதிது அல்ல. இது அனைவருக்கும் தெரிந்த உண்மைதான். எனவேதான் இச் சமன்பாடு ஒரு வெறும் உண்மையைத்தான் (Truism) விளக்குகிறது எனக் கூறப்படுகிறது. வெறும் உண்மையெனக் கூறப்பட்டாலும் பணத்தின் மதிப்பையும் பொருள்களின் விலை மட்டத்தையும் ஆராய்ந்தறிவதற்கு இது ஒரு கருவியாகப் பயன்படுகிறது. சமன்

பாட்டில் M, V, மற்றும் T ஆகிய காரணிகள் அடங்கியுள்ளன. இந்தக் காரணிகள்தான் விலைமட்டத்தை நிர்ணயிக்கின்றன. ''விலை மட்டம் பணத்தின் அளவோடும் அதன் சுழல் வேகத்தோடும் நேராகவும், பணத்தைக் கொண்டு வாங்க வேண்டிய பொருள்கள் மற்றும் பணிகள் ஆகியவற்றின் தொகைக்கு எதிராகவும் மாறுகிறது''. (''The general leavel of prices varies directly with the quantity of money and its velocity of circulation and inversely with the volume of goods and services to be purchased with money''[5] ஆகவே விலை மாறுதல் மேற்குறிப்பிட்ட மூன்று காரணிகளில் ஏதேனும் ஒன்றிலும் ஏற்படலாம் எனத் தெரிய வருகிறது. பணமாற்றத்தால் மட்டும் தான் விலை மாறுதல் நடைபெறுகிறது என்ற பழைய பண அளவுக் கோட்பாடு இப்போது ஏற்றுக் கொள்ளப்படுவதில்லை.

∴பிஷரின் சமன்பாட்டில் 'M' என்பது அரசாங்கத்தால் வெளியிடப்பட்டு மக்களிடம் புழக்கத்திலிருக்கும் சட்டமுறைப் பணத்தை மட்டும் குறிப்பிடவில்லை. வங்கிகளால் ஆளக்கூடும் வங்கி வைப்புகளும் (Bank Deposits) சட்டமுறைப் பணத்தோடு இணைந்து வணிகத்தில் செயல்படுகின்றன. இவ்வகைப் பணத்தைக் குறிப்பிடுவதற்கு 'M' என்று பெயரிடலாம். இதனுடைய சராசரிச் சுழல் வேகம் 'V' என்று குறிக்கப்படுகிறது. ஆகவே ∴பிஷரின் சமன்பாட்டை முழு அளவில் இவ்வாறும் குறிக்கலாம்.

$$MV + M^1V^1 = PT$$

இனிமெரு கேற்றப்பட்ட பண அளவுக் கோட்பாடு, இரு மாற்றுவழி முறைகளின் (alternative methrods) மூலம் உணர்த்தப்படுவதைப் பரிசீலிக்க வேண்டும். ஒரு பக்கம், இந்தக் கோட்பாட்டை ஒரு 'முற்றொருமை' (Identity) எனக் கூறலாம். முற்றொருமை' என்றுல் ஒரே உண்மையை இரண்டு வழிகளில் எடுத்துக் கூறும் அறிக்கையாகும் (Statement), இவ்வகையான முற்றொருமை, நிலைமையைப்பற்றி மேலும் கூடுதலான விவரத்தை அளிக்கின்றதா என்பதைப் பொறுத்து அதனுடைய பயன் சார்ந்துள்ளது.

மற்றொரு பக்கம், இந்தப் பண அளவுக் கோட்பாட்டை ஒரு 'சமன்பாடு' மூலம் (equpation) கூறலாம். இச் சமன்பாடு ''காரண—விளைவு உறவுகளைக்' கொண்டு (causal relationships) குறிக்கப்படுகின்றது. இச் சமன்பாடு காரண—விளைவு உறவுகளை

[5] Lester V Chandler — An Introduction to monetary Theory (1966) P. 23.

விளக்குவதில் எந்த அளவுக்குத் திறனுடையது என்பதைப் பொறுத்து இதனுடைய பயன் சார்ந்துள்ளது.

இப்படியாக, பண அளவுக் கோட்பாட்டை இரண்டு முறைகளில் குறிப்பிடலாம். அவையாவன[6]:—

முற்றொருமை	:	MV = PT
அல்லது		
சமன்பாடு	:	MV=PT

முற்றொருமை கோட்பாட்டில், பணத்தின் அளவும் அதனுடைய சுழல் வேகமும் (MV), ஏற்பட்ட வாணிப அளவுக்குச் (PT) சமம் எனக் காட்டப்படுகிறது. அதாவது, இரண்டும் ஒன்றேதான் என முன்பே பார்த்திருக்கிறோம். ஆனால் சமன்பாட்டில் இரண்டும் சமமாக இருப்பதற்குரிய காரணங்களை அறிய முடிகிறது. சமன்பாட்டில் காரண உறவுகளை விளக்குமிடத்து, பணத்தின் அளவிலும், (Changes in M), விலையிலும் (P) முக்கிய மாற்றம் ஏற்படுவதாகவும், வாணிப அளவில் (T) மிகவும் சிறிய அளவில் மாற்றம் ஏற்படுவதாகவும், சுழல் வேகத்தில் (V) எந்தவித மாற்றமும் இல்லாமல் நிலையானதாக இருப்பதாகவும் கொள்ள வேண்டும். இந்த அடிப்படையில் ∴பிஷரின் கோட்பாடு அமைந்துள்ளது. பணத்தின் அளவு மாற்றம் விலைகளின் மேல் உள்ள விளைவுகளை விவரிப்பதுதான் சமன் பாட்டின் தத்துவமாகும்.

∴பிஷரின் மாற்றுச் சமன்பாட்டிலுள்ள எடுகோள்கள் :—

முடிவாகப் பார்த்தால், பழைய பண அளவுக் கோட்பாட்டைக் கணித்த வல்லுநர்களின் கருத்துகளுக்கும், தற்போது திருத்தப்பட்ட கோட்பாட்டினைக் கணித்த வல்லுநர்களின் கருத்துகளுக்கும் அவ்வளவாக வேறு பாடில்லை. ஒரு சில அனுமானங்களை நவீன வல்லுநர்கள் தெளிவுபட விளக்கிப் பண அளவுக் கோட்பாட்டை விவரிக்கின்றனர். ∴பிஷர் கூறுவது கீழ் வருமாறு :—

"என்ன காரண அடிப்படையில் பண அளவுக் கோட்பாடு ஒரு உண்மையாகும் என நாம் இப்போது திரும்ப விவரிப்போம். எப்படி உண்மையாகும் என்றால், பண அளவு கூடுதலினால் ஏற்படும் விளைவுகளில் ஒன்று, பொது விலை மட்டம் சரியான வீதப்படி உயர்வ

[6]. A. C. L. Day, Outline of Monetary Economics (1967), P. 247-249.

தாகும்.'' [7](We may now restate, then, in what casual sense the quantity theory is true. It is true in the sense that one of the normal effects of an increase in the quantity of money is an exactly Pro-Portional increase in the general level of prices)

மேற்கண்ட கூற்று நிரூபிக்கப்படவேண்டுமானால் சில எடுகோள்கள் அனுசரிக்கப்பட வேண்டும். முதலாவது எடுகோள் என்ன வென்றால் பண அளவின் மாற்றம் சுழல் வேகத்தை மாற்ற மடையச் செய்வதில்லை என்பதாகும். ∴பிஷர் விவாதிப்பதாவது: ''பண அளவு குறைவாக இருக்கும்போது இருந்த பணத்தின் சுழல் வேகம், பண அளவு கூடுதலானால் அச்சுழல் வேகம் ஏன் வேறுபட வேண்டும் என்பதற்கு ஒரு காரணமும் காட்ட முடியாது; இது வெளிப்படையாகத் தெரிகிறது.'' [8] (No reason has heen, or, so far as it is apparent, can be assigned, to show why the velocity of circulation of money...should be different, when the quantity of money .. is great, from what it is when the quantity is small).

இரண்டாவது அனுமானம், பண அளவில் மாற்றம் ஏற்பட்டால் அது நடவடிக்கைத் தொகுப்பை (Volume of transactions) பாதிப்பது இல்லை என்பதாகும்.

இதை ஆதரித்துக் கீழ்க்கண்டவாறு ∴பிஷர் உரைக்கிறார்:

'' செலாவணி நாணயத்தைக் கூட்டுவதினால், பண்ணைகள் (farms) மற்றும் தொழிற்சாலைகளின் உற்பத்தியோ அல்லது சரக்கு இரயில் வண்டிகள் அல்லது கப்பல்களின் வேகமோ கூடுவதில்லை. தாரை போன்ற வாணிபம் (Stream of business), இயற்கைக் கனிவளங்களையும், தொழில் நுட்ப நிலைமைகளையும் பொறுத்துத்தான் அமைகிறதே தவிர, பண அளவைப் பொறுத்து அமைவதில்லை. உற்பத்தி, போக்குவரத்து மற்றும் விற்பனை ஆகியவை ஆள்சார் திறமைகளும், தொழில் நுட்பங்களும் சேர்ந்தாலன்றி, ஒன்று கூட பணத்தின் அடிப்படையில் இல்லை..... ... எனவே, நாம் முடிவாகக் கொள்வது என்னவெனில் பணத்தின் அளவு மாற்றம் பணத்திற்காக விற்கக் கூடும் பொருள்களின் அளவைப் பாதிப்பதில்லை என்பதாகும்.'' [9].

மூன்றாவது அனுமானம், தொடர்காரண நிலை' (Chain of causation) பணத்திலிருந்து விலை மட்டத்திற்குச் செல்லுகிறதே

[7] Fisher — The Purchasing pewer of Money, P. 157.
[8] Ibid, P. 154.
[9] Ibid P. P. 155—156.

தவிர, விலை மட்டத்திலிருந்து பணத்திற்குச் செல்வதில்லை என்பதாகும். அதாவது, பண அளவு மாற்றம் விலை மட்டத்தைப் பாதிக்கிறதே தவிர விலைமட்ட மாற்றங்கள் M, V, அல்லது T—ஐ பாதிப்பது இல்லை. இந்நிலையை ∴பிஷர் விவரிப்பதாவது: "மாற்றுச் சமன் பாட்டில், சாதாரணமாக, விலை மட்டம் முற்றிலும் ஒரு செயலற்ற மூலப் பொருளாகும். மற்ற மூலப் பொருள்களால் மட்டுமே இது கட்டுப்படுத்தப்படுகிறது .....இது மற்றவைகளைக் கட்டுப்படுத்த இயலாது" [10] ("The price level is normally the one absolutely passive element in the equation of exchange. It is controlled solely by the other elements..... but exerts no controlover them").

நான்காவது அனுமானம், நிறைவுடை வேலை வாய்ப்பு (full employment) நாட்டில் நிலவுவதாகக் கொள்ளவேண்டும். அதாவது, வேலை மட்ட நிறைவு அடைந்த பின்னரே பண அளவின் அதிகரிப்பு விலை மட்டத்தைப் பாதிக்கும். நிறையிலா வேலை வாய்ப்பு இருக்கும்போது மாற்றுச் சமன்பாட்டில் சமமான நிலை காண முடியாது என்பது ∴பிஷரின் வாக்கு.

ஐந்தாவது அனுமானம், பண அளவு மாற்றங்களின் விளைவுகள் நெடுங் காலத்தில் நிகழ்கின்றன என்பதாகும் குறுகிய காலத்தில் அவ்வளவாக மாற்றங்கள் ஏற்படுவதில்லை என ∴பிஷர் ஒப்புக்கொள்கிறார். கூல்பர்ன் (W. A. L. Coulborn) கூற்றுப்படி, ∴பிஷரின் கோட்பாடு ஒரு நெடுங்காலக் கோட்பாடாகும். மேலும் நிலை பெயர்வு காலம் (Trasition period) முடிந்த பிறகு தான், பண அளவு மாற்றம் விலை மட்டத்தைப் பாதிக்கிறது என்றும் அவர் கூறுகிறார்.[11]

மேற்கண்ட ஐந்து முக்கியமான எடுகோள்களின் அடிப் படையில்தான் மாற்றுச் சமன்பாடு அமைந்திருக்கிறது எனக் கொள்ள வேண்டும்.

சமன்பாட்டிலுள்ள காரணிகள்—விளக்கம்

பண அளவு (M) : M என்பது ஒரு குறிப்பிட்ட காலத்தில், பிரதேசத்தில் புழக்கத்திலிருக்கும் எல்லா வகைப் பணங்களின் சராசரித் தொகையாகும். இதில் அடங்குவன (1) சட்டமுறைப் பணம் புழக்கத்திலிருப்பவை (2) காசோலைகள் (cheques) விடுத்து

[10] Ibrd P. 172.
[11] Ibid - P. 159.

இயக்கக்கூடும் வங்கி வைப்புப் பணம். இந்த இருவகைப் பணங்களிலும் புழக்கத்திலிருப்பவைகளை மட்டுமே கணக்குக்கு எடுத்துக் கொள்ள வேண்டுவதென்பது மிகவும் சுட்டிக் காட்டப்பட வேண்டியதாகிறது. பணத்திட்ட அமைப்பில் (monetary system) எத்தனையோ பண வகைகள் இரட்டிப்பதாக (duplications) இருப்பதையும், ஒரு சில வகைப் பொருள்கள், பணிகள் விற்றல், வாங்கல் மற்றும் சொத்துரிமை மாற்றம் செய்தல் ஆகிய நடவடிக்கைகளில் பயன்படுத்தாமலிருப்பதையும் நாம் தெரிந்து கொள்ள வேண்டியிருக்கிறது. பொன் காப்பிருப்புகளும் பொற் சான்றுகளும் (Gold reserves and gold certificates), வெள்ளிக்காப்பிருப்புகளும், வெள்ளிச்சான்றுகளும், வங்கிப் பணத்தாள்களும் (bank notes) பணத் தாள்களுக்குள் காப்பிருப்புகளும், மற்றும் வங்கி தேவை வைப்புகளும் (bank demand deposits) அதற்கான காப்பிருப்புகளும் ஆங்காங்கே ஒவ்வொரு நாட்டிலும் இருக்கலாம்.

ஆகவே பணத்தின் அளவைச் சரியாக மதிப்பீடு (estimate) செய்ய வேண்டுமானால் எல்லா இரட்டிப்புகளையும் நீக்க வேண்டும். முதன் முதலாக, ஏனைய பண வகைகளுக்கு அடிப்படையாக (backing) அல்லது காப்பிருப்பாக வைக்கப்பட்டிருக்கும் உலோகப் பணத்தை (metallic money) கணக்கில் சேர்க்கக் கூடாது.

இரண்டாவதாக, காப்பிருப்பாக உள்ள உலோக மற்ற பண வகைகள் (non matallic money) நீக்கப்பட வேண்டும். கடைசியாக, காப்பிருப்பு நோக்கங்களுக்காக அல்லது வங்கிகளுக்குள்ளிருக்கும் பொறுப்புகளைத் தீர்ப்பதற்காக வங்கிகள் அவைகளுக்குள் வைத்திருக்கும்—நடப்பு வைப்புகள் கணக்கிலிலினின்றும் நீக்கப்பட வேண்டும்.

இதிலிருந்து அறிவதென்னவெனில் பணத்தின் அளவு என்பது பொருள்கள், பணிகள் மற்றும் சொத்துக்கள் உரிமை மாற்றம் ஆகியவைகளுக்கு உடனடியாக செலவிடக் கூடிய அளவில் தயாராக இருக்கும் மொத்தப் பணமாகும் (The quantity of money may be descibed as the total of all types which are available for immediate spending for commodities, services and property rights)[12].

இதுவரை, பண அளிப்பில் சட்டமுறைப் பணமும், வங்கி வைப்புப் பணமும் பங்கு பெறுகின்றன எனப் பார்த்தோம். இனி

[12]. Raymond P. Kent, Money and Banking, P. 388.

அவ்விரு வகைப் பணத்தின் அளிப்பை நிர்ணயிக்கும் காரணிகள் யாவை எனப் பார்ப்போம்.

பணர் அளிப்பை நிர்ணயிக்கும் காரணிகள் :—

பண வெளியீட்டின் அளவு, அதற்குத் தேவையான அடிப் படை இருப்பைப் பொறுத்து அமைகிறது. அடிப்படை வீதத்தை உயர்த்தினால் பண அளிப்பு குறையும்; வீதத்தைக் குறைத்தால் அளிப்பு கூடுதலாகலாம் அடிப்படை இருப்பில் அடங்குவன மூன்றாகும். (1) பொன் இருப்பின் அளவு (Monetary gold stock) —இவ் விருப்பில் முற்காலத்திய இருப்பும், தற்காலத்திய பொன் உற்பத்தியும், பொன் இறக்குமதி, ஏற்றுமதியும் அடங்கும். (2) அரசால் வெளியிடப்படும் பணம்—இதில் பொன்னைத் தவிர நாணயங்களும், பொற்சான்றுகளைத் தவிர தாள் பணமும் (Paper money) அடங்கும்.

(3) மைய வங்கிக் கடன் பொறுப்புகள் (central bank credit outstanding) : மைய வங்கி மிகுதியான அளவுக்குக்கடன் கொடுத் தாலும் முதலீடு செய்தாலும் பணப் புழக்கம் மிகுதியாகிறது. இதே போல் கடன் பொறுப்புகள் குறைக்கப்பட்டாலும் பணப் புழக்கம் குறைய ஆரம்பிக்கும். ஏனென்றால் கடனாளிகள் தங்கள் கடன்களைத் திரும்பச் செலுத்துவர்.

இப்படியாக, மேற்குறிப்பிட்ட மூன்று அடிப்படைகளில் எதில் மாற்றம் கண்டாலும் மொத்தப் பணத்தொகை மாறும். முதலில், பொன் திட்டத்தை (Gold Standand) அடிப்படையாகக் கொண்ட நாட்டில் பொன் எடுப்பில் ஒரு சிறு மாற்றம் கண்டாலும் பண அளிப்பைப் பாதிக்கும். எனவே, பொன்திட்டமுடைய நாட்டில் மைய வங்கியின் கடன் பொறுப்பு அதன் பொன் காப்பிருப்புடன் இணைக்கப்பட்டிருக்கும். அத்திட்டத்தினின்றும் விலகி வேறு பல திட்டங்கள் கையாளப்படுமானால் பணத்தொகைக்கும் பொன்னுக்கும் உள்ள தொடர்பு சுருங்கிவிடுகிறது. மாற்றுரிமை யற்ற தாள் பணத்திட்டத்தின் கீழ் (inconvertible paper standard) பொற் பணம் (monetary gold) அவ்வளவு முக்கிய அடிப்படை அல்ல; பெரும்பாலும் அரசுப் பணமும், மைய வங்கிக்கடன் பொறுப்புகளும் அடிப்படையாகும்.

இரண்டாவதாக, மக்கள் பணத் தொகையை எவ்வளவு ரொக்கமாகவும் எவ்வளவு வங்கி வைப்பாகவும் வைத்திருக்க விரும்புகின்றார்கள் என்பதைப் பொறுத்திருக்கின்றது. மக்கள் எல்லா நடவடிக்கைகளுக்கும் ரொக்கத்தைக் கொண்டு ஆள்வ

தைக் குறைத்து காசோலைகளை அதிகமாக ஆளமுன்வந்தால், அடிப்படை ரொக்கத்தின் மேல் பெருக்கக் கூடிய பணத்தொகை அதிகமாகக் கூடும். இது எதனாலென்றால் ஒரு ரூபாயை கைக்குக் கைமாற்றிக் கொண்டு போனால் அது ஒரு ரூபாயாகத்தான் இருக்கும். ஆனால் அதே ஒரு ரூபாயை வங்கியில் காப்பிருப்பாக வைத்துக் கடன் ஆக்கம் செய்தால் அது பல ரூபாய்களாகி, காசோலை மூலம் பெருகித் தனது பணியைச் செய்யும். எடுத்துக் காட்டாக, வங்கி வைப்புகளுக்கு (காசேரலைக்குட்பட்ட) 10 சத வீதம் பொன்னோ, செலாவணியோ காப்பிருப்பு வைக்க வேண்டு மென்றிருந்தால் ஒரு ரூபாய் இருப்பு 10 ரூபாய் அளவுக்குவைப்பு களை ஏற்படுத்தும்; 20 சதவீதம் என்றிருந்தால் 5 ரூபாய் அளவுக்கு வைப்புகளை உற்பத்தி செய்ய முடியும். மக்கள் எல்லா வகைப் பேரங்களுக்கும் ரொக்க ஆட்சியை அதிகப்படுத்துவார் களானால் மொத்தப் பணத்தொகை குறைவாகி விடும்.

மூன்றாவதாக, மொத்தப் பணத்தொகை வங்கிகளின் காப் பிருப்பு வீதத்தைப் பொறுத்திருக்கிறது. வங்கிகளின் ரொக்க இருப்புக்கும் வைப்புக்கும் வழக்கப்படியோ சட்டப்படியோ ஒரு வீதச் சாரம் இருக்கிறது. ரொக்க இருப்பு வீதம் உயர்த்தப்படின் வங்கியின் வைப்புப்பணம் குறையும். மேலே குறிப்பிட்ட எடுத்துக் காட்டை மீண்டும் இங்கே குறிப்பிடலாம்.

ஆகவே, நாட்டின் மொத்தப் பணத்தொகை, அடிப்படை மூலதனம் இருப்பு, அரசுத்தாள்பண வெளியீடு, மைய வங்கிப் பொறுப்பு ஆகியவைகளையும் மக்கள் விருப்பத்தையும், வங்கிகளின் ரொக்க வீதாச்சாரத்தையும் பொறுத்தது எனக்கூறலாம்.

பணச் சுழல் வேகம் (V):

பணத்தின் அளிப்பு அளவில் ஏற்படும் மாற்றம் நேரடியாக விலைவாசிகளைப் பாதிப்பதில்லை என்றும், செலவினங்களின் அள வைப் பொறுத்துத்தான் விலைகள் மாறுகின்றன என்றும், பண அளிப்பும், செலவினங்களும் நிறைவுடன் ஒன்றுடன் ஒன்று தொடர்புகொள்ளவில்லை யென்றும் பார்த்தோம். வேறு முறைப் படி கூறின், பணச் சுழல் வேகம், செலவுத் தொகையை(Volume of expenditure)

நேரடியாக நிர்ணயிக்கும் காரணிகளில் ஒன்றாக இருந்து விலையை நிர்ணயிக்கிறது. பணத்தின் மதிப்பு இவ்வாறாகக் கணிக் கப்படுகிறது. உண்மையில் பார்க்கப்போனால், பல காலங்களில் பணத்தின் அளவு மாறுபடுவதற்குக் கூடுதலாகவே பணச்சுழல்

வேகம் மாறுபடுகிறது; சில காலங்களில் இன்னும் சற்றுக் கூடுதலாகவே பணச்சுழல் வேகம் மாறுபடுகிறது.

பணத்தின் பணிகள் மாற்றுச் சாதனமாகவும், மதிப்பின் இருப்பாகவும் இருப்பதாகும். பணத்தைப் பெற்றவுடன் செலவு செய்து கொண்டே போனால் பரிவர்த்தனைச் சாதனமாக மட்டுமே அது விளங்குகிறது. மதிப்பின் இருப்புக்கு வேலையே இல்லை. ஆனால் எல்லோரும் அவ் வப்போது பணத்தைச் செலவு செய்து விடுவதில்லை. தேவைப்பட்டபோது தேவையான பொருள்களை வாங்குவதற்காகப் பணத்தைச் சேமித்து வைக்கிறார்கள். சேர்த்து வைக்காமல் அவ் வப்போது செலவு செய்தால் பணத்தின் புழக்க வேகம் எல்லையற்றதாகும். இதற்கு மாறாக, பணத்தின் சேமிப்பு கூடுதலானால் புழக்க வேகம் குறையும். அதாவது, "பணத்தின் வரவு—செலவுக்கிடையில் அதன் தங்கியிருக்கும் சராசரிக் காலம் நீண்டால் சுழல் வேகம் குறையும்."[18] (The longer this average interval of rest between receipt and expenditure the lower is its velocity of circulation).

இனிமேல் சுழல் வேகத்தை நிர்ணயிப்பன யாவை என்று பார்ப்போம்:—

(1) கடன் முறை பெரிதும் ஆளப்பட்டும், நிதிநிலையங்கள் வளர்ச்சி பெற்றும் இருந்து மக்கள் அவ் வசதிகளைப் பயன்படுத்திக் கொண்டால் பணத்தின் சுழல் வேகம் மிகுதியாகும். இல்லையேல் பணம் முடங்கிக் கிடக்கும். மக்கள் தங்கள் வருமானத்தில் ஒரு பகுதியைச் சேமித்துத் தான் வைக்க வேண்டியிருக்கிறது. கடனை இலகுவாகவும், துரிதமாகவும் பெறுவதற்கு வேண்டிய வசதிகள் இல்லாமலிருப்பதால் மிகுதியான அளவுக்குச் சேமித்து வைக்க மக்கள் தூண்டப்படுகிறார்கள். சுருங்கக் கூறின், கடன் கொடுத்தல், முதலீடு செய்தல், கடன் பெறுதல் ஆகியவைகள் நன்கு ஆளப்பட்டால் பணத்தின் சுழல் வேகம் கூடுகின்றது; அவைகள் நன்கு ஆளப்படவில்லையானால் சுழல்வேகம் குறைகிறது.

(2) சேமிப்புக்கும், நுகர்வுக்கும் (Saving and consumption) இடையில் மக்களின் பழக்க வழக்கமும், மனப்போக்கும் முன்னேறவில்லையானால் பணச்சுழல் வேகம் தடைபடுகிறது. அவர்கள் பணத்தைச் சேமிக்கும் போது முடக்க ஆரம்பிக்கின்றனர்; முடக்கினால் சுழல் வேகம் குறைகிறது. ஆனால் வருமானத்தில் பெரும் பான்மையானவைகளை நுகர்ந்தால் சுழல் வேகம் மிகுதியாகிறது.

18. Knut Wicksell Interest and Prices, London, 1936, P. 52

(3) பணம் செலுத்து முறைகளைப் (System of payments) பொறுத்தும் சுழல்வேகம் அமைகிறது (அ) மக்களிடம் பணம் அடிக்கடி வருவதும் செலுத்தப்படுவதுமாக இருந்தால் சராசரியில் பணம் முடங்கிக் கிடக்கும் காலம் சிறியதாகவே இருக்கும். இதை ஒரு எடுத்துக்காட்டின் மூலம் விளக்கலாம். [14] வாரம் ஏழு ரூபாய் கூலி பெறுபவன் நாளொன்றுக்கு ரூபாய் ஒன்று செலவு செய்வானெனின் சராசரியில் அவனிடம் பணம் முடங்கிக்கிடக்கும் காலம் 3½ நாட்களாகும். அதாவது ஒரு ரூபாயின் சராசரி சுழல்வேகம் வாரத்திற்கு இரண்டு; திங்களுக்கு 8. ஒரு திங்களுக்கு ரூ. 30 வருமானமாயின் முடங்குகாலம் 15 நாள் ஆகும். ஆகவே சராசரி சுழல் வேகம் இரண்டு. அதாவது வரவு செலவு இடைவேளையைக் குறைத்தால் சுழல்வேகம் கூடுதலாகிறது. (ஆ) வருமானம் வருவது ஒழுங்கானதும் உறுதியானதுமானால் பணத்தை முடக்கி வைக்க வேண்டிய அவசியம் இருக்காது; செலவு அவ்வப்போது செய்யப்பெறும். அதனால் பணச் சுழல் வேகம் கூடும் (இ) வரவும், செலவும் ஒரே நேரத்தில் ஒரே அளவாக நிகழ்கின்றனவா, கால இடையீடும் அளவு வேறுபாடும் உண்டா என்பதும் முக்கியமாகக் கவனிக்கப்பட வேண்டும். பணம் வருவதும் செலவு செய்வதும் ஒரே காலத்தில் நடைபெற்றால் சுழல் வேகம் அதிகமாகும். வாரந்தோறும் அல்லது திங்கள் தோறும் வாங்கப்பட்ட சம்பளம் பொருள்களை வாங்குதல், கடனைத் திரும்பச் செலுத்துதல் போன்ற நடவடிக்கைகளுக்கு உடனே செலவு செய்யப்பட்டால் பணத்தின் சுழல் வேகம் அதிகமாகும். நாள்தோறும் சம்பளம் வழங்கப்பட்டு அவவப்போது செலவு செய்யப்பட்டால் சுழல் வேகம் இன்னும் அதிகமாகும்.

(4)பணத்தை எவ்வளவு வேகமாக ஓரிடத்திலிருந்து வேறொரு இடத்திற்கு அனுப்பக் கூடும் என்பதும் சுழல் வேகத்தைப் பாதிக்கும். போக்கு வரத்துச் சாதனங்கள் மற்றும் அனுப்புதல் சாதனங்கள் நன்கு அமைந்து இருந்தால் சுழல்வேகம் கூடுதலாகும்.

இதுவரை பார்த்த நான்கு காரணிகளும் நாட்டின் பொருளாதாரம், நிதி, மக்கள் பழக்க வழக்கங்கள் ஆகியவைகளைச் சார்ந்து அமைந்திருக்கின்றன. இவைகள் பணச்சுழல் வேகத்தை நெடுங்காலத்தில் நிர்ணயிக்கின்றன எனலாம். ஆனால் குறுகிய காலங்களிலும் குறிப்பாக வீக்கம் (Inflation) வாட்டம் (deflation) மற்றும் வாணிபச் சுழல் (Business cycle) ஆகிய காலங்களிலும், பணச் சுழலின் வேகம் வேறுபடுவதுண்டு. (5) அவ்வப்போது

[14] L. V. Chandler, An Introduction to Monetary Theory, 1966, P. P 37-38.

எதிர்காலத்திய வருமானத்தைப் பற்றிய மக்களது எண்ணம் மாறும் போதும் பணச்சுழல் வேகம் மாறும். எதிர் காலத்தில் வருமானம் உயரும், உறுதியாக இருக்குமெனக் கருதினால் செலவு கூடும்; சுழல் வேகமும் கூடும்.

(6) எதிர் காலத்தில் விலைவாசிகள் உயரும் என்று கருதப் பட்டாலும் பொருள்களை அதிகமாக வாங்குவதற்கு முற்பட்டு மக்கள் செலவை நீட்டுவார்கள். இதனால் புழக்க வேகம் அதிக மாகும். இதற்கு எதிர்மாறாக எதிர்காலத்தில் வருமானம் குறையுமென்று அல்லது விலைவாசிகள் குறையுமென்று நினைப் பார்களானால் அவர்கள் பணத்தை முடக்க எத்தனிப்பார்கள். இதன் விளைவாக, பணச்சுழல் வேகம் குறையும்.

வாணிப அளவு (Volume of Trade) (T)

'T' என்பது ஒரு குறிப்பிட்ட இடத்தில் ஒரு குறிப்பிட்ட காலத்தில் பணத்திற்காக விற்கப்படும் பண்டங்கள், பணிகள், மற்றும் பிணையங்கள் ஆகியவைகளைக் குறிக்கின்றது என முன்பே பார்த்திருக்கிறோம். பணத்திற்காக விற்கப்படும் ஒவ் வொரு பொருளும் கணக்கிற்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது; ஒவ்வொரு பொருளும் ஒவ்வொரு தடவை விற்கப்படும் போதும் கணக்கிடப்படுகிறது.

இந்த வாணிப அளவை (T) நிர்ணயிப்பன யாவை என இனிப் பார்ப்போம் :—

(1) பொருள்கள், பணிகள் ஆகியவைகளின் உற்பத்தி திறனைப் பொறுத்து வாணிப அளவு அமைந்திருக்கின்றது. உற்பத்தித்திறன், மக்கள் தொகை, அவர்களின் உடல்நலம், சக்தி ஆகியவைகளைக் கொண்டும், இயற்கை வளங்கள் தேசத்தின் பரப்பு, மூலதனம், தொழில் நுட்ப அறிவு ஆகிய வைகளைக் கொண்டும் அமைகிறது (2) வியாபாரச் செழிப்புக் காலங்களில் தான் இவைகளால் பயன் கிடைக்க முடியும். ஆனால் மந்த காலங்களில், எவ்வளவுதான் உற்பத்திக்காரணிகளை நன்கு பயன்படுத்தினாலும், காரணிகள் நன்றாக அமைந்தாலும் உற்பத்தி பெருகாது. வாணிப நடவடிக்கைகளின் அளவு குறையும்.

(3) வாணிப அளவு, பொருள்கள், பணிகள் உற்பத்தியை மட்டும் சார்ந்து அமையவில்லை. ஒவ்வொரு பொருளும் எத்தனை தடவை வாணிபத்தில் பங்கு கொள்கின்றது என்பதையும் பார்க்க வேண்டும் வேலைப்பாகுபாடும், சிறப்புத் தேர்ச்சியும் (Specialisation

அதிகமாக உள்ள சமுதாயத்தில் பொருள்கள் கைமாறுவது அதிக மாக இருக்கும். இதற்கு மாறுக இருப்பின், கைமாறுவதும் குறை வாக இருக்கும்.

(4) புதிதாகப் பிணையங்கள் விற்பனை செய்யப்படுதலும் **T**ஐ நிர்ணயிக்கிறது. இதில் ஒரு குறிப்பிட்ட காலத்தில் எத்தனை தடவை பிணையங்கள் விற்கப்பட்டிருக்கின்றன, எந்த நோக்கத் திற்காக ஊக வாணிபத்திற்காகவா அல்லது வேறு நோக்கத்திற் காகவா விற்கப்பட்டிருக்கின்றன என அறிவது அவசியம்.

(5) கடைசியாகப் பண்டமாற்று (barter) நடவடிக்கை எவ் வளவுக் கெவ்வளவு காணப்படுகிறதோ அவ்வளவுக்கும் பணத் திற்கு முக்கியத்துவம் இல்லையாதலால் பணத்தின் மூலமாகச் செய்யப்பட்ட வாணிப தொகை குறைகிறது. பண்டமாற்று வழியாக நடக்கும் நடவடிக்கைகள் கூடுதலாஞலோ, குறைந் தாலோ விலை மட்டம் பாதிக்கப்படுகின்றது.

இனி ;பிஷரின் சமன்பாட்டிலுள்ள கடைசிக் காரணியான 'P' (விலை மட்டம்) ஐப்பற்றிப் பார்ப்போம்.

விலை மட்டம் (P) :

ஒரு குறிப்பிட்ட நேரத்தில் **T**–யின் ஒரு அலகு சராசரிப் பணத்தின் மதிப்பைக் குறிப்பிடுவது **P** ஆகும். தொழில் நுட்ப கூற்றுப்படி பார்த்தால், **P** என்பது நடவடிக்கைகளில் ஈடுபட் டுள்ள எல்லாப் பண்டங்கள், பணிகள், பிணையங்கள் ஆகிய வற்றின் விலைகளின் நிறையிட்ட கூட்டுச்சராசரி யாகும் (Weighted Arithmetic Average) இதைப் 'பொது விலை மட்டம்' எனவும் கூறலாம்.

பண அளவுச் சமன் பாட்டின் குறைபாடுகள் :

(1) பண மதிப்பு மாற்றத்தை எடுத்துக் காட்டுவதற்கு பண அளவுக் கோட்பாடு முயற்சிக்கிறதே தவிர, பணத்தின் மதிப்பு எவ்வாறு கணக்கிடப்படுகிறது என்பதற்கு எந்தவித விளக்கமும் தரவில்லை. செலவிடப்பட்ட பணத்தொகையும், பொருள்களின் மதிப்பும் ஒன்றுதான் என்ற சாதாரண உண் மையை மட்டும் எடுத்துரைக்கிறது.

(2) அளிப்பு மற்றும் தேவை ஆகிய கோட்பாடுகளின் அடிப்படையில் எவ்வாறு பொருளின் விலை நிர்ணயம் செய்யப் படுகிறதோ அவ்வாறே பணத்தின் மதிப்பும் நிர்ணயம் செய்யப்

படுகிறது. அப்படியிருக்க ∴பிஷரின் சமன்பாடு பணத்தின் அளிப்புப் பகுதிக்கு மட்டும் கூடுதலான அளவுக்கு முக்கியத்துவம் கொடுத்து, விலைவாசி மாற்றத்திற்குப் பணத்தின் அளவுதான் காரணம் என்று முடிக்கின்றார். இருந்தாலும் பணத்தின் தேவைப் பகுதி முற்றிலும் நிராகரிக்கப்பட்டுள்ளது எனக் கூற முடியாது. பழைய (செப்பனிடாத) பண அளவுக் கோட்பாட்டில் வேண்டுமானால் தேவைப்பகுதி ஒதுக்கி வைக்கப்பட்டிருக்கலாம். பணத்தின் பணிகளைப் பணம் செய்வதால் பணம் தேவைப் படுகிறது. ஏனைய பொருள்களைப் போலல்லாமல் பணத்திற்காகப் பணத்தை விரும்புவதில்லை என முன் அத்தியாயத்தில் பார்த் திருக்கிறோம். பணத்தினால் பொருள்கள் வாங்க முடிகின்றது என்பதால் தான் பணத்தை விரும்புகின்றோம். அதாவது, பணத்தின் தேவை என்று கூறினால் 'பணத்தை வைத்துக் கொள்ள விரும்புதல்' எனப் பொருள்படும். மனிதன் பணத்தை மூன்று காரணங்களுக்காக வைத்துக் கொள்ள விரும்புகிறான். ஒன்று பேர நோக்கம் (Transactions motive) வாழ்க்கைப் பொருள்கள், பணிகள் முதலியன வாங்குதல், விற்றல். இரண் டாவது, எச்சரிக்கை நோக்கம் (Precautionary motive) வாழ்க் கையில் எதிர்பாராத நிகழ்ச்சிகள் எதுவும் ஏற்படும்போது அதனை எதிர் கொள்வதற்காக, வருமானத்தில் ஒரு பகுதியை ரொக்கமாகக் காப்பிருப்பு வைத்துக் கொள்ளல். மூன்றாவது, ஊக இலாப நோக்கம் (Speculative motive) மேற் சொன்ன இரண்டுக்கும் பணம் ஒதுக்கப்பட்டது போக ஏதாவது எஞ்சி யிருக்கும் தொகையை ஊக இலாப நோக்குடன் முதலீடு செய் வதற்காகச் சேமித்து வைத்துக் கொள்ளல்.

மாற்றுச் சமன்பாட்டில் பணத்தின் அளவு எனக் குறிப்பிடும் போது புழக்கத்திலுள்ள பணத்தை மட்டும்தான் குறிப்பிடுகிறது. பணத்தின் தேவைப் பகுதியில் எதிர்காலத் தேவைக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கும் பணத்தைப்பற்றியோ அல்லது அதன் விளைவுகளைப் பற்றியோ குறிப்பிடவில்லை. பணத்தின் தேவைப் பகுதியைப் பற்றி ஏன் அவ்வளவு கவனம் செலுத்தப் பட வேண்டும் என்றால் அதற்கும் பணச் சுழல் வேகத்திற்கும் தொடர்பு இருப்பதால்தான். பணம் முடக்கப்படுவது மிகுதியாக மிகுதியாக சுழல் வேகம் குறைகிறது. எனவே, தேவைப்பகுதியில், முடங்கிக் கிடக்கும் பணத்தைப்பற்றி ஒன்றும் குறிப்பிடாததால் பண அளவுக் கோட்பாடு திறனுய்வுக்குள்ளாகிறது.

(3) நான்கு காரணிகளான **M, V, P** மற்றும் **T** ஆகியவை தனித்து இயங்கக் கூடியவைகள் அல்ல. பண அளவுக் கோட் பாட்டுப்படி V மற்றும் T நிலையானதென்றும், தனித்தும் இயங்கு

கின்றன என்றும் பண அளவு மாற்றத்தால் விலை மாறுகிறது என்றும் பார்த்தோம். ஆனால் முன் அனுபவத்தைக் கொண்டு பார்த்தால் வீதச் சார்ப்படி பணத்தின் அளவு (சட்டமுறைப்பணம்) கூடுதலாகாமலேயே விலை உயர்ந்திருக்கிறது. இதற்குக் காரணம் பணத்தின் சுழல்வேகம் கூடுதலானதால்தான். எடுத்துக் காட்டாக 1923-ல் ஜெர்மனியில் விலைவாசிக் குறியீட்டு எண் நம்ப முடியாத அளவுக்குப் போர்க் காலத்தின் முன் உள்ள நிலையை ஒப்பிடும்போது உயர்ந்திருக்கிறது. அதாவது (100)% உற்பத்திக் காரணிகள் முழுவதும் பயன்படுத்தப்பட்டு நிறைவுடை வேலை வாய்ப்பு ஏற்பட்ட பின் மேன்மேலும் புழக்கத்தில் விடப்படுகிறது. பணம் உற்பத்தியைப் பெருக்குவதற்கு வழியில்லாததால் பொருள்களின் விலையில் தாக்கப்படுகின்றது; மெய் வீக்கம் (True inflation) ஏற்படுகிறது. பொருள்களின் விலைவாசிகள் உயருகின்றன என்றால் பணத்தின் மதிப்பு சரிகிறது எனப் பொருள். அதாவது, மக்கள் பணத்தைச் சேமித்து வைப்பதற்குப் பதில் பொருள்களைச் சேர்க்க விரும்புவர். இப்படி ஒவ்வொருவரும் நினைத்து அவ்வாறு செயல்பட்டால் பொருள்கள் வாங்கப்படுவதற்கு உபயோகப் படுத்தப்பட்ட பணத்தின் சுழற்சி கூடிக்கொண்டே போகிறது. இப்படியாகப், பண அளவு உயர்வோடு சுழல்வேகமும் (V) சேர்ந்து உயர்ந்து கொண்டே போகிறது. இவ்விடத்தில்தான் 'மிகையான வீக்கம்' (Hyer Inflation) நாட்டில் ஏற்பட்டுள்ளதெனக் கூறுகிறோம். இதே நிலைதான் ஜெர்மனியிலும் 1923-ல் நிலவியது. ஜெர்மன் அரசு பணத்தின் சுழல்வேகத்தைக் கட்டுப்படுத்த வழி முறைகளைக் கையாண்டதே தவிர, பணத்தின் அளவைக் கட்டுப்படுத்த முயலவில்லை. எனவே சமன்பாட்டில் சொல்லப்பட்டபடி 'சுழல் வேகம்' நிலையானது எனவும் தனித்து இயங்குகிறது எனவும் கூறமுடியாது. இதே போல்தான், பணத்தின் அளவு உயர்ந்தாலும் விலை மாறாமலிருக்கும். ஒரு நாட்டில் நிறைவுடை வேலை வாய்ப்பு ஏற்படுவதற்குமுன் அதாவது, உற்பத்திக் காரணிகள் முழுவதும் பயன்படுத்தப்படும் நிலைக்கு முன், பண அளவின் உயர்வு விலைவாசியைப் பாதிப்பது இல்லை. ஏனென்றால் பண அளவு உயர்வினால் முதலீடு செய்யப்பட்டுப் பொருள்களின் உற்பத்திப் பெருகும் (T) பண அளவு உயர்வும் பொருளின் உற்பத்திப் பெருக்கவும் ஒன்றுக் கொன்று ஈடுகட்டப்படுவதால் விலை மாறாமல் அப்படியே இருக்கிறது. எடுத்துக்காட்டாக, 1923-ல் அமெரிக்க ஐக்கிய நாடுகளில் காலப் பெயர்வு ஏற்பட்டு முழு வேலை அளவு நிலையை அடையும் காலத்தில் பண அளவின் அதிகரிப்பு விலைவாசி மட்டத்தை மாற்றவில்லை.

(4) மாற்றுச் சமன்பாடு வாணிபச் சுழலில் (Trade cycle) ஒரு பகுதியான மேல் மட்டத்தை அதாவது, செழிப்பு காலதத்தை (boom period) மட்டும் எடுத்துக் கொண்டு பொருள்களின் விலைவாசி மட்டத்தை விளக்குகிறது. பூரிப்பு காலத்தில் பண அளவில் உயர்வு உற்பத்தியைப் பெருக்க வாய்ப்பில்லாததால் விலைவாசியைப் பாதிக்க நேரிடுகிறது. இந்த நிலையை (aspect) எடுத்துக் கொண்டு மட்டும் பார்த்தால்தான் ∴பிஷர் சமன்பாடு சரி எனப்படும். வாணிபச் சுழலின் மறுபகுதியான கீழ் மட்டத்தை எடுத்துக் கொண்டால் அதாவது, மந்த காலத்தை எடுத்துக் கொண்டால் பண அளவின் உயர்வு விலை மட்டத்தைப் பாதிப்பதில்லை. மந்த காலத்தில் மக்களின் வருமானம் குறையும்; முதலீடு செய்ய முன்வர மாட்டார்கள். ஏனென்றால் முதலின் இறுதி நிலைத்திறன் (marginal efficiency of capital) குறைவாக இருக்கும். வருமானம் குறைவானதால் மக்களின் வாங்குந் திறன் குறைகிறது. எனவே பொருளின் விலை உயர்வதற்குரிய வாய்ப்புகள் இல்லை. ஆகவே சமன்பாட்டின்படி, பண அளவு உயர்வு விலைவாசி உயர்வுக்குக் காரணம் என்பது மந்த காலத்தில் பொய்யாகிறது. எடுத்துக்காட்டாக, 1930-ன் மந்த காலங்களில் அமெரிக்க அரசு நிதிப் பற்றாக் குறையை மிகவும் உணர்ந்தது. அதனை ஈடுகட்டுவதற்காக வங்கி அமைப்பு முறையில் (Banking System) அவ்வரசு பண வீக்கத்தை உண்டுபண்ணியது. ஆனால் இப்பண அதிகரிப்பு விலை மட்டத்தில் எந்தவித மாறுதலையும் உண்டுபண்ணவில்லை. 1936-ம் ஆண்டில் அமெரிக்க அரசு £ 800 மில்லியன் பற்றாக்குறை நிலையைப் பெற்றிருந்தது.[15] இதனுடன் உறுப்பு வங்கிகளின் (Member banks) ரொக்கக் காப்பிருப்புகள் 1929-ம் ஆண்டில் (அதாவது மந்தத்திற்கு முன்பு) இருந்ததைப் போல் இரு மடங்காக இருந்தன. இப்படிப் பொதுமக்களுக்கு ஏராளமான பணம் அளிக்கப்பட்ட போதிலும் அவற்றை அவர்கள் செலவு செய்யவில்லையாகையால் விலைகளும், வேலைகளும் (Prices and employment). 1929-ம் ஆண்டின் நிலவரத்திற்கும் குறைவாகவே எவ்வித மாற்றமுமின்றி இருந்தன. உண்மையில் அமெரிக்க அரசு அதிக அளவுப் பணத்தைச் சிருட்டித்துக் கொண்டு செல்ல அதற்கீடாகப் பணப் புழக்க வேகமும் குறைந்து கொண்டே சென்றது. அவர்கள் 'M' ஐ அதிகரிக்க இயன்றதே தவிர 'MV' ஐ அதிகரிக்க இயலவில்லை. அதாவது, பொது மக்கள் செலவு செய்ய விரும்பவில்லை. ''பணம் தொடர்புடைய அதிகாரிகள் விலைகள் ஏறுவதை ஊக்குவிக்கும் பொருட்டு அதிக அளவு பண அளிப்பைத்தர

[15] G. Crowther, An Outline of Money, 1962, P. 116

முன்வந்த போதும் அவற்றைப் பெற யாரும் முன் வரவில்லை என்பதை மெய்ப்பிக்கப் பல நிகழ்ச்சிகள் சான்றாக உள்ளன. தண்ணீரைக் குடித்துக் கொண்டிருக்கிற குதிரையை, தண்ணீரைக் குடிக்கவொட்டாமல் வேண்டுமானால் தடுத்து நிறுத்தலாம். ஆனால் அதற்குத் தாகமில்லாதபோது என்னதான் அதனை வலியநீருக்கு அழைத்துச் சென்றாலும் அதனை நீரருந்தச் செய்ய முடியாதல்லவா ?'' [16]

(5) கிரெஷாமின் கூற்றுப்படி ''பண அளவுக் கோட்பாடு எவ்வாறு பண மதிப்பிலும் தொழில் நடவடிக்கைகளிலும் ஏற்படும் ஏற்ற இறக்கங்களை (fluctuations) 'எவ்வாறு அது உண்டாக்குகின்றதென்பதை' விளக்குகிறது. (இப்பண அளவுக் கோட்பாடு இரண்டு முறையாலும் வருகின்ற இரு சமன்பாடுகளினால் விளக்கப்பட்டதாகும்.) ஆனால் இந்தக் கோட்பாடு பெருமளவு பண வாக்கங்களால் அல்லது பணச் சுருக்கங்களால் ஏற்படுகின்ற நெடுங்கால ஏற்ற இறக்கங்களையும், சில குறுங்கால ஏற்ற இறக்கங்களையும் விளக்குகின்றதே தவிர, 'ஏன் அது உண்டாக்குகின்றதென்பதை' விளக்க இயலவில்லை. அதே போன்று பண வாக்கம் ஏன் ஏற்படுகின்றதென்றும், ஏன் சில சமயங்களில் அது விலைவாசிகளை உயரக் கிளப்புகின்றதென்றும், மற்ற சமயங்களில் அந்த அளவு பண வாக்கம் ஏன் ஒரு விளைவையும் தருவதில்லை என்றும் இந்தக் கோட்பாட்டினால் விளக்க இயலுவதில்லை.'' [17]

(6) பிஷரின் சமன்பாட்டில் பண அளவு அதிகரிப்பே விலை மட்ட உயர்விற்குக் காரணம் எனக் குறிப்பிடுவது உகந்த கருத்தல்ல. ஏனெனில் விலை மட்ட உயர்வின் விளைவாகவும் பண அளவு கூடுதலாகும் எனக் குறிப்பிடுவதும் சம அளவில் சரியான கருத்தேயாகும். ஏனென்றால் விலை மட்டக் குறியீட்டெண்ணை (உயர்ந்த) அடிப்படையாகக் கொண்டு வியாபாரிகளும், தொழில் முயல்வோர்களும் இலாபகரமான தொழில்களில் முதலீடு செய்வதற்காக வங்கிகளிடமிருந்து பெருமளவில் கடன் பெறுவதற்கு வங்கிகளை நாடுவர். அதன் விளைவாகப் பாங்கு கடனுக்கத்தின் மூலம் கடன் வசதிகளை அளிக்க முன் வருவதால் 'M' அளவு அதிகரிக்கும். பணத்தின் அளவு தனித்து இயங்கும் ஒரு சக்தியல்ல. ஏனென்றால் பணத்தின் அளவானது விலை மட்டம் (P), வாணிப அளவு (T) ஆகியவற்றைத் தழுவியுள்ளது. தற்காலத்தில் பொதுவாக வாணிப நிலவரங்களுக்கு ஏற்பவே பணத்தின் அளவு நிர்ணயிக்கப்படுகிறது. பணத்தின் அளவு

[16] Ibid P. P. 123 - 124
[17] Ibid P. 123

நிர்ணயிக்கப்படுகிறது. பணத்தின் அளவு மிகுந்தால் வாணிப அளவு மட்டுமின்றிப் பணச்சுழல் வேகமும் மாற்றமடையும். எனவே, பண அளவுதான் விலை மட்டத்தை விளக்குகிறது என்றும், விலை மட்டம் பணத்தின் அளவைக் கணிப்பது இல்லை என்றும் கூறும் ஒரு வழிக் கருத்து உகந்ததன்று.

(7) பண அளவுச் சமன்பாட்டில் கண்டுள்ள காரணிகள் மட்டுமே விலை மட்டத்தை நிர்ணயிக்கின்றன எனக்கொள்வது தவருகும். ஏனெனில் சமன்பாட்டில் குறிப்பிடப்படாத வேறு பல பண சார்பற்ற காரணிகளாலும் (Non-Monetary Factors) விலை மட்டம் பாதிக்கப்படக்கூடும். இக் கருத்தை ∴பிஷரே ஏற்றுக் கொண்டு கீழ் வருமாறு கூறுகிறார்: "வாணிப அளவு அதிகரிக்கும் பொழுது மனித விருப்பங்கள் வேறுபடுதல், தொழில் துறையில் ஏற்படும் மாற்றங்கள் மற்றும் போக்கு வரத்து வசதிகளில் ஏற்படும் மாறுதல் ஆகியவற்றின் விளைவாக விலை மட்டம் குறைவடையும். பணத்தின் சுழல் வேகம் அதிகரிக்கும்போது, மனிதப் பழக்க வழக்கங்கள், ஏட்டளவுக் கடனின் வளர்ச்சி, மற்றும் போக்கு வரத்து வளர்ச்சி ஆகிய வற்றுல் விலை மட்டம் அதிகரிக்கும். பணம் அச்சிடப்படுதல் மற்றும் இறக்குமதி செய்யப்படுதல், பண உலோகச் சுரங்கங்கள் கண்டு பிடிக்கப்படுதல், இரட்டை உலோகத் திட்டம் பின்பற்றப் பட்டு மலிவான மற்றொரு பணம் வெளியிடப்படுதல், மற்றும் தாள் பணம் வெளியிடுதல் ஆகியவற்றின் விளைவாகப் பணத்தின் அளவு அதிகரிக்குமாயின், அதற்குச் சமமாக விலை மட்டமும் அதிக ரிக்கும். வங்கித் துறை வளர்ச்சியடைவதாலும், ஏட்டளவுக் கடன்கள் அதிகரிப்பதாலும், வங்கி வைப்புகள் அதிகரிக்குமா யினும் விலை மட்டம் அதிகரிக்கும். மேற்கூறியவற்றிற்குப் புறம்பான நிகழ்ச்சிகள் ஏற்படுமாயின் எதிர்மாருன விளைவுகள் ஏற்படும்". [18]

(8) கீன்ஸின் (Keynes) பங்கு :—

(அ) பண அளவுக் கோட்பாட்டை, கீன்ஸ், வேலை வாய்ப்பு (employment) நிலைமையுடன் ஒப்பிடுகிறார். அவர் கூற்றுப்படி, நாட்டில் வேலை வாய்ப்பு நிலை இல்லாதிருக்கும்போது (unemployment situation) பணத்தின் அதிகரிப்பு விலைவாசி நிலையை உயர்த்துவதில்லை. ∴பிஷரின் சமன்பாடு உண்மையாக வேண்டு மானுல் முழு வேலை வாய்ப்பு எய்திய பின் பணத்தின் அளவு அதிகரிக்க வேண்டும். அப்போதுதான் உண்மைப் பணவீக்கம்

[18] Irwing Fisher; The Purchasing Power of money, P. P. 149—150

ஏற்பட்டு விலை மட்டம் உயருகிறது. இது எவ்வாறு நடைபெறுகிறது என்பதை முன்னமேயே பார்த்திருக்கிறோம். "வேலையின்மை நிலை இருக்கும்போது, பணத்தின் அளவு மாறும் அதே வீதத்தில் வேலை வாய்ப்பும் மாறுகிறது; முழு வேலை வாய்ப்பு நிலை அடைந்த பின் பணத்தின் அளவு மாறும். அதே வீதத்தில் விலை வாசிகளும் மாறுகின்றன."[19] (So long as there is unemployment, employment will change in the same proportion as the quantity of money; and when there is full employment, prices will change in the same proportion as the quantity of money).

மேலும், முழு வேலை மட்டம் நிலவுவதாகக் கொண்ட தொன்மைப் பொருளாதார வல்லுநர்களின் எடுகோள் முற்றிலும் தவறு எனக் கீன்ஸ் கூறுகிறார். நடைமுறையில் பார்க்கப் போனால் உலகில் எந்நாடுமே முழுவேலைவாய்ப்பை அடையவில்லை எனலாம்.

(ஆ) பண அளவுக் கோட்பாட்டை முதன் முதலாக, மதிப்புக் கோட்பாட்டுடனும் (Theory of value) உற்பத்தி கோட்பாட்டுடனும் (Theory of output) இணைத்து விளக்கியுள்ளார் கீன்ஸ். 1930க்கு முன்பண அளவுகோட்பாட்டை விலைவாசிக் கோட்பாடாக அவர் கருதினார். 1930ல் கீன்ஸ், விலைவாசிக் கோட்பாட்டினின்றும் மாற்றி உற்பத்திக் (output) கோட்பாடாக விளக்கினார். முழுவேலை வாய்ப்பு நிலை அடைவதற்கு முன் பண அளவு அதிகரிப்பு, எல்லா உற்பத்திக் காரணிகளையும் முழு அளவில் தொழில் ஈடுபடச் செய்து உற்பத்தியைப் பெருக்குகிறது. உற்பத்திப்பெருகுவதால் விலைவாசி உயர்வதற்கு வாய்ப்பில்லை. முழு வேலை வாய்ப்புக்குப் பின் பண அளவு அதிகரிப்பு உற்பத்தியைப் பெருக்க முடியாமற் போவதால், முன்னமேயே உற்பத்திச் செய்யப்பட்ட பொருள்களின் விலையைப் பாதிக்கிறது.

எனவே, பண அளவு அதிகரிப்பு முதலில் உற்பத்தியைப் பெருக்குகிறது; அதுவும் ஒரு குறிப்பிட்ட அளவு வரைதான். இதுதான் கீன்ஸின் கருத்தாகும்.

(இ) விலைவாசிகள், பணத்தின் அளவைப் பொறுத்து நேரடியாக நிர்ணயிக்கப்படுகின்றன என்ற தொன்மைப் பொருளியல் வல்லுநர்களின் கருத்தைக் கீன்ஸ் நிராகரிக்கிறார். பணத்திற்கும், விலை மட்டத்திற்கும் மறைமுகமான தொடர்பு இருக்கிறதே தவிர, நேரடித் தொடர்பு இல்லை எனக் கூறுகிறார். பண அளவின் மாற்றம் முதலில் வட்டி வீதத்தைப் (rate of interest)

[19] Keynes: General Theory, P. 296

பாதிக்கிறது. அவ் வட்டி வீதம் பிறகு முதலீடு, வருமானம், உற்பத்தி மற்றும் விலைகளைப் பாதிக்கிறது.

(ஈ) ∴பிஷரின் சமன்பாட்டில் நடப்புக் கணக்குக்கும், சேமிப்புக் கணக்குக்கும் உள்ள வேறுபாடு எடுத்துக் காட்டப் படவில்லை.

'வங்கி மேல்வரைப் பற்று' (Bank overdraft) வசதிகளால் ஏற்படும் பலன்களும் கூறப்படவில்லை.

(9) மாற்றுச் சமன்பாட்டில் குறிப்பிடப்படும் பண அளவு (M) ஒரு குறிப்பிட்ட நேரத்தில் புழக்கத்திலுள்ள தொகையாகும். பணத்தின் சுழல் வேகம் (V) ஒரு கால இடைவெளியில் (over a period of time) நிலவும் தொகையாகும். எனவே 'MV' என்பது ஒரு ஒப்புமையற்ற இரு வேறு இனங்களின் பெருக்குத் தொகை யாகும். இக் குறைபாடு ∴பிஷரின் சமன்பாட்டை ஒரு மாற்றுக் குறைவாகக் காட்டுகிறது.

(10) இச் சமன்பாட்டில் எல்லாப் பொருள்களின் சராசரி விலை மட்டமே கருதப்படுவதால், பணத்தின் மதிப்பை நிர்ணயிப் பதற்கான குறிப்பான அளவை எதுவும் குறிப்பிடவில்லை. ஆகவே, இக் கோட்பாடு மேலோட்டமான விளக்கமாகவே கருதப்பட வேண்டும். மேலும், பலவகைப் பணப்பேரங்களின் சராசரி மதிப்பை நிர்ணயம் செய்வதற்கு மட்டுமே இக் கோட்பாடு உதவுமே தவிர, பணத்தின் வாங்குந்திறனை நிர்ணயிக்கும் முறை இக் கோட்பாட்டில் விவரிக்கப்படவில்லை. பணத்தின் வாங்குந் திறன் குறியீட்டெண்மூலம் அளக்கப்பட்டாலும், சரியான மதிப் பைக் கணிக்க முடியாது. ஏனென்றால், குறியீட்டெண் தயாரிப் பதில் ஒன்றுக்கு மேற்பட்ட பொருள்கள் கணக்குக் கெடுத்துக் கொள்ளப்படுகிறது. அனைத்துப் பொருள்களின் விலை வாசிகள் ஒரே வீதத்தில் மாறுவதில்லை யாதலால், தயாரிக்கப்பட்ட குறியீட்டெண் உண்மையான பண மதிப்பை வெளிப்படுத்துவ தில்லை. எடுத்துக்காட்டாக, 1939—56 வரை உள்ள காலத்தை எடுத்துக் கொண்டால் சில பொருள்களின் விலை 200 சத வீதம் உயர்ந்திருக்கிறது. ஆனால் வேறு சில பொருள்கள் 50 சத வீதத் திற்கும் குறைவாகத்தான் உயர்ந்திருக்கிறது. இப்படிப் பொருள் களின் விலை மட்டம் வீதப்படி மாறுததால் கிடைக்கப்பட்ட குறியீட்டெண் தவறுகத்தான் இருக்கும் எனவே, சமன்பாட்டின்படி $\left(\frac{MV}{T} = P\right)$ நிர்ணயிக்கப்பட்ட விலை மட்டம் ஒரு பொதுப்படை

யான விலைமட்டம் ஆகும். இதன் அடிப்படையில் பண மதிப்பு கணிக்கப்பட்டால் அது உண்மை நிலையை விளக்காது.

(11) ∴பிஷரின் சமன்பாடு நெடுங்காலத்தில்தான் உண்மை யாகும். குறுகிய கால நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டு பார்த்தால் சமன்பாடு தவருகத்தான் இருக்கும். இதனைப்பற்றி முன்பே விளக்கியுள்ளோம்.

(12) ∴பிஷரின் பண அளவுக்கோட்பாடு ஒரு அசலனமான (static) கோட்பாடு எனவும், மாறும் பொருளாதார உலகில் ஏற்றுக் கொள்ளப்படக் கூடியது அல்ல என்றும் கருதப்படுகிறது. ஏனைய நிபந்தனைகள் மாறாமலிருந்தால்தான் சமன்பாடு உண்மை யாகும். ஆனால், ஏனைய நிபந்தனைகள் இப்புதுமை உலகில் எப் போதும் மாறிக்கொண்டேயிருக்கின்றன. எனவே, இயக்கமிக்க உலகில் நிகழும் வாணிபச் சுழல்களை ஆராய்ந்தறிவதற்கு இக் கோட்பாடு பயன்படாது.

இவ்வாறு பல குறைபாடுகள் ∴பிஷரின் பண அளவுக் கோட் பாட்டின் மீது சுமத்தப்பட்டிருப்பினும் அது அறவே பயனற்ற தெனக் கூறிவிட முடியாது. கடந்த கால பண அளவு, விலைகள் இவற்றின் போக்கை ஆய்வு செய்தால் பண அளவுக் கோட்பாடு உண்மை என்பது நிரூபித்து விட முடியும். வரலாற்றைப் பார்க்கு மிடத்துப் பண அளிப்பு அதிகரித்த போதெல்லாம் விலையும் உயர்ந் திருக்கின்றது—எனக் கோட்பாட்டு வாதிகள் வாதாடுகின்றனர். எடுத்துக் காட்டாக, 19—ஆம் நூற்றாண்டின் இடைப்பட்ட காலத்தில் கலிபோர்னியா, ஆஸ்திரேலியாவில் பொற் சுரங்கங்கள் கண்டுபிடிக்கப்பட்டுப் பொன்னின் அளவு கூடியதால் பண அளவு உயர்ந்தது. இதன் காரணமாக விலைகளும் உயர்ந்தன. இது போலவே, அந் நூற்றாண்டின் இறுதியில் பொன் அளவு குறைந்து பண அளவு குறைந்ததால் விலைகள் குறைந்ததும் தெரிய வரு கிறது. இவ்வாறே ஜெர்மனியில் போருக்கு முந்திய காலத்திலும் பிந்திய காலத்திலும் மிகை வீக்கம் ஏற்பட்டதற்கு அந்த நாட்டின் மிகுதியான செலாவணிதான் அதிகரிப்பே காரணம் எனக் கூறப்படுகிறது. கெம்மரர் (Kemmerer) தனது நூலில், 1879-1968 ஆண்டுகளுக்கிடைப்பட்ட காலத்தைப்பற்றி ஆய்ந்ததில் பண அளவுக் கோட்பாட்டின் உண்மை தெரிய வருகின்ற தென்று கூறுகிறார். இதைப் போல காசலும் (Cassel) புள்ளி விவரத்தின் வாயிலாகப் பண அளிப்புக்கும், விலை மட்டத்திற்கும் உள்ள நேரடித் தொடர்பை எடுத்துக் கூறுகிறார்.

7. பணத்தின் மதிப்பு (தொடர்ச்சி...)

ரொக்க இருப்புக் கோட்பாடு :

(Cash-Balance Theory)

பண அளவுக் கோட்பாட்டில் பேர நோக்கக் கோட்பாட்டைப் பற்றி—மாற்றுச் சமன்பாடு — இதுவரை பார்த்தோம். அதாவது, பொருளின் விலைமட்டம், வாணிப அளவு, பணத்தின் அளவு பணத்தின் சுழல்வேகம் ஆகியவைகளைக் கொண்டு எவ்வாறு நிர்ணயிக்கப்படுகின்றது எனக் கண்டோம். மாற்றுச் சமன்பாட்டில், பொருள்களின் விலை மட்டம் விளக்கப்படும்போது பணத்தின் அளிப்பு அளவுக்கே முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுப் பணத்தேவைக்கு அவ்வளவு முக்கியத்துவம் கொடுக்கப்படவில்லை எனவும், குறுங்காலத்தில் விலை மட்டம் சரியாகக் கணிக்கப்பட முடியவில்லை எனவும், மாற்றுச் சமன்பாடு ஒரு நெடுங்காலக் கோட்பாடு எனவும் கண்டோம்.

ஆனால் ரொக்க இருப்புக் கோட்பாட்டில் பணத்தின் மதிப்பு அதன் அளிப்பாலும், தேவையாலும் கணக்கிடப்படுகிறது. இங்குப் பணத்தின் தேவைக்கும் சமமான பங்கு அளிக்கப்படுகிறது என்பது குறிப்பிடத்தக்கது. பணத்தின் தேவையை அதிகரிக்காமல், அளிப்பை மட்டும் அதிகரித்தாலோ, அல்லது, பணத்தின் அளிப்பைக் குறைக்காமல், தேவையை மட்டும் குறைத்தாலோ பணத்தின் மதிப்புக் குறைகிறது; விலை மட்டம் உயருகிறது. அதேபோல் பணத்தின் தேவையைக் குறைக்காமல், அளிப்பை மட்டும் குறைத்தாலோ, பணத்தின் அளிப்பை அதிகரிக்காமல் தேவையை மட்டும் அதிகரித்தாலோ பணத்தின் மதிப்பு அதிகரிக்கிறது; விலை மட்டம் குறைகிறது. ரொக்க இருப்புக் கோட்பாட்டை நன்கு அறிய வேண்டுமென்றால் பணத்தின் தேவையையும், அதன் அளிப்பையும் பற்றி ஆய்வு செய்து அவைகளின் இயற்றன்மைகளையும் அவைகள் நிர்ணயிப்பவைகளையும் நன்கு விளக்க வேண்டும்.

பணத்தின் அளிப்பைப்பற்றியும் அதை நிர்ணயிக்கும் காரணிகளைப்பற்றியும் ∴பிஷரின் மாற்றுச் சமன்பாட்டில் முன்பே கண்டுள்ளோம்.

பணத்தின் தேவை என்பது ஒரு குறிப்பிட்ட பிரதேசத்தில் ஒரு குறிப்பிட்ட நேரத்தில் பணத்தைப்பற்ற உள்ள (to hold) தேவை ஆகும். மக்கள் ஏன் பணத்தைப் பற்ற (வைத்துக் கொள்ள) விரும்புகிறார்கள் ? மூன்று காரணங்களுக்காக விரும்பு கிறார்கள் எனக் கூறலாம். அவைகள் (1) பேரநோக்கம் (2) எச்சரிக்கை நோக்கம் (3) ஊக இலாப நோக்கம் ஆகும்.

ஒவ்வொன்றைப் பற்றியும் கீழே சிறிது விவரிப்போம் :

(1) பேர நோக்கம் :—ஒரு நாட்டுப்பொருளியலில், வாணிபம் மற்றும் தொழில் நடவடிக்கைகளை இயக்குவதற்குப் பணம் நேரடி யாக உபயோகப்படுத்தப்படுவதால் அது முக்கியமாகத் தேவைப் படுகிறது. பணம் பரிவர்த்தனைச் சாதகமாக இருந்து விற்றல், வாங்கல் நடவடிக்கைகளை நிறைவேற்றவும், மதிப்பின் இருப்பாக இருந்து ஒருவருக்கு வருமானம் ஒழுங்காக வராமல் இருக்கும் பொழுது செலவைத் திட்டமிட்டு ஒரே சீராகச் செய்வதற்கும், ஒழுங்கான வருமானத்தில் ஒழுங்கற்ற செலவுகளைச் செய்யவும் வழிவகைகளைச் செய்கிறது.

நுகர்வோர் தாங்கள் நாள்தோறும் செய்யும் பேரங்களுக்காகக் கொஞ்சம் பணம் கையில் இருப்பு வைத்திருக்க வேண்டியிருக் கிறது. வருமானம் வரும் கால இடைவெளி அதிகரிக்க அதி கரிக்க, வைத்துக்கொள்ள வேண்டிய ரொக்கத்தின் அளவும் அதிகமாகும். நுகர்வோரின் உண்மை வருமானம் உயர்ந்தாலும், பொருளின் விலை கூடுதலானலும், கையிருப்பைக் கூடுதலாக்க வேண்டும். வியாபாரிகளை எடுத்துக் கொண்டால் தங்கள் தொழிலைத் திறம்பட நடத்துவதற்காக அவர்களுக்குப் பணம் தேவைப்படுகிறது. தாங்கள் ஏற்றுக்கொண்ட மாற்றுச் சீட்டுக்களை மதிப்பதற்காகவும் (Honouring of Bills), வியாபாரச் செலவு களுக்கு ஈடு கொடுப்பதற்காகவும் குறைந்த அளவு ஒரு திங்க ளுக்கு வேண்டிய பணத்தையாவது அவர்கள் வைத்துக்கொள்ள வேண்டியிருக்கிறது. அதாவது, ஒரு ஆண்டில் நடைபெறும் மொத்த விற்பனையில் (Turn over) பன்னிரண்டில் ஒரு பங்காவது பணமாக வைத்திருக்க வேண்டும். இதற்கிடையில் தொழில் பெரு கினால் கையிருப்புப்பணம் கூடுதலாக வைக்கவேண்டும். கையிருப் புப் பணம் வைத்திருப்பது கடன் (credit) வசதிகளைப் பொறுத்தும்

இருக்கிறது. நுகர்வோர்களும், வியாபாரிகளும் கடன் வசதிகள் இலகுவாகக் கிடைப்பதை அறிய முடிந்தால் கையிருப்பு அதிகம் வைக்க வேண்டிய தேவையில்லை.

அளிக்கப்பட்ட ஒரு பொருளாதாரம் மற்றும் வியாபார அமைப்பில், பணத்தின் தேவை பேரங்களுக்கு ஏற்ருற்போல் நேராக மாறுகிறது. மேலும் பணத்தைப் பற்றுவதற்காக உள்ள பேர நோக்கங்கள், பண வருமான மட்டத்திற்கு (level of money income) ஏற்ருற்போலும் நேரடியாக மாறுகிறது.

(2) எச்சரிக்கை நோக்கம் : — பணத்தைப் பற்றுவதற்கான மற்றுமொரு காரணம் எச்சரிக்கை நோக்கமாகும். பேரங்களுக் காகப் பற்றப்படும் பணத்தில் ஒரு பகுதி நிச்சயமற்ற மற்றும் ஒழுங்கற்ற வரவு செலவுகளைப் பற்றப்படுகிறது. எவ்வளவு தொகை வைத்துக் கொள்வதென்பது அவரவர் விருப்பத்தைப் பொறுத்து அமைகிறது. அவ்வப்போது உண்டாகும் பேரங்களுக் காகத் தொகை ஒதுக்கீடு செய்வதற்கு மேல் பொருளாதாரப் போக்கு மாற்றம் காரணமாக உண்டாகும், எதிர்பாராதவை களுக்கும் பணம் வைத்துக்கொள்ள வேண்டியிருக்கிறது. அதாவது, எச்சரிக்கை நோக்கத்திற்காகப் பணம் வைத்துக் கொள்ள வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. செலவுகள், வருமா னங்கள், மற்றும் வியாபார நிலைமைகள் ஆகியவைகளின் நிச்சய மற்ற போக்கு அதிகரித்தால், முதலீட்டு வரவுகளிலும் ஒழுங்கு இல்லாமல் போகும். எனவே முதலீடு செய்வது குறையும். இதன் விளைவாக, எச்சரிக்கை நோக்கத்திற்காக உள்ள பணத்தின் அளவு உயர ஆரம்பிக்கும். '' எதிர்காலத்தில் பாதுகாப்புக்காக, மொத்த வளப் பொருள்களில் (resources) ஒரு குறிப்பிட்ட வீதத்திற்குச் சமமாகப் பணத்தைப் பற்ற விரும்புவது எச்ச ரிக்கை நோக்கம்'', என எச்சரிக்கை நோக்கத்திற்காக ரொக்கம் விரும்பப்படுதலைக் குறிப்பிட்டுக் 'கீன்ஸ்' கூறுகிறார். [1] (The increased desire for liquidity related to the pre-cautionary motive is described by keynes as, ''the desire for security as to the future cash equi-valent of a certain proportion of total resources'')

நுகர்வோர்களைப் போல வியாபாரிகளும் சில எதிர்பாராதவை களை எதிர்காலத்தில் எதிர்பார்த்து அவைகளுக்கு ஏற்ருற் போல் பணத்தைப் பற்றி வைக்க வேண்டியிருக்கிறது. எடுத்துக் காட்டாக, பங்கு மாற்றுச் சந்தை (Stock exchange) ஒழுங்கற்று

[1] Rollin G. Thomes — 'our Modern Banking and Monetary System' (1964) P. 349.

இருந்தால் (un organised) வேண்டியபோது பிணையங்கள், பங்குகள் ஆகியவைகளை நல்ல விலைக்கு விற்க முடியாது. எனவே கூடுதலான பண இருப்பு வைக்க வேண்டி இருக்கிறது. இதே போல் நுகர்வோரின் அல்லது தொழிலகத்தின் பொது வருமான மட்டம் ஒழுங்கற்றே அல்லது கூடுதலாகவோ இருந்தால் எச்சரிக்கை நோக்கத்திற்காக இருப்பு கூடுதலாக இருக்க வேண்டும். ஆனால் நேரடியான உயர்வு இருக்க வேண்டுமென்ற அவசியமில்லை.

(3) ஊக இலாப நோக்கம் :— பிணையங்கள், பங்குகள் ஆகியவைகள் விற்றல், வாங்கல் மூலமாக ஊக இலாபத்தை எதிர் பார்த்துப் பணத்தை இருப்பு வைக்க ஆரம்பித்தல் ஊக இலாப நோக்கத்தின் இலக்கணமாகும். எந்த நடவடிக்கைகள் வட்டி வீத மாற்றங்களை எதிர்பார்த்து நடைபெறுகின்றன. ''இலாப மடையும் நோக்கத்துடன் எதிர்காலத்தில் சந்தை நிலவரம் எப்படி இருக்கும் என நன்கு அறிவது ஊக இலாப நோக்கம் எனப்படும்'', எனக் கீன்ஸ் எடுத்துக் கூறுகிறார். [2] (Keynes himself defines the speculative motive, ''as the object of securing profit from knowing better than the market what the future will bring forth'') எதிர்காலத்தில் என்ன நடக்கும் என்று எப்படி கூற முடியாதோ அப்படியே எதிர்காலத்தில் வட்டி வீதம் என்ன இருக்கும் என்று கணிக்க முடியாது. அதனால்தான் ஊக இலாப நோக்கத்தின் நடவடிக்கைகள் நடைபெறுகின்றன.

வியாபாரிகள் தங்கள் முதலை ஏதாவது ஒரு உருவத்தில் முதலீடு செய்கிறார்கள். சரக்கு மற்றும் மூலப் பொருள்களுக்கோ, எந்திரத் தொகுதிக்கோ, தொழிலைப் பெருக்குவதற்கோ பணத்தைச் செலவிடுகிறார்கள். எதிர்காலத்தில் பொருள்களின் விலை ஏறுமா அல்லது இறங்குமா என ஒவ்வொரு வியாபாரியும் கணிப்பதைப் பொறுத்துத்தான் முதலீட்டுத் தொகையும் அமைகிறது. எடுத்துக்காட்டாக, மூலதனப் பொருள்களின் விலைமட்டம் எதிர்காலத்தில் உயரும் என நினைத்தால் வாங்கும் சக்தியுடைய ரொக்க இருப்பு மறைந்துவிடும். ஒருவரும் பணத்தை நீர்மைத் தன்மையில் வைக்க விரும்பமாட்டார்கள். இதற்கு மாறாக எதிர்காலத்தில் விலை குறையும் என நினைத்தால் தற்போது வாங்கப் படவேண்டிய மூலதனப் பொருள்களைத் தள்ளிப் போட்டுக் கொண்டே போவார்கள்; எனவே, ரொக்க இருப்பு கூடும். இப்படியாக, வியாபாரிகள் எதிர் காலத்தைக் கணித்து ஊக வணிகத்தை மேற்கொள்கின்றனர்.

[2] Keynes, General Theory of Employment, Interest, and Money P. 170.

தனித் தனி சேமிப்பாளர்களும், முதலீடு செய்யும் முகவர்களும் கூட ஊக (இலாப) வணிகத்தில் உட்படுகின்றனர். வட்டி வீதம் உயரும் என்று எதிர்பார்த்தாலும் அல்லது பிணையங்கள், பங்குகள் விலை குறையும் என்று எதிர்பார்த்தாலும் பிணையங்கள் போன்றவைகளை வாங்குவதைத் தள்ளிப் போடுவதில் இலாப முண்டு. இதனால் தனிப்பட்டவர்கள் மற்றும் நிறுவனங்கள் பணத்தின் தேவையை அதிகம் விரும்புவர். இதற்கு எதிர்மாறாக, வட்டி வீதத்தில் குறைவு எதிர்பார்த்தாலோ, அல்லது பிணையங்களின் விலையில் உயர்வு எதிர்பார்த்தாலோ ஊக இலாப பணத்தின் தேவை குறைகிறது.

எச்சரிக்கை நோக்கத்திலும், ஊக இலாப நோக்கத்திலும் பணம் பற்றுவதற்கும், வருமானத்திற்கும் நேரடித் தொடர்பு கிடையாது. ஆனால் பேர நோக்கத்தின் பற்றவிருக்கும் பண இருப்பு வருமானத்தில் நேரடித் தொடர்பு கொண்டுள்ளது.

இதுவரை, பணம் எந்தக் காரணங்களுக்காகத் தேவைப்படுகிறது என்றும், எவ்வளவு தேவைப்படுகிறது என்றும், கண்டோம். பணத்தின் தேவை வாங்கப்படும் பொருள்களின் விலையைப் பொறுத்தும் மாறுபடுகிறது. விலை மட்டத்தில் உயர்வை எதிர்நோக்கினால் பணம் கூடுதலாகப் பற்றவேண்டியிருக்கும். எடுத்துக் காட்டாக ஒரு அலகுப் பொருளின் சராசரி விலை ரூ. 5 ஆக இருக்கையில் 100 அலகுப் பொருள்கள் வாங்க முற்பட்டால் வாங்குவோர் ரூ. 500/= பற்ற வேண்டும்; ரூ. 10 சராசரி விலையாக இருந்தால் ரூ. 1000 வைத்திருக்க வேண்டி வரும். பணத்தின் தேவை வேண்டப்படும் கால அளவைப் பொறுத்தும் அமைகிறது. எடுத்துக் காட்டாக கொடுக்கப்பட்ட ஒரு வாணிப அளவில், இரண்டு திங்கள்களில் வாங்கப்படுபவைகளுக்குத் தேவையான பணத்தின் அளவு ஒரு திங்களுக்கு வாங்கப்படுபவைகளுக்குத் தேவையான பணத்தின் அளவை விட அதிகமாகும். அதாவது,பணத்தின் தேவையைக்கால நீட்சியும்நிர்ணயிக்கிறது எனக் கூறலாம். இந்தக் கால நீளத்தை (length of period) ஒரு ஆண்டின் பின்னமாகக் (fraction) கொள்ளலாம். காலநீளம் ஒரு திங்களானால் பின்னம் $\frac{1}{12}$; இரண்டு திங்கள்களானால் பின்னம் $\frac{1}{6}$. இந்தப் பின்னத்தை இனிமேல் 'K' என்று குறிப்பிடலாம்.

இந்த K பணச் சுழல் வேகத்துடன் (V) நெருங்கிய தொடர்பு கொண்டுள்ளது. V—யின் எதிர் பின்னம் (Reciprocal) தான் K ஆகும். எனவே $K=\frac{1}{V}$; $V=\frac{1}{K}$ எடுத்துக்காட்டாக

சமூகம் நான்கு திங்களுக்கு வாங்கும் திறனைப் பண உருவில் வைக்க விரும்பினால் $K=\frac{1}{4}$; அதாவது, ஒவ்வொரு ஆண்டின் மொத்தப் பணச் செலவீடு, பணத்தின் அளிப்பைப்போல் 3 மடங்காகும் என்பதாகும்; பணச்சுழல் வேகம் ஒவ்வொரு ஆண்டிற்கும் 3 எனப்படும்.[3] K—யும், V—யும் மறுதலைச் சரியீடானதால் (Reciprocal) அவைகளை நிர்ணயிக்கும் காரணிகள் ஒன்றே. அக் காரணிகளைப் பற்றி ∴பிஷரின் மாற்றுச் சமன்பாட்டில் விவரமாகக் கூறியுள்ளோம். தேவைக்கேற்பப் பணப்பற்றை நிர்ணயிப்பதில் K—யும், V—யும் முக்கிய பங்கு கொள்கின்றன.

கொடுக்கப்பட்ட பணத்தின் அளிப்பு, பணத்தின் தேவை ஆகியவைகளின் எந்த நிபந்தனைகளிலும், ஒரே ஒரு விலை மட்டம் தான் இருக்க முடியும். அந்த மட்டத்திற்கு மேல் விலைவாசிகள் இருப்பின், இருக்கும் பண அளவு போதாது என மக்கள் கருதுவர். உடனே அவர்கள் கையிருப்பை அதிகரிக்க முயற்சிப்பர். அதை இரண்டு வழிகளில் செய்வர். ஒன்று செலவுகளைக் குறைப்பர்; மற்றொன்று கூடுதலாகப் பொருள்களையும் பணிகளையும் விற்க முனைவர். இப்படியாகப் பொருள்களின் விலை இறங்கும் வரையில் செய்வர். அதாவது, போதுமான பண உருவிலுள்ள வாங்குந்திறன் உயரும் வரையில் மக்கள் மேற் கூறிய இரண்டு வழிகளையும் கடைபிடிப்பர். இதற்கு எதிரிடையாக, பணத்தின் தேவையும், அளிப்பும் சம நிலையில் இருந்து நிர்ணயிக்கப்பட்ட விலைக்கும் குறைவாக அங்காடி விலைமட்டம் இருந்தால், பணத்தின் வாங்கும் சக்தி மக்கள் விரும்புவதற்கு அதிகமாகவே இருக்கும். ஆகவே அவர்கள் கையிருப்பைக் குறைக்க முயல்வார்கள். செலவை அதிகப்படுத்துவார்கள் அல்லது பொருள்களை வாங்குவார்கள். இதனால் விலை உயரும் பணத்தொகையின் வாங்கும் சக்தி மீண்டும் சமநிலைக்கு வரும்.

ஆகவே, ஒரு இடைப்பட்ட கால அளவுக்குள் உள்ள பணத் தொகையின் வாங்குந்திறன் மக்கள் எந்த அளவுக்குப் பண இருப்பை வைக்க நினைக்கிறார்கள் என்பதைப் பொறுத்தது. இருப்புத்தேவை ஓரளவிலிருக்க, ஒவ்வொரு பண அலகின் வாங்குந்திறன் மொத்தப் பணத் தொகையையும், விலை மட்டத்தையும் பொறுத்திருக்கும். பணத்தின் வாங்குந்திறன் பணத் தொகை மாறுந்திசையிலும், விலை மட்டத்திற்கு எதிர் திசையிலும் மாறும். எடுத்துக்காட்டாக சமூகம் 5,00,000 அலகு பொருள்களுக்காக வாங்கும் சக்தியைப் பண உருவில் வைக்க விரும்புகிறது, எனக் கொள்வோம். பணத்தின் அளிப்பு ரூ. 5,00,000 என்றால் வாங்க வேண்டிய ஒரு அலகு பொருளின்

[3] L. V. Chandler-An Introduction to monetary theory (1966) P. 77.

சராசரி விலை ரூ. 1 ஆகும்; பணத்தின் அளிப்பு ரூ. 10,00,000 என்றால் சராசரி விலை ரூ. 2 ஆகும். ஆகவே பணத்திற்குரிய தேவை மாறுதிருந்தால்தான் ஒரு பணத்தின் மதிப்பு பணத் தொகையையும், விலை மட்டத்தையும் சார்ந்ததாகிறது.

பண அளவுக்கோட்பாட்டில் ரொக்க இருப்புச் சமன்பாடு :—

ரொக்க—இருப்புச் சமன்பாட்டைத் தொகுத்து விளக்கித் தந்த பெருமை ஆல்ஃப்ரட் மார்ஷல் என்ற பொருளியல் வல்லுநரையே சாரும். இவரைப் பின்பற்றியவர்கள் தான் ஆர்தர் சிஸில் பிகு, ஜான்மெய்னார்டு கீன்ஸ், டென்னிஸ் ஹாம் இராபர்ட்ஸன் ஆகிய பொருளியல் வல்லுநர்கள் இவர்கள் அனைவரும் கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்தவர்களானதால், இந்த ரொக்க—இருப்புக் கோட்பாட்டைக் கேம்பிரிட்ஜ் கோட்பாடு என்றும் அழைக்கின்றார்கள்.

ஃபிஷரின் மாற்றுச் சமன்பாட்டில் பணத்தின் மதிப்பு பேரங்களின் மூலம் விளக்கப்பட்டது. அதாவது, பணத்தின் அளவையும், அதன் சுழல்வேகத்தையும் கொண்டு மதிப்பிடப்பட்டது. ஆனால் பண இருப்புக் கோட்பாட்டில், பணத்தை மதிப்பின் வைப்பாகக் கருதி, பணத்தின் மதிப்பில் ஏற்படும் மாற்றத்திற்கான காரணத்தைப்பற்றி ஆய்வு செய்யப்படுகின்றது. எந்த ஒரு குறிப்பிட்ட நேரத்திலும் பணத்தின் அளிப்பானது பணத்திற்கான தேவைக்குச் சமமாக இருக்கும். ரொக்க இருப்புச் சமன்பாட்டில் பணத்தின் அளிப்பு என்பது ஒரு குறிப்பிட்ட நேரத்தில் (at a particular period of time) இருக்கும் பணத்தின் அளவைக் குறிக்குமே தவிர, ஒரு கால இடைவெளியில் (in a period of time) புழக்கத்திலுள்ள பணத்தின் அளவைக் குறிக்காது. இதனால்தான் கேம்பிரிட்ஜ் சமன்பாட்டில் பணத்தின் சுழல்வேகம் கருதப்படவில்லை. ஃபிஷரின் சமன்பாட்டில் பணம் பரிவர்த்தனைச் சாதனமாகப் பயன்படுவதால் பணம் தேவைப்படுகிறது எனக் கொள்ளப்பட்டது. ஆனால் கேம்பிரிட்ஜ் சமன்பாட்டில் பணம் மதிப்பின் வைப்பாக இருப்பதால் அதாவது வாங்கும் திறனைக் கொண்டுள்ளதால், அது விரும்பப்படுகிறது எனக்கொள்ளப் படுகிறது.

முதலில் மார்ஷலின் கூற்றைப்பற்றிப் பார்ப்போம். அவர் கூற்றுப்படி, ஒரு சமூகத்தில் மக்கள் தங்கள் வருமானத்தில் ஒரு பகுதியை வாங்குந்திறனை வைக்கின்றனர். அது பணமாகவோ அல்லது பாங்குகளின் வைப்புகளாகவோ வைக்கலாம். அதாவது, வாங்குந்திறன் உள்ள பணம் தேவைப்படுவது

ஆண்டு வருமானத்தைப் பொறுத்துள்ளது என்பதாகும். அதையே கீழ்க்கண்ட சமன்பாட்டின் மூலம் விளக்கலாம் :—

$$M = KY$$

இதில், M என்பது பணத்தின் அளிப்பாகும் (சட்டமுறைப் பணமும் தேவை வைப்புகளும்).

Y என்பது உண்மை வருமானத்தைக் குறிக்கும் K என்பது மொத்த வருமானத்தில் (Y) ஒரு பகுதியை (Fraction) பணமாக வாங்குந்திறனை — வைத்திருத்தலைக் குறிக்கும்.

இதனை ஒரு மேற்கோள் மூலம் விளக்கலாம் :—

பணத்தின் அளிப்பு (M) ரூ. 1000 எனவும், ஆண்டு நாட்டு வருமானம் (Y) 20,000 அலகுகள் எனவும் கொள்வோம். இதில் சமூகம் 1/10 பங்கு (K) (2,000 அலகுகள்) வாங்க விரும்புகிறதெனக் கொண்டால் ஒரு ரூபாய் பணத்தின் மதிப்பு $\frac{2000}{1000}$ அலகுகள் = 2 அலகுப் பொருள்கள் எனலாம். அதாவது ஒரு பொருளின் விலை ரூ. 0. 50 ஆகும்

பணத்தின் வாங்குந்திறனை அறிய விரும்பினால் மொத்த வருமானத்தில் சமூகம் பற்ற விரும்பும் பொருள்களைப் பணத்தின் அளிப்பால் வகுக்க வேண்டும். இதற்கு மாறாக விலை மட்டம், பணத்தின் அளிப்பை சமூகம் பற்ற விரும்பும் பொருள்களின் அலகுகளால் வகுத்துக் கணக்கிடப்படுகிறது.

பிகுவின் கூற்றும், சமன்பாடும் :—

பணத்தின் மதிப்பு (P) ※ மக்கள் வாங்குவதற்கு விருப்பப் படும் பொருள்கள், பணிகள் ஆகியவைகளை, அவர்கள் வைத் திருக்கும் ரொக்க இருப்புகளால் வகுத்துக் கிடைக்கும் எண் ணிற்குச் சமமாகும். இதன் அடிப்படையில் சமன்பாடு வரையப் படுகிறது.

$$P = \frac{KR}{M}$$

இதில் P என்பது பணத்தின் வாங்குந்திறன் (பணத்தின் மதிப்பு) அல்லது ஒரு பொருள் அலகின் விலை (கோதுமை வீதத்

※ இச்சமன்பாட்டிலுள்ள Pஎன்பது பணத்தின் வாங்குந் திறனைக் குறிக்கும்; ∴பிஷரின் சமன்பாட்டில் உள்ள P - பொது விலை மட்டம் என எடுத்துக் கொள்ளக் கூடாது.

தில் R என்பது எந்த ஒரு குறிப்பிட்ட நேரத்திலும் நாட்டிலுள்ள வளப்பொருள்களின் கோதுமை இனத்தில் மாற்றித் தொகுத்த மொத்தம். K என்பது, வளப்பொருள்களில், (R) எந்த அளவு விகிதத்தை வாங்க மக்கள் பணமாக வைத்திருக்க விரும்பு கின்றனர் என்பதைக் குறிக்கிறது.

M என்பது மொத்தப் பண அலகுகள்.

"மொத்தப் பணத்தொகையின் வாங்கும் சக்தி மக்கள் சமூகத்தின் பொருள்களை எந்த வீதத்தை வாங்கப் பணம் வைத் திருக்க விரும்புகிறார்களோ அந்த அளவைப் பொறுத்தது."

K—யும், R—ம் நிலையானவைகளாக எடுத்துக் கொண்டால் மேற் கூறிய சமன்பாடு ஒரு "நீண்ட சதுர இருபுற வளைவாக" (Rectangular Hyperbola) அடையும் என பிகு சுட்டிக் காட்டு கிறார்.

கீன்ஸ் நந்த சமன்பாடு :—

பண அளவுச் சமன்பாட்டைத் திருத்திய வடிவில் கீன்ஸ் வடிக்கிறார் :

$$n = p\ (k + vk^1)$$

இதில் n என்பது புழக்கத்திலுள்ள செலாவணி நோட்டுகளும் ஏனைய ரொக்கப் பணமும் (other forms of cash);

P என்பது நுகர் பொருள் ஒரு அலகின் விலை;

K என்பது ரொக்கத்தின் மூலம் சமூகம் அடைய விரும்பும் நுகர்ச்சி அலகுகள்;

K என்பது பாங்குப் பணத்தின் மூலம் சமூகம் அடைய விரும்பும் நுகர்ச்சி அலகுகள்;

R என்பது பொறுப்பு வைப்புக்களுக்காக (deposit liablities) வங்கிகளின் ரொக்கக் காப்பிருப்பின் வீதப்பாடு.

K, K^1 மற்றும் r மாறுமல் நிலையானதாகக் கொண்டால், பண அளவுச் சமன்பாட்டில் சட்டப்பணம் (n) மாறும் வீதத்தில் விலை மட்டம் (P) மாறும். K—க்கும், K^1—க்கும் உள்ள வீதப் பாடு வங்கி கொள்கையின் அடிப்படையில் இருந்தாலும், அவை களின் முழு மதிப்பும் மக்களின் பழக்க வழக்கங்களைப் பொறுத்து இருக்கிறது. r—ன் மதிப்பு வங்கிகளின் காப்பு இருப்பு நடை

முறை விதிகளைப் பொறுத்தும் மதிக்கப்படுகிறது. இவைகளின் மதிப்பு மாறுதிருக்கும் வரை, ரொக்க அளவுக்கும் விலை மட்டத்திற்கும் உள்ள நேரடித் தொடர்பு அசைக்க முடியாத உண்மையாகும். இச் சமன்பாடு ஏறக்குறைய மார்ஷல் மற்றும் பிகு ஆகியோரின் சமன்பாடுகளைப் போலவே இருக்கின்றது.

இருந்தாலும் இச் சமன்பாடு திறனுய்வுக்குட்படாமல் இல்லை. கீன்ஸ் நுகர்ச்சிப் பொருள்களை மட்டுமே கணக்குக்கு எடுத்துக் கொண்டுள்ளனர். எனவே, P நுகர்ச்சி அலகுகளின் விலை மட்டத்தை மட்டுமே குறிப்பிடுகிறது; நுகர்ச்சிப் பொருள்களை வாங்குவதற்காக மட்டுமே பணம் பற்றப்படுகிறது. இது சரியல்ல எனக் கீன்ஸ் கடைசியில் அவரே ஒப்புக் கொள்கிறார். பல நோக்கு வணிகப் பேரங்களுக்காகவும் பற்பல சொந்த நோக்கத்திற்காகவும் பணம் வேண்டப்படுகிறது, என அவரே எடுத்துக் கூறுகிறார். ஆகவே P பணத்தின் வாங்குந்திறனை அளிப்பதில்லை.

குறுங்காலத்தில் n மாறிலை K, K^1, r ஆகியவை மாறுவதால், n—க்கும், P—க்கும் உள்ள வீதப்படி அமைந்துள்ள உறவு சமன்பாட்டில் உள்ளபடி இருப்பதில்லை. கீன்ஸின் கருத்துப்படி, குறுகிய காலத்தில் பணத்தின் அளவு மாறுவதற்கேற்ப (n) விலை மட்டம் (p) மாறுவிட்டாலும், நெடுங்காலத்தில் நிச்சயம் மாறுகிறது. ஆகவே, பண அளவு உயர்வின் விளைவாக ஒருவருடைய வருமானம் கூடுதலாலை, வங்கியில் வைப்புகளும் கூடுதலாகும். இந்த வைப்புகள் எதிர்காலத்தில் எதிர்பாராத நிகழ்ச்சிகளுக்காகவும் பற்பல வணிக நடவடிக்கைகளுக்காகவும் சேமித்து வைக்கப்படுகின்றன. வங்கி வைப்புகள் கூடுதலாலை அதற்கு இணையாக வங்கிகளின் காப்பிருப்புகளும் அதிகமாக வைக்க வேண்டியிருக்கும். அதாவது, பண அளவு அதிகரிப்பின் விளைவாக, K, K^1, r, ஆகிய மாறிகள் (Variasles) அதிகரிக்கின்றன.

இராபட்ஸனின் சமன்பாடு :—

$$M = K\ T\ P$$

இதில், **M** = பணத்தின் அளிப்பு;

T = பணத்தின் மூலம் பொருள்கள், பணிகள் ஒரு ஆண்டில் வாங்கப்படும் தொகை;

K = வாணிப நடவடிக்கைக்காக (T) பண வடிவில் வாங்குந்திறனை வைக்கப்பட்டிருக்கும் கால நீளம் (length of period);

P= வாணிப அளவில் அடங்கும் பொருள்களின் விலை மட்டம்.

இச் சமன்பாட்டின்படி. பண அளிப்பு, அளவின் மதிப்பு, வாங்கும் பொருள்களின் அளவுக்கு ஏற்றாற்போல் வைக்கப்பட்டிருக்கும் பணத்திற்குச் (வாங்குந்திறனுக்கு) சமமாக இருக்கும் (K T P). KT என்பது வாங்க வேண்டிய பொருள்களுக்காகப் பற்றிருக்கும் பணத்தின் வாங்குந்திறன் ஆகும்; P என்பது அப் பொருள்களின் ஒவ்வொரு அலகின் சராசரி விலையாகும். M, K மற்றும் T ஆகிய காரணிகளின் மாற்றத்தால் P—யும் மாறும். அதாவது, பண அளவு மாற்றத்தினால் P_1 மாறும் அல்லது, வாங்குந்திறனிலுள்ள பணப்பற்று மாற்றத்தினால் P மாறும். வாங்குந்திறனின் மாற்றம் T மற்றும் K—ஐப் பொறுத்திருக்கிறது.

ரொக்க இருப்புச் சமன்பாட்டைச் பேரச் சமன்பாடாகவும் மாற்றலாம். $V = \frac{1}{K}$ அல்லது $K = \frac{1}{V}$ என முன்பே பார்த்தோம். எனவே, $M = \frac{1}{V}$, $PT = \frac{PT}{V}$ அதாவது MV = PT. ரொக்கச் சமன்பாடு பணப்பற்றுவதற்கான தேவையையும், பேரச் சமன் பாடு பணச்சுழற்சியையும் அடிப்படையாகக் கொண்டுள்ளன. இதனையே இராபர்ட்ஸன் முறையே "அமர்ந்த பணம்" (Money Sitting) என்றும் "பறக்கும் பணம்" (Money on the wing) என்றும் குறிப்பிடுகிறார்.

ரொக்க இருப்புக் கோட்பாட்டின் மதிப்பீடு :

சிறப்புகள் :—பணத்தின் தேவையைக் கொண்டு பணத்தின் மதிப்பு (விலை மட்டம்) ரொக்க இருப்புக் கோட்பாட்டில் கணக்கிடப்படுகிறது. பணப்பற்று K என்று அழைக்கப்படுகிறது. மக்கள் பணத்தேவையை அதிகமாக வைக்க விரும்புகிறார்கள் எனில் பொருள்கள், பணிகள் மேல் செலவு செய்வதைக் குறைத்துக் கொள்கிறார்கள் எனப் பொருள்படும். பண அளவுக் கோட்பாட்டில் பணத்தின் அளிப்பு மாறுமல் இருப்பதாகக் கொள்ள வேண்டும். எனவே, பொருள்கள், பணிகள், ஆகியவை களுக்கான தேவை குறைவதால் விலை குறைகிறது. இதற்கு மாறாக, மக்கள் குறைந்த அளவுக்கே பணத்தை வைக்க விரும்பு கிறார்கள் என்றால் பொருள்கள், பணிகளுக்கான தேவை கூடு கிறது எனப் பொருள்படும். எனவே விலை உயரும். இவ்வகையில் தான், வியாபாரச் சுழலும், வீக்கமும், வாட்டமும் பொருளாதாரத் தில் எப்படி நடைபெறுகின்றன என ரொக்க இருப்புக் கோட்பாடு விளக்குகிறது.

குறைபாடுகள் :—முதலில் ரொக்க இருப்புக் கோட்பாடு பணத்தின் வாங்குந்திறனை நுகர்ச்சிப் பொருள்களை அடிப்படையாகக் கொண்டு மதிப்பிடுகிறது. பிகு உண்மை வருமானத்தை கோதுமை மூலம் விளக்குகிறார். கீன்ஸ் நுகர்ச்சிப் பொருள்களை எடுத்துக் கொண்டு விளக்குகிறார். ஆனால் பணத்தை நுகர் பொருட்கள் வாங்குவதற்கு மட்டும் உபயோகப்படுத்தப்படுவ தில்லை. எல்லா வகைப் பொருள்களுக்கும் பயன்படுத்தப்படு கிறது. ஆகவே இந்தக் கோட்பாடு ஒரு அணியில்லாத (Single) கோட்பாடாகும். பொருளியலிலுள்ள விசைத்திறம் வாய்ந்த (Dynamic complexities) இயல்புகள் நன்கு விளக்கப்பட வில்லை.

இரண்டாவதாக, விலை மட்டம் நிர்ணயிப்பதில் பணத்தின் தேவை முக்கிய பங்கு கொள்கிறது. ஆனால் வேறு காரணி களும் விலை மட்டத்தை ஆளுகின்றன. எடுத்துக் காட்டாக வருமானம், சேமிப்பு மற்றும் முதலீடு செய்தல் ஆகிய மாறி களைப்பற்றி ரொக்க இருப்புக் கோட்பாடு குறிப்பிடவில்லை. பணத்தின் தேவை மாறினால் விலைமட்டம் மாறுவதாகக் குறிப் பிடப்படுகிறது. ஆனால் அந்தத் தேவை மாறுவதற்குக் காரண மான காரணிகளைப்பற்றி விவரிக்கவில்லை.

மூன்றாவதாக, இக் கோட்பாடு ஊக இலாப நோக்கத்திற் காகப் பணம் பற்றப்படுவதைப் பற்றிக் குறிப்பிடவே இல்லை. எனவே கணக்குக்கெடுத்துக் கொள்ளப்படவில்லை.

நான்காவதாக, K—யும் $\left(\frac{1}{V}\right)$, T—யும் எந்த அளவுக்குப் பேரக்கோட்பாட்டில் திறனுய்வுக்குள்ளாயிற்றோ, அந்த அளவுக்கு ரொக்க இருப்புக் கோட்பாட்டிலும் திறனுய்வுக்குள்ளாயிருக் கின்றன.

பேரச் சமன்பாடும், ரொக்க—இருப்புச் சமன்பாடும் :

பண அளவுக் கோட்பாட்டில் பேரச் சமன்பாட்டையும், ரொக்க—இருப்புச் சமன்பாட்டையும் கீழ்க்கண்டபடி ஒப்பிட்டுப் பார்க்கலாம் :—

முதலில், இரண்டு கோட்பாடுகளும் பணத்திற்கான தேவையை வெவ்வேறு வகையில் கூறுகின்றன. ரொக்க பேரக் கோட்பாட்டில் பொருள்கள், பணிகள், பிணையங்கள் மாற்று வதற்குப் பணம் தேவைப்படுகிறது. ரொக்க—இருப்புக் கோட் பாட்டில், அப் பொருள்களை வாங்குவதை முன்னிட்டு பணம் பற்றுவதற்காகப் பணம் தேவைப்படுகிறது.

இரண்டாவதாக, இரண்டு கோட்பாடுகளிலும் பணமானது இரு நோக்குகளில் கையாளப்படுகிறது. பேரச் சமன்பாட்டில் பணம் சுழல்கிறது. ரொக்க இருப்புச் சமன்பாட்டில் பணம் அமர்கிறது; இது உண்மை வருமானத்தில் ஒரு பகுதியாகும் (K). அதாவது, பணச்சுழல் வேகம், இருப்புக்கு நேர்மாறானது.

மூன்றாவதாக, ∴பிஷரின் சமன்பாட்டில் பண அளவு ஒரு கால இடைவெளியில் உள்ள பணத்தொகையைக் குறிக்கிறது. ஆனால் ரொக்க இருப்பில் ஒரு குறிப்பிட்ட நேரத்தில் பண அளிப்பின் அளவைக் குறிக்கிறது. அதனால் தான் பணத்தின் சுழல்வேகம் கணக்கிடப்படவில்லை.

நான்காவதாக, வருமானம் மற்றும் வேலை வாய்ப்பு முதலிய வைகளை விளக்குவதற்காக உள்ள ரொக்க விருப்பக் கோட்பாடு (liquidity preference) முக்கியத்துவம் அடைய காரணமாக விளங்குகிறது ரொக்க—இருப்புக் கோட்பாடு.

ரொக்க — இருப்புக் கோட்பாடு பணத்தைப் பற்ற உள்ள தேவையை அடிப்படையாகக் கொண்டு பணத்தின் மதிப்பைக் கணக்கிடுவதால், இக் கோட்பாடு பேரக்கோட்பாட்டை விடச் சிறந்தது எனக் கூறலாம்.

8. பணத்தின் மதிப்பு (தொடர்ச்சி) (ஈ)

பணத்தின் பண்டக் கோட்பாடு
(Commodity Theory of Money)

சென்ற பகுதிகளில் பண அளவுக்கோட்பாட்டிலும், பேர வகைக் கோட்பாட்டிலும், ரொக்க — இருப்புக் கோட்பாட்டிலும் பணத்தின் மதிப்பு எவ்வாறு அளவிடப்படுகிறது எனப்பார்த்தோம். இப் பகுதியில் பண்டக் கோட்பாட்டின் மூலம் பணத்தின் மதிப்பு எவ்வாறு கணக்கிடப்படுகிறது எனப் பார்ப்போம். இந்தப் பண்டக் கோட்பாடு பணம் மதிப்பீட்டுக் கோட்பாடுகளில் மிகவும் பழைமையானதொன்றாகும். எந்த ஒரு நாட்டில் திட்டப் பணம் (Standard Money) உலோகத்தின் மூலம் ஆளப்படுகிறதோ அந்நாட்டிற்கு இக்கோட்பாடு மிகவும் பொருந்தும். பணமாகப் பயன்படுத்தப்படும் உலோகம் பொன்னாகவோ, வெள்ளியாகவோ, வேறு உலோகமாகவோ இருக்கலாம்.

ஒரு பொருளின் மதிப்பு, அளிப்பு, தேவை ஆகியவற்றைக் கொண்டு எப்படி நிர்ணயிக்கப்படுகிறதோ, அப்படியே பண்டப் பணத்தின் மதிப்பும் நிர்ணயிக்கப்படுகிறது. ஏறத்தாழ, ரொக்க-இருப்புக் கோட்பாடும், பண்டக் கோட்பாடும் ஒரே மாதிரியாக இருந்தாலும் சிறு வேறுபாடுகள் கருதப்படுகின்றன. ரொக்க-இருப்புக் கோட்பாட்டில் தேவையும், அளிப்பும் விளக்கப்படும் போது எல்லாவகைப் பணமும் ஆளப்படுகிறது. ஆனால் பண்டக் கோட்பாட்டில் எந்தப் பொருளைக் கொண்டு திட்ட நாணயம் செய்யப்படுகிறதோ அப்பொருளின் தேவை அளிப்பு நடவடிக்கைகளை மட்டும் எடுத்துக் கொண்டு ஆய்வு செய்யப்படுகிறது. இக் கோட்பாட்டின்படி, பணத்தின் மதிப்பு, பணமாக்கக் கூடும் பண்டத்தின் மதிப்பைப் பொறுத்ததாகும். அதாவது, எந்த பொருளைக் கொண்டு திட்ட நாணயம் தயாரிக்கப்படுகிறதோ அதுவே பணமாகும். எடுத்துக்காட்டாக, பொன் உலோகத்தை எடுத்துக் கொள்ளலாம்.

பொன் திட்டத்தின் கீழ் உள்ள ஒரு நாட்டில் பொன்னின் பண மதிப்பும், அப்பொன்னின் பொருள் மதிப்பும் சமமாக இருக்கும். ஒரு பவுன் நாணயமாக இருந்தாலும், அதே பவுன் பொருளாகக் கருதப்பட்டாலும் மதிபபு ஒன்றே. எனவே, ஒரு திட்டப் பொற் பணம் 'நிறை உருப்பணம், ஆகும் (A standard gold money is "full-bodied" money).

இந்த இரு மதிப்புகளும் ஒன்றுக இருக்க வேண்டுமானால், பணக்கட்டுப்பாட்டு அதிகாரிகள் (Monetary authorities) தங்கு தடையின்றிப் பொன்னை ஒரு குறிப்பிட்ட விலையில் விற்கவும், வாங்கவும் செய்ய வேண்டும்.

ஒரு பொன்னுக்கு மதிப்பு எப்படி அளிக்கப்படுகிறது? பொருளாதாரத்தில் எப்படி ஒரு சாதாரண பொருளுக்கு மதிப்பு அளிக்கப்படுகிறதோ — எந்த அளவுக்கு அது மற்றப் பொருள் களை வாங்க முடியுமோ — அப்படியே பொன்னுக்கும் மதிப்பு இடப்படுகிறது. ஒரு அலகுப் பொன் எந்த அளவுக்கு மாற்ற வேண்டிய பொருளை வாங்கும் அளவுக்குச் சக்தி பெற்றிருக்கிறதோ அதைப் பொறுத்து (விலை) மதிப்பிடப்படுகிறது. எந்த ஒரு நாடு பொன் திட்டத்தை மாற்றுமல் நிலையாகக் கொண்டுள்ளதோ, அப்போது பொன்னின் விலை. பணவியல் அதிகாரிகள் நிர்ண யித்தபடி, மாறுமலிருக்கும்; ஆகவே ஏனைய பொருள்களின் விலையை அதிகரித்தால், பொன்னின் மதிப்பைக் குறைக்க முடி யும்; ஏனைய பொருள்களின் விலையைக் குறைத்தால் பொன்னின் மதிப்பை உயர்த்த முடியும்.

இனி, பொன்னின் மதிப்பு அதன் அளிப்பாலும், தேவை யாலும் எவ்வாறு நிர்ணயிக்கப்படுகிறது எனப் பார்ப்போம் :—

பொன்னின் அளிப்பு :— எந்தப் பொருளின் மதிப்பும், பொது வாகக் கூறின், அதன் அளிப்பு நிலையைப் பொறுத்து இருக்கிறது. பொன்னும் ஒரு பொருள் தானே! எனவே, அதன் மதிப்பும் அதன் அளிப்பைச் சார்ந்திருக்கிறது. பொன்னின் அளிப்பு அள வில் இரு கூறுகள் உள; (1) நடப்பு உற்பத்தி (2) திரட்டப்பட்ட இருப்பு (accumulated stock) இவைகளைப் பற்றி விவரிக்கலாம் :

பொன் உற்பத்தியின் நெகிழ்ச்சி : பொன் உற்பத்தி உயர்ந்து செல் செலவுக்குப்பட்டதாகும். உற்பத்தி அதன் மதிப்புக்கு ஏற்றபடி மாறுகிறது. பொன் மதிப்பு உயர உயர உற்பத்தி அதிகரிக்கப் படும். பொருளாதாரக் கோட்பாட்டின்படி ஒரு குறிப்பிட்ட உச்ச

அளவுக்குப் பின் உற்பத்தியின் அளவு வீதம் குறைய ஆரம்பிக்கும். என்னதான் உற்பத்திச் செலவு செய்தாலும் உற்பத்தி குறையும். எனவே, உற்பத்தியாளர்கள் தாங்கள் இடும் செலவுக்குச் சம மாக உற்பத்தி கிடைக்கும் வரை உற்பத்திச் செலவைச் செய்து கொண்டிருப்பார்கள். அதற்கு மேல் இடப்பட்ட செலவு உற்பத்திச் செலவைத் தாக்குவதால் அடக்க விலை கூடுதலாகும். அப்படியானால் பொருளின் விலை அதிகரிக்கும்; விலை கூடுதலானால் மக்களின் தேவை குறையும்; எனவே உற்பத்தி குறையும்; வேறு வழியிலும் பொன்னின் தேவை நிலை குறையலாம். ஏனைய பொருள்களின் விலை மட்டம் உயர்ந்தால் பொன்னின் மோகம் குறைய ஆரம் பிக்கும். அப்படி மோகம் குறைந்தால் உற்பத்தி தானாகவே குறையும். இதே போல், விலை மட்டம் குறைந்தால் பொன்னுக் குரிய தேவை மிகுதியாகும்; உற்பத்தியாளர்கள் உற்பத்தியை மிகுதிப்படுத்துவர். தேவையைப் பொறுத்து மட்டும் பொன் உற்பத்தி மாறுகிறது எனக் கூற முடியாது. பொது விலை மட்டம் உயர்ந்தால் பொன் உற்பத்திக் காரணிகளின் செலவும் கூடும். இதனால் உற்பத்திச் செலவு உயரும். ஆகவே உற்பத்தி குறைக் கப்படும். ஒரு சில சுரங்கங்கள் மூடப்படும். இதன் விளைவாக விலைமட்ட உயர்வு குறைக்கப்படும். விலை மட்டம் குறைந்தால் பொன்னின் உற்பத்திச் செலவு குறையும். உற்பத்திச் செலவு குறைவின் காரணமாக மீண்டும் மூடப்பட்ட பொற் சுரங்கங்கள் திறக்கப்படலாம். இதனால் உற்பத்தி உயரும். விலை மட்ட இறக்கம் குறைகிறது. எனவே, பொன் மதிப்பு, அதன் அளிப் பையும், அளிப்பு உற்பத்திச் செலவையும் பொறுத்தது என்பது தெளிவாகிறது.

புதிதாகப் பொற்சுரங்கங்கள் கண்டு பிடித்து அதன் வாயி லாக பொன் அளிப்பு கூடுதலானாலும்—1850-ல் கலிபோர்னியா மற்றும் ஆஸ்திரேலியாவிலும் 1889-ல் ஆப்பிரிக்கா, அலாஸ்கா மற்றும் கொலன்டிக் (klondike) ஆகிய இடங்களில் பொன் படுகைகள் (deposits) கண்டு பிடிக்கப்பட்டன—உற்பத்திச் செல வைக் குறைப்பதற்கு உரிய அறிவியல் முன்னேற்றம் ஏற்பட் டாலும், சிக்கனத்தில் பொன் தூய்மைப்படுத்தப்பட்டாலும் (refining), பொன்னின் மதிப்பு குறைகிறது.

ஆனால் பொன்னின் மதிப்பு உற்பத்திச் செலவைப் பொறுத்து மதிப்பிடப்படுகிறதா என்ற வினா எழலாம். இதற்கு விடையை அலசிப் பார்த்தால் மேலும் இரண்டு வினாக்கள் எழுகின்றன. முதலில், எந்த அளவுக்குப் பொன்னின் உற்பத்திக்கும் உற்பத்திச்

செலவுக்கும் உறவு இருக்கிறது? என்ற வினா எழுகிறது. உற்பத்திச் செலவு மாறினால் உற்பத்தியின் அளவும் மாறும் என்று பார்த்திருக்கிறோம். ஆனால் இது குறுகிய காலத்தில் மாறாது; நீண்ட காலத்தில்தான் மாறும். பொன் சுரங்கங்கள் என்பது பேரளவு உற்பத்தி வகையைச் (Large scale production) சேர்ந்ததால் பெரும் மூலதனம், நீண்டகால அமைப்பு ஆகிய வைகளைக் கொண்டுள்ளது. எந்த ஒரு மாற்றமும் உடனடியாக இவ்வகைத் தொழிலைப் பாதிக்காது. பெரும்பாலான சுரங்கங் களில் தொழில் ஆரம்பித்த காலத்திலிருந்து பொன்னைத் தூய்மைப் படுத்தி விற்கக்கூடிய அளவுக்குக் கொண்டு வருவதற்குக் குறைந்தது 5 முதல் 8 ஆண்டுகளாவது ஆகும் எனக் கணக்கிடப்பட்டிருக்கிறது.

இரண்டாவது, பொன்னின் மொத்த அளிப்பு எந்த அளவுக்குப் பொன்னின் நடப்பு உற்பத்திச் செலவோடு நெருங்கிய உறவு கொண்டுள்ளது என்பதாகும். நெருக்கம் அவ்வளவாக இல்லை எனக் கூறலாம். பொன்னின் மொத்த அளிப்பைக் கணக்கில் எடுக்கும் போது பழைய இருப்பின் அளவு எவ்வளவு எனக் கணக்கிட வேண்டும். மொத்த அளிப்பில் பழைய இருப்பின் வீதம் கூடுதலாக இருந்தால் தற்போது ஏற் பட்ட கூடுதல் உற்பத்திச் செலவால் பொன்னின் மதிப்பு மாறாது. எனவே, முடிவாகக் கூற வேண்டியது என்னவென்றால், "உற் பத்திச் செலவு கோட்பாடு" (Theory of cost of production) குறுங்காலத்திய பொன்னின் மதிப்பை விளக்காது என்பதாகும்.

பொன்னின் தேவை: பொன்னின் தேவையைப் பொறுத்தும் அதன் மதிப்பு அளவிடப்படுகிறது. பொன்னின் உபயோகத் தையும், அது மக்களால் வைத்திருக்கப்படுவதையும், வேண்டப் படுவதையும் பற்றி நாம் இங்கு விவரமாகக் குறிப்பிட வேண்டிய அவசியமில்லை. பணத்துறைத் (Monetary purposes) தேவையை அல்லாமல் பணத்துறை யற்ற எல்லா வகைத் தேவைக்கும் சேர்த்துத் தொழில் துறைத் தேவை, (Industrial demand for money) எனக் குறிப்பிடலாம். எனவே, பொன்னின் தேவை, தொழில்துறைத் தேவையையும், பணத்துறைத் தேவையையும் கொண்டுள்ளது. ஏதாவது ஒரு தேவையை விட்டு விட்டு ஆய்வு செய்தால் அது நிறையற்றதாகவே இருக்கும்.[1]

முதலில் தொழில் துறைத் தேவையை எடுத்துக் கொள் வோம். இத்துறைக்குப் பொன் மிகுதியாகத் தேவைப்பட்டால்,

[1] L. V. Chandler — An Indroduction to Monetary Theory (1966) P. 96.

பணத்துறைக்குக் கிடைக்கும் பொன் அளிப்பு குறையும். எனவே, பொருளாகவும், பணமாகவும் உள்ள பொன்னின் மதிப்பு உயரும். இதற்கு மாறாக, தொழில் துறைத் தேவை குறைந்தால் பணத் துறைக்குக் கிடைக்கும் அளவு உயரும்; பொன்னின் மதிப்பு இறங்கும். ஆனால் தொழில் துறையில் பொன்னின் தேவை நெகிழ்ச்சியுடையதாகக் காணப்படுகிறது. பணத் துறையில் தேவை உயர்ந்து அதனால் பொன் விலை ஏறுமாயின், தொழில் துறைத் தேவை குறைகிறது. இதன் காரணமாகப் பணத் துறையில் விலை ஏறுவது தணிக்கப்படுகிறது. எல்லா விலைகளும் ஏறும் போதும், பொன் திட்டத்தின் கீழ் பொன்னின் விலை மாறுத நிலையானதாகையால் பொன்னால் செய்யப்பட்ட பொருள்களின் விலைகள் பின் தங்கும். ஆகவே தொழில் துறையில் பொன்னுட்சி மிகுதியாகும். உடனே பணத்துறையிலிருந்து பொன் கவரப்பட்டு, பணத்தொகை குறைக்கப்படுவதால் விலை ஏற்றம் தடைபடும். இப்படியாக, எல்லா விலைகளும் இறங்கும் போது பொன் விலை இறங்காததால் தொழில் துறையில் ஆட்சி குன்றி அங்கிருந்து பொன் பணத்துறைக்குப் பெயர்ந்து, அதன் விளைவாகப் பணத்தொகை விரிவடைவதால், விலை இறக்கம் தடைபடும். ஆகவே பணத்துறைத் தேவை மாறுதலாலும், அளிப்பு நிலை மாறுதலாலும் ஏற்படும் பொன் விலை மாறுதலைத் தொழில் துறைத் தேவை நெகிழ்ச்சி தணிக்கிறது.

தொழில் துறைத் தேவை பொன் மதிப்பை மாற்றக் கூடுமென்றாலும் அச்செயல் நெடுங்காலத்தில் தான் நடைபெற முடியும். குறுங்காலத்தில் மதிப்பு மாற்றத்தை விளக்குவதில்லை. தொழில் துறைத்தேவை என்பது மொத்தத் தேவையின் ஒரு பகுதியே யாகும்.

மேலும், பணத்துறைச் சாராத தேவைகளில், கிழக்கு நாடுகளின் (Oriental demand) தேவையும் மிக முக்கியமானது. குறிப்பாக, இந்திய நாட்டைப்பற்றிக் குறிப்பிடப்படுகிறது. ஆபரணங்களுக்காகவும், இருப்பு வைத்துக் கொள்வதற்காகவும் அதிகமான அளவுக்கு இந்தியாவில் பொன்னுக்கு மோகமிருக்கிறது. குறிப்பாகச் செழிப்புள்ள ஆண்டுகளில் பொன் இறக்குமதி கூடுதலாகவும், செழிப்பற்ற ஆண்டுகளில் இறக்குமதி குறைவாகவும் ஒரு நாட்டில் இருக்கும். இப்படியாக, கிழக்கிந்திய நாடுகளின் தேவையால் பொன் மதிப்பு மாறுபடுகிறது. மொத்த பொன் தேவைகளில் இப் பகுதியின் பங்கு குறைவானதால் குறுங்காலத்தில் உள்ள மாற்றங்களை அறிய முடியாது. ஆனால் நெடுங்காலத்தில் பொன் மதிப்பு மாற்றங்கள் நடைபெறுகின்றன.

இரண்டாவதாகப் பணத்துறைத் தேவைக்கான பொன்னைப் பற்றிப் பார்ப்போம். எல்லாத் தேவையை விடப் பணத்துறைத் தேவைக்கு மிகுதியான பொன் தேவைப்படுகிறது. பழைய இருப்பைவிட ஆண்டொன்றுக்கு உலகில் பணத்துறைத் தேவைக் காக மொத்தப் பொன் உற்பத்தியில் சராசரியாகப் பாதிக்கு மேல் ஒதுக்கீடு செய்யப்படுகிறது. பொன்னின் தேவையின் அளவு இரண்டு காரணிகளைப் பொறுத்து அமைந்துள்ளது. ஒன்று, உலகில் எல்லாவகைப் பணத்திற்கான தேவையைச் சார்ந்தது. மற்றொன்று, அந்தத் தேவைக்கு எந்த வீதத்தில் பொன்னை வைக்கப்படவேண்டுமென்பது. இவை இரண்டின் அளவும் அதி கரித்தால் பணத்துறைக்குப் பொன்னின் தேவை அதிகரிக்கும்.

எனவே, தற்காலத்தில் தொழில் துறைத் தேவையை விடப் பணத்துறைத் தேவையே முக்கியமானது எனக்கூற வேண்டி யிருக்கிறது. தொழில், வியாபாரம், வாணிபச் சுழல் ஆகியவை இயங்கப் பணம் முக்கிய பங்கு கொள்கிறது. பணத்தின் வெளி யீடும், கடனுக்குதலும் பொன்னின் அடிப்படையிலேயே நிகழ் கின்றன. எனவே பணத் துறைக்குப் பொன், இன்றியமையாத தாகும். தொழில் துறையில் பொன் வேண்டப்படாவிட்டாலும் பணத்துறையில் பொன் வேண்டப்படுவதால் அதன் மதிப்பு மாறுது. இருந்தாலும், தொழில்துறைத் தேவையைப் புறக் கணித்து விட்டுப் பொன்னின் மதிப்பை கணிக்க முடியாது. பொன்னின் மதிப்புக்கு இரண்டு வகை தேவைகளுமே முக்கிய மானதாகும். இதில் பெரும் பங்கு கொள்வது பணத்துறைத் தேவைதான்

பண்டக் கோட்பாட்டை மாற்றுரிமையற்ற காகித பணத்திற்குப் பொருத்துதல்:
(The Commodity theory applied to inconvertible paper money)

பொன் திட்டத்தில் பண்டக் கோட்பாடு எந்த அளவுக்குப் பணத்தின் மதிப்பைக் கணித்தது என்றும், அப்பொன் திட்டத்தில் பொன் உருவில் பணத்தின் மதிப்பு நிலையானது என்றும் விவரித்தோம். இந்தப் பண்டக் கோட்பாடு மாற்றுரிமையற்ற காகி தப்பணத் திட்டத்திற்கும் பொருந்தும் எனச் சில பொருளியல் கோட்பாட்டாளர்கள் கூறுகின்றனர். அவர்கள் கூற்றுப்படி, அவ்வகைக் காகிதப் பணத்தின் மதிப்பு காகிதத்தின் மதிப்பைக் கொண்டு கணக்கிடுவதில்லை; அக் காகிதம் எதிர்காலத்தில்எந்த அளவுக்குப் பொன்னை வாங்க முடியும் என்பதனை வைத்துக் கணக்கிடப்படுகிறது. எந்த நேரத்திலும் மாற்றுரிமையற்ற காகிதப் பணத்தின் மதிப்பு (1) மீட்பில் பெறக்கூடிய பொன் (2) மீட்பு நிச்சயம் (3) பொன்னின் வாங்குந்திறன் (4) மீட்புக்

காகக் காக்க வேண்டிய காலம் மற்றும் (5) காகிதப் பணம் இருப்பு வைப்பினால் ஏற்படும் வட்டி (வீதம்) இழப்பு ஆகியவற்றைச் சார்ந்திருக்கிறது. ஆகவே எந்த நேரத்திலும் மாற்றுரிமையற்ற காகிதப் பணத்தின் மதிப்பு, எதிர்காலத்தில் காகிதப் பணத்தைப் பொன் வடிவில் மீட்கக்கூடிய, கழிவு செய்யப்பட்ட பொன்னின் மதிப்புக்குச் சமமாகும்.[2] (In otherwords, the value of an inconvertible paper money at any time is equal to the discounted value of gold in to which the paper money will in future become convertible.)

எதிர்காலத்தில் மீட்பு நிச்சயமாயின் (தற்போது மாற்றுரிமையற்ற) காகிதப் பணத்தின் மதிப்பு மாறுபடுகிறது. அதாவது மதிப்பு வீழ்கிறது. ஆனால் உண்மையில் மாற்றுரிமையற்ற காகிதப் பணங்கள் இதைவிட உயர்ந்த மதிப்பில் செலாவணியில் இருப்பதைக் கண்கூடாகக் காண்கிறோம். ஆனால் இதற்குரிய காரணத்தைப் பண்டக் கொள்கை விளக்கவில்லை. எனவே, இக் கோட்பாடு மாற்றுரிமையற்ற பணத்திற்குப் பொருத்தப் படாது என முடிவு செய்யலாம்.

பண்டக் கோட்பாடு மதிப்பீடு:

இக் கோட்பாடு உலோகக் கட்டித் திட்டத்தின் (Bullionist theory of money) கீழ், எடுத்துக்காட்டாக, பொன்திட்டத்தின் கீழ் நன்கு இயங்குகிறது. மாற்றுரிமையற்ற காகிதத்தாள் திட்டத்தின் கீழ் இயங்குவதில்லை என முன்பே காரணங்களுடன் பார்த்தோம். அதாவது, எல்லாவகைப் பணத்திற்கும் இக் கோட்பாடு பொருந்தாது எனலாம். பொன் திட்டத்தின் கீழ் பணத்தின் மதிப்பு அதற்கீடாகக் கொடுக்கப்படும் அல்லது வாங்கப்படும் பொன்னின் மதிப்புக்குச் சமமாகவே இருக்கும். இதில் ஒரு வினா எழும். பொன் மதிப்பு பணத்திற்கு மதிப்பைத் தருகிறதா? அல்லது பண மதிப்பு பொன்னுக்கு மதிப்பு தருகிறதா? என்பதாகும். இப் பண்டக் கோட்பாட்டுப்படி, பொன்னின் மதிப்பே பண மதிப்புக்குக் காரணம் ஆகும். ஆனால் தொழில் துறையைவிடப் பணத்துறைக்கே பொன் கூடுதலாக வேண்டப்படுவதால், பணமதிப்பே பொன்னுக்கு மதிப்பைத் தருகிறது என்று கூறலாம். இவை இரண்டும் ஒன்றுக்கொன்று முரணாக இருக்கின்றன?

பண்டக் கோட்பாட்டாளர்கள் இக் கோட்பாட்டிற்கு, பொன் உற்பத்திச் செலவு, பொன் அளிப்பின் மாற்றம் மற்றும் நெகிழ்ச்சி,

[2] Ibid, P. 103.

பொன்னின் மதிப்பே பணத்தின் மதிப்பு, பொன்னுக்குப் பணத் துறைத் தேவையின் விரும்புதலுக்குரிய காரணங்களைக் குறைத்து எடை போடுதல் ஆகியவைகளுக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்துள்ளனர். இப்படி அதிக முக்கியத்துவம் கொடுக்காமல் சாதாரணமாக அக்கோட்பாடு விவரிக்கப்படின், பணத்தின் உண்மை மதிப்பு உலோகத் திட்டத்தின் கீழ், இலகுவாகப் புரிந்து கொள்ள முடியும். அப்படியே தெளிவான முறையில் அக்கோட் பாடு விவரிக்கப்பட்டாலும், பண அளவுக் கோட்பாட்டுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது, ஒரு நாட்டுப் பொருளியல் இயக்கத் தையும், பொது விலை மட்டம் நிர்ணயிக்கப்படுவதையும் சரிவர விளக்கவில்லை. பண அளவுக் கோட்பாட்டாளர்கள் T, K (அல்லது V) மற்றும் மொத்த பண அளிப்புக்கும் பொன் இருப்புக்கும் உள்ள வீதம் ஆகியவைகளை நன்கு ஆய்வு செய்தது போல் பண்டக்கோட் பாட்டாளர்கள் ஆய்வு செய்யவில்லை. சுருங்கக்கூறின் பண அளவுக்கோட்பாடு, பண்டக் கோட்பாட்டை விட ஒரு படி உயர்ந்ததென்றே கூறலாம்.

9. நாட்டு வருமானம்
(National Income)

இதுவரை கண்ட பண அளவுக் கோட்பாடுகள் பணத்திற்கும் விலைவாசிகளுக்கும் உள்ள தொடர்பை விவரித்தன. அக்கோட்பாடுகளின் அடிப்படையில் உருவான கைக்கோளின் (monetary policy) முக்கிய நோக்கம் விலைவாசி மட்டத்தை நிலைப்படுத்துதலாகும். ஆனால் கடந்த 'சில பத்தாண்டுகளாக' (few decades) முழு வேலை வாய்ப்பு மட்டத்தை அடைவதிலும், அம் மட்டத்தை நிலை பேருக்கம் செய்வதிலும் பொருளாதார அறிஞர்கள் முனைந்துள்ளனர். அதையே பண வாக்கைக் கைக்கோளின் முக்கிய நோக்கமாகவும் கொண்டுள்ளனர்.

முழு வேலை வாய்ப்பு மட்டத்தை அடைய வேண்டிய நோக்கத்தை ஆக்கத்திற்காக எடுத்துக் கொண்டதற்கு முக்கிய காரணங்கள் இரண்டு. ஒன்று, 1930-ல் நிலவிய 'மந்தநிலை' யாகும். மந்த காலத்தில் ஏற்பட்ட வேலையில்லாப் பிரச்சினை 'தற்காலிகமானதுதான்' என்ற கூற்று, பொய்க் கூற்றுகப் போய் விட்டது. வேலையில்லாப் பிரச்சினை தொடர்ந்து நிலவத் தொடங்கிற்று. இரண்டாவதாக, பணம், வட்டி மற்றும் வேலை வாய்ப்புப் பொதுக் கோட்பாடு (General Theory of Employment, Interest and Money) என்பதனை 1936-ல் ஜான் மெய்னார்டு கீன்ஸால் வெளியிடப்பட்டதுதான். நாடு முழு வேலை மட்டத்தை அடையுமுன்னரே பொருளாதாரம் சமநிலையில் இருக்க முடியும் என்ற கருத்தை அவரது கோட்பாட்டில் கீன்ஸ் விளக்கியுள்ளார். எனவே, பொருளியல் அறிஞர்கள் வேலையில்லாப் பிரச்சனைக்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்கத் தொடங்கினர். நாட்டில் முழுவேலை மட்டம் நிலவுகின்றது என்றால் உற்பத்திக் காரணிகள் அனைத்தும் முழுமையான அளவுக்குப் பயன்படுத்தப்படுகின்றன என்பது பொருளாகும். அந்நிலையில் நாட்டில் உற்பத்தி பெரும் அளவில் இருக்கும். உற்பத்தி அதிகரித்தால் நாட்டில் வருமானமும்

அதிகரிக்கும். இவ் வத்தியாயத்தில் வருமானத்தைப் பற்றியும், வருமானம் கணக்கிடும் முறையைப் பற்றியும் ஆய்வு செய்வோம்.

வருமானம்–செலவு அணுகுமுறை நாட்டு வருமானத்தையே குறிப்பிடுகின்றது. நாட்டு வருமானம் என்பது, சுருங்கக் கூறின், நாட்டிலுள்ள ஒவ்வொருவரும் ஈட்டிய வருமானத்தின் கூட்டுத் தொகையாகும். நாட்டு வருமானக் கருத்து (Concept) பொருளாதாரத்திலுள்ள எல்லாவகைச் செலவுகளையும் ஒன்று போல் கருதுவதில்லை. ஒருவரின் செலவு மற்றவருக்கு வருமான மாக இருந்தால்தான் கணக்குக் கெடுத்துக்கொள்ளப்படுகிறது. ஆனால் பண அளவுக் கோட்பாட்டில் 'T' என்பது பொருளா தாரத்தில் ஏற்படும் அனைத்து வாணிப நடவடிக்கைகளையும் குறிக் கின்றது. சொத்துக்கள் வாங்கி விற்கப்படும் பேரங்கள் கூட 'T'—யில் சேர்க்கப்படுகின்றன. ஆனால் வருமானக் கோட் பாட்டில் பேரங்கள் சேர்க்கப்படுவதில் சில வரையறைகள் செய்யப்படுகின்றன. எந்தெந்த நடவடிக்கைகள், பொருள்கள் மற்றும் பணிகள் உற்பத்தி செய்வதில் ஈடுபடுகின்றனவோ அவைகள் மட்டும் வருமானக் கோட்பாட்டில் இடம் பெற வேண்டுமென வருமானக் கோட்பாட்டாளர்கள் (income theorists) குறிப்பிடுகின்றனர்.

உற்பத்தியைத் தூண்டும் நடவடிக்கைகளை மட்டும் எடுத்துக் கொண்டாலும், மாற்றுச்சமன் பாட்டைக் (equation of exchange) கீழ்கண்டபடி கையாளலாம் :—

$$MVy = Py\ Ty$$

இதில், M என்பது, பண அளிப்பு அளவு (முன்பே பார்த்தபடி), Py என்பது, ஒரு குறிப்பிட்ட காலத்தில் உற்பத்தி செய்யப்பட்ட முடிவுப் பொருள்களின் விலை குறியீடு (price index).

Ty என்பது, ஒரு குறிப்பிட்ட காலத்தில் உற்பத்தி செய்யப்பட்ட முடிவுப் பொருள்களின் அளவு (Volume) மற்றும்

Vy என்பது, பணத்தின் வருமானச் சுழல் வேகம் (income velocity of money).

MV = PT என்ற சமன்பாடு எந்த அளவுக்கு முக்கியத்துவம் பெற்று உண்மை நிலையை (Truism) விளக்குகிறதோ, அந்த

அளவுக்கு இந்தச் சமன்பாடும் உண்மை நிலையை விளக்குகிறது. ஆனால் பண அளவுக் கோட்பாட்டை விட இந்த வருமானச் சம நிலைக் கோட்பாடு மிகவும் முக்கியத்துவம் பெற்றது எனக் கூறலாம். ஏனென்றால் இக் கோட்பாட்டில் வருமானத்தைத் தொடாத (affecting income) பேரங்கள் அனைத்தும் கணக்குக்கு எடுத்துக் கொள்ளப்படுவதில்லை. இந்த வருமானச் சமன்பாட்டில் Vy—ஐக் கணக்கிடுவது அவ்வளவு எளிதல்ல. V—ஐக் கணக்கிடுவது மிகவும் எளிது. உற்பத்திப் பொருள்களுக்கோ, பணிகளுக்கோ எத்தனை தடவை ரூபாய் செலவு செய்யப்படுகிறது எனக் கணக்கீடு செய்வது முடியாத தொன்றாகும் என அறிஞர்களே கூறுகின்றனர். நடைமுறையில் Vy—ஐ ஏறத்தாழத்தான் அளவிட முடியும்.

'M'—இன் அளவு தெரிந்த பிறகு நாட்டு வருமானக் கணக்கீட்டு முறை மூலம் Py Ty—ஐக் கணக்கிடமுடியும். இவைகள் கணக்கிட்ட பிறகு Vy—ஐ வாய்பாடு மூலம் $\left(\frac{Py\ Ty}{M}\right)$ இலகுவாகக் கணக்கிடலாம். கடந்த சில ஆண்டுகளாக அமெரிக்காவில் Vy—இன் சராசரி வேகம் 3 எனக் கணக்கிடப்பட்டுள்ளது.

மொத்த வருமானம் என்பது, குடும்பங்கள், தொழில் நிறுவனங்கள், அரசு மற்றும் ஏனைய துறைகள் ஆகிய இந்த நான்கும் உற்பத்திக்காகச் செலவு செய்யப்பட்ட மொத்தத் தொகைக்குச் சமம் எனக் கீன்ஸ் விவரிக்கிறார். இந்தச் செலவுக் கூறுகளைத் தனித் தனியாகவும், ஒட்டு மொத்தமாகவும் விளக்குவது தான் வருமானம் அல்லது வருமானச் செலவு ஆய்வு அல்லது பேரியல் பொருளாதார ஆய்வு என்று கூறப்படுகிறது.

இந்தச் சமன்பாடும் பழைய முறையையே பின் பற்றுகிறது என்றாலும், பழைய சமன்பாட்டை விடப் பலவகைகளில் சிறப்பு வாய்ந்தது. பண அளவுக் கோட்பாட்டில், பணத்தின் அளவு, பணச்சுழல் வேகம், பொருள் உற்பத்தி செய்யப்படுதல் மற்றும் அவை பணத்துக்காக விற்கப்படுதல் ஆகியவை இடம் பெறுகின்றன. ஆனால் வருமானம் செலவு அணுகு முறையில் இந்நிகழ்ச்சிகள் மனிதனின் செயல் மற்றும் தீர்மானம் (Decision) ஆகியவைகளைப் பொறுத்தும், பொருளாதார மதிப்புக் கோட்பாட்டின் அடிப்படையைச் சார்ந்தும் நடைபெறுகின்றன. அதாவது, பொருள்கள் உற்பத்தி செய்யப்படுதல், வருமானம், பெறுதல், நுகர் பொருள்களுக்குச் செலவிடுதல், சேமிப்பு, முதலீடு செய்தல் (Investing), பண ஆக்கம் மற்றும் அழித்தல் மற்றும் பண முடக்கம், பண முடக்கமின்மை ஆகிய

காரணிகள் வருமானம் - செலவு அணுகு முறையில் கையாளப் படுகின்றன. சுருங்கக் கூறின், பண அளவுக் கோட்பாட்டில் விலை மட்டம், வாணிப அளவு ஆகியவை பணத்தின் அளவைப் பொறுத்து நிர்ணயிக்கப்படுகின்றன; ஆனால் வருமானம்–செலவு கோட்பாட்டில் அவைகள் பொருளாதார இயக்கம், மனிதனின் செயல் மற்றும் தீர்மானம் ஆகியவைகளைப் பொறுத்து நிர்ணயிக் கப்படுகின்றன.

வாணிபச் சுழலில் ஏற்படும் ஏற்ற இறக்கத்தையும், நாடு களின் வருமானத்தைக் கணக்கிட்டு ஒன்றிலிருந்து ஒன்றை ஒப்பிடவும், ஒரு நாட்டில் பல பகுதிகளின் வருமானத்தை ஒப்பிடவும், பணக்கொள்கைகளை வகுக்கவும், போர்க்காலங்களில் திட்டம் போடவும், கடன் கட்டுப்பாடு செய்யவும், வியாபாரத்தை எதிர் காலத்தில் கணிக்கவும் வருமான் கணக்கீடு பயன்படு கின்றன. அவைகளைப்பற்றிக் கீழே காண்போம்:


ஒரு சிறு பொருளாதாரத்தில் சுழல் ஓட்டம் (The circular flow in a Simple Economy)

எந்த நாட்டு உற்பத்தி அல்லது வருமானம் மூன்று முறை களில் கணக்கிடப்படுகிறது. ஒன்று, உற்பத்திக்கு இட்ட மொத்த செலவீனங்கள் (Spending total); இரண்டு, மொத்த உற்பத்தி (Output total)—முடிவுப் பொருள்கள், பணிகள் ஆகிய வைகளின் மொத்தப் பண மதிப்பு; மூன்று, மொத்த ஈட்டங்கள் (Earnings total)—உற்பத்தியில் ஈடுபட்ட காரணிகள் பெறும் ஒட்டு மொத்தம் இந்த மூன்றும் இலக்கணப்படி ஒன்றுக்கொன்று சமமாக இருக்கின்றன.

இக் கருத்துகளை முதலில் ஒரு சிறிய பொருளாதாரத்தை எடுத்துக்கொண்டு விளக்குவோம். அப் பொருளாதாரத்தில் உள்நாட்டு நடவடிக்கைகள் மட்டும் இடம் பெறுவதாகவும் (பன்னாட்டு நடவடிக்கைகள் இல்லை), அரசாங்கத் தலையீடு இல்லையெனவும் (பொருள்கள், பணிகள் கொள்முதல் செய்தல், வரியிடுதல், உதவி செய்தல், வட்டி செலுத்துதல் போன்றவை களில் அரசு தலையீடு இல்லை) கொள்வோம். தொழில் நிறு வனங்கள், குடும்பங்கள் மட்டும் இருப்பதாகக் கொள்வோம்.

குடும்பங்கள் நுகர்வதிலும், சொத்துகள் திரட்டுவதிலும் நிறைவு கொள்வதாகவும் (Satisfaction), உற்பத்தி அனைத்தும் தொழில் நிறுவனங்கள் உருவாக்குவதாகவும் அனுமானம் செய்வோம். மேலும், நிறுவனங்கள் வருமானம் அனைத்தையும்

செலவு செய்வதாகவும், குடும்பங்கள், நிறுவனங்கள் ஆகியவை களுக்கு இடையே நிகழும் நடவடிக்கைகள் ஒட்டுமொத்தமாக (தனித்தனியாக இல்லாமல்) நடைபெறுவதாகவும் கொள்வோம். குடும்பங்கள் தங்கள் வருமானம் முழுவதையும் செலவிடுவ தாகவும், சேமிப்பு ஏதும் செய்யவில்லை எனவும், தொழில் நிறுவனங்களின் உற்பத்திப் பொருள்கள், நுகர்ச்சிப் பொருள்கள் எனவும், மூலதனப் பொருள்களில் (Capital goods) கூடுதல் சேர்க்கை ஏதுமில்லையெனவும்-முதலீடு இல்லையெனவும் கொள்ளல் வேண்டும். இந்த எடுகோள்களை உட்கொண்டு அவ்விரண்டு துறைகளுக்கிடையேயுள்ள உறவுகளைப் பற்றி இனி நாம் கீழ்கண்ட படத்தின் மூலம் காண்போம் :



படம் 1. சிறிய பொருளாதாரத்தில் சுழல் ஓட்டம்.

இந்தத் தனி பொருளாதாரத் துறையில் எல்லா மூலப் பொருள்களும் குடும்பங்களுக்குச் சொந்தமாகும். அப்படிப் பார்த்தால் தொழில் நிறுவனங்களின் சொத்துகளும், வேலைப் பணிகளும் குடும்பங்களிலிருந்து பெறப்பட்டதாகும். உற்பத்திப் பணிகள் குடும்பங்களிலிருந்து நிறுவனங்களுக்குச் செல்வதைப் படம் 1-ல் உள்வட்டத்தின் மேல் பகுதி வில் (arc) காட்டுகிறது. இதற்குக் கைமாறாக நிறுவனங்களிலிருந்து குடும்பங்களுக்குப் பணம் செலுத்தப்படுகிறது. இப் பணம்தான் நிறுவனங்களுக்கு உற்பத்திச் செலவாகவும், குடும்பங்களுக்கு வருமானமாகவும் கருதப்படுகிறது. இச் செயலைப் படத்தில் கடிகார ஓட்டப் பாதையில் குறிக்கப்பட்ட வெளி வட்டத்தின் வில் காட்டுகிறது.

சுருங்கக் கூறினால், பொருளாதார நடவடிக்கை இரண்டு எதிர்த் திசை வட்ட ஓட்டங்களின் மூலம் விளக்கப்படுகிறது. ஒன்று உண்மையானது. மற்றொன்று பணத் துறையானது. குடும்பங் களிலிருந்து உண்மை உற்பத்திப் பணிகள் நிறுவனங்களுக்குச் செல்லுகிறது; இதேபோல் நிறுவனங்களிலிருந்து உண்மை உற்பத்தி (வெளியாக்கம்) குடும்பங்களுக்குச் செல்கிறது. மேலும், நிறுவனங்களிலிருந்து குடும்பங்களுக்குப் பண வருமானங்கள் செல்கின்றன; இதேபோல் குடும்பங்களிலிருந்து நிறுவனங் களுக்குப் பணம் செலவுகள் செல்கின்றன.

இதுவரை பார்த்த கோட்பாட்டை எடுத்துக்காட்டுடன் விளக்கலாம்: நுகர்வுச் செலவுகள் (Consumption Expenditure) ரூ. 100 கோடி என்றால் உற்பத்திப் பொருளின் பண மதிப்பு ரூ. 100 கோடியாகும். நமது கோட்பாட்டின்படி, ஒரு சிறிய பொருளாதாரத்தில் உற்பத்திப் பொருள் முழுவதும் குடும்பங் களுக்குச் செல்வதால் மொத்த வருமானம் ரூ. 100 கோடி எனவும், இதையே நிறுவனங்களின் உற்பத்திச் செலவு எனவும் கொள்ளலாம்.

நாட்டு வருமான ஓட்டம் (National Income Flows)

சுழல் ஓட்டம் வடிவில் விளக்கப்பட்ட பொருளாதார அடிப்படைக் கூறுகள் நாட்டு வருமான கணக்குகளை விவரிக்கும் அளவுக்கு செல்கின்றன. சிறிய பொருளாதாரத்தில் குறிப்பிடப் பட்ட சுழல் ஓட்டம் பெரிய அளவில் விவரிக்கப்பட்டால் அதுவே நாட்டு வருமான ஆய்வைக் குறிக்கும். நாட்டு வருமானம் என்பது உற்பத்தியின் ஈட்டங்களையும், உற்பத்தியில்லாத ஈட்டங் களையும் அதாவது, மாற்றங்களையும் (Transfer) குறிக்கும். பங்குத் தொகுப்பு, உபயோகப்படுத்தப்பட்ட கார்கள், இருக்கக் கூடிய வீடுகள், ஆகியவை விற்ற தொகை, ஓய்வூதியம் (Pension), உதவித்தொகை மற்றும் சலுகைகள், நிவாரண அளிப்புகள் (Relief Payments), வேலையில்லார்க்கு உதவித் தொகை அளித்தல், அரசுக் கடனுக்கு வட்டி செலுத்துதல் ஆகியவைகள் உற்பத்திக் கில்லாத ஈட்டங்களில் அடங்கும்.

சேமிப்பும் முதலீடும் (Saving and Investment)

இதுவரை குடும்பங்கள் தங்கள் வருவாய் முழுமையும் செலவு செய்து விடுவதாகவும் தொழில் நிறுவனங்கள் நுகர்வுப் பொருள்கள் மட்டும் உற்பத்தி செய்வதாகவும் அனுமானம் கொண்டோம். இந் நிலையில் சேமிப்பும் முதலீடும் பூஜ்யமாக

(Zero) இருக்கிறது. இனி இந்த எடுகோளை நீக்கிவிட்டுப் பூஜ்யத்தினின்றும் விலகிச் சேமிப்பு, முதலீடு ஆகியவைகளைப் பற்றிப் பார்ப்போம்.

குடும்பச் சேமிப்பு (House hold Saving) என்பது குடும்ப வருவாய்க்கும் அதன் நுகர்வுச் செலவுக்கும் உள்ள வேறுபாடு ஆகும். நுகர்வுச் செலவு என்பது பணிகள், உறுதிப்பொருள்கள் (Durable goods) உறுதியிலாப் பொருள்கள் (Non-durable goods) ஆகியவைகளுக்காகச் செலவிடும் தொகை ஆகும். ஆனல் வீடு வாங்கப்படுவது முதலீடாகும். ஏனென்றல் தொகையும் பெரிது, கட்டடமும் நீண்ட நாள்களுக்கு உழைக்கக் கூடியது, நல்ல வாடகையும் கிடைக்கக் கூடியது. வீட்டைக் கட்டி முடித்து உடையவரே குடியிருந்தாலும் அதற்கு வாடகை மதிப்பு போட்டுப் பார்க்க வேண்டும். அதாவது வாடகைக்குக் குடியிருப்போரின் வாடகைத் தொகையும், உடையவரே குடியிருந்தால் வாடகை மதிப்பும் நுகர்வோரின் செலவுகளில் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டும்.


நுகர்வின் மேல் செலவு செய்யப்படாத வருமானம் சேமிப்பு என இரத்தினச் சுருக்கமாகக் கூறலாம் (Saving is simply income which is not spent on consumption). பணத்தை முடக்கி வைப்பது மட்டும் சேமிப்பைக் குறிக்காது. பொறுப்புகள் நீக்கி எஞ்சியுள்ள நிகர சொத்துகளைச் சேமிப்பு எனலாம். ஒருவருக்குக் கடன் மிகுதியாக இருந்து, கடனைத் தீர்ப்பதற்கு முன் சேமித்து வைத்திருக்கும் பணத்தைச் சேமிப்பு எனக் கூறமுடியாது.

எந்த நேரத்திலும் மூலதனப் பொருளின் இருப்பு (Stock of capital goods) கூடுதலானல் முதலீடு செய்யப்பட்டிருக்கிறது எனப் பொருள்படும். தொழில் நிறுவனங்கள் நுகர்பொருள்களையும் உற்பத்தி செய்யலாம்; உற்பத்திச் செல்வங்களின் இருப்பு கூடுதலாகும்படி மூலதனப்பொருள்களையும் உற்பத்தி செய்யலாம். முதலீட்டுச் செலவு என்பது, உற்பத்திச் செல்வங்களின் இருப்பில் கூடுதலாக உள்ள உற்பத்தியின் புதிய வெளியாக்கத்திற்கான செலவாகும். (Investment Expenditure is expenditure for newly produced output that is added to the stock of productive wealth.)

சுழல் ஓட்டத்தில் சேமிப்பும் முதலீடும் (Saving and investment in the Circular flow)

குடும்பங்கள் தங்கள் வருமானங்களை நுகர்பொருள்களின் மேல் செலவிடுகின்றன (c), அல்லது செலவிடாமல் சேமித்து

வைக்கின்றன (S), என முன்பே கண்டோம். இதனை ஒரு சுழல் படத்தின் மூலம் கீழ்க்கண்டபடி விளக்கலாம். (படம் 2) :



படம் 2. சுழலோட்டத்தில் சேமிப்பும் முதலீடும்.

சுழலோட்டப் படத்தில், குடும்ப வருமானத்தில் ஒரு பகுதி 'C'-க்கும் (தொழில் நிறுவனங்களுக்கு இது வரவாகும்), மறுபகுதி 'S'-க்கும் ஒதுக்கீடு (Devoted) செய்வதாகக் காட்டப்பட்டிருக் கிறது. ஆனால் புதிதாக முதலீட்டுச் செலவு உற்பத்திக்காக இடுவதைப் படத்தின் இடதுபுறத்தில் குறிக்கப்பட்டிருக்கிறது (I). இனி உற்பத்தி நிறுவனங்கள் நுகர் பொருள்களை மட்டும் உற்பத்தி செய்வதாகக் கொள்ளக் கூடாது. முதலீட்டுச் செலவுகள் செய்வதால் மூலதனப் பொருள்களையும் உற்பத்தி செய்வ தாகக் கொள்ளவேண்டும். இனி அடிப்படை சமன்பாடுகளைக் (Identities) கீழ்க்கண்டவாறு குறிப்பிடலாம் :

உற்பத்திக்கான மொத்தச் செலவு (C+I) = உற்பத்தி செய் யப்பட்ட நுகர் பொருள்களின் மதிப்பு + உற்பத்தி செய்யப்பட்ட முதலீட்டுப் பொருள்களின் மதிப்பு = காரணிகளின் மொத்த ஈட்டங்கள் C+S) (Total earnings of factors).

இவ் வோட்டத்தை மொத்த உற்பத்தியாகவோ அல்லது நிகர உற்பத்தியாகவோ கொள்ளலாம். மொத்த 'மொத்த உற்பத்தியை' (Total gross output) நாட்டு மொத்த உற்பத்தி எனவும் (Gross National Product – GNP), மொத்த நிகர உற்பத்தியை நாட்டு நிகர உற்பத்தி (Net National Product – NNP)

எனவும் கூறலாம். ஆனால் இக் கூட்டுத்தொகைகளிலிருந்து (Totals) உற்பத்திக் காரணிகளின் மொத்த அல்லது நிகர வருமானத்தைக் கணக்கிட வேண்டும். நிற்க, நாம் இப்போது நிகர ஓட்டத்தைக் கவனிப்போம். எந்த ஒரு கடந்த காலத்திலும் உற்பத்திக்காக இட்ட செலவுத் தொகை C+I-க்குச் சமமாயிருக்கும். அதே காலத்தில் இத்தொகை மொத்த வருவாய்க்குச் சமமாகவும் இருக்கும். இந்த வருவாயில் ஒரு பகுதி நுகர் பொருளுக்குச் செலவிடப்படுகிறது என முன்பே பார்த்தோம். செலவிடப்படாத மற்றொரு பகுதி (S), நுகர்வற்ற உற்பத்திப் பொருள்களுக்கான செலவுத் தொகைக்குச் (I) சமமாயிருக்கும். அதாவது, 'C' 75 என்றும் 'I' 25 என்றும் இருந்தால் மொத்த ஈட்டங்கள் 100 ஆகும். இதில் 75'C'-க்கும், '25' - 'S'-க்கும் தீர்க்கப்படுகிறது எனப் பொருள்படும். அதாவது, உண்மை (Actual) சேமிப்பும் (S), முதலீடும் (I) எப்போதும் சமமாயிருக்கும்.

நாட்டு வருமானக் கணக்குகள் (National Income Accounts)

சிறிய பொருளாதாரத்தில் குடும்பங்கள், தொழில் நிறுவனங்கள் மட்டும் பங்கு கொள்வதாகக் கொண்ட அனுமானத்தை சற்று விரிவடையச் செய்து அரசாங்கம், பன்னாட்டுப் பேரங்கள் ஆகியவைகளைச் சேர்த்துக் கொண்டு நாட்டு வருமானக் கணக்குகளை விவரிப்போம். தொழில் நிறுவனங்களின் அனைத்து வருமானமும் குடும்பங்களுக்குச் செல்கின்றன என்ற எடுகோளையும் எடுத்து விட்டு, ஒரு பகுதியை அந் நிறுவனங்கள் சேமித்து வைக்கின்றன என்று கொள்வோம். அப்படிப் பார்த்தால், நாட்டு மொத்த உற்பத்தி (GNP), நாட்டு நிகர உற்பத்தி (NNP) ஆகியவைகளை மட்டும் விவரித்தால் போதாது. மேலும், மூன்று வகை வருவாய்களைப் பார்க்க வேண்டும். அதாவது, (1) நாட்டு வருமானம், (2) ஆள்சார் வருமானம் (Personal Income), (3)செலவழிப்பு வருமானம் (Disposable Income). இவை ஒவ்வொன்றைப்பற்றியும் சுருக்கமாக விவரிக்கலாம்.

நாட்டு மொத்த உற்பத்தி

உற்பத்திக்கான மொத்தச் செலவு C+I யோடு மட்டுமல்லாமல், பொருள்கள், பணிகள் ஆகியவைகளுக்கான அரசாங்கச் செலவுகளையும் (G), அந்நிய நாட்டு ஏற்றுமதிக்காக உற்பத்தி செய்யப்படும் பொருள்கள், பணிகள் ஆகியவைகளுக்கு ஏற்படும் நிகரச செலவுகளையும் (E) சேர்த்துக்கொள்ள வேண்டும். இப்படியாக, நாட்டு மொத்த உற்பத்தியை இலக்கணப்படி விவரிக்கலாம்:

$$C+I+G+E=GNP$$

இதில் 'G' என்பது ஒரு கால அளவில் (During the period) உற்பத்திக்காக அரசாங்கத்தால் செலவு செய்யப்பட்ட தொகையாகும். ஒரு நாட்டின் ஏற்றுமதி, இறக்குமதியைப் பொறுத்து உற்பத்திச் செலவு ஆகிறது. ஏற்றுமதி அதிகமானால் உற்பத்திக்காக இடப்படும் செலவு கூடுதலாகும்; இறக்குமதி மிகுதியானால், உள் நாட்டுப் பொருள்களுக்குத் தேவை குறைவதால் தொழில் நிறுவனங்கள் உற்பத்தியைக் குறைக்கும்; அப்படிக் குறைந்தால் உற்பத்திக்காக இடப்படும் செலவும் குறையும். இறக்குமதியினின்றும் ஏற்றுமதி மிகுதியானால் E நேராக (Positive) இருக்கும்; GNP அதிகமாகும்; ஏற்றுமதியை விட இறக்குமதி மிகுதியானால் E எதிராக (Negative) இருக்கும்; GNP குறையும்.

நாட்டு நிகர உற்பத்தி

நாட்டு மொத்த உற்பத்தியினின்றும் மூலதனச் சொத்துத் தேய்மானம் (Capital Consumption Allowances) கழிக்கப்பட்டுக் கிடைக்கும் எஞ்சிய பகுதி நாட்டு நிகர உற்பத்தியாகும். இந்த நிகர உற்பத்தி, உற்பத்தி செய்யப்பட்ட எல்லாப் பொருள்களையும் குறித்து, அவைகள் சந்தை விலைகளின் அடிப்படையில் மதிப்பிடப்படுவதைக் குறிக்கிறது.

காரணி விலையில் நாட்டு வருமானம் (National Income at Factor Cost) ஏனையவைகள் மாறுமலிருக்கும்போது, உற்பத்தி செய்யப்பட்ட பொருள்களின் (சந்தை) விலையும், குடும்பங்களின் வருமானமும் சமமாயிருக்கும். உற்பத்திக் காரணிகளால் (Factors of production) அளக்கப்பட்ட நாட்டு வருமானம் அப்போதுதான் நாட்டு நிகர உற்பத்திக்குச் சமமாகும். ஆனால், இச் சமன்பாடு அரசின் மறைமுக வரிகளாலும் நேர்முக வரிகளாலும் ஒன்றுக இருக்க முடியாமல் போய் விடும். எடுத்துக்காட்டாக, நிகர உற்பத்தி ரூ. 100 கோடி என்றும், வரிகள் ரூ. 15 கோடி என்றும் எடுத்துக் கொண்டால், குடும்பங்களின் ஈட்டங்கள் ரூ. 85 கோடியாக மாறுகிறது. அதாவது, காரணிகள் விலையில்—கூலி மற்றும் சம்பளம், வாடகைகள், வட்டி மற்றும் இலாபம்—நாட்டு வருமானம் ரூ. 85 கோடியாகும்.

ஆள்சார் வருமானம்: குடும்பங்களின் வரவு அதாவது, ஆள்சார் வருமானம் கணக்கிடும்போது உண்மையில் ஈட்டிய வருமானத்தை மட்டும் கணக்கிட வேண்டும். செலுத்தப்பட வேண்டிய

வருமானத்தைச் செலுத்தாமல் இருந்தால் அதை வருமானத்துடன் சேர்த்துக் கொள்ளக் கூடாது. அதே போல் வர வேண்டிய வருமானம் வருமுன்னரே சேர்த்துக் கொள்ளவேண்டும்.

செலவழிப்பு வருமானம்: ஆள்சார் வருமானத்திலிருந்து ஆள்சார் வரிகளைக் கழித்தால் கிடைப்பது செலவழிப்பு வருமானமாகும். இந்த வருமானத்தை வேண்டுமானால் நுகர்வதற்காகப் பயன்படுத்தலாம் அல்லது சேமிப்பாகவும் வைக்கலாம்.

இதுவரை நாட்டு வருமானம், செலவு ஆகியவற்றின் இலக்கணத்தைப்பற்றிப் பார்த்தோம். இனிமேல் வருமானம் எப்படி நிர்ணயிக்கப்படுகிறது என்பதைப் பற்றியும், அதில் நுகர்ச்சி, பெருக்கி (Multiplier), முதலீடு, வேகப்படுத்தி (Accelerator) ஆகியவைகளின் பங்கு என்ன என்பதைப் பற்றியும் காண்போம்.

10. வருமானம் நிர்ணயித்தல்:
(அ) நுகர்வுச் சார்பு
[Determination of Income: (A) Consumption Function]

பண அளவுக் கோட்பாட்டில் பணத்தின் அளிப்பைப் பொறுத்து மொத்தச் செலவுகள் நிர்ணயம் செய்யப்படுகின்றன என்றும், விலைவாசி மாற்றங்களுக்குக் காரணம் பணத்தின் அளிப்பு அளவில் மாற்றம் ஏற்படுவதுதான் என்றும், நாட்டில் நிறைவுடை வேலை வாய்ப்பு நிகழ்கிறது என்றும், உற்பத்திப் பணத்தின் தேவையைப் பொறுத்து நிர்ணயிக்கப்படவில்லை யென்றும் விவரிக்கப்பட்டுள்ளது. வருமானம்-செலவுக் கோட்பாட்டில் இந்த எடுகோள்கள், கைவிடப்பட்டு, நாட்டில் உற்பத்தியோ, வேலையோ, பணச் செலவுகள் மாற்றத்திற்கு ஏற்ருற் போல் மாறுகின்றன என விவரிக்கப்படுகிறது.

இவ் வத்தியாயத்திலும் அடுத்த அத்தியாயத்திலும் மொத்தத் தேவையைப் (Aggregate demand) பற்றி விளக்கப்படுகிறது. பண வருமானமும் மெய் வருமானமும் ஒரே வீதத்தில் மாற வேண்டுமானல் தாற்காலிகமாக விலைகள் நிலையானவை என அனுமானிக்க வேண்டும். இதன் விளைவாக, நடைமுறை விலைகளில் அளிப்புக் கோடு நெகிழ்வுத் தன்மையில் அமைகிறது. அதாவது, தேவை மட்டத்தைப் பொறுத்து (Level of demand) உற்பத்தி நிர்ணயிக்கப்படுகிறது.


நாம் தற்போது குறுங்கால (Short-run) ஆய்வைப்பற்றிப் பார்ப்போம். பொருளாதாரத்தில் ஒரு குறுகிய காலத்திற்குள் எந்தவித மாற்றத்தையும் கொண்டுவர முடியாது. எனவே, மூலதன இருப்பில் நடைமுறைச் சேர்க்கைகள்(Current additions) மிகவும் குறைவாக இருக்குமாதலால் அச் சேர்க்கைகளை கணக் கெடுத்துக் கொள்ள வேண்டியதில்லை; மொத்த மூலதன இருப்பு நிலையானது எனக் கொள்ளலாம். அப்படி மூலதன இருப்பு நிலையானது எனக் கொண்டால் பொருளாதாரத்தில் மாறக் கூடிய ஒரே ஒரு காரணி உழைப்பு (Labour) ஒன்றுதான். ஆகையால்

உழைப்பின் மாறுதல்களுக்கும் உற்பத்தியின் மாறுதல்களுக்கும் நெருங்கிய தொடர்பு இருக்கிறது. ஆனால், இந்த உறவு வீதப்படி இருக்க வேண்டுமென்பது அவசியமில்லை. உற்பத்திச் சார்பின்படி (Production function), ஒவ்வோர் உற்பத்தி மட்டத்திற்கும் ஒரு குறிப்பிட்ட அளவு உழைப்பு தேவைப்படுகிறது; இதே போல் ஒவ்வோர் அளவு உழைப்பும் ஒரு குறிப்பிட்ட அளவு உற்பத்தியை உண்டுபண்ணுகிறது.

நிறைவுடை வேலை வாய்ப்பு, திறன்கொண்ட உற்பத்தி மட்டத்தை நிறைவுடை வேலை வாய்ப்பு உற்பத்தி மட்டம் அல்லது வருமானம் (Full-employment level of output or income) எனலாம். அளிப்புக் கோடு நெகிழும் தன்மையுடைய தென்றால், நிறை-குறை வேலை வாய்ப்பு (Less than full-employment) இருப்பதாக அனுமானித்து அந் நிலையில் வருமானம் எப்படி நிர்ணயிக்கப்படுகிறது என்பதைக் கணிக்க வேண்டும். முற்றிலும் ஒரு தனியான பொருளாதாரத்தை-குடும்பங்கள் மற்றும் தொழில் நிறுவனங்கள் மட்டும் உள்ளவை—எடுத்துக் கொண்டு பார்த்தால், உற்பத்திச் செலவானது நுகர்வுச் செலவையும் (C) முதலீட்டுச் செலவையும் (I) கொண்டுள்ளது என்பது புலனாகும். இந்த C+I தான் காரணிகளின் சொந்தக் காரர்களுக்கு வருமானமாக (Y) அமைகிறது. இதேதான் மறுபடியும் உற்பத்திக்காகச் செலவிடப்படுகிறது. அல்லது சேமிப்பாகக் குடும்பங்களில் சேர்த்து வைக்கப்படுகிறது (S). கடந்த காலத்தில் சேமிப்பும், முதலீடும் சமமாக இருந்திருக்கும்; ஏனென்றால் இரண்டும் நுகரப்படாத உற்பத்திதான்; பெயரளவில் மாற்றம்தான் இருக்கிறது. ஆனால், திட்டமிட்ட நுகர்வும் முதலீடும் (சேமிப்பும்) சமமாக இருக்க வேண்டுமென்ற அவசியமில்லை. ஏனென்றால் நுகர்வோர்களும் முதலீடு செய்வோர்களும் தனித்தனி துறையைச் சேர்ந்தவர்களாக இருக்கலாம். அப்படிச் சமமாக இல்லையென்றால், உண்மை மதிப்பும், திட்ட மதிப்பும் சமமாக ஆகும் வரைக்கும் செலவினங்கள், வருமானம் ஆகியவற்றில் மாற்றங்கள் செய்து திட்டங்களைத் திருத்தி அமைக்க வேண்டிவரும். அந் நிலையை சம நிலை (Equilibrium) எனக் கூறலாம்; நுகர்வு, முதலீடு (சேமிப்பு) இவைகளின் மதிப்பை எந்தச் சக்தியும் மாற்ற முடியாது. நுகர்வு-சேமிப்புத் திட்டங்களை ஆட்சிசெய்யும் (Influencing) காரணிகளைப்பற்றியும், கொடுக்கப்பட்ட முதலீட்டு அளவில் வருமானத்திற்கு அத் திட்டங்களின் உறவைப் பற்றியும் இனிமேல் காணலாம்.

நுகர்வுச் சார்பு

நுகர்வுச் சார்பு என்ற நுகர்வு நாட்டம் (Propensity to consume), மொத்த உண்மை நுகர்வுக்கும் மொத்த உண்மை வருமானத்திற்கும் உள்ள உறவை விவரிக்கிறது. இந்த இரண்டிற்கும் உள்ள உறவை ஒரு வரைபடத்தின் வாயிலாக விளக்கலாம்.



படம் 1. நுகர்வுச் சார்பு

மேற்கண்ட படத்தில் படுக்கைக் கோட்டில் வருமானமும் செங்குத்து அச்சில் (Vertical axis) நுகர்வும், வருமானமும் அளக்கப்படுகின்றன. படுக்கைக் கோட்டில் அளக்கப்பட்ட ஒவ்வொரு வருமான மட்டத்திற்கு ஏற்றாற்போல் குடும்பங்கள் திட்டமிட்டுச் செய்யக் கூடிய நுகர்வுச் செலவுகள் 'C' என்ற (வளை) கோட்டில் (curve) குறிக்கப்பட்டுள்ளன. குடும்பங்கள் தங்கள் வருமானங்கள் முழுவதையும் செலவு செய்தால் நுகர்வுச் சார்பு, படுக்கைக் கோட்டுக்கு 45° கோணத்தில் வரையப்பட்ட **OFA** என்ற கோட்டில் காணப்படுகிறது. 45° கோணத்தில் வரையப்பட்ட கோட்டில் வருமான மட்டத்தைச் செங்குத்தாக அளப்பதற்கு முடிகிறது. அதாவது $AY_2 = OY_2$; $DY_1 = OY_1$; $FY_0 = OY_0$. வருமானம் = நுகர்வு + சேமிப்பு, ஆதலால் OFA கோட்டுக்கும், நுகர்வுக் (C) கோட்டுக்கும் உள்ள இடைவெளி திட்டமிட்ட சேமிப்பைக் குறிக்கிறது. அதாவது, $AY_2 = BY_2 + AB$. இதே போல் DY_1-ல் வருமானமும் செலவும் சமமாக உள்ளன. சேமிப்பு இல்லை. FY_0 வருமானத்தில், செலவு வருமானத்தை விடக் கூடுதலாகிறது; அது EF ஆகும். அதாவது சேமிப்பு,

FY_0 வருமானத்தில் 'எதிர்' (Negative) எனப்படும். அது எப்படி முடியுமென்றால், கடன் வாங்கியோ வேறு வழியிலோ வருமானத்திற்குமேல் செலவு செய்வதற்கு வழிவகை செய்தாகவேண்டும்.

C-வளை கோட்டின்படி, வருமானம் அதிகரிக்க அதிகரிக்க செலவும் அதிகரிக்கிறது; ஆனால், ஒரே வீதத்தில் அதிகரிப்பதில்லை. இச் செயற்பாடு தனியாக ஓர் அட்டவணை மூலம் விளக்கப்படுகிறது.

அட்டவணை

(ரூபாய் கோடியில்)


வருமானம் (Y)	நுகர்வு (C)
100	70
120	80
140	90
160	100
180	105
200	110

மேற் கண்ட அட்டவணையிலிருந்து தெரிவதென்னவென்றால் வருமானம் ரூ. 100 கோடியிலிருக்கும்போது நுகர்வு 70 கோடியாக இருக்கிறது. ஆனால், ரூ. 200 கோடியில், நுகர்வு ரூ. 110 கோடியாக மட்டும் இருக்கிறது. இதற்குக் காரணம் மக்கள் ஒரு குறிப்பிட்ட தேவைக்கு மேல் வரும் வருமானத்தை அப்படியே செலவு செய்ய விரும்பமாட்டார்கள்; எதிர்கால நிகழ்ச்சிகளுக்காகச் சேமிக்க ஆரம்பிப்பர்.

படத்தின் C-வளை கோட்டின் செயலைத் தனியாக ஒரு வரை படத்தின் மூலம் மாணவர்கள் எளிதாகப் புரிந்து கொள்வதற்காக பின்கண்டபடி விவரிக்கப்படுகிறது:

நாம் முன்பே பார்த்தபடி நுகர்வோர் OC_1 குறைந்த அளவு செலவு செய்கின்றனர். இதை எப்படியோ வருமானமில்லாமலேயே சமாளிக்கின்றனர். இச் செலவு, வருமானம் OY_1-ஆக

இருக்கும் வரை செய்யப்படுகிறது. OY_1-க்கு மேல் வருமானம் கிடைத்தால் செலவும் கூடுகிறது. ஆனால் வருமானம் உயரும் வீத அளவுக்கு உயருவதில்லை; குறைவாகவே அதிகரிக்



படம் 2. வருமானம் - நுகர்வு வீதப்பாடு

கிறது. C_2-க்கும், C_3-க்கும் இடையிலுள்ள வளைகோடு கீழ்நோக்கி வளைந்து செல்கிறதென்றால், வருமானம் நுகர்வு வீதப்பாடு, வருமானம் உயர உயர, படிப்படியாகக் குறைகிறது எனப் பொருளாகும். இதைத்தான் கீன்ஸ் 'உளக்கோட்பாடு' (Psychological Theory) எனக் கூறுகிறார்.

இறுதிநிலை நுகர்ச்சி மற்றும் சேமிப்பு நாட்டங்கள் (Marginal Propensities to Consume and Save)

மறுபடியும் நாம் படம் 1-ஐ எடுத்துக் கொள்வோம். நுகர்வின் மாற்றத்திற்கும் ($\triangle C$) வருமான மாற்றத்திற்கும் ($\triangle Y$) உள்ள வீதம் (Ratio) தான் இறுதிநிலை நுகர்ச்சி நாட்டம் எனப் படும் (MPC). அதாவது, $MPC = \frac{\triangle C}{\triangle Y}$. நாம் முதலில் கண்ட அட்ட வணையில், வருமானம் 100-லிருந்து 120-க்கு வந்தால், நுகர்ச்சி 70-லிருந்து 80-க்கு உயருகிறது; இதில் வருமான மாற்றம் 20; ஆனால், நுகர்வு மாற்றம் 10 தான். நமது கோட் பாட்டின்படி இறுதிநிலை நுகர்ச்சி நாட்டம் $\frac{10}{20}$ ஆகும். அதாவது, 0·5 ஆகும். வருமானம் 160-லிருந்து 180-க்கு உயர்ந்தால்

வருமான மாற்றம் ($\triangle Y$) 20; அதே போழ்து நுகர்வு 100-லிருந்து 105-க்குச் செல்லுகிறது; எனவே, நுகர்வு மாற்றம் 5 ஆகிறது ($\triangle C$). ஆகையால் $MPC = \frac{5}{20} = 0 \cdot 25$ ஆகிறது. C என்ற கோடு நேர் கோடானதால் (Straight line) சரிவு (Slope) என்றும் நிலையானதாகும். அதாவது, எல்லா வருமான மட்டங்களிலும் MPC ஒரே அளவில் தான் இருக்கிறது எனப் பொருள்படும். 'C' கோடு வளைவு கோடாக இருந்தால் (படம் 2-ல் காட்டியபடி), வருமான மாற்றம், நுகர்வு மாற்றம் ஆகியவைகளுக்கு ஏற்ப MPC மாறிக் கொண்டேயிருக்கும்.

இறுதிநிலைச் சேமிப்பு நாட்டத்தையும் (MPS) மேற்கண்ட வாறு $\frac{\triangle S}{\triangle Y}$ என விளக்கலாம். ஒரு சிறிய பொருளாதாரத்தை எடுத்துக் கொண்டால் (குடும்பங்கள் + தொழில் நிறுவனங்கள்) வரும் வருமானத்தில் நுகரப்படாமல் எஞ்சி இருக்கும் வருமானம் கட்டாயமாகச் சேமிக்கப்படுகின்றன. அதாவது MPS = 1—MPC. MPC = 0·5 என்றால் MPS = 0·5 ஆகும். MPC = 0·25 என்றால் MPS = 0·75 ஆகும்.

படம் 1-ல் நுகர்வுச் சார்பின் சரிவு 1-க்கும் குறைவான தால், MPS 'நேர்' (Positive) ஆக இருக்கிறது.

சராசரி நுகர்வு மற்றும் சேமிப்பு நாட்டங்கள் (Average Propensities to Consume and Save)

வருமான மாற்றத்தின் நுகர்வு மாற்ற வீதத்தை இறுதிநிலை நுகர்வு நாட்டம் என்பது போல், ஒரு நாட்டின் அல்லது தனிப் பட்ட ஒருவரின் அல்லது குறிப்பிட்ட ஒரு சமுதாயத்தின் மொத்த வருமானத்தின், மொத்த நுகர்வு வீதப்பாட்டைச் சராசரி நுகர்வு நாட்டம் (APC) எனலாம். மொத்த வருமானத்தின் மொத்த சேமிப்பு வீதம் சராசரி சேமிப்பு நாட்டம் (APS) எனப்படும். இரு துறைகள் மட்டும் உள்ள சமுதாயத்தில் (பொருளாதாரத்தில்) சராசரி நுகர்வு நாட்டம், சராசரி சேமிப்பு நாட்டம் ஆகியவற்றின் கூட்டுத் தொகை (Unity) ஒன்றாகும். ஏனென்றால், நுகரப்படாத பகுதி சேமிக்கப்பட்டிருக்க வேண்டும்.

படம் 1-ல் வெவ்வேறு வருமான மட்டத்தில் சராசரி நுகர்வு நாட்டம் மாறுகிறது. வருமானம் OY_2-ல் $APC = \frac{BY_2}{AY_2}$ அல்லது ஒன்றுக்கும் குறைவு; OY_1-ல் ஒன்றுக்குச் சமம்; OY_0-ல் ஒன்றுக்கும் அதிகம். இதிலிருந்து தெரிவதென்னவென்றால் நுகர்வுச்சார்பின் இறுதிநிலை நுகர்வு நாட்டம் எப்போதும் நிலை

யானது என்றும், சராசரி நுகர்வு நாட்டம் வருமான மாற்றத்திற்கு ஏற்றவாறு மாறுகிறது என்றும் தெளிவாகத் தெரிய வருகிறது.

இனி நுகர்வு, சேமிப்பு மற்றும் வருமான உறவுகளைப்பற்றிக் கீழ்கண்ட அட்டவணை மூலம் காண்போம்:

$$(C = 20 + \tfrac{4}{5} Y)$$

Y	C	S	MPC	MPS	APC	APS
60	68	—8			1·13	—0·13
			0·8	0·2		
70	76	—6			1·09	—0·09
			0·8	0·2		
80	84	—4			1·05	—0·05
			0·8	0·2		
90	92	—2			1·02	—0·02
			0·8	0·2		
100	100	0			1·00	0·00
			0·8	0·2		
110	108	2			0·98	0·02
			0·8	0·2		
120	116	4			0·97	0·03
			0·8	0·2		
130	124	6			0·95	0·05
			0·8	0·2		
140	132	8			0·94	0·06

வருமானம் ஒன்றை மட்டும் நுகர்வு சார்ந்திருக்கவில்லை. அதாவது, நுகர்வைத் தூண்டுவது (Influencing consumption) வருமானம் என்ற ஒரே காரணிதான் எனக் கொள்ளக் கூடாது. வேறு காரணிகளும் - குடும்ப வருமானம் பகிர்வு, மக்கள் தொகை, வாழ்க்கைத் தரத்தில் மாற்றம், வட்டி வீதம் மற்றும் கடன் கொள்கைகள், வரிகள், விலை மட்டம், சொத்து இருப்பு வைத்தல் போன்றவைகள்—நுகர்வைத் தூண்டுகின்றன. ஆனால் குறுகிய காலத்தில் இக் காரணிகள் எல்லாம் மாறுதலை எனக் கொண்டுதான் இதுவரை நுகர்ச்சிச் சார்பை விளக்கி வந்தோம். இனித் தொடர்ந்து இவைகள் மாறுத் தன்மையுடையவை எனவும், வருமானம் மட்டும்தான் மாறுகிறது எனவும் அனுமானம் செய்துகொண்டு மேற்கொண்டு பார்ப்போம்.

சம நிலை வருமானம் நிர்ணயித்தல் (Determination of Equilibrium Income)

நுகர்வு, வருமானத்தைச் சார்ந்திருக்கிறது; வருமானம், ஒரு பகுதி நுகர்வையும் மறு பகுதி முதலீட்டையும் சார்ந்திருக்கிறது. நுகர்வுச் சார்பு மற்றும் நுகர்வுச் செலவுகளை அளக்க முடியாது. வேறு சில வெளிக் காரணிகள் (Exogenous) நுகர்வுச் செலவுகளை

நிர்ணயிக்கின்றன. கொடுக்கப்பட்ட முதலீட்டு மட்டத்தில் நுகர்வும் (C) வருமானமும் (Y) எப்படி நிர்ணயிக்கப்படுகின்றன எனப் பார்ப்போம்.

முதலீடு 10 எனவும், ஈட்டிய வருமானத்தில் எப்போதும் 4/5 பங்கு நுகர்வோர்கள் செலவு செய்கிறார்கள் எனவும் கொள்வோம். வருமானம் 100 எனக் கொண்டு ஆரம்பித்தால், நுகர்வோர்கள் 80 செலவு செய்வார்கள்; தொழில் நிறுவனங்கள் 10 செலவு செய்யும். சேமிப்பு மற்றும் முதலீடு சுழல் ஓட்டப்படி பார்த்தால், இச் செலவு (80+10) வருமானமாகத் திரும்ப வருகிறது. அதாவது, வருமானம் 90 ஆகக் குறைகிறது. இதன் விளைவு, மறுபடியும் நுகர்வுச் செலவைக் குறைக்கிறது. வருமான மட்டம், 4/5 வருமானத்தையும் (நுகர்வு) முதலீடு 10ஐயும் கொண்ட கூட்டுத் தொகைக்குச் சமமாகும் வரை, வருமானம் குறைந்து கொண்டே செல்லும். இந்த நிபந்தனைப்படி பார்த்தால் வருமானம் 50-ல் இருக்க வேண்டும்.

கசிவுகள் (Leakages)

நாம் முன்னமே பார்த்த அட்டவணைப்படி, இறுதிநிலை நுகர்வு நாட்டம் ஒன்று அல்லது 100 சதவீதம் இருப்பதென்பது வெகு அரிது. பொதுவாக ஒன்றுக்குக் குறைவாகத்தான் இருக்கும். நமது அட்டவணைப்படி அது 0·8 ஆகும். அதாவது, அதிகரிப்பு முழு வருமானத்தொகையும் நுகர்வதில்லை. இதற்குக் காரணத்தை நோக்குமிடத்து, வருமான ஓட்டத்திலிருந்து (Income-Stream) உண்டாகும் 'கசிவுகள்' எனலாம். 50 சதவீதம் இறுதிநிலை நுகர்வு நாட்டம் என்றால், வருமான ஓட்டத்திலிருந்து 50 சத வீதம் கசிந்து விட்டது என்றும், எஞ்சிய 50 சத வீதம் தான் நுகர்வுக்காகச் செலவழிக்கப்பட்டது என்றும் பொருள் படும். இக் கசிவுகளில் மிக முக்கியமானவைகள்: (1) சேமிப்பு, (2) கடன் தீர்க்கப்படுதல், (3) நிலையாகக் கிடக்கும் வங்கி வைப்புகளில் பணம் செலுத்துதல், (4) பங்குகள் மற்றும் பத்திரங்களை இரண்டாவது தடவையாக வாங்குதல் (Purchase of old stock and securities), (5) இறக்குமதிப் பொருள்கள் மேல் செலவு செய்தல், (6) வரிகள் மற்றும் கூட்டுருக்களின் சேமிப்பு (Corportion Savings) போன்றவைகளாகும். இவ்வகைகளின் மேல் தொகை ஒதுக்கப்படுவதால்தான் வருமான மட்டம் குறைகிறது. எனவே, நுகர்வுச் சக்தியும் குறைகிறது.

நாம் மறுபடியும் சிறிய பொருளாதாரத்தையும் அதில் குடும்பங்கள், தொழில் நிறுவனங்கள் இருப்பதாகவும் கொள்

வோம். குடும்பங்களின் திட்டச் சேமிப்பையும், நிறுவனங்களின் திட்ட முதலீட்டையும் தொடர்பு படுத்திப் பார்ப்போம். வருமான மட்டம் சம நிலையில் இருக்க வேண்டுமென்றால்— ஒரு கால இடைவெளியில் கூடவோ அல்லது குறையவோ இல்லாமல்—சேமிப்பு வடிவில் உள்ள கசிவானது முதலீடு விரிவாக்கத்தால் ஈடுகட்டப்பட வேண்டும். மீண்டும் முதலில் பார்த்த எடுத்துக் காட்டினைக் கொண்டு, முதலீடு (I) 10 என்றும், நுகர்வோர்கள் வருமானத்தில் 4/5 பங்கு செலவு செய்கிறார்கள் என்றும் எடுகோள் செய்வோம். அதாவது 1/5 பங்கு சேமிக்கிறார்கள். வருமானம் 100 எனக் கொண்டு ஆரம்பித்தால், திட்டமிட்ட சேமிப்பு (20), திட்டமிட்ட முதலீடு 10-ஐ விட அதிகரிக்கும். மேலும் இந்த வேறுபாடு, உண்மை ஈட்டங்களுக்குக் (100) குறைவாக உள்ள திட்டமிட்ட உற்பத்திச் செலவுக்குச் சமமாக இருக்கும். (And the difference would equal the amount by which total Planned spending an output would fall short of actual earnings (100), இப்படியாக, திட்டமிட்ட சேமிப்பு முதலீட்டு மட்டத்திற்குச் சமமாக இருந்து ஒரு நிலையில் வருமானம் இருக்கும் வரை, உண்மை வருமானம் குறைய எத்தனிக்கும்; அதன் விளைவாகத் திட்டமிட்ட சேமிப்பு குறையும். மறுபடியும் இந் நிலை வருமான மட்டம் 50-ல் இருந்தால்தான் நிபந்தனை நிறைவேறும்.

ஒரு காலத்தில் வருமானம் நிலையானதாக இருக்க வேண்டுமென்றால் தேவையான நிபந்தனை ஏதாவது ஒரு முறையில் விவரிக்கப்படலாம்:

$$C+I = Y \text{ அல்லது } S = I$$

முன்னதில், நுகர்வின் திட்டமிட்ட செலவுகளும், முதலீடும் சேர்ந்து வருமானத்தை உண்டுபண்ணுகின்றன. பின்னதில், திட்டமிட்ட சேமிப்புக் கசிவுகளுக்கும், திட்டமிட்ட முதலீட்டு ஈடுகட்டுபவைகளுக்கும் உள்ள சம நிலையைக் காண முடிகிறது.

இதனைக் கணக்கு மூலம் அறியலாம்:

(அ) $C = 20+4/5\ Y$ எனக் கொள்வோம்.

(ஆ) $I = 20$

(இ) $C+I = Y$

(அ) மற்றும் (ஆ)—ஐ (இ)-ல் ஈடுகட்டி விடையைப் பார்த்தால் கீழ்க்கண்டவாறு கிடைக்கிறது:

$$20+4/5\ Y + 20 = Y, \text{ அல்லது}$$


1/5 Y= 40 மற்றும்

Y = 200

y-ன் மதிப்பை (அ)-சமன்பாட்டுடன் ஈடு கட்டினால், நுகர்வின் சமநிலை மதிப்பு 180 கிடைக்கும்.

வருமானம் நிர்ணயித்தல் : வரை பட அணுகு முறை

கணக்குப்படி இதுவரை வருமானம் நிர்ணயித்தலைப்பற்றிப் பார்த்தோம். இனி அதே கோட்பாட்டை வரை படத்தின் மூலம் விளக்கலாம். படம் 1—ல் நுகர்வுச் சார்பை (நுகர்வு நாட்டம் என்று அழைக்கப்படுதல்) மட்டும் பார்த்தோம். படம் 3—ல் நுகர்வுச் சார்போடு முதலீட்டுத் தொகையையும் சேர்த்துக் காட்டப்படுகிறது.




படம் : 3. சமநிலை வருமான மட்டம் நிர்ணயித்தல் (நுகர்வு, முதலீடு மற்றும் சேமிப்பு).

C+I என்ற கோடு திட்டமிட்ட செலவுகளைக் குறிக்கிறது. இவை செங்குத்தாக அளக்கப்படுகின்றன. ஈட்டிய வருமானம் படு கிடைக் கோட்டில் அளக்கப்படுகிறது. 45° கோணத்தில் வரையப்பட்ட கோட்டில் எந்த ஒரு புள்ளியும் திட்டமிட்ட செலவுக்கும், ஈட்டிய வருமானத்திற்குமுள்ள சமன்பாட்டைக் குறிக்கும். இந்தக் கோடு (45°) C+I கோட்டை வெட்டுமிடத்தில் (E) வருமானம் சம நிலையில் இருக்கிறது என்பதை அறியலாம். அதாவது, வருமானம் OYO—ஆக இருக்கும்போது, நுகர்வு மற்றும் முதலீட்டுச் செலவு EYO தொகைக்குச் சமமாக

இருக்கிறது. இவ்வருமான மட்டத்தில் தான் நுகர்வுச் சமநிலை AYO ஆக இருக்கிறது.

OYO வருமானம், வருமானச் சமநிலையைக் குறிக்கிறது. இச்சம நிலையை விட்டு விலகி எந்தப் பக்கம் சென்றாலும் திரும்பவும் அதே இடத்திற்குத்தான் வர வேண்டும். உதாரணமாக, வருமானம் OY_1-ல் இருந்தால், நுகர்வு KY_1 ஆகும். முதலீடும் செய்யத் தொடங்கினால் மொத்தச் செலவு HY_1 ஆகும் அதாவது, OY_1 வருமானத்தின் செலவை விட H J செலவு கூடுதலாகிறது. இதனால் வருமானம் கூடுதலாக ஈட்டப் பட வேண்டியிருக்கிறது. அப்படி E—ஐ அடையும் முடியும் அளவுக்கு வருமானம் உயர்த்தப்பட வேண்டும். இப்போது உற்பத்தியும் வருமானமும் OY_2-ல் இருப்பதாகக் கொள்வோம். உற்பத்திச் செலவு FY_2-க்குச் செல்கிறது. இது அந்த அளவு உற்பத்திக்குப் போதாது (BY_2). எனவே வருமானம் குறையும். இவ் வருமானக் குறைப்பு மேலும் நுகர்வைக் குறைக்கிறது. இந் நிகழ்ச்சி C+I, OYo வருமான மட்டம் வருமளவுக்கு இடம் பெறுகிறது.

இதே கோட்பாட்டையும் முடிவுகளையும் சேமிப்பு மற்றும் முதலீடு வளை கோடுகளில் குறிக்கலாம். இதைப் படம் 4 தெளிவாக விளக்குகிறது.



படம் : 4 சம நிலை வருமான மட்டம் நிர்ணயித்தல் (சேமிப்பு, முதலீடு)

படத்தில் முதலீட்டுக் கோடு பூஜ்யக் கோட்டிலிருந்து படுகிடையாகக் குறிப்பிட்ட தொலையில் வரையப்பட்டிருக்கிறது. படம் 3—ல் C கோட்டிற்கும் 45° கோணமுள்ள கோட்டிற்கும் உள்ள தொலையை இந்தப் படத்திலுள்ள (4) S—கோடு சேமிப்பும் (S) முதலீடும் (I) வெட்டுமிடத்தில் சமநிலை வருமானம் நிர்ணயம் செய்யப்படுகிறது. படத்தில் S-ம் I-யும் E, என்ற

இடத்தில் வெட்டும்போது நிர்ணயிக்கப்படும் சம நிலை வருமானம் OYo. S-ம் I-ம் சமமாக இல்லாது ஒன்று மற்றொன்றை விட குறைவாகவோ அதிகமாகவோ இருக்குமேயானால் சம நிலை வருமானம் ஏற்படாது. உதாரணமாக வருமானம் OY_2 எனக் கொண்டால், சேமிப்பு முதலீட்டை விட B^1F^1 அளவுக்கு அதிகம். சேமிப்பு அதிகமாதலால் வருமானம் குறைந்து கொண்டே வந்து OYo அடைந்ததும் S-ம் I-யும் சமமாகிப் பழைய சம நிலை வருமானம் OYo ஏற்படுகிறது. வருமானம் OY_1 எனக் கொண்டால் முதலீடு சேமிப்பைவிட H^1 J^1 அளவு அதிகம். எனவே வருமானம் உயர்ந்து OYo-அளவை அடையும். இவ்வாறு சமநிலை வருமானம் என்பது சேமிப்பும் முதலீடும் சமமாக இருக்கும் நிலையில் ஏற்படும் வருமானத்தைக் குறிக்கும்.

முதலீட்டுப் பெருக்கி (Investment Multiplier) :

இறுதி நிலை நுகர்வு நாட்டத்தோடு ஒட்டிய கருத்துதான் 'பெருக்கி' யாகும். இக் கருத்து முன்னமே கையாண்டிருந்தாலும் நடைமுறைக்குக் கொண்டு வந்து சுருக்கமாகவும், விளக்கமாகவும் விளக்கிய பெருமை கீன்ஸையே சாரும். 1931—ல் R. F. கான் (R. F. Kahn) என்பவர் 'வேலைப் பெருக்கி' (Employment multiplier) என்ற கருத்தைக் கையாண்டிருக்கிறார். இருவருடைய கருத்துகளும் ஏறத்தாழ ஒரே மாதிரியாக இருந்தாலும் இரண்டும் ஒன்றுதான் எனக் கொள்ள முடியாது. கானின் கருத்துகள், 'Economic Journal, June 1931—ல் 'The relation of Home investment to unemployment' என்ற தலைப்பின் கீழ் விவரிக்கப்படுகிறது. இக்கருத்தைக் கீன்ஸ் தன்னுடைய பொதுக் கோட்பாட்டில் (The General theory) கையாண்டுள்ளார். ஆனால் கீன்சின் பெருக்கியை முதலீட்டுப் பெருக்கி (Investment Multiplier) என்றும் கானின் பெருக்கியை வேலைப் பெருக்கி (Employment multiplier) என்றும் கூறுகிறோம். வேலைப் பெருக்கியை நாம் இங்குக் காண வேண்டியதில்லை. நாம் காண வேண்டியது முதலீட்டுப் பெருக்கியைப்பற்றிதான்.

ஆரம்ப முதலீட்டு அதிகரிப்புக்கும், மொத்த வருமான இறுதி உயர்வுக்கும் உள்ள உறவைப் 'பெருக்கி' குறிப்பிடுகிறது. இன்னும் சற்று விரிவாகக் கூறினால், 'முதலீட்டு மாற்றத்தினால் வருமானம் மாறும் வீதத்தைப் 'பெருக்கி' எனலாம்' (The multiplier is the ratio of change in income to the change in investment). முதலீடு சற்றே அதிகரித்தால் வருமானமும் அதிகரிக்கும். முதலீட்டின் தொடக்க மாற்றம் (Initial change in investment) எத்தனை தடவைகள் பெருக்கப்பட்டிருக்கிறது (Multiplier) என்றும், அதன்

வினைவாக நுகர்வு மாற்றம் ஏற்படுகிறது என்றும், முடிவாக வருமானம் ஏற்படுகிறது என்றும் அது வெளிக் காட்டுகிறது.

ஒரு குறிப்பிட்ட தொகையைப் பொருளாதாரத்தில் முதலீடு செய்யும் போது அத் தொகைக்கு மேல் மொத்த வருமானம் எப்படிக் கூடுதலாகிறது என்ற வினா எழலாம். முதலீடு செய்யப் பட்ட தொழில் நிறுவனங்களில் மட்டும் வருமானம் பெறப் படுவதில்லை. இத் தொழில் நிறுவனங்களுக்கு வேண்டிய மூலப் பொருள்கள் பல வேறு நிறுவனங்களிலிருந்து பெறப்படுவதால் அங்கு வேலை வாய்ப்பு, உற்பத்தி போன்றவை பெருகுகின்றன. அதனால் தான் ஒரு தொழில் நிறுவனத்தில் முதலீடு செய்தாலும் அது மற்ற தொழில் நிறுவனங்களின் வருமானத்தைக் கூட்டு கிறது. எனவே மொத்த வருமானம் போட்ட முதலீட்டிற்கு மேல் அதிகரிக்கிறது.

இறுதி நிலை நுகர்வு நாட்ட அளவைப் பொறுத்துப் பெருக்கியின் அளவு இருக்கிறது. அதாவது இறுதி நிலை நுகர்வு நாட்டம் (M. P. C) கூடுதலாக இருந்தால், பெருக்கியின் அளவும் கூடுதலாக இருக்கும்; இறுதி நிலை நுகர்வு நாட்டம் குறைவாக இருந்தால் பெருக்கியின் அளவும் குறைந்திருக்கும். ("Higher the marginal propensities to consume, higher shall be the size of the multiplier; the lower the marginal propensities to consume the lower shall be the size of the multiplier"). ஒன்றிலிருந்து M. P. C ஐக் கழிப்பதன் மூலம் கிடைக்கும் மீதியைத் தலை கீழாக மாற்றினால் முதலீட்டுப் பெருக்கியின் மதிப்புக் கிடைக்கும் (The investment multiplier is equal to the receiprocal of I minus the MPC). கீன்ஸ் இப்பெருக்கியை K என்று குறிக்கிறார். அதிகரித்த வருமானத்தை $\triangle Y$ என்றும், முதலீட்டை I என்றும், பெருக்கியை K என்றும் குறிப்பிட்டால், $K\triangle I = \triangle Y$ அல்லது $K = \frac{\triangle Y}{\triangle I}$ எனலாம். உதாரணமாக, ரூ. 1 கோடி பொதுப்பணி வேலைகளுக்காக அல்லது தனியார் துறை வேலைகளுக்காகச் செலவிடுவதாக வைத்துக் கொள்வோம். இந்த ஒரு கோடி ரூபாய் ஏனையோர்க்கு வருமானமாக அமைவதால் அது நுகர்ச்சிப் பொருள்கள் அல்லது வேறு பொருள்கள் மீது செலவழிக்கப்படுகிறது. அவர்கள் செலவிடும்போது மற்றவர் களுக்கு வருமானமாகிறது. இவ்வாறு, மொத்த வருமானம் ரூ. 3 கோடியானால், இந்த ரூ. 3 கோடி வருமானத்தை ஆரம்ப முதலீட்டால் வகுத்தால் முதலீட்டுப் பெருக்கி 3 எனக் கிடைக்கும். இதே சமன்பாட்டை M. P. C ஐக் கொண்டு

(இதை m எனக் குறிப்பிடலாம்) கணக்கிட்டால் கீழ்க்கண்ட சமன்பாடு கிடைக்கும் :

$$K = \frac{1}{1-m}$$

இறுதி நிலை நுகர்வு நாட்டம் தெரிந்தால் K. ஐக் கண்டு பிடிப்பது வெகு எளிது. உதாரணமாக, இறுதி நிலை நுகர்வு நாட்டம் 1/2 என வைத்துக் கொண்டால்,

$$K = \frac{1}{1-\frac{1}{2}} = \frac{1}{\frac{1}{2}} = 2 \text{ ஆகும்.}$$

நாம் முன்பே பார்த்த அட்டவணைப்படி இறுதி நிலை நுகர்வு நாட்டத்தையும் இறுதி நிலை சேமிப்பு நாட்டத்தையும் சேர்த்தால் ஒன்று கிடைக்கும். ஒன்றிலிருந்து MPC—ஐக் கழித்தால் MPS (இறுதி நிலை சேமிப்பு நாட்டம்) கிடைக்கும். எனவே நமது மேற் கூறிய விதியைக் கீழ் கண்டபடியும் அமைக்கலாம் :

$$K = \frac{1}{s} \text{ (s= இறுதி நிலை சேமிப்பு நாட்டம்)}$$

இப்படியாக, இறுதி நிலை நுகர்வு நாட்டம் தெரிந்தாலும் சரி அல்லது இறுதி நிலை சேமிப்பு நாட்டம் தெரிந்தாலும் சரி K—ஐக் கண்டு பிடித்து விடலாம்.

கீழ்கண்ட அட்டவணையில் MPC-க்கு இணையாக உள்ள K—ஐக் கண்டு பிடித்துக் கொடுக்கப்பட்டுள்ளது :

MPC	K
0	1
$\frac{1}{3}$	$1\frac{1}{2}$
$\frac{3}{8}$	$1\frac{3}{5}$
$\frac{2}{5}$	$1\frac{2}{3}$
$\frac{1}{2}$	2
$\frac{3}{5}$	$2\frac{1}{2}$
$\frac{5}{8}$	$2\frac{2}{3}$
$\frac{7}{10}$	$3\frac{1}{3}$
$\frac{3}{4}$	4
$\frac{4}{5}$	5
$\frac{9}{10}$	10
$\frac{99}{100}$	100
1	ஈறிலி (infinity) (OO)

மேற்கண்ட அட்டவணையிலிருந்து **MPC** பூஜ்யமாக இருந்தால் பெருக்கி 1—ஆக இருக்கிறது. இது சாதாரணமாக நிகழ்வதில்லை. அப்படி நிகழ்கிறது என்றால் வருமானத்தில் நுகர்வோர் சிறிதளவு கூட செலவழிப்பதில்லை எனப் பொருள். எல்லா வருமானமும் சேமிக்கப்படுகிறது. அதனால்தான் **K = 1**. **MPC** ஒன்று எனக் கொண்டால் நுகர்வோர் எல்லா வருவாயையும் செலவு செய்து விடுகிறார்கள் என்றும், சேமிப்பே இல்லை என்றும் பொருள் கொள்ள வேண்டும். அதாவது, உற்பத்திக்காக அல்லது பணிக்காக செலவு செய்யப்பட்ட பணம் செலவழிந்து கொண்டே போய்க்கொண்டிருக்கிறது. அப்படி என்றால் வருமானம் எல்லையற்றுப் பெருகுகிறது எனப்படும். இச் செயற்பாடு 'மிகையான வீக்கம்' (Hyper inflation) நிகழும் போதுதான் நடைபெறும். வருமானம் வந்தவுடனேயே மக்கள் செலவு செய்ய எத்தனிப்பர். எனவே, பெருக்கியும் எண்ணற்றதாகும்.

முதலீட்டுப் பெருக்கி 1—ஆக இருப்பதும், எண்ணற்றிருப்பதும் மிகவும் அரிது. இதற்கிடையில் தான் மாறுபட முடியும் (Varies). பொதுவாக, முதலீட்டுப் பெருக்கி 2—க்கும், 4க்கும் இடையில் சஞ்சாரம் செய்ய முடியும் என அனுமானிக்கப்படுகிறது.

புது முதலீட்டால், நுகர்ச்சிப் பொருள்களின் மேல் செலவு கூடுதலாகி எப்படி வருமானம் பெருகுகிறது என்பதை இப்போது பார்ப்போம். இதை ஒரு எண் கணிதம் (Arithmatic) மூலம் விவரிக்கலாம். பாலம் அமைப்பு வேலைகளுக்காக ரூ. 10 கோடி முதலீடு செய்வதாகவும், இறுதி நிலை நுகர்வு நாட்டம் 1/2 (பெருக்கி 2) எனவும் கொள்வோம். இதன்படி பார்த்தால் ரூ. 10 கோடி முதலீடு ரூ. 20 கோடி வருமானத்தை உண்டு பண்ணும். இது எப்படி எனக் கீழே காண்போம் :

(ரூபாய் கோடியில்)

$1 \times 10 = 10$

$1/2 \times 10 = 5$

$(1/2)^2 \times 10 = 2{\cdot}5$

$(1/2)^3 \times 10 = 1{\cdot}25$

$(1/2)^4 \times 10 = 0{\cdot}62$


19·37

ரூ. 10 கோடி முதலீடு செய்யப்படுகிறதென்றால் ரூ. 10 கோடி செலவிடப்பட்டது என்பதாகும். இந்த ரூ. 10 கோடி

அடுத்தவர்களுக்கு வருமானமாகிறது. இதில் ரூ. 5 கோடி செலவிடப்படுவதால் மற்றவர்களுக்கு வருமானம் ரூ. 5 கோடி. இதில் ரூ. 2·5 கோடி செலவிடப்படுவதால் மற்றவர்களுக்கு வருமானம் ரூ. 2·5 கோடி. இதில் பாதி செலவிடப்படுகிறது. இவ்வாறு தொடர்ந்து ஏற்பட்டுக் கடைசியில் வருமானம் வற்றிப் போய் விடுகிறது. இந்த செயலால் ஏற்பட்ட மொத்த வருமானம் ரூ. 20 கோடியாகும். இந்த வருமானம் ரூ. 20 கோடி உடனடியாக ஏற்படுவதில்லை. எவ்வளவு விரைவாக வருமானம் செலவிடப்படுகிறது அவ்வளவு விரைவாக மொத்த வருமானம் ரூ. 20 கோடியை அடையும். இதற்குப் பல மாதங்கள் ஏற்படலாம். இந்தக் கால இடைவெளியைக் காலப்பின்னீட்டுத் தன்மை (Time-Lag) என்பர். இதைக் கீன்ஸ் பொருட்படுத்தவில்லை.

இதுவரை பார்த்ததைத் தொகுத்துக் கீழ்க்கண்டவாறு கூறலாம்: "முதலீட்டுப் பெருக்கியின் அளவு இறுதி நிலை நுகர்வு நாட்ட அளவுக்கு நேர் விகிதத்தில் மாறுகிறது; இறுதி நிலை நுகர்வு நாட்டம் அதிகரித்தால் பெருக்கியும் அதிகரிக்கும்; மேலும், அது குறைந்தால் பெருக்கியும் குறைகிறது.

வருமான மட்டத்தில் மாற்றம் ஏற்பட வேண்டுமானால் முதலீட்டு மட்டத்தில் மாற்றம் ஏற்பட வேண்டும். அல்லது நுகர்ச்சி நாட்டத்தில் மாற்றம் ஏற்பட வேண்டும். இதனை ஒரு படத்தின் மூலம் அறியலாம்:



படம் 6. முதலீட்டு அதிகரிப்பால் ஏற்பட்ட வருமான அதிகரிப்பு: முதலீட்டுப் பெருக்கி.

படம்—5 ல் C o நுகர்வுக் கோடும், I o என்ற முதலீட்டு வீதத்தில் (Rate of investment) Co+Io என்ற கோடும் வரையப் பட்டுள்ளன. BYo என்ற உற்பத்திச் செலவில் OYo என்ற வருமானம் சமநிலையில் இருக்கிறது. இப்போது △I என்ற அளவு முதலீடு கூடுதலாகப் போட்டால் மொத்த திட்டமிட்ட செலவுகள் I_1 க்கும் வரும். இதன் விளைவாக $Co+I_1$ என்ற கோடு வரையப்பட்டுள்ளது. உற்பத்தியின் திட்டமிட்ட மொத்தச் செலவு △Yo, சம நிலை வருமான மட்டத்தைத் (OYo) தாண்டிச் செல்லுகிறது. அதாவது, I_1 என்ற திட்டமிட்ட முதலீடு அல்லது Ac, திட்ட மிட்ட சேமிப்பை (Bc) விட அதிகரித்துள்ளது. இதன் விளைவாக உற்பத்தி மிகுதியாகி வருமானம் OY_1—க்குச் செல் கிறது. இது புது சம நிலை வருமானமாகும்.

OYo-விலிருந்து OY_1 க்குச் சென்ற வருமானம், அல்லது △Y, முதலீட்டு மாற்றத்திற்குக் (△I) கூடுதலாகும். ஏனென்றால் முதலீட்டு உயர்வினால் உந்தப்பட்ட வருமானம் நுகர்தலின் மேலும் செலவிடப்படுகிறது. இதனால் மேன்மேலும் வருமானம் கூடுதலாகும். இதன் எல்லை எவ்வளவு என்பதை முந்திய பட்டி யலில் விவரித்தோம். OY_1—க்கும் OYo—க்கும் உள்ள வருமான வேறுபாடு, முதலீட்டு மாற்றம் DE, முதலீட்டு மாற்றத்தினால் உந்தப்பட்ட நுகர்வு மாற்றம் F G ஆகிய இரண்டுக்கும் சமமாகும். படம் 5—ல் முதலீட்டுப் பெருக்கி ஒன்றை விடப் பெரிதாகும். இதற்குக் காரணம் △Y யானது, △I—ஐயும் (மாற்றத்திற்குக் காரணமான) △C—ஐயும் (வருமானத்தால் தூண்டப்பட்ட நுகர்வு) தழுவியுள்ளது. இங்கு △I—யினால் (DE = AB) வருமானத்தில் ஏற்பட்ட மாற்றம் Y_0Y_1 (: C G) வருமானம் மூன்று மடங்கு அதிகரித்துள்ளது என்று காட்டப்பட்டுள்ளது. அதாவது நுகர்ச்சி நாட்டம் 2/3 என அனுமானம் செய்யப்பட்டுள்ளது. இறுதி நிலை நுகர்ச்சி நாட்டம் 2/3 எனக் கொண்டால் பெருக்கியின் மதிப்பு 3—என ஆகிறது.

11. வருமானம் நிர்ணயித்தல்—
(ஆ) முதலீட்டுச் சார்பு
(Investment Function)

கொடுக்கப்பட்ட முதலீட்டு அளவைக் கொண்டும் நுகர்வுச் சார்பைக் கொண்டும் வருமானச் சம நிலைமை பற்றிச் சென்ற அத்தியாயத்தில் கணக்கிட்டோம். நுகர்வுச் சார்பைப் பற்றியும் அதை நிர்ணயிக்கும் காரணிகளைப் பற்றியும் முன்னமே ஆய்வு செய்து இருக்கிறோம். இவ்வத்தியாயத்தில் 'கொடுக்கப்பட்ட முதலீட்டு அளவு' (Given investment magnitude) என்ற அனுமானத்தைத் தளர்த்தி, முதலீட்டுச் செலவு வீதத்தை (rate) நிர்ணயிக்கும் காரணிகளைப் பற்றி விவரிப்போம். மேலும் குடும்பங்கள், தொழில் நிறுவனங்கள் கொண்ட ஒரு சிறு பொருளாதாரத்துடன் அரசையும் சேர்த்து வருமானம் நிர்ணயம் செய்யப்படுவது பற்றியும் ஆய்வு செய்வோம், அதாவது, வருமானத்தில் அரசுச் செலவுகள், வரி விதித்தல் மற்றும் மாற்றுச் செலுத்தல்களின் (Transfer Payments) விளை பயன்களைப் பற்றிப் பார்ப்பதாகும்.

அகக் காரணி மற்றும் புறக் காரணிகளின் அடிப்படையில் முதலீடு அமைகிறது. அவைகளாவன : வியாபாரத்தில் இன்ப நோக்கு துன்ப நோக்கு படுதல் உள்பட உளக் காரணிகள் (Psychological factors) ; புது உற்பத்தி அல்லது தொழில் நுட்பத்திற்கான, தொழில்நுட்ப மாற்றங்கள் (technical changes); மூலதன இருப்பு மாற்றம் ; மக்கள் பெருக்கம் ; தொழில் இலாபங்கள் ; கொடுக்கல் வாங்கல் நடைமுறைப் பழக்கம்; வரி மற்றும் மூலதன இலாப, நட்டத்திற்கான வரிகள். இவைகள் அனைத்தும் எவ்வாறு முதலீட்டு நடவடிக்கைகளை இயக்குகின்றன எனப் பார்ப்போம்.

முதலீடு செய்வோர் எவரும் இலாபத்தைக் கருதியே மூலதனத்தை இடுகின்றனர். மூலதனம் இடுவதில் பல்வேறு வகை

கள் கையாளப்படுகின்றன. பொருள்கள், பிணையங்கள் ஆகியவை கூடுதலான அளவுக்கு வாங்கி எதிர்காலத்தில் நல்ல விலையை எதிர்பார்த்து இருப்பு வைக்கப்படும் செயலைத் தனிப்பட்டவர் முதலீடு எனலாம். ஆனால் பொருளாதாரத்தில் இப்படிப்பட்ட முதலீடுகளே முதலீடு என்று சொல்வதில்லை. புதிதாக ஒரு சொத்தை ஆக்க மூலதனம் இடுதல் முதலீடாகும். எடுத்துக் காட்டாக, புதிய கட்டடம் கட்டுதல், புது இயந்திரம் உற்பத்தி செய்தல், தொழிற்சாலை புதிதாக நிறுவுதல் போன்றவைகள். பொருள்கள் வாங்கல், விற்றல் போன்ற நடவடிக்கைகளுக்கு 'பண முதலீடு' (money investment) எனப் பெயர். ஆனால் நாம் பார்க்க வேண்டிய முதலீடு உண்மை முதலீடாகும் (real investment). இருக்கக் கூடிய மூலதனத் தொகுப்பில் கூடுதலான நிகரச் சேர்க்கைகள்—புதுத் தொழிற்சாலைகள், எந்திரங்கள் போன்றவை —உண்மை முதலீடு எனப்படும், இம்முதலீடு இரண்டு நோக்கங்களின் அடிப்படையில் நிர்ணயிக்கப்படுகிறது. 1. வட்டி வீதம் 2. மூலதனத்தின் இறுதி நிலைத் திறன் (Marginal efficiency of Capital). வட்டி வீதம் மாறுக் காரணி எனக் கொள்வோம். அப்படியானால், முதலீடு, மூலதனத்தின் இறுதிநிலைத் திறனைச் சார்ந்து நிர்ணயிக்கப்படுகிறது என்பது பொருளாகும். எனவே, அதைப் பற்றிக் காண்போம் :—

மூலதனச் சொத்தின் திறன் (The efficiency of capital Asset)

முதலீடு செய்யப்பட்டு உற்பத்தி செய்யப்பட்ட ஒரு உண்மைச் சொத்திலிருந்து முதலீடு செய்வோர் ஓரளவு வருமானம் எதிர் பார்ப்பர். இந்த வருமானம் செலவை விட அதிகமாக இருக்குமானால் லாபம் கிடைக்கும். இந்த லாபம் எதிர்பார்க்கப்பட்ட லாபமாகும்: இதுவே மூலதனச் சொத்தின் திறன் என அழைக்கப்படுகிறது. அதன் திறனை மதிப்பிட வேண்டுமானால் இரண்டு கூறுகள் ஆய்வு செய்யப்பட வேண்டும். ஒன்று வருவாயை உருவாக்கக் கூடிய அச்சொத்திலிருந்து எதிர்பார்க்கப்படும் விளைவு (Prospective yield) ; மற்றது அத்தகைய விளைவுக்குக் காரணமாக இருக்கும் அம்மூலதனச் சொத்தை ஆக்கிப் படைப்பதால் அல்லது புதியவற்றைக் கொண்டு பழையனவற்றை மாற்றுவதால் ஏற்படும் செலவு. இச்செலவுதான் மூலதனச் சொத்தின் அளிப்பு விலையாகும் (Supply Price). முதலீடு செய்வதால் மூலதனச் சொத்து உருவாகிறது. அச்சொத்திலிருந்து பொருள் உற்பத்தி செய்யப்படும். அப்பொருள்களின் உற்பத்தி தொடர்ச்சியாக ஆண்டுதோறும், அச்சொத்தின் ஆயுட்காலம் முழுவதும், வந்து கொண்டிருக்கும். தொடர்ச்சியாக வெளிவரும் உற்பத்தியை

விற்று கிடைக்கக் கூடிய தொகையிலிருந்து உற்பத்திச் செலவுகளான உழைப்பு, மூலப்பொருள்கள், சக்தி (Power) மற்றும் வரிகள் கழிக்கப்படும். கழிக்கப்பட்டு எஞ்சிய தொகையைத்தான் நிகர வினாவு அல்லது நிகர வருவாய் என்கிறோம்.

மூலதனச் சொத்தின் ஆயுட்காலம் 10 ஆண்டுகள் எனவும், ஆண்டு தோறும் கிடைக்கும் வினாவை முதலாண்டுக்கு R_1 எனவும், இரண்டாவது ஆண்டுக்கு R_2 எனவும் இப்படியாக ஒவ்வொரு ஆண்டுக்கும் தொடர்ச்சி எண்ணைக் கொடுத்துப் பத்தாவது ஆண்டுக்கு R_{10} எனவும் கொள்வோம்; பத்தாண்டு கழித்து அச் சொத்து எதற்கும் பயன்படாது. அதிலிருந்து வினாவும் வராது. மேலும் அச் சொத்தின் ஆக்கச் செலவு C எனவும் கொள்வோம். ஒவ்வோர் ஆண்டிலும் கிடைக்கக் கூடிய வினாவுகளின் அளவு சமமாக இருக்க வேண்டுமென்ற கட்டாயமில்லை. வினாவுகளின் மொத்த மதிப்பும், அவ் வினாவுகளுக்குக் காரணமான முதலீட்டின் அளிப்புச் செலவும் தெரியுமானால், எதிர்பார்க்கப்படும் வினாவின் அளவை அளிப்புச் செலவின் வீதமாகக் கொள்ளலாம். அவ் வீதந்தான் முதலீட்டு இறுதி நிலைத் திறனாகும். ஆனால் அவ் வீதத்தைக் கணக்கிடு முன் ஆண்டுதோறும் எதிர்பார்க்கப்படும் வினாவுகளை வட்டி வீதத்திலிருந்து கழித்துப் பார்த்தால் அவற்றின் இன்றைய மதிப்பு (present value) தெரிய வரும். அம் மதிப்பு அளிப்பு விலைக்கு (C) சமமாக இருக்கும். இப்படியாக எதிர் பார்க்கப்படும் வினாவுகளையும், மூலதனச் சொத்தின் அளிப்பு விலையையும் சமப்படுத்த உதவும் கழிவு வீதத்தையே, r (rate of discount) முதலீட்டு இறுதி நிலைத் திறன் எனத் தெளிவாகக் கீன்ஸ் கூறியிருக்கிறார். இதுவரை பார்த்தவைகளைக் கொண்டு ஒரு சமன்பாடு தயாரிக்கலாம்:

$$C = \frac{R_1}{1+r} + \frac{R_2}{(1+r)^2} + \frac{R_3}{(1+r)_3} + \cdots\cdots\cdots \frac{R_{10}}{(1+r)_{10}}.$$

இதில் C = மூலதனச் சொத்தின் அளிப்பு விலை (ஆக்கச் செலவு) R_1 $R_2 \cdots R_{10}$ = ஆண்டாண்டு தோறும் எதிர்பார்க்கப் படும் வினாவுகள்.

r = முதலீட்டு இறுதி நிலைத்திறன் அல்லது கழிவு வீதம்.

ஒரு குறிப்பிட்ட மதிப்புச் சமன்பாட்டில் இருபுறமுள்ள அளவுகளைச் சமநிலைக்குக் கொண்டு வருவது r ஆகும். எடுத்துக் காட்டாக ஒரு குறிப்பிட்ட எதிர் காலத்தில் × அளவு இருக்கக்

கூடும் ரூபாய்களின் தற்போதைய மதிப்பானது தற்போது இருக்கக் கூடிய ரூபாய்களை r என்ற வீதத்தில் முதலீடு செய்து கிடைக்கும் தொகையை ஆண்டுதோறும் சேர்த்துக் கொண்டு போனால் அந்த குறிப்பிட்ட எதிர்காலத்தில் × ரூபாயாக வரும். அதாவது, ஒரு ஆண்டு கழித்து ரூ. 104 இருக்கக்கூடிய பணம் 4 சத வீதத்தில் கழிவு செய்யப்பட்டால், அதன் தற்போதைய மதிப்பு ரூ. 100. ஏனென்றால் ரூ. 100+0·04 (ரூ. 100)= ரூ. 104 அல்லது ரூ. 100 (1+0·04) = ரூ. 104. மேலும் முதல் ஆண்டு இறுதியில் ரூ. 104 இருக்கக் கூடியதை இரண்டாவது ஆண்டில் 4 சத வீதத்தில் கழிவு செய்து, கூட்டிப் பார்த்தால், நமக்கு ரூ. 104 + ரூ. 104 (0·04), அல்லது ரூ. 104 (1+0·04), அல்லது ரூ. 100 (1·04) (1·04), அல்லது ரூ. 100 $(1·04)^2$ கிடைக்கும். எந்த வகையில் கூட்டிப் பார்த்தாலும் ரூ. 108·16 க்குச் சமமாயிருக்கும். ஆகவே சுருக்கமாக இப்படியும் எழுதலாம் :

$$\text{ரூ. } 100\ (1·04)^2 = \text{ரூ. } 108·16 \text{ அல்லது}$$

$$\text{ரூ. } 100 = \frac{\text{ரூ. } 108·16}{(1·04)^2}$$

இதிலிருந்து தெரிவதென்னவென்றால், ரூ. 108·16—ஐ (0·04) என்ற வீதத்தில், இரண்டு காலங்களுக்கும், (two periods) கழிவு செய்தால் கிடைக்கும் விடை ரூ. 100 க்குச் சமமாகும். பொதுவாகக் கூறின், $A\ (1+r)^3 = \times$ என்றால், A ரூபாய்களை r என்ற வீதத்தில் மூன்று காலங்களுக்கும் சேர்த்தால் × ரூபாய்கள் கிடைக்கும் எனப்பொருள்.

(Generalising, $A\ (1+r)^3 = \times$, indicates that A rupees, accumulated over three periods at the rate r is equal to × rupees) : அல்லது

[$A = \frac{\times}{(1+r)^3}$; which indicates that the present value of × rupees three years from now, discounted at the rate r is equal to A rupees].

நாம் இப்போது, $C = \frac{R^1}{1+r} + \frac{^2}{(1+r)^2} \cdots\cdots \frac{R^{10}}{(1+r)^{10}}$

என்ற சமன்பாட்டில் எண்களைக் கொண்டு ஈடுபடுத்திப் பார்க்கலாம். அம் மூலதனச் சொத்தின் ஆயுட்காலம் 10 ஆண்டுகளில், ஆண்டொன்றிற்கு ரூ. 1000 க்கு நிகர வினைவுகள் கிடைக்

கின்றன என்போம். பின் அச் சொத்தின் விளைவு வீதம் அச் சொத்தின் ஆக்க விலையைப் பொறுத்து அமையும். ஆக்க விலை ரூ. 10,000 என்றால், பத்தாண்டுகளில் முதலீட்டுத் தொகையைத்தான் எடுக்க முடியும். இலாபம் ஏதும் இராது. உற்பத்திச் செலவு ரூ. 10000 க்குக் குறைந்தால் விளைவு நேரானதாகும் (posiiive return). இன்னும் குறையக் குறைய விளைவு வீதம் கூடிக்கொண்டே போகும்.

கீழ்க்கண்ட அட்டவணை 'விளைவு வீதம்' அல்லது 'மூலதனச் சொத்தின் திறன்' பல்வேறு மதிப்புடைய 'C'க்கு உகந்தாற் போல் இருப்பதைக் காட்டுகிறது :

பத்தாண்டுகளில் ஆண்டொன்றுக்கு ரூ. 1000 விளைவைக் கொடுக்கக் கூடிய மூலதனச் சொத்தின் பல்வேறு அளிப்பு விலையில் (c) திறன்கள் (r).

c	r
ரூ. 10,000	0·0
8982·59	0·02
8110·90	0·04
7360·09	0·06
6710·08	0·08

பொதுவாக, C ஐ நிலையானதாகக் கொண்டு, எந்த ஒரு சக்தியும் R—னுடைய விளைவைக் கூட்டினாலும், அல்லது R—ஐ நிலையானதாகக் கொண்டு, எந்த ஒரு சக்தியும் C—ஐக் குறைத்தாலும், எடுத்துக் கொள்ளப்பட்ட மூலதனச் சொத்தின் திறன் (r) கூடுதலாகும் (Ingeneral, we may say that anything that increases the prospective R's, assuming a constant c or anything that reduces c, with expected R's constant, will raise the efficieney (r) of the asset in question).

முதலீட்டுச் சார்பு (Investment functions)

முதலீட்டுச் சொத்தின் இறுதிநிலைத் திறன், அச் சொத்திலிருந்து எதிர்பார்க்கப்படும் விளைவையும் (R) அச் சொத்தின் அளிப்பு விலையையும் (C), பொறுத்து இருக்கிறது எனப் பார்த்தோம். ஆனால் அதன் திறன் மாறுத்தன்மையை உடையது எனக் கூற முடியாது. முதலீடு செய்யப்படும் வேகத்தையும்,

அளவையும் பொறுத்து மாறுபடும். அதாவது, முதலீடு மாறினால் R—ம், C—யும் மாறுபடும். எதிர்பார்க்கக் கூடிய அளவுக்கு R கிடைக்காமல் போவதற்குப் பல காரணங்கள் உள: மூலதனச் சொத்து வழக்கொழிந்து போகலாம்; பராமரிப்புச் செலவு எதிர்பாராமல் கூடவோ அல்லது குறையவோ செய்யலாம்; சம்பளம், கூலி முதலிய செலவுகளில் மாற்றம் ஏற்படலாம்; உற்பத்திக்கான தேவை கூடுதலாகலாம்; சந்தையில் புதிய நிறுவனங்கள் தோன்றிப் போட்டி மிகுதியாகலாம். ஆகவே, பல்வேறு காரணங்களால் விளைவு வீதம் எதிர்பார்த்தபடி கிடைக்காமல் பல அளவுகளில் பல காலங்களில் கிடைக்கும். எனவேதான், பல நிறுவனங்கள் எதிர்கால விளைவுகளைக் கணக்கிடும் போது, பல காலங்களில் கிடைக்கக் கூடிய சராசரி விலையையும், கூடுதலாக எவ்வளவு கிடைக்கும், குறைவாக எவ்வளவு கிடைக்கும் எனவும் அனுமானம் செய்துகொள்ள வேண்டும். ஒரு கால அளவில் முதலீட்டின் அளவும், வேகமும் கூடுதலானால் தொழில் நிறுவனங்களின் தொழிலுக்கு ஆபத்தும் கூடுதலாகிறது. அதாவது, இலாபம் குறைந்து கொண்டே போய் தொழில் நடத்தக் கூட கட்டுப்படியாகாமல் போய் விடும்.

மூலதனச் சொத்தின் உற்பத்திச் செலவும் (c) தனித்து இயங்கி இறுதிநிலைத் திறனைப் பாதிக்க முடியும். முதலீட்டின் அளவு வீதத்தோடு இணைந்து இருக்க வேண்டுமென்ற அவசியமில்லை. ஆனால் பொருளாதார முழுமைக்கும், குறிப்பாக செழிப்பின் (boom) உச்சகட்ட காலத்தில், மூலதனப் பொருள்களின் உற்பத்தி அதிகரிக்க அதிகரிக்க அவைகளின் இறுதி நிலை உற்பத்திச் செலவு கூடுதலாகும்; இறுதி நிலைத் திறன் குறையும்.


ஆகவே, மூலதனச் சொத்தின் திறனை நிர்ணயிக்கக் கூடிய இரண்டு காரணிகளும் முதலீட்டு வீதத்தையும், வேகத்தையும் பொறுத்து மாறுகின்றன எனலாம்.

முதலீடும் வட்டி வீதமும் (Investment and the rate of Interest).

முதலீட்டு இறுதி நிலைத்திறனுக்கும் வட்டி வீதத்திற்கும் நெருங்கிய உறவு இருக்கிறது. கீன்ஸின் உளவியல் கோட்பாட்டின்படி முதலீட்டின் அளவு, முதலீட்டின் இறுதி நிலைத் திறனையும், வட்டி வீதத்தையும் சார்ந்திருக்கிறது. ஆனால் இரண்டும் தனித்து இயங்கக் கூடியவை என்றாலும், இறுதி நிலைத்திறனும் வட்டி வீதமும் சமமாகும் வரையில் முதலீடு

தூண்டப்படுகிறது. தனித்து இயங்கக் கூடிய திறமை அவை களுக்கு இருந்தாலும், இரண்டும் சேர்ந்து முதலீட்டின் அளவை நிர்ணயிக்க உதவும். முதலீட்டினளவால் வேலையினளவும் நிர்ணயம் செய்ய முடியும். ஆனால் மூலதனச் சொத்துகளின் அளவு அதிகரிக்க அதிகரிக்க முதலீட்டின் இறுதி நிலைத்திறன் குறைவதனால், அதன் வீதம் சிறிது சிறிதாக வட்டி வீதத்தை நெருங்கிச் சமநிலையை அடையலாம். அத்தகைய சமநிலையை அடையும் வரை முதலீடு கூடிக் கொண்டே போகும் என்பது புலனாகும்.

எல்லாவிதமான மூலதனச் சொத்துகளின் இறுதி நிலைத் திறன்களையும் ஒரு பட்டியலாகத் தயாரித்தால் அதை முதலீட்டு இறுதி நிலைத்திறனின் பட்டியல் (Schedule of marginal efficiency of capital) அல்லது முதலீட்டுத் தேவைப்பட்டியல் (Investment demand schedule) என்று கூறலாம். இப் பட்டியலை ஒரு வரை படத்தில் குறித்தால் இடமிருந்து வலமாகக் கீழ் நோக்கிச் செல்லும் ஒரு வளைகோடு கிடைக்கும். அப் படம் கீழே குறிக்கப் பட்டுள்ளது.




படம் 1. முதலீட்டின் சார்பு

படம் 1 ல் முதலீட்டு விளைவு வீதமும் (r) சந்தையில் நிலவும் வட்டி வீதமும் (i) செங்குத்தச்சில் அளக்கப்படுகிறது; முதலீட்டின் அளவு படுகிடையச்சில் அளக்கப்படுகிறது. வட்டி வீதம் மாறு வதற்கு ஏற்றாற்போல் முதலீடும் மாறுவதை I- வளைகோடு காண் பிக்கிறது. சந்தையில் வட்டி வீதம் io என்றும் அவ்வீதத்தில் தொழில் முனைவோர்கள் கொடுக்கல், வாங்கல் செய்கிறார்கள் என்றும் கொள்வோம். மூலதனச் சொத்தின் விளைவு வீதம் io க்குக் கூடுதலாக இருந்தால் முதலீட்டுப் பெருக்கத்தினால்

இலாபம் கிடைக்கும். அதாவது, மூலதனம் Io க்குக் குறைவாக இருந்து பெருக்கப்பட்டால்தான் இலாபம் கிடைக்கும். இதே போல் விளைவு வீதம் (r) வட்டிவீதத்தைவிடக் குறைவாகவும், முதலீடு Io க்குக் கூடுதலாகவும் இருந்தால் மூலதனச் சொத்தின் திறன் குறையும்; இலாபமும் குறையும். எனவே மேன்மேலும் முதலீடு செய்யப்படுவது தவிர்க்கப்படும். இப்படியாக, Io என்ற முதலீட்டு அளவு r-ம் Io-ம் சமநிலையில் இருக்கும்போது நிர்ணயிக்கப்படும். இதற்கு மாறுக, சந்தை வட்டி வீதம் i_1, Io-க்குக் குறைவாக இருந்தால் முதலீடு உந்தப்பட்டு, I_1 க்குச் செல்லும். அப்படிச் சென்றால் முதலீடு கூடுதலாவதால் மூலதனச் சொத்தின் திறன் குறைந்து மூலதனம் I_1 க்கு வந்து விடும். அந் நிலையில் தொழில் கட்டுப்படியாகாது. மீண்டும் முதலீடு y = io க்கு வருமளவுக்குக் குறைக்கப்படும். சில தொழில் நிறுவனங்கள் மூடப்படும். இப்படியாக முதலீட்டின் அளவு வட்டி வீதத்தைப் பொறுத்து இருக்கிறது, எனக் கூறலாம். (In this manner, investment depends on or is a function of, the rate of interest) .

I வளை கோட்டின் வட்டி நெகிழ்ச்சி (Interest elasticity of I curve) :

ஒரு குறிப்பிட்ட கால அளவில் முதலீட்டின் அளவு அதிகரித்தால் அதன் இறுதிநிலைத்திறன் குறையும் என்பதை அவ் வளை கோட்டின் போக்கிலிருந்து அறிந்து கொள்ளலாம். வட்டி வீதம் கூடுதலானாலோ குறைந்தாலோ முதலீட்டின் துடிப்புவீதம் எப்படி இருக்கும் என அறிய முடியும். இதனை வரைபடங்களின் மூலம் அறிந்து கொள்ளலாம். (படம்—2).



(அ) நெகிழ்ச்சியுள்ள முதலீட்டு இறுதிநிலைத் திறன்.

(ஆ) நெகிழ்ச்சியற்ற முதலீட்டு இறுதிநிலைத் திறன்.

படம் 2. முதலீட்டுச் சார்பும் வட்டி நெகிழ்ச்சியும்

வளைகோடு நெகிழ்ச்சியுள்ளதாக இருந்தால், வட்டிவீதம் ஒரு குறிப்பிட்ட அளவில் குறைந்தாலும் முதலீடு ஓரளவில் அதிகரிக்கும். படம் 2 (அ)-ல் வட்டி வீதம் i_0 விலிருந்து i_1 ஆகக் குறையும் போது முதலீடு I_0-லிருந்து I_2 க்குச் செல்வதைக் காணலாம். அதாவது, தேவையான அளவு அதிகரித்துள்ளது எனலாம். படம் 2 (ஆ)-ல் வளை கோட்டில் நெகிழ்ச்சியில்லாத காரணத்தால் வட்டி வீதத்தில் ஏற்படும் வீழ்ச்சிக்கேற்ப முதலீடு அதிகரிக்காமல் I_1-க்கு மட்டும் செல்வதைக் காணலாம். நடைமுறையில் வளைகோட்டின் அமைப்பு பொதுவாக நெகிழ்ச்சி குறைந்ததாக இருக்குமென்று கீன்ஸ் கூறுகிறார். தொழில் முனைவோர்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமாக எதிர்கால விளைவுகளைக் கணிப்பதால் இறுதிநிலைத்திறன் இவ்வளவுதான் எனத் திட்டவட்டமாகக் கூற முடியாது. மேலும் அனுபவத்தைக் கொண்டு பார்க்கும்போது முதலீட்டு இறுதிநிலைத்திறனின் பட்டியலில் அவ்வளவு நெகிழ்ச்சி காணப்படுவதாகச் சொல்ல வழியில்லை. நாம் முன்னமேயே கூறியபடி, மக்கள் பெருக்கம், தொழில் நுணுக்க முன்னேற்றம், புதிய கண்டு பிடிப்புகள், எந்திரங்களின் வழக்கொழிவு போன்ற அசாதாரணமான காரணங்களாலன்றி, முலதனச் சொத்தின் இறுதிநிலைத்திறனின் பட்டியலைக் காட்டும் வளைகோட்டில் நெகிழ்ச்சி காண்பதரிது.

வேகப்படுத்தி (முடுக்கி) : (The Accelerator)

பெருக்கியோடு (Multiplier) இணையாக உள்ளது வேகப்படுத்தி. இதை 'முடுக்கி' எனவும் கூறலாம். இக் கோட்பாட்டை, ஒழுங்கற்ற, சீர்படுத்தப்படாத முறையில் பிரான்சு பொருளாதார அறிஞரான அல்பர்ட் ஆஃப்டாலியன் (Albert Aftalion) முதன் முதலில் கையாண்டிருக்கிறார். பின் இதற்கு மெருகிட்டிருக்கிறார் அமெரிக்கப் பொருளாதார அறிஞர் ஜே. எம். கிளார்க் (J. M. Clerk) என்பவர். இதில் முக்கியமாகக் குறிப்பிடப்படுவதென்னவென்றால் கீன்ஸுக்கும் வேகப்படுத்திக்கும் எவ்விதத் தொடர்புமில்லை என்பதாகும். கீன்ஸ் தனது கோட்பாடுகளில் வேகப்படுத்தியைப்பற்றி எங்கும் குறிப்பிடவில்லை; அடியோடு புறக்கணித்திருக்கிறார். இருந்தாலும் வருமானக் கோட்பாட்டில் முடுக்கியைப்பற்றியும் குறிப்பிடத்தான் வேண்டியிருக்கிறது.

பெருக்கி, முதலீடு மாற்றத்தினால் உண்டாகும் நுகர்வு மாற்றத்தைக் காண்பிப்பது போல், வேகப்படுத்தி, நுகர்வு

மாற்றத்தினுல் ஏற்படும் முதலீடு மாற்றத்தைக் காண்பிக்கிறது. பெருக்கியில், நுகர்வு, முதலீட்டைச் சார்ந்திருக்கிறது; வேகப் படுத்தியில், முதலீடு, நுகர்வைச் சார்ந்திருக்கிறது. (The Multiplier shows the dependence of consumption on investment. The Accelerator, on the other hand, shows the dependence of investment on consumption). நுகர்ச்சிப் பொருள்கள் உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகளில் ஏற்படும் மாற்றங்களே வேகப் படுத்தியானது அளக்கிறது. பொருளாதாரத்தில், கொடுக்கப் பட்ட நுகர்ச்சிப் பொருளின் தேவையானது முதலீட்டுப் பொருள் களின் வேகப்படுத்தப்பட்ட தேவையை (accelerated demand for investment goods) உந்தப்படுவதை வேகப்படுத்திக் கோட்பாடு விளக்குகிறது. சுருங்கக் கூறினுல் நுகர்ச்சிப் பொருள்களின் தேவை அதிகரிப்பு எந்த அளவுக்கு மூலதனப் பொருள்களின் தேவையை அதிகரிக்கச் செய்கிறது என்பதை வேகப் படுத்தி அளக்கிறது. எடுத்துக்காட்டாக, ஒரு ஆலையில் 1,00,000 மின் விசிறிகள் உற்பத்தி செய்ய 100 மின் எந்தி ரங்கள் தேவைப்படுகின்றன என்றும், ஒவ்வொரு இயந்தி ரத்தின் ஆயுட்காலம் 10 ஆண்டுகள் எனவும் கொள்வோம். அப்படி யென்ருல் ஒவ்வொரு ஆண்டும் 10 எந்திரங்கள் உபயோகப் படுத்த முடியாமல் தேய்ந்து போகின்றன (Wear out) எனப் பொருள். பிறகு மின் விசிறிகளின் தேவையும், ஈடுகட்ட மின் எந்திரங்களின் தேவையும், ஒரு அட்டவணையில் கீழே காண்பிக்கப்படுகின்றன :-

மின் விசிறிகளின் தேவையின் வழிவந்த மின் எந்திரங்களின் தேவை

காலம்	மின் விசிறிகளின் தேவை	எந்திரங்களின் தேவைப் படுபவை	ஈடுகட்ட எந்திரங்களின் தேவை	எந்திரங்கள் கூடுதலான நிகர தேவை	எந்திரங்களின் மொத்தத் தேவை
(1)	(2)	(3)	(4)	(5)	(6)
0	1,00,000	100	10	0	10
1	1,00,000	100	10	0	10
2	1,10,000	110	10	10	20
3	1,20,000	120	10	10	20
4	1,25,000	125	10	5	15
5	1,25,000	125	10	0	10
6	1,20,000	120	10	-5	5

காலம் 0-வில் 1,00,000 விசிறிகள் செய்ய 100 எந்திரங்கள் தேவைப்படுகின்றன. அதே இருப்பை மாறுமல் பெறுவதற்கு 10 எந்திரங்கள் தேவைப்படுகின்றன. கூடுதலான உற்பத்தி தேவையில்லை. எனவே மொத்தம் தேவைப்படுபவை 10 எந்திரங்கள் மட்டுமே. காலம் 1-லும் கூடுதலான விசிறிகள் தேவைப்படவில்லை. ஆகவே எந்திரத் தேவையும், ஈடுகட்டத் தேவைப்படும் வீதமும், மொத்தத் தேவையும் நிரந்தரமானதாக இருக்கிறது. காலம் 2-ல் விசிறிகள் தேவை 1,10,000-ஆக உயருகிறது என அனுமானம் செய்தால், 110 எந்திரங்கள் தேவைப்படுகின்றன. ஈடுகட்டத்தேவைப்படும் எந்திரங்களோடு கூடுதலாக 10 தேவைப்படுவதால் மொத்தத் தேவை 20 ஆக உயருகிறது. அதாவது, நுகர்வுப் பொருள்களின் தேவையில் 10 சத வீத உயர்வு, நிகர முதலீட்டைப் பெருக்கம் செய்து, மொத்த முதலீட்டுத் தேவையை 100 சத வீத அளவுக்குக் கொண்டு வந்துள்ளது. காலம் 3-ல் உற்பத்தி 1,20,000 ஆக இருந்தால் எந்திரங்கள் தேவைப்படுபவை 120; மீண்டும், ஈடுகட்டுந்தேவை 10, கூடுதலான தேவை 10, ஆக மொத்தம் 20 தேவைப்படுகிறது. காலம் 4-ல் தேவை 1,25,000 க்கு உயர்ந்தால் 125 எந்திரங்கள் தேவைப்படுகின்றன. காலம் 3-ல் கூடுதலான தேவை 10,000 விசிறிகள்; ஆனால் காலம் 4-ல் 5000-ந்தான், அதாவது 10,000 க்கும் குறைவாகத்தான் தேவை உயர்ந்திருக்கிறது. ஈடுகட்டும் எந்திரங்களின் எண்ணிக்கை 10-ல் தான் இருக்கிறது; ஆனால் அஃதே போழ்து தூண்டிய நிகர முதலீடு (Induced net investment) குறைந்து 5-க்கு வருகிறது; மொத்த எந்திரங்களின் தேவை 15 ஆக இருக்கிறது. காலம் 5-ல் விசிறிகளின் தேவை 1,25,000-லேயே இருந்தால், தூண்டிய முதலீடு மறைந்து விடுகிறது. எந்திரங்களின் மொத்தத் தேவை ஈடுகட்டத்தேவையான அளவுக்குத் திரும்ப வருகிறது. அதாவது 125 எந்திரங்கள் எண்ணிக்கையை அப்படியே வைத்திருப்பதற்கு மட்டும் ஈடுகட்டு எந்திரங்கள் தேவைப்படுகின்றன. காலம் 6-ல் தேவை 1,20,000 க்குக் குறைந்து வந்தால் எந்திரங்களின் தேவையும் 120 க்குக் குறைகிறது. அதன் விளைவாக (தூண்டப்பட்ட நிகர முதலீடு-5 க்கு வருகிறது) எந்திரங்கள் மொத்தத் தேவை 5-க்கு வருகிறது. இப்போது முடிவான தேவையைச் சரி செய்தால், (If final demand now levels off) நிகர முதலீடு 0-வுக்கு உயரும். மொத்தத் தேவை, ஈடுகட்டும் தேவைக்குச் சரியாக இருக்கும். ஆனால் முடிவான தேவை மேலும் குறைந்தால் தூண்டிய முதலீடு தொடர்ந்து எதிரான அளவில் (negative quantity) செல்லும்; எந்திரங்களின் மொத்தத் தேவை அதற்கு ஏற்றாற்போல் குறைக்கப்படும்.

மேற்கண்ட அட்டவணையிலிருந்து தெரிவதென்ன வென்றால் தூண்டிய முதலீட்டின் அளவு [பகுதி 5 (column)] மின் விசிறிகளின் தேவை மாற்றத்தைச் (பகுதி 2) சார்ந்திருக்கிறது என்பதாகும். இதையே தான் முன்பே விவரித்தோம். ஒவ்வொரு 1,000 மின் விசிறிகளின் தேவை உயர்வுக்கும் தூண்டிய முதலீடு 1 ஆகும்; ஒவ்வொரு 1,000 விசிறிகளின் இறுதித் தேவை குறைவுக்கும் தூண்டிய முதலீடு 1 ஆகும்; ஒரு நிலையான மின் விசிறிகளின் இறுதித் தேவைக்குத் தூண்டிய முதலீடு 0 ஆகும். இந்த எண்ணிக்கை அளவுகளை ரூபாய்க்குக் கொண்டு வந்தால் கீழ்க்கண்டவைகள் கிடைக்கும்: ஒரு எந்திரத்தின் விலை ரூ. 10,00,000-ஆக இருக்கும் போது, 1000 விசிறிகள் ரூ. 5,00,000-க்கு விற்கிறது என்றால் பிறகு இறுதி விற்பனையில் ஒவ்வொரு ஒரு ரூபாய் உயர்வுக்கும், தூண்டிய முதலீடு ரூ. 2 ஆகும்; இறுதி விற்பனையில் ஒவ்வொரு ஒரு ரூபாய் குறைவுக்கும், தூண்டிய முதலீடு ரூ. 2 ஆகும். தூண்டிய முதலீட்டின் அளவு, மின் விசிறிகளின் இறுதி விற்பனை விலை மாற்றத்தைப் போல் (நேர் அல்லது எதிர்) இரண்டு மடங்காகும். நமது எடுத்துக் காட்டுப்படி ரூ. 5,00,000 நுகர்வுப் பொருளான மின் விசிறிகள் ரூ. 10 லட்சம் முதலீட்டைத் தூண்டியிருக்கிறது. எனவே வேகப்படுத்தி 2 ஆகும்.


பெருக்கியும், வேகப்படுத்தியும் – பின்னிய செயல்கள் (Interaction of multiplier and Accelerator)

பெருக்கியையும், வேகப்படுத்தியையும் தனித்தனியே பார்த்த பிறகு, அவைகளின் விளைவுகளையும், செயற்பாடுகளையும் இப்போது நாம் இணைத்துப் பார்ப்போம். சார்பற்ற முதலீடு (autonomous investment) ஒரு புதிய மட்டத்தை அடைவதாகவும், அதன் விளைவாக நுகர்வு அதிகரிப்பதாகவும் (பெருக்கி) மீண்டும் ஒரு முறை அனுமானம் செய்வோம். வேகப்படுத்தியின் கோட்பாடு, நுகர்வின் அதிகரிப்பால் நுகர்வுப் பொருள்களை உற்பத்தி செய்வதற்காக முதலீடு தூண்டப்படுகிறது என்பதை விவரிக்கிறது: தூண்டிய முதலீடு வருமானத்தைக் கூட்டுகிறது. இதனால் நுகர்வு மட்டம் மாறுபடுகிறது. இப்படியாகக், காலத்திற்குக் காலம் (Period after Period) நுகர்வும் தூண்டிய முதலீடும் மாறி மாறி தொடர்ந்து செயல்படுகின்றன.

ஆரம்பச் சம நிலையினின்றும் அதிகரிக்கும் வருமானம் மூன்று கூறுகள் கொண்டிருப்பதைப் பற்றிப் பார்ப்போம்:— (1) புது மட்டத்தில் நிலையானதாகக் கொள்ளப்பட்ட சார்பற்ற முதலீடு (autonomous investment) அதிகரித்தல் (2) தூண்டு

தலினால் நுகர்வு அதிகரித்தல் மற்றும் (3) தூண்டிய முதலீடு வருமானம் கூடுதலானால் நுகர்வு அதிகரிக்கும்; அந்நுகர்வின் அதிகரிப்பு அளவு இறுதி நிலை நுகர்வு நாட்டத்தை ஒட்டியிருக்கிறது. நுகர்வு மாற்ற வீதத்தையும், வேகப்படுத்தியையும் பொறுத்துத் தூண்டிய முதலீடு இருக்கிறது. நுகர்தலின் கூடுதல் குறைவுக்கேற்றவாறு தூண்டிய முதலீடு கூடவும் குறையவும் செய்கிறது. முடிவில், சமநிலையை எய்தியாகிவிட்டது என அனுமானித்தால், சார்பற்ற முதலீடு, மாற்றத்தாலும் பெருக்கியினாலும் வருமான மட்டம் எந்த அளவில் இருக்க வேண்டுமோ அந்த அளவில் நிர்ணயிக்கப்படுகிறது. அந்தப் புள்ளியில் (at that point) வேகப்படுத்திக்கு எந்தவித தூண்டும் சக்தியும் கிடையாது. ஏனென்றால் சம நிலையில் நுகர்வு மாற்றத்தின் வீதமும் பூஜ்யம், தூண்டிய முதலீட்டின் வீதமும் பூஜ்யம். சம நிலையை அடையும் வருமானத்தில் வேகப்படுத்திக்கு எந்தவித பங்குமில்லை யென்றாலும், வருமானம் சம நிலையை அடைவதற்கான வழி முறைகளை வேண்டுமானால் தடை செய்து கெடுக்கலாம். உண்மையில் சம நிலை மட்டத்தை எப்போதாவது அடைய முடியுமா, முடியாதா என வேண்டுமானால் வேகப்பத்தி நிர்ணயிக்கலாம்.

வருமானம் சரி செய்யப்படுதல் (income adjustment) இரண்டு காரணிகளைக் கொண்டிருக்கிறது : (1) இறுதி நிலை நுகர்வு நாட்டம் (அல்லது பெருக்கி); (2) வேகப்படுத்தி. இரண்டு காரணிகளின் ஒன்றுக் கொன்றன தொடர்புகளைப்பற்றியும், அவைகள் வருமான மட்டத்தில் எவ்வாறு பங்கு கொள்கின்றன என்றும் விவரிப்போம். ஆரம்ப வருமானச் சமநிலை 100 எனவும், இறுதிநிலை நுகர்வு நாட்டம் 1/2 எனவும், சார்பற்ற முதலீட்டின் நிரந்தர உயர்வு வீதம் 10 எனவும் கொள்வோம். வேகப்படுத்தியைப் புறக்கணித்து விட்டு (அது பூஜ்யம் என்போம்) குறிப்பிட்ட காலத்தில் வருமானம் புதிய சம நிலைக்கு படிப்படியாக உயர்ந்து 120-க்கு வருவதைப் படம் 3 (அ)-ல் தடித்த கோட்டில் A குறிக்கப்பட்டிருப்பதைக் காணலாம்.



படம் 3. முதலீட்டுப் பெருக்கி மற்றும் வேகப்படுத்தியின் பின்னிய செயற்பாடுகள் (Interactions between the Investment Multiplier and the Accelarator.)

இப்போது மிகச் சிறிய அளவில் வேகப்படுத்தியைக் கொண்டு தூண்டிய முதலீடு செய்யப்பட்டால் புதிய சம நிலை மட்டத்திற்கு வருமானம் நேரிடையாக மிக வேகத்துடன் மீண்டும் உயரும். இப்படி ஒரு குறிப்பிட்ட காலத்தில் உயர்ந்து செல்லும் பாதையை விடுபட்ட கோடு மூலம் A^1 (dashed line A^1) காட்டப் படுகிறது [படம் 3 (அ)].

வேகப்படுத்தியை இப்போது இன்னும் அதிகரித்தால், வருமானம் நேரடியாகச் சமநிலையை அடைவதில்லை. வேகப்

படுத்தியை அதிகரித்த உடனேயே வருமானம் கூடுதலாவதும், பிறகு குறைவதும் மறுபடியும் கூடுதலாவதும் மீண்டும் குறைவதுமாக மாறி மாறிச் சுழற்சிகள் ஏற்படுகின்றன. ஆனால் அச் சுழற்சிகளின் (வளைவுகள்) (Cycles) வீச்சு விரைப்பாகச் செல்லாமல் படிப்படியாகக் குறைந்து கடைசியில் வருமானச் சம நிலையான 120-ஐ அடைகின்றன. இதைப் படம் 3 (ஆ)ல் காணலாம்.

வேகப்படுத்தியை ஒரு இக்கட்டான அளவுக்கு (critical value) உயர்த்தினால் (நமது உதாரணப்படி, 2-க்கு), வருமானத்தின் சுழல்கள் மாறுத ஒரே அகல வீச்சில் (constant amplitude) உண்டாக்கப்படுவதைப் படம் 3 (இ)ல் காணலாம். பெருக்கி மற்றும் வேகப்படுத்தியின் அந்த மதிப்புகளில், ஒரு தடவை வருமான மாற்றம் செய்யப்பட்டால் அது தொடர்ந்து மாறிக் கொண்டேயிருக்கும்; எந்தக் காலத்திலும் அது நிலையான மதிப்பை அடையவே அடையாது.

வேகப்படுத்தி இன்னும் கூடுதலாக உயர்த்தப்பட்டால் உயர்ந்து செல் வருமானச் சுழல்கள் வீச்சு (Cycles of increasing amplitude) ஏற்படுவதைப் படம் 3 (ஈ)-ல் காணலாம். ஆனால் இப்படியான நிலையற்ற தன்மை எப்போதும் தொடர்ந்து நடைபெற முடியாது என்பது தெளிவாகும். தூண்டிய முதலீட்டின் பெருமளவு விளைவுகளால் உண்டான விரிவடைந்து செல்லும் சுழல்கள் மேல் பாதையில் (upper direction) முழு வேலை வாய்ப்பு அளவு உற்பத்தி அளவால் வரையறுக்கப்படுகின்றன. உள்ளிருப்பு மூலதன நுகர்ச்சிக் காலத்தால் (Amount of potential capital consumption of the period) வரையறுக்கப்பட்ட 'எதிர்' தூண்டப்பட்ட முதலீடு (negative induced investment), அவ்வரிவடைந்து செல்லும் சுழல்களில் கீழ்ப்பாதையை வரையறுக்கின்றது. இப்படியாக, நுகர்ச்சி மட்டுமே செலவிடப்படுவதால் ஏற்படும் வருமானம், மொத்த முதலீடு பூஜ்ய நிலையில் ஏற்படுகிறது. இந்த வருமானந்தான் கீழ்மட்ட அளவாகும். இதற்கும் கீழாக வருமானம் குறைய முடியாது.

இதில் நாம் முக்கியமாகக் கவனத்தில் கொள்ள வேண்டியது ஒன்று உண்டு. மேலே கொடுக்கப்பட்ட அனுமானங்களின் அடிப்படையில் வருமான அதிகரிப்பு வீதத்தில் குறைவு ஏற்படுமானால் தூண்டப்பட்ட முதலீட்டில் வீழ்ச்சி ஏற்பட்டு அதன் விளைவாக வருமானம் குறைந்து நுகர்ச்சி மேலும் குறையும். இவ்வாறுகத் தொடர்ந்து வருமானம் கீழ்மட்ட நிலையை அடைகிறது. முடிவாக, இது எதிர் தூண்டப்பட்ட முதலீட்டு நிலையை ஏற்படுத்துகிறது. ஆனால் முன்னமே கண்டபடி எதிர் தூண்டப்

பட்ட முதலீடு வரையறுக்கப்படுகிறது; எனவே கீழ்நோக்கு நிலையில் வருமானம் வரையறுக்கப்படுகிறது. முடிவாக, ஈடு செய்யப்படாமல் முதலீட்டுச் சாதனங்கள் நடை முறை நுகர்ச்சித் தேவையை உற்பத்தி செய்யும் அளவு வரை எதிர் முதலீடு அதன் போக்கில் செல்லும். அந்நிலைக்குப்பின் முதலீட்டுச் சாதனங்கள் புதுப்பிக்கப் பட்டாவது ஆக வேண்டும். எனவே, புதுப்பிக்கப் பட்ட முதலீட்டுத் தேவை (Renewed investment demand) வருமானத்தை உயர்த்தி புதிய சுழற் பெருக்கத்தை (cyclical expansion) ஏற்படுத்தி மீண்டும் முன்பு கூறப்பட்ட நிலையை (முழு வேலை வாய்ப்பு வருமானம்) அடைகிறது.

வேகப்படுத்தியின் மதிப்பு மேலும் அதிகமென்று (நமது எடுத்துக்காட்டுப்படி 2-க்கும் மேலாக) அனுமானம் கொண்டால், வருமானத்தில் சுழற்சி ஏற்பட்டு அது முழு வேலை அளவு நிலையை அடையாமல், நேரிடையாக வளர்வீதத்தில் படம் 3 (2)ல் காட்டிய படி அந்நிலையை அடைகிறது. இம்மாதிரியான வளர்வீத நிலை ஏற்பட்டாலும் அவ்வளர்வீத நிலைக்கு உயர்மட்ட அளவை முழு வேலை அளவு ஏற்படுத்துகிறது. முன்பு கூறியது போல், தூண்டப் பட்ட முதலீடு குறைய வருமானம் குறைந்து, நுகர்ச்சி குறைந்து எதிர் முதலீடு உண்டாகும். கடைசியாக, மீட்சி திரும்பவும் உயர் மட்ட அளவுக்கு எடுத்துச் செல்லும். இவ்வாறு உயர் மட்டத் திற்கும் கீழ் மட்டத்திற்குமிடையே வருமானம் மேலும் கீழும் மாறும். அந்த மேல் மட்ட நிலை, கீழ் மட்ட நிலை ஆகியவற்றைத் தாண்ட முடியாது.

பெருக்கி - வேகப்படுத்தி ஆய்வின் நிபந்தனைகள் (Qualifications to the Multiplier - Accelerator analysies)

பெருக்கி, வேகப்படுத்தி இவை இரண்டும் நிலையானவைகள் என்ற அடிப்படையில் அவற்றிற்கிடையேயான பின்னிய செயற் பாட்டை (Interaction) முன்னர் விளக்கியுள்ளோம்.

உற்பத்திக்கான மூலதன அளவு, வருமானத்திலிருந்து பெறப் படும் நுகர்ச்சி பற்றிய தீர்மானங்கள் ஆகியவை பொருளாதாரச் சார்புடையவை. எனினும் இத்தீர்மானங்கள் இடச் சூழ் நிலைகள் தொழில்திறன் போன்றவற்றாலும், உளக் காரணிகளாகிய நிச்சய மற்ற தன்மை (Uncertainity), எதிர்பார்த்தல் (Expectation), பழக்கம் இவற்றாலும் ஓரளவு மாற்றப்படுகிறது.

நிலையான முதல்—உற்பத்தி விகித (Fixed-capital-output ratio) அனுமானத்தின் அடிப்படையில் வேகப்படுத்தி ஆய்வு செய்

யப்பட்டுள்ளது. இந்த அனுமானம் இரண்டு அடிப்படைகளைக் கொண்டுள்ளது. முதலாவதாக, நுகர்ச்சிப் பொருள் தொழிற் சாலைகளில் உபரித்திறன் இல்லையென்றும், இரண்டாவதாக, நுகர்ச்சிப் பொருள்கள் தேவையில் ஏற்படும் மாற்றம் நிலையானது என்பதுமாகும். அதே நேரத்தில் முதலீட்டுப் பொருள் தொழிற் சாலைகளில் உபரித்திறன் உள்ளது என்றும் அனுமானம் கொள் கிறோம். அப்போதுதான் நுகர்ச்சிப் பொருள்களுக்கான தேவை பெருகி முதலீட்டுப் பொருள்கள் வேண்டப்படும்போது தூண்டப் பட்ட முதலீடு அதை நிறைவு செய்யும். முதலீட்டுப் பொருள் தொழிற்சாலையில் உபரித்திறன் இல்லாவிடில், நுகர்ச்சிப் பொருள் தேவை அதிகரிக்கும்போது தூண்டப்பட்ட முதலீடு அதிகரிக் காமல் (a) மூலதனப் பொருள்கள் காலந்தாழ்த்திக் கொடுக்கப் படும் அல்லது (b) மூலதனப் பொருள்களின் விலை உயர்த்தப்படும் அல்லது இரண்டும் ஏற்படும். இதே போல் நுகர்ச்சிப்பொருள் தேவையின் விகிதம் குறைந்தால் (1) மூலதனப் பொருட்களுக் கான நிறைவேற்றப்படாத அனுப்பாணை (Order) குறையும் (2) விலைகள் சரியும்.

இவற்றுக்கான மேல் விளக்கங்கள் அவசியமில்லை. நாம் இது வரை விவரித்த பின்னிய செயற்பாட்டிலிருந்து பெறும் பொதுப் படிப்பினை என்னவென்றால், முதலாளித்துவ பொருளாதார அமைப்பில் நிலையற்ற வருமான சுழற்சி (Cyclical instability of income) என்பது அதன் கூறிலேயே உள்ளடங்கியுள்ளதென்பதாகும்; அது ஒரு சாதாரண பொருத்தக்கேடு (Maladjustment) தான் என்று நினைத்து விடக்கூடாது. இந்த நிலையை அல்வின் ஹான்சன் கீழ்க்கண்டவாறு விளக்குகிறார்:

"வணிகச் சுழற்சி பொருளாதாரத்தின் உடற்கூறு நிலையை வெளிப்படுத்துகிறது; சில அமைப்பு மாற்றங்களை ஏற்படுத்துவதன் மூலம் இதை உடனடியாகக் குணமாக்கி விடலாம் என்ற கருத்தை இன்றைய நாளில் கேள்விப்படுகிறோம். ஊதிய—விலை (Wage—price) சம நிலையை ஏற்படுத்துதல், உழைப்பு நிறுவனத்திற் கிடையேயான உறவைச் செம்மைப் படுத்துதல், வரி அமைப்பைச் சீர் திருத்துதல் என்பன போன்றவற்றின் பொருளாதாரத்தின் வலிமையைத் தேவையான அளவு கூட்டிப் பெரும் மாற்றங்களுக் கான நிலையை எதிர்த்து நிற்கச் செய்யலாம் என்று கூறப்படுகிறது. ஆனால் இந்தக் கருத்து மிகவும் அபாயகரமான மாயையாகும் (Dangerous illusion). பொருளாதாரம் வலிமையுடன் செயல்பட பொருளாதாரத்தில் அமைப்புச் சமநிலை (Structural balance) உண்மையிலேயே அவசியம்தான். ஆனால் பொருளாதாரத்தில்

வருமான மாற்றங்களுக்கான நிலை உடற் கூறில் ஏற்பட்ட நோய் அல்ல. தனியார் துறையிலான அங்காடி பொருளாதாரத்திலேயே (Market economy) அடங்கியுள்ள ஒரு தன்மையாகும். இந்தப் பொருளாதாரத்தை நிலைப்படுத்த அமைப்பு மாற்றங்களுக்கு மேற்பட்ட ஒரு நடவடிக்கை தேவைப்படுகிறது; இதற்கு ஒரு திட்ட நோக்குடைய ஆக்க முறையிலான சுழற்சிக்கு எதிரான திட்டம் தேவைப்படுகிறது.''

இவ்விடம் நாம் ஒன்று உணர்தல் நல்லது; என்னவெனில், சம நிலையை அடைந்துவிட்டால், நுகர்ச்சி, வருமானம், மற்றும் முதலீடு அனைத்தும் ஒரு குறிப்பிட்ட காலத்தில் நிலையாக இருந்தால், தூண்டப்பட்ட முதலீடு பூஜ்யமாகும். மொத்த முதலீட்டில் ஈடு செய்யும் முதலீடும் சார்பற்ற முதலீடு மட்டுமே அடங்கும். இதில் நாம் அறிவதென்னவென்றால் சம நிலையைப் பொறுத்த மட்டில் நாம் வேகப்படுத்தியைப் புறக்கணித்து விடலாம். அதாவது, பெருக்கி-வேகப்படுத்தி பின்னிய செயற்பாட்டில், சுழற்சி ஒழுங்குபடுத்தப்படும் வழியை ஏற்படுத்துவது வேகப்படுத்தியின் செய்கையால் ஆகும்; ஒழுங்கு நிலை முற்றுப் பெற்றவுடன் பெருக்கியே ஆட்சி செய்கிறது.

அரசின் வரவு செலவு - திட்டத்தினால் ஏற்படும் விளைவுகள் :
(Govt. budgetary effects)


இதுவரை குடும்பங்கள், தொழில் நிறுவனங்கள் கொண்ட ஒரு சிறு பொருளாதாரத்தில் வருமானம் நிர்ணயிக்கப்படுவதைப் பற்றிப் பார்த்தோம். இனி அத்துடன் அரசுத் துறையையும் சேர்த்து மொத்தத் தேவையில் (Aggregate demand) அதன் விளைவுகளைப் பற்றிப் பார்ப்போம். அரசுத் துறையினர் பொருளாதாரத்தில் பல செயல்களைச் செய்தாலும், வரவு—செலவு திட்டத்தில் அதன் முக்கிய பங்கை இப்போது ஆய்வு செய்வோம்: (1) பொருள்கள், பணிகளின் மேல் பணம் செலவிடுதல், (2) வரிகள் வசூலித்தல், மற்றும் (3) மாற்றுச் செலுத்தல்கள் மறு ஒதுக்கீடு செய்தல் (Reallocating as transfer expenditures) ஆகிய செயற்பாடுகளை அரசு மேற்கொண்டால் பொருளாதாரத்தில், குறிப்பாக வருமானத்தில் மாற்றங்கள் ஏற்படும். மேற்குறிப்பிட்ட மூன்று கூறுகளும் தனித்தனியாக வருமான மட்டத்தைத் தூண்ட முடியும். தன் வசமுள்ள கையிருப்பைக் குறைத்துக் கொண்டோ, புதிதாகச் செலாவணித்தாள் அச்சிட்டு வெளியிட்டோ, பிணையங்களை வெளிச்சந்தையில் விற்றோ அரசு செலவு செய்ய முடியும். இப்படிக் கூடுதலாகச் செலவிடப்

பட்டுப் பணப் புழக்கம் மிகுதியாவது வருமான மட்டத்தை அதிகரிக்கும். ஏனென்றால் அதிகரிக்கப்பட்ட பணப்புழக்கம வரியாகப் பொது மக்களிடமிருந்து திரும்ப வசூலிக்க வேண்டிய கட்டாயமில்லை. எனவே தான், வரவு செலவு திட்டத்தில் பற்றாக் குறையோ, உபரியோ காணப்படும். இதே போல் தான் வரி விதிப்பு அதிகரிக்கப்பட்டாலும் அப்பணம் திரும்பப் பொது மக்களுக்காகச் செலவிடப்படவேண்டிய அவசியமில்லை. கடன் களைத் தீர்ப்பதற்காகவோ, ரொக்க இருப்பை அதிகரிப்பதற் காகவோ, அப் பணத்தைப் பயன்படுத்தலாம். எந்த வகையில் செய்தாலும் வரவு—செலவு திட்டத்தில் உபரியோ பற்றாக் குறையோ ஏற்பட நேரிடும். இதனால் வருமானத்தில் மாற் றங்கள் ஏற்படும்.

வரவு-செலவு திட்டத்தில் ஏனைய வரவு—செலவு இனங்களில் மாற்றம் ஏதுமில்லை யெனவும், கீழ்க்காணும் ஒரு சில இனங் களில் மட்டும் மாற்றம் ஏற்படுகின்றது என்றும் அனுமானம் செய்து, அதனால் ஏற்படும் விளைவுகளைப்பற்றி வரை படம் மூலம் விளக்குவோம் :

அரசுச் செலவுகளினால் ஏற்படும் விளைவு (The effect of Govt. Expenditure) :

அரசுச் செலவுகளினால் மொத்தத் தேவையில் ஏற்படும் மாற்றங்களைப் படம் 4-ல் விவரிக்கப்பட்டுள்ளது. கொடுக்கப்பட்ட 'C' மற்றும் நிலையான 'I' கோடுகளில், மொத்தச் செலவான C+I கோடு, BYo-க்குச் சமமாக OYo வருமான மட்டத்தைச் சம நிலையில் இருப்பதாகக் காட்டுகிறது. உற்பத்திக்காக அரசு இப்போது A B அளவுக்குப் பணம் கூடுதலாகச் செலவிடுவதாகக் கொள்வோம். இக் கூடுதல் செலவு நேரிடையாக வருமானத்தை அதிகரிக்கிறது. அதன் விளைவாக, நுகர்வுச் செலவும் அதிகரிக் கிறது. அதாவது, மொத்த வருமானம் OY_1 மட்டத்தை அடையும் வரை 'C' கூடிக் கொண்டே போகும். OY_1 வருமான மட்டத்தில் C+I+G (EY_1) என்ற கோட்டில் மொத்த திட்ட மிட்ட செலவுகள் உண்மையான வருமான மட்டத்திற்குச் சமமாக உள்ளன. இந்த வருமான மட்டத்தில் I+G கூட்டுத் தொகை 'S'க்குச் சமமாக இருக்கிறது. அதாவது, வருமானத்திற்கும் 'C'க்கும் உள்ள வேறுபாடு (EG) ஆகும்.



படம் 4 : அரசுச் செலவுகள் அதிகரிப்பால் வருமானத்தில் விளைவு
(Effect of an Increase in Government Expenditures on Income)


அரசுச் செலவு அதிகரிப்பால் ஏற்பட்ட மொத்த வருமான மாற்றங்கள் I க்குச் சமமாக இருக்கும். இறுதி நிலை நுகர்வு நாட்டம் 2/3 என்றால், 'அரசுச் செலவு பெருக்கி' (Government-Expenditure multiplier) 3 ஆகும். G-ன் உயர்வு (AB) 20 கோடி என்றால், வருமான உயர்வு ரூ. 60 கோடியாகும். படம் 4-ல் EY_1 வருமானம் BYo வருமானத்தை விடக் கூடுதலாக உள்ளது. அவ்வதிகரிப்பு EF (G-ன் உயர்வு) மற்றும் GH-க்குச் (C-ன் உயர்வு) சமமாக இருக்கும். இந்த அனுமானப்படி பார்த்தால், மொத்த உற்பத்தி அதிகரிப்பு ரூ. 60 கோடியில், அரசின் உற்பத்தி ரூ. 20 கோடியாகவும் (EF), நுகர்வுப் பொருள்களின் உற்பத்தி ரூ. 40 கோடியாகவும் (GH) உள்ளன.

இவ்வாறுக அரசு, பொருட்களுக்குச் செலவிடும்போது தனியார் முதலீட்டுக்கு மேலும் ஓர் சேர்க்கையாக அமைகிறது; அவ்வாறெனில், அரசு செலவீடு என்பது சமுதாயத்தின் சேமிப்பை ஈடுசெய்வதென்பதாகும். இதன் காரணமாகத் தனியார் முதலீடு மட்டும் இருக்கும்போது ஏற்படும் வருமானத்தைவிட அதிகமான வருமானம் ஏற்படுத்துவதற்கான வாய்ப்பு ஏற்படுகிறது. இந்த விளைவுதான், மொத்த தேவையைத் தூண்டி பொருளாதாரத்தைச் சமநிலைப்படுத்தும் அரசின் செலவுக் கட்டுப்பாட்டை ஒரு முக்கியமான கருவியாக்குகிறது.

வரிகளால் ஏற்படும் விளைவு (THE EFFECT OF TAXES) :

அரசுத்துறையினர் திட்டமிட்டதற்கு மேல் பணத்தைச் செலவிடுவதாலோ, திரும்ப வருவாயாகக் கிடைக்காத அளவில் செலவு செய்தாலோ, வரவு-செலவுத் திட்டத்தில் பற்றுக்

குறையோ, உபரிக்குறைப்போ (Reduction in surplus) ஏற்படும் என்றும், அவ்வாறு செலவு செய்யப்பட்ட பணம் எந்த அளவுக்கு வருமானத்தைத் தூண்டுகிறது எனவும் முன்பத்திகளில் கண்டோம். இப்போது, அரசு புதிதாக வரி விதிப்பு செய்தால், குறிப்பாக வருமான வரி, விற்பனை வரி போன்ற 'மாறும்' வரிகள் (Variable taxes) (நிலையான வரிகளைப் (Fixed taxes) பற்றி ஆய்வு செய்ய வேண்டாம். ஏனென்றால் அவ் வகை வரிகள் எப்போதாவதுதான் திருத்தப்பட்டு விதிக்கப்படும்), அவ் வரிச்சுமை எந்த அளவுக்கு நுகர்ச்சியைக் குறைத்து வருமானத்தைக் குறைக்கிறதென்று பார்ப்போம். நுகர்ச்சி, செலவழிப்பு வருமானத்தைச் (Disposable income) சார்ந்திருக்கிறதென்றால், வரி உயர்வு கொடுக்கப்பட்ட எந்த ஒரு நாட்டு வருமான மட்டத்திலும் செலவழிப்பு வருமானத்தைக் குறைத்து விடும். இக் குறைப்பு, நாட்டு வருமானத்தின் ஒவ்வொரு கட்டத்திலும் (Each level of national income), நுகர்வுச் செலவைக் குறைக்கிறது. நுகர்ச்சிக்கும் நாட்டு வருமானத்திற்கும் உள்ள தொடர்பையும், வரி உயர்வினால் நுகர்வுக் கோடு எவ்வாறு கீழிறங்கிச் செலவழிப்புத் திறனை வரையறை செய்கிறதென்பதையும் படம் 5-ல் காணலாம்.



படம் 5: வரிகள் உயர்வினால் வருமானத்தில் ஏற்படும் விளைவு (Effect of an Increase in Taxes on Income)

சமுதாயத்தில் வரி போடப்படாத நிலையில் உள்ள நுகர்ச்சியின் அளவை C-என்ற கோடு காண்பிக்கிறது. தற்போது அரசு ஒரு குறிப்பிட்ட அளவு பணத்தை மக்களிடமிருந்து வரி

யாக எடுத்துக் கொள்வதால் சமுதாயத்தின் செலவழிப்பு வருமானம் குறைந்து அதன் காரணமாக நுகர்ச்சியின் அளவு குறைந்து விடுகிறது. இதை C^1 என்ற கோடு காண்பிக்கிறது. C-க்கும் C^1-க்கும் இடையேயான வேறுபாடு (AB) வரியின் அளவைக் குறிக்கும். வரியில்லாத போது சமுதாயத்தின் மொத்தச் செலவை (நுகர்ச்சிக்கும் முதலீட்டிற்கும்) C+I என்ற கோடு காட்டுகிறது. இந்தக் கோடு (C+I) 45° கோட்டை E-என்ற புள்ளியில் வெட்டி சமநிலை வருமானம் OY_0-வை ஏற்படுத்துகிறது. வரியின் காரணமாக நாட்டின் மொத்தச் செலவீடு குறைகிறது. இதை C^1+I என்ற கோடு காட்டுகிறது. மொத்தத் தேவை (Aggregate demand) குறைவதால் தற்போது வருமானம் OY_0-லிருந்து OY_1-க்கு குறைந்து விடுகிறது. அதாவது வருமான மாற்றம் ($\triangle Y$) DC-ஆகும். இந்த வருமானக் குறைவால் நுகர்ச்சியில் ஏற்பட்ட குறைவு BG-யாகும் ($\triangle G$) வருமானத்தில் ஏற்பட்ட குறைவு போடப்பட்ட வரியை விட அதிகமாகும். இதிலிருந்து நாம் அறிந்துகொள்வது என்னவெனில் போடப்படும் வரியின் அளவில் மாற்றம் ஏற்பட்டால் வருமானம் எதிர் திசையில் மாறும் என்பதாகும். அதாவது வரி அதிகரித்தால் வருமானம் குறையும்; வரி குறைந்தால் வருமானம் அதிகரிக்கும். இந்த வருமான அதிகரிப்பு அல்லது குறைவு போடப்பட்ட வரியைவிட அதிகமாக இருக்கும்.

அரசு மாற்றுகைகளின் விளைவு

(The effect of Government Transfers) :

அரசின் வரிகள் செலவுகள் நிலையாக இருக்கும்போது, அரசின் மாற்றுகைகள் (Govt. Transfers) நாட்டின் நுகர்ச்சி அளவை மாற்றி அமைக்கும். ஓய்வு ஊதியம், வேலையின்மை காலத்திய உதவித்தொகை, நேரிடை ஆதரவுத் தொகைகள் (Direct subsidies) போன்றவை அரசின் மாற்றுகைகளுக்கு சிறந்த உதாரணங்களாகும். இந்த மாற்றுகைகளால் சமுதாயத்திலிருந்து வசூலிக்கப்பட்ட வரித்தொகையிலிருந்து ஒரு பகுதி திரும்பவும் மக்களுக்கு கிடைப்பதால் செலவழிப்பு வருமானம் உயர்ந்து அதன் காரணமாக நுகர்ச்சியின் அளவு அதிகரிக்கும். உதாரணமாக அரசு மாற்றுகைகள் ரூ. 10 கோடி எனக் கொண்டு, MPC 2/3 என அனுமானங்கொண்டால் நுகர்ச்சி ரூ. 6⅔ கோடி அளவு உயரும்; பெருக்கியின் (3) விளைவாக வருமானம் ரூ. 20 கோடிக்கு உயரும்.

எனவே மாற்றுகைகள் பொதுவாக வரியின் குறைப்புக்கு ஒப்பாகும். மொத்தத் தேவையின் கண்ணோட்டத்தில் பார்த்தால், மாற்றுகைகளின் அதிகரிப்பு வரி குறைப்பிற்கும், மாற்றுகைகளின் குறைவு வரி உயர்வுக்கும் ஒப்பாகும். அதாவது மாற்றுகைகள் அதிகரித்தால் நாட்டின் நுகர்ச்சி அளவு கூடும்; மாற்றுகைகள் குறைந்தால் நாட்டின் நுகர்ச்சி அளவு குறையும்.

12. வீக்கமும் வாட்டமும்

(INFLATION AND DEFLATION)

வருமானம் நிர்ணயிக்கப்படும் ஆய்வில் விலை மட்டம் நிலையானது என அனுமானம் கொண்டதால் பண வருமானத்திற்கும் உண்மை வருமானத்திற்கும் உள்ள வேறுபாட்டைப் பொருட்படுத்தவில்லை. இவ்வத்தியாயத்தில் இனி அந்த அனுமானத்தைக் கைவிட்டு விட்டு விலைவாசிகள் மாறுகின்றன என்றும், அதன் விளைவாக உண்மை வருமானம் மாறுவதைப் பற்றியும் விரிவாகக் காண்போம். அமெரிக்க ஐக்கிய நாடுகளில் கடந்த இரண்டு நூற்றாண்டு காலமாக விலைமட்டத்தில் உயர்வும், தாழ்வும் மாறி மாறி ஏற்பட்டதை, பேராசிரியர் ∴பிஷர் 'டாலரின் நடன விளையாட்டு' (Dance of the dollar) எனக் குறிப்பிடுகின்றார். போர்க் காலங்களில் விலைவாசிகள் தங்கள் கைவரிசையைக் காட்டியிருக்கின்றன. குறிப்பாகப் போருக்குப்பின் விலைமட்டம் உயர்ந்த வண்ணம் இருந்திருக்கின்றது. இதை விலைவாசி குறியீட்டெண்களின்றும் நன்கு அறியலாம். உலகம் முழுவதும் இப்பிரச்சினை பரவலாக உள்ளது.

ஒரு குறிப்பிட்ட அளவுக்கு மேல் தொடர்ந்து விலை உயர்ந்து கொண்டே சென்றால் (Sustained rise in the price level), பொருளாதாரத்தில் 'வீக்கநிலை' நிலவுகிறது எனச் சுருக்கமாகக் கூறலாம். ஆனால் வீக்கத்தைப் பற்றிப் பல பொருளாதார நிபுணர்கள் பலவிதமாக இலக்கணம் வகுக்கிறார்கள். கெம்மரர் (E. W. Kemmerer) என்ற அறிஞர், மிகையான பணமும் வைப்புப் பணமும் தான் வீக்கம் எனப்படும்—அதாவது வாணிப அளவுத் தேவைக்கு மேல் மிகையான பணம் புழக்கத்திலிருப்பது எனக் கூறுகின்றார். கிரெஷதர், வீக்கத்தைப் 'பணத்தின் மதிப்பு குறைந்து கொண்டும் அதாவது விலைகள் உயர்ந்து கொண்டு மிருக்கும் ஒரு நிலவரம்' என்று விளக்குகிறார். வீக்கம், 'வாங்குந்திறனின் அளவில் ஏற்படும் நிலைக்கும் அதிகமான அதிகரிப்பே' என்று கிரகோரி (Gregory) குறிப்பிடுகின்றார்.

'மிகையான பண வெளியீடுதான்' வீக்கத்திற்குக் காரணம் என ஹாட்ரே சுட்டிக் காட்டுகிறார். 'வருமான ஈட்ட

நடவடிக்கைக்குக் கூடுதலான வீதத்தில் பண வருமானம் பெருகினால் வீக்கம் உண்டாகும்' (Inflation exists when money income is expanding more than in proportion to income earning activity) என்று ஏ. சி. பிகு (A. C. Pigeu) குறிப்பிடுகின்றார்.


பொதுவாக, வீக்கம் நிலவும் பொழுது விலைமட்டம் உயரும்; விலை மட்டம் உயர்ந்தால் வீக்கம் நிலவுகிறது எனக் கூறமுடியாது. விலைமட்டம் ஒரு குறிப்பிட்ட அளவுக்கு மேல் சென்றால்தான் பொருளாதாரம் வீக்க நிலையை அடைந்திருக்கிறது எனக் கூற முடியும். குறிப்பிட்ட அளவு என்றால் எவ்வளவு என்ற வினா எழும். அதைப்பற்றிப் பிறகு பார்ப்போம். விலைமட்ட உயர்வு, வீக்கத்தின் அறிகுறியே தவிரக், காரணமாக விளங்க முடியாது (Inflation is a process of rising price and not a state of high prices) இதுவரை பார்த்த பல்வேறு இலக்கணங்களிலிருந்து அறிவது என்ன வென்றால், "பண்டங்களின் அளிப்பும் தேவையும் சம நிலையில் இல்லாமல் தேவை கூடுதலாகி அதன் விளைவாகப் பொருள்களின் விலைகள் (முழு வேலை வாய்ப்பு நிலை அடைந்ததற்குப் பின்) உயர்ந்தால் பொருளாதாரத்தில் வீக்கம் ஏற்பட்டிருக்கிறது என்பது புலப்படும்."

பண அளவுக் கோட்பாட்டில் பண அளிப்பு அளவு அதிகரித்தால் விலைகள் கூடுமெனப் பார்த்தோம். ஆனால் பண அளிப்பு அதிகரிப்பதே வீக்கத்திற்குக் காரணம் என்ற பண அளவுக் கோட்பாட்டை ஏற்பதற்கில்லை. எடுத்துக் காட்டாக, 1920—30-ல் ஜெர்மன் பொருளாதார நிலையை எடுத்துக் கொள்வோம். அந்த இடைக்காலத்தில் அங்கே மிகையான வீக்கம் (Hyper inflation) ஏற்பட்டிருக்கிறது. அதற்குக் காரணம் விலை மட்டம் கூடியதுதான். விலைமட்டம் உயர்ந்ததால் பண அளவையும் அதிகப்படுத்த வேண்டியதாயிற்று. விலை மட்ட உயர்வுக்கு (குறியீட்டெண் (100)[7]) ஏற்ற வீதத்தில் கூட பண அளவை அதிகரிக்க முடியாத அளவுக்கு விலைவாசிகள் உயர்ந்தன. அதாவது இவ்விடத்தில் பண அளவு அதிகரிப்பால் விலைமட்டம் அதிகரிப்பதற்குப் பதில், விலை மட்டம் உயர்ந்ததால் பண அளவு அதிகரித்தது.

தேவை—இழுப்பு வீக்கம் (Demand—Pull inflation)

இனி, மிகையான தேவையால் இழுக்கப்படும் வீக்கம் எவ்வாறு ஏற்படுகிறது எனப் பார்ப்போம். வீக்கத்தை மிகையான தேவையைக் கொண்டு பரம்பரையாகப் பொருளாதார வல்லுநர்கள் கணிக்கிறார்கள். அதாவது, நுகர்வோர் செலவீட்டுத்

தொகையும் தொழில் நிறுவனங்கள் மற்றும் அரசு செலவிடும் தொகை நாட்டு மொத்த உற்பத்தியின் மதிப்புத் தொகைக்குக் கூடுதலானால் விலைமட்டம் தானாகவே உயர்கிறது. பண அளவுக் கோட்பாடு அணுகு முறைப்படி பார்த்தால், வாணிப அளவு மாறாமலிருக்கும்போது, பண அளிப்பும் சுழல் வேகமும் (MV) மாறினால் விலைமட்டமும் மாறுகிறது. சாதாரண பொருளின் விலை எப்படி தேவையையும், அளிப்பையும் பொறுத்து நிர்ணக்கப்படுகிறதோ அதே அடிப்படையில் தான் இவ் வாய்வும் கீழ்க்கண்ட படம் 1-ல் விளக்கப்படுகிறது.



படம் 1. உற்பத்தியும். விலை மட்டமும்

படம் 2. தேவையில் மாற்றங்கள்


படம் 1-ல் படுகிடை அச்சில் உற்பத்தியும், செங்குத்தச்சில் விலைமட்டமும் அளக்கப்படுகின்றன. தேவை D-யிலிருந்து D^1-க்கு அதிகரித்தால் விலைமட்டமும் P-லிருந்து P^1-க்கு உயருகிறது. அதாவது, அதிகமான பணம் மூலம் குறைந்த அளவுப் பொருள் களையே வாங்க முடிகிறது. (too much money chasing too few goods) T என்ற கோடு அளிப்பின் அளவைக் குறிக்கிறது.

கீன்ஸ் கோட்பாட்டின்படி, நாட்டில் முழுவேலை வாய்ப்புநிலை ஏற் படுமுன், தேவை அதிகரித்தால் விலைவாசி அதிகரிக்காதென்றும்

முதலீடு தூண்டப்படுமென்றும், அதன் விளைவாக உற்பத்தி பெருகும் என்றும் அறிந்தோம். உற்பத்தி பெருகினால் கூடுதல் தேவையைச் சந்திக்க முடியுமல்லவா! அதனால் விலை உயராது. அதே நிலையில்தான் இருக்கும். ஆனால் முழு வேலை வாய்ப்பு நிலையை எய்திய பின், தேவை மிகுதியானால் உற்பத்தி பெருகுவதற்கு வாய்ப்பில்லை. ஏனென்றால் உற்பத்திக் காரணிகள் அனைத்தும் முன்னமேயே பயன்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கின்றன. இனிமேல் பயன்படுத்துவதற்கு எந்தக் காரணியுமில்லை. இந்நிலையில் கூடுதல்தேவை முன்னமேயே உற்பத்தி செய்யப்பட்ட பொருள்களைத்தான் தாக்குகின்றன. அப்படித் தாக்கப்படும் பொழுது உற்பத்தியாளர்கள் விலையை உயர்த்துகிறார்கள். இச் செயற்பாட்டைப் படம் 2-ல் காணலாம்.

படம் 2-ல் வேலையில்லா நிலையையும், வீக்க நிலையையும் சித்திரித்துக் காட்டப்பட்டுள்ளது. மொத்தத் தேவை D என்றால், உற்பத்தி ou ஆகவும், விலை p ஆகவும் இருக்கிறது. வேலையில்லா நிலை இருக்கும்போது, கீன்ஸ் கூற்றுப்படி, தேவை உயர்ந்தால் வேலைவாய்ப்பும், உற்பத்தியும் பெருகும்; ஆகவே விலை உயராது; இப்படியாக, தேவை D^1க்கு உயர்ந்தால், உற்பத்தியும் முழு வேலை வாய்ப்பு அளவான (full employment) of-க்குப் பெருகுவதால் விலை மட்டம் P-யிலேயே இருக்கிறது. அளிப்புக் கோட்டின் வளைவுப் பகுதியை (bend) அடைந்த பிறகு (முழு வேலை வாய்ப்பு உற்பத்தி நிலை), மேன் மேலும் தேவை அதிகரித்தால் வேறு பல விளைவுகள் உண்டாகும். உதாரணமாகத் தேவையின் அளவு முழு வேலை வாய்ப்பு நிலைக்கு மேல் D^{11}-க்கு அதிகரித்தால் உற்பத்தி பெருகாது; எனவே செலவிடும் கூடுதலான தொகை இருக்கக் கூடிய உற்பத்திப் பொருளையே நாடுவதால் விலை மட்டம் P_1-க்கு உயருகிறது. ஒரு நாட்டின் உற்பத்தியின் அளிப்புக்கோடு படம் 2-ல் காட்டியபடி அமைந்தால் பொருளாதாரச் சிக்கல்களே இருக்காது. தேவையைக் கூட்டியோ, குறைத்தோ அளிப்புக் கோட்டில் F-ல் வெட்டும்படி வைத்துக் கொள்ளலாம். F-ல் தான் முழு வேலை வாய்ப்பு உற்பத்தியை ஒரு நிலையான (Stable) விலை மட்டத்தில் அடைய முடிகிறது. தேவை D^1க்குக் குறைவாக இருந்தால் வேலையில்லா நிலை இருக்கிறது; தேவை D^1க்குக் கூடுதலாக இருந்தால் வீக்க நிலை இருக்கிறது எனப் பொருள்படும். அரசிறைக் கைக்கோளான (Fiscal Policy) செலவினங்கள் மற்றும் வரிமாற்றங்களாலும் முதலீட்டுச் செலவைக் குறைக்கக் கூடிய வகையில் பணக் கொள்கை மாற்றங்களாலும் தேவைக்கோடு பாதிக்கப்படலாம்.

பொருளாதாரத்தில் சிறிதளவு சிக்கல் ஏற்படுவதாகக் கொள்வோம். அளிப்புப்பட்டியல் படம்—3 ல் காட்டியபடி அளிப்புக் கோடு அமைந்துள்ளது. இக்கோடு படம்—2 ல் உள்ள கோட்டை விட சற்று மாறி இருக்கிறது. F என்ற புள்ளி முழு வேலை வாய்ப்பு நிலைக்கு ஏற்றாற்போல் இருப்பதாகவும் அந்த அளவுக்கு உற்பத்தி தேவைப்படுவதாகவும் கொள்வோம்.



படம் 3. அளிப்பும் வீக்கமும்

உற்பத்தி அந்த அளவிற்குத் தூண்டப்பட்டால் உற்பத்திச் செலவு உயரத்தொடங்கும். உற்பத்தி நிறுவனங்கள் கூடுதலான நேரத்திற்கு எந்திரங்களையும், தொழிலாளர்களையும் உற்பத்தியைப் பெருக்குவதற்குப் பயன்படுத்தினாலும் நாளடைவில் மூலப் பொருள்கள் பற்றாக்குறை ஏற்பட்டு உற்பத்தி குலைக்கப்படும். இதனால் உற்பத்திச் செலவு கூடுதலாகும். பொருள்களின் விலைகளும் உயரும்; தேவை குறையும்; உற்பத்தியைப் பெருக்க வேண்டிய அவசியமில்லை. சம நிலை ஏற்பட ஆரம்பிக்கும்.

செலவு—உந்து வீக்கம் (Cost—push inflation)

முழு அளவு வேலை மட்டத்தை அடைந்த பின் தேவை மிகுதியாயின், உற்பத்தி பெருகுவதற்கு வாய்ப்பில்லாததால், வீக்கம் ஏற்படுகிறது என முன்பு பார்த்தோம். தேவை மிகையாகாமலேயே விலை ஏற்றமடைவதையும் அதன் விளைவாக உண்டாகும் வீக்கத்தைப் பற்றியும் இனிப் பார்ப்போம். நாட்டில் வேலையில்லா நிலையும், வீக்கமும் தொடர்ந்து நிலவும் போது செலவு — உந்து வீக்கத்தைப்பற்றி ஆய்வு செய்ய வேண்டியிருக்கிறது. தொழில் நிறுவனங்கள், தேவை மிகுதியாகாமலிருக்கும்போதே தாங்கள் உற்பத்தி செய்யும் பொருள்களுக்கு, உற்பத்திச் செலவு அதிகரிப்பதன் விளைவாக விலையை உயர்த்தி விற்பதைச் செலவு—உந்து வீக்கம் என்கிறோம். அதாவது, வீக்க விலைப்போக்குத் தோன்று

வதற்குக் காரணம் உற்பத்திக் காரணிகளுக்கு அளிக்கப்படும் ஊதியங்கள் அதிகரிப்பதே ஆகும். வீக்கம், செலவால் உந்தப் பட்டதாகும். தொழிலாளர்களின் முற்றுரிமைப் (Monopoly) போக்கால் கூலி, சம்பளம் உயர்த்தப்படுதலும் அல்லது சில சமயங்களில் முற்றுரிமை பெற்ற சில தொழில் நிறுவனங்கள் இலாபம் கூடுதலாக அடைய விரும்புதலும் உற்பத்திச் செலவைக் கூட்டும். இதனால் பொருள்களின் விலை அதிகரிக்கும்.

ஆனால் இம் முறை வீக்கச் சுழலேறியை (inflationary spiral) உண்டாக்கும். தொழிலாளர்கள் சங்கம் கூலி உயர்வு கோரி வெற்றி பெற்றால் நிறுவனங்கள் தாங்கள் ஈட்டும் இலாப வீதத்தை வழக்கம்போல் அடைய விரும்பிப் பொருள்களின் விலையை உயர்த்துகின்றன. பண்டங்கள் விலை உயர்வால் வாழ்க்கைச் செலவு கூடும். அச் செலவை ஈடுகட்டுவதற்காக மறுபடியும் தொழிலாளர்கள் ஊதிய உயர்வு கோரிப் போராடுவார்கள். இதன் விளைவாக மறுபடியும் விலைமட்டம் உயரும். இப்படி ஒன்றை ஒன்று தொடர்ந்து கொண்டு போவதால் வீக்கச் சுழலேறி பொருளாதாரத்தில் காணப்படும். ஆனால் செலவு—உந்து வீக்கத்தில் எது காரணம் (தொழிலாளர் கோரிக்கையா) எது விளைவு (நிறுவனங்களின் இலாப நோக்கமா) எனக் கூற முடியாது.

கீன்ஸ் கூற்றுப்படி விலை உயர்வு அதாவது, விலை வீக்கம் என்பது முழுவேலைக்குப்பின் ஏற்படும் நிகழ்ச்சியாகும். அதற்கு முன் ஏற்படும் விலை உயர்வு உண்மையான வீக்கம் இல்லை. ஏனெனில் முழு வேலைக்கு முன்பு பண அளவு கூடினால் உற்பத்தியின் அளவும் கூடுகிறது. எனவே, உண்மையான வீக்கம் என்பது பண அளவு கூடியும் உற்பத்தி நெகிழ்ச்சியற்று இருக்கும் நிலையில் ஏற்படுவதாகும். உற்பத்தி நெகிழ்ச்சியற்று இருக்கும் நிலை முழுவேலைக்குப் பிறகுதான் ஏற்படுகிறது. எனவே உண்மையான வீக்கம் முழுவேலைக்குப்பின் ஏற்படுவதொன்றாகும்.

முழுவேலை ஏற்படுமுன் விலைகள் உயர்வதற்குக் கீன்ஸ் மூன்று முக்கியக் காரணங்களைக் குறிப்பிடுகின்றார். (1) தொழிலாளர்களின் பேர வலிமையில் அதிகரிப்பு; (enhanced bargaining power of labour) (2) குறுங்காலத்தில் குறைந்துசெல் விளைவு (diminishing returns in the short-run); (3) உற்பத்தியில் தடை (Bottlereck in production).

1. தொழிலாளர்களின் பேரவலிமையில் அதிகரிப்பு

பொருளாதாரத்தில் மந்தநிலை இருக்கும்போது தொழிலாளர்களின் அளிப்பு அதிகம். ஆனால் தேவை மிகவும் குறைவு.

எனவே இயல்பாக ஊதியம் குறைவாக இருக்கும். இந்த நிலையில் தொழிலாளர்கள் ஊதிய அளவைவிட வேலைக்கே அதிக முக்கியத்துவம் கொடுப்பார்கள். மீட்சிநிலை ஏற்பட்டபின் தொழிலாளர்களுக்கான தேவை அதிகரித்துக் கொண்டே செல்வதால் ஊதியம் உயர ஆரம்பிக்கும். தற்போது தொழிலாளர்கள் வேலையைவிட ஊதியத்திற்கு அதிக முக்கியத்துவம் கொடுப்பார்கள். மேலும் தொழிலாளர்கள் சங்கங்கள் அமைத்துக்கொண்டு அதிக ஊதியம் கோரி வெற்றி பெறுவார்கள். எனவே உற்பத்திச் செலவு கூடி விலை உயரும். ஆனால் பொதுவாக ஊதிய உயர்வைவிட விலை உயர்வு அதிகமாக இருக்கும்.

2. குறைந்துசெல் விளைவு

குறுகிய காலத்தில் நாட்டின் மூலதனச் சொத்துகளின் அளவு நிலையானது. இந்த நிலையான மூலதனச் சொத்துகளுக்கு மேலும் மேலும் உழைப்பை இடும்போது உற்பத்தி குறைந்துசெல் வீதத்தில் உயர்ந்து செல்கிறது. மேலும் தொழிலாளர்கள் அனைவரும் ஒரே உற்பத்தித் திறனை உடையவர்களல்லர். திறன் குறைந்தவர்களும் அதே ஊதியம் கொடுக்கப்படுவதால் ஒரு அலகின் அடக்கவிலை (unit cost) உயருகிறது. மேலும் மூலதனச் சொத்துகளும் ஒரே திறன் உடையவை அல்ல. பராமரிப்புச் செலவு எல்லா எந்திரங்களுக்கும் ஒரே மாதிரியாக இருந்து திறன் மாறுபட்டிருந்தால் முதன்மைச் செலவு (prime cost) கூடுகிறது. இதன் காரணமாக ஆக்கச் செலவு கூடி விலை உயரும்.


3. உற்பத்தியில் தடை

பொருளாதாரத்தில் மந்தநிலை மறைந்து மீட்சிநிலை ஏற்படும் போது வேலையின் அளவு கூடி உற்பத்தி உயரத் தொடங்குகிறது. ஒரு குறிப்பிட்ட நிலை வந்தவுடன் உற்பத்தியில் ஒரு தற்காலிகத் தடை ஏற்படுகிறது. உற்பத்திக்குத் தேவையான தொழிலாளர் இனங்கள், கச்சாப்பொருள் போன்றவைகளில் பற்றுக்குறை ஏற்படும்போது உற்பத்தியில் ஒரு தடையேற்படுகிறது.

எடுத்துக்காட்டாக, நிலக்கரி பற்றுக்குறையால் எஃகு உற்பத்தியில் தடையேற்படுகிறது; தொழில் நுணுக்க வல்லுநர்கள் போதிய எண்ணிக்கையில் கிடைக்காததால் உற்பத்தியில் விரிவாக்கம் ஏற்படுவது தடைபடுகிறது; ரப்பர் போதிய அளவு கிடைக்காமல் டயர் உற்பத்தி குறைந்து அதன் காரணமாகக் கார் உற்பத்தி தடைபடுகிறது. இவ்வாறு குறுகியகாலத்தில் சில காரணிகளின் பற்றுக்குறையால் உற்பத்தியில் தடை ஏற்படுகிறது. இதன் காரணமாக ஏற்படும் விலை ஏற்றத்தை உற்பத்தித் தடை வீக்கம் (Bottlereck Inflation) என்று கூறுவதுண்டு.

இங்கு நாம் கவனத்தில் கொள்ளவேண்டியது ஒன்றுண்டு இந்த உற்பத்தித்தடை வீக்கம் ஒரு தற்காலிக நிலைதான். காலப் போக்கில் தடைகளுக்கான காரணங்கள் நீக்கப்பட்டவுடன் விலை உயர்வு தடைபடும். எடுத்துக்காட்டாக, நிலக்கரி உற்பத்தி அதிகரித்தவுடன் எ.கு உற்பத்தியில் ஏற்பட்ட தடை நீங்குகிறது. ரப்பர் மரங்கள் அதிகம் வளர்க்கப்பட்டு ரப்பர் உற்பத்தி அதிக மாக்கப்பட்டவுடன் டயர் உற்பத்தி கூடும்; கார் உற்பத்தியில் ஏற்பட்ட தடையும் நீங்கும். சில குறிப்பிட்ட தொழிலாளர் இனத்தில் பற்றாக்குறை ஏற்பட்டால் தொழில்கல்வி நிறுவனங்கள் அதிகம் ஏற்படுத்தி நிறைய நபர்களுக்குக் கல்வியும் பயிற்சியும் கொடுத்துப் பற்றாக்குறையை நீக்கலாம். ஆனால் இவைகள் அனைத்தும் குறுகியகால அளவில் செய்துவிட முடியாது. காலப் போக்கில்தான் இந்தப் பற்றாக்குறையை நீக்க முடியும். எனவே உற்பத்தியில் ஏற்பட்ட தடை ஒரு தற்காலிக நிகழ்ச்சியாகும். இந்தக் குறுகியகாலத்தில் ஆக்கச்செலவு கூடி விலைகள் உயரும்.

செலவு-உந்து வீக்கம் ஏற்படுவதை ஒரு படத்தின் மூலம் விளக்கலாம். (படம் 4): எப்படி இருந்தாலும், தொழிலாளர் சங்கம் கூலிஉயர்வு கோரி வெற்றி பெற்றுவிட்டது என அனுமானம் செய்வோம். நிகழும் ஒரு குறிப்பிட்ட அளவு தேவையில், விலையை உயர்த்தித்தான் ஆக வேண்டுமென்றால் வேலையில்லா நிலையை (படம் 4-ல் காட்டியுள்ளபடி) உண்டாக்க வேண்டும். அளிப்புக்கோடு S-லிருந்து S^1-க்கு உயர்தல், விலைமட்ட உயர்வையும் அதே சமயத்தில் உற்பத்தி வீழ்ச்சியையும் ஏற்படுத்துகிறது.



படம் 4. உற்பத்தி

முழுவேலை வாய்ப்பு மட்டத்திலிருந்து தொடங்கினால் D மற்றும் S கோடுகள் வெட்டுமிடத்தில் நிலையான விலை P^0 நிர்ணயிக்கப்படுகிறது. நமது அனுமானப்படி கூலி உயர்ந்ததால், அளிப்புக்கோடு (S), நகர்ந்து S^1-க்குச் சென்றுள்ளது. பொருளாதாரத்தில் தற்போது புதிய சமநிலை P^1 என்ற விலைமட்டத்தையும் குறைந்த உற்பத்தியான O_1 என்ற அளவையும் ஆளுகின்றன. பணத்துறை அதிகாரிகள் இந்நிலையில் பணத்தின் அளவை அதிகப்படுத்தித் தேவையை D^1-க்கு அதிகரிக்கலாம், இப்படிச் செய்தால் வேலையின்மை நிலை குறையும்; ஆனால் வீக்கத்தை இன்னும் அதிகப்படுத்தும். விலைமட்டம் P^2-க்குச் செல்லும். இதற்கு மாறாக, முன்னிருந்த விலைமட்ட உயர்வைக் குறைக்கக் கடன் கட்டுப்பாடுகளைக் கையாண்டு, தேவையை D^{11}-க்குக் கொண்டு வரலாம். இப்படிச் செய்வதனால் விலைமட்டம் P. O. வுக்கு வரும். ஆனால் மீண்டும் வேலையில்லா நிலை உண்டாகும். பணத்துறை அதிகாரிகளுக்கு இது ஒரு இக்கட்டான பிரச்சினைதான்.

வீக்க இடைவெளி (Inflationary gap) :


மொத்தச் செலவு என்ற தேவை அணுகு முறையில் வீக்கம் எவ்வாறு ஏற்படுகிறது எனப் பார்த்தோம். அதாவது, முழு வேலை மட்ட நிலையை அடைவதற்கு முன் தேவையின் காரணமாக உற்பத்தி பெருகுவதால் விலை மட்டம் உயரவில்லை என்றும், உற்பத்தியில் முழுமையான நெகிழ்ச்சியுள்ளதென்றும், முழு வேலை மட்ட நிலை அடைந்த பின் உற்பத்தி நெகிழ்ச்சியில்லாதிருப்பதால், செலவு மிகுதியால் விலை தூண்டப்பட்டு வீக்கம் ஏற்படுகிறது எனவும் கண்டோம். இந்நிலைதான் 'மெய் வீக்கம்' (True or pure inflation) எனப்படும்.

நிறைவுடை வேலை வாய்ப்பில் நடைமுறை விலை அடிப்படையில் கணக்கிட்ட நாட்டு வருமான மதிப்பைவிட அதிகமான திட்டமிட்ட செலவுகள் தான் வீக்க இடைவெளி எனப்படும் (Inflationary gap is the excess of planned expenditures over the full employment value of national income at current prices). இதனுடைய முக்கியத்துவம் என்னவென்றால், மிகையான தேவையினால் உந்தப்பட்ட வீக்கத்தைத் தணிக்க பணத்துறை மற்றும் அரசிறைக் கைக் கொள்ளினால் திட்டமிட்ட செலவைக் குறைப்பதாகும். இதனைப் படம் 5-ல் விவரிக்கலாம். மொத்த திட்டமிட்ட செலவினங்களை C+I+G (நுகர்வு, முதலீடு மற்றும் அரசுச் செலவுகள்) என்ற கோட்டில் காட்டப்படுவதாகவும், வீக்கமற்ற நிறைவுடை வேலை வாய்ப்பில் கூட்டுமொத்த வருமானம்

yo என்ற சமநிலையில் இருப்பதாகவும் கொள்வோம். yo என்ற வருமானம் 100 எனவும் இறுதி நிலை நுகர்வு நாட்டம் 2/3 எனவும் அனுமானிப்போம். இப்போது yo என்ற வருமான மட்டத்திற்கு மேலாக 10 சதவீதம் திட்டமிட்ட மொத்தச் செலவுகளைக் கூட்டினால், மொத்தச் செலவுக் கோடு a என்ற புள்ளி (point) வழியாகச் செல்லுகிறது. ab அளவுதான் வீக்க இடைவெளியாகும். இந்த ab என்ற அளவு மாற்றம் (shifts) g என்ற இடத்தில் (45° உள்ள கோட்டில் வெட்டுமிடத்தில்) இருக்கிறது.

வீக்க இடைவெளியும் மெய் வீக்கமும்

மொத்தச் செலவு கூடுதலாக்கப்பட்டதால், $(C+I+G)^1$ — என்றசெலவு கோடு உருவாக்கப்பட்டுப் புதிய வருமானச் சமநிலை y_1–ல் அமைகிறது. இம் மாற்றம் பெருக்கியைப்போல் G மடங்கு பெருகியுள்ளது, அல்லது $10 \times 3 = 30$ கூடுதலாக உள்ளது. ஆனால் இவ்வளவு எண்ணிக்கை தேவையற்ற எதிர்பார்ப்பாகும். ஏனென்றால் yo-க்குப் பிறகு அதிகரிக்கும் வருமானம் பணம் வருமானமே தவிர மெய்வருமானமில்லை. yo-ல் முழு வேலை மட்டம் எய்தியாகிவிட்டது. இக் கூடுதலான பண வருமானம் விலைகளைத்தான் தாக்கும்; பிறகு விலை உயரும்.




படம்–5. மொத்தச் செலவும் வீக்க இடைவெளியும்

நுகர் சார்பு என்பது மெய் நுகர்வு, மெய் வருமானத்தைச் சார்ந்திருப்பதைக் குறிப்பதால் yo–க்குப் பின் மெய் வருமானம் அதிகரிக்க முடியாது. எனவே C என்ற கோட்டை a yo-க்கு

அப்பால் நீட்ட முடியாது. இதே போல் C+I என்ற கோட்டுக்கும் C என்ற கோட்டுக்கும் உள்ள தொலைவு திட்டமிட்ட மெய்மை யான முதலீட்டைக் குறிக்கும். விலை உயர்விஞல் வருமானம் அதிகரிப்பதால், பண வடிவில் முதலீட்டுத் தொகை நிலையான தாக இருக்காது. நாம் மறுபடியும் செலவுக்கோடுகளை விலை உயர்வுக்கு ஏற்ருற்போல் திருத்தியமைக்க வேண்டும்.

(பண) வருமான உயர்வின் திட்டமிட்ட செலவுகள் எவ்வாறு விலை உயர்வுக்கு ஏற்றவாறு ஒப்பீடு செய்யப்படுகிறது என்பதை படம்–6 விவரிக்கிறது :



படம்—6. குவிவுக் கூடுதல்—தேவை வீக்கம்
(CUMULATIVE EXCESS-DEMAND INFLATION)

படம் 5–ல் உள்ளது போல் இங்கேயும் C+I+G என்ற செலவுக் கோடு நிறைவுடை வேலை வாய்ப்பு வருமான மட்டம் Yo-ஐக் கொண்டு வருவதாக எடுத்துக்கொள்வோம். திட்டச் செலவு $(C+I+G)^1$ என்ற கோட்டுக்கு உயர்ந்தால் வீக்க இடை வெளி ab ஆகும். ayo என்ற செலவு ab என்ற அளவுக்கு வருமானத்தை உயர்த்துகிறது; அது ac க்கும் சமமாகும். $(ab = ac)$; $\frac{ab}{byo}$ என்ற வீதத்தில் விலையும் உயர்கிறது. பண வருமானம் y_1–ல் குடும்பங்கள், தொழில் நிறுவனங்கள் மற்றும் அரசு ஆகியவைகளின் உண்மைத் தேவை மாருமலிருக்கும் போது, திட்ட மிட்ட செலவுகள் dc அளவுக்கு உயரும். விலை வாசி உயர்வுக்கு ஏற்ருற் போல் சரி செய்யப்பட்ட (adjusted) நிலையில் ab க்கு ஒத்தவாறு dc இருக்கும். dy_1 என்ற செலவு

பணவருமானத்தை dc என்ற அளவு அதிகரிக்கும்; விலைவாசி களையும் வீதப்படி உயர்த்தும்; திட்டமிட்ட செலவுகளையும் ef அளவு கூடுதலாக்கும். இப்படியாகத் திட்டமிட்ட செலவுக் கோடு அமைக்கப்படும். நிறைவுடை வேலை வாய்ப்பு வருமான மட்டத்திற்குப்பின் Oadf என்ற நிலையான வீதாசாரக்கோடு அமைவுறும். உற்பத்தி வெளியாக்கத்திற்கு மேல் கூடுதலாகச் சமூகம் வாங்க முற்பட்டால், சமநிலையற்ற கூடுதல் தேவை தொடர்ந்து கொண்டே போகுமென Oadf உணர்த்துகிறது. பொருளாதாரத்தில் சமநிலையை உண்டுபண்ண வேண்டுமானால் ஒன்று, உற்பத்தியைப் பெருக்கவேண்டும், அது முடியாத செயலாகும். மற்றொன்று, தேவையைக் குறைத்துக்கொள்ள வேண்டும், இது முடியக் கூடியதாகும். என்னதான் அரசிறைக் கைக்கோளைப் பயன்படுத்தினாலும் சமநிலையைக் கொண்டுவர முடியாது. சமூகமே திருந்தினால்தான் சமநிலையை அடைய முடியும்.

வீக்கத்தின் வகைகள் :

வீக்கத்தின் காரணங்களைப் பற்றிப் பரவலாகப் பார்த்த பிறகு, அவற்றின் வகைகளைப்பற்றிப் பார்க்க வேண்டியிருக்கிறது. முதலில், விலைகள் உயரும் வேகத்தை அடிப்படையாகக் கொண்டு அமைந்த வீக்கத்தைப் பற்றிப் பார்ப்போம். அதன் அடிப்படையில் நான்கு வகை வீக்கங்கள் வெவ்வேறு வேகத்தில் மாறுபடுகின்றன

(அ) தவழும் வீக்கம் (Creeping inflation) :

வீக்கம் மிகவும் மேலோட்டமாக இருந்தால் தவழும் வீக்கம் எனலாம். அதாவது, விலை உயர்வு மேலோட்டமாக (mild form) இருக்கிறது எனப் பொருள்படும். உற்பத்திக்கு மேல் தேவை தொடர்ந்து கூடுதலானாலும் அல்லது பணத்தின் அளிப்பு அளவு தொடர்ந்து அதிகரித்தாலும் இத்தகைய தவழும் வீக்கம் ஏற்படுகிறது. இரண்டாவது உலகப் போரைத் தொடர்ந்து, குறிப்பாக 1945-51 ஆண்டுகளில் சில நாடுகளில் தொடர்ந்து அளிப்பை விடத் தேவை கூடிக்கொண்டே சென்றதால் விலைமட்டம் உயர்ந்து கொண்டே சென்றது. இத்தகைய வீக்கம் ஒரு நாட்டுக்கு உகந்ததா என்ற வினு எழலாம்? தவழ்ந்து கொண்டே இருக்கும் வரை எந்தவித ஆபத்தும் இல்லை. நாளடைவில் எழுந்து நடந்து ஓடினால்தான் ஆபத்து உருவாகிறது. எனவே இத்தகைய வீக்கம் புண்பட்டுப் புரையோடும் முன்னரே தணிக்கப்படுவதுதான் நல்லது. ஒரு நாட்டில் விலை மட்டம் 10 ஆண்டுகளுக்கு 10 சத வீதத்திற்குக் குறைவாகவும், ஓர் ஆண்டிற்கு ஒரு சத வீதத்

திற்குக் குறைவாகவும் அதிகரிக்குமாயின், அந் நாட்டில் தவழும் பண வீக்கம் நிலவுவதாகக் கொள்ளலாம். இருந்தாலும் ஒரு நாட்டில் விலை மட்டம் ஆண்டு ஒன்றுக்கு மூன்று சதவீதத்திற்கும் குறைவாக அதிகரிக்குமாயின் அத்தகைய பண வீக்கத்தால் கேடு ஏதும் இருக்காது.

(ஆ) நடக்கும் வீக்கம் (Walking Inflation) :

இவ் வகை வீக்கத்தில் விலை உயர்வின் வேகம் தவழும் வீக்கத்திலுள்ளதைவிடச் சற்றுக் கூடுதலாகவே இருக்கும். உதாரணமாக 10 ஆண்டுகளில் விலை மட்டம் 30 முதல் 40 சத வீதத்திற்குள் உயர்ந்தாலும் அல்லது ஒரு ஆண்டின் 3 முதல் 4 சத வீதத்திற்குள் உயர்ந்தாலும் அதனை நடக்கும் வீக்கம் எனலாம்.

(இ) ஓடும் வீக்கம் (Running Inflation) :

ஓடும் வீக்கத்தில் விலைமட்டம் ஓட ஆரம்பிக்கிறது. பத்தாண்டு காலத்தில் இரு மடங்குக்கு மேல் விலைமட்டம் உயர்ந்தால் ஓடும் வீக்கம் தோன்றுகிறது எனலாம்.

(ஈ) தாவும் வீக்கம் (Galloping inflation) :

தாவும் வீக்கத்தில் விலை மட்டம் வரம்பின்றி, கால இடைவெளியின்றி உயரும். இதனுடைய விளைவு மிகையான வீக்கத்தை (Hyper inflation) உண்டு பண்ணும். அதை எளிதில் கட்டுப்படுத்துவது என்பது இயலாததொன்றாகும். பணத்தின் மதிப்பு ஏறக்குறைய பூஜ்யத்திற்கு வந்துவிடும். பிரான்சு நாட்டில் 18-ம் நூற்றாண்டில் இரு தடவைகளில் வீக்கம் மட்டற்ற அளவிற்கு உயர்ந்திருக்கிறது. 1720-ல் ஜான் சட்டப்படி (John's law) தொடர்பு கொண்ட வீக்கம் ஓராண்டு காலத்திற்குள் சரி செய்யப்பட்டது. இரண்டாவது தடவையாக, பிரெஞ்சுப் புரட்சி காலத்தில் (French Revolution) வீக்கம் அளவு கடந்து நிலவியது. காகிதப்பத்திரமாக (assignats) வெளியிடப்பட்ட பத்திரங்கள் (Bonds), 1790-ல் சட்ட நாணயமாக (legal tender) ஆக்கப் பட்டதின் விளைவாக வீக்கம் உண்டாகியது. ஏராளமான அளவுக்கு இவ்வகைச் செலாவணி நோட்டுகள் வெளியிடப்பட்டதால் 1792-ல் அதன் மதிப்பு பாதியாகியது; இரண்டு ஆண்டுகள் கழித்து அதன் மதிப்பு 1/3 ஆகியது; 1795-ல் மதிப்பு இன்னும் வேகமாகக் குறைந்து தன் முகமதிப்பு (face value) 1 சதவீதத்திற்கும் குறைவான அளவுக்கு வந்து விட்டது.

இப்பத்திரங்கள் திரும்பவும் மீட்கப்படும் போது உண்மை விலையினின்றும் $\frac{1}{3000}$ விலைக்குத்தான் மாற்றப்பட்டது. (exchanged).

இரண்டு உலகப் போர்களிலும் தோற்ற நாடுகளில் இந்த மிகையான வீக்கம் நிலவியது. ஜெர்மன், ஆஸ்த்ரியா, ருஷ்யா மற்றும் போலந்து நாடுகளில் 1920—23லும், ஹங்கேரி நாட்டில் 1944—46 லும் பொருளாதாரம் மிகையான வீக்க நிலையை அடைந்தது. 1923 ஆம் ஆண்டு இறுதியில் ஜெர்மனியில் ஒரு துண்டு சொட்டி 50,000 மில்லியன் மார்க்குக்கு (marks) விற்றதாம். பணத்தின் மிகையான வெளியீடும், புழக்க வேகமும் தான் வீக்கத்திற்குக் காரணம். மூன்று ஆண்டுகளில் 7000 மில்லியன் தடவைகள் பணம் புழக்கம் கூடுதலாகியுள்ளது. ஹங்கேரியிலும் 1944-ல் 12000 மில்லியன் பெங்கோ (pengo) புழக்கத்திலிருந்தவை, 1945-ல் 3,60,00000 மில்லியனுக்கு உயர்ந்து, 1946-ல் இத் தொகையை விட 1000 மில்லியன் மடங்கு பெருகியிருக்கிறது. இந்த அளவுக்குப் பணப்புழக்கம் மிகுதியானால் நாட்டின் பொருளாதார வீக்க நிலையைச் சொல்லவும் வேண்டுமா!

இரண்டாவதாக, வீக்கம்பரவும் காரண அடிப்படையில் வீக்கத்தை வகைப்படுத்தலாம். அவைகளாவன :

(அ) பற்றுக்குறை நிதியாக்கத்தால் ஏற்படும் வீக்கம் (deficit induced inflation) :

நாட்டின் வரவு செலவுத்திட்டத்தில், பற்றுக்குறை காண்பிப்பதால், கூடுதலாகப் பணம் தோற்றுவிக்கப்பட்டு மக்களின் வாங்குந்திறன் அதிகரிக்கப்படுகிறது. இதனால் தேவை உந்தப்பட்டு விலை உயருகிறது. தேவைக்கு ஏற்ப அளிப்பு இல்லையாதலால் வீக்கம் ஏற்படுகிறது.

(ஆ) உற்பத்திச் செலவு உயர்வினால் ஏற்படும் வீக்கம் (cost induced inflation) :

விலை உயர்வு ஏற்படுவதால் வாழ்க்கைச் செலவு அதிகரிக்கிறது. வாழ்க்கைச் செலவு அதிகரிப்பதால் தொழிலாளர்கள் கூலி உயர்வு கோருகிறார்கள். கூலி உயர்வை ஈடுகட்ட தொழில் நிறுவனங்கள் பொருள்களின் விலையைக் கூட்டுகின்றன. இப்படி ஒன்றை ஒன்று பின் தொடர்வதால் வீக்க நிலை ஏற்படுகிறது.

(இ) இலாப—உந்து வீக்கம் (Profit induced inflation) :

உற்பத்தியாளர்கள் அதிக இலாபம் அடையும் நோக்குடன் பொருள்களின் விலையை உயர்த்துவதால் இவ்வகை வீக்கம் ஏற்படுகிறது.

(ஈ) பண வீக்கம் (Money—inflation) .

பணத்தின் அளிப்பு அளவு கூடுதலானுல் விலைமட்டம் உயரும். இவ்வகை வீக்கத்திற்குப் 'பண வீக்கம்' எனப் பெயர். இந்த வீக்கத்தைப்பற்றி மிகையான வீக்கத்திலேயே கூறப் பட்டுள்ளது.

மூன்ருவதாக, கால அடிப்படையில் வீக்கம் வகைப்படுத்தப் படுகிறது. அதன் படி வீக்கத்தைப் போர்க்கால, போர் பிற்கால, அமைதிக்கால வீக்கங்கள் எனக் கூறலாம். போர்க் காலத்தில், நாடு வெற்றியடைவதையே குறிக்கோளாகக் கொண்டிருப்பதால் அரசு மிகுதியான அளவு செலவிடும். நாணயத்தை கூடுதலாக அச்சிட்டு வெளியிட ஆரம்பிக்கும். இதன் விளைவு பொருளின் விலைமட்டம் உயர ஆரம்பிக்கும். போர் ஓய்வுக்குப் பின் ஒரு சில வரிகள் மற்றும் ஏனையகட்டுப்பாடுகள் நீக்கப்படுவதால் மக்களின் செலவினங்கள் குறைந்து பண வருமானம் கூடும். இதனுல் வாக்குந்திறன் அதிகரிக்கும். போர் இல்லாத, சாதாரண, அமைதி காலங்களில் அரசுகளின் முதலீடு மற்றும் திட்டமிட்ட செலவுகள் கூடுதலானுல் பணப்புழக்கம் மிகுதியாகும். இதனுல் வீக்கம் பரவும். இவவகை வீக்கத்திற்கு இந்தியாவை மேற் கோளாகக் காட்டலாம்.

நான்காவதாக, பரவலான அல்லது ஒழுங்கற்ற வீக்கம் (comprehensive of sporadic inflation). எனக் கூறப்படுகிறது! நாடு முழுவதும் பொதுவாக விலைமட்டம் உயர்ந்திருந்தால் பரவ லான வீக்கம் இருக்கிறது எனலாம். ஒரு நாட்டில் உற்பத்தி செய்யப்பட்டு வெளியிடப்பட்ட பொருள்கள் ஏதேனும் சிலவற்றின் விலை மட்டம் அதிகரிக்கும் போது மற்ற பொருள்களின் விலைமட்டம் மாறுமலிருக்குமாயின், ஒழுங்கற்ற பண வீக்கம் நிலவுகிறது எனக் கூறலாம். சில பொருள்களின் விலைமட்டம் அதிகரிப்பதற்கு முக்கிய காரணம் உற்பத்திக் குறைவுதான். எடுத்துக் காட்டாக ஏதாவது ஒரு பருவக்காலத்தில் உணவுப் பொருள் விளைச்சல் இல்லை என்ருல் அந்தக் காலத்தில் மட்டும் விலை உயருகிறது. போர்க்காலத்தில் துணி, எண்ணெய், வீட்டுவசதி ஆகியவை குறைவாகவே மக்களுக்குக் கிடைக்கும். போர் ஓய்வுக்குப் பின் இவைகள் வேண்டிய அளவு கிடைக்கலாம்.

ஐந்தாவதாக, வீக்கம் வெளிப்படையாகவும் இருக்கலாம் அல்லது ஒடுக்கப்பட்டதாகவும் இருக்கலாம். (Inflation may either be open or repressed): எவ்வித்தத்தடையு மின்றி விலை மட்டம் தன்போக்கில் உயர்ந்து சென்றால் வெளிப் படையான வீக்கம் நிலவுகிறது எனலாம். 1920-ல் ஜெர்மனி, ஆஸ்த்ரியா, ருஷ்யா போன்ற நாடுகளில் உலவிய வீக்கத்தை இதற்கு மேற்கோள் காட்டலாம். பொருள்கள், பணிகள் ஆகியவை வாங்குந்திறன் உடையோர்களிடம் பகிர்ந்தளிக்கப் படுவதற்கு விலைமட்டமே நிர்ணயிக்கிறது. வீக்கவிலைப் போக் கைக் கட்டுப்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ளுமாயின் ஒடுக்கப்பட்ட வீக்கம் நிலவும். ஆனால் விலை உயர்வுக் கட்டுப்பாடு கைக்கொள்ளை நீக்கியவுடன் விலை உயர ஆரம்பித்துவிடும்: அதுவும் வெளிப்படை வீக்கமாக மாற ஆரம்பிக்கும்.

வீக்கம் ஒடுக்கப்படுதல் என்றால் (1) தேவையைப் பின் தேதிக்குத் தள்ளிப்போடுதல் (2) ஒரு குறிப்பிட்டவகைப் பொருள் களுக்கான தேவையை அதே வகையில் மற்ற பொருள் களுக்கோ, வேறுவகைப் பொருள்களுக்கோ மாற்றி விடுதல் எனப்பொருள்படும். ஒடுக்கப்பட்ட வீக்கத்தில் சில மேலாண் மைச் சிக்கல்கள் தோன்றும். விலைமட்ட உயர்வை நசுக்கி வைப் பதற்காகக் கட்டுப்பாட்டு அதிகாரிகளும், வரை யறுத்துப் பங்கீடு செய்யும் அதிகாரிகளும் (Rationing officers) நியமிக்கப்படுவர். இவர்கள் நேர்மையாகவும், திறமையுடனும் செயல்பட வேண்டும். ஆனால் இந்த இரண்டு தன்மைகளையும் அவர்களிடம் எதிர் பார்ப்பது கடினமாதலால் கள்ளச்சந்தை ஏற்படுவதற்கு வாய்ப்பு உண்டு. இதனால் நாட்டின் பொருளாதாரத்தில் தீமை மிகவும் கூடுதலாகும். ஆகவே ஒடுக்கப்பட்ட வீக்கத்தைவிட வெளிப் படையான வீக்கமே மேல் எனக் கூறலாம்.

துறைசார் வீக்கம் (Sectoral inflation) :

தேவை இழுப்பினாலோ, செலவு உந்தப்படுவதினாலோ வீக்கம் ஏற்படுகிறது எனக் கூறுவது அவ்வளவு நிறைவளிக்க வில்லை எனவும், பல துறைகளுக்கிடையே சமநிலை இல்லாமலிருப் பதால்தான் (Sectoral imbalance) வீக்கம் உண்டாகிறது எனப் பேராசிரியர் சார்லஸ் எல். ஷீல்ஸ் (Professor charles L schultze) என்பவர் கூறுகிறார். (1) பொருளாதாரத்தில் ஒரு சில துறை களில் மட்டும் தேவை அதிகரித்தால், விலைகளும், உற்பத்திச் செலவும் அவைகளைச் சார்ந்த தொழில் நிறுவனங்களில் அதிகரிக் கின்றன. மற்ற தொழில் நிறுவனங்களில் தேவை குறைந்தால் விலைகளும் உற்பத்திச் செலவும் குறைவதில்லை. இப்படியாக, சில துறைகளில் விலை உயர்ந்தும் ஏனைய துறைகளில் விலைமாறு

மலும் இருப்பதால் சராசரியாகப் பார்த்தால் விலை உயருகிறது. வளரும் தொழில் நிறுவனங்களில் கூலி உயர்த்தப்பட்டால், இவ் வுயர்வு ஏனைய தொழில்நிறுவனங்களிலும் கூலியை உயர்த்துகிறது. இக் கோட்பாடு தேவை—இழுப்பு, செலவு—உந்து ஆகிய காரணிகளை இணைத்து அதன் அடிப்படையில் விவரிக்கப்படுகிறது. அதிகமான தேவை இல்லாதிருக்கும் போதே வீக்கம் உண்டாக ஆரம்பிக்கும். வேண்டியதெல்லாம் என்னவென்றால் ஒரு சில துறைகளில் மட்டும் தேவை பெருக வேண்டும் என்பதாகும். உற்பத்திச் செலவு என்ற காரணி மூலம் ஏனைய பொருளாதாரம் முழுவதும் (நாடு முழுவதும்) வீக்கம் ஏற்படுகிறது. 1955–57ல் அமெரிக்காவில் கார்கள் மற்றும் வீடுகள் தேவையினின்றும் மாற்றம் ஏற்பட்டு மூலதனப் பொருள்களான எந்திரங்கள், எஃகு போன்ற பொருள்களுக்குத் தேவை மிகுதியானதால் வீக்கம் நிலவியது. இதன் விளைவு என்னவென்றால், மூலதனப் பொருள் களின் தொழிற்சாலை விலைமட்டம் உயர்ந்தது. ஆனால் அதே போழ்து தானியக்கித் (automobiles) தொழிற்சாலை, வீடுகட்ட உதவும் மூலம் பொருள்களின் தொழிற்சாலை ஆகியவைகளின் விலைமட்டம் குறையவில்லை.

வீக்கத்தின் விளைவுகள் (The effects of inflation) :

வீக்கத்தின் முக்கிய பொருளாதார விளைவுகள், (1) ஒப்பந்தத் தொடர்புகள், (2) உற்பத்தி முறை மாற்றம் மற்றும் (3) மாற் றியல் சொத்துகள் ஆகியவைகளுடன் தொடர்பு கொண் டுள்ளன. அவை யாவும் ஒன்றோடொன்று தொடர்பு கொண் டுள்ளன.

ஒப்பந்தத் தொடர்புகள் (Contractual Relationships) :

வீக்கத்தின் காரணமாகப் பணத்தால் விவரிக்கப்பட்டுள்ள ஒப்பந்த உறவுகளில் சில விளைவுகள் ஏற்படுகின்றன. இவ் விளைவுகள் மிகச் சாதாரணமான எல்லோரும் அறிந்ததொன்று தான். வீக்ககாலத்தில் கடனாளிகள் பயனடைவர்; கடனீந்தோர் சிறிது இழப்பர். கடன் நடவடிக்கையின் ஒப்பந்த காலம் அதிக மாக இருந்தாலும், இழப்போ இலாபமோ அதிகமாக இருக்கும். நெடுங்காலத்தில் மீட்கப்படும் பிணையங்களை வாங்கியோரும்,

---

Recent inflation in the United States, Study Paper No. 1, Employment, Growth and Price levels, Joint Economic Committee, 86th Congress, 1st Sesson (Washington 1958)—Professor Charles L Schultze P. 208.

ஆயுள் காப்பீட்டு திட்டாவணங்களை எடுத்தோரும் (Owners of life insurance policies) வீக்கத்தால் மிகவும் பாதிக்கப்படுவர்; நிலையான வாடகையை நம்பியிருக்கும் நிலக்கிழார் (land lords), சம்பளம் பெறுவோர் ஆகியோர் சிறிதளவுக்குப் பாதிக்கப்படுவர். கடனாளிகளும், இலாபம் பெற முனைவோரும் உண்மையிலேயே வீக்க காலத்தில் பலனடைகின்றனர். ஒரு கால இடைவெளிக்குள் கூலியோ, சம்பளமோ பெறுபவர்கள், தற்காலத்தில் தொழிற் சங்கங்கள் மூலம் போராடி அவ்வப்போது ஊதிய உயர்வு பெறப்படுவதால் வீக்க காலத்தில் அவ்வகுப்பைச் சேர்ந்தவர்கள் பாதிக்கப்படுவதில்லை.

ஒப்பந்தத் தொடர்பின் விளைவாக வீக்க காலத்தில் கடனாளி வகுப்பைச் சேர்ந்தோர்க்குக் கூடுதலாகவும், கடனீந்தோர் வகுப்பைச் சேர்ந்தோர்க்குக் குறைவாகவும் நடப்பு வருமானம் பங்கீடு செய்யப்படுகிறது. இத்துடன் மட்டுமல்லாமல் மூலதனச் சொத்தின் மதிப்பும் வீக்கத்தால் மறு பங்கீடு (Redistribution) செய்யப்படுகிறது. அது எப்படி மறு பங்கீடு செய்யப்படுகிறது என்பதை ஒரு எடுத்துக்காட்டுடன் விளக்குவோம். ஒரு விவசாயப் பண்ணையின் மதிப்பு ரூ. 10,000 எனவும், ரூ. 5000-க்கு அது அடைமானம் வைக்கப்பட்டிருக்கிறது எனவும் கொள்வோம். வீக்கம் ஏற்படுவதற்குமுன் பண்ணை உரிமைகள் கீழ்க்கண்டவாறு இருக்கும் :—

அடைமானம் வைக்கப்பட்டவரின்

(Mortgagee) உரிமை :	ரூ. 5000
சொந்தக்காரரின் உரிமை :	ரூ. 5000
பண்ணையின் மொத்த மதிப்பு	ரூ. 10,000

வீக்கத்தினால் தற்போது பண்ணையின் மதிப்பு இருமடங்காகிறது என வைத்துக் கொள்வோம். அடைமான ஒப்பந்தம் பணத்தின் வாயிலாகச் செய்யப்பட்டதால் அடைமானத்தொகை முன்பிருந்ததைப்போல் மாறாமலிருக்கிறது. ஆனால் அவ்வுரிமைகள் கீழ்கண்டவாறு அமைகின்றன :

அடைமானம் வைக்கப்பட்டவரின் உரிமை	ரூ. 5000
சொந்தக்காரரின் உரிமை	ரூ. 15000
பண்ணையின் மொத்த மதிப்பு	ரூ. 20,000

வீக்கத்தின் விளைவு என்னவென்றால் அடைமானம் வைக்கப்பட்டவரின் உரிமைப்பங்கு, உண்மை உரிமைப் பங்கினின்றும் பாதியாகி விட்டது; ஆனால் தொகையில் மாற்றமில்லை. அதேபோழ்து பண்ணையின் சொந்தக்காரர் வீக்கத்தால் இலாபமடைந்துள்ளார். அடைமானம் பெற்றவர் இழந்துள்ளார். அதாவது, வீக்கநிலை அடைமானம் பெற்றவருக்குச் சொத்தின் பங்கு 1 : 1 என்ற விதத்தையும், சொந்தக்காரருக்கு 1 : 3 என்ற விதத்தையும் தேடித் தந்துள்ளது.

உற்பத்தி முறையில் மாற்றம் (Change in Pattern of Production) :

வாணிப நடவடிக்கையில் வீக்கத்தினுடைய தலையான விளைவு என்னவென்றால் உற்பத்தி முறை மாற்றப்படுவதுதான். வீக்க காலத்தில் உற்பத்தியாளர்களும், தொழில் முயல்வோர்களும் விலை உயர்வினால் இலாபம் மிகையாக அடைவதால் அந்த இலாப வேட்கை உற்பத்தியைக் கூட்டும் என ஒரு காலத்தில் எண்ணப் பட்டது. ஆனால் அவ்வகை உற்பத்தியின் உயர்வு, நிறைவுடை வேலைவாய்ப்பு நிலை அடைவதற்கு முன்தான் கிடைக்கும்; நிறை வுடை வேலைவாய்ப்பு நிலை அடைந்தபின் கூடுதலான முதலீடு உற்பத்தியைக் கூட்டாது என்றும் பண வருமானத்தைத்தான் கூட்டும் என்றும் கீன்ஸ் கோட்பாடு நிரூபிக்கிறது. வீக்கத்தினால் விலை உயர்வு ஏற்பட்டுப் பண வருமானம் கூடுவதனால் உண்மை வருமானம் சம அளவில் பல துறைகளுக்கிடையே பங்கீடு செய்யப்படுவதில்லை என முன்பத்தியில் பார்த்தோம். மக்களின் தேவை மாறுவதால், ஒரு குறிப்பிட்ட துறையின் உற்பத்தித் தொழிற்சாலைக்குத்தான் தேவை அதிகரிக்கிறது. ஏனைய துறை களுக்குத் தேவை அவ்வளவாக இருக்காது. ஏன்? சில சமயங் களில் இருக்கவே இருக்காது! எனவே, ஒரு துறையில் பல தொழிற்சாலைகள் பலவகைப் பொருள்களையோ ஒரு சில தொழிற்சாலைகள் பல பொருள்களையோ உற்பத்தி செய்தால் வீக்கத்தின் விளைவாகத் தேவை ஒரு குறிப்பிட்ட பொருளின் மேல் அதிகமானால் வேண்டப்படாத பொருள்களை உற்பத்தி செய்யும் துறைகளோ, தொழிற்சாலைகளோ, ஒரே தொழிற்சாலையிலுள்ள ஒரு சில பிரிவுகளோ மூடப்பட வேண்டியிருக்கும். இதன் விளை வாக, வருமானம் எந்தத் தொழிற்சாலைகளின் பொருள்களுக்குத் தேவை அதிகமாக இருக்கிறதோ அங்கே போய் குவிகிறது. ஏனைய தொழில் நிறுவனங்களுக்கு வருமானம் குறையும் அல்லது ஒன்றுமே இருக்காது. ஏனைய பொருள்களுக்குத் தேவை குறை வாகிறபடியால், அவைகளின் உற்பத்தி நிறுத்தப்பட்டுத் தேவை கூடுதலாக உள்ள பொருள்களின் மேல் கவனம் செலுத்தப்

படுகிறது. இவை அனைத்தும் வீக்கத்தின் விளைவால் உந்தப் படுகின்றன. இத்துடன் மட்டுமல்லாமல் அதிகமாகப் பொருள்களை உற்பத்தி செய்து அளிக்கக் கூடிய தொழில் நிறுவனங்களில் இலாபம் அதிகம் கிடைப்பதால், தொழிலாளர்கள் ஊதிய உயர்வு கோரி வெற்றியடைவர். இவ்வாறுக, இத்தகைய தொழிற் சாலைகள் தங்கள் தொழிலாளர்களுக்கு ஊதியம் அதிகமாகக் கொடுப்பதால் ஏனைய தொழிற்சாலைகளின் ஊழியர்களும் இங்கே இழுக்கப்படுவர். அப்படி இழுக்கப்பட்டால், இழுக்கப்பட்ட தொழில் நிறுவனங்களின் திறமை பாதிக்கப்படும்; பொருளின் தரம் குறையும். நாளடைவில் தொழிற்சாலைகள் மூடப்படக் கூடும்.

ஆகவே, வீக்க காலத்தில் வருமானம் சமமாகப் பங்கீடு செய்யப்படுவதில்லை. ஒரு சில உற்பத்தித் தொழிற்சாலைகள் ஒரு சில குறிப்பிட்ட பொருள்களை மட்டும் மேன்மேலும், தேவையை நிறைவு செய்வதற்காக, உற்பத்தி செய்துகொண்டே போகின்றன; ஒரு சில தொழிற்சாலைகள் உற்பத்தி செய்யும் பொருள்களை நிறுத்திவிட்டு மாற்றுப் பொருள்களை, தேவையின் அடிப்படையில், உற்பத்தி செய்யத் தொடங்குகின்றன. இவைகள் அனைத்தும் தவறான முதலீட்டால் (Misinvestments) தோன்றியவை என முடிவாகக் கூறலாம். ஏனென்றால் வீக்க காலம் என்பது, நிரந்தரமானதன்று; விலை உயர்வினால்தான் அவ்வகை உற்பத்தி களும், மாற்று உற்பத்திகளும் இலாப வேட்கை அடிப்படையில் தோன்றின. அரசுக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளால் வீக்கம் ஒடுக்கப்படுகிறது என அனுமானம் செய்து கொள்வோம். அதன் விளைவு, தேவை குறையும் அல்லது தேவை மாற்றுப் பொருள் களுக்குத்தாவும் இந்நிலையில் முன்பே உற்பத்தி செய்துகொண் டிருக்கும் தொழிற்சாலைகளின் நிலைமை என்ன? அவைகள் உற்பத்தி செய்யும் (ஒரு வகை) பொருள்களின் அளிப்பு குறை யாது. ஆனால் தேவை இருக்காது. அதே போழ்து வேறு சில பொருள்களுக்குத் தேவை மிகுதியாகும். ஆனால் உற்பத்தி இருக்காது. உற்பத்தியை உடனடியாகப் பெருக்கவும் முடியாது. எனவே, வீக்கத்திற்குப் பிறகு வாட்டமும் (Deflation), மந்தமும் (Depression) பொருளாதாரத்தில் ஏற்படுவதற்கு வாய்ப்புண்டு.

ஏனைய விளைவுகள் :

வட்டி வீதத்தில் வீக்கம் முக்கிய பங்கு வகிக்கிறது. வட்டி வீதம் கூடிக்கொண்டே செல்லும். ஊகவாணிகம் (Speculation)

மற்றும் கள்ளச் சந்தை பெருகும். எதிர்காலத்தில் விலை உயரும் என எதிர்பார்த்துச் சரக்குகள் முடக்கப்படும். நடுத்தர மக்கள் ஜெர்மனியில் வீக்கம் நிலவும் காலத்தில் மிகவும் அவதிக்குள்ளா யினர். நாட்டில் சமூக விளைவுகளையும், அரசியல் விளைவுகளையும் தோற்றுவிக்கும். அரசே கவிழ்ந்து போவதற்கு வீக்கம் ஒரு வித்தாகும்.

வாட்டம் (Deflation)

பணத்தின் மதிப்பு உயர்ந்துகொண்டும் அதாவது விலைகள் குறைந்து கொண்டு மிருக்கும் ஒரு நிலவரத்தை வாட்டம் எனக் கூறலாம். வீக்கத்திற்கு நேர் எதிரானதுதான் வாட்டமாகும். உற்பத்திப்பொருள்களினின்றும் குறைவான தேவையினுல்தான் வாட்டம் ஏற்படுகிறது. தேவை குறைவதால் விலைமட்டம் குறைகிறது. அதனுல் பணத்தின் மதிப்பு உயர்கிறது. வாட்டத்தின் போது விலை மட்டம் வீழ்ச்சியடையும் என்று குறிப்பிடுவதால், விலை மட்டம் குறையும் பொழுதெல்லாம் வாட்டம் நிலவுவதாகக் கூற முடியாது. வீக்கத்தைத் தடுப்பதற்காக அரசு சில நடவடிக்கைகளை மேற் கொள்வதால் விலை மட்டம் குறையும். ஆனல் உற்பத்தியோ, வேலைமட்டமோ பாதிக்கப்படாது. இவ்வாறு திட்டமிட்டு விலை மட்டத்தைக் குறைப்பது வாட்டம் ஆகாது; அது வீக்கக் குறைப்பு (disinflation) எனப்படும். விலை மட்ட வீழ்ச்சியினுல் வேலையின்மையும், உற்பத்திக்குறைவும் ஏற்பட்டால் வாட்டம் நிலவுகிறது எனப் பொருள்படும். அதாவது, விலைமட்ட வீழ்ச்சியின் ஒவ்வொரு படிக்கும் வேலையின்மையும் உற்பத்திக் காரணிகளின் வருமான மட்டம் குறைந்தும் வந்தால் பொருளாதாரத்தில் வாட்டமிருக்கிறது எனலாம்.

வாணிபச் சுழல்களின் இறங்குமுகத்தை வாட்டம் என்று கூறலாம். வாணிபச் சுழலின் மந்தநிலையிலிருந்து மீட்சி ஏற்பட்டு உற்பத்தி பெருகத் தொடங்கி விலை மட்டம், உயரும் நிலையிலான ஏறு முகத்தை (வாணிபச் சுழலின்) மீட்சி நிலை 'வீக்கம்' (Reflation) [2] எனலாம்; நிறைவுடை வேலைவாய்ப்பு நிலையை எய்திய பின் விலை உயர்வு ஏற்பட்டால் வீக்கம் எனலாம்; வீக்கத்தைத் தணிக்க அரசு நடவடிக்கைகளை மேற் கொண்டு விலை மட்டத்தைக் குறைத்தால் 'வீக்கக் குறைப்பு' எனலாம்; முழு வேலை வாய்ப்பு மட்டத்திற்குக் கீழ் விலை மட்டம் குறைந்தால் 'வாட்டம்' ஏற்பட்டிருக்கிறது எனலாம்.

---

2. Reflation :—" The easing of credit restrictions to encourage an expansion of Production it is the milder sort of inflation that accompanies the upward swing of a trade cycle."

வாட்டத்தின் விளைவுகள் :

(1) உற்பத்தியின் மீதான விளைவுகள் : உற்பத்தி, வாணிப நடவடிக்கை மற்றும் வேலைமட்டம் ஆகியவைகள் வாட்டத்தால் பாதிக்கப்படுகின்றன. பொருள்களுக்கான தேவைகள் குறைவதால் விலை மட்டம் குறைகிறது. விலை மட்டம் உற்பத்திச் செலவுக்குக் கூட கட்டுபடியாகாத அளவுக்குக் குறையக்கூடும். தொழில் நிறுவனங்கள் நட்டத்தையே அடையவேண்டி வரும். இதன் விளைவாக நிறுவனங்கள் மூடப்படக் கூடும். நிறுவனங்கள் தங்கள் உற்பத்தியை நிறுத்திவிட்டாலோ, தொழிலையே மூடி விட்டாலோ வேலையின்மை பெருகும். இத்தகைய தீங்கு வீக்கத்தினால் ஏற்படும் தீமையை விட மிகவும் ஆபத்தானதாகும்.

(2) பகிர்வின் மீதான விளைவுகள் :

வருமானம் பங்கீடு செய்யப்படுவதும் பாதிக்கப்படுகிறது. உற்பத்தியாளர்கள், ஊகவாணிபம் செய்வோர் மற்றும் வியாபாரிகள் வாட்டத்தினால் பெரிதும் பாதிக்கப்படுவர். விலை உயரும் என்று எதிர்பார்த்துப் பொருள்களை முடக்கி வைத்தவர்கள் வாட்ட காலத்தில் விலை வீழ்ச்சியடைவதால் தொகையைப் பெருமளவிற்கு இழக்கக் கூடும். மேலும் அவ்வப்போது கடன் வாங்கிப் பொருள்களைப் பெற்றிருப்பார்கள். கடனளிகள் கடனைத் திரும்பக் கொடுக்கும் போது குறிப்பிட்ட தொகையைக் குறைக்காமல் கொடுக்க வேண்டியிருக்கும். அதாவது பணத்தின் மதிப்பு உயர்ந்ததால் அவர்கள் உண்மைப் பணத்தை (real money) இழக்க வேண்டியிருக்கும். தேவையான பணமும் கையில் இருக்காது. எனவே, திவாலாவதற்கும் வாய்ப்புண்டு. ஆகவே, வருமானம் சமமாகப் பிரிக்கப்படாமல் கூடக் குறைய பலருக்கிடையே பங்கீடு செய்யப்படுகிறது. நிரந்தர வருமானமுள்ளோர் உண்மை வருமான உயர்வால் பலன்பெறுவர். ஏனையோர் வாட்ட காலத்தில் தெருவில் விடப்படுவர்.

வீக்கமும் வாட்டமும்

வீக்கமும் வாட்டமும் நாட்டின் பொருளாதாரத்திற்கு உகந்ததில்லை என்றாலும் இவை இரண்டில் பொதுவாக எது மக்களால் விரும்பப்படும் என்றால் வீக்கமேயாகும். வாடகை பெறும் வகுப்பைச் சேர்ந்தோரின் (rentier class) வருமானம் மாறுத நிலையிலுள்ளதால் அவர்களுக்கு வீக்கம் அநீதியை அளிக்கிறது எனக் கூறலாம். அந்த அநீதி ஒரு நாடு முழு வேலை வாய்ப்பு நிலையை அடைந்த பிறகுதான் அளிக்கப்படுவதால், ஓரளவுக்கு நாட்டைப் பொறுத்த அளவில் ஆறுதல் கூறிக் கொள்ளலாம்.

உற்பத்தி மேல் மட்ட நிலையை அடைந்த பின்தான் வேலையில்லா நிலை ஏற்படுகிறது. வேறு நிலையில் கூறினால், உற்பத்தியையும், வேலை வாய்ப்பு நிலையையும் பொறுத்த வரைக்கும் வாட்டத்தை விட வீக்கமே சிறந்ததாகும்; ஆனால் செல்வம் வருமானம் பகிர்ந்தளிக்கப்படுவதைப் பொறுத்துப் பார்த்தால் வாட்டத்தினின்றும் வீக்கம் மோசமானதாகும். 'வீக்கத்தின் மூலமாக வாடகைபெறும் வகுப்பினர் ஏமாற்றமடைவதை விட வாட்டத்தின் வழியாக வேலையின்மை நிலை அடைதல் மோசமானதே'[2] என வீக்கத்தையும் வாட்டத்தையும் ஒப்பிட்டுக் கூறும் போது, கீன்ஸ் கருத்துத் தெரிவிக்கிறார்.

வீக்கத்தினால் வருமானமும், செல்வமும் பல்வேறு பிரிவினரிடையே தவறான முறையில் பகிர்வு செய்யப்படுவதால் செல்வந்தர்கள் மேன்மேலும் செல்வந்தர்களாவர்; ஏழைகள் ஏழைகளாவர். ஏனென்றால் வீக்க காலத்தில் பணம் பணத்தை ஈட்டுகிறது; ஏழ்மை ஏழ்மையை ஈட்டுகிறது. பொருளாதாரத்தில் இரண்டுமே வெறுக்கப்படுகிறது. எவ்வித கட்டுப்பாடும் இல்லாத ஒரு நாட்டில் பணத்தின் மதிப்பு மாறாமலிருக்க வேண்டுமென அனுமானிக்கப்படுகிறது. அதன் அடிப்படையில்தான் நுகர்வும், சேமிப்பும், முதலீடும் மற்றும் வேலை வாய்ப்பும் அமைகின்றன. அப்படி இருக்கும்போது பணத்தின் மதிப்பு மாறினால் பொருளாதார நிலை சீர்கேடு அடைய கூறவும் வேண்டுமா? வீக்கத்தினால் ஊக வாணிபம், கள்ளச்சந்தை முதலியன ஏற்படுமென முன்பே பார்த்தோம் வாட்டத்தினால் உற்பத்தியும் வேலை வாய்ப்பும் பாதிக்கப்படுகின்றன; உற்பத்தி இருக்காது, மந்தம் நிலவும். இந்நிலை பொருளாதாரத்திற்கு மிகவும் கொடுமையாகும்.

வீக்கத்தையும் வாட்டத்தையும் கட்டுப்படுத்தும் முறைகள் :

பொருளாதாரத்தில் வீக்க நிலையைத் தொடக்கத்திலேயே கட்டுப்படுத்த வேண்டும். இல்லையெனில் மிகையான வீக்கம் உண்டாகி நாட்டின் பொருளாதாரமே சீர்குலைந்து விடும். வீக்கத்தை கட்டுப்படுத்தும் முறைகளை மூன்றாகப் பிரிக்கலாம்.

(1) பணவாக்கக் கைக்கோள் (Monetary policy) (2) அரசிறைக் கைக் கோள் (Fiscal policy) மற்றும் (3) பணவாக்க மற்ற நடவடிக்கைகள் (Non-monetary measures) இந்த ஒவ்வொரு முறையிலும் எவ்வாறு வீக்கம் கட்டுப்படுத்தப் படுத்தப்படுகிறது எனப் பார்க்கலாம் :

2. Monetary Theory and Public Policy—Kenneth K. Kurihara, P. 62.

(1) பண்வாக்கக் கைக்கோள் :

பணவாக்கக் கைக்கோளைக் கொண்டு வீக்கத்தைக் கட்டுப் படுத்தும் முறை ஒரு நாட்டின் தலைமை வங்கியான 'மைய வங்கி யையே' சாரும். மைய வங்கி கீழ்க்கண்ட முறைகளைக் கையாளு கிறது :—(அ) மறு கழிவு வீதக் கொள்கை (Rediscounting rates), (ஆ) காப்பு வீதத்தை மாற்றுதல் (Varying reserve ratio), (இ) வெளிச்சந்தை நடவடிக்கைகள் (Open market operations), (ஈ) தேர்வுக் கடன் கட்டுப்பாட்டு (Selective credit control) முறைகளை அமுலாக்குதல். இவைகள் எல்லாம் 'அளவுக் கட்டுப் பாட்டு முறை' (Quantitative control method) எனப்படும்.

(அ) மறு கழிவு வீதக் கொள்கை :

இதனை வங்கி வீதக் கொள்கை (Bank rate policy) என்றும் கூறலாம். மைய வங்கிகள் கடன் கட்டுப்பாட்டு முறைகளைப் பயன்படுத்தும் வழிகளில் இது மிகப் பழமையான முறையாகும். இங்கிலாந்தில் முதன் முதலாக 1837–ல் இம்முறை பயன்படுத் தப்பட்டது. இந்த முறைக்கும் வீக்கத்தைக் கட்டுப்படுத்து வதற்கும் எந்தவித நேர்முகத் தொடர்பும் கிடையாது. வணிக வங்கிகள் தங்களுக்குக் கடன் தேவைப்படும் போது இறுதியாக மைய வங்கியை அணுகும். கடன் அளிக்கப்படும் காலத்திற்கு ஏற்றாற் போல் வட்டியை மைய வங்கி பெற்றுக்கொள்ளும். வட்டி வீதம் அல்லது மறு கழிவு வீதம் என்பது மைய வங்கி எந்த வீதத்தில் தகுதியான மாற்றுச் சீட்டுகளைக் கழிவு செய்து கொண்டோ, தக்க கடன் பத்திரங்களின் மேல் முன் பணமாகவோ கொடுக்கின்ற தென்பதைக் குறிக்கும். தற்பொழுது குறிப்பாக இந்தியாவில், தக்க வணிக மாற்றுச் சீட்டுகள் பற்றாக்குறை யினால் சாதாரண கடன்களை வணிக வங்கிகளுக்கு அளிக்கப் படும் வட்டி வீதத்தையும் அது குறிக்கிறது.

வட்டி வீதம் மாற்றப்படுவதால் வணிக வங்கிகள் மைய வங்கியிடமிருந்து எந்த வட்டி வீதத்தில் கடன் வசதியைப் பெற முடியும் என்பது நிர்ணயிக்கப்படுகிறது. வங்கி வீதம் உயர்த்தப் படுவதாகக் கொள்வோம், இப்போது வணிக வங்கிகள் முன் போல் இலகுவாகக் குறைந்த வட்டிக்குப் பணம் பெற முடியாது; மாற்றுச் சீட்டுகளையும் மறுகழிவு செய்ய முடியாது. அதிகச் செலவில் தான் முடியும். வங்கிவீதம் உயர்த்தப்பட்டதால் வணிக வங்கிகளும் தங்கள் வாடிக்கைக்காரர்களுக்கு அளிக்கப்படும் கடனுக்குரிய வட்டி வீதத்தையும் கூடுதலாக்க வேண்டியிருக்கும் வாடிக்கைக்காரர்களும் முன்போல் மலிவான வீதத்தில் கடனைப் பெற முடியாததால் கடன் வாங்கும் தொகையைக் குறைப்பர்

அல்லது கடனை வாங்க முற்படார். இதனால் பணப்புழக்கம் குறையும்; வாங்குந்திறன் குறையும்; ஊக வாணிகம் இடர்ப்படும். இதன் விளைவாக, சரக்குகள் முடக்கப்பட மாட்டாது. அளிப்பு மிகையான அளவு கிடைக்கும் இதனால் விலைமட்டம் குறையும். வீக்கம் தணிக்கப்படும். வங்கி வீதம் குறைக்கப்பட்டால் இதற்கு மாறுக நடவடிக்கைகள் இடம்பெற வாய்ப்புண்டு.

இவ்வகை முறை கோட்பாட்டு அளவிலும், ஒழுங்கான பணச் சந்தை நிலவும் நாட்டிலும் தான் பலனளிக்கும். எந்த நாட்டில் பணச் சந்தை ஒழுங்கற்றதாக இருக்கிறதோ (உதாரணமாக இந்தியாவில்) அங்கே இம்முறை அவ்வளவாகப் பலனளிப்பதில்லை. ஏனென்றால் வங்கி வீதம் எவ்வளவுதான் உயர்த்தப் பட்டாலும் வணிகர்கள் கூடுதலான வட்டி கொடுக்கத் தயங்குவதில்லை. கூடுதலான செலவை உற்பத்தியாளர்களும், வணிகர்களும் பொருள்களின் மேல் வைத்து விற்கிறபடியால் நுகர்வோர் தலையில் தான் எல்லா வகைச் செலவுகளும் சுமத்தப்படுகின்றன. மேலும் மைய வங்கியின் கட்டுப்பாட்டால் கடன் பெறுவது மிகவும் கடினம் என்றே கொண்டாலும், ஒழுங்கற்ற சந்தை நாட்டில் நிலவுவதால், ஏனைய கடன் கொடுக்கும் தனியார்களிடமும் உள் நாட்டு வங்கிகளிடமும் கடனை இலகுவாகப் பெற முடியும்.

(ஆ) காப்பு வீதம் அதிகரிக்கப்படுதல் :

(வணிக வங்கிகள், அவைகள் பெற்றிருக்கும் வைப்புகளில் ஒரு பகுதியை மைய வங்கியிடம் சட்டப்படி இருப்பாக (காப்பாக) வைத்திருக்க வேண்டும்) இத்தகைய ரொக்க இருப்பு வைக்கப் படுவதின் நோக்கம், வங்கிகளின் ரொக்கத்தன்மையைக் காப்பாற்ற வேண்டுமென்பதாகும். அதோடு மட்டுமல்லாமல் மைய வங்கிக்குப் பணமும் கிடைக்கும். ஆனால் (நாளடைவில் இந்தக் காப்பு வீதத்தில் மாறுதல்களை ஏற்படுத்துவதன் மூலம், மைய வங்கி மற்ற வங்கிகளுக்குக் கடன் அளிக்கும் சக்தியைக் கட்டுப் படுத்தத் தொடங்கியது.) எடுத்துக் காட்டாக வணிக வங்கிகள் ரூ. 1000/= வைப்புகளுக்கு (deposits) 5 சத வீதம் காப்பு வைத்திருக்க வேண்டுமென்றால், அவைகளிடம் ரூ. 1000 இருப்பு இருந்தால் வங்கிகள் ரூ. 20,000 மொத்த வைப்புகளை $\left[\frac{1000}{5} \times 100 = 20,000\right]$ உருவாக்க (creation) முடியும் இப்போது காப்பு வீதத்தை 10 சத வீதமாக உயர்த்தினால் ரூ. 10,000 மொத்த வைப்புகளை மட்டுமே உருவாக்க முடியும். அதாவது (காப்பு வீதம் உயர உயரக் கடனுக்கம் குறையும்; மாறுக காப்புவீதம் குறையக் குறையக் கடனுக்கம் கூடும். கடனுக்கம்

குறைந்தால் பணப் புழக்கம் குறையும். விலை மட்டம் கட்டுப்படுத்தப்படும். வீக்கம் தணிக்கப்படும். காப்புவீதம் குறைந்தால் கடன் பெருகலாம்; முதலீடு அதிகரிக்கலாம்; உற்பத்தி பெருகலாம்; வாட்டம் நீக்கப்படலாம்.

வங்கி வீதக் கொள்கையிலும் வெளிச் சந்தை நடவடிக்கைகளிலும் சில குறிப்பிடத்தக்க குறைகளிருப்பதால், வங்கிகளின் காப்பு வீத மாறுதல்களின் மூலம் கடன் அளவைக் கட்டுப்படுத்த இப் புதிய முறை பின்பற்றப்படுகிறது. இம் முறை முதன் முதலில் அமெரிக்காவில் பின்பற்றப்பட்டாலும், ஒரு கோட்பாடாக உருவாக்கி வழங்கிய பெருமை கீன்ஸையே சாரும். மற்ற முறைகளை விட காப்பு வீத முறை சிறந்ததெனக் கூறலாம். ஏனெனில் மைய வங்கி ரொக்க இருப்பு வீதத்தைக் கூட்டியவுடன் வங்கிகள் தங்களுடைய கடனளவை உடனடியாகக் குறைக்க வேண்டியிருக்கிறது. மற்றைய கட்டுப்பாட்டு முறைகளைப் போல இது வேறு புறச் சூழ் நிலைகளைச் சார்ந்திருக்கவில்லை. எனவே நேரடியாக விளைவுகள் ஏற்படுகின்றன.

இருந்தாலும், சில குறைகள் இல்லாமலில்லை. சட்டப்படி இருப்பை வைத்துக்கொண்டு அதிலிருந்து கூட்டவோ குறைக்கவோ செய்யலாம். பெரிய வங்கிகளுக்கு வைப்புகள் கூடுதலாவதால் சட்டப்படியான இருப்பு வீத உயர்வு அவ்வளவாக அதன் கடனுக்கத்தைக் குலைத்து விடாது. வணிக வங்கிகள் மைய வங்கியிடம் வைத்திருக்கும் இருப்புக்கு மையவங்கி வட்டி எதுவும் கொடுப்பதில்லை. அதை ஈடுகட்டுவதற்காக வணிக வங்கிகள் தாங்கள் கடன் கொடுக்கும் தொகைக்கு வட்டி வீதத்தை உயர்த்துவர். இதனால் பொருளாதாரத்தில் சில சிக்கல்கள் ஏற்படும். மேலும் இம்முறை அடிக்கடி மாற்றம் செய்யப்படுவதை பெரும்பாலும் வங்கிகள் விரும்புவதில்லை.

(இ) வெளிச் சந்தையில் அரசுப் பிணையங்கள் விற்கப்படுதல்

கடன் அளவைக் கட்டுப்படுத்துவதில் மற்றுமொரு பழமையான முறை வெளி அங்காடி நடவடிக்கையாகும். வெளி அங்காடி நடவடிக்கையென்றால் அரசின் பிணையங்களாகவோ, வங்கிகளின் ஒப்பந்தங்களாகவோ, அந்நிய செலாவணியாகவோ இருக்கும் எந்தவகைப் பிணையத்தையாவது மைய வங்கி விற்பதையும் வாங்குவதையும் குறிக்கும். மைய வங்கி பிணையங்களை வாங்கி விற்பதன்மூலம் வணிக வங்கிகளின் ரொக்க இருப்பைக் கூட்டவோ குறைக்கவோ முடிகின்றது. இதனால் வங்கிக் கடனளவு கூடவோ, குறையவோ செய்கின்றது.

மைய வங்கி பிணையங்களை விற்கும்போது பொதுமக்கள் ரொக்கமாகக் கொடுத்தோ காசோலை விடுத்தோ அப்பிணையங்களை வாங்குவார்கள். மையவங்கி இத்தகைய காசோலைகளைப் பெறும்போது அதனிடமுள்ள வணிக வங்கிகளின் இருப்பில் இந்தப் பணத்தைக் கழித்துக் கொள்ளும். வணிக வங்கிகள் மைய வங்கியிலுள்ள தங்களுடைய ரொக்க இருப்புக் குறைந்தவுடன் கடன் கொடுக்கின்ற அளவைக் கட்டுப்படுத்தும் அல்லது முன்னரே கொடுத்திருக்கின்ற கடனைத் திரும்பப் பெறுகின்ற நிலையும் ஏற்படலாம். இப்படிக் கடன் அளவைக் குறைத்தும், கொடுக்கின்ற கடனைத் திரும்பப் பெற்றும் கடன் அளவைக் கட்டுப்படுத்தினால் சமுதாயத்தில் பண அளவு குறையும். முதலீடு குறையும், வேலை வாய்ப்பும் குறையும். வீக்கம் கட்டுப்படுத்தப்படும்.

மைய வங்கி பத்திரங்களை வாங்கினால் இதற்கு மாறான விளைவுகள் உண்டாகும்; வாட்டம் முறியடிக்கப்படும். இம்முறை பலன்தர வேண்டுமென்றால் பண அங்காடி பரந்து விரிந்து இருக்க வேண்டும். மைய வங்கியிடம் போதுமான அளவு ரொக்கமும் பிணையங்களும் இருக்கவேண்டும். அங்காடி நடவடிக்கைகளுக்கேற்றவாறு பணத்தின் மொத்த அளவும் வங்கிகளின் ரொக்கமும் மாறவேண்டும்.

(ஈ) நேர்வுக் கடன் கட்டுப்பாட்டு முறை :

இம்முறை கடன் தன்மைக் கட்டுப்பாட்டு முறை (Qualitative credit control method) என்றும் அழைக்கப்படும். இதுவரை பார்த்த கடன் அளவுக் கட்டுப்பாட்டு முறை எந்தவிதமான பேதங் காட்டாமலும் எல்லாத் துறைகளுக்கும் பொதுவாகப் பொருந்தும் படி பயன்படுத்தப்பட்டது. அப்படி பயன்படுத்தப்படுத்தப்படுவதால் நாட்டிற்குத் தேவையான பலனளிக்கக்கூடிய துறைகளும் பாதிக்கப்படும். எனவே, எந்தெந்தத் துறைகள் அல்லது தொழில்கள் நாட்டில் பொருளாதார வீக்கத்திற்குக் காரணமாக இருக்கின்றனவோ அவைகளை மட்டும் இனங்கண்டு, தெரிந்தெடுத்து அந்தத் துறைகளுக்குக் கடன் செல்லாமல் தடுக்கக் கடன் தன்மைக் கட்டுப்பாட்டு முறைகளை மைய வங்கி பயன்படுத்துகின்றது.

இம்முறையை முதலில் 1930-ம் ஆண்டில் அமெரிக்கா பின்பற்றியது. தெரிந்தெடுத்த கடன் கட்டுப்பாட்டு முறைகளில் வரம்புத்தேவை, நுகர்வோர் கடன் நெறிப்படுத்துதல், ஆணைகள் பிறப்பித்தல், அறிவுறுத்தல், கடன் பங்கீடு, நேரடி நடவடிக்கை

ஆகியவை அடங்குகின்றன. பங்கு மாற்றுச் சந்தையில் (Stock exchange) ஈடுபடுபவர்கள் பங்குகளை வாங்கப் பணம் தேவைப் படுகின்றபோது தங்களிடமுள்ள பங்குகளை வணிக வங்கிகளிடம் ஈடாகக் கொடுத்துப் பணம் பெறுகின்றனர். வணிக வங்கிகள் அப்படிக் கடன் கொடுக்கும்போது வரம்பு (margin) வீதத் தொகையைக் கழித்துக்கொண்டு எஞ்சிய தொகையைக் கொடுக்கும். இந்த வரம்பு வீதத்தை நிர்ணயிப்பது மைய வங்கியாகும்.

வரம்பு 10 சதவீதமென்றால் வணிக வங்கி 100 ரூபாய் மதிப்புள்ள பத்திரத்திற்குத் 90 ரூபாய் வரைதான் கடன் அளிக்கும். வரம்பு 20 சதவீதம் என்றால் 80 ரூபாய்தான் கடன் அளிக்கப்படலாம். வரம்பு 100 சதவீதம் என்றால் அப்பிணையத் திற்குக் கடன் வாங்கும் சக்தி கிடையாது. இவ்வாறாக, வரம்பு வீதம் குறைந்தால் கடன் அளவு கூடும்; வரம்பு கூடினால் கடன் அளவு குறையும். பங்குச் சந்தையில் ஈடுபட்டோர் மிகுதியான இலாபம் அடைய முடியாது. ஊக வாணிகம் தடைப்படும். பொருளாதார வீக்கம் தணிக்கப்படும்.

நுகர்வோர் பொருள்கள் வாங்குவதற்காக வணிக வங்கிகள் கடனளிக்கும். இத்தகைய கடன்கள் பொதுவாகத் தவணை முறையில் பொருள்களை வாங்கப் பயன்படுகின்றன. நுகர்வோரின் தேவை, கடன் இலகுவாகக் கிடைக்கும்வரை கூடுதலாகும். இதன் விளைவால் வீக்கம் உண்டாகும். இவ்வகை வீக்கத்தைத் தணிப்பதற்காக மைய வங்கி எத்தகைய பொருள்களை வாங்கு வதற்கு மட்டும் வணிக வங்கிகள் கடன் கொடுக்கலாமென்பதை வரையறுக்கலாம்.

எத்தகைய கடன்களை எந்த அளவிற்கு எந்தெந்த தொழில் களுக்கு அல்லது துறைகளுக்குக் கொடுக்கலாமென்பதை ஆணைகளின்மூலம் மைய வங்கி வணிக வங்களுக்கு அறிவிக் கின்றது. இவ்வாறு நேரடியான ஆணைமூலம் கடன் கட்டுப்பாடு செய்யப்படுவதால் வீக்கநிலை கட்டுப்படுத்தப்படுகிறது.

மைய வங்கியின் போக்குக்கு அல்லது ஆணைக்கு மாறுக வணிக வங்கிகள் செயல்பட்டுக் கடனை அளித்தால் தவறு செய்த அல்லது வரம்பு மீறிய வணிக வங்கிகளின் மீது மைய வங்கி நடவடிக்கை எடுக்கும். இவ்வாறு நடவடிக்கை எடுக்கப்படுவதால் கடன் கட்டுப்படுத்தப்படும்.

வணிக வங்கிகள் நாட்டின் பொருளாதார சூழ்நிலைக்கேற்பச் செயல்படும்படி மைய வங்கி வேண்டிக் கொள்ளும். வீக்க காலத்தில் கடனளவைக் கட்டுப்படுத்தும்படியும் வாட்ட காலத்தில் கடனளவைக் கூட்டும்படியும் வணிக வங்கிகளுக்கு மைய வங்கி ஆலோசனை கூறலாம்.

கடன் அளிக்கும் நோக்கத்தையோ, கடன் அளவையோ கட்டுப்படுத்தி நெறிப்படுத்தக் கடன் பங்கீட்டு முறையை (rationing of credit) மைய வங்கி பின்பற்றுகிறது. பொருளாதாரத்தில் எந்தெந்தத் துறைக்குக் கடன் கிடைக்க வேண்டுமோ அதற்கேற்றாற்போல் கடனை மைய வங்கி நெறிப்படுத்துகின்றது. மேலும் வணிக வங்கிகளின் சொத்துகளுக்கும் மூலதனத்திற்கும் இருக்க வேண்டிய தொடர்பை வரையறுக்கிறது.

(2) அரசிறைக் கைக்கோள் :

வீக்கத்தைத் தடுப்பதற்காக அல்லது தணிப்பதற்காக (அ) அரசுச் செலவினங்கள் (ஆ) வரிகள் மற்றும் (இ) பொதுக் கடன்கள் ஆகியவை அடங்கிய அரசிறைக் கைக்கோள் பயன் படுத்தப்படுகிறது. மற்ற முறைகளை விட இந்த முறை மிகவும் சக்தி வாய்ந்ததெனக் கூறலாம்.

(அ) அரசுச் செலவினங்கள் (Government Spending) :

வீக்க காலத்தில் அரசுச செலவினங்கள் குறைக்கப்பட வேண்டும். அப்போதுதான் மக்களின் வருமானம் குறையும் ; நுகர்வு சக்தியும் குறையும். கண்மூடித்தனமான வரவு—செலவுத் திட்டத்தினால்தான், குறிப்பாக பற்றாக்குறை வரவு செலவுத் திட்டத்தினால்தான் வீக்க மேற்படுகிறது. அதைக் கட்டுப்படுத்த வேண்டுமென்றால் ஒரு குறிப்பிட்டகாலத்திற்குச் செலவினங்கள் குறைக்கப்பட வேண்டும். அவசியமான — போர்த்துறை சம்பந்தமான—முதலீடு தவிர ஏனைய முதலீடுகள் நிறுத்தப்பட்டும் திட்டம் அமைக்கப்பட வேண்டும். செலவினங்கள் குறைக்கப்படும்போது, அவை நீண்ட காலத்தில் உற்பத்தியைப் பாதிக்காத அளவிற்குப் பார்த்துக்கொள்ள வேண்டும். மந்த காலத்தில் செலவினங்களைக் கூடுதலாக்கினால் பணப்புழக்கம் கூடுதலாகும்; வருமானம் உயரும்; முதலீடு பெருகும்; உற்பத்தி அதிகரிக்கும். பின்னர் வாட்டம் தவிர்க்கப்படும்.

(ஆ) வரிகள் :

அரசுச் செலவுகளை மட்டும் குறைத்தால் வீக்கம் குறைக்கப் படமாட்டாது. மக்களின் வாங்குந்திறன் உண்மையிலேயே

குறைக்கப்பட வேண்டும். வாங்குந்திறன் குறைக்கப்பட வேண்டுமானால் வரிகள் இடப்பட வேண்டும். ஒரு நாட்டின் வரவு—செலவுத் திட்டத்தின் கூடுதல் வரவு, வரி இடுவதைப் பொறுத்துத்தான் இருக்கிறது. வீக்க காலத்தில் வரி இடுவது குறைக்கப் படாமலும், கூடுதலாகப் போடும் படியும் பார்த்துக் கொள்ள வேண்டும். பொருளாதார சரிவு அல்லது மந்தம் ஏற்படும்படி வரி விதித்தல் தவிர்க்கப்பட வேண்டும். மேலும், எந்தெந்தத் தொழில்கள் அல்லது துறைகள் மட்டும் பாதிக்கப் பட வேண்டுமோ அவைகளுக்கு மட்டும் வரி இடப்பட வேண்டிய அளவில் அமைய வேண்டும். வரிக் கொள்கையில் பேதங் காட்டப்பட வேண்டும். எடுத்துக்காட்டாக, வீக்க காலத்தில் ஆள்சார் வருமான வரியை வருமானத்திற்கு ஏற்றாற்போல் கூடுதலாக்குவது நல்ல பலனைக் கொடுக்கும்.

(இ) பொதுக் கடன்கள் (Public borrowings) :

மக்களின் பொதுக் கடன்கள் வாங்குந்திறனை அரசு குறைக்கிறது. அவ்வாறு குறைக்கவில்லை யென்றால் நுகர்வுக்காகவோ, முதலீடு செய்வதற்காகவோ அப் பணம் செலவு செய்யப்படும். வீக்கக் கட்டுப்பாட்டிற்கு மிகவும் உகந்த பொதுக் கடன் 'கட்டாய சேமிப்பு' ஆகும். இதைப் 'பின் செலுத்தும் முறை' (deferred payments) எனவும் கூறலாம். இந்த முறைப்படி நுகர்வோர் தங்கள் சம்பளத்தில் ஒரு பகுதியைச் சிறிது காலம் கழித்துப் பின்னர் பெறுகிறார்கள். அந்தச் சம்பளத்தின் ஒரு பகுதிக்குச் சமமாக ஒரு குறிப்பிட்ட காலத்திற்குப் பின் மீட்கப்படும் சேமிப்புப் பிணையங்களை வாங்குகிறார்கள். இவ்வாறு செய்யப் படுவதால் நுகர்வோரின் வாங்கும் சக்தி குறைக்கப்படுகிறது; தேவை குறைகிறது, விலை மட்டம் குறைகிறது. வீக்கம் கட்டுப் படுத்தப் படுகிறது. பண அளிப்பைக் குறைப்பதற்கு இம் முறைப் படி 'செலாவணி நோட்டுகளை திரும்பப் பெற்றும் வங்கியிலுள்ள வைப்புகளை அப்படியே நிறுத்தி வைத்தும் அவைகளுக்குப் பதில் நீண்டகாலக் கடன் பிணையங்களை அரசு அளிப்பதுமாகும்' என்று ஹாட்ரே கூறுகிறார். போர்க்காலங்களில் வேண்டுமானால் கட்டாய சேமிப்பு முறையை அரசு கட்டாயப்படுத்தலாம். ஆனால் சாதாரண காலங்களில் மக்களாகவே சேமிக்க முன் வர வேண்டும். எம் முறையில் சேமிப்பு மனப்பான்மை வளர்க்கப் பட்டாலும், அந்தச் சேமிப்பு, வருமான வரி அளவைப் பொறுத்துத் தான் அமையும்.

பற்றுக்குறை வரவு செலவு திட்டத்தால் உந்தப்பட்ட பணப் பெருக்கத்தைத் தவிர்ப்பதற்கு அத்தொகைக்குச் சமமாகப்

பொது மக்களிடமிருந்து அரசுக்கடன் பெறுதல் வேண்டும். அக் கடன் வங்கித் துறையில்லாத மற்றவர்களிடமிருந்து பெற்றுல்தான் வீக்கத்தைக் கட்டுப்படுத்த முடியும். மேலும் வீக்கத்தைக் கட்டுப்படுத்த அரசுக் கடன்கள் நிருவகிக்கப்பட வேண்டும். (debt management) பழைய கடன்கள் முதிர்வடையும் காலத்தில் திரும்பி அளித்தால் வீக்கம் நிலவும்போது பணப் புழக்கம் இன்னும் அதிகமாகி வீக்கம் மேலோங்கும். அதைத் தடுக்க பழைய கடன்கள் முதிர்வடையும்போது தீர்வு செய்யப் படாமல் புதுப்பிக்கப்பட வேண்டும். வரவு செலவுத் திட்டத்தில் கிடைக்கும் உபரித் தொகையைக் கொண்டு அரசு மைய வங்கி யிடம் பெற்றிருக்கும் கடனைத்திருப்பி அடைக்கலாம்.

உள்நாட்டுப் பொருளாதார வீக்கத்தைத் தடுக்க நாட்டுச் செலாவணி மிகையாக மதிப்பிடப்பட வேண்டும். (Over Valuation of Currency). அதாவது வெளி நாட்டுச் செலாவணிக்கு உள் நாட்டுச் செலாவணி மாற்றப்படும்போது கூடுதல் செல வாகும். இதன் விளைவாக, முதலில், ஏற்றுமதி குறையும். ஏற்றுமதி குறைந்தால் உள் நாட்டுப் பணவருமானம் குறையும். இரண்டாவதாக. இறக்குமதி கூடுதலாகும்; இதனால் இறக்கு மதிச் செலவு அதிகரிக்கும். மூன்றுவதாக, அயல்நாட்டுப் பொருள்கள் விலை மலிவாகக் கிடைப்பதால் உள்நாட்டு உற்பத்திச் செலவு தானுகவே குறையும்; விலைமட்டம் குறையும். உள் நாட்டுச் செலாவணி மிகை மதிப்பிடப்படுவதால் ஏற்படும் நன்மை, அயல்நாடுகள் தங்கள் செலாவணியின் மதிப்பை மாற்றும லிருக்கும் வரைக்குத்தான். அயல்நாடுகளும் தங்கள் செலா வணியை மிகை மதிப்புச் செய்தால், உள்நாட்டுச் செலாவணியின் மிகை மதிப்பால் எவ்வித இலாபமுமிருக்காது.

(3) பணவாக்க மற்ற நடவடிக்கைள்

பணவாக்கமற்ற நடவடிக்கைகளில் (அ) உற்பத்தியைச் சரிக் கட்டல் (ஆ) கூலிக் கொள்கை மாற்றம் (இ) விலைக் கட்டுப்பாடும், பங்கீடும் (Price control and rationing) ஆகியவை அடங்கும்.

(அ) உற்பத்தியைச் சரிக்கட்டல் (Output adjustment) :

வீக்கம் ஏற்படுவதற்குக் காரணம் தேவையும் அளிப்பும் சமநிலையில் இல்லாததேயாகும். தேவைக்கேற்ப உற்பத்தியை மிகுதியாக்கினுல் விலைமட்டம் குறைக்கப்பட்டு வீக்கம் கட்டுப் படுத்தப்படும். உற்பத்தியை அதிகரிப்பது என்பது எளிதான

செயல் அல்ல. நாம் முன்பே பார்த்தபடி நாட்டில் நிறைவுடை வேலைவாய்ப்பு நிலை அடையுமுன் கூடுதல் முதலீடு செய்தாலும் உற்பத்தி பெருகாது. செலவுதான் கூடும். அதன் விளைவாக, பண வருமானமும் கூடும். விலை உயரத் தொடங்கும். இருந்தாலும் ஒரு சில பொருள்கள், பணிகளின் உற்பத்தியை, முழு வேலை வாய்ப்பு நிலை அடைந்ததற்குப் பின்பும் பெருக்கலாம். வீக்கம் கூடுதலாகவுள்ள துறைகளிலிருந்து மிகையான உற்பத்திக் காரணிகளை வீக்கம் குறைவாக உள்ள துறைகளுக்கு மாற்றுவதன் மூலம் குறிப்பிட்ட பொருள்களையும் பணிகளையும் உற்பத்தி செய்ய முடியும். இவ்வாறு உற்பத்திக் காரணிகளை மறு மாற்றம் செய்வதால் உற்பத்திச் செலவு கூடுதலாகாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

(ஆ) கூலிக் கொள்கை மாற்றம் :

போர்க் காலங்களில் விலை மட்ட உயர்வைத் தடுப்பதற்காகப் பணக் கூலியை (money wages) அரசு கட்டுப்படுத்தும். கூலி உயர்த்தப்படுதல் வீக்கத்திற்கு ஒரு காரணமென்று முன்பே பார்த்திருக்கிறோம். விலை மட்டமும் கூலியும் ஒன்றையொன்று தொடர்ந்து கொண்டு சென்று வீக்கச் சுழல் வடிவை (Inflation-spiral) உண்டாக்கும். போர் ஓய்வுக்குப் பின் சாதாரண காலங்களில் பண உயர்வுக் கோரிக்கையைத் தடுக்க முடியாது. அதுவும் தொழிலாளர் சங்கம் சக்தி வாய்ந்ததாக இருந்தால் கூலி உயர்த்தப்படும். எனவே, வீக்கத்தைத் தடுக்க வேண்டுமென்றால் கூலி, சம்பள உயர்வுகள் நிறுத்தப்பட வேண்டும். அதே போழ்து தொழில் முயல்வோருக்கு நிகர லாபம் அதிகரிக்காமல் பார்த்துக்கொள்ள வேண்டும். இலாப மிகுதியினால் கூலி உயர்வை அனுமதிப்பதில் தவறில்லை. எப்படி இருந்தாலும் அரசுக்கும், தொழிலாளர்களுக்கும் நல்லுறவு இருந்தால்தான் வீக்கத்தைக் கட்டுப்படுத்த முடியும்.

(இ) விலைக் கட்டுப்பாடும் பங்கீடும் :

வீக்கத்தின் அறிகுறி விலைமட்ட உயர்வாகும். இரண்டாவது உலகப் போர் காலத்தில் பல நாடுகள் விலை மட்டத்தைக் கட்டுப்படுத்தின. ஒரு சில நாடுகள் போர் ஓய்வுக்குப் பின்னும் தொடர்ந்து விலைக் கட்டுப்பாட்டுக் கொள்கையைக் கடைப்பிடித்தன. விலை கட்டுப்படுத்தப்படுவதால் பொருள்களின் விலை ஒரு குறிப்பிட்ட அளவுக்கு மேல் உயராது. இதனால் இலாப வேட்கை, ஓடும் வீக்கம் தடை செய்யப்படும். விலை கட்டுமானப் போக்கை கீன்ஸ் விரும்பவில்லை. ஏனென்றால் 'வாகிகுந் திறனுக்கும் உற்பத்திக்கும் சமநிலை கொண்டு வரப்படுவதில்லை' எனக் கூறுகிறார்.

விலைக் கட்டுமானப் போக்கால் தேவை மிகுதியாகும்; கடை வீதியெல்லாம் வரிசைகள் (Queues) தென்படும். நீதியற்ற வழங்கல் அளிக்கப்படும். விலைக் கட்டுமான நடவடிக்கை, வீக்கத்திற்கு ஒரு அற்பமான, பழமையான முறை எனக் கீன்ஸ் கூறுகிறார். விலைக் கட்டுப்பாட்டுக் கொள்கை கோட்பாடு அளவில் சிறப்பானதாக இருந்தாலும் அதை நடைமுறைக்குக் கொண்டு வருவதில் அரசுக்கு மிகையான சிக்கல்கள் இருக்கும். விலைக் கட்டுப்பாட்டு அதிகாரிகள் திறமையானவர்களாகவும், நம்பிக்கையுடையவர்களாகவும் இருந்து தங்கள் கடமைகளை ஆற்ற வேண்டும். இல்லையேல் கள்ளச்சந்தை உண்டாக வழியுண்டு. பொருளாதாரச் சீர்கேடு தலை தூக்கும். விலை கட்டுப்படுத்தப் பட்டு நுகர்வோருக்குப் பங்கீடு முறையில் அளிப்பும் வழங்கப் பட்டால் பற்றுக்குறை பொருள்களின் அளிப்பு நெறிப்படுத்தப் படும். மிகையான நுகர்வு தடுக்கப்பட்டுச் சேதமும் குறைக்கப் படும்; மாற்றுப் பொருள்களுக்கும் தேவையைத் திருப்பி விட முடியும். இதனால் வீக்கம் கட்டுப்படுத்தப்படும். இந்தப் பங்கீட்டு முறை மூலம் நுகர்வோரின் தேவை வரையறுக்கப்படுவதால் நுகர்வோரின் 'சுதந்திரம்' பறி போகிறது எனக் கீன்ஸ் குறை கூறுகிறார்.

13. பணமும் வாணிபச் சுழலும்


(MONEY AND THE TRADE CYCLE)

வாணிபச் சுழல்

வாணிபத்தில் ஏற்படும அலைவுகளே வாணிபச் சுழல் எனப் படும். அச்சுழல் அலைவுகள் 19 மற்றும் 20-ஆம் நூற்றாண்டு களின் முனைப்புக் கூறுகள் (features) என்றே கூறலாம். 1792 முதல் 1913 வரை வாணிபப் பூரிப்பு (செழிப்பு) (boom) ஏறத்தாழ எட்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை ஏற்பட்டிருக்கிறது. இரண்டு பூரிப்புக்காலங்களுக்கிடையில் மந்தம் (dipression) நிலவியிருக்கின்றது. ஆனல் பூரிப்போ, மந்தமோ சில காலத் திற்கு நிலைத்திருந்ததில்லை. மாறி மாறி இடம் பெற்றிருக் கின்றன. இப்படி, ஒழுங்காகக் குறிப்பிட்ட இடைவெளிக் காலத்தில் இடம்பெற்ற அவைகள், இருபதாம் நூற்றாண்டில் இரண்டு உலகப் போர்களின் விளைவாக ஒழுங்கற்றுச் சுழலத் தொடங்கின. 1913-க்கு முன்னர் முழு வேலைமட்ட நிலையை எய்தாத பூரிப்புக் காலங்களைவிட இரண்டு உலகப் போர்க்காலங் களின் முழு வேலை மட்ட நிலை நிலவுதல் காணப்பட்டது. முதல் உலகப்போரை (1914–18) அடுத்து இங்கிலாந்தில் வேலையின்மை நிலை தொடங்கிற்று. வியாபார மந்தம் ஏற்பட்டது. ஆனல் 1920 ஆண்டுகளில் (1920-ல்) உலகில் ஏனைய நாடுகள் குறிப்பாக, அமெரிக்க நாடுகள் பூரிப்புக் கட்டத்திலேயே இருந்தன. இங்கி லாந்தில் வியாபாரச் சரிவு ஏற்பட்டதற்கு முக்கிய காரணம் வாட்டநிலைக் கொள்கை கடைபிடிக்கப்பட்டதாலும் அமெரிக்க டாலருக்குச் சமமாக ஸ்டெர்லிங் மதிப்பை உயர்த்திப் பொன் திட்டத்தை நிலை நிறுத்த முற்பட்டதாலுந்தான். மந்த நிலை உலக முழுவதிலும் 1930-ல் வியாபித்திருக்கும் போது இங்கி லாந்தின் பொருளாதார நிலை இன்னும் மோசமடைந்தது. 1935-ல் நிலைமையில் சிறிது முன்னேற்றம் காணப்பட்டது. பூரிப்பு காலத்தின் இளந்தளிர் மட்டும் கண்ணுக்குப் புலப்பட்டது. ஆனல் அப்பூரிப்பும் வெகு விரைவில் சரிவு செய்யப்பட்டதால் மறைந்து விட்டது.

1939-ல் இரண்டாம் உலகப்போர் தொடங்கியவுடன் நாடு முழு வேலை அளவு நிலையை மீண்டும் அடைந்தது. போர் ஓய்வுக்குப் பின் மீண்டும் சரிவு ஏற்பட்டு மந்தம் நிலவத் தொடங்கியது. ஆனால் 1945-ல் நிலைமை மாறி முழு வேலை மட்ட நிலையை நாடு அடைந்தது. அவ்வாண்டிலிருந்து தொடர்ந்து முழு வேலை மட்ட நிலை நிலவி வருகின்றது. இருப் பினும் இடையிடையே புறக்கணிக்கத் தக்க அளவில் வேலை யில்லா நிலை ஏற்பட்டிருக்கின்றது. அமெரிக்க நாடுகளிலும் 1945-க்குப் பின்னர் தொடர்ந்து முழு வேலைமட்ட நிலை இருந்து வருகின்றது. இத்தாலிய நாட்டில் 1950 ஆண்டுகளில் முழுவதும் வேலையில்லா நிலைதான் இருந்து வந்திருக்கிறது. இப்படியாக, இருபதாம் நூற்றாண்டின் முதல் 50 ஆண்டுகளை எடுத்துக் கொண்டால் மந்த நிலை நெடுங்காலத்திற்கு இடம் பெற்றிருப்பது அறிய வரும்.

உலகில் பொருளாதார வளர்ச்சியின் கடந்த கால வரலாற்றை ஒப்பிட்டு நோக்கினால் அவை சீராக அமையாமல் ஏற்ற இறக்கங் களுடன் அமைந்திருப்பது தெரிய வரும். ஆனால் அவ்வேற்ற இறக்கங்களுக்கு ஒரு நியதி இருக்க வேண்டுமென்ற அவசிய மில்லை. இருந்தாலும் ஒரு வாணிபச் சுழலில் பல கட்டங்கள் (Phases) உள்ளன. அவைகளை வெளிப்படுத்தும அளவுக்கு ஒரு 'மாதிரி வாணிபச் சுழலை' விளக்குவோம் :



படம் : மாதிரி வாணிபச் சுழல்

மேலே குறிப்பிடப்பட்டுள்ள படத்தில் வாணிபச் சுழலின் பல கட்டங்கள் காணப்படுகின்றன. 'மு. வே.' கோடு முழு வேலைமட்ட நிலையைக் குறிக்கிறது. இக்கோட்டிற்கு மேல் பொருளாதாரப் பூரிப்பும், கீழே பொருளாதார மந்தமும் காணப் படுகின்றன. வாணிபச் சுழல் ஒரு தொடர் நிகழ்ச்சி யாதலால்

அ:து எங்கு தொடங்குகின்றதென்பதைச் சுட்டிக்காட்ட முடியாது. இருந்தாலும், வாணிபச் சுழலின் கீழ் மாற்றப் புள்ளிலிருந்து தொடங்குவது வழக்கமாகும்.

ஒரு மாதிரிச் சுழல் (A model cycle)

வாணிபச் சுழல் என்ருல் என்ன, அதன் தன்மைகள் எவ்வாறு இருக்கும் என்பனவற்றை முன்னர் சுருக்கமாகக் கண்டோம். தற்போது நாம் ஒரு வாணிபச் சுழலை மாதிரியாக எடுத்துக் கொண்டு எவ்வாறு வாணிபச்சுழலின் ஒரு நிலை அடுத்தடுத்த நிலைகளுக்கு மாறிச் சென்று சுழற்சியை பூர்த்தியாக்குகிறது என்பதைக் காண்போம். வாணிபச் சுழலில் எந்த நிலையும் அடுத்த நிலையை அடையாமல் நிலைத்திடுவதில்லை. வாணிபச் சுழலின் ஒரு நிலையில் நிலவும் பொருளாதாரச் சக்திகள் உந்து விசை பெற்று (Gain momentum) அந்தக் குறிப்பிட்ட நிலையை அடுத்த நிலைக்கு எடுத்துச் செல்லுகின்றன. அந்த அடுத்த நிலை வட்டத்தில் அதற்கு அடுத்த நிலைக்கு எடுத்துச் செல்லப்படுகிறது. இவ்வாறு ஒரு நிலை வெவ்வேறு நிலைகளுக்கு மாறி வட்டத்தை பூர்த்தி அடையச் செய்கின்றது. இதற்கான காரண விளக்கங்களை ஒரு மாதிரிச் சுழல் கொண்டு பார்க்கலாம்.

கீழ்த்திருப்பு முனை (The lower turing point)

நாம் வாணிபச் சுழலினைக் கீழ்த்திருப்பு முனையிலிருந்து ஆரம்பித்து அது செல்லும் போக்கை ஆராயலாம். கீழ்த்திருப்பு முனை என்பது பொருளாதார மந்த நிலை மறைந்து மீட்சி நிலையின் ஆரம்பக் கட்டத்தைக் குறிப்பதாகும். மந்த நிலையில் பொருளாதார நடவடிக்கைகள் மிகவும் கீழ் நிலையில் இருக்கின்றன. இதன் காரணமாகச் சமுதாயத்தின் வருமானம் மிகவும் தாழ்ந்த நிலையில் உள்ளது. நுகர்ச்சி நாட்டம் அதிகமாகக் குறைந்து நாட்டின் சக்தியுள்ள தேவை (Effective demand) குறைவாக இருக்கிறது. இந்த நிலையில் இலாப வாய்ப்புகள் மிகவும் குறைவாக இருப்பதால் சமுதாயத்தின் மொத்த முதலீடு மிகத் தாழ்ந்த நிலைக்கு வந்து விடுகிறது. உற்பத்திக் காரணிகள் வேலையின்றி அவதியுறுகின்றன. சுருங்கக் கூறின், சமுதாயம் ஒரு மோசமான பொருளாதார நிலையில் சிக்கி அல்லற் படுகிறது. சமுதாயத்தின் உற்பத்திச் சக்தி அதிகமாக இருப்பினும் அச் சக்திகள் பயன்படுத்தப்படாததால் குறைந்த உற்பத்தி நிலையைக் காண்கிறோம். பொருளாதாரத்துறையில் காணப்படும் ஆச்சரியங்களில் இதுவும் ஒன்றாகும். ஆச்சரிய மென்றாலும் உண்மையும் ஆகும். இந்த மோசமான நிலையிலிருந்து விடுபடும்

ஆரம்ப நிலையைத்தான் நாம் இங்கு கீழ்த்திருப்புமுனை என்கிறோம். இது எதனால் ஏற்படுகிறது என்பதைக் காண வேண்டும்.

மந்த நிலையிலிருந்து பொருளாதாரம் விடுபட்டு கீழ்த்திருப்பு முனை ஏற்படுவதற்குப் பல காரணிகளின் சேர்க்கைக் காரணமாக அமைகின்றது. உற்பத்தி நிலையிலும், பண நிலையிலும் பொருளாதாரம் ஒரு மீட்சி நிலையை அடையத்தயாராக இருப்பதை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். பயன்படுத்தப்படாத தொழில் உற்பத்திச் சக்திகள், வேலையின்றியிருக்கும் உழைப்புச் சக்திகள் பெரிய அளவு முதலீட்டிற்கான வாய்ப்புக் கூறுகளைக் கொண்டுள்ளன. வங்கி அமைப்புகளில் தேக்க முற்றுக்கிடக்கும் பெரிய அளவு நீர்மைப் பணம் சமுதாயத்தில் கடன் அளிப்பைப் பெரும் நெகிழ்ச்சித் தன்மை உடையதாக மாறுகிறது.

அடுத்து முதலீட்டுத் தேவையில் ஓர் மீட்சியை அனுமானம் செய்து கொள்வோம். எந்திர சாதனங்கள் மாற்றப்பட்ட வேண்டிய அவசியத்தின் காரணமாக மொத்த முதலீட்டில் ஒரு அதிகரிப்பு ஏற்படலாம். தேய்மானம் அடைந்த எந்திர சாதனங்கள் மாற்றப்படுவதைத் தள்ளிப்போட்டுக் கொண்டே செல்ல முடியாது; இருக்கும் சாதனங்களின் அளவு குறைந்துகொண்டே செல்வதையும் அனுமதிக்க முடியாது; பழுது அடைந்ததைச் சரி செய்யாமல் இருக்க முடியாது; இவைகளின் காரணமாக முதலீட்டுப் பொருள்களுக்கான தேவை திரும்ப அதிகரிக்க ஆரம்பிக்கும்; இதுபோல நுகர்வோர் உற்பத்திப் பொருட்களுக்கும் தேவை அதிகரிக்கும். தேவை அதிகரிப்பின் காரணமாக விலைகள் உயரத் தொடங்கும். புதிய புத்தமைப்புகளில் முதலீடு செய்வதற்கான வாய்ப்புகள் வசீகரமாக இருக்கும். பல பெரும் வணிகச் சுழல்களின் வரலாற்றை நோக்குமிடத்து இவ் வகையான பல தொழிற்சாலைகள் தோன்றியிருப்பதைக் காணலாம்.

மீட்சி எப்போதும் கடன் விரிவாக்கத்தோடு சம்பந்தப் படுத்திக் கூறப்படும். நடப்பு சேமிப்பு, பணப் பதுக்கீடு மற்றும் புதிய பணவாக்கம் இவற்றிலிருந்து கடன்நிதி அளிக்கப்படுகிறது. கடன் நிதிக்கு நடப்பு சேமிப்பு ஒரு நல்ல தோற்றுவாயாக இருக்க முடியாது. ஏனெனில் சமுதாயத்தின் வருமானம் குறைவாகையால் சேமிப்பு நாட்டம் மிகவும் குறைவாகவே இருக்கும். ஆனால் மீட்சிசி காலத்தில் முன்பு பதுக்கப்பட்ட பணம் வெளியிடப்படும்; தற்போது பத்திரங்கள் பொருட்கள் பணத்திற்குப் பதிலாகவே விரும்பப்படுகின்றன. பத்திரங்களின் (Securities) விலை அதி

கரிக்கும்; எனவே வட்டி விகிதம் குறையத் தொடங்கும். எனினும் வணிகச் சுழற்சியின் இந்த நிலையில் கடன் நிதியின் அளிப்பு முக்கியமாக கடனுக்கத்திலிருந்துதான் (Credit-creation) வருகிறது. மந்த காலத்தில் பணம் பதுக்கப்படுவது மட்டு மல்லாமல் கடனைத் தீர்ப்பதன் மூலம் அழிக்கவும் படுகிறது. கடனடைப்பின் காரணமாக வணிக வங்கி மற்றும் மத்திய வங்கிகளின் பண இருப்பின் அளவு மிகவும் அதிகமாக இருக்கும். இதனால் மிகவும் குறைந்த வட்டி வீதத்தில் கடன் நிதியின் அளிப்பு மிகவும் நெகிழ்ச்சியுடையதாக இருக்கும்.

பொருள் உற்பத்தித் துறையை எடுத்துக்கொண்டால் உற் பத்திச் சாதனங்களும் உழைப்பும் வேலையின்றிச் சோம்பிக் கிடக் கின்றன. பலதரப்பட்ட தொழில்களில் உழைப்பு வேலையின்றி இருக்கிறது. தற்போது உழைப்பின் அளிப்பு அதிக நெகிழ்ச்சி உடையதாக இருக்கிறது. ஊதியத்தில் அதிகரிப்பு இல்லாம லேயே பல தொழில்களில் உழைப்பாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கலாம். பல நிறுவனங்கள் தகு அளவு (Optimum level) உற்பத்திக்குக் குறைந்த நிலையிலேயே செயல்பட்டு வந்திருப்பதால் பயன்படுத்தப்படாத தொழில் சக்திகள் இருக்கின்றன. இந்த நிலையில் உற்பத்தி உயரும் போது முதன்மைச் செலவு பல பொருட் களின் மீது பரவலாக்கப்படுவதால் தனி ஒரு பொருளின் ஆக்கச் செலவு குறைந்து இலாபம் உயரத் தொடங்குகிறது.

குறைந்த வட்டி விகிதம். குறைந்த ஊதியம். குறைவான ஆக்கச் செலவு போன்ற அனைத்துக் காரணிகளும் முதலீட்டு வாய்ப்பினை அதிகரிக்கச் செய்கின்றன. எதிர்பார்க்கப்பட்ட இலாபம் வட்டி விகிதத்தைவிட அதிகமாக இருக்கும் நிலையில் முதலீடு அதிகரிக்கச் செய்கிறது. கீழ்த் திருப்பு முனையில் வட்டி விகிதம் லாப விகிதத்தைவிடக் குறைவாக இருக்கும் நிலையே இருக்கிறது. இதன் காரணமாக சுழற்சியின் அடுத்தகட்டமாகிய அதிக அளவு முதலீட்டுக் காலம் விரைந்து ஏற்படத் தொடங்கு கிறது.

மேல் வீச்சு (The upswing)

பதுக்கல் மற்றும் புதிதாக ஆக்கப்பட்ட பணத்தின் துணை கொண்டு முதலீடு பெருக்கப்படுவதால் நாட்டு வருமானம் உயரத் தொடங்குகிறது. நாட்டில் புதிய முதல் சொத்துகள் ஆக்கப் படுகின்றன. புதிய தொழிற்சாலைகள், எந்திர சாதனங்கள், சாலை அமைப்பு, இரயில் அமைப்பு, கட்டடங்கள் போன்றவை புதிதாகப் படைக்கப்படுகின்றன. இவ்வகையான முதலீட்டுப் பொருள்களை

உற்பத்தி செய்யும் தொழில்களில் நிறைய உழைப்பாளர்கள் வேலைக்கு அமர்த்தப்படுகின்றனர். இவர்கள் தாங்கள் பெறும் வருமானத்தில் பெரும் பகுதியை நுகர்வுப் பொருட்களுக்குச் செலவிடுவர். தொழிலாளர்களிடையே சேமிப்பு நாட்டம் பொதுவாகக் குறைவாக இருக்கும். தொழிலாளர்களால் செலவிடப்படும் வருமானம் மற்றவர்களுக்கு வருமானமாகி, மீண்டும் அவர்கள் செலவிடும்போது அது மற்றவர்களுக்கு வருமானப் மாகிறது. இது தொடர்ச்சியாகச் சென்று மொத்த வருமானத்தை பல மடங்காக்குகிறது. இந்த விளைவைத்தான் பெருக்கி விளைவு (Multiplier effect) என்கிறோம்.

முதலீடு பெருகி நாட்டு வருமானம் கூடுவதால் நாட்டின் மொத்த நுகர்ச்சி அதிகரிக்கிறது. இந்த அதிகப்படியான நுகர்ச்சியைப் பூர்த்தி செய்ய நுகர்ச்சிப் பொருளின் உற்பத்தியைக் கூட்ட வேண்டும். வணிகச் சுழலின் மேல் நிலையை நெருங்க நெருங்க தொழில்கள் முழு அளவுத் திறனில் இயங்கிக் கொண்டிருக்கும். எனவே அதிகமான நுகர்வுப் பொருள்களை உற்பத்தி செய்ய அவற்றின் சக்தி போதுவதில்லை. எனவே புதிய தொழிற் சாலைகள், எந்திரக் கருவிகள் படைக்கப்பட வேண்டிய நிலை ஏற்படுகிறது. பொருட்களுக்கான தேவை பெருகுவதால் விலையும் உயரத் தொடங்குகிறது. இந்த விலை உயர்வு இலாப வாய்ப்பினை அதிகப்படுத்துகிறது. எனவே புதிய முதலீடுகள் அதிகரிக்கும். இவ்வாறு நுகர்ச்சி அதிகரிப்பின் விளைவாக புதிய முதலீடுகள் பலமடங்கு அதிகரிப்பதை நாம் வேகப்படுத்தி விளைவு (Acceleration effect) என்கிறோம்.

முதலீடு பெருகி வருமானம் பல மடங்கு கூடுகிறது; வருமானம் அதிகரிப்பால் நுகர்ச்சி அதிகரித்து முதலீடு விரிவடைகிறது. திரும்பவும் முதலீட்டு விரிவால் வருமானம் உயர்ந்து பிறகு நுகர்ச்சி அதிகரித்துப் பிறகு முதலீடு கூடுகிறது. இவ்வாறு பெருக்கி, வேகப்படுத்தி இவைகளின் கூட்டு விளைவால் சுழலின் மேல்வீச்சு அதிக சக்தியைப் பெற்றுப் பொருளாதாரத்தைச் சுழலின் உச்சகட்டமாகிய செழிப்பு நிலைக்கு (Boom) எடுத்துச் செல்கிறது. செழிப்பு நிலையில் உற்பத்திக் காரணிகள் முழு வேலை நிலையை அடைகின்றன. பொருளாதார நடவடிக்கைகள் உச்ச நிலையில் இருக்கின்றன. நாட்டின் வருமானம் உயர்ந்த எல்லையை எட்டுகிறது.

இவ்வாறு மந்த நிலையில் இருந்த பொருளாதாரம், படிப் படியாக முதலீடு உயரத் தொடங்கியதன் காரணமாக மீட்சிநிலை ஏற்பட்டு மீட்சி நிலையிலிருந்து பொருளாதார சக்திகள் ஒரு வேக

நிலையை அடைந்து பொருளாதார செழிப்பு அல்லது பூரிப்பு மட்டத்தை எய்துகிறது.

சரிவும் மந்தமும் (Recession and Depression)

செழிப்பின் உச்சக்கட்டத்தில் பொருளாதாரம் முழு வேலை நிலை எய்துகிறது. அப்போது உற்பத்தியாளர்கள் முதலீட்டை மேலும் மேலும் அதிகரிக்கின்றனர். விலைகள் உயர்ந்து செல்வதால் எதிர்பார்க்கப்பட்ட வருமானம் (prospective yields) அதிகமாக இருக்கும். முதலின் இறுதிநிலைத்திறன் அதிகமாக இருக்கும். எனவே முதலீடு அதிகரிக்கிறது. ஆனால் முழு வேலை நிலையில் பண முதலீடுதான் அதிகரிக்குமேயொழிய உண்மை முதலீடு அதிகரிக்க முடியாது. மூலதனப் பொருள் உற்பத்தியில் அதிக முதலீடு ஏற்பட்டால் நுகர்வுப் பொருள் உற்பத்தியில் முதலீடு குறையும்; அல்லது நுகர்வுப் பொருள் உற்பத்தியில் முதலீடு அதிகரித்தால் மூலதனப் பொருள் உற்பத்தியில் முதலீடு குறையும். ஏனெனில் ஒரு தொழிலில் அதிகக் காரணிகளை, உதாரணமாக உழைப்பாளர்களை வேலையில் அமர்த்த வேண்டுமென்றால் பிற தொழில்களில் வேலையில் அமர்ந்திருக்கும் உழைப்பாளர்களைத் கொணர வேண்டும். இவ்வாறு ஒரு தொழிலின் விரிவாக்கம் மற்றொரு தொழிலை பாதிக்கும்; பொருளாதாரம் ஒரு சமன்கேடு நிலையை அடைகிறது.

உற்பத்தியாளர்களுக்கிடையே இன்ப நோக்கு (Optimism) நிலவுகிறது. இதன் காரணமாக முதலீடு மிகவும் அதிகரிக்கும். உண்மை முதலீடு அதிகரிக்க முடியாது. எனவே அதிகரிப்பது பண முதலீடுதான். முழு வேலை நிலையில் பண முதலீடு அதிகரிப்பதால் உற்பத்தியாளர்களிடையே உற்பத்திக் காரணிகளைப் பெறுவதில் கடும் போட்டி நிலவும். இதனால் உற்பத்திக் காரணிகளுக்குக் கொடுக்கப்படும் ஊதியம் அதிகரித்து ஆக்கச் செலவுகள் கூடும். எனவே விலைகள் உயரத் தொடங்குகின்றன. இந்த நிலையில் அரசு கடன் ஆக்கத்தைக் கட்டுபடுத்தத் தொடங்கும். மத்திய வங்கி வட்டி விகிதத்தைக் கூட்டும். இதைத் தொடர்ந்து மற்ற வணிக வங்கிகள் வட்டியை உயர்த்தும். அரசு வெளிச்சந்தை நடவடிக்கை (Open market operation) மூலம் பண அளவைக் குறைக்க ஆரம்பிக்கும். கடன் கட்டுப்பாடு உற்பத்தியாளர்களின் மனப் போக்கை மாற்ற ஆரம்பிக்கிறது. நுகர்வோர் நுகர்ச்சியைக் குறைக்க ஆரம்பிப்பர்; பழைய கடன்கள் அடைக்கப்படுகின்றன. விலைகள் சரிய ஆரம்பிக்கின்றன. உற்பத்தியாளர்களின் மனநிலை இன்ப நோக்கிலிருந்து துன்ப நோக்கை அடைகிறது. கடன்

கட்டுபாடு, விலைகளின் சரிவு இலாப வாய்ப்பை நீக்குகின்றன. எனவே முதலீடு குறையத் தொடங்குகிறது.

முதலீடு குறைவதால் நாட்டு வருமானம் குறைந்து நுகர்ச்சியும் குறைகிறது. இதனால் பெருக்கியும் வேகப்படுத்தியும் பின்நோக்கி செயல்படத் தொடங்குகின்றன. இந்த நிலையில் பொருளாதாரத்தின் சமநிலை கேடுறுகிறது. பொருளாதாரம் சரிவுத்தன்மை அடைகிறது.

சரிவு நிலையில் பொருளாதாரம் மேலும் மோசமான தன்மையை அடைந்து மந்த நிலையை அடைகிறது. மொத்தத் தேவை குறைவதால் தொழில் நிறுவனங்கள் உற்பத்தியைக் குறைத்து முழுச் சக்திக்குக் குறைந்த நிலையில் செயல்படுகின்றன. குறைவான உற்பத்திக்குக் குறைவான காரணிகளே கோரப்படுகின்றன. எனவே உழைப்பு மற்ற காரணிகள் வேலை நீக்கம் பெறுகின்றன. வேலை நீக்கத்தால் காரணிகளின் வருமானம் இழக்கப்படுகிறது. இதனால் பொருள்களுக்கான தேவை மேலும் குறைந்து தொழில் நிறுவனங்களின் உற்பத்தியை மேலும் குறைக்கும்; உற்பத்திக் குறைப்புக் காரணிகளை வேலையிலிருந்து விரட்டும். இந்த நிலையில் தொழில் நிறுவனங்கள் எந்திர சாதனங்களைப் பழுது பார்ப்பதோ, செயலிழந்த எந்திரங்கள் மாற்றப்படுவதோ இல்லை. புதிய எந்திரங்கள் வாங்குவதுபற்றிய பிரச்சினையே கிடையாது. இதனால் மூலதனப் பொருட்களை உற்பத்தி செய்யும் நிறுவனங்களின் உற்பத்தி அறவே நிறுத்தப் பட்டுச் செயலிழந்து விடுகின்றன. மூலதனப் பொருட்கள் உற்பத்தி செய்யும் நிறுவனங்களின் தொழிலாளர்கள் பாதிக்கப்படுகின்றனர். வங்கியின் ரொக்க இருப்பு அதிகரித்து வட்டி விகிதம் குறைவாக இருப்பினும் இலாப விகிதம் அதைவிடக் குறைவாக இருக்கிறது. உற்பத்தியாளர்களின் மன நிலையும் துன்ப நோக்குடையதாக மாறி விடுகிறது. இதன் காரணமாக நாட்டின் மொத்த முதலீடு மிகவும் குறைந்த நிலையை அடைந்து பொருளாதார நடவடிக்கைகளும் நாட்டு வருமானமும் மிகத் தாழ்ந்து விடுகின்றன. பொருளாதாரத்தில் வேலையின்மை அதிகமாகக் காணப்படுகிறது. பொருளாதாரம் மந்த நிலையில் சிக்குண்டு அவதியுறுகிறது.

இந்த மந்தநிலை பொருளாதாரத்தில் நிரந்தரமாக இருக்கப் போவதில்லை. மந்தநிலை மாறித் திரும்பவும் மீட்சி நிலை ஏற்படும். மீட்சிநிலை வேகமடைந்து பொருளாதார பூரிப்பு நிலை ஏற்படும். இவ்வாறு வணிகச் சுழற்சியில் ஒரு நிலைமாறி அடுத்த நிலையை அடைகிறது. சுழற்சி ஏற்பட்டுக்கொண்டே இருக்கும்.

முடிவு (Conclusion)

வாணிகச சுழற்சி பற்றிய இந்த ஆய்விலிருந்து நாம் பெறும் உண்மை என்னவெனில் முதலாளித்துவ அடிப்படையில் அமைந்த ஒரு பொருளாதாரத்தில் இந்த வாணிகச் சுழற்சி தவிர்க்க இயலாத ஒன்றாகும் என்பதே. தொழில் சுதந்திரம் உள்ள சமுதாயத்தில் தனியார் துறை இலாபக் குறிக்கோளோடு இயங்கும். இலாபம் உண்டெனில் முதலீடு அதிகரிக்கும்; இலாபம் இல்லையெனில் முதலீடு குறையும் அல்லது மறையும் சமுதாயத்தில் இவ்வாறு முதலீடு குறைவதும் கூடுவதும் நல்லதல்ல. இந்த நிலைமாறி பொருளாதாரம் நிலைபட வேண்டுமாயின் அரசின் கட்டுப்பாடு அவசியம். மந்த நிலை மாறி மீட்சி ஏற்பட வேண்டின் முதலீட்டுத் துறையில் அரசின் குறுக்கீடு அவசியம் எனக் கீன்ஸ் கூறுகிறார். அவர் தத்துவப்படி முதலாளித்துவ நாட்டில் அரசின் ஈடுபாடில்லாமல் முழுவேலை நிலையை அடைய முடியாது. அரசாங்கம் இலாபநோக்குடையதல்ல. எனவே மந்த காலத்தில் இலாபம் இல்லையெனினும் அரசு அதிக அளவு பொதுப்பணிகளில் முதலீடு செய்யும். அரசின் நோக்கம் தனி நலமல்ல, பொதுநலமாகும். அரசின் முதலீட்டால் மொத்தத் தேவை உயர்ந்து பொருட்களின் விலை உயரும். தனியார் முதலீடு செய்யாமலிருந்ததை ஈடு செய்யும் வகையில் பொது முதலீடு ஏற்படுகிறது. இதையே ஈடு செய்யும் பொதுச் செலவென்பர் (Compensetary public-expenditure). பொது முதலீட்டால் விலைகள் உயரும் போது தனியார் முதலீட்டிற்கு இலாப வாய்ப்பு ஏற்படுகிறது. எனவே தனியார் முதலீடு சமுதாயத்திற்கு வருகிறது. இவ்வாறு மீட்சி நிலையில் அரசின் முதலீடும் தனியார் முதலீடும் சேர்ந்து நாட்டு வருமானத்தையும் வேலையையும் விரைவாக உயர்த்தும். ஆனால் அரசாங்கம் படிப்படியாகத் தன்னுடைய முதலீட்டைக் குறைத்துக் கொள்ள வேண்டும். இல்லையெனில் மொத்த முதலீடு தேவைக்கு மேல் அதிகரித்துச் சமுதாயத்தில் வீக்கத்தை ஏற்படுத்தி விடும். இந்த நிலையில் அரசின் பொறுப்பு விரைந்து அதிகரிக்கும், தனியார் முதலீட்டை நெறிப்படுத்துவதாகும். இவ்வாறு முதலாளித்துவ நாட்டில் ஏற்படும் வணிகச் சுழற்சியைக் கட்டுப்படுத்துவதில் அரசு பெரும் பங்கு வகிக்கிறது. அரசு கட்டுப்பாடில்லாவிட்டால் சுழற்சி தொடர்ந்து ஏற்பட்டுப் பொருளாதாரத்தைச் சீர்குலைத்து விடும்.

14. பணவாக்கக் கைக்கோள்

(Monetary Policy)

பண்டமாற்று முறையை அடுத்துப் பணம் கையாளப்பட்ட போது பணம் ஒரு மாற்றுச் சாதனமாகவும் மதிப்பளவாகவும் செயல்பட்டு நடு நிலையாகவே இருந்தது. எந்த நோக்கங்களுக் காகப் பணம் பயன்படுத்தப்பட்டதோ அந்நோக்கங்கள் மட்டும் நிறைவேற்றப்பட்டன. சேமிப்பும், முதலீடும் சமமாக இருக்க முடிந்தன. ஏனென்றால் எந்த அளவிற்கு முதலீடு தேவைப் பட்டதோ அந்த அளவிற்குத் தான் சேமிப்பும் இருந்தது. உற்பத்தி அளவிற்குத் தகுந்தாற்போல்தான் தேவையும் ஏற்பட்டிருந்தது. சமுதாயத்தில் உற்பத்தியும் (out-put), வாழ்க்கைத்தரமும் குறை வாக இருந்ததால் பொருளாதாரத்தில் ஏற்ற இறக்கங்கள் இல்லை. இந்த அளவிற்குப் பொருளாதார அலைவு அற்ற பண்டைய சமுதா யத்தில் பணம் ஒரு நடுநிலைக் கருவியாகவே பயன்பட்டது.

ஆனால் தற்காலத்திய (சிக்கல்கள் நிறைந்த) பொருளாதா ரத்தில் பணம் தனது பணிகளை மட்டும் செய்யாது வரம்பு மீறித் தேவையற்ற பணிகளிலும் ஈடுபடுகிறது. இன்றைய, பொருளா தாரத்தில் தேவையை எதிர்நோக்கி உற்பத்தி செய்யப்படுகிறது; இதனால் பிழையான கணக்கு பல நேரங்களில் ஏற்பட்டு விடு கிறது. சிறப்புத் தேர்ச்சியும் (Specialization), வேலைப் பகிர்வும் பெரும் அளவில் நடைபெறுகின்றன; சேமிப்பும் முதலீடும் தனித் தனியாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு பிரிவும் ஒவ்வொரு தொகுப் பால் (Group) ஆளப்படுகிறது. இதனால் சமன்பாடு நிலவுதல் எதிர்பார்க்க முடிவதில்லை. இன்னும் இது போன்று பல வேலைப் பாடுகளைப் பணம் செய்கின்றது. இதன் விளைவு, நாட்டு வருமானம் மாற்றம் அடைகிறது; வேலை வாய்ப்பு அளவு வேறுபடுகிறது; நுகர்ச்சிப் பொருளின் தேவையில் மாற்றம் ஏற்படுகிறது; உற்பத்திப் பொருள்களின் அளவு, சேமிப்பு, முதலீடு ஆகியவை களிலும் மாற்றம் காணப்படுகிறது. இவ்வித மாற்றங்களோ, வேறுபாடுகளோ ஒரு முழு வேலை மட்ட நிலையை அடைந்த பொருளாதாரத்திற்கு உகந்ததல்ல. ஆனால் இவ் வகை மாற் றங்கள் பண உலகில் ஏற்படத்தான் செய்கின்றன; தவிர்க்க

முடிவதில்லை. பணம் எந்த நன்மைகளை அடையப் பயன்படுத்தப் பட்டதோ அவைகளை மட்டும் அடையாமல், மேற் கூறியபடி தீமைகளையும் தேடித் தருகிறது. ஆனால் அத் தீமைகளைக் களையத்தான் பணவாக்கக் கைக்கோள் பயன்படுத்தப்படுகிறது.

பணவாக்கக் கைக்கோளின் முக்கிய நோக்கம், விலைவாசி மட்டத்தைக் கட்டுப்படுத்தி ஒழுங்குபடுத்துவதும், ஒரு நாட்டிற்குத் தேவையான அளவு பணத்தை வெளியீடு செய்வதும், காலத்திற்கேற்றாற்போல் பணத்தைப் பெருக்குவதும் சுருக்குவதும் ஆகும். மேலும் சமுதாயத்தில் பயன்படும் பொருள்களின் உற்பத்தியைப் பெரும் அளவிற்குக் குறைந்த கீசலவில் கொண்டு வந்து சமமாகப் பகிர்வது தான் பணவாக்கக் கொள்கையின் முடிவான நோக்கமாக இருக்க முடியும் என எல். வி. சாண்டலர் (Lester V. chandler) கூறுகிறார். ஆனால் சமுதாயத்தில் எல்லா முடிவுகளையும் பணவாக்கக் கொள்கையினால் மட்டும் அடைய முடியாது; அக் கொள்கை ஒரு கருவியாக மட்டும் பயன் படலாம் என்று கூறுகிறார். பணவாக்கக் கொள்கையின் நோக்கங்களை இனி விரிவாகக் காண்போம்.

பொருள் வடிவில் ஒரு பணத்தின் அலகு நிலைபேராக்கம் செய்யப்படுதல் :

ஒரு பொருளின் வடிவிலோ, ஒன்றுக்கு மேற்பட்ட பொருள் களின் வடிவிலோ அமைந்த பணத்தின் அலகு நிலைபேருக்கம் செய்யப்படுவதுதான் பணக் கொள்கையின் முதலாவதான நோக்கமாகும். அப்பண்டங்கள், பொதுவாக, பொன்னாக அல்லது வெள்ளியாக அல்லது இரண்டு உலோகங்களாக இருக்கலாம்: பொன் திட்டத்தில் பொன் நாணயத்தின் முகமதிப்பும் அதில் உள்ள பொன் உலோகத்தின் சந்தை விலையும் சமமாக இருக்கும். இதே போல் வெள்ளித் திட்டத்தில் வெள்ளிப் பணத்தின் மதிப்பு சந்தை விலைக்கு ஏற்றாற்போல் நிலை பெற்றிருக்கும். இரு உலோக முறையில் இரண்டு உலோகங்களின் மதிப்பிற்குச் சமமாக பணத்தின் அலகு மதிப்பிடப்பட்டிருக்கும். இப்படியாகப் பணத்தின் மதிப்பு நிலையானதாக இருக்கவேண்டுமென்றால் பண வெளியாக்கம் மிகையாக இருக்கக் கூடாது. மிகையாக இருந் தால் மதிப்புத்தானாகவே விழ ஆரம்பித்துவிடும். சம நிலை பொருளாதாரத்தில் காண முடியாது. இதே போல் பண வெளி யாக்கம் மிகவும் குறைக்கப்பட்டால் உலோக மதிப்பு உயரத் தொடங்கும். இதனால் பொருளாதாரத்தில் சிக்கல்கள் விளையும் பண வெளியாக்கம் ஒரு தகு அளவில் (Optimum) இருந்தால் பொருளாதாரமும் ஒரு நிலையில் இருக்க இடமுண்டு. சமுதாய ஏற்றத்தாழ்வுகளும் குறைக்கப்பட முடியும்.

பணத்தின் மதிப்பு நிலையானதாக மட்டும் இருந்தால் போது மானதல்ல. வாணிபம்-உள்நாடு மற்றும் வெளிநாடு-உந்தப்பட வேண்டும். உள்நாட்டு வாணிபம் பெருகி, பன்னாட்டு வாணிபம் தடைபட்டால் பணமதிப்பு நிலைபேருக்கத்தால் பலன் கிடையாது. இருவகை வாணிபமும் தடையில்லாமல் நடைபெறவேண்டும். அதுதான் பணவாக்கக் கொள்கையின் நோக்கமாகவும் இருத்தல் வேண்டும். இவ்வகை நோக்கம் பொன்திட்டம், வெள்ளித் திட்டம் ஆகிய திட்டங்கள் ஆளப்பட்டபோது அடையப்பட்டது. பொன்திட்டத்தில் நாணயமாற்று வீதம் பன்னாட்டு அளவில் தானாகவே சரிசெய்யப்பட்டு வாணிபம் தடையின்றி நடைபெற்று வந்து இருக்கிறது. பன்னாட்டு அளவில் பொன்திட்டத்தினால் ஏற்படும் நன்மைகளைப்பற்றிப் பணத் திட்டங்கள் என்ற அத்தியா யத்தில் விரிவாகக் கண்டோம். உள்நாட்டு அளவிலும் பொன் திட்டத்தினால் பணவீக்கம், பணவாட்டம் போன்ற பணத்துறைக் கோளாறுகள் நீக்கப்படுகின்றன எனவும் கண்டிருக்கிறோம். ஆனால் பணத்தின் அலகை நிலைபேருக்கம் செய்தால் மட்டும் பணக் கொள்கையின் நோக்கம் நிறைவேறாது. வேறு பல நோக்கங்களும் நிறைவேற வேண்டும்.

விலைமட்டமும் பணக்கைக்கோளும் :

பணவாக்கக் கைக்கோளின் நோக்கம் எதுவாக இருந்தாலும் விலைமட்டத்தில் முக்கிய பங்கு கொள்வதுதான் அதன் சிறப்பாகக் கருதப்படுகிறது. மூன்று வகைகளில் அதன் பங்கு உணர்த்தப் படுகிறது. (1) விலைமட்டத்தை நிலைப்படுத்துதல். (2) விலை வாசி படிப்படியாக உயர்வதை ஊக்குவித்தல். (3) விலைமட்டத் தைக் குறைக்க முயற்சித்தல்.

(1) விலைமட்டத்தை நிலைப்படுத்துதல் :

விலைவாசி மாறுவதால் உற்பத்தியிலும் வருமானத்திலும் மாற்றம் காணப்படுகிறது. உற்பத்திப் பெருக்கு, விலைமட்டம், உயர்வால் உந்தப்படுகிறது ; அதனால் வேலை வாய்ப்பும் பெருகு கிறது. விலைமட்டம் உயர்ந்தாலும், குறைந்தாலும் வருமானம் பங்கீட்டில் (Distribution of income) விளைவு (effects) உண்டா கிறது. விலை உயர்வால் வணிகர்களும் தொழில் முனைவோர்களும் பயன் அடைவர். ஆனால் ஒரு நிலையான சம்பளம், கூலிவாங்கும் சமுதாயம் அதுபோன்று பயன் அடைய முடியாது. மாறாக விலை மட்டம் குறைந்தால் உற்பத்திப் பாதிக்கும் ; வாணிகர் மற்றும் பலர் கஷ்டத்தை அடைவர் ; ஆனால் ஒரே அளவான சம்பளம் வாங்குவோர் பயன் அடைவர் ; இதன் விளைவு, வருமானம்,

சமுதாயத்திடையே பரவலாக, சமமாக இருக்காது. ஏற்றத் தாழ்வுகள் மிகையாகக் காணப்படும். பொதுவாகக் கூறின் முழு வேலை மட்டம் எய்திய ஒரு நாட்டில் விலைமட்டத்தில் உயர்வோ, தாழ்வோ விரும்பத்தக்கதல்ல. எது நிலவினாலும் சமுதாயத் திற்குக் கேடே.

விலைவாசி உயர்வினால் உற்பத்தி பெருகினாலும் ஒரு நிலையான விலை மட்டத்தினால் வாணிகர்களுக்கு நன்மைகள் இல்லாமலில்லை. பணத்தின் மதிப்பு நிலைப்படுத்தப்பட்டால் முன்னேக்கிய ஒப்பந் தங்களும், பேரங்களும் நடைபெற முடியும். ஏனென்றால் பணத்தின் மதிப்பு எதிர்காலத்தில் இப்படித்தான் இருக்குமென்ற நம்பிக்கை பிறந்துவிடுகிறது. பணம் ஒரு மாற்றுச் சாதனமாகவும், மதிப்பளவையாகவும் இருக்கவேண்டும் என்ற நோக்கத்துடன் பயன்படுத்தப்பட்டதால் அது பொருளாதாரத்தில் நடுநிலையாக இருந்து உற்பத்தியையோ, வருமானம் பங்கீடு செய்வதையோ பாதிக்காமல் இருக்க வேண்டும்.

(2) விலைவாசி உயர்வுக் கோட்பாடு :

முழுவேலை வாய்ப்பளிப்பதை ஊக்குவிப்பதும் நாட்டின் பொருளாதாரத்தை வளர்ச்சி அடையச் செய்வதும் பணவாக்கக் கொள்கையின் நோக்கமென்றால் அது படிப்படியான விலைவாசி உயர்வை ஆதரிக்க வேண்டும். ஏனென்றால் விலைமட்ட உயர்வு உற்பத்தியைப் பெருக்குகிறது. கீன்ஸின் கூற்றுப்படி நாடு முழு வேலை வாய்ப்பு நிலையை அடையுமுன் உற்பத்தி பெருகப் பெருக விலையும் உயர்ந்துகொண்டே போகும். ஆனால் இவ்வுயர்வு ஒரு வளரும் நாட்டில் ஏற்படத்தான் செய்யும். அதனால் பொருளா தாரத்திற்கு நன்மையே தவிர தீமையல்ல. ஆனால் முழுவேலை வாய்ப்பு நிலையை அடைந்தவுடன் உற்பத்தி குறைய ஆரம்பிப் பதால் தேவையைச் சமாளிக்க முடியாததால் பொருளாதாரத்தில் வீக்க நிலை ஏற்படுகிறது. உடனே விலை உயரத் தொடங்குகிறது. இந்த உயர்வு நாட்டிற்குகந்ததல்ல. இதன் விளைவு பணமதிப்பு வீழ்ச்சியடைகிறது. நாட்டின் கடன் சுமை வலுக்கிறது.

(3) விலைவாசி குறைதல் :

விலைமட்டம் குறைவதால் ஏற்படும் ஆபத்து உற்பத்தி குறைவதாகும். அதனால் வேலையில்லாப் பிரச்சினை தோன்றும். முழுவேலை வாய்ப்பு நிலை எய்த முடியாதலால் வாணிபச் சரிவு ஏற்படும். இது பொருளாதாரத்திற்கு மிகக் கொடியதாகும். பணத்துறை அதிகாரிகள், பொருளாதாரத்தில் வீக்க நிலை அல்லது மிகையான வீக்க நிலை நிலவும்போது விலைகுறைப்புக்

கொள்கையைக் கையாளுகின்றனர். விலைகுறைப்புச் செய்வதால் தீமை ஏற்பட்டாலும் அது செய்யப்படுகின்ற நோக்கம் வேறு. உதாரணமாக முதல் உலகப் போருக்கு முன் அமெரிக்க டாலர் இங்கிலாந்து ஸ்டெர்லிங் நாணய மாற்று வீதம் எப்படி இருந்ததோ அதே வீதத்தை 1925-ல் இங்கிலாந்து மீண்டும் பொன் திட்டத்திற்குத் திரும்பியபோது கடைப்பிடித்தது. உண்மையிலேயே அந்த வீதத்தைக் கடைப்பிடித்திருக்கக் கூடாது. ஆனால் ஸ்டெர்லிங் அப்போது பன்னாட்டு அளவில் சிறப்புற்று விளங்கியதால் அதன் மதிப்பு வீழ்ச்சி அடையாது இருக்கும்படி பிரிட்டன் 1925-ல் பொருளாதாரத்தில் வாட்டநிலைக் கொள்கையைக் கடைப்பிடித்தது. அதன் விளைவாக, விலைவாசி குறைந்தது. அஃதே போழ்து வேலையில்லாப் பிரச்சினை பெருமளவிற்கு நிலவியது. இவ்வாறு பணத்துறை அதிகாரிகள் மேற்கொண்ட கொள்கை நீண்ட நாட்களுக்கு பின்பற்றப்படவில்லை. 1931-ல் பொன் திட்டம் பிரிட்டனால் கைவிடப்பட்டது. அதற்குப் பின் வாட்ட நிலைக் கொள்கையைப் பின் பற்றுவது நாட்டிற்கு உகந்ததல்ல என அந்நாடு உணர்ந்தது.

விலை ஏற்றம், விலை இறக்கம், விலை நிலைபேராக்கம் ஆகிய மூன்றிலும் விலை நிலைபேராக்கமே மேல் என மேலே குறிப்பிட்டபடி நன்கு புலனாகிறது. பணவாக்கக் கொள்கையில் விலை நிலைப்படுத்துதல் மூன்று வகையில் திறனாய்வு செய்யப்படுகிறது. முதலில் கூறப்படுவது விலை நிலைப்படுத்துதல் என்ற கொள்கையில் ஒரு தெளிவு இல்லை என்பதாகும். விலை நிலை பேருக்கம் என்றால் எந்த விலை நிலை? சில்லறை விலைகளா (Retail Price)? மொத்த விற்பனை விலைகளா? வாழ்க்கைச் செலவு விலையா? கூலிகளா? பிணையம் விலைகளா (Security prices)? கூட்டு (Composite) விலைக் குறியீடா? இவைகளில் ஏதாவது ஒன்றை நிலைப்படுத்தும்படி கொள்கையைக் கடைப்பிடித்தால் மற்ற விலைகள் கவனிப்பாரற்றுப் போகும். அவைகளில் ஏற்ற இறக்கம் இருக்கும். பொருளாதாரத்தில் குழப்பம் நிலவும் பிறகு பணவாக்கக் கொள்கையின் நோக்கமே தோற்கடிக்கப்படும். இதற்காகத்தான் சில பொருளியல் வல்லுநர்கள் உற்பத்தி செய்யப்பட்ட முடிவுற்ற பொருள்களின் (Finished goods) சராசரி விலைகளை நிலைப்படுத்துதல் வேண்டுமென அறிவுறுத்துகின்றார்கள்.

இரண்டாவதாக, பணத்துறையற்ற(Non monetary) காரணங்களினால் உண்டாகும் விலைமாற்றத்திற்கும், பணத்துறைக் காரணங்களினால் ஏற்படும் விலைமாற்றத்திற்கும் உள்ள வேறு

பாடுகளை விலை நிலைபேருக்கம் சுட்டிக் காட்டுவதில்லை எனத் திறனாய்வு செய்யப்படுகிறது. பணவாக்கக் கொள்கையின் நோக்கம், "உற்பத்திக் காரணிகளின் விலைகளை மட்டும் நிலைப் படுத்தினால் போதுமானது; பொருள்களின் விலைகளை நிலைப்படுத்த வேண்டாம்," எனச் சில பொருளியல் வல்லுநர்கள் கூறுகின்றனர். விலைநிலைப்படுத்துதலினால் விலை ஏற்றம் தடைபடுவதால் உற்பத்தியாளர்கள் மேன்மேலும் உற்பத்தி செய்ய முன் வரமாட் டார்கள். இதே போல் உற்பத்தியில் புதுமுறைகள் கையாண்டு உற்பத்திச் செலவு குறைவதால் விலை இறக்கம் ஏற்பட வாய்ப் புண்டு. ஆனால் விலை நிலைப்படுத்தப்படுவதால் அவ்வித வாய்ப்பும் இழக்க நேரிடும். நவீன உற்பத்தி செய் முறைகளைக் கண்டு பிடிக்க உற்சாகம் ஏற்படாது. இதனால் நுகர்வோர் பாதிக்கப்படுவர்.

மூன்றாவதாகக் கூறப்படுவது நடைமுறைச் சிக்கல்கள் ஆகும். கடன் கட்டுப்பாடு மற்றும் விலைவாசிக் கட்டுப்பாடு ஆகிய இரண்டையும் ஒருங்கே கொண்டு செல்வதென்பது பணவாக்கக் கொள்கையின் நோக்கங்களில் ஒன்றாக இருந்தாலும், நடை முறையில் இயலுமா என்றால் சிறிது ஐயப்பாடுதான்! வங்கி களின் மூலம் கடன் கட்டுப்பாட்டு முறைகளைக் கொண்டு விலைவாசி உயர்வை எந்த அளவிற்கு ஒடுக்க முடியுமோ அந்த அளவிற்கு அதே முறையைக் கொண்டு விலை வாசியை உயர்த்த முடியாது. மேலும் நிலையான விலை மட்டம் எது என்றும் நிர்ணயிக்க முடியாது! போருக்குப் பின் 1922 முதல் 1927 வரை விலை மட்டம் நிலைத்திருந்தது எனப் போர்க் காலத்தை ஒப்பிட்டு நோக்குங்கால் கூறலாம். ஆனால் போருக்கு முன் எந்த விலை மட்டத்தை ஒப்பிட்டுக் கூறுவது?

நடுநிலையான பணக் கொள்கை: (Neutrality of money)

பணத்தின் அளிப்பு, மற்றும் பணச் செலவு ஆகியவைகளை முழு வேலை வாய்ப்பு நிலை அடைந்த நாட்டில் நிலைப்படுத்துதல் நடுநிலைப் பணக் கொள்கை எனலாம். நடுநிலைப் பணக்கொள்கை என்பதை மிகச் சுருங்கக் கூறின், "பணத்தின் அளவு மாறி னாலும் விலை மட்டம் மாறுதிருத்தல் வேண்டும்" என்பதே யாம். இக் கொள்கையை முதன் முதலில் கடைப் பிடித்தவர் விக்ஸ்டீட் (Wicksteed) என்ற பொருளியல் வல்லுநர் ஆவார். அவரைப் பின்பற்றி ஆதரித்தோர் ஜெ. ஸி. கூப்மன்ஸ் (J. C. Koopmans) பேராசிரியர் எ.ப், ஏ. ஹேயக் (F. A. Hayek) மற்றும் டி. எச். இராபர்ட்ஸன் (D. H. Robertson) ஆவர். நடுநிலைப் பணக் கருத்து 'தலையிடாக் கொள்கை'யுடன் ஒட்டிய

கருத்தாகும் என ஜி. என். ஹாம் (G. N. Halm) குறிப்பிடுகிறார். பொருளாதாரத்தைச் சம நிலையில் வைக்கப் பண்டங்களின் விலை வாசியைக் கட்டுப்படுத்தி அல்லலுறுவதை விட நடுநிலைப் பணக் கொள்கையைக் கடைப்பிடிப்பதுதான் சாலச் சிறந்தது எனப் பொருளாளர்கள் கருதுகின்றனர். பணமே உபயோகிக்காமல் பண்ட மாற்று முறையைக் கொண்ட ஒரு பொருளாதாரத்தில் எப்படிப் பேரங்கள் நடைபெறுமோ அவ்வாறு பண முறையைக் கொண்ட ஒரு பொருளாதாரத்தில் பேரங்கள் நடைபெற வேண்டுமென்பது தான் நடுநிலைக் கொள்கையாகும். பணம் ஒரு மாற்றுச் சாதனமாகவும், மதிப்பளவையாகவும் தான் பொருளாதாரத்தில் இயங்கவேண்டுமே தவிர நாட்டின் பொருளியல் நடவடிக்கைகளை ஆட்சி செய்யும் ஆதிக்க சக்தியாக இருக்கக் கூடாது. பல கேடுகளுக்கும் காரணம் பணம்தான் என்றிருப்பதால் அது நடு நிலையாகச் செயல்பட வழி முறைகள் கையாளப் படவேண்டும். அப்போதுதான் பொருளாதாரத்தில் வீக்கமோ, வாட்டமோ ஏற்பட வாய்ப்பிருக்காது. பண்ட மாற்று முறைப் படியே பேரங்களை வாங்கல், விற்றல் என இரண்டாகப் பிரித்து ஒவ்வொன்றும் தனித் தனியாக இயங்கும்படி. பணம் வகை செய்கிறது. புதிதாக மேலும் ஓரளவு பணம் படைக்கப்பட்டால் தேவை அதிகரிக்கிறது. அத் தேவைக்கு உகந்தாற்போல் அளிப்பு உடனடியாகக் கூடுதலாகாது. எனவே விலை மட்டம் மாறுகிறது. இதேபோல் புழக்கத்திலிருக்கும் பணத் தொகையில் ஓரளவு எடுக்கப்பட்டு அழிக்கப்பட்டால் மக்களிடம் வாங்கும் சக்தி குறைகிறது. எனவே, தேவை குறையும். ஆனால் அளிப்பு அதே நிலையில்தான் இருக்கும். விலைமட்டம் மாறுபடும். அதாவது குறையும். ஆகவே தகு அளவிலிருந்து பணம் கூடுதலாகப் படைக்கப்பட்டாலோ, குறைக்கப்பட்டாலோ தேவையும், அளிப்பும் சமநிலையிலிருக்காது. நடுநிலைப் பணக் கொள்கை கடைப்பிடிக்கப்படுதல் மிகவும் இன்றியமையாததாகும். நடு நிலைக் கொள்கை கடைப்பிடிக்கப்படுவதென்பது இறுகக் கட்டிய கயிறு மேல் நடப்பதற்கு ஒப்பாகும் என டி. எச். இராபர்ட்ஸன் கூறுகிறார். கயிறுமேல் நடக்கும் கழைக் கூத்தாடி சிறிதளவு சம நிலையை (Balance) இழந்தால் அவன் நிலை என்னவோ அதே நிலைதான் பணத்துறையினர் நடுநிலைக் கொள்கையைக் கடைப் பிடிக்காவிட்டால் பொருளாதாரத்திற்கு ஏற்படும். பணத்தின் அளவு மாறுமலேயே விலை மட்டம் மாறுவதற்கு வாய்ப்பு உண்டு. பேரங்கள் மக்கள் பெருக்கத்தினால் கூடுதலானால் விலை மட்டம் மாறும். விலை மட்டத்தை நிலைப்படுத்த வேண்டுமானால் பணத்தின் அளவு மாற்றப்பட வேண்டும். ஆனால் நடுநிலைக் கொள்கைப்படி பணத்தின் அளவு நிலையானதால் பொருளாதாரத்திலும் முன்

னேற்றம் காண முடியாது. தொழில் நுட்ப முன்னேற்றத்தால் உற்பத்திப் பெருகினுல் இருக்கக் கூடிய பணம் போதாததால் விலே மட்டம் குறைந்து நாட்டில் வாட்ட நிலே ஏற்படும். வாட்ட நிலே நாட்டின் முன்னேற்றத்திற்குத் தடையாக இருக்கும். ஆனுல் நடுநிலேப் பணக் கொள்கையை ஆதரிப்போர் தொழில் நுட்ப முன்னேற்றத்தாலும், உற்பத்திக் காரணிகளின் வளத் தாலும் உற்பத்திச் செலவு குறைந்து அதனுல் விலே மட்டம் குறைவது நாட்டிற்கு ஆபத்தில்லே எனக் கூறுகின்றனர். பொரு ளாதார வளர்ச்சிக்குத் தடையாக இருப்பதற்குப் பதில் தூண்டு கருவியாகவேயிருக்கும். விலே குறைவதால் மக்கள் நன்மை அடைவர். எனவே நடுநிலேப் பணக்கொள்கையால் எவ்வித ஆபத்தோ, இடர்ப்பாடோ இல்லே எனக் கூறப்படுகிறது.

மேற் சொல்லிய கருத்து நிறைவுப் போட்டியில் வெற்றி கரமாக நடைபெறும். நிறைகுறைப் போட்டியோ பொருளாதா ரத்தில் சிக்கலோ இருந்தால் விலே மட்டம் உடனடியாகக் குறைந்து விடும் எனக் கூறுவது முடியாததாகும். நடுநிலேப் பணக் கொள்கையை ஆதரிக்கும் ஹேயக் போன்ற பொருளாதார வல்லுநர்களின் கருத்துக்களேத் திறனுய்வு செய்து சுட்டிக் காட்டு கிறர் பேராசிரியர் ஹேன்சன் என்பவர். ''ஒரு அலகுப் பொருளின் உற்பத்திச் செலவு குறைவதால் விலேவாசி குறைய வேண்டுமென்ற கட்டாயமில்லே; வாணிகர்களின் சங்கங்கள், தொழில் கூட்டுத் தொகுப்பு (Combinations) முற்றுரிமை ஆகிய வைகளின் மூலம் விலேமட்டத்தைக் குறைக்காமல் செய்ய முடியும்; மைய வங்கியின் மூலம் தனித்தனியாகப் பொருள் களின் விலேயைக் கட்டுப்படுத்த முடியாது; மைய வங்கி வேண்டு மானுல் பண அளிப்பு அளவை நிலேயானதாகச் செய்ய முடியும், இதன் விளேவாக, நாளடைவில் விலே மட்டம் குறையும். ஆனுல் எந்தப் பொருள் மலிவாக உற்பத்தி செய்யப்பட்டதோ அந்தப் பொருளின் விலே குறைய வேண்டுமென்ற கட்டாயமில்லே; இப் பொருள்களின் விலேயைக் குறைக்க வேண்டுமென்று நினேத் தால் மலிவாக உற்பத்தி செய்யப்படாத பொருள்களின் விலே குறைக்கப்பட வேண்டி வரும்.'' (Monetary Theory by G. N. Halm, p. 127).

உற்பத்திப் பெருக்கத்தாலும் ஒரு அலகுப் பொருளின் சராசரி விலே குறையும். அதற்குக் காரணம் நடுநிலேக் கொள்கைதான். இதன் விளேவு வாட்ட நிலேயை உண்டுபண்ணும். இச் செயல் குறுங்காலத்தில் நன்மை இருந்தாலும் நெடுங்காலத்தில்

தீமையையே பயக்கும். உற்பத்தி குன்றிப் போகும். அமெரிக்காவில் 1800-ல் இந்த நிலைதான் இருந்தது. நடுநிலைக் கொள்கையைக் கடைப்பிடித்திருந்தால் இன்று அந்நாடு இந்த அளவிற்கு முன்னேறியிருக்குமா ?

மேலும் மக்கள் பெருக்கத்திற்கேற்பப் பணத்தின் அளவும் பெருக வேண்டும். அப்போதுதான் மக்களின் வாங்கும் திறன் முன்பு போல் இருக்க முடியும். பணப் பதுக்கல் மந்த காலத்தில் அதிகரிப்பதாலும், பணத்தின் சுழல்வேகம் தடைபடுவதாலும் அவைகளை ஈடுகட்ட பணத்தின் அளிப்பு அளவை மிகுதியாக்க வேண்டாமா ? அதாவது பணக் கொள்கையின் தலையிடாக் கொள்கை கைவிடப்பட வேண்டியிருக்கும் ? சுருங்கக் கூறின், வளர்ந்து வரும் நாடுகளில் நடுநிலைப் பணக் கொள்கை வளர்ச்சியைத் தடை செய்யும். வளர்ச்சியடைந்த நாடுகளுக்கு அக் கொள்கை மிகவும் பொருந்தும்.

முழுவேலை மட்டம் எய்துதல் :

இன்றைய உலகில் பல நாடுகளின், குறிப்பாக வளரும் நாடுகளின் பிரச்சினை முழு வேலை மட்ட நிலையை அடைவதாகும். வளர்ந்த நாடுகளில் அடைந்த முழுவேலை அளவை நிலை நிறுத்திக் கொள்வது பிரச்சினையாகும். இந் நோக்கத்தை அடைவது பெரும்பாலும் பணத்துறையினர்களைச் சார்ந்ததாகும். முழு வேலை அளவை அடைந்தாலே விலை மட்டமும், நாணயமாற்று வீதமும் நிலை பேருக்கம் செய்யப் படுகின்றன எனப் பொருளாகும். எனவேதான் வளரும் நாடுகள் முழு வேலை மட்டத்தை அடைவதைப் பணவாக்கக் கொள்கையின் முக்கிய நோக்கமாகக் கொண்டிருக்கின்றன.

முழுவேலை மட்டம் என்றால் என்ன ? எந்தக் காலத்திலும் (Time) எல்லோருக்கும் வேலை வாய்ப்பு அளித்தும், அளிப்பதற்கு ஆவன செய்தும் இருக்கும் நிலைக்கு முழுவேலை மட்டம் எனப் பெயர். தகுதியான வேலை தகுதியுடையவருக்குக் (விருப்புடன் முன்வந்தால்) கிடைத்தல் வேண்டும். ஆனால் நாட்டிலுள்ள அனைவருக்கும் வேலை கிடைக்க வேண்டுமென்ற நிபந்தனையில்லை. தகுதியுடையவர்களில் 3 முதல் 4 சதவீதம் வரை வேலை கிடைக்க வாய்ப்பில்லை என்றாலும் கூட முழுவேலை மட்டநிலை நிலவுகிறது எனலாம். பொருளாதாரத்தில் தொழில் அமைப்பு முறைகள் மாறுவதால் ஏற்படக்கூடிய வேலையில்லாப் பிரச்சினை மூன்று அல்லது நான்கு திங்கள்கள் வரை நீடித்தாலும் முழுவேலை மட்டம் எய்தியாகி விட்டது எனக் கூறலாம். போர்க் காலத்தில்

குழந்தைகள், முதியோர், ஓய்வு பெற்றோர் போன்றவர்கள் நீண்ட நேரங்களுக்கு வேலை செய்வர். அதே நிலை போர் ஓய்விற்குப் பின்னும் நீடிக்கவில்லையென்றாலும் முழுவேலை வாய்ப்பு நிலை இல்லை என்று கூறமுடியாது. உழைப்போர் சமுதாயம் முழுவதும் வேலையில் அமர்த்தப்படுவர் அல்லது ஈடுபடுவர் எனவும் கூறமுடியாது. அதாவது வேலை பார்க்கத் தகுதியிருந்தும் விரும்பாததால் வேலையின்றி வாளாவிருப்பர் பலர். இத்தகைய நிலை இருந்தாலும் நாடு முழுவேலை மட்ட அளவை அடைந்திருக்கிறது எனக் கூறப்படுகிறது. இக்கருத்தைத் தொன்மைப் பொருளாதார அறிஞர்கள் கொண்டிருந்தனர். விருப்புடன் வேலையில்லாதிருப்பதற்குக் (Voluntary Unemployment) காரணமென்ன? சம்பளம், கூலி முதலியன போதாததாலா? இக்கேள்விக்கு "ஆம்" என்று விடையளித்தால் நாட்டில் முழுவேலை மட்டம் நிகழ்வதாகக் கூற முடியாது எனத் தற்காலத்திய பொருளாதாரிகள் கீன்ஸ் போன்றோர் குறிப்பிடுகின்றனர். நிறைவு அளிக்கக்கூடிய வகையில் நடப்பில் என்ன வீதம் சம்பளம், கூலி நிகழ்கிறதோ அதே வீதத்தில் (Rate) கொடுக்கப்பட்டு, வேலை தேடிப் போவார் அனைவருக்கும் வேலை வாய்ப்பு அளிக்கக் கூடிய பொருளாதாரத்தில் முழுவேலை மட்டம் இருப்பதாகக் கூறலாம் என அவர்கள் திட்டவட்டமாகக் கூறுகின்றனர். அமெரிக்காவில் மந்தகாலத்தில் சுமார் 15 மில்லியன் வேலையர்களும் (Workers), வாணிபச் சுழலின் பூரிப்பு காலத்தில் (1937) 7.5 மில்லியன் வேலையர்களும் வேலையின்றி இருந்தனர். இதே நிலைதான் இங்கிலாந்திலும் இருந்தது. வேலையின்றி இருந்தோர் அனைவரும் விருப்புடன் இருந்தனரா என்றால், நிச்சயமாக இருந்திருக்க முடியாது என்றே கூறலாம்! இக்கோட்பாட்டு அடிப்படையில்தான் கீன்ஸ் போன்றோர் முழுவேலை மட்டத்திற்கு விளக்கம் தருகின்றனர். கூடுதலான வேலை வாய்ப்பு அளிக்கப்பட்டால் சம்பளப் பட்டியலின் (Wage bill) தொகையும் அதிகமாக வேண்டும். தொன்மைக் கோட்பாட்டில், எவ்வளவுதான் கூடுதல் வேலை வாய்ப்பு ஏற்பட்டாலும் ஒரு குறிப்பிட்ட சம்பளத் தொகையிலிருந்துதான் அனைத்து வேலையர்கட்கும் பிரித்துக் கொடுக்கப்பட வேண்டும். இதன் விளைவு மறைவு வேலையின்மையும், பகிர்ந்த வேலையின்மையும் (Disguising and distributing Unemployment) காணப்படும். இந்நிலையில் நாடு முழுவேலை மட்டம் அடைந்திருக்கிறது என எப்படிக் கூறுவது என்று இன்றைய பொருளியல் அறிஞர்கள் வினவுகின்றனர். விருப்ப வேலையின்மையும் (Voluntary Unemployment) தொழில் அமைவு மாற்ற வேலையின்மையும் (Frictional Unemployment) ஒரு நாட்டில் இருந்தாலும் அந்நாடு முழுவேலை மட்டத்தில்தான் இருக்கின்றது என்ற கருத்தை இரு சாராருமே ஏற்றுக் கொள்கின்றனர். ஆனால்

இருவரின் கோட்பாடுகளிலும் எந்த அளவில் வேலையின்மை ஏற்பட்டிருக்கின்றது என்பதில்தான் கருத்து வேறுபாடு அமைந்திருக்கிறது. புதிய கோட்பாட்டின்படி மேற்கூறிய வேலையின்மை மொத்த மக்கள் தொகையிலிருந்து 3 முதல் 4 சதவீதம் வரை இருக்கலாம்; ஆனால் தொன்மைக் கோட்பாட்டின்படி, எத்தனை சதவீதம் வேண்டுமானாலும் இருக்கலாம்.

முழுவேலை மட்ட நிலையை அடைவதும், அடைந்ததைச் காப்பதும்தான் பணக்கைக்கொளின் முக்கிய நோக்கமாகும் என முன்பே பார்த்தோம். அந்நிலையை அடைவதோ, காப்பதோ சேமிப்பு மற்றும் முதலீடு என்ற இரண்டு காரணிகளிடமும் இருக்கிறது. முழுவேலை மட்டம் என்ற நிலையில் சேமிப்பிற்கும் முதலீட்டிற்குமிடையே சமன்பாட்டை நிலைநிறுத்துதலே முக்கிய நோக்கமாகும். வாணிபச் சுழலின் பூரிப்பு, மந்தம் என்று இப்படி மாறி மாறித் தொடர்ந்து வந்து கொண்டிருக்கும் நிலையானது ஏற்படுத்தும் விளைவுகளுள் ஒன்று, ஒவ்வொரு எட்டு ஆண்டுகளிலும் இரண்டு அல்லது மூன்று ஆண்டுகளில் நாட்டின் பெரு வாரியான முதலீடு திணிக்கப்படுவதாலேயே யாகும். இதனால் அமைப்புத் தொழில்கள் அவைகளின்மீது சுமத்தப்படும் உச்சமான பொறுப்பை (Peak pressure) நிறைவேற்றும் பொருட்டு அதிக அளவு தொழிலாளர்களையும், மூலதனத்தையும் விரும்புகின்றனர். "முழுவேலை என்பது நாட்டிலுள்ள தொழிலாளர்கள், மூலதனம் யாவும் முழுமையாகப் பயன்படுத்தப்படும் நிலை என்று விளக்கப் பட்டு அந்த நிலையைத் திடப்படுத்த முயற்சி நடக்குமேயானால் அதன் விளைவாக, நாடுதான் ஒவ்வோர் ஆண்டிலும் விரும்பும் அளவிற்கு மேலாகப் பெரும் அளவு முதலீடு செய்வதை வாணிபச் சுழல் முழுவதும் நிறைவேற்றும்" எனக் கிரௌதர் கூறுகிறார். சுருங்கக் கூறின், இத்தகைய முழுவேலை மட்டத்தை அடையும் முயற்சி, பொதுமக்களிடமிருந்து கட்டாய சேமிப்புகளை வருத்திச் செல்லும் நிலைக்குக் கொண்டு செல்லும். இம்மாதிரியான நிலை, நிலைத்த தன்மையற்றும் வாட்டத்திற்கு ஒரு பீடிகை போன்று மிருக்கும். தங்களது வருமானங்களைத் தங்கள் விருப்பம்போல் செலவழிக்க உரிமையுள்ள எந்த நாட்டிலும், நாட்டுப் பொருளாதாரத்தின் இயல்பான வடிவம் (Normal shape). அதாவது, மூலதனப் பொருட்களைச் செய்யும் தொழில்களுக்கும், நுகர்வோர் பொருள்கள் உற்பத்தி செய்யும் தொழில்களுக்கும், இவை இரண்டிற்குமிடையேயுள்ள தொழில்களுக்கும் அளிக்கப்படும் மூலப் பொருளகளின் பங்கீடு (Distribution of resources). பொதுமக்கள் தம் வருமானத்தால் தீர்மானிக்கப்படுகிறது. அல்லது அனைவரும் வேலையில் அமர்த்தப்பட்டால் வரும் வருமானத்தால் தீர்மானிக்கப்

படும். இயல்பான வடிவம் இருக்கும் காலத்திலிருப்பதைவிட, அமைப்புத் தொழில்களில் வேலை பார்ப்போர்களின் எண்ணிக்கை இக்காலங்களில் அதிகமாகவே இருக்கும். எல்லா மக்களையும் வேலையில் அமர்த்த வேண்டுமென்றால் பொருளாதார வடிவத்தை மாற்றியமைப்பதாகும். மக்களின் செலவு செய்யும் மனப் பான்மையை மாற்றிச் சிக்கனத்தைக் கடைப்பிடிக்கும்படி கட்டாயப் படுத்தவேண்டும். கட்டுப்பாடு எதுவுமில்லாத பொருளாதாரத்தில் அமைப்புத் தொழில்களில் முழுவேலை மட்டம் என்பது ஒவ்வாத தாகும். பூரிப்பு, மந்தம் ஆகிய இரண்டும் மாறி மாறி வந்து கொண்டிருப்பதால் ஏற்படும் ஆபத்துகளைத் தவிர்ப்பதுதான் நமது நோக்கமாக இருப்பின், நாம் முழுவேலை மட்டம் என்பதை, எல்லா மக்களையும் அமைப்புத் தொழில்களில் முழுமையாக வேலையில் அமர்த்திக் கொள்ளுதல் என்னும் நிலைக்குச் சற்றுக் குறைவான நிலை என்றே குறிப்பிட வேண்டும். இதையேதான் முன்புள்ள பத்தியில் கண்டோம். "முழுவேலை மட்டம் என்பதைப் பண்டங்களுக்கும், பணிகளுக்குமான பொதுவான தேவையும் (குறிப்பிட்ட பண்டங்கள் பணிகளுக்கான தேவையல்ல), பண்டங்கள், பணிகள் ஆகியவைகளின் பொதுவான அளிப்பும் சமமாக இருக்கும் ஒரு நிலை எள்று" விளக்கலாம். இக்கருத்தே கொள்ளப்பட்டு, பல ஆண்டுகளுக்குக் கடைப்பிடிக்கப்படுமானால், அமைப்புத் தொழில்களில் உபரியாகவுள்ள உழைப்பும், மூல தனமும் சிறிது சிறிதாக வேறு வேலையை நாடிச் செல்லும். இது நடந்தால் முழுவேலை மட்டம் என்பதை அச் சொல்லுக்கேற்ற பொருளிலேயே உணர்த்தலாம். "சேமிப்பிற்கும், முதலீட்டிற்கும் முழுவேலை மட்டப் புள்ளியில் (At the point of full employment) சமன்பாடு உண்டு பண்ணுவதே" பணக் கைக்கோளின் நோக்கம் எனக் கூறலாம்.

முழுவேலை மட்டத்திற்கு அடிப்படையானவைகள் சிக்கனம் (Thriftiness) அல்லது பொது மக்களின் சேமிப்பு நாட்டமும் (Propensity to save) மூலதனப்படைப்பு அல்லது முதலீடுமாகும். வாணிபச் சுழலைக் கட்டுப்படுத்த வேண்டுமாயின் அரசு இவ் வடிப்படைக் கருப்பொருட்களைக் கட்டுப்படுத்த வேண்டும். அரசு கைக் கோளினால் சிக்கனம் மாற்றியமைக்கப்படக் கூடும். எடுத்துக் காட்டாக வருமானங்களை மறு பகிர்வு செய்வதால் இது இயலும். செல்வர்களுக்கு அதிக வரி இடலாம். ஏழைகளுக்குச் சலுகைகளும், உதவியும் செய்யலாம். இதன் விளைவாக, சிக்க னத்தைக் குறையச் செய்யலாம். ஆனால் எல்லாக் காலங் களிலும் இத்தகைய கட்டுப்பாடுகளை அரசாங்கம் சுதந்திர நாடு

களில் கொண்டு வர முடியாது. இதனால் முழுவேலை மட்ட கைக் கோள் செயல்படுவதற்கு முக்கிய வழி முதலீட்டளவே என்பதே யாகும். பண முறைகள் அல்லாது பல வழிகளின் மூலம் அரசாங்கம் முதலீட்டளவை பாதிக்கக் கூடும். பொது மக்களின் நெடுவாழ்வுப் பண்டங்களுக்காகத் தேவை குறையும்போது அரசே நேரடியாகத் தலையிட்டுத் தானே சொந்தமாக முதலீடு செய்யவும் முனையும். அரசு, அமைப்புத் தொழில் திட்டங்களுக் கான உரிமம் வழங்கும் (Licensing) முறையினை ஏற்படுத்தலாம். வரி விதிப்பு ஆயுதத்தையும் பயன்படுத்தலாம்.

முழு வேலை மட்டத்தை ஒரு நாடு எய்தவில்லை – என்றால் அரசு தேவையான அளவு முயற்சி எடுத்துக்கொண்டு புதிய தொழிற் கூடங்கள் நிறுவ ஏற்பாடுகள் செய்ய வேண்டும். நடை முறை சேமிப்புத் தொகையை விட நடைமுறை முதலீடு கூடுத லான அளவிற்கு இருத்தல் வேண்டும். கடன் பணம் படைப்பத னாலும் அல்லது கூடுதலான வங்கி வைப்புகள் படைப்பத னாலும் அல்லது சுழல் வேகத்தை அதிகரிப்பதனாலும் முதலீட்டுத் தொகையை அதிகரிக்க முடியும். முழு வேலை மட்ட நிலையை அடைந்த பின் சேமிப்பும், முதலீடும் சமமாக இருத்தல் வேண்டும். அப்படி இல்லையெனில், சேமிப்பைவிட முதலீடு கூடுதலாக இருந்தால் நாட்டு மெய்யான வருமானம் அதிகரிக்காமல் பொரு ளாதாரத்தில் வீக்க நிலை ஏற்படும்; மாறாக, முதலீட்டை விடச் சேமிப்பு கூடுதலானால் பொருளாதாரத்தில் வாட்ட நிலை ஏற்பட்டு வேலையில்லாப் பிரச்சினை தலை தூக்கும்.

பொருளாதார முன்னேற்றம் :

ஒரு நாடு முழு வேலை மட்டம் அடைந்தால் மட்டும் போதாது. மெய்யாகவே, அதன் விளைவாக, பொருளாதார முன்னேற்றமும் அடைந்திருக்க வேண்டும். பொருளாதாரத்தில் நுகர்வுப் பொருள் உற்பத்தி மக்களின் தேவை அளவுக்கு இருந்தால் நாட்டின் பொருளாதாரம் நல்ல நிலையில் உள்ளது எனலாம் முழு வேலை மட்டம் நிலவி, உற்பத்தியின் அளிப்பு தேவைக்கு ஏற்றபடி இல்லையெனில் பொருளாதார வளர்ச்சி இல்லை என்று கூறலாம். இதே போல், மக்களிடம் கூடுதலான அளவு பணம் புழங்கினாலும் வாழ்க்கைத்தரம் உயர்ந்திருக்கிறது எனச் சொல்ல முடியாது. உற்பத்தியின் அளவும், தரமும் உயர்ந்திருந்தால்தான் பொருளாதார நிலைமை நன்குள்ளது எனலாம். அளிப்பு கூடுத லாக இருந்து அதற்கு நிகராகத் தேவையில்லையென்றாலும் பொரு ளாதாரத்தில் சமன்பாடு காண முடியாது; தொழிற் கூடங்களில் எந்திரத் தொகுப்பு இயக்கமின்றி உறங்கும்; வேலையின்மை

நிலவத் துவங்கும். இதற்கு மாறுக தேவை, அளிப்பை விடச் கூடுதலானால் விலை மட்டம் உயரும்; வீக்க நிலை ஏற்படும். எனவே பொருளாதாரத்தில் ஒரு நாடு முன்னேற்றமடைந்திருக் கிறது என்றால் அந்நாடு முழு வேலை மட்டம் அடைந்து தேவைக்கு ஏற்ப அளிப்பைப் பெற்றிருக்கிறது எனப் பொருள்.

எந்த நாடுகள் பொருளாதாரத்தில் முன்னேற்றமடையாமல் இருக்கிறதோ, அதற்குரிய காரணங்களை ஆய்வு செய்து முன்னேற்றுவதற்கு வேண்டிய வழி முறைகளைக் கையாளுவதே பணவாக்கக் கைக் கோளின் நோக்கமாக இருக்க வேண்டும். இந்தியா, ஸ்ரீ லங்கா போன்ற வளர்ச்சி குன்றிய நாடுகளில் பொரு ளாதார முன்னேற்றம் காணுவது நீண்ட காலப் பிரச்சினையாக இருந்து வருகிறது. இவ்வகை நாடுகளில் மிகுதியான இயற்கை வளங்களிருந்தும் மூலதனம், தொழில் நுட்ப சக்தி போன்றவை பற்றாக் குறையினால் உற்பத்தி பெருகுவதற்கு வாய்ப்பில்லை. வேலையின்மை, குறை வேலை இன்மை போன்ற பிரச்சினைகள் மிக அதிகமாகக் காணப்படுகின்றன. இக் குறைகளைப் போக்கி உற்பத்தியைப் பெருக்குவது தான் முக்கிய பிரச்சினையாக உள்ளது.

நாடு பொருளாதார முன்னேற்றம் அடைவதற்கு ஏதுவாகப் பணத்துறையினர் கீழ்க்காணும் முயற்சிகளை மேற் கொள்ள வேண்டும்.

(1) உள் நாட்டுச் சந்தை விரிவாக்கப்படுதல், சிறப்புத் தேர்ச்சி விடாமல் ஆளப்படுதல், பரிவர்த்தனை நடத்துதல் போன்றவை திறம்பட நிருவகிக்கப்படவேண்டும். இவைகளுக் கான இடையீட்டுக் கருவியான செலாவணி முறையும் முறைப் படி கையாளப்பட வேண்டும்.

(2) பொருளாதார வளர்ச்சிக்குத் தேவையானதும், நெகிழ்வுத் தன்மை கொண்டதுமான அளவுக்குப் பண அளிப்பு பணத்துறையினரால் வெளியிடப்பட வேண்டும். உலோக நாணயங்களுக்குப் பதில் தாள் பணங்களும், தாள் பணங்களுக்குப் பதில் காசோலைகளும், ஏனைய கடன் கருவிகளும் காலப் போக்கில் இடம்பெற வேண்டும். ஆனால் இவைகள் அனைத்தும் தகு அளவில்தான் புழக்கத்திலிருக்க வேண்டும். இல்லையெனில் பொருதாரச் சீர்கேடுகள் விளையும்.

(3) பொருளாதார வளர்ச்சி முதிர்வு அடையும்போது பணவாக்க அமைப்பின் முக்கியத்துவம் குறைகின்றது

பொருளாதார முன்னேற்றத்தின் பிற்பகுதியில் நாட்டின் நிதித் துறையின் ஓர் உறுப்பாகவே பணவியல் துறை ஒன்றிவிடுகிறது. இடைப்பட்ட காலத்தில் நாட்டின் வங்கித் துறையும், நிதித் துறையும் வளர்ச்சியுறுவதற்குப் பணவியல் துறை உறுதுணையாக இருக்க வேண்டும்.

(4) வளரும் நாடுகளில் நிதித்துறை நிறுவனங்களும், வங்கித் துறையும் தேவையான அளவுக்கு வளர்ச்சி பெற்றிருக் காது. நகர்ப் புறங்களில் போதுமான வசதிகள் இருப்பதால் ஊரகப் பகுதிகளில் தேவையான கவனம் செலுத்தப்படவேண்டும். ஊரகங்களில் சேமிப்பு திரட்டப்பட்டு உற்பத்தித்துறையில் ஈடு படுத்தும் முயற்சியில் நிதித்துறை நிறுவனங்கள் ஈடுபடவேண்டும். வேளாண்மையினர், சிறு தொழில் அதிபர்கள், சிறு வணிகர் களுக்குத் தேவையான கடன் வசதிகள் அதிகரிக்கப்பட வேண்டும். அதற்கேற்ப வணிக வங்கிகள் பணியாற்றும் அளவுக்கு மைய வங்கிகள் ஆணையிட்டு வகை செய்ய வேண்டும். அப்படி மைய வங்கிகள் முயற்சி எடுத்துக் கொண்டால் பொருளாதார முன் னேற்ற மடைய ஏதுவாகும்.

(5) வளர்ச்சியுற்றுவரும் நாடுகளில் (அயல் நாட்டுச்) செலுத்து நிலைச் சீர்கேடுகளைத் தவிர்க்கும் வகையில் பணவாக்கக் கைக்கோள் செயலாற்ற வேண்டும். இறக்குமதி, ஏற்றுமதியை விட உயர்விகிதத்தில் செல்வதால் செலுத்து நிலை சமன்பாடு அற்று இருக்கும். செலுத்து நிலையில் உண்டாகும் சீர்கேட்டைத் தவிர்க்கும் நிலையில் பணத்துறையினர் அயல்நாட்டுச் செலா வணியில் நேரடி நடவடிக்கைகளையும், வங்கி வட்டி வீதக் கைக் கோள் போன்ற பழைய கடன் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளையும் மேற் கொள்ள வேண்டும். இவைகள் மேற் கொள்ளப்படா விட்டால் பொருளாதார முன்னேற்றத்திற்கான திட்டங்கள் யாவும் வீணாகி விடும். எனவே, மேற் கூறியவைகளிலிருந்து அறிவதென்ன வென்றால் வளரும் நாடுகளுக்குப் பொருளாதார வளர்ச்சிக்கான சாதனமாகப் பல முறைகளில் முக்கியமான முறை பணவியல் கைக் கோள் மேற் கொள்ளப்பட வேண்டும்.

நாணயமாற்று வீதம் நிலைப்படுத்தப்படுதல் : (STABILISATION OF EXCHANGE RATE)

ஒரு நாட்டின் செலாவணியின் புறமதிப்பை (External Value) மாற்றம் இல்லாது நிலைப்படுத்துதல் பணவாக்கக் கைக்கோளின் மற்றுமொரு முக்கிய நோக்கமாகும். இதன் பொருள் நாட்டின் பொன் இருப்பை (Gold reserve) குறையாமல் பாதுகாப்பதும்,

முடிந்தால் அதிகரிக்கச் செய்வதென்பதுமாகும். பொன்திட்டம், பொற்கட்டித்திட்டம், பொன்மாற்றுத்திட்டம் ஆகியவை கடைப் பிடிக்கப்பட்டபோது எவ்வாறு உள்நாட்டுப் பேரங்களும், பன்னாட்டுப் பேரங்களும் நடைபெற்றன எனப் 'பணத்திட்டங்கள்' என்ற அத்தியாயத்தில் கண்டோம். 1945-முதல் மீண்டும், பன்னாட்டு வாணிபத்திற்கு, பொன் உபயோகப்படுத்தப்படுவதால் செலுத்து நிலையில் இறுதிச் சரிப்படுத்துதல்கள் (Adjustments) அதன் மூலமாகவே செய்யப்படுகின்றன. எனவே, பொன் இருப்பு குறையாமல் பாதுகாக்கப்பட வேண்டியது இன்றியமையாததாகும். இருப்பு குறைந்தால் செலுத்துநிலையில் கோளாறுகள் ஏற்படத் தொடங்கும். பொன் வெளியே சென்று கொண்டிருந்தால் அதைத் தடுத்து நிறுத்த பணவாக்கத் துறையினர் ஆவன செய்ய வேண்டும். பொருள்களின் ஏற்றுமதியைக் கூட்டியும், இறக்கு மதியைக் குறைத்தும் வந்தால் செலுத்து நிலையிலுள்ள சமன் பாட்டின்மை நீங்கிவிடும். அதாவது, பொன் உள்வரும்; வெளிச் செல்வது தடை செய்யப்படும். இதேபோல் மூலதனம் வெளிச் செல்வதையும் தடை செய்யவேண்டும். மேலும் ஏற்றுமதிப் பொருட்களின் அளவைக் குறைக்காமல், விலையை உயர்த்தினாலும் சமநிலைக்கேடு (Disequilibrium) சரி செய்யப்படும்.

பொன் உள் வருவதோ, ஏற்றுமதியை அதிகரிப்பதோ நாட்டின் செலாவணியின் உள் மதிப்பு மற்றும் புறமதிப்பைப் பொறுத்திருக்கிறது. நாட்டுச் செலாவணியின் புறமதிப்பு கூடவோ, குறைந்தோ இல்லாமல் நடுநிலையில் இருக்கவேண்டும். அதாவது, நாணயமாற்று வீதம் நிலைப்படுத்தப்படவேண்டும். நாணயமாற்று மதிப்பளவையிலிருந்துதான் உள்நாட்டு மதிப்பும் நிர்ணயம் செய்யப்படவேண்டும்எனப் பரவலாகப் பொருளாளர்கள் கருதுகின்றனர். தடையிலா நாணயமாற்று வீதம் செயல்படும் போது பணத்தின் அகமதிப்பு, புறமதிப்பைச் சார்ந்திருக்கும். பணத்துறையினரின் கட்டுப்பாட்டுச் செயல் முறைகளினால் இரண்டையும் தனித்தனியாக நிலைப்படுத்த முடியும். பின்வரும் காரணங்களினால் நாணயமாற்றுவீதம் மாறுமல் நிலைப்படுத்தப்பட வேண்டும் எனக் கூறலாம்.

(1) செலாவணி மாற்றுவீதம் நிலைபேறுக்கம் செய்யப் பட்டால் பன்னாட்டு வாணிகம் இலகுவாக நடைபெற ஏதுவாகும். குறிப்பாக, எந்தெந்த நாடுகள் பன்னாட்டு வாணிபத்தை நம்பி யிருக்கின்றனவோ அவைகள் தங்கள் நாட்டுச் செலாவணியின் புறமதிப்பை நிலைப்படுத்துதல் வேண்டும்.

(2) நாணயமாற்று வீதத்தில் அடிக்கடி மாற்றம் ஏற்பட்டால் மக்களிடையே நம்பிக்கை இழக்கக்கூடும். இதன் விளைவு மூலதனம் நாட்டை விட்டுச் வெளிச் செல்லத் தொடங்கும். எடுத்துக் காட்டாக, வங்காள நாட்டு 'தக்கா'வின் (Taka) புறமதிப்பில் ஒரு நிலை இல்லை என்றால் அந்நாட்டு மக்கள் தங்கள் கைவசமுள்ள 'தக்கா' இருப்பையும், குறுங்கால மூலதனத்தையும் வெளிநாடுகளுக்கு எடுத்துச் செல்லத் தொடங்குவர். செலாவணி மாற்று மதிப்பு இறக்கத்தால் ஏற்படக்கூடிய நட்டத்தைத் தவிர்ப்பதற்காக இத்தகைய முயற்சிகளில் ஈடுபடுவர். ஆகவே, ஒரு நாடு தனது நாணயத்தின் புறமதிப்பை நிலைப்படுத்துதல் வேண்டும்.

(3) அயல் நாட்டுச் செலாவணி மாற்று வீதத்தில் அடிக்கடி மாற்றம் ஏற்பட்டால் விரும்பத்தகாத விளைவுகள் ஏற்படும். நாணயமாற்றுச் சந்தையில் (Foreign exchange market) ஊக வாணிகம் ஊக்குவிக்கப்படும். பன்னாட்டுக் கடன் அளிப்பு மற்றும் முதலீடு செய்தல் தடைபடுவதுடன் பாதிக்கவும் கூடும்.

(4) நாணயமாற்று வீதத்தில் ஒரு சிறிய மாற்றம் ஏற்பட்டால்கூட அது மக்களது கவனத்தைப் பெருமளவுக்கு ஈர்க்கும். ஆனால் இதேநிலை உள்நாட்டு விலைமட்டத்திற்கு ஏற்பட்டால் அது புறக்கணிக்கப்படுகிறது.

பொருளாதார நலனையும், சமூக நலனையும் முன்னிட்டு நாணயமாற்று வீதம் மாறுபடாமல் இருக்கச் செய்வது பணத் துறையினரின் முக்கிய பணியாகும். இருந்தாலும் மாற்று வீதத்தை நிலைப்படுத்துதல் பணவாக்கக் கைக்கோளின் நோக்கமாகக் கொண்டிருப்பதை ஒரு சில பொருளியல் வல்லுநர்கள் கண்டிக்கின்றனர். ஏனென்றால் புறமதிப்பை நிலைப்படுத்தும் போது உள்நாட்டு மதிப்பு விட்டுக் கொடுக்கப்படுகின்றது. இதனால் உள்நாட்டு மக்கள் பெரும் இன்னலுக்கு இலக்காகின்றனர். ஒரு நாட்டின் நாணயமாற்று வீதம் நிலைபேருக்கம் செய்யப்படுதல் மற்ற நாடுகளைப் பொறுத்திருக்கின்றது. இன்னும் வெளிப் படையாகக் கூறின் அவைகளின் தயவில் அந்நாடு வாழவேண்டியிருக்கும். ஏதாவது ஒரு நாட்டில் வீக்கமோ, வாட்டமோ நிலவுவதன் காரணமாக, செலுத்து நிலையைச் சரி செய்வதற்காக, பணத் துறையினர் கைக்கோளை உபயோகித்தால் அதன் எதிரொலி இந்த நாட்டிலும் பிரதிபலிக்கும். இதனால் உள் நாட்டின் பொருளாதார நிலையில் பெரிதும் குழப்பம் ஏற்படும். எனவே கண்டிப்பாகக் கூறினால், எந்தெந்த நாடுகள்—ஜப்பான்,

டென்மார்க், இங்கிலாந்து, ஜெர்மனி போன்றவை—பன்னூட்டு வாணிபத்தை முழுவதும் நம்பியிருக்கின்றனவோ அவைகள் மட்டும் நாணயமாற்று வீதத்தை நிலைபேறுக்கம் செய்தால் போதுமானதாகும். ஏனைய நாடுகள் நாணயமாற்று வீதத்தை நிலைப்படுத்துதல் பற்றி முயற்சி எடுக்க வேண்டியதில்லை எனலாம்.

மாற்றுக் கைக்கோளான அரசிறைக் கைக்கோள்: (The principal Alternative—Fiscal Policy)

கோட்பாடு: பணவாக்கக் கைக்கோளின் குறைபாடுகளைக் களைய தலையான மாற்றுக் கைக்கோள்—அரசிறைக் கைக்கோள் பயன் படுத்தப்படுகிறது. அரசிறைக் கைக்கோளின் முக்கியத்துவம் என்னவென்றால் வருமானங்களிலும், நாட்டு மொத்த உற்பத்திச் செலவுகளிலும் (Gross National product expenditures) அது நேரடியாகத் தலையிட்டுப் பொருளாதார சமன்கேடுகளைச் சரி செய்கிறது. நாட்டு மொத்த உற்பத்திச் (நா.மொ.உ.) செலவினம் (Spending) மிகவும் குறைவாக இருந்து அதனால் வேலையின்மையும், உற்பத்திக் காரணிகள் பயன்படுத்தப்படாமலும் இருந்தால், அரசு உடனடியாகத் தலையிட்டு அச் செலவுகளைக் கூடுதலாகச் செய்ய முன்வரும். தனியாரின் செலவு செய்யக்கூடிய வருமானங்கள், மற்றும் செலவுகளை அதிகரிப்பதற்காகவும் நா.மொ.உ—ஐ நேரடியாக அதிகரிப்பதற்காகவும், உற்பத்தி செய்யப்பட்ட நுகர்வுப் பொருட்களை அரசே வாங்குவது மேன் மேலும் உந்தப்படும். வரி வீதங்கள் குறைக்கப்படும். மாற்றுச் செலுத்துதல்கள் (Transfer payments) அதிகரிக்கப்படும். இப்படிச் செய்வதால் மக்களின் செலவு செய்யும் சக்தி உயரும். மாறுக நா.மொ.உ செலவினம் அதிகரித்து அதன் விளைவாகப் பொருளாதாரத்தில் வீக்கநிலை ஏற்பட்டால், அரசு மாறுன நடவடிக்கைகளை எடுக்கும். வரிகள் உயர்த்தப்பட்டு, அரசுச் செலவுகள் குறைக்கப்பட்டால் தனியார் வருமானம் குறையும், செலவு கூடும். பின் வீக்கநிலை தணிக்கப்படும்.

அரசிறைக் கைக்கோளின் சக்தி மிகவும் வலிமை வாய்ந்தது எனக் கூறுவதில் எவ்வித ஐயப்பாடும் இல்லை. இரண்டாம் உலகப்போர் காலத்திய அனுபவம் ஓர் நல்ல எடுத்துக்காட்டாகும். நா. மொ. உ. செலவுகளை அரசு அதிகரித்தபோது, எப்படி உற்பத்தி பெருகி, வேலையின்மை அமெரிக்காவில் குறைந்தது என அறியலாம். 1937—38 மற்றும் 1953—54

ஆகிய சரிவு காலங்களில் அமெரிக்க நாட்டுச் செலவு குறைக்கப் பட்டபோது பெருமளவுக்கு நா. மொ. உ. குறைந்திருக்கிறது. ஆனால் நா. மொ. உ. செலவுகளில் அரசிறைக் கைக்கோள் ஈடுபடுத்தப்பட்டால் மட்டும் பணவாக்கக் கொள்கையின் நோக்கம் நிறைவேறும் என்று கூற முடியாது. வீக்கத்தைக் குறைத்தல், வேலையின்மையை அகற்றல் போன்ற பொருளாதார சமன் கேடுகளைச் சரி கட்ட பணவாக்கம் மற்றும் அரசிறைக் கைக்கோள்கள் இணைந்து செயல்பட்டால் நல்ல வெற்றி கிடைக்கு மென்று கூறப்படுகிறது. அப்படியென்றால், அரசிறைக் கைக் கோளின் குறைபாடுகளும், பிரச்சினைகளும், என்னவென்று காண வேண்டியிருக்கிறது. பிரச்சினைகள் அனைத்தும் கோட்பாடு அளவில் இல்லை என்றும் நடைமுறையில் தான் ஏற்படுகின்றன எனக் கூறப்படுகிறது.

குறைபாடுகள் :

(1) பற்றுக்குறை செலவிடுவதை (Deficit spending) ஒரு நெறியற்ற செயல் என, அரசு பரவலாகக் குறை கூறப்படுகிறது. அதற்கு முக்கிய காரணம் அச் செயல் பொருளாதாரத்தில் வீக்க நிலையை உண்டு பண்ணுகிறது என்பதுதான். ஆனால் ஒரு நாட்டில் பற்றுக்குறையை நிறைவு செய்யக் கூடுதலாகச் செலவு செய்வதால் ஏற்படும் விளைவை அறிந்த பின் தான் அரசுச் செயலை மதிப்பீடு செய்ய வேண்டுமே தவிர, முன்னரே குறை கூறுவது உகந்ததல்ல எனச் சுட்டிக் காட்டப்படுகிறது. நாட்டுக்கு நாடு விளைவு மாறுபடலாம். எந்த நாட்டில் வளமுள்ள உற்பத்திக் காரணிகள் வளராவிருக்கின்றனவோ அவைகளை (அதிக மூலதன உதவி கொண்டு) நல்ல முறையில் பயன்படுத்தினால் உற்பத்தி பெருகுமே தவிர, அதிக பணத்தின் அளிப்பால் விலை மட்டம் உயராது. வீக்க நிலை ஏற்படாது. எடுத்துக்காட்டாக, 1931 முதல் 1940 வரை அமெரிக்காவில் ஒவ்வொரு ஆண்டும் பற்றுக்குறை வரவு செலவுத் திட்டம் தயாரிக்கப்பட்டது. இருப்பினும் விலை மட்டம் ஆண்டு தொடக்கத்திலிருந்ததைவிட ஆண்டு முடிவில் குறைவாகவே இருந்தது.

(2) பற்றுக்குறைச் செலவால் மற்றும் ஒரு குறை வேண்டு மானால் கூறலாம். அதாவது "தேவையற்ற செலவுகளுக்கு அது ஒரு வாகனமாக அமைகிறது"

(3) நாட்டுக் கடன் கூடுதலாவது பற்றி எதிர்ப்பு தெரி விக்கப்படுகிறது. நா. மொ. உ. செலவுகள் அதிகமாகின்றன என்றால் சில பேர்களின் கடன் சுமை அதிகமாகிறது என்று பொருள்.

பிரச்சினைகள் :

அரசிறைக் கைக்கோள் என்பது வரி விதிப்பு மற்றும் தனித் தனி செலவினத் திட்டங்கள் ஆகிய பல்வேறு கைக் கோள்களைக் கொண்டு உள்ளது. அந்தந்த கைக்கோள்களைச் சரிவர ஒழுங் காகப் பயன்படுத்த வேண்டியது அரசின் கடமையாகும். அப் போது தான் அரசிறைக் கைக்கோளினால் பொருளாதாரம் நன்மையடையும். திட்டங்கள் வரையும்போது அரசு அலுவலர்கள் பேதங்காட்டாமல் கண் மூடித்தனமாக முடிவு எடுப்பதில்லை என் ருலும், வரிவிதிப்பு மாற்றங்களோ, செலவினத் திட்டங்களோ சக்தி வாய்ந்த அரசியல் தலைவர்களின் சம்மதம் பெருமல் வெளியிடப் போவதில்லை. அவ்வாறு சுயநல நோக்குடன் வெளியிடப்பட்ட எந்த விதத்திட்டங்களும் உண்மையான பணவாக்கக் கொள்கைக்கு மாறுகவே இருக்கும். அதாவது, அரசிறைக் கைக்கோள் கோட் பாடு அளவில் பொருளாதாரத்திற்கு நன்மை தேடித் தந்தாலும், நடைமுறையில் அரசியல் தலையீட்டால் அக் கைக்கோளின் முழுப் பயனில்லாமலேயே போய் விடுகிறது.

அரசிறைக் கைக்கோளின் திட்டம் நன்கு வரையப்பட்டாலும் அது தேவையானபோது குறிப்பிட்ட காலத்தில் உபயோகப் படுத்தப்படுவதில்லை. வரவு செலவுத் திட்டம் வரைதல், ஒதுக்கீடு செய்தல் மற்றும் செலவுகள் ஆகியவைகள் மாறி மாறி நடைபெற்றாலும், திட்டம் வகுப்பதற்கும், செயல் முறை யாற்று வதற்கும் குறைந்தது 2 அல்லது 3 ஆண்டுகளாவது ஆகின்றன. குறிப்பிட்ட தேவையான காலத்தில் வரி விதிக்காததினாலும், தேவையானபோது செலவினத் தொகைகளை மாற்றுததினாலும் ஏற்படும் பிரச்சினைகளால் அரசிறைக் கைக்கோளினால் தீமையே விளையும், எனக் கூறப்படுகிறது. சரியானபடி கைக்கோளைப் பயன்படுத்தாவிடில் வீக்க நிலை தடுக்கப்படுவதற்குப் பதில் வீக்கமே மேலும் ஊக்குவிக்கப்படலாம்.

அரசிறைக் கைக்கோளின் முக்கிய பங்கு (Proper role) இவ்வாறுக இருக்கலாம் : "தன்னிச்சையான பெரும்பாலான நிலைபாட்டுத் தன்மைகளைச் செய்தலும், அதி தீவிரப் பொரு ளாதார மந்தம், வீக்கத்திற்காக மட்டும் சட்டமன்ற மாறுதல் களைச் செய்தலும் மிகுதியான நேரத்தினை, நிதிக்கோட்பாடு ஒரு மிக்க நிலையில்லாத் தன்மையின் போக்கில் மாறுவதைத் தவிர்ப் பதில் செலவிடுவதின் வழி கவனம் செலுத்துதலும் ஆகும்." (The proper role for fiscal policy may be something like this: "make the most of the automatic stabilizers, reserve

deliberate legislative changes for clear-cut situations of serious depression or inflation, and concentrate the rest of the time on trying to avoid turning fiiscal policy into a substantial engine of instability in its own right''). [1]

பணவாக்கக் கைக்கோளும், அரசிறைக் கைக்கோளும் :

பணவாக்கக் கைக்கோளும் அரசிறைக் கைக்கோளும் ஒன்றுக் கொன்று துணையானவை. ஒன்று வலுவற்று இருக்கும்போது மற்றொன்று வலுவாகச் செயல்படும். நெகிழ்வுத் தன்மை கொண்ட பணவாக்கக் கைக்கோள் உரிய காலத்தில் காலத்தை வீணுக்காமல் செயலாற்ற வேண்டியதைச் செயல்படுத்துகிறது. பொருளாதாரச் சமன் கேட்டைச் சரிப்படுத்தி நிலை பேருக்கம் செய்வதையே நோக்கமாகக் கொண்ட அக் கைக்கோள் அரசியல் தலையீட்டிற்கு அவ்வளவு முக்கியத்துவம் அளிப்பதில்லை; வாய்ப்பும் கொடுப்பதுமில்லை. மாறுக, வருமானங்களில் அது நேரடியாகத் தலையிட்டுச் செயல்படுவதில்லை; செலவு ஓட்டத்திலும் அதனுடைய ஆதிக்க சக்தி நிச்சயமற்றதாகும். ஆனால் பணவாக்கக் கைக் கோளினால் சரிக்கட்ட முடியாத சமனற்ற பொருளாதார நிலைமைகளை, அரசிறைக் கைக்கோளினால் செய்ய முடிகிறது; வரவு மற்றும் செலவுகளை மாற்றச் செய்வதன் மூலம் வருமானங் களில் நேரடியாகத் தலையிட்டு நோக்கத்தை நிறைவேற்ற முடிகிறது. அரசிறைக் கைக்கோளினால் நன்மைகள் பல இருப் பினும், அதனிடம் நெகிழ்வுத் தன்மை இல்லை எனத் திறனாய்வு செய்யப்படுகிறது. பற்பல நோக்கங்களை நிறைவேற்ற விருப்ப தால் நல்ல முடிவு காணுவது அரிதாகிறது. அரசிறைக் கைக் கோள் வழி முறையை மாற்றியமைப்பதன் மூலம் குறைபாடு களைக் களைந்தெறியலாம். நா. மொ. உ. யில் பெரிய அளவுக்கு இடப்பெயர்ச்சி (Movements) இருந்தால் அதைத் தடுப்பதற்கு இரண்டு வகைக் கைக்கோளும் பயன்படுத்தப்பட வேண்டும். கடுமையான வரவு செலவுத்திட்டமும் (Tight budget,) மலிவான கடன் கொள்கையும் சேர்ந்து ஒரே காலத்தில் நிலவினால் முதலீடு பெருமளவிற்குச் செய்யப்படும்; உற்பத்தியின் திறன் மேன் மேலும் வளர்ச்சி அடையும். மேலும் பொருளாதாரத்தின் வீக்கத் தைத் தடை செய்ய, பணக்கொள்கை, வட்டி வீதத்தை உயர்த்தி யும், பண அளிப்பை இறுக்கியும் (Tight money) செயல்படுகிறது. ஆனால் அரசுக் கொள்கையின்படி வரி மட்டத்தை உயர்த்தியும், பொதுச் செலவைக் குறைத்தோ அல்லது உபரி வரவு-செலவுத்

1. Paul B. Trescott, 'Mononey, Banking And Economic Welfare', Second Edition, Page 550.

திட்டத்தை வரைந்தோ வீக்கம் கட்டுப்படுத்தப்படுகிறது. இரண்டு கைக்கோள்களுமே அரசினுல் பயன்படுத்தப்பட்டாலும் பணவாக்கக் கைக்கோள் மைய வங்கி மூலமாகவோ, அரசிறைக் கைக்கோள் கருவூலம் மூலமாகவோ, நிதித்துறை மூலமாகவோ ஆளப்படுகிறது. எனவே அவை இரண்டும் ஒன்றுக் கொன்று துணையானவை.

இரண்டாம் போர்க்காலத்தில் பணக் கொள்கையின் முக்கியத்துவம் குறைந்ததாலும், போர் ஓய்விற்குப் பின் எல்லா நாடுகளிலும் பரவலாக அதற்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு வருகிறது. பணக் கொள்கையின் கருவிகளாகப் பயன்படுபவை (முக்கியமானவை) இரண்டு: (1) வங்கி வீதம் (2) வெளிச் சந்தை நடவடிக்கைகள். இவைகளைப்பற்றி 'வீக்கமும் வாட்டமும்' என்ற அத்தியாயத்தில் விரிவாகக் கொடுக்கப்பட்டுள்ளது. இவை இரண்டையும் தவிர மூன்றுவது கருவியான, 'கருவூல ஆணையிடல்' (Treasury directive) உபயோகிக்கப்படுகிறது. இதன்படி நாட்டில் பொருளாதார சமன்கேடு இருக்கையில் மைய வங்கி பணக் கைக்கோளை உபயோகிக்கத் தவறினாலோ, தயங்கினாலோ கருவூலமே நேரடி நடவடிக்கைகளில் இறங்கிவிடுகிறது. அதற்கு அரசிடமிருந்து அவ் வப்போது அனுமதி வாங்க வேண்டுமென்ற அவசியமில்லை. பொருளாதார முன்னேற்றத்திற்காக எந்தவித நடவடிக்கைகளையும் மேற்கொள்ளக் கருவூலத்திற்கு அதிகாரமுள்ள இக் கொள்கை இங்கிலாந்தில் சமீப காலமாகக் கடைப்பிடிக்கப்படுகிறது.

15. இந்தியச் செலாவணியின் வரலாறு

(History of Indian Currency)

'இந்தியச் செலாவணியின் வரலாறு மிகவும் குளறுபடியானது. அதைப்பற்றி மிகக் குறுகிய காலத்தில் அறிவதென்பது இயலாததாகும்' எனக் குறிப்பிட்ட கீன்ஸ் மேலும் கூறுகிறார். "1899-லிருந்து இந்திய நாணயச் செலாவணியின் வளர்ச்சி அமைதியானதென்றாலும் வெகு வேகமானதாகும்... செலாவணி முறை போன்று ஒன்று வளர்ச்சியுறச் செய்ய வேண்டும் என எண்ணப்பட்டு வந்தாலும், அரசு அல்லது ∴பௌலர் குழுவின் (1899) பரிந்துரை இல்லாமலும், செலாவணி முறை வளர்ச்சியைப்பற்றி எண்ணிப்பார்க்காதவர்கள் அல்லது 1893-ல் நாணய அச்சகங்களை எல்லாம் மூடிவிட வேண்டும் என்று கூறியவர்கள் ஆகியோர்களாலேயே அச் செலாவணி முறை வளர்ந்திருக்கிறது. இப்போதுள்ள செலாவணி முறை எந்தக் குறிப்பிட்ட நாளில் (Date) கடைப்பிடிக்கப்பட்டது எனக் குறிப்பிடுவது இயலாததாகும்." [1]

அக்பர் ஆட்சி காலத்திலிருந்தே வட இந்தியச் செலாவணி பொன் மோகர்களையும் (Gold mohur) ஒரு பொன் மோகர் நாணயத்தின் மதிப்பு ரூ. 15/= ஆக இருந்தது) வெள்ளி ரூபாய்களையும் கொண்டிருந்தது. ஒவ்வொன்றின் எடையும் 175 குன்றி மணியாகும் (Grains) தென்னிந்தியா முழுவதும் மொகலாயர்கள் ஆட்சியின் கீழ் இல்லாவிட்டாலும், அங்குப் 'பொன்' தான் தலையான செலாவணியாக இருந்தது. இந்துக்கள் ஆட்சியில் பொன்னுக்கு மதிப்புக் கொடுக்கப்பட்டது. முகம்மதியர்கள் வெள்ளி நாணய முறைக்கு முக்கியத்துவம் கொடுத்தனர். மொகலாயர்கள் ஆட்சி வீழ்ச்சியுற்றவுடன் நாடு பல துண்டுகளாக மாறி ஒவ்வொரு மாநிலமும் தன்னிச்சையான செலாவணி முறையைக் கொண்டிருந்தது. செலாவணியின் எடை, தூய்மை மாநிலத்திற்கு மாநிலம் மாறுபட்டது. கிழக்கிந்திய நிறுமம் (East India company) தோன்றிய போது பலவகை எடைகளைக் கொண்ட பல வேறு பொன், வெள்ளி நாணயங்கள் மொத்தம் 994 புழக்கத்திலிருந்ததாகச் சொல்லப்படுகிறது. [2]

---

1. J. M. Keynes, Indian Currency and Finance, 1913.
2. H. D. Macleod, Indian Currency, P. 13.

பலதரப்பட்ட நாணயங்கள் புழக்கத்திலிருந்ததால் வாணிப நடவடிக்கைகள் தடைப்படுவதை உணர்ந்த கிழக்கிந்திய நிறுமம் செலாவணிமுறையை ஒழுங்குபடுத்த எண்ணியது. அந்நிறுமம் தொடங்கி வைத்த செலாவணி ஒழுங்காற்று முறை இன்று வரை எப்படி இருக்கின்றது எனப் பார்ப்போம்.

வெள்ளித்திட்டம் (1835—92)

ஒரே மதிப்புள்ள ரூபாய் (Uniform rupee)

இந்தியாவில் வடிவொத்த ஒரே தரமான செலாவணியை அறிமுகப்படுத்தக் கிழக்கிந்திய நிறுமம் ஒப்புறுதி அளித்தது. 1835-ல் தான் அச்செலாவணியின் வரலாற்றுப் பிரிவு (Era) தொடங்கியது. 1835-வது ஆண்டு 17-வது சட்டப்படி 11/2 அளவு தூய்மை கொண்ட 180 குன்றிமணி எடையுள்ள வெள்ளி நாணயம் பிரிட்டிஷ் இந்தியாவின் சட்டப் பணமாக (Legal tender) ஆக்கப் பட்டது. இப் பணம் இந்தியாவின் சில பகுதிகளில் — பம்பாய் மற்றும் சென்னையில் மட்டும் தான் புழக்கத்திலிருந்தது. இவ் வெள்ளி நாணயத்தைத் தடையின்றி அச்சிட அனுமதியிருந்தது. இப்படியாக இந்தியா ஒரு தனி உலோகத் திட்டத்தைக் கொண்ட தாக இருந்தது. நிறுமத்தின் இயக்குநர்கள் வெள்ளித் திட்டத்தை ஆதரித்தாலும் பொற்காசுகள் புழக்கத்திலிருப்பதை ஆட்சேபிக்கவில்லை. 1835-ம் ஆண்டு சட்டம், பொன் நாண யங்களை, வெள்ளி நாணயங்களின் எடை, தூய்மையின் அள வுக்கே, அச்சிட்டுக் கொள்ள வகை செய்தது. அவ் வகைப் பொற் காசுகளுக்கு மோகராக்கள் என்றும், ஒவ்வொரு மோக ராவும் ரூ. 15-க்குச்சமம் எனவும் அறிவிக்கப்பட்டது. ரூ. 5, 10, 30 மதிப்புள்ள பொற்காசுகளும் அச்சிடப்பட்டுப் புழக்கத்தி லிருந்தன. பொற்காசுகள் சட்டப் பணமாகாது என்றும், ஆனால் வரி செலுத்துதல், பொது மக்களிடமிருந்து நிலுவை வசூலித்தல் போன்றவைகளுக்கு மட்டும் பொன் மோகராக்களைக் கருவூலங்கள் பெற்றுக் கொள்ளும் என்றும் பிரகடனம் செய்யப் பட்டது.

பொன், வெள்ளி நாணயங்கள் மட்டுமின்றிச் செலாவணித் தாள்களும், வங்காள, பம்பாய் மற்றும் சென்னை ஆகிய தலைமை வங்கிகளில் அச்சிடப்பட்டு, புழக்கத்திலிருந்தன. இவைகளும் சட்ட பணமல்ல. அம்மூன்று தலைநகரங்களில் மட்டும் புழக்கத்தி லிருக்க முடியும், வேறு இடங்களில் செல்லுபடியாகாது.

தாள் செலாவணிச் சட்டம், 1861 (Paper currency Act)

ஆஸ்திரேலியா, அமெரிக்க நாடுகளில் பொற் சுரங்கங்கள் கண்டுபிடிக்கப்பட்டதன் விளைவாக, வெள்ளியை ஒப்பிடும்போது,

பொன்னின் விலை சரிந்தது. 1853-ம் ஆண்டு ஜனவரி 1-ஆம் நாள் அரசு ஒரு பொன் மோகராவுக்கு ரூ. 15 என்று ஏற்றுக் கொள்ளும் முன்னைய உத்தரவை இரத்து செய்துவிட்டது. பொற் செலாவணியை மீண்டும் கொண்டு வர வேண்டும் எனப் பல கோரிக்கைகள் வாணிகச் சங்கங்களிலிருந்து வந்தாலும், அப்போதிருந்த நிதியாக்க உறுப்பினர் ★ மறுத்து விட்டார். வெள்ளித் திட்டம் தான் இருக்க வேண்டும் எனவும், செலாவணி முறையில் ஏதேனும் குறையிருப்பின் அது சரி செய்யப்படும் எனவும் உறுதியளித்தார். 1860 ல் தாள் செலாவணி மசோதாவை (Paper currency bill) அவர் தயாரித்ததன் விளைவாக 1861 ல் அச்சட்டம் பிறந்தது. இச் சட்டப்படி, தாள் செலாவணியை அச்சடித்து வெளியிடும் உரிமை அரசிடமே இருந்தது. தாள் செலாவணி வெளியிடும் அளவில் மிகக் குறைந்த அளவுக்குத் தான் அரசுப் பிணையங்கள் இருக்க வேண்டும்.

எஞ்சிய எல்லாத் தொகைக்கும் வெள்ளிக் காசுகளும், வெள்ளிக் கட்டிகளும் அரசிடம் காப்பாக இருக்க வேண்டும். அரசுப் பிணையங்கள் பெருமளவு ரூ. 4 கோடி வரைக்கும்தான் இருக்கலாம். மொத்த வெளியீட்டில் 25 சதவீதம் வரைக்கும் பொற் காசுகளும் பொற் கட்டிகளும் காப்பாக வைத்துக் கொள்ளவும் சட்டம் இடம் கொடுத்தது. இதன் முக்கிய நோக்கம் என்னவென்றால் பொற் செலவாணியை மீண்டும் புழக்கத்திற்குக் கொண்டு வரலாமென்பது திரு. லெயிங் என்ற நிதியாக்க உறுப்பினரின் எண்ணமாகும்.

1850–க்குப் பிறகு வெள்ளியின் உற்பத்தி குறையத் தொடங்கியது. அதன் மதிப்பு மேன்மேலும் அதிகரித்தது. மக்களும் வெள்ளி நாணயங்களை உருக்கி ஆபரணங்களாகச் செய்யத் தொடங்கி விட்டனர். இதனால் வெள்ளி நாணயங்கள் செலாவணிக்குப் போதவில்லை. பம்பாய் வணிகச் சங்கம் உள்பட மக்களால், பொன் நாணயத்தைத் திரும்பவும் புழக்கத்தில் விடுவதற்கு அரசிடம் கோரிக்கை எழுப்பப்பட்டது. இச்சமயத்தில் அமெரிக்காவில் பருத்திப் பஞ்சம் ஏற்பட்டதால் இந்தியாவிலிருந்து பெரும் பகுதி பருத்தி ஏற்றுமதி செய்யப்பட்டு அதற்குப் பதிலாகப் பொன்னை இறக்குமதி செய்யப்பட்டது. பொன் நாணய முறையை மீண்டும் கொண்டு வருவதற்கு இதுவும் ஒரு வகையில் உதவி செய்தது. நிலைமையை நன்குணர்ந்த அப்போதிருந்த நிதியாக்க உறுப்பினர் இங்கிலாந்து, ஆஸ்திரேலியா, அல்லது

★ Financial member at that time was Mr. James Wilson, Later, he was succeeded by Mr. Laing.

இந்தியா ஆகிய நாடுகளில் அச்சிடப்பட்ட ஒரு சவரன் (Soverign) அரைச் சவரன் பொன் நாணயங்களும் சட்டப் பணமாக இருப்பதற்குப் பரிந்துரை செய்தார். வெள்ளிப் பணமும் கூடவே புழக்கத்திலிருக்கும். இந்திய அரசு கீழ்கண்டபடி பொற்காசுகள் புழக்கத்திலிருப்பதற்கு அனுமதி வழங்கியது.

(i) 1841 முதல் 1852 முடிய எந்த முறை வழக்கத்திலிருந்ததோ அப்படியே பொது மக்களின் நிலுவைகளை (Public-dues) கருவூலங்கள் பொற்காசுகளாகப் பெற்றுக்கொள்ளலாம்.

(ii) காகிதச் செலாவணிச் சட்டம், 1861, பிரிவு 9-ன் படி பொற்காசாகவோ, பொற்கட்டியாகவோ, மாற்றும் அளவுக்குத் தாள் பணங்கள் அச்சிட்டு வெளியிடலாம்; 1864-நவம்பர் திங்கள் மேற்குறிப்பிட்ட ஒரு சவரனுக்கு ரூ. 10/= என்றும் அரை சவரனுக்கு ரூ. 5/=என்றும் இந்திய அரசு விகிதப்பாடு வகுத்தது.

மேன்ஸ்ஃபீல்டு குழு (Mansfieled commission)

1866-ல் கல்கத்தா வணிகச் சங்கம், பொன் நாணயத்தை மட்டும் கடைப்பிடிப்பதற்கு இந்திய அரசை வலியுறுத்தி, செலாவணி முறை முழுவதையும் நன்கு ஆய்வு செய்யும்படி கோரிக்கை விடுத்தது. அதன்படியே திரு மேனஸ்ஃபீல்டு என்பவர் தலைமையில் ஒரு குழுவை இந்திய அரசு நியமித்தது. அக்குழுவின் பரிந்துரைகள் கீழ் வருமாறு :—

(1) தாள் செலாவணிச் சட்டத்தில் மேலாண்மை தொடர்புடைய சில சரத்துக்கள் மாற்றி அமைக்கப்படுதல் வேண்டும்.

(2) நாடு முழுவதும் ஒரே வகையான செலாவணித் தாள் (Universal note) புழக்கத்தில் இருக்க வேண்டும்.

(3) பொற் செலவாணிக்கு நாடு முழுவதும் ஆதரவு இருப்பதால் ரூ. 15, 10, 5 ஆகிய தாள் பணத்திற்குப் பதிலாக அதே அளவுள்ள பொற் காசுகள் வெளியிடப்படுதல் வேண்டும்.

(4) செலாவணிமுறை பொன், வெள்ளி மற்றும் தாள்—பணம் ஆகியவைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

ஆனால் அப்பரிந்துரைகள் அரசால் ஏற்றுக்கொள்ளப்படவில்லை. அதற்குக் காரணம் ஆட்சித் தலைவர்தான். (Governer General).

வெள்ளித் திட்டத்தின் வீழ்ச்சி (Decline of Silver Standard)

1874-லிருந்து அடுத்த இருபது ஆண்டுகளில் பொன் விலையினின்றும் வெள்ளியின் விலை சரியத் தொடங்கியது.

இதற்கு முக்கிய காரணம் வெள்ளி உற்பத்தி பெரு மளவுக்கு அதிகரித்ததுதான். ஜெர்மனி 1873-லும், சுவீடன், நார்வே மற்றும் டென்மார்கில் 1874-லும் வெள்ளித் திட்டத்தைக் கைவிட்டனர். நாணய அச்சகங்கள் மூடப்பட்டதால், விருப்பப்படி நாணயங்களை அச்சிட முடியவில்லை. வெளிச் சந்தையில் மிகையான அளவு வெள்ளி விற்பனைக்கு வரத் தொடங்கியது. ஐரோப்பா, மற்றும் அமெரிக்க நாடுகளில் பொன் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. எனவே, பொன் னுக்குத் தேவை மிகுதியாயிற்று. ஆனால் போதிய அளவு அளிப்பு இல்லை. வெள்ளியின் மதிப்பு பல நாடுகளில் சரிந்ததால் இந்திய ரூபாயின் மதிப்பும் விழத் தொடங்கியது. இதனால் உள் நாட்டுப் பொறுப்புக்கள் (Home charges) அதிகரிக்கலாயின. அமெரிக் காவும் இரு உலோகத்திட்ட முறையை நிலை நிறுத்துவதற்காக பன்னாட்டு மாநாடுகளைப் பல தடவை நடத்தியது. அதில் இந்தி யாவும் பங்கு கொண்டது. ஆனால் பலன் கிடைக்கவில்லை. அதாவது, வெள்ளித் திட்டத்தை நிலை நிறுத்த முடியவில்லை. படிப்படியாக அமெரிக்காவும் வெள்ளியைப் பிற நாடுகளில் ஏற்றுமதி செய்ய மறுத்தது. இதனால் பாதிக்கப்பட்டது முதன் முதலில் இந்தியாதான். இதனால் 1874-ஆம் ஆண்டு முதல் இந்தியர்களிடையே வெள்ளித்திட்டம் கைவிடப்படுதல் வேண்டும். என்ற கோரிக்கை வலுவடைந்தது. ஆகவே வெள்ளித்திட்டத்தைக் கைவிடுதல், பொன் திட்டத்தை மேற் கொள்ளுதல் போன்ற செலாவணி முறைப் பிரச்சனைகளை ஆய்வு செய்து ஆலோசனைகளை அளிப்பதற்காக 1892-ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் கோமகன் ஹெர்கல் (Lord Herchell) என்பவர் தலைமையில் அரசுச் செயலர் நியமித்தார். அக் குழு தனது அறிக்கையை 1893-ல் வெளிப்பட்டது.

அவ்வறிக்கையின் பரிந்துரைகளாவன :

(1) இந்திய அரசின் முடிவுப்படியே, பொது மக்கள் கட்டுப் பாடில்லாமல் வெள்ளிக் காசுகளை அச்சகங்களில் அச்சிட்டுக் கொள்வது நிறுத்தப்பட வேண்டும்.

(2) ஒரு ரூபாய்க்கு ஒரு ஷல்லிங் நான்கு பென் (1 s. 4 d) என்ற வீதத்தில் அரசு மக்களிடமிருந்து பொன்னைப் பெற்றுக் கொண்டு ரூபாய் நாணயத்தை அச்சிட்டு அளிக்கலாம்.

(3) பொது மக்களிடமிருந்து கடன் பாக்கிகளை ரூ. (1 = 1s.4d.) என்ற வீதத்தில் பொன்னை கருவூலங்கள் பெற்றுக் கொள்ளலாம்.

(4) வெள்ளிச் செலாவணியைச் 'செல்லாப்படுத்துகை' செய்தலோ (Demonetization) பொன் திட்டத்தை மட்டும் அறிமுகப்படுத்துதலோ தேவையில்லை. அதற்குப் பதில் நொண்டித் திட்டம் (Limping standard) மேற் கொள்ளப்பட வேண்டும்.

(5) ரூபாய் செலாவணியே தொடர்ந்து வரையறுக்கப் படாத சட்டப் பணமாக, (Unlimited legal tender) இருத்தல் வேண்டும்.

அக் குழு பரிந்துரைப்பதின் முக்கிய நோக்கம் இடப்பெயர்வு காலத்திற்காகவும் (Transitional period) முடிவில் எப்படியும் பொன் திட்டத்தை அறிமுகப்படுத்துவதற்கு முதல்படியாக இருக்க வேண்டுமென்பதுதான்.

மேற் கூறிய பரிந்துரைகளை அரசு ஏற்றுக் கொண்டு 1893-ல் சட்டம் ஒன்றை இயற்றியது. அதன்படி 1870-ஆம் ஆண்டைய இந்திய நாணய மாக்குச் சட்டமும் (Indian coinage Act) 1882 ஆம் ஆண்டைய இந்தியத்தாள் செலாவணிச் சட்டமும் திருத்தம் செய்யப்பட்டன. பொன் மற்றும் வெள்ளி நாணயங்களை எந்தவிதத் தடையுமில்லாமல் பொது மக்கள் அச்சடித்துக் கொள்ளலாம். நாணய அச்சகங்களை மூடி விடுவ தற்குத் திருத்தப்பட்ட அச்சட்டம் வகை செய்தது. இருப்பினும் வெள்ளி நாணயங்களை அச்சடித்துக் கொள்ளும் உரிமையை அரசே வைத்துக் கொண்டது. சட்டத்தைத் திருத்திய அதே நாளில் (ஜூன் 26, 1893). அரசு மூன்று விதி அறிக்கைகளை (Notifications) யும் வெளியிட்டது. அவை பின் வருமாறு :

(1) ஒரு ரூபாய்க்கு 7·53344 குன்றிமணிகள் எடையுள்ள தூய பொன் (அதாவது ரூ. 1 = 1s. 4d.) என்ற வீதத்தில் நாணய அச்சகங்கள் பொன்னை ஏற்றுக்கொள்ளும்.

(2) அரசுக்குத் தொகை செலுத்தும் பொதுமக்கள் 1 சவரன் = ரூ. 15 என்ற வீதத்திலும், அரை சவரனுக்கு ரூ. 7½ என்ற வீதத்திலும் செலுத்தலாம்.

(3) பொன் மாற்றத்திற்கான தாள் பணம் பொதுத் தணிக்கையாளருக்கு (Currency notes would be issued to the Comptrollet-General in exchange for gold) அளிக்கப்படல் வேண்டும்.

இவ்வறிக்கைகளினுல் குறிப்பிடத்தக்கது என்னவெனில் அரசு ஒருவழிப் பாதையைக் கடைப்பிடித்ததுதான். அதாவது, பொன்னைப் பெற்றுக் கொண்டு ரூபாயோ தாள் பணமோதான்

அரசு கொடுக்குமே தவிர, ரூபாயோ, தாள்பணமோ பெற்றுக் கொண்டு பொன்னை அளிக்காது. இதன் விளைவு என்னவென்றால், ரூபாய் ஒரு அடையாளப் பணமாக (Token coin) விளங்கியது தான்.

பொன்திட்டத்தை மேற்கொள்வதற்கு முன்னேடியாக அவ் வறிக்கைகளும், சீர்திருத்தங்களும் ரூபாயின் பொன்மதிப்பு மேலும் வீழ்ச்சியடைவதைத் தவிர்க்கவும், மக்களிடையில் பொன்னை நன்கு அறிமுகப்படுத்தவும், ரூபாய்க்கும், ஸ்டெர்லிங்குக்கும், இடையில் நாணயமாற்று விகிதத்தை நிலைப்படுத்தவுமே மேற்கொள்ளப்பட்டன. இதன் விளைவாக ஒரு அணா என்பது, ஒரு பென்னிக்குச் சமமாக இருந்தது.

∴பௌலர் குழு (Fowler Committee) 1898 :

1893-லிருந்தே செலாவணி நிலைமை, இடப்பெயர்வு காலத்தைக் கொண்டிருக்கிறதென்றும், அதற்குச் சில முடிவான நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் எனவும் முன்பே அறிந்தோம். சில ஆண்டுகளாகவே ரூபாய் நாணயங்களை அச்சிட்டு வெளியிட எந்த முயற்சியும் ஏற்படாததால் வாணிபப் புழக்கத்திற்கு நடைமுறையில் இருந்த ரூபாய் போதவில்லை. நாணய அச்சகங்கள் மூடப்பட்டதன் விளைவாகவும், மன்ற மாற்றுச் சீட்டுக்கள் (Council Bills) விற்பனைத் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டதாலும், பணச்சந்தையே பண வறட்சியினால் கடும் பசிக்குள்ளாகியது. எனவே, வணிகர்களும், பொதுமக்களும் அரசிடம் கோரிக்கை விடத் தொடங்கினர். இதற்கிடையில் 1894-ல் ரூபாய், ஸ்டெர்லிங் வீதம் ரூ. = 1 sh. 1⅓ d இருந்தது. 1898-ல் ரூபாயின் மதிப்பு உயர்ந்து வீதம் ரூ. 1 = 1 sh. 4 d. ஆக மாறியது. இதிலிருந்து அறிவதென்னவென்றால் இந்தியாவிலும் பொன்திட்டத்தைக் கையாளலாம் என்பதாகும். இச்சூழ்நிலையில் தான் திருமிகு. ஹெல்றி ∴பௌலர் என்பவர் தலைமையில் ஒரு குழு நியமிக்கப்பட்டது. இக்குழுவின் பரிந்துரைகள் கீழ்வருமாறு:

(1) பொன் நாணயங்கள் வரையற்ற சட்டப்பணமாக இருத்தல் வேண்டும். அத்துடன் வெள்ளி ரூபாயும், சட்டப் பணமாகப் புழக்கத்தில் இருத்தல் வேண்டும்.

(2) சவரன்களையும், அரைச் சவரன்களையும் அச்சிடுவதற்கு ஒரு பொன் நாணய அச்சகத்தை அரசு தொடங்கவேண்டும். பொதுமக்களின் தேவையில் ஒரு குறிப்பிட்ட வீதம் பொன் நாணயங்கள் சேரும் வரை வெள்ளி நாணயங்கள் அச்சிடப்படும். அச்சகங்கள் மூடியே இருத்தல் வேண்டும்.

(3) ரூபாய், ஸ்டெர்லிங் மாற்றுவீதம் ஒரு ரூபாய்க்கு 1 s. 4 d. என்று இருத்தல் வேண்டும்.

(4) பொன்னுக்குப்பதில் ரூபாயாகக் கொடுப்பதும், ஆனால் ரூபாய்க்குப் பதில் பொன்னாகக் கொடுக்காமலிருப்பதும், தொடர்ந்து நடைமுறையில் இருத்தல் வேண்டும். பொன்னின் திடீர் தேவையைச் சமாளிக்க வேண்டுமென்றால் பின்னது கூறிய நிபந்தனை கடைப்பிடிக்கத்தான் வேண்டும்.

(5) இந்தியாவின் அயல்நாட்டு வாணிபம் பாதகநிலையை அடையும்போது, ஏற்றுமதிக் காரணங்களுக்குப் போதிய அளவில் பொன் கிடைக்குமாறு அரசு கவனித்துக்கொள்ளுதல் வேண்டும்.

(6) ரூபாய் நாணயங்களைச் சவரன்களாக மாற்றுவதற்காகவும், வெள்ளி நாணயங்களை அரசு அச்சிட்டு வெளியிடுவதால் ஏதேனும் ஏற்படும் இலாபத்தை வரவு செய்வதற்காகவும், ஒரு காப்புநிதி, அதாவது "பொற்காப்புநிதி" ஏற்படுத்துதல் வேண்டும். இந்நிதிக்கும், காகிதச் செலாவணி நிதி மற்றும் சாதாரண கருவூல இருப்புகளுக்கும் எவ்வித தொடர்பும் கிடையாது.

மேற்குறிப்பிட்ட பரிந்துரைகள் இந்திய அரசால் ஏற்றுக் கொள்ளப்பட்டுச் சட்டமும் ஆக்கப்பட்டது. ஆனால் முழுப் பயன் கிடைக்கச் செய்ய முடியவில்லை. ஒரு தனி பொன் நாணய அச்சகம் நிறுவுவதற்கு பிரிட்டிஷ் கருவூலம் சம்மதம் கொடுக்க வில்லை. இதைத்தவிர ஏனைய பரிந்துரைகள் கிட்டத்தட்ட நிறைவேற்றப்பட்டன. நாணயமாற்று வீதத்திலும், ரூபாயின் மதிப்பு விழக்கூடும் என எதிர்நோக்கிப் பழைய வீதத்தையாவது, நிலைநிறுத்த இந்திய அரசு பெரிதும் போராடியது. அதன் விளைவாகப் பொன்மாற்றுத்திட்டம் (Gold Exchange standard) இந்தியாவில் கடைப்பிடிக்கப்பட்டது.

பொன்மாற்றுத் திட்டம்:

இந்தியாவில், இப்பொன்மாற்றுத்திட்டம் 1900-முதல் 1917 வரை இருந்ததெனக் கூறலாம். இத்திட்டப்படி நாட்டுச் செலாவணியின் புறமதிப்பு, பொறகாசு அல்லது பொற்கட்டித் திட்டத்தையுடைய அந்தந்த நாடுகளின் செலாவணியுடன் ஒப்பிட்டுக் கூறப்படுகிறது. நாட்டில் தாள் பணங்களுடன், துணை நாணயங்களும் செலாவணியாக இருக்கும்; ஒரு குறிப்பிட்ட நாணயமாற்று வீதத்தில் உள்நாட்டுச் செலாவணிக்கு, அயல் நாடுகளில் மாறறக்கூடிய அந்நியச் செலாவணியை (Foreign Exchanges) விற்கவோ, வாங்கவோ பணத்துறை அதிகாரிகள் உடன்படிக்கை செய்து கொள்வர்.

பொற்காசு (அல்) பொற்கட்டித்திட்டத்தையுடைய நாட்டில் பணத்துறை அதிகாரிகளிடம் அளவுகடந்து பொன்னுகவோ, பொற்கட்டியாகவோ இருப்பு இருக்கும். ஆனால் பொன்மாற்றுத் திட்டத்தில் அயல்நாட்டுச் செலுத்துபவைகளுக்காக அயல்நாடுகளில் மாற்றக்கூடிய அந்நியச் செலாவணிதான் (உள்நாட்டு) பணத்துறை அதிகாரிகளிடம் இருக்கும். உள்நாட்டில் வெள்ளி ரூபாய் நாணயங்களும், காகிதச் செலாவணியும் புழக்கத்திலிருக்கும் பொன்நாணயங்கள் புழக்கத்திலில்லாவிட்டாலும் ரூபாய் நாணயங்களை ஸ்டெர்லிங்குகளாக 1s. 4d என்ற வீதத்தில் மாற்றிக் கொள்ளலாம். ஆனால் ஸ்டெர்லிங்குகள் தடையில்லாமல் பொன்னுக மாற்றப்படலாம். இதன் பயனுக ரூபாய் நாணயங்கள் நேரடியாகப் பொன்னுக மாற்றப்பட முடியாது. எனினும், ஸ்டெர்லிங் மூலமாக மறைமுகமாக மாற்றப்படலாம். பொன் திட்ட காப்பையும் (Gold standard reserve) காகிதச் செலாவணிக் காப்பையும் (Paper currency reserve) இலண்டனில் இந்திய அரசு நிருவாகித்தது. இந்தியாவிலும் ஒரு கிளை ஒவ்வொன்றுக்கும் நிறுவப்பட்டது.

பொன் மாற்றுத் திட்டத்தின் அடிப்படை இயல்பே (Feature) ஸ்டெர்லிங்ஸ்—ரூபாய் மாற்று வீதத்தை (ரூ.= 1 s. 4 d) நிலைப் படுத்தலாகும். முதலாவதாக ஒரு ரூபாய்க்கு 1 s. 4$\frac{1}{8}$ d. வீதம் மன்ற மாற்றுச் சீட்டுக்களை விற்பதன் மூலம் நாணய மாற்று வீத உயர்வு தடுத்து நிறுத்தப்பட்டது.

இலண்டன் வணிகர்கள், இந்திய வியாபாரிகளுக்குச் செலுத்த வேண்டியதற்காக இந்திய அரசுச் செயலாளரிடம் இருந்து மன்ற மாற்றுச் சீட்டுக்களை வாங்கி அனுப்பி விடுவர். இந்திய வணிகர்கள் அச்சீட்டுகளைக் கருவூலத்திற்கு எடுத்துச் சென்று ரூபாய்களைப் பெறுவர். தான் பெற்ற ஸ்டெர்லிங்குகளில் இந்திய அரசுச் செயலர் தனது துறைச் செலவுகளுக்கு எடுத்துக் கொண்டதுபோக எஞ்சியதைப் பொன்திட்டக் காப்பிலும் அல்லது காகிதச் செலாவணிக் காப்பிலும், வரவு வைத்து விடுவர். மன்றச் சீட்டுக்கள் மிகையான அளவு விற்க விற்க ஸ்டெர்லிங் — ரூபாய் மாற்று வீதம் ரூ. 1 = 1 s. 4$\frac{1}{8}$ d. க்கு மேல் உயராது.

இரண்டாவதாக, ஸ்டெர்லிங் மாற்றுவீதம் 1 s. 4 d. க்குக் குறையாமலிருக்க மறுதலை மன்ற மாற்றுச் சீட்டுக்கள் (Reverse council drafts) அதாவது ஸ்டெர்லிங்ஸ் சீட்டுக்கள் இந்தியாவில் விற்கப்பட்டன. இவ் வகைச் சீட்டுக்கள் ரூ. = 1 s. 3 $\frac{29}{32}$ d என்ற வீதத்தில் இந்திய அரசால் விற்கப்பட்டன. இவைகள் இலண்டனில் மாற்றக் கூடியவை. அங்குள்ள காப்பிருப்பிலிருந்து ஸ்டெர்லிங் எடுத்துக் கொடுக்கப்படும்.

அரசால் அமைக்கப்பட்ட சாம்பர்லின் குழுவும் (Chamberlain committee) அக் குழுவில் ஒருவரான கீன்ஸ் போன்றோராலும் சிறப்பித்துக் கூறப்பட்டுள்ளன. இப் பொன்மாற்றுத்திட்டம் உலக நாடுகள் மன்ற பொருளாதார மாநாடும் (Economic conference of the leage of nation) வரவேற்றது. இத்திட்டத்தில் நன்மைகள் பல இருந்தாலும் சாதாரண மக்களால் புரிந்து கொள்ளுவதற்கு இயலாததாகும். இந்திய அரசு அலுவலர் களால் தேவையான சந்தை மாற்றும் வாணிப நடவடிக்கை களின் புள்ளி விவரங்கள் எளிதில் அடைய முடியவில்லை. எனவே, இத்திட்டத்தை ஒரு முழு அளவு பொன்திட்டமாகக் கருத வில்லை.

பொன் மாற்றுத் திட்டம் முறிவடைதல்:

முதல் உலகப்போரின் விளைவு தான் இந்திய பொன் மாற்றுத் திட்ட முறிவுக்குக் காரணம் ஆகும். போர் காலத்தில் செலுத்து நிலை, நாட்டுக்குச் சாதகமாக விளங்கியதால், அதிக அளவில் ரூபாய் வெளியிடுவது அவசியமாயிற்று. அதே நேரத்தில் வெள்ளிக்கான தேவை அதிகரித்ததால் இந்திய ரூபாயின் முக மதிப்பை விட உள் மதிப்பு உயர்ந்தது. மக்கள் வெள்ளி ரூபாய்களை உருக்கி உலோகமாக விற்கத் தொடங்கினர்.

ரூபாய்களுக்கும், ஸ்டெர்லிங்குகளுக்கும் உள்ள மாற்று வீதம் ரூ. = 1 s. 4 d. ஆக இருந்தது. 1917-ம் ஆண்டில் அவ்வீதம் ரூ. 1 = 1 s. 5 d. ஆக உயர்ந்தது. அதாவது, வெள்ளியின் விலை தொடர்ந்து அதிகரித்துக்கொண்டே இருந்தது. இதனால் நாணய மாற்று வீதமும் மாறிக்கொண்டே இருந்தது. 1920-ல் ரூ. 1 = 2 s. 10 d. ஆக நிர்ணயிக்கப்பட்டது. பொன் மாற்றுத் திட்டம் தொடர்ந்து நீடிக்க முடியாததால் முறி வடைந்தது.

பாபிங்டன் ஸ்மித் குழு (Babingtan smith committee)

போரினால் நாணய மாற்றம் மற்றும், செலாவணி முறைக்கு ஏற்பட்ட விளைவுகளை ஆய்வு செய்வதற்காகவும், நிலையான பொன் மாற்றுத் திட்டத்தைக் கடைப்பிடிப்பதற்கான வழிகளை வகுக்கவும், 1919-ம் ஆண்டு மே திங்கள் திருமிகு. ஹென்றி பாபிங்டன் ஸ்மித் என்பவரின் தலைமையில் அரசுச் செயலாளர் குழு ஒன்றை அமைத்தார். இக் குழுப்பணியை மிகச் சுருக்க மாகச் சொல்லப் போனால், போர்க்காலத்தில் வெள்ளி விலை யேற்றத்தால் முறிவடைந்த பொன் மாற்றுத் திட்டத்தை

மீண்டும் நடைமுறைக்குக் கொண்டு வருவதற்கான வழிமுறைகளை வகுப்பதுதான் அக் குழுவின் பரிந்துரைகள் கீழ் வருமாறு:[1]

(1) இரண்டு ஷில்லிங் பொன்னுக்கு ரூபாயின் மதிப்பை நிலைப்படுத்துதல் வேண்டும். 11·30016 குன்றிமணி எடையுள்ள தூய பொன்னுக்கு ஒரு ரூபாய் என்ற மாற்றுவீதம் நிலைப்படுத்தப்பட வேண்டும்.

(2) நாணய மாற்றுவீதம் மோசமாக உள்ளபோது, மறுதலை மன்றச் சீட்டுக்களை அரசுச் செயலரின் அனுமதியில்லாமலே விற்பதற்கு இந்திய அரசுக்கு அதிகாரமளிக்கப்பட வேண்டும். குழு நியமிக்கப்படும் போது மாற்று வீதம் ரூ. 1 = 1 s. 8 d. ஆக இருந்தது. 1919–டிசம்பரில் 2 s. 4 d. ஆக உயர்ந்தது. இந்நிலையில் சாம்பர்லின் குழுவின் அறிக்கைப்படியே பொற்காசுகள் புழக்கத்திலிருப்பதை ஊக்குவிப்பது உகந்ததல்ல.

(3) வெள்ளி பற்றாக் குறையாக இருப்பதால், சவரனுக்குப் பதில் வெள்ளி ரூபாய்களை அளிப்பது நிறுத்தப்படவேண்டும்.

(4) வணிக மாற்றுச் சீட்டுக்களை அடிப்படையாகக் கொண்டுதான் பண வெளியிடுதலில் நெகிழ்ச்சியை ஏற்படுத்தக் கூடுதலாக மேலும் ரூ. 5 கோடிக்கு பரீட்சார்த்தமாகத் தாள் பணம் வெளியிட வேண்டும். 90 நாட்களில் முதிர்வடையக் கூடிய (Maturity) நல்லெண்ணத்தில் வரையப்பட்ட (bonafide bills) வாணிக மாற்றுச் சீட்டுக்களை மேலெழுதி (Endorsement) அவைகளைத் தலைமை வங்கிகள் (Presidency bank) துணைப் பிணையமாகக் (Colleteral security) கொடுத்ததால் அந்த ரூ. 5 கோடியும் கடனுக அவவங்கிகளுக்கு அளிக்கப்படுதல் வேண்டும்.

ஒரு ரூபாய்க்கு 2 ஷில்லிங் பொன் என்ற வீதத்தை ஏற்றுக் கொண்டு அரசுச் செயலர் அதை நடை முறையாக்கியபோது சில விளைவுகள் ஏற்படத் தொடங்கின. மக்களுக்குப் பணத்துறை அதிகாரிகள் மேல் அவ்வளவு நம்பிக்கை இல்லாததால் இங்கிலாந்திற்கு மிகையான அளவுக்குச் செலுத்தத் தொடங்கினர். இதனால் மறுதலை மாற்றுச் சீட்டுக்களை அதிக அளவுக்கு அரசு கொடுக்க வேண்டியிருந்தது. நாணயமாற்று வீதம் 2 s. 3 $\frac{29}{32}$ d. ஸ்டெர்லிங்கிலிருந்து 2 s. 10 $\frac{29}{32}$ d. ஸ்டெர்லிங் வரை (2 s. பொன்) மாறுபட்டது. ஒரு சவரன் விலை ரூ. 15 என்பதை ரூ. 10-க்குக் கொண்டு வர எடுத்த முயற்சி படுதோல்வி அடைந்தது; நாணயங்கள் புழக்கத்திலிருந்து மறைந்தன. இரண்டு ஷில்லிங்

1. R.B.I. Bombay, History of Reserve Bank of India 1970 PP 52—53.

பொன்னிலிருந்து இரண்டு ஷில்லிங் சவரன் என்ற மாற்று வீதத்தை 1920 ஜூன் 20 லிருந்து கொண்டு வரலாமென்ற முயற்சியும், 1920 செப்டம்பர் திங்களில் கைவிடப்பட்டது. இதன் விளைவாக, ஸ்டெர்லிங்குக்கான மக்களின் தேவை அதிகரிக்கத் தொடங்கியது. ஒரு வாரத்திற்கு £1 மில்லியின் என்று வரையறை இருந்தாலும் மக்களின் கோரிக்கை £100 மில்லியனுக்கு எட்டியது. 1920 செப்டம்பர் 28 முடிய மறுதலை மன்றச் சீட்டுக்கள் £55·4 மில்லியனுக்கு விற்பனையாகியுள்ளது. இப்படியாகச் செலாவணி குறைந்ததால் நாணயமாற்று வீதம் குறைந்து கொண்டே போவதைத் தடுக்க முடியவில்லை. 1921-ல் ஒரு ரூபாய் = ஒரு ஷில்லிங் பொன் அல்லது, 1 s. 3 d. ஸ்டெர்லிங் என்ற அளவுக்குக் கீழே மாற்றுவீதம் வந்தது. ஆனால் 1924-அக்டோபரில் ரூ. 1 = 1 s. 4 d. பொன் (= 1s. 6d. ஸ்டெர்லிங்ஸ்) என்ற வீதத்திற்கு எட்டியது.

ஹில்டன் யங் குழு (Hilton young commission)

1921 முதல் 1925 முடிய அரசு (இந்தியா) பின்பற்றிய செலாவணிக் கொள்கை அவ்வளவாகச் சரியில்லாதது நன்கு விளங்கும் இந்திய நாணய மாற்றம் மற்றும் செலாவணிக் கொள்கையும், அதன் நடைமுறையும் பற்றி ஆய்வு செய்யவும், இந்திய நலனை முன்னிட்டு ஏதேனும் அக் கொள்கையில் சீர் திருத்தங்கள் தேவையா என அறிக்கை வெளியிடவும், எட்வர்ட் ஹில்ட்ன் யங் என்பவர் தலைமையில் இந்தியச் செலாவணி மற்றும் நிதிபற்றிய அரசுக் குழு (Royal Commission on Indian Currency and finance) ஒன்று 1925-ம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் அரசால் நியமிக்கப்பட்டது. ஆழ்ந்த ஆய்வுக்குப் பின் குழு தனது அறிக்கையை 1926 ஜூலை திங்கள் வெளியிட்டது. அதன் பரிந்துரைகள் தெளிவானதும், கருத்துமிக்கதும் என்றால் மிகையாகாது.

அக்குழுவின் அறிக்கையில் இந்தியச் செலாவணி முறையைப் பற்றிக் குறிப்பிடுகையில் 'அது ஒரு எளிமையான (Simple) முறை' என்று விளக்கப்படுகின்றது. ''செலாவணிக் கொள்கை மற்றும் கடன் கட்டுப்பாடு ஆகியவைகளை நிருவகிக்க பழைய முறையில் ஆபத்து உண்டாக்கக் கூடிய அளவுக்குப் பொறுப்புகள் பிரித்துத் தரபபடுகின்றன...''

செலாவணி முறை (இந்தியா) நெகிழ்ச்சியற்ற தன்மையைக் கொண்டதாக இருக்கின்றது என்று அக் குழு கூறுகின்றது. செலாவணி தானாகவே அதிகரிப்பதோ, குறைவதோ இல்லாதபடி

செலாவணி முறை அமைந்திருக்கின்றது. அந்த ஏற்ற இறக்கங்கள் பணத்துறை அதிகாரிகளின் விருப்பப்படிதான் நடைபெறுகின்றன.

"உலகில் வாணிபச் சிறப்புக் கொண்ட பல நாடுகளில் ஒன்றான இந்திய நாட்டில்தான், பொதுவாக, செலாவணி முறையிலும், குறிப்பாகத் தாள்பண வெளியிடுவதிலும் அரசு நேரடியாகத் தலையிட்டுக் கட்டுப்பாடுகளை வகுக்கின்றது. நாட்டில் வங்கிக் காப்பும், செலாவணிக் காப்பும் தனித் தனியாக நிருவகிக்கப்படுகின்றன. இதனால் தான் சிக்கனமாகவும், திறம்படவும் நிலைபேருக்கம் செய்யப்படும் சக்தி குறைகின்றது.

செலாவணிக் கொள்கையில் பல்வேறு மாற்றங்களை பரிசீலனை செய்த பின் அக் குழு முடிவு செய்ததாவது: இந்திய மக்களிடையே நம்பிக்கை வளர்க்க வேண்டுமென்றால் செலாவணி முறை பொன்னுடன் இணைக்கப்பட வேண்டும். அதாவது, மெய்யான பொன் திட்டத்தைக் கொணர வேண்டும். குழுவின் கூற்றுப்படி பொன் திட்டம் என்பது பழமையான பொன் திட்டத்தைக் குறிக்காது என்றும், பொற்கட்டித் திட்டத்தைத்தான் குறிக்கும் என அறிய வேண்டும். இத் திட்டப்படி, பொற்காசுகள் புழக்கத்திலிருக்காது. ஆனால் பொன்—ரூபாய் நாணய மாற்றுச் சமநிலையில் பணத்துறை அதிகாரிகள் அளவற்ற தொகைக்குப் பொன்னை வாங்கவும், விற்கவும் செய்வர். சவரன், அரைச் சவரன் சட்டப்பணமாக இருந்தவை இனிமேல் கைவிடப்பட வேண்டும் எனவும் அக்குழுவால் வலியுறுத்தப்பட்டது.

புழக்கத்தில் பொன் இருக்கக் கூடாது என பரிந்துரைத்ததின் காரணங்கள் பலவாகும்.

(1) இருப்பாக வைக்கப்பட்டுள்ள பொன்னைப் புழக்கத்திற்குக் கொண்டு வந்தால், பொன் இருப்புக் குறைவதால் கடன் ஆக்கமும் குறையும்; ஏனென்றால், கடனுக்கும் பொன்னின் காப்பிருப்பைப் பொறுத்து அமையும். இதனால் செலாவணியின் நெகிழ்ச்சி குறையும்.

(2) இந்தியாவில் பொன்னுக்குக் கூடுதல் தேவையினால் பொன்னை வாங்கும் நாடுகளிடையே போட்டி மிகுவதால் பொருள்களின் பொன் விலை சரிகின்றது. கடன் அளிப்புக் குறைக்கப்படும்.

(3) செலாவணிக்கு எவ்வளவு பொன் தேவை என்று கணக்கிடுதல் இயலாததாகும். பொன் புழக்கத்திற்கு வந்தால் தாள் பணத்தைக் கையாளுபவர்கள் கூட பொன்னை உபயோகிக்க

விரும்புவர். இதனால் தேவை எவ்வளவு என நிர்ணயிப்பது மிகக் கடினமான செயலாகும்: இதே போல் வெள்ளியின் விலை குறைவதால் வெள்ளியை மதிப்பிருப்பாக (Store of Value) வைத்திருப்போர் அதன் மேல் நம்பிக்கையை இழந்து பொன்னை வைத்திருக்க விரும்புவர்.

பொன் திட்டத்தில் செலாவணியின் முக மதிப்பிற்குத்தான் பொன் வாங்கவும், விற்கவும் செய்ய வேண்டும். ஆனால் இந்தியாவிலும் அதே விதியைக் கடைப்பிடிக்க முடியுமா வென்றால் அது கேள்விக் குறியாகத்தான் இருக்கும்? ஏனென்றால் செலாவணிக்கு மட்டும் பொன் தேவைப்படாமல் சமூக வாழ்க்கை நோக்கத்திற்காகவும் அது தேவைப்படுகின்றது. இத்தேவைகள் அனைத்தும் ஒழுங்கான பொற் கட்டிச் சந்தை மூலம் நிறைவேற்றப்படுகிறது. எனவே, பணத்துறை அதிகாரிகள் பொன் விற்கப்படும் போதே, செலாவணி நோக்கம், செலாவணி யற்ற நோக்கம் எனப் பாகுபடுத்தி நிபந்தனைகள் விடுக்க வேண்டும் என அக்குழு பரிந்துரையுடன் உயர் பொன் நிலைக்குக் கீழாக (Below the upper gold point) எப்போது லண்டனில் தந்தி வழி மாற்ற வீதம்(Telegraphic transfer rate) இருக்கிறதோ, அப்போது ரூபாய் சமநிலை (parity) விலை ஒரு தோலாவுக்கு ரூ. 21—3—10 க்கு ரூ. 1=16 அணா 1 அணா = 6 பைசா) அதிகமான விலையில் தான் பொன் விற்பனை விலை நிர்ணயிக்கப்பட வேண்டும் எனவும் பரிந்துரைத்தது. இப்படிச் செய்யவில்லை என்றால் பணத்துறை அதிகாரிகளின் பொற்சந்தை விலைதான் இந்தியாவிலேயே மலிவானதாக இருக்கும் மேலும் பொன்—ரூபாய் சமநிலை விலைக்கு மேலாக விற்பதால் பொன்னை லண்டனிலிருந்து இறக்குமதி செய்யாமலேயே பொன் இருப்புக் குறையாமல் வைத்துக் கொள்ள முடியும்.

காகிதச் செலாவணிக் காப்பையும், பொன் திட்டக் காப்பையும், ஒன்றிணைப்பு (Amalgamation) செய்ய வேண்டுமென்ற மற்றுமொரு பரிந்துரையைக் குழு முன்வைத்தது. ஒன்றுகச் சேர்க்கப்பட்ட இருப்புச் சட்டப்படி அமைக்கப்பட வேண்டும் என்றும், குறைந்தது 40 சத வீதம் மாவது பொன்னும் பொற் பிணையல்களும் இருப்பு வைக்கப்ட வேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டது படிப்படியாக வெள்ளி இருப்பு குறைக்கப்பட வேண்டும். புதிதாக வெளியிடப்படும். காகிதச் செலாவணிகளுக்கு வெள்ளி ரூபாய் மாற்றப்படும் உரிமை இரத்து செய்யப்பட வேண்டும்.

1926 மார்ச் 31 ல் (குழுவின் அறிக்கைக்கு முன்) பொன் திட்டக் காப்பின் இருப்பு எவ்வளவு என்றும் காகிதச் செலாவணி

காப்பு எவ்வளவு என்றும், பற்பல ஆண்டுகளில் (1935 வரை) அவைகளின் இருப்பு தனித்தனியாக என்ன வென்றும், ஒன்றுக இணைத்த பின் இருப்பு என்ன வென்றும் கீழ்கண்ட அட்டவணைகளில் காண்போம்.

★ 1926 மார்ச் 31-ல்

பொன் திட்ட காப்பு	:	40 மில்லியன்
காகிதச் செலாவணி காப்பு	:	ரூ. 193 கோடி
பொற்காசும் பொற் கட்டியும்	:	ரூ. 622·32 கோடி
பொற்காசும் வெள்ளிக் கட்டியும்	:	ரூ. 84·91 கோடி
ஸ்டெர்லிங் பிணையங்கள்	:	ரூ. 29·00 கோடி
ரூபாய் குழல்மாற்றுச் சீட்டுக்கள்	:	ரூ. 47·11 கோடி
ரூபாய் பிணையங்கள்	:	ரூ. 10·00 கோடி

★★ (அ) காகிதச் செலாவணிக் காப்பு (ரூ. கோடியில்.)

	மார்ச் 31-ல்					
	1870	1900	1920	1930	1932	1935
1) இந்தியாவில்						
பொற்காசும், பொற்கட்டியும் ...	0.03	13.50	44.36	32.27	5.26	41.55
வெள்ளிக்காசு ...	5.35	5.24	32.22	108.11	101.96	72.25
வெள்ளிக்கட்டி ...	1.48	—	6.63	2.85	9.23	13.12
ரூபாய் பிணையங்கள் ...	3.60	10.00	10.00	33.85	57.94	35.90
கருவூல மாற்றுச் சீட்டுக்கள் ...			9.53	—	—	—
உள்நாட்டு மாற்றுச் சீட்டுக்கள் ...				—	3.75	—
ஆகக்கூடுதல் ...	10.47	28.74	103.80	177.08	178.14	167.82

★ Ibid...P 55
★★ Ibid...P852

(தொடர்ச்சி அ. பக்கம்)

(2) இங்கிலாந்தில்

பொற் கட்டி			3.45	—	—	—
வெள்ளிக் கட்டி			—	—	—	—
ஸ்டெர்லிங் பிணையங்கள்			67.27	0.15	—	18.28
ஆகக் கூடுதல்			70.72	0.15	—	18.28
மொத்தக் காப்பு இருப்புகள் (1+2)= மொத்தத் தாள் பண வெளியிட்டவை.	10.47	28.74	174.52	177.23	178.14	186.10

(ஆ) பொன் திட்டக்காப்பு (ஸ்டெர்லிங் : ஆயிரம்)

மார்ச்சு 31–ல்

1. இங்கிலாந்தில்	1902	1909	1919	1930	1932	1935
கருவூல மாற்றுச் சீட்டுகள்	—	1,486	2,938	9,105	4,220	11,630
கடன்கள் (Loans)	3,454	5,946	26,792	28,739	6,475	26,216
பொன்	—	—	—	2,152	2,152	2,152
ரொக்கம்	—	470	6,016	4	—	2
ஆகக் கூடுதல்	3,454	7,884	35,745	40.000	12,847	40,000

2. இந்தியாவில்						
பொன்					27,153	—
ரூபாய் நாணயம்	—	10,587	—	—	—	—
பிற (Others)	—	—	—	—	—	—
ஆகக் கூடுதல்	—	10,587	—	—	27,153	—
மொத்த காப்பிருப்பு 1+2	3454	18471	35,745	40,000	40,000	40,000

(இ) ஒன்றிணைக்கப்பட்ட காகிதச் செலாவணி மற்றும் பொன் திட்டக் காப்புகள் (ரூ. கோடியில்)

	மார்ச்சு 31-ல்		
	1931	1932	1935
பொன் ...	37.05	44.33	44.42
ஸ்டெர்லிங் பிணையங்கள் ...	42.13	14.26	68.74
வெள்ளி நாணயம் ...	117.86	101.96	77.25
வெள்ளிக்கட்டி ...	6.94	9.23	13.12
ரூபாய் பிணையங்கள் ...	10.19	61.69	35.90
மொத்தம் ...	214.17	231.47	239.43
இதில் காகிதச் செலாவணிக் காப்பு = மொத்ததாள் பணம் வெளியிட்டவை ...	160.84	178.14	186.10
பொன் திட்டக் காப்பு ...	53.33	53.33	53 33

ரூ. 3.75 கோடி மதிப்புடைய உள்நாட்டு மாற்றுச்சீட்டுகளும் சேர்க்கப்பட்டுள்ளன.

ஒரு ரூபாய் தாள்பணம் மீண்டும் நடைமுறைக்குக் கொண்டு வரப்பட வேண்டும் என மற்றொரு பரிந்துரையும் குழு வலியுறுத்தியது. அத்தாள் பணம் சட்டப்பணமாக இருந்தாலும் வெள்ளி ரூபாயாக அது மாற்றப்பட முடியாது எனவும் அறிக்கை குறிப்பிட்டது. மேலும், பொன்-ரூபாய் சம நிலை விலை 1 s. 6d.—ஆகவே இருக்கவேண்டும் எனவும் அச்சமநிலை வீதத்திற்கு ஏற்றவாறு தான் விலைவாசிகள் இந்தியாவிலும் உலகெங்கிலும் சரி செய்யப்பட வேண்டுமெனவும் குழு பரிந்துரை செய்தது.

பரிந்துரைகளில் மிக முக்கியமானதும் குறிப்பிடத்தக்கதுமான ஒன்று 'மைய வங்கி' (Central Bank) ஒன்றை இந்திய நாட்டில் ஏற்படுத்த வேண்டுமென்பதாகும். 1925–க்கு முன்னர் இந்தியாவில் பணத்துறை இரு வேறு துறைகளால் நிருவகிக்கப்பட்டு வந்தது. செலாவணி முறை அரசுச் செலாவணிக் கட்டுப்பாடு அதிகாரியாலும் கடன் கட்டுப்பாடு முறை இந்திய இம்பீரியல் வங்கியாலும் (Imperial bank of India) நிருவகிக்கப்பட்டன. நாட்டில் பணவாக்க முறையில் குழப்பங்கள் நிலவுவதற்குக் காரணம் அவைகள் இரண்டும் தனித்தனி நிருவாகத்தின் கீழ் இருப்பதுதான் எனக் குழு கூறியிருப்பதாக முன்பே கண்டோம். அந்த இரண்டு பணிகளும் ஒரு நிருவாகத்தின் கீழ் இருந்தால்தான் ஒருங்கிணைப்பு எதிர்பார்க்கப்பட்டு நாட்டில் பணவாக்கமுறையில் நல்லது காண முடியும் என விவரித்து 'மைய வங்கி' ஏற்படுத்த வேண்டும் எனக் குழு பரிந்துரைத்தது.'மைய வங்கி' பங்குநர்களைக் (Share holders) கொண்டு தொடங்க வேண்டுமென்றும், சட்டமன்றங்களின் எந்த விதக் கட்டுப்பாடின்றித் தனித்து இயங்கவேண்டும் எனவும் குழு கருதியது.

இப் பரிந்துரையை ஏற்ற அரசு 1920–ல் இம்பீரியல் வங்கிச் சட்டத்திற்கு ஒரு திருத்தப்பட்ட மசோதாவைக் கொணர்ந்தது. ஆனால் இம்மசோதாக்களுக்குக் கடும் எதிர்ப்பு இருந்தமையால், அரசு அவற்றைத் திரும்பப் பெற்றுக் கொண்டது. மைய வங்கி பற்றிய பரிந்துரையை அரசு 1927-ல் செயல்படுத்த முடியவில்லை. மேலும், வணிகர்களில் மிகவும் முக்கியமான பண்புள்ளவரான திருமிகு புருஷோத்தமதாசு தக்கூர்தாஸ் (Sri Purushotamdas, Thakurdas, a respectable person from business community) உள்பட பலர் இம்பீரியல் வங்கியையே மைய வங்கியாக மாற்றி விட வேண்டும் எனக் கூறினர்.

கைவிடப்பட்ட மைய வங்கி தோற்றுவிப்புப் பிரச்சினை மீண்டும் 1933–ல் புத்துயிர் பெற்றது. இந்திய அரசியலமைப்புச் சீர்திருத்தங்கள் (Indian constitutional Reforms)

வெள்ளை அறிக்கையின்படி, (White paper) மைய அரசுப் பொறுப்புகள் பிரிட்டனிடமிருந்து இந்தியாவுக்கு மாற்றவேண்டுமென்ற திட்டமிருந்தால் இந்தியாவில் மைய வங்கியான 'ரிசர்வ் வங்கி' ஏற்படுத்த வேண்டுமென்ற நிபந்தனை இடப்பட்டது. இந்த நிபந்தனைதான் இந்திய 'ரிசர்வ் வங்கி' தோன்றியதற்குக் காரணமாகும். அதன்படியே 1933-ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 8-ம் நாள் 'இந்திய சட்டமன்றத்தில்' மசோதா நிறைவேற்றப்பட்டது. ஆட்சித் தலைவரும் (Governal General) மார்ச் 6, 1934-ல் ஒப்புதல் அளித்தார். பின் ஏப்ரல் 1, 1935-ல் இந்திய ரிசர்வ் வங்கி சட்டப்படி தோற்றுவிக்கப்பட்டது.

குழுவின் பரிந்துரைகளை அரசு ஏற்றுக்கொண்டு 1927 சனவரியில் அப் பரிந்துரைகள் அடங்கிய மூன்று மசோதாக்களைத் தயாரித்து வெளியிட்டது. அவையாவன: (1) பொன் திட்டம் மற்றும் இந்திய ரிசர்வ் வங்கி மசோதா (Gold standard and Reserve Bank of India Bill), (2) இந்திய நாணயமாக்குச் சட்டம், 1906 (Indian Coinage Act) மற்றும் இந்திய காகிதச் செலாவணிச் சட்டம், 1923 (Indian Paper Currency Act) ஆகியவை திருத்தப்பட வேண்டிய மசோதா, மற்றும் (3) இந்திய இம்பீரியல் வங்கிச் சட்டம், 1920 (Imperial Bank of India) திருத்தப்பட வேண்டிய மசோதா.

முதல் மசோதாவும், மூன்றாவது மசோதாவும் இந்த அத்தியாயத்திற்கு—இந்தியச் செலாவணியின் வரலாறு—அவசியமில்லையாதலால் நாம் இரண்டாவது மசோதாவைப்பற்றிச் சற்று விரிவாகக் காண்போம். செலாவணி மசோதா 1927, மார்ச்சில் நிறைவேற்றப்பட்டு ஏப்ரலில் நடைமுறையாக்கப்பட்டது. அச் சட்டப்படி ரூபாயின் மாற்று வீதம் 1 s. 6d-ல் நிர்ணயம் செய்யப்பட்டது. அதாவது ஒரு ரூபாய்க்கு 8.47512 குன்றிமணி எடையுள்ள தூய பொன் என்று வரையறுக்கப்பட்டது. சவரன்களும், அரைச் சவரன்களும், மதிப்பிழக்கச் செய்யப்பட்டன. (Demonetised) ஆனால் அவைகள் பொற்கட்டியாக செலாவணி அலுவலகங்களிலும், கருவூலங்களிலும் பெற்றுக் கொள்ளப்படும். ஒரு தோலா எடையுள்ள தூய பொன்னை ரூ. 21-3-10 க்கு வாங்குவதும். விற்பதும் அரசின் கடமையாகும் என முதன் முறையாக அது சட்டமாக்கப்பட்டது. ஆனால் விற்பனையின் போது பொன்னாகவோ, ஸ்டெர்லிங்காகவோ அரசு விருப்பப்படி அளிக்கலாம். இப்படியாகச் செலாவணிச் சட்டம் 1927 ன் படி பொற்கட்டித் திட்டத்துடன் ஸ்டெர்லிங் மாற்றுத் திட்டமும் (Gold bullion cum sterling exchange standard) இருந்ததெனக் கூறலாம்.

சட்ட மன்றத்தில் 1 s. 6 d. மாற்று வீதத்திற்குக் கடும் எதிர்ப்பு இருந்த போதிலும், அதுவே நிலையாக்கப்பட்டது. நிதி உறுப்பினரான திருமிகு பேஸில் பிலாக்கட் (Sir Basil Blackett) என்பவர் 1 ஷில்லிங் 6 பென்சுதான் மாற்று வீதமாக இருக்க வேண்டுமென்று வாதாடினார். நிகழ்வு நிலைப்படிப் (defacto) பார்த்தால், அந்த மாற்று வீதமே கடந்த இரண்டு ஆண்டுகளாகவே இருந்து வந்திருக்கிறதென்றும், செலாவணியில் நிலைபேருக்கம் காண முடிகிறதென்றும், மக்களிடையே நம்பிக்கை வளர்ந்திருக்கிறதென்றும், வேளாண்மையினருக்கு (Agriculturist) அவரது உற்பத்திப் பொருளுக்கு நியாயமான விலை கிடைக்கிறது என்றும் அவர் எடுத்துரைத்தார்.

ஆனால் புருஷோத்தமதாசு அந்த மாற்று வீதத்திற்குத் தனது எதிர்ப்புகளைத் தெரிவித்து 1 ஷில்லிங் 4 பென்சுதான் இருக்க வேண்டுமென அடித்துக் கூறியிருக்கிறார். "செலுத்து நிலை இந்தியாவிற்கு எப்போது சாதகமாக இருக்கிறதோ அப்போதே நாணயமாற்று வீதத்தைக் கட்டுப்படுத்தவில்லை என்றால் அது நிச்சயம் அதிகரிக்கத்தான் செய்யும்" என அவர் பரிந்துரைத்திருக்கிறார். மேலும் அவர் கூறுவதாவது : "1 ஷில்லிங் 4 பென்சில் தான் நிலைப்படுத்த வேண்டும் என நாங்கள் ஏன் கேட்டுக் கொள்கிறோம் என்றால் அது சட்டப் புத்தகத்தில் (Statutary Book) 1914 வரைக்கும் இருந்திருக்கிறது. இந்திய நாடு ஒன்றில்தான் மிகக் குறைந்த அளவுக்கு மாற்று வீதம் நிலைதடுமாறி இருக்கிறது. அதுவும் 1 s. 4 d. பொன்மாற்று வீதம் கடந்த மூன்று ஆண்டு காலமாகத்தான் மாறுபட்டிருக்கிறது. அப்போது கூட 1 s. 5 d. ஆகத்தான் மாறி இருக்கிறதே தவிர 1 s. 6 d. ஆக மாறவில்லை...1 s 4 d. தான் கடந்த 12 ஆண்டுகளாக நிலவியிருக்கின்றது ....."

என்னதான் தக்கூர் தாசு வாதாடினாலும் அவரால் வாதாட்டப் போரில் வெல்ல முடியவில்லை. செலாவணிச் சட்டம் 1927 ன் படி சட்டப்புத்தகத்தில் 1 s. 6 d. தான் மாற்று வீதமாகக் குறிக்கப்பட்டது. அப்படி இருந்தும் செலாவணி மாற்று வீதப் பிரச்சினை முடிவுறவில்லை. இந்திய ரிசர்வ் வங்கி தோற்றுவிக்கப் பட்ட பின்னும் வாதம் நீடிக்கலாயிற்று.

செலாவணி மாற்றுத் திட்டம் (1927—35)
(Towards an Exchange Standard)

1930 வரைக்கும் 1 ஷில்லிங் 6 பென்சு மாற்று வீதத்தில் செலாவணி முறை எவ்வித இடர்ப்பாடும் இல்லாமல் நடை முறையில் கையாளப்பட்டது. 1930 ல் உலகப் பொருளாதார

மந்தத்தில் இந்தியாவும் சிக்க வேண்டியிருந்தது. வேளாண்மைப் பொருள்களின் விலை சரியத் தொடங்கியது. இதன் விளைவாக அந்நியச் செலாவணி மிகவும் பாதிக்கப்பட்டது. அரசியல் குழப்பமும் நாட்டில் சத்தியாக்கிரக இயக்கத்தால் நிலவியது. அரசியல் தூண்டுதலின் விளைவாக ரூபாய் நாணயமாற்று வீதம் குறைக்கப்பட வேண்டியிருந்தது. இதனால் ஒரு சில திங்கள்களுக்குள் அதிகமான அளவுக்கு ஸ்டெர்லிங்குகளை இந்திய அரசு விற்க வேண்டியிருந்தது.

இதற்கிடையில் பொருளாதார நிலை இங்கிலாந்து போன்ற மேலை நாடுகளில் மிகவும் மோசமடைந்தது. கடன்கள் அதிக அளவுக்குப் பல நாடுகளில் கொடுத்துவிட்டு இங்கிலாந்து தவிக்கலாயிற்று. கடன் பெருக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்காக இங்கிலாந்து வங்கி வங்கி வீதத்தை 2½ சத வீதத்திலிருந்து 4½ சதவீதமாக 1931 ஜூலையில் உயர்த்தியது. அவசர வரவு செலவுத்திட்டத்தை உருவாக்கி வரிப்பளுவை அதிகப்படுத்தியது. கடைசியில் 1931 செப்டம்பர் 21-ல் இங்கிலாந்து பொன்திட்டத்தைக் கைவிடும் படியாகிவிட்டது. மேலும் வங்கிவீதம் 6 சதவீதமாக உயர்த்தப்பட்டு நாணயமாற்றுக் கட்டுப்பாடுகளையும் (Exchange controls) கொண்டு வந்தது.

ரூபாய் மதிப்பைக் குறைந்த நாணயமாற்று வீத நிலையில் வைப்பதற்காக 1931 ஆகஸ்டிலிருந்து செப்டம்பர் 19-முடிய £ 11 மில்லியன் ஸ்டெர்லிங்குகளை இந்திய அரசு விற்கவேண்டியிருந்தது. பொன்திட்டத்தை இங்கிலாந்து நாடு கைவிட்டதைத் தொடர்ந்து ஆட்சித்தலைவர், செலாவணிச்சட்டம் 1927-ன்படி பொன் அல்லது ஸ்டெர்லிங்குகளை விற்பனை செய்வதை நிறுத்தும் படி உடனடி ஆணை ஒன்றைச் செப்டம்பர் 21-லேயே பிறப்பித்தார். செப்டம்பர் 24-ல் ரூபாயை ஒரு ஷில்லிங் ஆறு பென்சு ஸ்டெர்லிங்குடன் இணைக்கும்படி மற்றுமொரு ஆணையைப் பிறப்பித்தார். ஆனால் அவ்விரண்டு ஆணைகளுமே சட்டநீக்கம் (Repeal) செய்யப்பட்டு மீண்டும் செலாவணிச்சட்டம் 1927-க்குப் புத்துயிர் அளிக்கப்பட்டது. இருந்தாலும், பொன்னை, ஸ்டெர்லிங்கோ அங்கீகரிக்கப்பட்ட வங்கிகளுக்குத்தான் விற்கப்பட்டது. அவ்வங்கிகளும், உண்மையான வணிகத் தேவைகளை நிறைவு செய்வதற்காகவும், செப்டம்பர் 21, 1931-க்கு முன்னர். முடிந்த 'ஒப்பந்தவினை' (Contracts) களின் தேவை மற்றும் நியாயமான சொந்த அல்லது வீட்டுத் தேவை ஆகியவைகளை நிறைவு செய்வதற்காகவும், அரசால் விற்கப்பட்ட பொன்னை அல்லது ஸ்டெர்லிங்கைப் பயன்படுத்த வேண்டும். எந்தக் காரணத்தைக் கொண்டும் நாணயங்களை அல்லது உலோகக் கட்டிகளை இறக்குமதி

செய்வதற்காகவோ, மிகை விற்பனையால் அந்நியச் செலாவணி நாணயமாற்று நிலையைச் சரி செய்வதற்காகவோ (For liquidation of oursold exchange position) பயன்படுத்தக்கூடாது. எல்லாப் பேரங்களும் இந்திய இம்பீரியல் வங்கி மூலமே நடைபெற வேண்டும்.

பொன் திட்டத்தினின்றும் விலகியதால் ஸ்டெர்லிங்கின் பொன் மதிப்பும் இறங்கியது. ரூபாய் ஸ்டெர்லிங் மதிப்பு வீதம் மாறுமலிருந்ததால் ரூபாயின் பொன்மதிப்பும் வீழ்ந்தது. அதாவது, பொன்னின் விலை ரூபாய் அளவில் அதிகரித்தது. பம்பாயில் 1931 ஆகஸ்டில் ஒரு தோலா பொன்னின் விலை ரூ. 21-4-0 ஆக இருந்தது. டிசம்பரில் ரூ. 30-12-0 ஆக உயர்ந்தது. 1935 ஏப்ரலில் மேலும் உயர்ந்து ரூ. 36-12-0-க்கு வந்தது. இருந்த போதிலும், மேலை நாடுகளை ஒப்பிட்டுப் பார்க்கும் போது இந்தியாவில் பொன் விலை மலிவானதாகும். இதனால் பொன்னை வெளிநாடுகளுக்கு எடுத்துச் சென்று விற்பதால் மிகுதியான இலாபம் கிடைத்தது. 1931-32-ல் 7.7 மில்லியன் அவுன்சுகள் ரூ. 57.98 கோடி மதிப்புடைய பொன் ஏற்றுமதியாகி யிருக்கிறது. 1941 மார்ச்சு முடிய 43 மில்லியன் அவுன்சுகள் ரூ. 375 கோடி மதிப்புள்ள பொன் உள்நாட்டை விட்டுப் பிற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டிருக்கின்றது. ஒரு தோலா சராசரி விலை ரூ. 32-12-4 ஆகும்.

எந்த நோக்கத்துடன் — இலாபம் அடைதல், ரூபாயின் மதிப்பு இறங்குகிறது என்ற அச்சம் — பொன் ஏற்றுமதி செய்யப் பட்டாலும் பொன் வெளிச் செல்வதைத் தடுப்பது, அரசே பொன்னை வாங்குவது போன்ற செயல்களினின்றும் அரசு தவறி விட்டது என வன்மையாகப் பொதுமக்களால் கண்டிக்கப்பட்டது.

இரண்டாம் உலகப் போர்:

இரண்டாவது உலகப் போர் தொடங்கிய (செப்டம்பர் 1939) ஒரு சில தினங்களுக்குள்ளாகவே வெள்ளி ரூபாய் நாணயங்கள் புழக்கத்தில் இருந்து மறையத் தொடங்கின. சூன் 15-லிருந்து ஆகஸ்ட் 1940 முடிய இரண்டு மூன்று திங்களுக்குள் ரூ. 21.93 கோடி மதிப்புள்ள தாள் பணம் இந்திய ரிசர்வ் வங்கிக்குச் சென் றிருக்கின்றது எனக் கூறப்படுகின்றது. 1940 சூன் 21-ல் ரிசர்வ் வங்கியின் (பண) வெளியீட்டுத் துறையில் (Issue Department) ரூபாய் நாணயங்கள் ரூ. 57.87 கோடிக்கு இருந்திருக்கின்றன. ஆனால் அதே ஆண்டு செப்டம்பர் 1-ல் அந்தத் தொகை குறைந்து

ரூ. 35.10 கோடிக்கு வந்திருக்கிறது.[2] இவ்வாறு அதிக அளவுக்குத் தாள்பணம் வெள்ளிக் காசுகளாக (மக்களால்) மாற்றப்படுவதைத் தடைசெய்வதற்காக 1940 சூன் 25-ல் ஒரு அறிக்கையை வெளியிட்டது. அவ்வறிக்கையின்படி எவரும் அவரவர் சாதாரண தேவைக்கு மேல் ரூபாய் நாணயங்களை வைத்திருக்கக்கூடாது. அப்படி வைத்திருந்தால் சட்டப்படி குற்றமாகும். இவ்வறிக்கையின் விளைவாகப் பெரும்பாலான அளவுக்குத் தாள் பணம் மாற்றப்படுவது நின்றது. இருந்தாலும் சில்லறை நாணயங்களின் (Small coins) தேவை அதிகமாவது நிற்கவில்லை. இதைக் கட்டுப்படுத்துவதற்காகப் பம்பாயிலும், கல்கத்தாவிலும், சில்லறை நாணயங்கள் அச்சிட்டு வெளியிடுவது வரையறை செய்யப்பட்டது. அளவுக்கு மீறி எழுந்த தேவையைச் சமாளிக்க ஆங்காங்கே சில்லறை நாணயக் கிடங்குகள் திறக்கப்பட்டன. 1940-ஜூலையில் மீண்டும் ஒரு ரூபாய் தாள்பணம் வெளியாக்கம் செய்யப்பட்டது. (1935-ல் முதன்முதலில் வெளியிட்டாலும் நடைமுறைக்குக் கொண்டுவரப்படவில்லை). 1943-பிப்ரவரியில் இரண்டு ரூபாய் தாள்பணமும் ரிசர்வ் வங்கியால் வெளியிடப்பட்டது. இவைகளின் வெளியீட்டால் நாணயத் தட்டுப்பாடு பெருமளவுக்கு நீங்கியது.

நாணய முடக்கத்தை மேலும் குறைப்பதற்காக ஒரு ரூபாய் அரை ரூபாய் வெள்ளி நாணயங்களின் தூய்மை (Fineness) $\frac{11}{12}$-லிருந்து $\frac{1}{2}$ ஆகக் குறைக்கப்பட்டது. மேலும் பழைய நாணயங்கள் புழக்கத்தினின்றும் அகற்றப்பட்டன. இவைகள் 1940-ல் சட்ட பூர்வமாகச் செயலாக்கப்பட்டன. 1941 ஏப்ரலிலிருந்து 'விக்டோரியா' ஒரு ரூபாய், அரை ரூபாய் நாணயங்கள் புழக்கத்திலிருக்கக்கூடாது என 1940 அக்டோபர் 10-ல் அரசு ஆணை பிறப்பித்தது. இதேபோல் மன்னர் ஏழாம் எட்வர்டு (King Edward VII) ஒரு ரூபாய், அரை ரூபாய் நாணயங்களும், 5ஆம் ஜியார்ஜ், 6ஆம் ஜியார்ஜ் ஒரு ரூபாய், அரை ரூபாய் நாணயங்களும் முறையே சூன் 1, 1942-லிருந்தும் மே 1, 1942-லிருந்தும் செல்லுபடியாகாவெனவும் இரண்டு ஆணைகள் பிறப்பிக்கப்பட்டன.

வெள்ளி நாணயங்களுக்குப் பதிலாக நிக்கல்—பித்தளை கலந்த நாணயங்கள்—ஒரு அணா, இரண்டு அணா — பம்பாய் நாணய அச்சகங்களில் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டன. குறைந்த எடையுள்ள ஒரு பைசா செப்புக்காசுகள், அதிக எடையுள்ள அதே காசுக்கும் பதிலாக 1943-பிப்ரவரியில் அச்சிடப்பட்டு வெளியாக்கம் செய்யப்பட்டன.

2. M. C. Vaish, Monetary theory (1968) P. 581.

போரினால் சிறுநாணயங்களின் பற்றுக்குறை அளவு கூர்ந்து காணப்பட்டது. ஒரு நாணயத்தைப் புழக்கத்திலிருந்து எடுத்து விட்டு வேறு நாணயம் வெளியிடப்பட்டதால் அவ்வப்போது மக்கள் நாணயப் பற்றுக்குறையால் அவதியுற்றனர். போருக்குப் பின் புது நாணயங்கள் வெளியிடப்பட்டதால் நிலைமை நாளடைவில் மாமூலாகியது.

பன்னாட்டுப் பண நிதியும் இந்தியச் செலாவணியும்
(International monetary fund and Indian currency)

இங்கிலாந்து பொன் திட்டத்தைக் கைவிட்ட காலத்திலிருந்து பன்னாட்டுப் பண நிதியில் இந்தியா உறுப்பினராகும் வரை (1—3—1947) ஸ்டெர்லிங் மாற்றுத்திட்டம் இந்தியாவில் பின்பற்றப்பட்டது. பன்னாட்டுப் பண நிதியில் உறுப்பு நாடானதும் இந்திய பணத்திட்டத்தில் பெரும் மாறுதல் உண்டாகியது. நிதி அமைப்புச் சட்டப்படி தங்கள் செலாவணியின் மதிப்பை ஒரு குறிப்பிட்ட எடையுள்ள பொன்னின் மூலமாகவோ, அமெரிக்க டாலரின் மூலமாகவோ உணர்த்தலாம். அதன்படி ஒரு ரூபாயின் மதிப்பு 0.268601 குன்றிமணி தூய பொன்னுக்கோ 30.23 சென்ட் (டாலரின் பிரிவு)களுக்கோ சமம் என 1947-ல் நிர்ணயிக்கப்பட்டது. முன்னமே ரிசர்வ் வங்கி ஸ்டெர்லிங்கு கூடத்தான் வாங்கவும், விற்கவும், செய்யவேண்டும். ஆனால் 1947-க்குப் பிறகு பன்னாட்டுச் செலாவணிகளையும் அவ்வப்போது நிகழும் நாணய மாற்று வீதத்தில் வாங்கவும் விற்கவும் இந்திய ரிசர்வ வங்கிக்கு இந்திய அரசால் உரிமை வழங்கப்பட்டது. எனவே, ஸ்டெர்லிங்கிற்கும் ரூபாய்க்கும் இடையேயுள்ள இணைப்பு 1947-ல் துண்டிக்கப்பட்டது. இந்திய ரூபாய் சுதந்திரமாக எல்லா நாடுகளின் செலாவணியுடனும் நேரடி தொடர்பு கொள்ளலாம். ஆகவே தற்பொழுது வழக்கத்திலுள்ள திட்டத்தை 'மேலாண்மையிட்ட அந்நியச் செலாவணித் திட்டம்' (Managed foreign exchange standard) அல்லது 'பன்னாட்டுப் பொன்—டாலர் மாற்றுத் திட்டம்' (International gold—dollar exchange standard) எனக் குறிப்பிடலாம். இந்திய ரூபாய்க்கும், மற்ற நாட்டுச் செலாவணிக்கும் இடையேயுள்ள நாணய மாற்று வீதத்தைப் பாதுகாத்துப் பொறுப்புடன் இந்திய ரிசர்வ் வங்கி, மேலாண்மை செய்வதால் அதற்கு மேலாண்மையிட்ட திட்டம் எனப் பெயரிடப்பட்டுள்ளது. நாணயமாற்று வீதம் மாற்றப்படுவதாக இருந்தால் 'நிதி'யின் ஒப்புதலின் பேரில் அரசே மாற்றுதல் செய்ய வேண்டும்.

நாள் பண வெளியீடு :

தாள் பண வெளியீட்டு வரலாறு பற்றியும், காகிதச் செலாவணிச் சட்டம் 1861 பற்றியும் இவ்வத்தியாயத் தொடக்கத்தில் விரிவாகக் கண்டோம். 1934-ம் ஆண்டின் இந்திய ரிசர்வ் வங்கியின் சட்டத்தின் 22 (1) ஆம் பிரிவுப் படி பண வெளியீட்டு முற்றுரிமை இந்திய ரிசர்வ் வங்கிக்கே வழங்கப்பட்டிருக்கிறது. அவ் வங்கியின் 'வெளியீட்டுத்துறை' (Issue department) பண வெளியீட்டைக் கவனிக்கின்றது. ஒரு ரூபாய் தாள் பணத்தைத் தவிர (ஒரு ரூபாய் நாணயத்திற்குப் பதிலாக அரசே தாள் பணத்தை வெளியிடுகின்றது.) ஏனைய தாள் பணம் எல்லாவற்றையும் (ரூ. 1000, ரூ. 5000, ரூ. 10,000 உள்பட) ரிசர்வ் வங்கியே வெளியிடுகின்றது. தக்க சொத்துக்களின் அடிப்படையில் பண வெளியீட்டுத்துறை பணத்தை வெளியீடு செய்கிறது. பணத்தைப் பொது மக்களுக்குக் கொடுத்துத் திரும்பப் பெறும் பணியை வங்கியின் 'வங்கித்துறை' (Banking department) மேற் கொண்டுள்ளது.

1934-ம் ஆண்டுச் சட்டப்படி பண வெளியீட்டில் வீத அளவுக் காப்பு முறை (Proportional reserve system) பின்பற்றப் பட்டது. இதன்படி மொத்தம் வெளியிடப்பட்டுள்ள தாள் பணத்தில் 40 சதவீதம் பொற்காசுகளாகவும், பொற்கட்டிகளாகவும், ஸ்டெர்லிங் பிணையங்களாகவும், இருப்பு வைத்திருக்க வேண்டும். இவற்றில் 40 கோடி ரூபாய்க்குக் குறையாமல் பொற் காசுகளும், பொற் கட்டிகளும் இருக்க வேண்டும். எஞ்சிய 60சத வீதம் இந்திய அரசுக் கடன் பிணையங்களாகவும் (Government of India secureties), ரூபாய் நாணயங்களாகவும் 90 நாட்களில் முதிர்வடையக் கூடிய வாணிப மாற்றுச் சீட்டுகளாகவும் கடனுறுதிச் சீட்டுகளாகவும் (Promissory notes) இருக்கலாம். இவற்றில் ரூபாய் பிணையங்களின் மதிப்பு ரூ. 50 கோடி அல்லது மொத்தத்தில் நான்கில் ஒரு பகுதிக்குக் கூடாமல் இருக்க வேண்டும்.

முன்பிருந்த காகிதச் செலாவணி வெளியீட்டுத் திட்டத்தைக் காட்டிலும் இப்புதிய திட்டம் சிறந்ததாகக் கருதப்பட்டது. ஏனென்றால் இத்திட்டத்தின் மூலம் செலாவணிக் காப்புகள் அனைத்தும் ஒன்று படுத்தப்பட்டன. மேலும் மாற்றுச் சீட்டுகள், கடன் உறுதிச் சீட்டுகள் ஆகியவற்றைக் காப்பாகக் கொள்ளலாம் எனும் விதி காகிதச் செலாவணி வெளியீட்டை ஓரளவுக்கு நெகிழ்ச்சி மிக்கதாக மாற்றியது. வேளாண்மை நாடான இந்தியாவிற்கு இவ்விதியால் பெரும் பயன் விளைந்தது. 1935-க்கு முன்னர் அறுவடைக் காலங்களில் இந்தியப் பணச்

சந்தையில் இக்கட்டுகள் ஏற்படுவது வழக்கம், 1935-க்குப் பின்னர் அத்தகைய இக்கட்டுகள் தாள் பண வெளியீட்டின் மூலம் தவிர்க்கப்பட்டன.

ஐந்தாண்டுத் திட்டங்களுக்கு அரசுக்கு மிகுதியாகப் பணம் தேவைப்பட்டதால் பண வெளியீட்டில் நெகிழ்வுத் தன்மையைக் கொண்டு வர 1956-ம் ஆண்டில் இந்திய ரிசர்வ் வங்கிச் சட்டத்தைத் திருத்தினர். இதன்படி குறும அளவுக் காப்பு முறை (Minimum reserve system) நடைமுறைக்குக் கொண்டுவரப் பட்டது. இதன்படி ரூ. 400 கோடிக்கு அயல் நாட்டுப் பிணையங்களும், ரூ. 115 கோடிக்குப் பொன்னும் ஆகக் கூடுதல் ரூ. 515-கோடிக்குக் காப்பீடு இருக்க வேண்டும். பன்னாட்டுப் பண நிதியிடம் ஒப்புக்கொண்டபடி ஒரு தோலா பொன்னின் மதிப்பு ரூ. 62.50 ஆயிற்று (முன்னமே ரூ. 21.24).

பின்னர், அந்நியச் செலாவணியில் பற்றுக்குறை ஏற்பட்டது. இதனால் 1957-ம் ஆண்டில் மீண்டும் இந்திய ரிசர்வ் வங்கிச் சட்டம் திருத்தப்பட்டுக் காப்புத் தொகையை ரூபாய் 200 கோடியாகக் குறைத்தனர். இதில் ரூ. 115 கோடிக்குக் குறையாமல் பொற்காசுகளும், பொற்கட்டிகளும் இருத்தல் வேண்டும். எஞ்சிய ரூ. 85 கோடிக்கு அயல்நாட்டுப் பிணையங்களாக இருத்தல் வேண்டும். காப்புத் தொகையாகிய ரூபாய் 200 கோடிக்குமே பொன்னுகவும் இருக்கலாம்.

குறிப்பிட்ட அளவு பொன்னும் அயல் நாட்டுப் பிணையங்களும் இருக்குமாயின் தாள் பண வெளியீட்டிற்கு உச்சவரம்பு ஏதும் இல்லை. ரிசர்வ் வங்கிகளின் மொத்தச் சொத்துகளும், வெளியீடப்பட்டுள்ள தாள் பணத்தின் மொத்த அளவும் சமமாக இருத்தல் வேண்டும்.

பதின்மான முறை (Decimal System) [3]

பதின்மான முறையினால் உண்டாகும் நன்மையைக் கருதி அம்முறைப்படியே நாணயங்களை அச்சிட்டு வெளியாக்கம் செய்யப்பட வேண்டுமென்று பல ஆண்டுகளாகவே வல்லுநர்கள வற்புறுத்தி வந்தனர். அம்முறையை நடைமுறைக்குக் கொண்டுவர வேண்டுமென முதல் முறையாக 1867-ல் முயற்சி தொடங்கியது. ஆனால் அம்முயற்சி பல காரணங்களால் திருவினையாகவில்லை. ஆனால் கடந்த பல ஆண்டுகளாக 'பதின்மான முறை' பல படித்த மேதைகளையும், பயிலகங்களையும் கவர்ந்தது. பண்டித ஜவஹர்லால் நேரு மற்றும் பேராசிரியர் அப்ஸல் ஹுசைன்—தலைவர்,

3. The contents are extracted from the book-let 'Decimal Coinage in India', (July 1956) Published by The ministry of Quina, Government of India.

இந்திய அறிவியல் காங்கிரஸ் பேரவை—ஆகியோரின் இணை அறிக்கை (Joint Statement) மூலம் இந்திய அறிவியல் காங்கிரஸ் பேரவை (Indian science Congress Association) அம்முறையை நடைமுறைக்குக் கொண்டு வருவதைப்பற்றி 1946-ல் ஒரு ஆய்வு செய்து அதன் கருத்தைக் கீழ்க்கண்டவாறு வெளியிட்டது. "செலாவணி முறை, எடை மற்றும் அளவைகள் (Currency weights and measures) பதின்மான முறைப்படுத்தப் படுவதைப் பல ஆண்டுகளாக இந்திய அறிவியல் காங்கிரஸ் பேரவை ஆதரித்திருக்கிறது. இந்தியா முழுமைக்கும் பதின்மான முறையைக் கொண்டுவர வேண்டுமென்று, 1946 சனவரியில் பெங்களூரில் நடந்த அறிவியல் காங்கிரஸ் கூட்டத்தில் பொதுக்குழு உறுப்பினர்கள் ஒருமனதாகத் தீர்மானம் நிறைவேற்றினர். சட்டமன்றத்தில் (Legislative Council) இந்தியச் செலாவணியைப் பதின்மான மாக்கப்படுவதுபற்றி மசோதா நிறைவேற்றப்பட்டதை இவ்வறிவியல் காங்கிரஸ் நிறைவுடன் வரவேற்கிறது." இருந்தாலும் அரசியலில் ஏற்பட்ட பல்வேறு மாற்றங்களால் இதற்கான மசோதா சட்டமாக உருவெடுக்கவில்லை.

1949-ல் எடை மற்றும் அளவை பற்றிய தனிக்குழுவின் (Special committee on weights and measures) அறிக்கையில் பதின்மான முறைபற்றிக் கீழ்க்கண்டவை காணப்பட்டன. "எடை மற்றும் அளவைக்குப் பதின்மான முறையைக் கொண்டு வருவதற்கு முன்னமே செலாவணியில் அம்முறையைக் கடைப்பிடிப்பது நன்மையாக இருக்குமெனக் குழு கருதுகிறது; ஆகவே செலாவணி முறை பதின்மானமாக்கப்பட வேண்டுமென்று குழு பரிந்துரைக்கிறது. புதிய காசுகளின் எடையும், பரும அளவும் பதின்மான முறைப்படி உள்ள எடை மற்றும் அளவையோடு இணைத்துக் கூறப்பட வேண்டும்; அப்போதுதான் புதிதாக வெளியிடக்கூடிய நாணய அலகுகளைப்பற்றி மக்களிடையே அறிமுகப்படுத்தி விளங்க வைக்க முடியுமென்று மேலும் குழு பரிந்துரைக்கிறது."

இப்படியாகப் பதின்மான முறைக்கு மேன்மேலும் ஆதரவு பெருகிக் கொண்டே சென்றது. அவைகளுக்கிணங்க 1955-ல் இந்திய அரசு பாராளுமன்றத்தில் ஒரு மசோதா தயாரித்தளித்தது. அம்மசோதா செப்டம்பர் 1955-ல் சட்டமாக—இந்திய நாணய மாக்குச் சட்டம் (திருத்தப்பட்ட) Indian Coinage (Amendment) act 1955 இயற்றப்பட்டது. இச்சட்டம் 1957 ஏப்ரல் 1-ம் நாளிலிருந்து, செலாவணி பதின்மான முறைப்படி கையாளப்பட வகை செய்தது.

இப்புதிய முறையில் ரூபாயின் உள்மதிப்போ, அதன் பெயரோ மாற்றம் செய்யப்படவில்லை. இதேபோல் அரை ரூபாய், கால்

ரூபாய் என்ற நாணயப் பிரிவும் மாற்றப்படவில்லை. ஒரு ரூபாய்க்கு 64 பைசா (Pie) எனப் பிரிக்கப்பட்டிருந்தவை 100 பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டன. இப்புதிய முறையில் புழக்கத்திலிருப்பவைகளுக்குக் 'காசுகள்' (Paise) எனப் பெயர். காசுகள் 1, 2, 3, 5, 10, 20, 25 மற்றும் 50 என்ற பிரிவுகளில் அச்சிடப்பட்டுச் சில்லறை நாணயங்களாகப் பயன்படுத்தப்படுகின்றன.

பிற நாடுகளில் பதின்மான முறை :

140 நாடுகளில் 105 நாடுகள் தங்கள் செலாவணி முறையைப் பதின்மானப்படி ஆட்சி செய்வதை இந்திய நாடும் அறிமுகப்படுத்துவதின் மூலம், இந்தியச் செலாவணி முறையில் ஓர் சீர்திருத்தத்தைக் கொண்டு வந்திருக்கிறது எனக் கூறலாம். பிரிட்டன் பல்பொருள் விளக்க நூலின்படி, (Encyclopaedia britannica) அமெரிக்க நாடுகள்தான் முதன் முதலில் பதின்மான முறைக்கு (1786—1792) வழி வகுத்தன என அறியப்படுகிறது. பிரான்சு நாடு (1799 மற்றும் 1803-ல்) பின்னர் பின்பற்றியது. அதைத் தொடர்ந்து ஜெர்மனி 1873-லும் ஸ்காண்டி நேவியன் நாடுகள் (Scondinavion states) 1875-லும் ஆஸ்த்திரியா ஹங்கேரி 1870-லும் ருஷ்யா 1839 மற்றும் 1897-லும் இலத்தீன் அமெரிக்க நாடுகளும், ஜப்பானும் 1871-லும் பதின்மான முறையின் நன்மைகள் எல்லோராலும் உணரப்பட்டாலும் ஐக்கிய அரசு (United Kingdom) மட்டும் இன்னும் அம்முறையைப் பின்பற்றவில்லை. அதற்குக் காரணம் முன்னமேயே 'தானியங்கி கணக்கீட்டு இயந்திரங்கள்' பரவலாக உபயோகப்படுத்தப்பட்டதுதான். புதிய முறையைப் புகுத்தினால் அவ்வெந்திரங்கள் எல்லாம் வீணாகிவிடும் என்ற நடைமுறைக் காரணத்தினால் தான் பதின்மான முறை செலாவணியில் ஆளப்படவில்லை.

செலாவணி வெளியீடு (Currency Issue)

இரண்டாம் உலகப் போர்க்காலத்திலும், நாடு பிரிவினையின் போதும், ஐந்தாண்டுத் திட்டக் காலங்களிலும், 1970-லும் செலாவணி வெளியீடு செய்தது எவ்வளவு என விரிவாக அட்டவணை மூலம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது. 1939-லிருந்து 1970 முடிய 31 ஆண்டுகளில் செலாவணி வெளியீடு 17 மடங்கு பெருகியுள்ளது. அதாவது ரூ. 250 கோடியிலிருந்து ரூ. 4248 கோடிக்கு அதிகரித்துள்ளது. 1974 டிசம்பரில் ரூ. 6, 135 கோடியாக அதிகரித்துள்ளது. இதே போல், செலாவணிப்பணமும், வைப்புப் பணமும் (=பண அளிப்பு (Money-supply)) சேர்ந்து மக்கள் கையில் 1960—61-ல் ரூ. 2869 கோடியாக இருந்தது. 1970—71-ல் ரூ. 7140 கோடிக்கு உயர்ந்து 1973—74-ல் ரூ. 10,833 கோடியை எட்டியுள்ளது. 1974 டிசம்பரில் ரூ. 11,063 கோடியாக இருந்தது.

மக்களிடம் பண அளிப்பு (MONEY SUPPLY WITH THE PUBLIC)

(ரூபாய் இலட்சத்தில்)


	1939	1943	1947	1951	1956	1961	1966	1971	1973	1974	May 1975
(1) மக்களிடம் செலாவணி :											
(அ) சில்லறை நாணயங்கள்	24	2343	7698	7585	6587	7102	10547	13726	16660	18595	20785
(ஆ) ரூபாய் நாணயங்கள்	1631	11173	16767	13002	13716	14169	18397	24731	29040	31381	33492
(இ) தாள் பணங்கள்	23328	83350	132600	116116	148079	194157	284155	417233	522311	609287	653929
(ஈ) வங்கிகளில் ரொக்கம்	...	...	...	...	...	4979	7585	16932	21766	24535	31404
ஆகக் கூடுதல் [ஆ+இ+ (அ—ஈ)]	24983	96866	157065	136703	168382	310449	305514	438758	546245	634728	676802
(2) மக்களிடம் வைப்புப் பணம்	...	...	...	...	...	77056	151733	280530	396704	452750	523705
(3) மக்களிடம் பண அளிப்பு (1+2)	24983	96866	157065	136703	168382	108505	457247	719288	942949	1087478	1200507

RESERVE BANK OF INDIA BULLETIN — FEBRUARY, MAY 1971 AND DECEMBER 1974

(Money Supply with the Public and Monetary Resources)

மக்களிடம் பண அளிப்பும், பணந்திரட்டு வகைமுறை வாய்ப்புகளும்

(Crores of Rupees)



வ ை ர ப ட ம்

ரூபாயின் மதிப்புக் குறைப்பு (Devaluation of the rupee) :

'பொன் மதிப்பு மற்றும் ஏனைய நாடுகளின் செலாவணி மதிப்பில் ஒரு நாட்டின் செலாவணி மதிப்பு குறைக்கப்படுதலே மதிப்புக்குறைப்பு' எனப்படும். நாட்டின் செலுத்து நிலை (Balance of payments) மிகவும் பாதகமாக இருப்பின் நாணய மதிப்புக் குறைப்பு செய்யப்படுகிறது. அவ்வாறு மதிப்புக்குறைப்பு செய்யப்படுவதால் ஏற்றுமதி ஊக்குவிக்கப்படுகிறது; இறக்குமதி குறைக்கப்படுகிறது. அதாவது, அயல் நாட்டவருக்கு ஏற்றுமதி செய்யும் நாட்டின் பொருள்கள் மலிவாகக் கிடைக்கின்றன; அதே போழ்து செலாவணி மதிப்பிறக்கம் செய்த நாட்டவருக்கு அயல் நாட்டுப் பொருள்கள் கிராக்கியாகின்றன. இந்தியாவில் 1966-க்கு முந்திய 10 ஆண்டுகளில் இறக்குமதி 87 சத வீதம் (ரூ. 679 கோடியிலிருந்து ரூ. 1263 கோடிக்கு) அதிகரித்திருக்கும் போது, ஏற்றுமதி 37 சத வீதந்தான் (ரூ. 610 கோடியிலிருந்து ரூ. 838 கோடிக்கு) அதிகரித்திருக்கிறது. ஏற்றுமதி உந்தப்படாததற்கு முக்கிய காரணம் இந்தியாவில் விலை மட்டம் 80 சத வீதம் உயர்ந்ததுதான். ஆனால் உலக விலை மட்ட உயர்வோ 25 சத வீதந்தான். 1964—லிருந்து 1966 வரை நாட்டில் வீக்க நிலை மிகை அளவுக்குச் சென்றுவிட்டது. வேளாண்மைப் பொருள் உற்பத்தி மிகவும் குறைந்தது; அதே போல் தொழிலகப் பொருள்களின் உற்பத்தியும், மூலப் பொருள்களின் இறக்குமதி கட்டுப்பாட்டினால், குறையத் தொடங்கியது; சமுதாய நல முன்னேற்றத்திற்காகத் திட்டச் செலவுகள் கூடின.

இப்படியாக, 1966-ல் இந்திய நாட்டுப் பொருளாதாரம் சம நிலையற்றிருந்தது. நாட்டில் சில முன்னேற்றத் திட்டங்களை நிறைவேற்றுவதற்காக, எந்திரங்கள், மூலப்பொருள்கள், எந்திர உதிரிப்பொருள்கள் போன்றவை அவசியமாக இறக்குமதி செய்யப்பட்டன. இதன் விளைவாக, இறக்குமதி இன்னும் அதிகரித்தது. இறக்குமதிக் கட்டுப்பாடுகளை அரசு கையாண்டாலும் பலன் ஒன்றும் கிடைக்கவில்லை. கள்ளக்கடத்தல், சட்ட விரோதமான வெளி நாட்டு ஈட்டங்களை ஆங்காங்கே முடக்கி வைத்தல் (Retention of illegal earnings abroad), இறக்குமதிகளுக்கு மிகையாக செலுத்தப்படுபவை மறைக்கப்படுதல் போன்றவைகளால் அந்நியச் செலாவணி மறைமுகமாக நாட்டை விட்டு வெளிச் சென்றது. (Leakage of foreign exchange).

இந்த வகையான பொருளாதார சமன்கேடுகளைச் சரி செய்வதற்காக 1966-ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 6—ஆம் நாள்

இரவு 2 மணிக்கு இந்திய ரூபாய் மதிப்புக் குறைப்பு செய்யப் பட்டது. (இங்கிலாந்து நாட்டை அடுத்து முதன் முறையாக இந்தியாவில் 1949–ஆம் ஆண்டில் செப்டம்பர் திங்கள் ரூபாயின் மதிப்பு குறைக்கப்பட்டது என்பது கவனிக்கப்பட வேண்டும்). இப்படி மதிப்புக் குறைப்பு செய்யப்பட்டது இரண்டாவது தடவை யாகும். பொன் அல்லது அமெரிக்க நாடுகளின் டாலருக்குச் சமமாக இந்திய ரூபாய் உணர்த்தப்படக் கூடிய ஒரு உடன் பாட்டை 1945 டிசம்பர் 27-ஆம் நாள் பன்னாட்டுப் பண நிதியுடன் இந்தியா செய்தது. அந்த உடன்பாட்டின்படி 1949-லிருந்து ஒரு ரூபாய் என்பது 0·186021 கிராம் பொன் னுக்கும் அல்லது 21 அமெரிக்கச் சென்ட்களுக்கும் சமம் எனக் குறிக்கப்பட்டது. அதாவது ஒரு அமெரிக்க டாலருக்கு ரூ. 4.76 சமமாகும். இச் சம அளவு வீதங்களில் ரூபாயின் மதிப்பு (1966-ல்), பொன் மற்றும் ஏனைய நாட்டுச் செலாவணிகள் மதிப்பினின்றும் 36.5 சத வீதம் குறைக்கப்பட்டது. ரூபாய் மதிப்புக் குறைப்புக்குப் பின், ரூபாய்—பொன், ரூபாய்-டாலர் புதிய முக மதிப்புகள் கீழ்க்கண்டவாறு இருந்தன.

ரூ. 1 = 0.118516 கிராம் பொன்.

ரூ. 1 = 13 சென்ட்கள் அல்லது $ 1 = ரூ. 7·50

இதே போல் ரூபாய்—ஸ்டெர்லிங்கின் மாற்று வீதமும் ரூபாய்—ருஷ்ய ரூபின் வீதமும் திருத்தியமைக்கப்பட்டன:

£ 1 = ரூ. 21.00 (பழைய மதிப்பு ரூ. 13.33)

ரூபிள் 1 = ரூ. 8.33 (பழைய மதிப்பு ரூ. 5.21)

உள்நாட்டு அளவில் விலை மட்டத்தை ஒருமைப்படுத்தவும், உலக விலை மட்டத்திற்கு ஏற்றவாறு உள்நாட்டு விலை மட்டத்தைத் திருத்துவதற்காகவுந்தான் ரூபாயின மதிப்பு குறைக்கப்பட்டது. ஏற்றுமதிப்பொருள்களை உற்பத்தி செய்யும் தொழிற் சாலைகளில் முதலீடு பெருகி உற்பத்தி பெருகுவதற்கு வழிவகைகள் காண முடிகிறது. இறக்குமதிப் பொருள்கள் கிராக்கியாவதால் அப் பொருள்களையோ, அப்பொருள்களுக்கு ஈடாக வேறு பொருள் களையோ உற்பத்தி செய்வதற்கு வழி வகுக்கப்படுகிறது.

இங்கிலாந்தின் பவுன் 1967-ஆம் ஆண்டு நவம்பர் திங்களில் மதிப்புக் குறைப்பு செய்யப்பட்டதால், புதிய மாற்று வீதம் £ 1 = ரூ. 18.96 ஆகும். 1973-ஆம் ஆண்டு பிப்ரவரியில் அமெரிக்க டாலர் கூட 10 சத வீதம் மதிப்பு குறைப்பு செய்யப்பட்டிருக்கிறது.

16. பணச்சந்தை
(MONEY MARKET)

கடன் சந்தையின் ஒரு பகுதியே பணச்சந்தையாகும். பொருளாதாரத்தில் 'சந்தை' என்ற சொல் என்ன பொருளில் பயன்படுத்தப்படுகின்றதோ அதே பொருளில்தான் பணச் சந்தையிலும் பயன்படுத்தப்படுகின்றது. சந்தை என்பது அனைத்து வாங்குநர்களையும் விற்குநர்களையும் உள்ளடக்கியிருக்கும் தொகுப்பைக் குறிக்கின்றது. பணச்சந்தை என்றுல் பணத்தை வாங்கி விற்றல் என்று பொருள் கொள்ளக்கூடாது. பணத் தன்மை கொண்ட வாணிப மாற்று சீட்டுகள், கடனுறுதிச் சீட்டுகள், அரசுப் பிணையங்கள் போன்றவைகளைக் கொண்டு நடவடிக்கைகள் இடம் பெறுவது பணச்சந்தை எனலாம். மிகத் தெளிவாகக் கூறினுல் குறுங்காலக் கடன் நடவடிக்கைகளில் ஈடுபடும் பல்வேறு நிறுவனங்களின் தொகுப்பே பணச்சந்தை எனப்படும். பணச்சந்தை குறுங்கால நிதிகளின் தேக்கமாகும். கடனீவோரின் குறுகிய கால முதலீடு பணச்சந்தை மூலம் கடனுளிக்கு அளிக்கப்படுகின்றது. இந்திய ரிசர்வ் வங்கி பணச் சந்தைக்கு இலக்கணம் கூறுவதாவது! பணச்சந்தை என்பது, பணச் சொத்துகளை, முக்கியமாகக் குறுங்கால இயல்புடையவைகளை, பேரம் செய்யும் முக்கிய இடமாகும்; கடனுளிகளின் குறுங்காலத் தேவைகளை அது நிறைவு செய்கிறது; கடனீவோர்களுக்கு ரொக்கத்தையோ, நீர்மைச் சொத்தையோ, அளிக்கின்றது. இச் சந்தையில் நிறுவனங்கள், தனி நபர்கள் மற்றும் அரசு அடங்கும்; நிதி மற்றும் ஏனைய நிறுவனங்கள் மற்றும் தனி நபர்களின் முதலீட்டுக்கான குறுங்கால நிதி (உபரி) கடனுளிகளால் அச்சந்தையில் கோரப்படுகிறது. குறுகிய காலத்தில் பணமாகக் கூடிய பிணையங்களை நெருங்கிய பணம் என்றழைக்கப்படுகிறது.

※ கிரௌதர், பலதரப்பட்ட நெருங்கிய பணத்தில் பேரம் நிகழ்த்தும் பல்வேறு நிறுவனங்களுக்கும் நிலையங்களுக்கும் பொதுவாகப் 'பணச் சந்தை' என்று பெயர் எனக் கூறுகின்றார்.

※ crowther, out line of Money :- தமிழாக்கம் Page-82.

மேடனும் நாட்லரும் (Madden and Naddler) பணச்சந்தை என்பது குறுகியகால நிதிகளைக் கடனாகக் கொடுக்கின்ற, பெறுகின்ற செயலமைப்பு ஏற்பாடாகும். இதன் மூலம் ஒரு குறிப்பிட்ட நாட்டின் அல்லது உலகத்தின் பண நடவடிக்கைகளில் பெரும் பகுதி நடைபெறுகின்றது என்று குறிப்பிடுகின்றனர்.

ஏனைய சந்தைகளில் நிலவுவது போன்றே பணச்சந்தையிலும் பண நிதிக்குத் தேவையும் அளிப்பும் நிலவுகின்றன. வணிகர்கள், இடையீட்டாளர்கள், உற்பத்தியாளர்கள், ஊக வணிகர்கள், ※ அரசுத்துறையினர் ஆகியோர் பணத்திற்குத் தேவையை ஏற்படுத்திக் கடன் வாங்க முனைகின்றனர். வணிக வங்கிகள், நிதி நிறுவனங்கள், காப்பீட்டுக் கழகங்கள், மைய வங்கி ஆகியவை கடன் அளிக்க முன் வருவதன் மூலம் அளிப்பை உருவாக்குகின்றன. கடன் அளித்து உதவுவதற்கு ஊதியமாக வட்டியைப் பெறுகின்றன.

பணச்சந்தையுடன் ஒட்டியிருப்பது மூலதனச் சந்தையாகும் (Capital Market). குறுங்காலக்கடன் நடவடிக்கைகளில் ஈடுபடுவது பணச்சந்தையாகும். மாறாக, நெடுங்காலக கடன் நடவடிக்கைகளில் ஈடுபடுவது மூலதனச்சந்தையாகும். இரண்டும் கடன் சந்தையின் (Credit Market) கீழ் வருகின்றன. நடை மூலதனத்திற்காக அவ் வப்போது பெறப்படுவது குறுங்கால நிதியாகும். நிலை மூலதனச் சொத்திற்காகப் பெறப்படுவது நெடுங்கால நிதியாகும். ஒரே நிறுவனம் அல்லது அமைப்பு இரு விதக் கடன்களிலும் ஈடுபாடு கொண்டிருக்கலாம்.

கடன் அளிப்போரையும் கடன் பெறுவோரையும் ஒருங்கே கொண்டுவரச் செய்வதுதான் பணச் சந்தையின் முக்கிய பணியாகும். அவர்கள் ஒரு குறிப்பிட்ட இடத்தில்தான் சந்திக்க வேண்டுமென்ற கட்டாயமில்லை. அவர்களுக்கிடையில் முனைவுகளும் கருத்துகளும் எப்படியாவது பரிமாற்றம் செய்யப்படல் வேண்டும். ஒரு குறிப்பிட்ட இடத்தில் அவர்கள் சந்திக்கவேண்டுமென்ற நியதியில்லை யென்றாலும், இலண்டனில் 'லாம்பார்டு' தெருவிலும் (Lombard Street) நியூயார்க்கில் 'வால்' தெருவிலும் (Wall Street) உள்ள பணச்சந்தைகளில் தான் மிகையான

※ Reserve Bank of India : Function and Working; P. 35

அளவிற்குத் தொலைபேசி மூலமும் நேரிடையாகவும் பேரங்கள் நடைபெறுகின்றன.

பணச்சந்தையின் அமைப்பு !

பணச் சந்தையில் பல்வகைத் துணைச்சந்தைகள் அடங்கியிருக்கின்றன. அத்தகைய துணைச்சந்தைகள் உலகம் முழுதும் ஒன்றுபோல் இருப்பது இல்லை. நாட்டுக்கு நாடு சூழ்நிலைகளுக்கேற்ப உருவாகியிருக்கின்றன. அவைகளைப்பற்றிக் கீழே விவரிக்கலாம் :—

1. **அழைப்புப் பணச்சந்தை :** (Call Money Market)

மிகவும் குறுகியகாலக் கடன்களுக்கான சந்தையே அழைப்புப் பணச்சந்தை எனப்படும். ஒரு நாள் முதல் ஏழு நாள் வரை கடன் காலம் நீடிக்கும் மாற்றுச் சீட்டுத் தரகர்களும், பங்குமாற்றுச் சந்தையில் (Stock exchange) ஈடுபடுவோரும் இத்தகைய குறுகிய காலக் கடன்களைப் பெறுகின்றனர். அழைத்தவுடன் பணம் திரும்பப் பெட்டிக்கு வந்துவிடுமாகையால், இத்தகைய கடன்களில் பணி வங்கிகள் ஈடுபடுகின்றன. அப்படி ஈடுபடுவதால் அவைகள் ரொக்கத் தன்மையைக் காப்பாற்றிக் கொள்வதோடு சிறிய அளவில் லாபமும் (வட்டி) பெறுகின்றன.

2. **ஏற்புச் சந்தை** (Acceptance Market) வாணிபச் சரக்குக் கடன் நடவடிக்கைகளுக்காக ஏற்பட்டதுதான் மாற்றுச் சீட்டு முறையாகும். சரக்கு விற்றோர் வாங்கியவர் பெயருக்கு மாற்றுச் சீட்டை எழுதி அவருடைய ஒப்புதலைப் பெறுவதுதான் பொதுவான வழக்கம். ஆனால் மாற்றுச் சீட்டை எழுதி ஒப்புதல் அளித்தலை வேறொரு நிதி நிறுவனத்திடமிருந்து பெற்றால் அந்த மாற்றுச் சீட்டுக்கு நம்புறுதி இன்னும் கூடுதலாகும். அதாவது, மாற்றுச் சீட்டைக் கடனளியே ஏற்காமல் கடனளிக்காக மற்றொரு நிறுவனமோ அகமோ ஏற்பு செய்தலாகும். அவ்வாறு ஏற்பு செய்வதற்குக் கட்டணம் உண்டு. ஏற்பகங்களால் ஏற்றுக் கொள்ளப்பட்ட மாற்றுச் சீட்டுகள் வங்கிகளாலும், கழிவகங்களாலும் (Discount Houses) எளிதில் ஏற்றுக் கொள்ளப்படுவதால் நாட்டில் மாற்றுச் சீட்டுகளின் புழக்கம் வளர்ச்சியடைய முடிகின்றது. இலண்டன் பண அங்காடியில் தனியாக 'ஏற்பகங்கள்' (Acceptance Houses) இருக்கின்றன.

3. மாற்றுச் சீட்டுச் சந்தை : குறுகிய காலத்தாள்கள் அல்லது மாற்றுச் சீட்டுகள் வாங்கவும் விற்கவும் படும் சந்தை மாற்றுச் சீட்டுச் சந்தை அல்லது கழிவுச் சந்தை (Discount Market) எனப் படும். இச் சந்தையில் மாற்றுச் சீட்டுகளும், கருவூல மாற்றுச் சீட்டுகளும், அரசுப் பத்திரங்களும் இடம்பெறுகின்றன. மாற்றுச் சீட்டுகள் வாணிப நடவடிக்கைகளைச் சார்ந்திருக்கின்றன என முன்பே பார்த்தோம். கருவூலச் சீட்டுகள் அரசுத் தாள்களாகும். இவைகளை மைய வங்கி விற்கிறது. அவைகள் 91 நாட்கள் கால வரம்புள்ளவைகளாகும். இவைகளுக்கு அளிக்கப்படும் வட்டி வீதங்களைக் கருவூலமே நிச்சயிப்பதில்லை. மிகவும் குறைந்த வட்டி வீதத்தில் அவைகளை ஏற்றுக்கொள்ள யார் யார் முன்வருகிறார்களோ அவர்களுக்கே விற்கப்படுகின்றன. கருவூலச் சீட்டுகள் நேர்மைத் தன்மை கொண்டவைகளாக இருப்பதால் வாணிக வங்கிகளும் வாணிக அமைப்புகளும் அவற்றைப் போட்டியிட்டு வாங்குகின்றன. அரசுப் பிணையச் சந்தை பங்கு மாற்றுச் சந்தை போன்றவை நெடுங்காலக் கடன் வசதிகளை அளிப்பதால் அவை மூலதனச் சந்தையின் உறுப்புகளாகும்.

பணச் சந்தையின் நடவடிக்கைகளில் சில நிறுவனங்கள் பங்கு கொள்கின்றன. இவற்றில் முக்கியப் பங்கு வகிப்பது மைய வங்கியாகும். நம் நாட்டில் இந்திய ரிசர்வ் வங்கி ஒரு முக்கிய பணச் சந்தையாக விளங்குகிறது. பணச் சந்தை நடவடிக்கைகளில் ஈடுபடுகின்ற நிறுவனங்களைக் கட்டுப்படுத்தத் தேவையான அதிகாரம் மைய வங்கிக்கு உண்டு. அச் சந்தை வளர்ச்சியடைய வழி முறைகளை வகுப்பதும் மைய வங்கியே யாகும்.

வணிக வங்கிகள் பணச் சந்தையின் முதுகெலும்பாகத் திகழ்கின்றன. வாணிபம் மற்றும் தொழில் வளர்ச்சிக்கு நிதிக் கடன் அளித்து உறுதுணையாக விளங்குவது வணிக வங்கிகளாகும். அழைப்புக் கடன்களையும், துணைக் கடன்களையும், மாற்றுச் சீட்டுத் தரகர்களுக்கும், பங்கு மாற்றுச் சந்தைகளுக்கும் அளிக்கின்றன. வணிக வங்கிகள் தவிரச் சேமிப்பு வங்கிகள், நாணய மாற்று வங்கிகள், முதலீட்டு வங்கிகள், நிதி நிறுவனங்கள் ஆகியவையும் இத்தகையக் கடன்களை அளித்துதவுகின்றன. சில நாடுகளில் ஏற்பகங்களும், மாற்றுச் சீட்டுத் தரகர்களும் பணச் சந்தையில் உறுப்புகளாக அமைந்திருக்கின்றன. பல வகையான பணச் சந்தைகள் ஒன்றோடொன்று தொடர்பு கொண்டிருப்பதால் எல்லா நிறுவனங்களும் ஒன்றை யொன்று சார்ந்த நிலையில் இயங்குகின்றன.

வளர்ச்சி பெற்ற பணச் சந்தையின் இயல்புகள்

(Characteristic Features):

பொருளாதார வளர்ச்சிக்குக் காரணமாக இருப்பது நன்கு வளர்ச்சி பெற்ற பணச் சந்தையேயாகும். உலகில் பல நாடுகளில் நன்கு வளர்ச்சியுறுத பணச் சந்தைகளும் உள்ளன. இங்கு சிறப்பாக வளர்ச்சி பெற்ற பணச் சந்தையின் தன்மைகளைப் பற்றிக் காண்போம் :

1. பணச் சந்தை வளர்ச்சிக்கு வாணிக வங்கித் துறை வளமாக சிறப்புடன் அமைந்திருத்தல் இன்றியமையாததாகும். அவை குறுங்காலக் கடன்களை அளிப்பதில் பெரும் பங்கு கொண்டிருப்பதால், அவற்றின் கடன் கொள்கைகள் பணச் சந்தையில் வினைபயனை ஏற்படுத்தும். மைய வங்கியின் கீழ் வணிக வங்கிகள் செயல்படுவதால், பணச் சந்தையின் பல்வேறு அங்கங்களை மைய வங்கியுடன் இணைக்கும் பாலமாக வணிக வங்கிகள் இருக்கின்றன. வணிக வங்கிகளின் கடன் கொள்கைகள் நெகிழ்வுத் தன்மை கொண்டதாக இருக்க வேண்டும். பொருளாதார நெருக்கடி காலங்களில் கடன் அளிப்பு இலகுவாகவும், வீக்க காலத்தில் கடன் கட்டுப்பாட்டு முறைகள் கடினமாகவும் இருத்தல் வேண்டும்.

2. வணிக வங்கிகள் என்னதான் சிறப்பாக இருந்தாலும் அவைகளைக் கட்டுப்படுத்தி வழி நடத்திச செல்லும் ஒரு தலைமை வங்கியான மைய வங்கி ஒரு நாட்டில் இல்லை என்றால் பணச் சந்தை நெறியான முறையில் வளர முடியாது. மைய வங்கியிடம் ஒவ்வொரு வணிக வங்கியும் ரொக்க இருப்பு வைத்துள்ளது. நிதி நெருக்கடி காலங்களில் வணிக வங்கிகள் கொடுக்கும் மாற்றுச் சீட்டுகள், பத்திரங்கள் ஆகியவைகளை மறு கழிவு செய்து தேவையான நிதியை மைய வங்கி அவைகளுக்கு 'உற்றுழி உதவுவோன்' போல் அளிக்கின்றது; நெருங்கிய பணத்தை ரொக்கமாக மாற்றவும் மைய வங்கி உதவி புரிகின்றது. மைய வங்கி வளர்ச்சி பெற்றால் பணச் சந்தை வளர்ச்சியுறும். வளர்ச்சி குறைந்த பணச் சந்தை இருக்கும் நாடுகளில் மைய வங்கி வளர்ச்சி குறைந்து காணப்படும்.

மேற்கண்ட தன்மைகள் இருந்தால் மட்டும் பணச் சந்தை வளர்ச்சி பெறுவதாகக் கூற முடியாது. பேராசிரியர் எஸ். என். சென் (Prof S. N. Sen) என்பார் ஆஸ்திரேலியாவில் மைய வங்கியும், வங்கித் துறையும் வளர்ச்சி பெற்றிருந்தும் பணச் சந்தை நெறியாக அமையவில்லை என்று குறிப்பிடுகின்றார். மேலும், மைய வங்கி மற்றும் வங்கித் துறையின் வளர்ச்சியுடன் வேறு பல தன்மைகளும் இருந்தால் தான் பணச் சந்தை முழுமை பெறும் என அவர் குறிப்பிடுகின்றார். அத்தன்மைகள் யாவை என்பதையும் கீழே விவரிக்கலாம் :-

3. ஒரு சந்தையில் வாங்குநர்கள், விற்குநர்கள் பலர் இருந்தாலும் நடவடிக்கைகள் இடம் பெறுவதற்கான பொருள்கள், பணிகள் போதுமான அளவு இல்லையென்றால் அச்சந்தையின் நிலை என்னவோ, அதேபோல்தான் பணச் சந்தையிலும் போதுமான அளவு கடன் ஆவணங்கள் இல்லையென்றால் நிலைமை இருக்கும். பணச் சந்தை வளர்ச்சி பெறுவதற்கு வாணிக மாற்றுச் சீட்டுகள், கருவூலச் சீட்டுகள், அரசுக் குறுங்காலக் கடன் பத்திரங்கள் போன்ற கடன் ஆவணங்கள் வேண்டிய அளவு தொடர்ந்து அளிக்கப்படல் வேண்டும். இவைகளை வாங்குவதற்குப் பலர் இருத்தலும் அவசியமாகும். அப்படி வாங்கி விற்க வேண்டுமென்றால் குறுங்காலக் கடன் தேவைப்படும். அத் தேவையை வாணிக வங்கிகளும் பிற நிதி நிறுவனங்களும் நிறைவு செய்கின்றன. இப்படியாக, பணச் சந்தையில் ஒருபுறம் விற்பவர்களும் மறுபுறம் வாங்குபவர்களும் இருந்து நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டுமானால் தேவையான அளவு கடன் ஆவணங்களின் அளிப்பு இருத்தல் வேண்டும். இத்தகைய வசதிகள் இல்லாத இடங்களில் பணச் சந்தை வளர்ச்சி பெறுவதில்லை.

4. பணச் சந்தை நன்கு வளர்ச்சியடைய வேண்டுமானால் பல்வகைத் துணைச் சந்தைகள் இருத்தல் வேண்டும். இருப்பதோடு மட்டுமல்லாமல் நன்கு வளர்ச்சி பெற்றும், ஒன்றுடன் ஒன்று தொடர்பு கொண்டும் இருத்தல் வேண்டும். பலவிதத் துணைச் சந்தைகளைப் பற்றி முன்பே பார்த்துள்ளோம்.

5. வளர்ச்சி பெற்ற பணச் சந்தையில், துணை அங்காடிகளில் நிகழும் நடவடிக்கைகளுக்குப் போதுமான அளவு நிதி வசதிகள் கிடைக்கச் செய்தல் மிகவும் அவசியமாகும். குறுங்காலச் சந்தையில், பொதுவாக, உள்நாட்டு நிதியே பயன்படு

மாயினும் முழு வளர்ச்சி அடைந்த பணச் சந்தையினால் வெளி நாட்டு நிதியையும் கவர முடியும். வளர்ச்சியடைந்த பணச் சந்தைகளான இலண்டனும், நியூயார்க்கும் உலக நாடுகளி லிருந்து நிதியைக் கவர்ந்துள்ளன. நிலையற்ற அரசியலாலும், நாணய மாற்று வீதத்தில் ஒரு நிலையின்மை நிலவுவதாலும், வளர்ச்சி பெறுத பணச் சந்தைகள் மற்ற நாடுகளிலிருந்து நிதியைப் பெற முடியவில்லை.

6. இதுவரை கண்ட இயல்புகளைத் தவிர வேறு பல இயல்பு களும் உள்ளன. எடுத்துக்காட்டாக, பன்னாட்டு வாணிப வளர்ச் சியின் காரணமாக மாற்றுச்சீட்டு முறை வளர்ச்சியடைந்தாலும், தொழில்துறை முன்னேற்றத்தால் பங்கு மாற்றுச் சந்தை வளர்ச்சி யடைந்தாலும், நிலையான அரசியல் ஏற்படினும் அந்நிய நிறுவனங் களின் மேல் பேதங் காட்டாமலிருந்தாலும் பணச் சந்தை நன்கு வளர்ச்சியடையும்.

பணச் சந்தையின் பணிகள் :

வங்கி மற்றும் நிதி நிறுவனங்கள், வணிகம் மற்றும் அரசுச் செயல் முறைகள் செவ்வனே நடைபெற பணச் சந்தை பெரிதும் உதவுகிறது. கடனீவோர், கடன் பெறுவோர் ஆகியோர்களை ஒருங்கே கொண்டு வந்து அவர்களுக்கிடையே லேவா தேவி ஏற்பட வகை செய்கிறது. வணிக வங்கிகள் மூலம் உபரி நிதி தேவையுள்ளோர்க்கு அளிக்க முடிகிறது. அதே போல் எதிர் பாராமல் ஏற்படுகிற உடனடித் தேவைகளையும் விரைவில் நிறைவு செய்ய முடிகிறது. வரடிக்கைக்காரர்களின் வைப்புகளின் முழுத் தொகையும் ஒரே காலத்தில் எடுப்பதற்குக் கோரிக்கைகள் வராததால் அதில் ஒரு குறிப்பிட்ட தொகையை வணிக வங்கிகள் குறுங்காலக் கடனுக அளிக்கின்றன. அப்படிக் கடனுக அனிப்ப தால் வணிக வங்கிகட்கு வட்டி என்ற வடிவில் இலாபம் பெற முடிகிறது.

வாணிப உலகில் பணம் செலுத்துதல்கள் பாதுகாப்பாக நடைபெறப் பணச் சந்தை ஒரு காப்பாளனுகப் பணி புரிகிறது. சிறிய அளவிலிருந்து பெருமளவு வரை பணம் ஓரிடத்திலிருந்து மறு இடத்திற்குக் காசோலை அல்லது பண விடை அல்லது அஞ்சல், தந்தி வழிகள் மூலம் மாற்றப்படுகிறது. உற்பத்தி செய்யப்பட்ட கச்சாப் பொருள்களை முழுப் பொருளாக ஆக்கு

வதற்கு இப் பணச் சந்தை நிதி உதவி அளிக்கின்றது. மேலும், மந்த காலத்தில் மிகுதியான அளவுக்குக் கடனைப் பெருக்கியும், வீக்க காலத்தில் கடனை ஒடுக்கியும் அது பொருளாதாரத்தில் நெறியை ஏற்படுத்துகிறது.

பணச் சந்தை அரசிற்கும் உதவுகின்றது. அரசு தனக்குத் தேவையான குறுங்கால நிதி வசதிகளைக் கருவூல மாற்றுச் சீட்டுகளை வெளியிடுவதன் மூலம் பணச் சந்தையிலிருந்து பெறுகின்றது. பணச் சந்தை இன்றி இத்தகைய நிதியை ஆணைச் செலாவணி (Fiat Money) வெளியிடுவதன் மூலமோ, கடன் பெறுவதன மூலமோ அரசு பெறவேண்டியிருக்கும். மேலும், அரசின் நெடுங்காலக்கடன் எழுப்பும் முயற்சிகளிலும் அரசிற்குப் பண்ச்சந்தை துணை புரிகின்றது. பணசசந்தை நிலவரங்கள் குறுங்கால வட்டி வீதங்களைப் பாதிப்பதன் மூலம் நெடுங்காலக் கடன்களுக்கான வட்டி வீதத்தையும் பாதிக்கின்றது.

இலண்டன் பணச் சந்தை (London Money Market) :

இலண்டன் பணச் சந்தை 'கழிவுச் சந்தை' (Discount Market) என்றும் அழைக்கப்படுகிறது. இச் சந்தையில் எண்ணற்ற சிறிய நிறுவனங்கள் அடங்கியுள்ளன. அந் நிறுவனங்கள் இங்கிலாந்து வங்கியோடும் கூட்டுப்பங்கு வங்கிகளோடும் தொடர்பு கொண்டுள்ளன. இவை வணிக வங்கிகளிடம் எச்சமாக இருக்கின்ற பணத்தைப் பெற்று அதில் வாணிபம் செய்கின்றன.

நிதி நெருக்கடி காலங்களில் வணிக வங்கிகள் இங்கிலாந்து வங்கியை நேரடியாக அணுகாமலிருப்பதுதான் இலண்டன் மாற்றுச் சீட்டுச் சந்தையின் தனித்தன்மையாகும். ஆனால் அந் நிதிப் பற்றுக்குறையை இங்கிலாந்து வங்கி மறைமுகமாகத் தீர்த்து வைக்கிறது. வணிக வங்கிகள் கழிவு அங்காடி நிறுவனங்களுக்குக் கொடுத்த கடனைத் திரும்பப் பெறுகின்றன. கழிவுச் சந்தையில் பணப்பற்றுக்குறை ஏற்பட்டால் அது பண வசதி நாடிமைய வங்கியான இங்கிலாந்து வங்கியிடம் செல்கின்றது. இப்படியாக, கழிவுச் சந்தை இங்கிலாந்து வங்கிக்கும் வணிக வங்கி

களுக்கும் இடையில் இணைப்புப் பாலமாகப் பணி புரிகின்றது. இது மேலும் மாற்றுச் சீட்டுகளை விற்பவர்களுக்கும் வங்கிகளுக்கு மிடையில் இருக்கின்ற ஒன்றுகவும் செயல்படுகின்றது. மாற்றுச் சீட்டுச் சந்தை வசதியினால் வணிக வங்கிகள் தொக்கச் சொத்துகளுக்கு நீர்மைத் தன்மையைக் கொள்வதோடு மட்டுமல்லாமல் அச் சொத்துகளின் மேல் வட்டியையும் ஈட்டுகின்றன.

வணிக மாற்றுச் சீட்டுகளும், கருவூலச் சீட்டுகளும் சந்தையில் இடம் பெறுகின்றன. வணிக மாற்றுச் சீட்டுகளுக்கு ஏற்பகங்களால் பொறுப்புறுதி அளிக்கப்படுகின்றது. கருவூலச் சீட்டுகளுக்கு இங்கிலாந்து அரசே கடனளியாக இருப்பதால் பொறுப்புறுதி அளிக்கப்படவில்லை.

அமைப்பு முறை :

வங்கிகள், ஏற்பகங்கள், கழிவகங்கள் ஆகியவைகளைக் கொண்டும் மாற்றுச் சீட்டுத் தரகர்களைக் கொண்டும் இலண்டன் பணச் சந்தை செயல்படுகிறது. ஒவ்வொன்றையும் பற்றிக் கீழே விவரிப்போம் :

வங்கிகள் : இங்கிலாந்து வங்கி, கூட்டுப் பங்கு வங்கிகள், இலண்டன் முகவர்கள், சில வெளி நாட்டு வங்கிகளின் கிளைகள் ஆகியவை இலண்டன் பணச் சந்தையில் இருக்கின்றன. அனைத்து வங்கிகளிலும் இங்கிலாந்து வங்கிதான் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். பணச்சந்தையில் அவ் வங்கியின் முக்கியப் பங்கைப் பற்றி வால்டர் பேஜ் ஹாட் (Walter Bagehot) குறிப்பிடுவதாவது: "பணத் துறையில் மிக முக்கிய பணி செய்வதாகவும், உயர்விடம் கொண்டதாகவும் (Predominant) இங்கிலாந்து வங்கி விளங்குகிறது. அதன் பங்குகள் (Stock) விற்கப்படுவதற்கான குறைந்த விலையில் விற்கப்படும் விலையை அது நிர்ணயிக்கிறது. அதே விலையையோ, அருகிலுள்ள விலையையோ ஏனைய நடவடிக்கைகளில் ஈடுபடுவோர் கடைப்பிடிப்பதற்கு அவ் விலை அடிப்படையாக இருக்க முடிகிறது."

லாம்பார்டு தெருவிலுள்ள கழிவகங்கள் தங்கள் நிதியை மட்டும் கொண்டு மாற்றுச் சீட்டுகளைக் கழிவு செய்ய முடியாது. இங்கிலாந்து வங்கியிடம் வட்டிக்குக் கடன வாங்கித்தான் நிதி பற்றுக்குறையைப் பூர்த்தி செய்யவேண்டி வரும். இங்கிலாந்து,

வங்கியின் வட்டி வீதத்தை அனுசரித்துத்தான் ஏனைய நிறுவனங்கள் கழிவு அகங்கள் உள்பட, மாற்றுக் கழிவு வீதத்தை நிர்ணயம் செய்ய வேண்டும். இங்கிலாந்து வங்கியைத் தவிர வணிக வங்கிகளும் தேவையான அளவு நிதி அளிப்பு செய்து வருகின்றன. இந்நிதி உதவிக்கு ஈடாக ஏற்பகங்கள் ஒப்புதல் அளித்த மாற்றுச் சீட்டுகள் பெறப்படுவதால் பணச் சந்தை மேலோங்கி வளர முடிகிறது.

ஏற்பகங்கள் (Accepting Houses)

ஏற்பகங்கள் கூட்டாண்மை (Partnership) நிறுவனங்களாகவோ, நிறுமங்களாகவோ (Companies) அமைந்திருக்கின்றன. இவை 'வணிக வங்கியாளர்கள்' (Merchant Bankers) எனவும் அழைக்கப்படுகின்றன. இவ் வேற்பகங்கள் இங்கிலாந்து வங்கியிலும் வணிக வங்கிகளிலும் கணக்குகள் வைத்திருக்கின்றன. வங்கிகளிலிருந்து குறுங்காலத்திற்குக் கடனைப் பெற்றுப் பணச் சந்தைக்கு அவை உதவுகின்றன. வணிகர்கள் வரைந்த மாற்றுச் சீட்டுகளை ஏற்பதும் அந்நியச் செலாவணி நடவடிக்கைகளில் ஈடுபடுவதும், உறுப்பினர்களிடமிருந்து வைப்புகளைப் பெறுவதும் தான் ஏற்பகங்களின் பணிகளாகும். எந்த வணிகரின் மேல் மாற்றுச் சீட்டு எழுதப்படுகிறதோ அவர் ஏற்பு செய்ய வேண்டும். ஆனால் அவரின் நாணயத்தின் மேல் ஐயம் ஏற்படுமிடத்து அவருக்குப் பதில் ஒரு ஏற்பகம் அச் சீட்டை ஏற்றுக்கொண்டால் அம் மாற்றுச் சீட்டு நடவடிக்கை தடையின்றி நடைபெறும் அதாவது கடனுக்குப் பொருள் அளிப்போர் கடனாளியை நம்புவதற்குப் பதில் ஏற்பகத்தை நம்பிப் பொருளை அளிப்பர். இப்படியாக, ஏற்பகங்கள் மற்றவர்களுக்காக மாற்றுச் சீட்டில் ஒப்புதல் கையெழுத்து இடுவதன் மூலம் உரிய காலத்தில் மாற்றுச் சீட்டுகளுக்குப் பணம் கிடைக்கு மென்று உறுதியளிக்கின்றன. இப் பணியை நெறியாகச் செய்ய வேண்டுமென்றால் ஏற்பகங்களிடம் போதுமான அளவு நிதி இருக்க வேண்டும். வணிகர்களுக்கு மாற்றுச் சீட்டுகளை ஏற்பதற்காக அவை சிறிய அளவில் கட்டணம் வசூலிக்கின்றன. வணிகர்களுக்காக மாற்றுச் சீட்டுகள் ஏற்கப்படும்போது அவர்களை நன்கு தெரிந்திருந்தால்தான் ஏற்பகங்கள் ஒப்புதல் அளிக்கும்.

கழிவகங்களும், மாற்றுச் சீட்டுத் தரகர்களும்

கழிவகங்கள் தனித்தன்மை வாய்ந்த நிறுவனங்களாகும். இலண்டனில் ஏறத்தாழ பன்னிரண்டு நிறுவனங்கள் உள்ளன. பணச் சந்தையில் முக்கிய பங்கு வகிக்கும் இக் கழிவகங்கள் மொத்த நடவடிக்கைகளில் பெரும்பாலானவைகளைத் தாங்களே மேற்கொள்கின்றன. வேறு எந்த நாட்டிலும் கழிவகங்கள், இங்கிலாந்து கழிவகங்களைப் போன்று சிறப்பாகப் பணிபுரியவில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும். வணிக வங்கிகள் மற்றும் பிற நிதி நிறுவனங்களிடமிருந்து அக் கழிவகங்கள் கடன் பெறுகின்றன. இப் பணத்தைக் கொண்டு வணிகர்களின் மாற்றுச் சீட்டுகள் கழிவு செய்யப்படுகின்றன. மாற்றுச் சீட்டுகள் குறுங் காலத்தில் முதிர்வடைவதால் நிதி நிறுவனங்கள் கழிவகங்களுக்குக் குறுங்காலக் கடன் உதவி செய்கின்றன. பெரும்பாலும் 'அழைப்புப் பணமாக'க் கழிவகங்களுக்குக் கடன் அளிக்கப்படுகின்றன. எப்போது பணம் தேவையோ அப்போதே கழிவகங்களிடமிருந்து திரும்பப் பணத்தை அந்நிதி நிறுவனங்கள் பெற்றுக் கொள்கின்றன. இத்தகைய கடன்களுக்கு மிகவும் குறைந்த விகிதத்திலேயே வட்டி வசூலிக்கப்படுகின்றது. வணிக வங்கிகள் பணத் தேவையை ஈடு செய்வதற்காக இவை இங்கிலாந்து வங்கியிடம் மாற்றுச் சீட்டுகளை மறு கழிவு (Rediscounting) செய்து பணத்தைப் பெறுகின்றன. அல்லது கடனுகவும் பணத்தைப் பெறுகின்றன.

கழிவகங்களின் முக்கியமான பணி வணிக வங்கிகளிடமிருந்து பெற்ற நிதியின் உதவியால் மாற்றுச் சீட்டுகளைக் கழிவு செய்து பணம் அளிப்பதாகும். ஏற்பகங்களால் ஏற்கப்பெற்ற வாணிக மாற்றுச் சீட்டுகள் மாற்றுரிமைத் தன்மை கொண்ட பிணையங்களாகின்றன. அவ்வாறு ஏற்கப்பெற்ற மாற்றுச் சீட்டுகளைக் கழிவு செய்து கழிவகங்கள் பணம் தருகின்றன. சிறிது காலம் அவற்றை வைத்திருந்து, பின்னர் வங்கிகளுக்கு விற்பதும் உண்டு.

கழிவகங்கள் வங்கிகளுக்கும் துணை புரிகின்றன. எண்ணற்ற சிறிய மாற்றுச் சீட்டுகளை வங்கிகள் வாங்குவதற்கு விரும்புவதில்லை. கழிவகங்கள் சிறிய மாற்றுச் சீட்டுகளாக வாங்கி அவற்றைத் தொகுத்து விரும்புகின்ற வணிக வங்கிகளுக்கு விற்கின்றன. பெரும்பாலும் முதிர்வடையும் காலத்தை நெருங்கிக் கொண்டிருக்கின்ற மாற்றுச் சீட்டுகளைத்தான் வணிக வங்கிகள் விலைக்கு வாங்குகின்றன. அழைப்புப் பணமாக வணிக வங்கிகள் அளிப்பதால் அவைகளின் ரொக்கத் தன்மை இழக்காமலிருப்பதுடன் சிறிது வருவாயும் (வட்டி) பெற முடிகின்றது.

தற்காலத்தில் வாணிப மாற்றுச் சீட்டுகளைவிட கருவூலச் சீட்டுகளே அதிகம் கழிவு செய்யப்படுகின்றன. அச்சீட்டுகள் இங்கிலாந்து அரசின் கடன் உறுதிப் பத்திரங்களாகும். இவற்றின் மேல் உரிய காலத்தில் உறுதியாகப் பணம் கிடைத்துவிடும் என்ற நம்பிக்கை இருக்கிறது.

கடனீவோர், கடன் பெறுவோர் ஆகியோருக்கிடையே மாற்றுச் சீட்டுத் தரகர்கள் உள்ளனர். கடன் பெறுவோரின் நாணயத்தைக் கணித்தும் அவரது நாணயம் தொடர்ந்து நீடிக்குமா எனக் கண்காணித்து வருவதும் தரகர்களின் பணியாகும். மாற்றுச் சீட்டு என்ற சாதனத்தின் மூலம் கடனீவோர், கடன் பெறுவோர் இணைக்கப்படுகின்றனர். உரிய காலத்தில் உறுதி கொடுப்போன் மாற்றுச் சீட்டை மதிப்பு செய்வாரா (Honour) என ஊகம் செய்து வருவதுதான் தரகரின் பொறுப்பாகும்.

நியூயார்க் பணச் சந்தை (New York Money Market)

அமெரிக்காவில் பணச் சந்தைக்கு முன்னோடியாகப் பிணையங்கள் மாற்றகம் (Securities Exchange) விளங்கியது. பிலடல்பியா (Philadelphia) செல்வந்தர்களான இராபர்ட் மோரிஸ், ஸ்டீபன் ஜிராடு (Stephen Girad) மற்றும் நிகோலஸ் பிடில் (Nicholas Biddle) ஆகியோரால் முதன் முதலில் 1791-ல் அந்த மாற்றகம் நிறுவப்பட்டது. அமெரிக்க அரசுப் பொறுப்புகளும், அந்நியச் செலாவணியும்தான் பிலடல்பியாவிலும், நியூயார்க்கிலும் பணச் சந்தையில் இடம் பெற்றன. படிப்படியாக பங்குகளும், பிணையங்களும் (Stocks and Securities) அறிமுகப்படுத்தப்பட்டன. 1817-ல் 'நியூயார்க் பங்கு மாற்று வாரியம்' (New york Stock Exchange Board) நிறுவப்பட்டது. நாளடைவில் பங்குகள், பிணையங்கள், ஆகியவற்றின் நடவடிக்கைகள் பெருகத தொடங்கின. அஞ்சல் வழி, தந்தி வழி மூலம் பண மாற்றங்கள் பெருமளவில் இடம் பெற்றன. இப்படியாக நியூயார்க் பணச சந்தை நியூயார்க் நிதித்துறையில் வளர்ச்சி பெற்ற ஒரு அங்கமாக விளங்கத் தொடங்கியது.

பணச் சந்தையில் முக்கியப் பங்கு வகிப்பது குறுங்கால வாணிகப் பொறுப்புகளாகும். அதாவது, பழங்காலத்திய வழி முறையில் வந்த வாணிகச் சீட்டுகளாகும் (Commercial Paper)

இவைகளை வாங்கி விற்பதற்கென ஒரு துறையினர் இருக்கின்றனர். 1950-க்குப் பின் இச் சீட்டுகளின் பேரம் அவ்வளவு முக்கியத்துவம் பெறவில்லை. வங்கியாளர்களின ஏற்புச் சீட்டுகளும் (Bankers' acceptances) பணச் சந்தையில் இடம் பெறுகின்றன. அதாவது, இலண்டனில் ஏற்பகங்கள் செய்யும் பணியை அமெரிக்க நாடுகளில் வங்கிகள் செய்கின்றன. அரசுகளின் குறுங்காலப் பத்திரங்களும் பணச் சந்தையில் இடம் பெறுகின்றன. அப் பத்திரங்களைப் பேரம் செய்வதற்காகத் தேவையான நிதியை வங்கிகள் அழைப்புக் கடன் அடிப்படையில் பேரம் செய்வோருக்கு அளிக்கின்றன.

1960-ல் பணச் சந்தையில் 'வைப்பின் மாற்று முறை சான்றிதழ்' (Negotiable Certificate of Deposit) என்ற ஆவணம் புதிதாக அறிமுகப்படுத்தப்பட்டது. வங்கியில் பணம் ஒரு குறிப்பிட்ட காலத்திற்குப் போட்டதற்கான இரசீது தான் மாற்று முறை சான்றிதழாகும். இதை வைத்திருப்போர் வேறொருவருக்கு வேண்டுமானால் உரிமையை மாற்றிவிடலாம். இது ஒரு 'தவணை வைப்பு' (Fixed Deposit) போல் ஆகும். முதன் முதலில் நியூயார்க் பணச் சந்தையில் தான் பெருமளவுக்கு இச் சான்றிதழ்கள் இடம் பெற்றன. பின் ஏனைய நகரங்களிலும் இவைகள் கையாளப்பட்டன. இச் சான்றிதழ்கள் முக்கியத்துவம் அடைவதற்கு இரு காரணங்கள் உள்ளன. ஒன்று அவைகள் மாற்றம் செய்யப்படக் கூடிய தன்மையைப் பெற்றிருக்கின்றன. இரண்டாவது, அவைகளை அளிக்கும் வங்கிகளின் நீர்மைத் தன்மை பாதுகாக்கப்படுகிறது; பணம் தேவைப்படும்போது அவைகளைப் பெற்றிருக்கும் வங்கிகளோ, நிறுவனங்களோ பணச் சந்தையில் அவைகளை விற்று உடனே பணம் புரட்ட முடியும்.

நியூயார்க் பணச்சந்தையிலும் வேறுநகரங்களின் பணச்சந்தைகளிலும் மேலும் சில ஆவணங்களாகக் கூட்டு நிதிகளும் (Federal-Funds), கருவூலச் சீட்டுகளும் பயன்படுத்தப்படுகின்றன. கூட்டரசு காப்பு வங்கிகளில் (Federal Reserve Banks) உள்ள வைப்புகள்தான் கூட்டமைப்பு நிதிகளாகும். இந் நிதிகளிலிருந்து உறுப்பு வங்கிகளுக்குக் கடன் கொடுத்து வாங்கப்படுகிறது. கருவூலச் சீட்டு என்பது அமெரிக்கக் கூட்டரசு குறுங்காலத்திற்கு, (30 நாட்களிலிருந்து 90 நாட்கள் வரை) வெளியிடும் ஆவணங்களாகும். குறிப்பிட்ட காலம் முடிந்தவுடன் வட்டியுடன் அச் சீட்டுகளின் தொகையைக் கொடுத்துவிட்டுத் திரும்ப அச்சீட்டுகளை அவ்வரசு

மீட்கிறது. அச் சீட்டுகள் முதிர்வடையுமுன் பணம் தேவைப் படுவோர் வங்கியில் கொடுத்துக் கழிவு செய்து கொள்ளலாம்.

வேறு எந்த வழியிலும் பணம் புரட்ட முடியவில்லை என்றால் பணச் சந்தையில் ஒரு பகுதியாக விளங்கும் கூட்டரசுக் தரப்பு முறை (Federal Reserve System) கடைசியாக அணுகப்படுகிறது.

நியூயார்க் பணச் சந்தையில் பங்கு கொள்ளும் நபர்களும், நிறுவனங்களும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு இனமும் எந்த அளவுக்குப் பங்கு கொள்கின்றது என்பதை அடையாளக் குறி மூலமும் உணர்த்தப்படுகிறது.

நியூயார்க்கில் நிதி அளிப்போரும், நிதி கோருவோரும்[3]

இனம்	அளிப்போர்	கோருவோர்
(1) வணிக வங்கிகள்	××	×
(2) பேரம் செய்வோரும், தரகர்களும் (Dealers and Brokers)		××
(3) ஏனைய நிதி கூட்டுருக்கள் : (Other Financial Corporations)		
(அ) ஆயுட் காப்பீட்டு நிறுமங்கள் (Life Insurance Companies)	×	
(ஆ) நிதி நிறுமங்கள் (Finance Companies)		××
(4) உள்நாட்டுத் தொழில் கூட்டுருக்கள் (Domestic Business Corporations)	×	××
(5) ஏற்றுமதியாளர்களும், இறக்குமதியாளர்களும்...		××
(6) அயல் நாட்டு வங்கிகளும், பிறவும்... ...		××
(7) அரசு :		
(அ) ஐக்கிய அரசு.		××
(ஆ) மாநில அரசும், உள்ளாட்சியும் (Local)	×	×
(8) ஐக்கிய ரிசர்வ் வங்கிகள்	××	

விளக்கம் : ×× = பெருமளவில் (Major Role)
× = சிறிய அளவில் (Minor Role)

3. R. Whittlesey and others, Money and Banking : Analysis and Policy.
Second Edition, Reprint 1969, P. 96.

இந்தியப் பணச் சந்தை

(Indian Money Market)

இந்தியப் பணசசநதை ஒரு நெறியற்ற, வளர்ச்சியற்ற சந்தை எனலாம். இரண்டு பெரும் பிரிவுகளாகப் பகுக்கப்பட்டிருப்பது அதன் முனேப்புக் கூறு (Feature) எனலாம். ஒன்று, 'ஒரு முகப் படுத்தப் பெற்ற' (Organised) பணச் சந்தை. மற்ருென்று 'ஒரு முகப் படுத்தப்பெருத' (Unorganised) பணச் சந்தை இவைகளே முறையே 'அமைப்பான பணச் சந்தை' என்றும், 'அமைப்பற்ற பணச் சந்தை' என்றும் கூறலாம். அமைப்புள்ள பிரிவில் இந்திய ரிசர்வ் வங்கி, இந்திய ஸ்டேட் வங்கி, நாட்டுடைமை யாக்கப் பெற்ற வங்கிகள் மற்றும் உள்நாட்டு வெளிநாட்டு கூட்டுப்பங்கு வங்கிகள் ஆகியவை அடங்கும். சில ஆண்டு களுக்கு முன் அரசுத் துறை போல்உள (Quasi Government) நிறுவனங்கள், கூட்டுப்பங்கு நிறுமங்கள் முதலியவை பணச் சந்தையில் பங்கு கொண்டு கடன் உதவி அளித்து வந்தன. அவ்வாறு அளித்து வந்த கடன் உதவிக்குக் குடிப் பணம் (House Money) எனப் பெயர். தற்பொழுது இந் நிறுவனங்களின் பங்கு பணச் சந்தையில் மிக மிகக் குறைவு. அரசுத் துறை போல்உள நிறுவனங்களேத் தவிர அழைப்புக் கடன் தரகர்கள், பொது நிதி மற்றும் பங்குத் தரகர்கள் (General Finance and Stock Brokers) மற்றும் ஒப்புறுதியாளர்களும் (Underwriters) பணச் சந்தையில் இடம் பெறுகின்றனர்.

இந்தியப் பணச் சந்தையின் மையமாகத் திகழ்வது வங்கி களுக்கிடையேயான (Inter-Bank) அழைப்புப் பணச் சந்தை யாகும். கடன் கொடுத்தவர் கேட்கும் போது திருப்பிச் செலுத்தும் கடனுக வணிக வங்கிகள் அவற்றிற்கிடையே கடன் கொடுத்து வாங்குகின்றன. பொதுவாக, மாற்றுச் சீட்டுகளேக் கழிவு செய்யவோ, சட்டப்படி வைத்திருக்க வேண்டிய ரொக்கம் குறைகின்ற பொழுதோ வங்கிகள் கடன் வாங்குகின்றன. சில தனியார் துறையினரும் இச் சந்தையில் பங்கு கொள்கின்றனர்.

குறுகிய கால அரசுப் பத்திரங்களின் சந்தையும் பணச் சந்தையின் ஒரு பகுதியாக விளங்குகிறது. அப் பத்திரங்களை நினைத்த நேரத்தில் ரொக்கமாக மாற்றலாமென்பதால் அவற்றை வங்கிகள் விரும்புகின்றன. நமது நாட்டில் மைய, மாநில அரசுகளின் கடன் பத்திரங்களை எல்லா வங்கிகளும் வாங்குகின்றன. இதனால் அவைகளின் ரொக்கத் தன்மை காப்பாற்றப்படுவதோடு இலாபமும் கிடைக்கிறது.

பணச் சந்தையின் மற்றுமொரு பகுதி துணைப் பிணைக் கடன் (Collateral) சந்தை ஆகும். பொன், வெள்ளி, அரசுக் கடன் பத்திரங்கள், சில நிறுவனங்களின் பங்குப் பத்திரங்கள் ஆகிய வற்றை ஈடாக வைத்துக்கொண்டு வணிக வங்கிகள் மிகைப் பற்றுக் கடனை, ரொக்கக் கடனை (Cash-credit) அளிக்கின்றன. பங்குச் சந்தையில் பேரம் செய்யும் தரகர்கள் இப்படிப்பட்ட கடன்களை மிகுதியாகப் பெறுகின்றனர்.

இந்தியாவில் மாற்றுச் சீட்டுச் சந்தை செம்மையாக அமைய வில்லை. இச் சந்தைதான் அயல்நாடுகளில் பணச் சந்தையில் முக்கியப் பங்கு வகிக்கின்றது. இதன் முக்கியத்துவத்தை உணர்ந்து தான் இந்திய ரிசர்வ் வங்கி மாற்றுச் சீட்டுச் சந்தைத் திட்டத்தை 1952-ல் உருவாக்கியது. ஆனால், அத் திட்டம் வெற்றியடைய வில்லை. மீண்டும் 1970 நவம்பரில் ஒரு புதிய மாற்றுச் சீட்டுச் சந்தையை ஏற்படுத்தியுள்ளது.

பணச் சந்தையின் இரண்டாம் பிரிவான அமைப்பற்ற சந்தையில் நாட்டு வங்கியாளரும் (Indigenous Bankers), லேவா தேவிக்காரர்களும் (Money Lenders) அடங்குவார்கள். இந்தியாவில் ஒவ்வொரு பகுதியிலும் ஒவ்வோர் இனத்தைச் சார்ந்தவர்கள் லேவாதேவித் தொழிலில் ஈடுபட்டிருக்கின்றனர். இவர்களுக்கிடையே இணைப்போ கட்டுக்கோப்பான அமைப்போ இல்லை. அவர்கள் வட்டி வாங்குவதிலும் ஒரு முறையோ நீதியோ கிடையாது. அமைப்புள்ள, அமைப்பற்ற பணச்சந்தைகளுக்கிடையே கூட்டுறவுக் கடன் சங்கங்கள் (Co-operative Credit Institutions) பணி செய்கின்றன. அமைப்பற்ற சந்தையில் வாங்கப்படும் கடும் வட்டியைத் தணிப்பதற்காகத்தான் கூட்டுறவு நிறுவனங்கள் நமது நாட்டில் தோற்றுவிக்கப்பட்டன. இந்திய ரிசர்வ் வங்கி அவ்வப்போது கூட்டுறவு நிறுவனங்களுக்குத் தேவையான அளவு கடனுதவி அளித்து வருகின்றது.

இயல்புகள் (குறைகள்)

வளர்ச்சி பெறுத பணச் சந்தையின் இயல்புகளோ ஒத்துத் தான் இந்தியப் பணச் சந்தை அமைந்திருக்கிறது. அவ்வியல்பு களே நமது நாட்டு பணச் சந்தையின் குறைகளாக இருக்கின்றன. அக் குறைகள் பின் வருமாறு :

(1) இந்தியப் பணச் சந்தையின் பெரும் பகுதி அமைப் பற்றதாக உள்ளது. நாட்டு வங்கியர்களும், கடன் கொடுப்போரும் வங்கி முறை விதிகளையோ, மைய வங்கியின் ஆணையையோ பின் பற்றுவதில்லை. அவர்கள் மனப் போக்குப்படி, சூழ்நிலைக்கேற்ற வாறு கடன் அளித்து வருகின்றனர் ; பணப் பற்றுக்குறை ஏற் பட்டால் இந்திய ரிசர்வ் வங்கியிடம் செல்வதில்லை. கட்டுக்கடங் காமல் இருக்கின்ற நாட்டு வங்கியர் போன்றோர்களைக் கட்டுப் படுத்த இந்திய ரிசர்வ் வங்கி மேற்கொண்ட முயற்சிகள் அவ்வள வாக வெற்றியைத் தேடித்தரவில்லை. தற்போது அவர்களைக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவர ரிசர்வ் வங்கிச் சட்டம் திருத்தப்பட்டு அதன் அதிகாரம் கூட்டப்பட்டுள்ளது. காலப் போக்கில் இந்தியப் பணச்சந்தை செம்மைப்படுத்தப்படும் என எதிர்பார்க்கலாம்.

(2) பணச் சந்தை நெறியாகச் செயல்பட வேண்டுமானால் இலண்டனில் இருப்பதைப் போல் கழிவுச் சந்தை இருத்தல் அவசியமாகும். அப்போதுதான் பணச் சந்தையில் பங்கு கொள் வோருக்கிடையே தொடர்பு ஏற்படும்; மைய வங்கியான ரிசர்வ் வங்கியாலும் கட்டுப்படுத்த முடியும். ஆனால் நம் நாட்டில் வங்கிகள் மிகுதியாக ரொக்கம் வைத்திருப்பதாலும், மாற்றுச் சீட்டுகளை மறுகழிவு செய்து பணம் பெறுவதைவிட நேரடி யாகக் கடன்பெற விரும்புவதாலும், ஒரே வகையான வாணிப மாற்றுச் சீட்டுகள் புழக்கத்தில் இல்லாததாலும், வேளாண் மையின் காரணமாக வேண்டிய கடன் அளவு பருவத்திற்கேற்ப மாறுபடுவதாலும், அயல்நாட்டு வாணிபத்திற்கு வேண்டிய பணத்தை வெளிநாட்டுச் செலாவணி வங்கிகள் வழங்குவதாலும் மாற்றுச் சீட்டுச் சந்தை அமையவில்லை. 1952ஆம் ஆண்டில் அச் சந்தையைத் தோற்றுவிக்க ரிசர்வ் வங்கி வகுத்த திட்டம் இன்னும் செயல்படவில்லை என்பதை மீண்டும் கவனிக்க வேண்டும். 1971-ல் உருவாக்கப்பட்ட திட்டம் நல்ல வெற்றி யைத் தரும் என்ற நம்பிக்கை இருக்கிறது.

(3) நம் நாட்டுப் பணச் சந்தையில் பல உட்பகுதிகள் இருப் பதனால் பலவகையான வட்டி வீதங்கள் நடைமுறையில் அமலில்

இருக்கின்றன. இவை ரிசர்வ் வங்கி வட்டிவீதத்தை ஒட்டி அமையவில்லை. சாதாரணக் கடன் மற்றும் அழைப்புக் கடன் வட்டி வீதங்களுக்கும், வங்கி வட்டி வீதத்திற்கும், சிறு வணிகர்கள் மற்றும் லேவாதேவிக்காரர்களின் வட்டி வீதத்திற்கும் இடையே மிகுந்த வேறுபாடுகள் உள்ளன. இவ்வாறு வேறுபாடு நிகழ்வதற்குரிய காரணத்தை அறியுமிடத்து ஒன்றுக்கொன்று இணைப்பு இல்லாதது புலப்படும். மேலும் நம் நாட்டில் இடத்திற்கிடம் வட்டி வீதம் மாறுகின்றது என 'வங்கி முறை விசாரணைக் குழு' (Banking Enquiry Committee) ஆய்வு செய்து சுட்டிக்காட்டியுள்ளது.

(4) இந்தியப் பணச் சந்தையில் தக்க துணைச் சந்தைகள் வளர்ச்சி பெறவில்லை. அழைப்புப் பணச் சந்தை மட்டும் ஓரளவு வளர்ந்துள்ளது. ஏற்புப் பணச்சந்தை, கழிவுச் சந்தை மற்றும் வாணிப மாற்றுச் சீட்டுச் சந்தை முதலியன ஏற்படவில்லை. இவைகள் இல்லையெனில் பணச் சந்தை வளர வாய்ப்பில்லை என்பது தெளிவு.

(5) பணச் சந்தையில் பல்வேறு உறுப்புகள் ஒன்றுக்கொன்று இணைப்பில்லாமல் செயல்படுகின்றன. இந்திய ஸ்டேட் வங்கியாக இப்போது மாறியிருக்கின்ற இம்பீரியல் வங்கி, வணிக வங்கிகள், அன்னியச் செலாவணி வங்கிகள், கூட்டுறவு வங்கிகள், கடன் கொடுக்கும் உள்ளூர்ச் சிறு நிறுவனங்கள் ஆகியவை தத்தம் விருப்பப்படி ஏதாவது ஒரு துறையில் ஈடுபட்டிருந்தன; மேலும் ஒன்றுக்கொன்று பொறுமை உணர்ச்சியுடனும் செயல்பட்டன. 1935-ல் இந்திய ரிசர்வ் வங்கி தோற்றுவிக்கப்பட்ட பின்னரும் பணச் சந்தையை ஒழுங்குபடுத்த முடியவில்லை. இன்றும் ஒன்றுக்கொன்று தொடர்பில்லாமல்தான் தனித்து இயங்குகின்றன.

(6) கடன் கட்டுப்பாட்டு முறைகளை ரிசர்வ் வங்கி அமலாக்கும்போது, பல செல்வந்தர்களிடையே உள்ள கறுப்புப் பணம் பணச் சந்தையில் மறைமுகமாக ஊடுருவி ரிசர்வ் வங்கியின் கடன் குறைப்புத் திட்டத்தைச் செயல்படாமல் தடுக்கின்றது.

இந்திய மாற்றுச் சீட்டுச் சந்தை

பணச் சந்தை வளர்ச்சிக்கு மாற்றுச்சீட்டு முறை அவசியம் என முன்பே பார்த்தோம். ஆனால் இந்தியாவில் மாற்றுச் சீட்டுச் சந்தை நன்கு வளராததால் பணச் சந்தையிலும் முன்னேற்றம்

இல்லை. நமது நாட்டில் ஆங்கிலேயர்களின் ஆட்சிக்கு முன்பிருந்த மாற்றுச் சீட்டு முறை கையாளப்பட்டாலும் இதுநாள் வரை மேல்நாடுகளில் வளர்ச்சியுற்று இருப்பதுபோல் வளரவில்லை அதற்குரிய காரணங்களைக் கீழ்க்கண்டபடி அறிவோம்:

(1) இந்திய ரிசர்வ் வங்கி 1935-ல் தொடங்கிய காலத்திலேயே மாற்றுச் சீட்டுச் சந்தை வளர்ச்சியுறுவதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும் என அதன் பணிகளுள் ஒன்றாகக் குறிப்பிட்டாலும், இதுநாள்வரை ஏற்பகங்கள் மற்றும் கழிவகங்கள் நிறுவுவதற்கு எந்தவித முயற்சியையும் அவ் வங்கி மேற்கொள்ளவில்லை.

(2) வணிக வங்கிகளும், நாணய மாற்று வங்கிகளும் மாற்றுச் சீட்டுச் சந்தைக்கு முற்றிலும் முரணாகச் செயல்படுகின்றன. ரொக்கக் கடன்களை அளிப்பதன் மூலமும், அரசுப் பத்திரங்களைக் கொண்டு ரிசர்வ் வங்கியிடம் தேவையான கடன் வசதிகளைப் பெறுவதன்மூலமும் மாற்றுச் சீட்டு முறையின் வளர்ச்சி தடை செய்யப்படுகிறது.

(3) வாணிப நடவடிக்கைகளுக்குக் கையாளப்படும் மாற்றுச் சீட்டு முறையை வணிகர்கள் பின்பற்றுவதற்கு வேண்டிய சூழ்நிலைகள் ஏதுவாக இல்லை. பணச் சந்தையில் புதுவிதமான ஆவணங்கள் புழங்கப்படுவதால் நாட்டு உண்டியல்களின் (Hundis) மதிப்புக் குறைந்துவிட்டது. வணிகர்களும் மாற்றுச் சீட்டுகளை ஏற்புச் செய்து, பின் செலுத்தும் பணத்திற்கு முன்கூட்டியே கையெழுத்திடுவதை, ஒரு கௌரவப் பிரச்சினையாக எடுத்துக் கொள்கின்றனர். வணிக வங்கிகளும் மாற்றுச் சீட்டின் மேல் கடன் கொடுப்பதற்குத் தயங்கவும் செய்கின்றன; சரக்குகளையும் அரசுப் பத்திரங்களையும்தாம் ஈடாகப் பெற்றுக் கொள்வதற்கு வங்கிகள் முன்வருகின்றன. வணிகர்கள்கூட வாடிக்கையாளர்களின்மேல் நம்பிக்கைக் குறைவால் மாற்றுச் சீட்டு எழுதுவதற்கு முன்வருவதில்லை.

(4) மாற்றுச் சீட்டுகளின் முத்திரைச் செலவுகள் (stamp duties) அதிகமாவதால் மாற்றுச் சீட்டுகளின் வளர்ச்சி தடைப்படுகிறது.

மாற்றுச் சீட்டுச் சந்தை வளர்ச்சியடையாமலிருப்பதற்கும் பல காரணங்களிருந்தாலும், இந்திய ரிசர்வ் வங்கிச் சட்டப் பிரிவு 17 (4) (c)-ன்படி இந்திய ரிசர்வ் வங்கி 1951-ல்

மாற்றுச் சீட்டுச் சந்தைத் திட்டத்தைத் (Bill Market Scheme) தொடங்கி வைத்தது. பொதுவாக, வணிக வங்கிகள் மட்டும், ரிசர்வ் வங்கியிடமிருந்து பெறக் கூடிய ரொக்கக் கடனிலிருந்து ஒரு பகுதியை மாற்றி (converting) மறுநிதியாக (refinance) அடைவதற்கு முடியுமாதலால், இம் மாற்றுச் சீட்டுத் திட்டம் ஒரு 'பொய்யான' (Pseudo) திட்டம் எனக் கூறப்படுகிறது. ரிசர்வ் வங்கிச் சட்டம், பிரிவு 17 (2) (a)ன்படி ஒரு புதிய மாற்றுச் சீட்டுச் சந்தைத் திட்டம் உருவாக்கியவுடன், அப்பழைய திட்டம் 1971ஆம் ஆண்டு சூன் 30-லிருந்து கைவிடப்பட்டது.

ஆய்வுக் குழு (Study Group)

1970 பிப்ரவரியில் திரு. எம். நரசிம்மன் தலைமையில் மாற்றுச் சீட்டு முறையின் வளர்ச்சியைத் துரிதப்படுத்தவும், மாற்றுச் சீட்டுச் சந்தையை உருவாக்கவும் ஆய்வு செய்யும்படி ஒரு குழுவை ரிசர்வ் வங்கி அமைத்தது. அக் குழு தன் அறிக்கையை 1970 சூனில் வெளியிட்டது. அதற்குப் பிறகு ரிசர்வ் வங்கிச் சட்டப்படி [பிரிவு 17 (2) (a)] ஒரு புதிய மாற்றுச் சீட்டுச் சந்தை 1970 நவம்பர் 1-லிருந்து அமலுக்கு வருவதை ரிசர்வ் வங்கி அறிவித்தது. இத் திட்டத்தில் அவ்வளவாகப் புதுமை ஏதுமில்லை. இங்கேயும் மாற்றுச் சீட்டுகள் மறுகழிவு செய்யப்படுவதற்குத்தான் வகை செய்யப்பட்டுள்ளது.

நிபந்தனைகள்

இப் புதிய திட்டப்படி ஒரு சில குறிப்பிட்ட மாற்றுச் சீட்டுகள் தாம் ரிசர்வ் வங்கியிடம் மறுகழிவு செய்யப்படலாம். ஆனால் வணிக வங்கிகள் எல்லா வகை மாற்றுச் சீட்டுகளையும் கழிவோ, மறுகழிவோ செய்து கொள்ளலாம். முக்கியமான சில தகுதிகளும் நிபந்தனைகளும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

(1) பொருள்கள் விற்பனையினால் ஏற்பட்ட மாற்றுச் சீட்டுகள் உண்மையான வாணிப மாற்றுச் சீட்டுகளாக இருத்தல் வேண்டும்.

(2) பொருள்களின் உரிமை மூல ஆவணங்கள் (documents of title to goods) பற்றிய விளக்கமும், இடம்பெற்ற நடவடிக்கையின் விளக்கமும் மாற்றுச் சீட்டில் குறிப்பிடப்படுதல் வேண்டும்.

(3) மாற்றுச் சீட்டுகளின் காலம் 120 நாள்களுக்குமேல் போகக் கூடாது. அதாவது, முதிர்வடையும் நாள் 120 நாள்களுக்குள் இருத்தல் அவசியம்.

(4) ரிசர்வ் வங்கிச் சட்டப்படி, மாற்றுச் சீட்டில் வகையான இரு கையெழுத்துகள் (two good signatures) இருத்தல் வேண்டும்; அவ்விரு கையெழுத்துகளில் ஒன்று உரிமம் பெற்ற பட்டியலில் கண்ட வங்கியின் (Licensed Scheduled Bank) கையெழுத்தாக இருத்தல் வேண்டும். இதன்படி பார்த்தால் கீழ்க்கண்ட மாற்றுச் சீட்டுகள் தகுதி வாய்ந்தவை எனலாம்:

(அ) வாங்குவோரின் வங்கியர்மேல் எழுதப் பெற்றதாகவும், ஏற்றுக்கொள்ளப் பெற்றதாகவும் உள்ள மாற்றுச் சீட்டு;

(ஆ) வாங்குவோர் மற்றும் அவரது வங்கியர்மேல் எழுதப் பெற்றதாகவும், அவர்கள் இணையாக ஏற்றுக் கொள்ளப் பெற்றதாகவும் உள்ள மாற்றுச் சீட்டு;

(இ) புதுத் திட்டத்தில் குறிப்பிட்டதுபோல், வாங்குவோரின் வங்கியால் சான்றளிக்கப் பெற்ற மறுத்தளிப்பில்லா வாணிபக்கடன் கடிதப்படி (Irrevocable letter of credit) வாங்குவோரின்மேல் எழுதப் பெற்றதும், அவரால் ஏற்றுக்கொள்ளப் பெற்றதுமான மாற்றுச் சீட்டு;

(ஈ) வாங்குவோரின்மேல் எழுதப் பெற்று அவரால் ஏற்றுக்கொள்ளப் பெற்றதாகவும், விற்போரின் வங்கிக்கு விற்போரால் மேலெழுத்து (Endorsement) செய்யப்பெற்றதாகவும் உள்ள மாற்றுச் சீட்டு; அம் மாற்றுச்சீட்டு முதிர்வடையும் காலத்திற்கு மூன்று நாள்களுக்கு முன்பே அவ் வங்கியால் பணம் செலுத்தப்படும் என்பதை உறுதிப்படுத்தி (confirm) உரிமம் பெற்ற பட்டியலில் கண்ட வங்கியால் மேலெழுத்து செய்யப்பெற்றுக் கையெழுத்துப் பொறிக்கப்படல் வேண்டும்.

(5) மிகையான எண்ணிக்கையில் சிறிய மாற்றுச் சீட்டுகள் மறுகழிவு செய்யப்படுவது தவிர்க்கப்படுவதற்காக ஒரு மாற்றுச் சீட்டின் மதிப்புக் குறைந்தது ரூ. 5,000/- இருக்கவேண்டுமென ரிசர்வ் வங்கியால் நிர்ணயம் செய்யப்பட்டது (ரூ. 10,000-லிருந்து குறைக்கப்பட்டது). மேலும், ஒவ்வொரு தடவையும் மறுகழிவு செய்யப்படும்போது மாற்றுச் சீட்டுகளின் மொத்த மதிப்பு ரூ. 50,000-க்குக் குறையாமலிருத்தல் வேண்டும்.

(6) மாற்றுச் சீட்டின், முக்கியமாகச் சலுகை நாள்கள் தவிர்க்கப்படுதல் வேண்டும்.

1971 அக்டோபர் 25-ல் இந்திய ரிசர்வ் வங்கி மறுகழிவு செய்முறைகளை இலகுவாக்கும் பொருட்டும் காலதாமதப்படுவதைக் குறைப்பதற்காகவும் சில திருத்தங்களை அறிவித்தது. மறுகழிவு செய்வதற்கான, ரூ. 2 இலட்சம் அல்லது அதற்குக் குறைவாக மதிப்புள்ள ஒவ்வொரு மாற்றுச் சீட்டையும் வணிக வங்கிகள் ரிசர்வ் வங்கிக்கு அனுப்பிவைக்கவேண்டிய அவசியமில்லை. வணிக வங்கிகளே ரிசர்வ் வங்கியின் முகமைகளாக (Agents) அச் சீட்டுகளை வைத்துக்கொள்ளலாம். ரூ. 2 இலட்சம் மதிப்பிற்கும் மேலான மாற்றுச் சீட்டுகளை மட்டும் ரிசர்வ் வங்கிக்கு அனுப்பி வைத்தால் போதுமானதாகும். மேலும் பம்பாய், கல்கத்தா, சென்னை, டெல்லி ஆகிய இடங்களிலுள்ள ரிசர்வ் வங்கியோடல்லாமல் ஹைதராபாத், பாட்னா, நாகபுரி, கான்பூர், பெங்களூர் ஆகிய இடங்களிலுள்ள ரிசர்வ் வங்கியிலும் மறுகழிவு செய்யும் வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. நாணய மாற்றுச் சந்தைத் திட்டத்தில் குறியிட்ட நிபந்தனைப்படி ஒரு மாற்றுச் சீட்டின் மதிப்பு ரூ. 5,000-க்குக் குறையாமல் இருக்கவேண்டுமென்ற வரம்பு குறைக்கப்பட்டு ரூ. 1,000-க்குக் கொண்டுவரப்பட்டது. அதாவது, ஒரு மாற்றுச் சீட்டின் மதிப்பு ரூ. 1,000 ஆக இருந்தாலும் ஒரு வணிக வங்கி அதை ரிசர்வ் வங்கியிடம் மறுகழிவு செய்து கொள்ளலாம்.

புதிய திட்டத்தாலும், மேற்குறிப்பிட்ட திருத்தங்களாலும் மாற்றுச் சீட்டுச் சந்தை நன்கு வளர்ச்சியடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

மாற்றுச் சீட்டு முறை வளர்ச்சிக்கான வழிமுறைகள்

(1) மாற்றுச் சீட்டு முறை வளர்ச்சிக்கான வழிமுறைகளில் ஒன்று, வணிக வங்கிகள் தொழிற்சார் கடன் வாங்குவோர்களைக் கடன் வணிக நடவடிக்கைகளில் மாற்றுச் சீட்டுகளைக் கையாளும்படி அறிவுறுத்த வேண்டும். ஏனென்றால், மாற்றுச் சீட்டுப் பேரங்களுக்கு எந்தவித வரையறையும் கிடையாது. மாற்றுச் சீட்டுத் தொகையின் பழைய வரம்புகள் கைவிடப்பட்டு, ரிசர்வ் வங்கியின் புதிய திட்டப்படி வணிக வங்கிகள் வரம்புகளைக் கடைப்பிடிக்க வேண்டும். முடிந்தவரை, ஈடற்ற மாற்றுச் சீட்டுகள், (Clean Bills), கடனுதவி மாற்றுச்சீட்டுகள் (Accommodation Bills) வணிக வங்கிகளால் கழிவு செய்யப்படக்கூடாது.

(2) மாற்றுச் சீட்டு முறை சிறப்புறச் செய்யப்படவேண்டுமானால், ஏட்டுக் கடன்மேல் ரொக்கக் கடன் அளிப்பது நிறுத்தப்படவேண்டும். மாறாக, மாற்றுச் சீட்டை ஈடாக வைத்துக்கொண்டு

சொக்கக் கடன் வழங்கப்படுவது ஊக்குவிக்கப்படவேண்டும். வாங்குவோர் மாற்றுச் சீட்டை ஏற்பதில் ஏதேனும் மறுப்புக் கூறுவாரேயானால், விற்போர் அவரை ஏற்றுக்கொள்ளும்படி கட்டாயப்படுத்த வேண்டும் அல்லது வாங்குவோரின் வங்கியர் (வங்கியரின் வாடிக்கையாளராக இருந்தால்) வாங்குவோரை அந்த மாற்றுச் சீட்டிற்கு ஒப்புதல் அளிக்கும்படி அறிவுரை கூறவேண்டும்.

(3) மாற்றுச் சீட்டுக்குத் தேவையான முத்திரைச் செலவுகள் குறைக்கப்படுதல் வேண்டும். அதோடுமட்டுமல்லாமல் முத்திரைத் தாள் (Stamp paper) தட்டுப்பாடு இல்லாமல் எப்போதும் கிடைக்க அரசு வழிவகை செய்யவேண்டும்.

17. மைய வங்கி
(Central Bank)

தற்போது உலகில் அனைத்து நாடுகளிலுமே மைய வங்கி உள்ளது எனக் கூறலாம். மைய வங்கிகளின் அமைப்பு, கொள்கைகள் போன்றவை நாட்டுக்கு நாடு வேறுபடுகின்றன. அவைகளின் செயல்முறையில் வேறுபாடு கண்டாலும், பணிகளிலும் நோக்கங்களிலும் வேறுபாடு காணமுடியாது. மைய வங்கியின் பணிகளில் சில பல நூற்றாண்டுகளாகச் செய்யப்பட்டு வந்தாலும் 'மைய வங்கி' என்ற முழுமையான சொற்கள் சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்புதான் கையாளப்பட்டிருக்கின்றன. ஒரு நாட்டின் பொருளாதாரம் செம்மையாக இயங்கவும், அரசுக் கொள்கைகள் ஒழுங்காக நிறைவேற்றப்படவும் மைய வங்கி ஒரு நாட்டிற்கு இன்றியமையாததாக விளங்குகிறது. நாட்டின் பண முறையைக் கட்டுப்படுத்தி நெறிப்படுத்துவதற்கு மைய வங்கியைத் தவிர வேறு ஏதும் ஈடு செய்ய முடியாது.

முதன் முதலில் எந்த நாட்டில் மைய வங்கி தொடங்கப் பெற்றது எனத் தெளிவாகக் கூறமுடியாவிட்டாலும், 1656-ல் ஸ்வீடனில் நிறுவப்பட்ட 'ரிக்ஸ் வங்கி' (Ricks Bank)தான் உலகின் முதல் வங்கியாகக் கருதப்படுகிறது. 1694-ல் 'இங்கிலாந்து வங்கி' (Bank of England) தொடங்கப் பெற்றாலும், உண்மையான மைய வங்கிப் பணிகளை அவ்வங்கி 1844-ல்தான் மேற்கொண்டிருக்கின்றது. எனவே, மைய வங்கிக் கொள்கைகளை உருவாக்கிச் சிறப்பாகப் பணியாற்றிய முதல் வங்கி 'இங்கிலாந்து வங்கி' என்று கூறலாம். இவ் வங்கியைப் பின் பற்றித்தான் மற்ற நாடுகள் தத்தம் மைய வங்கியை அமைத்துக்கொண்டன. 'பிரான்சு வங்கி' (Bank of France) 1800-ல் தொடங்கப்பெற்றது. ஜெர்மெனியின் 'ரிஷ் வங்கி' (Reichs Bank) 1875-ல் நிறுவப்பட்டது. ருஷ்ய அரசின் வெளிக் கடன், நாட்டில் புழங்கிய பணம் ஆகியவைகளை ஒருமைப்படுத்துவதற்காக 'ருஷ்ய வங்கி' (Bank of Russia) 1860-ல் நிறுவப்பட்டது. பணத் துறையில் கட்டுப்பாட்டையும், ஒழுங்கையும் நிலைநிறுத்துவதற்காக 'ஜப்பான் வங்கி' (Bank of Japan)1882-ல் அமைக்கப்பெற்றது. இப்படியாக,19ஆம் நூற்றாண்டு முடிவுக்குள்

அமெரிக்க நாடுகளைத் தவிரப் பொதுவாக, ஏனைய நாடுகளில் மைய வங்கி நிறுவப்பட்டிருக்கிறது. அமெரிக்க நாடுகளில் 1913-ல் 'கூட்டரசுக் காப்பு முறை' (Federal Reserve System) பின்பற்றப் பட்டது. கனடாவில், 'கனடா வங்கி' (Bank of Canada) 1934-ல் அமைக்கப்பெற்றது. சீனாவில் 1928-லும் (சீன வங்கி) இந்தியாவில் 1935-லும் (இந்திய ரிசர்வ் வங்கி) மைய வங்கிகள் தொடங்கப்பெற்றன. 19ஆம் நூற்றாண்டில் தொடங்கப் பெற்ற ஒரு சில மைய வங்கிகளும் 20ஆம் நூற்றாண்டில் தொடங்கப்பட்டுள்ளன. ஏறத்தாழ எல்லா நாடுகளிலுமே மைய வங்கிகள் தற்போது அமைக்கப்பெற்றுள்ளன. 19ஆம் நூற்றாண்டில் நிறைகுறையாக உருப்பெற்ற மைய வங்கிகள் 20ஆம் நூற்றாண்டில் முழுமையான அளவுக்கு வளர்ச்சியடைந்துள்ளன. ஆதலால், எம். எச். டி காக் (M. H. De Kock) 'மைய வங்கித் தொழில் அறிவியலாக' (The Science of Central Banking) வளர்ந்திருப்பதாகக் கருதுகின்றார்.

இலக்கணம்

'மைய வங்கி' என்ற சொல்லுக்கு இலக்கணம் வகுத்தெடுப்பதென்பது மிகவும் சிக்கலான தொன்றாகும். மைய வங்கி ஆற்றும் பணிகளைக் கொண்டுதான் இலக்கணம் வடிக்கவேண்டும். ஆனால் செயல்முறைகள் நாட்டிற்கு நாடு, காலத்திற்கேற்றாற்போல் மாறியிருக்கின்றன; படிப்படியாகப் பணிகளும் கூடுதலாயிருக்கின்றன. இருந்தாலும், மைய வங்கி மேற்கொள்ளும் சில முக்கியமான பணிகளைக் கருத்திற்கொண்டு—பணத்துறைக்கு ஒரு மைய நிறுவனம், வங்கிகளுக்கு வங்கி, அரசின் வங்கி—ஒரு சில இலக்கணங்களை எடுத்துக் கூறலாம். பல பொருளியலறிஞர்கள், பொதுவாக, மைய வங்கியின் ஏதாவது ஒரு பணியை வைத்துக்கொண்டு, விளக்கம் தர முயல்கின்றனர்:

'வங்கி முறையில் ஒரு தனி வங்கி முழுமையாக, அல்லது எச்சமாகப் பணம் வெளியிடுகின்ற உரிமையைப் பெற்றிருப்பதான் மைய வங்கித் தொழிலுக்கான முதன்மையான விளக்கமாகும்... இந்தப்பணம் வெளியிடுகின்ற முற்றுரிமைகளிலிருந்துதான், நமது தற்கால மைய வங்கியின் இரண்டாம் வகைப் பணிகளும் இயல்புகளும் பெறப்பெற்றிருக்கின்றன' என வீரா ஸ்மித் (Vera Smith) என்பவர் கூறுகின்றார்.

'அரசின் பொதுப் பணக் கொள்கையை உருவாக்கும் வகையில் வாணிப வங்கியைக் கட்டுப்படுத்துவதுதான், வாணிப வங்கியிலிருந்து வேறுபடுத்திக் காட்டுகின்ற மைய

வங்கியின் பணியாகும்' என்று ஆர். எஸ். ஸையர்ஸ் விவரிக்கின்றார். மைய வங்கியின் பணிகளில் முதன்மையானது இறுதி நிலைக் கடன் ஈவோனுகச் செயல்படுவதாகும்', என ஹாட்ரே (Hawtrey) குறிப்பிடுகின்றார்.

'மைய வங்கியின் ஓர் உண்மையான, அதே நேரத்தில் எல்லாவற்றையும் உள்ளடக்கிய ஒரு பணி, கடனைக் கட்டுப் படுத்துவதாகும்', என்று 'ஷா' (Shaw) கூறுகின்றார்.

'ஒரு நாட்டின் பணத் துறை மற்றும் கடனுக்கம் ஆகியவை நெறிப்படுத்தும் பணி அந்த நாட்டின் எந்த வங்கியிடம் ஒப்ப டைக்கப்படுகிறதோ அவ் வங்கியே மைய வங்கியாகும்' எனப் 'பன்னாட்டுத் தீர்வுகள் வங்கியின் விதி முறைகள்' (Statutes of the Bank for International Settlements) விவரிக்கின்றது.

'பணத் திட்டத்தின் தரத்தை நிலைப்படுத்துவதுதான் மைய வங்கியின் இன்றியமையாத பணி' என்று கிஷ் (Kisch), எல்கின் (Elkin) என்போர் குறிப்பிடுகின்றனர்.

இப்படியாக, வீரா ஸ்மித், பண வெளியீட்டுப் பணிக்கு முக்கியத்துவம் அளிக்கிறார்; ஷா, கடன் கட்டுப்பாட்டிற்கும், ஹாட்ரே, இறுதிநிலைக் கடன் ஈவோனுக்கும், பன்னாட்டுத் தீர்வுகள் வங்கியின் விதிமுறைகள் பணத் துறை மற்றும் கடனுக்கம் நெறிப்படுத்தப்படுவதற்கும், கிஷ் மற்றும் எல்கின் பண மதிப்பு நிலைப்படுத்தப்படுவதற்கும் முக்கியத்துவம் அளிக் கின்றனர்.

ஆனால் 'டி காக்'கின் கருத்து மேற்கூறியவைகளின் கருத்து களினின்றும் பன்மடங்கு மேன்மையானதாகும். மைய வங்கியின் முக்கியமான பணிகள் அனைத்தும் அடங்கிய விளக்கத்தை அவர் எடுத்துக் கூறுகிறார். ஆனால், அவரது இலக்கணம் சுருக்க மானதாக இல்லை எனக் கூறலாம். 'ஒரு நாட்டின் பண, வங்கி அமைப்பின் உச்சியாக இருப்பது மைய வங்கியாகும்' எனக் கூறி, மைய வங்கியின் பணிகளைக் கீழ்க்கண்டவாறு விளக்குகிறார்:

(1) வாணிபம் மற்றும் பொதுமக்களின் தேவைக்கேற்பப் பண வாக்க முறையை நெறிப்படுத்துதல்; இதற்காகப் பண வெளியீட்டின் முற்றுரிமையோ, நிறைகுறை முற்றுரி மையில் ஒரு பகுதியோ மைய வங்கிக்கு வழங்கப்படுதல்;

(2) அரசுக்காகப் பொது வங்கிப் பணிகளையும், முகமைப் பணிகளையும் மேற்கொள்ளுதல்;

(3) வாணிப வங்கிகளின் ரொக்க இருப்பின் பாதுகாவலராக இருத்தல்;

(4) நாட்டின் பன்னாட்டுப் பண இருப்பிற்குப் பாதுகாவலராக இருந்து மேலாண்மை செய்தல்;

(5) வணிக வங்கிகள், மாற்றுச் சீட்டுத் தரகர்கள், வணிகர்கள், பிற நிதி நிறுவனங்கள் ஆகியவற்றிற்கு மறுகழிவு வசதிகளைச் செய்து (rediscounting) முன்பணம் அளித்தும், பத்திரங்களுக்கு ஈடாகப் பணம் அளித்தும் உதவி செய்தல்; வங்கிகளின் இறுதிநிலைக் கடன் ஈவோனாகப் பொறுப்பேற்றுக்கொள்ளல்;

(6) வங்கிகளுக்கிடையே இருக்கின்ற பாக்கிகளைத் தீர்த்து வைத்தல்;

(7) வாணிபத் தேவைகளுக்கேற்பவும், அரசு பின்பற்றுகின்ற விரிவான பணக் கொள்கையைச் செயல்படுத்தும் நோக்கத்திற்கேற்பவும் கடனைக் கட்டுப்படுத்துதல்.

டி காக் மேலும், "நாட்டின் பண வங்கிக் கொள்கைக்கு ஏற்ற அளவில் மட்டுந்தான், மைய வங்கி பொது மக்களோடு நேரடியாகத் தொடர்பு கொள்ளவேண்டுமென்றும், சாதாரண வணிக வங்கியின் பணிகளான வைப்புகளைப் பொது மக்களிடமிருந்து பெறுவது, கடன் அளிப்பு வாடிக்கையாளர்களுக்குச் செய்வது போன்றவற்றை மேற்கொள்ளக்கூடாது என்றும் கூறுகின்றார்.

மைய வங்கியின் பணிகள்

வணிக வங்கிகளின் பணிகளினின்றும் மாறுபட்டது மைய வங்கியின் பணிகள். முதலில், மைய வங்கி, வணிக வங்கிகளைப் போல் அல்லாமல், இலாப நோக்குடன் செயல்படுவதில்லை. பொதுநலத் தொண்டு செய்வதை முன்னிட்டு மைய வங்கி தொடங்கப் பெற்றுள்ளது. இரண்டாவதாக, மைய வங்கி, அரசிடம் ஒரு தனித் தொடர்பு கொண்டுள்ளது. அரசின் வங்கியாக விளங்குவதால், அரசு எண்ணியபோது ஓரளவுக்கு மைய வங்கியின் செயற்பாடுகளில் கட்டுப்பாடு விதிக்கலாம். மூன்றாவதாக, வங்கிகளுக்கு வங்கியாக விளங்குவதால் மைய வங்கி மக்களிடம் நேரடித் தொடர்பு கொள்ள வேண்டியதில்லை. எந்த விதமான கட்டுப்பாட்டு முறைகளையும் வங்கிகளின் மூலமாக நடைமுறையாக்கலாம். இனி, மைய வங்கியின் பணிகளை ஒவ்வொன்றாகக் காணலாம்.

பண வெளியீடு (Note Issue)

அனைத்து நாடுகளிலுமே பண வெளியீடு செய்தல் மைய வங்கியின் முக்கியமான பணியாக அமைந்திருக்கின்றது. இது, பெரும்பாலும், மைய வங்கியின் முற்றுரிமையாகவே இருக்கின்றது. நாட்டின் பண அளவும், வணிக வங்கிகளின் கடனுக்கமும் பொருளாதாரத்திற்கு அச்சாணியாக விளங்குவதால் பண வெளியீட்டு உரிமை மைய வங்கித் தொடக்க காலத்திலிருந்தே அதன் முற்றுரிமையாக இருந்து வருகிறது.

முன்பு, சில நாடுகளில் அரசே காகிதச் செலாவணியை வெளியிட்டது. ஆனால், தாள் பணத்தின் மதிப்புக் குறைந்தபோது மக்களுக்கு அரசின்மீது இருந்த நம்பிக்கை குறையத் தொடங்கிற்று. இதனால், அரசு, பணம் வெளியிடுகின்ற உரிமையை மீண்டும் வங்கிகளிடம் ஒப்படைக்கவும், தாள்பணம் வெளியிடத் தனியான வங்கிகளை நிறுவவும் வேண்டியதாயிற்று. சில நாடுகளில் பல வங்கிகளிடம் இப் பணி ஒப்படைக்கப்பட்டது. இதன் விளைவு என்னவென்றால் பல வகையான தாள் பணம் புழக்கத்திற்கு வந்தன. பணத்துறையைக் கட்டுப்படுத்தவேண்டிய பிரச்சினை அரசுக்கு வலுவாயிற்று. அதனால் பற்பல நாடுகள் பல்வேறு சட்டங்களை இயற்றின. முடிவில் பண வெளியீட்டுரிமை மைய வங்கிக்கே அளிக்கப்பட்டது.

சட்டப்படி நோக்கின் பண வெளியீட்டுரிமை அரசிடமே இருத்தல் வேண்டும். அப்போதுதான் பண அளிப்பிலும், கடனுக்கத்திலும் நெறி காணமுடியும். ஆனால் அரசு நேரடியாகத் தானே பணத்தை வெளியீடு செய்தால், அவ் வெளியீடு ஓர் எல்லையில்லாமல் பெருகிக் கொண்டே போவதற்கு வாய்ப்பு உள்ளது. அப்படிப் பெருகினால் நாட்டிற்குக் கேடுதான் என்பதை யாவரும் அறிவர். ஆகவே, பண வெளியீட்டு உரிமையை மைய வங்கியிடம் விட்டு வைப்பதே சாலச் சிறந்ததெனக் கூறப்படுகிறது.

தாள் பண வெளியீட்டுரிமை மைய வங்கியிடம் மட்டுமே இருத்தல் வேண்டுமென்பதற்குச் சில காரணங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

(1) வங்கிகளின் கடனுக்கமும், கடன் விரிவாக்கமும் அவைகளிடமுள்ள உபரி ரொக்க இருப்பைப் பொறுத்து இருக்கிறது. உபரி இருப்பு அதிகமானால் கடனுக்கமும் அதிகமாகும்; அல்லது பிறப்பிக்கப்பெற்ற வைப்புகள் (Derivative deposits) கூடுதலாகும். வங்கிகளின் கடன் அளவு கட்டுப்படுத்தப்பட வேண்டுமானால்

பண அளிப்பு நெறிப்படுத்தப்பட வேண்டும். எனவே, பண வெளியீட்டுரிமை மைய வங்கியிடம் இருத்தல் வேண்டும்.

(2) பண வெளியீடு ஒரு வங்கியிடம் மட்டுமிருந்தால் ஒரே வகையான பணம் வெளியிடப்பெறும். ஒரே வகைப் பணம் புழக்கத்திலிருந்தால், அரசு அதனைத் திறமையாகக் கட்டுப்படுத்தும்.

(3) தான் பண வெளியீட்டுரிமை மைய வங்கியிடம் இருப்பதால் அதற்குத் தனிச் செல்வாக்கு ஏற்படுகிறது. அது வெளியிடும் பணம் சட்டமுறைப் பணமானதால் மைய வங்கியின்மேல் மக்களுக்கு நல்ல நம்பிக்கை ஏற்படுகின்றது. இத்தகைய நம்பிக்கை நெருக்கடி காலங்களில் வங்கி முறையின் வெற்றிக்குப் பெருந்துணையாக இருக்கின்றது.

(4) பண வெளியீட்டினால் கிடைக்கின்ற இலாபம் அரசுக்குச் சேர்கின்றது. மைய வங்கி மட்டும் பணத்தை வெளியிடுகின்றபோது, பண அளவைக் கட்டுப்படுத்துவதும் எளிதாக இருக்கின்றது.

(5) பண வெளியீட்டுரிமை மைய வங்கியிடம் இருந்தால், பண வெளியீட்டில் ஏதேனும் முறைகேடான மற்றும் ஒழுங்கீனச் செயல்கள் (Irregularities and malpractices) இருப்பின், அவைகளை அரசு மேற்பார்வையிட ஏதுவாக இருக்க முடியும்.

அரசு வங்கி (Bank of State)

அனைத்து நாடுகளிலும் மைய வங்கி அரசின் ஆலோசகராகவும், முகவராகவும், வங்கியாளராகவும் பணிபுரிகின்றது. இப் பணிகளைப் பல வங்கிகள் முன்னரே அரசுக்குச் செய்திருக்கின்றன. முதன் முதலில் வங்கி என்ற சொல் உபயோகப்படுத்தப் பெற்ற இத்தாலியில் நிதி நிறுவனங்கள் (Finance Companies) இருந்ததாக ஆடம் ஸ்மித் (Adam Smith) குறிப்பிடுகின்றார். அரசுக்காகக் கடன் பெறுவது, அளிப்பது போன்ற பணிகளை அந் நிறுவனங்கள் செய்திருக்கின்றன. ஆம்ஸ்டர்டாம் வங்கி (Bank of Amsterdam) அரசு முகவராகப் பணியாற்றி வந்ததாக மார்ஷல் (Marshall) கூறுகிறார். அரசுக்கு வங்கியாக இருக்கின்ற மைய வங்கி அரசின் பல்வேறு துறைகளுக்கும், நிறுவனங்களுக்கும் வேண்டிய கணக்குகளை வைத்துக்கொள்கின்றது. அரசுக்காகப் பணம் பெறுதல், அரசு தரவேண்டிய பணத்திற்காக ரொக்கம் தருதல், வங்கி வசதிகளை ஏற்படுத்தித் தருதல் ஆகிய பணிகளையும் செய்கின்றது. வரி வருவாயை அரசு எதிர் நோக்கி இருக்கும் வேளையில், அரசுக்கு முன் பணம் கொடுத்

துதவுகின்றது. பொது மக்களிடமிருந்து அரசுக்காகக் கடன் வசூலித்துத் தருகின்றது. நெருக்கடி காலங்களிலும், அவசர காலங்களிலும் தேவையான பணத்தை அரசுக்கு அளிக்கின்றது.

அரசின் பல்வேறு நிதி நடவடிக்கைகள் பணச்சந்தை நிலை களையும், நாணயமாற்று விகிதத்தையும், மைய வங்கியின் கடன் கொள்கைகளையும் பாதிப்பதால் அரசின் வங்கி நடவடிக்கை களை யெல்லாம் மைய வங்கியே ஏற்பது சிறப்பாக இருக் கின்றது. அரசின் தாற்காலிகமான் பண நெருக்கடியைத் தவிர்ப் பதற்காகக் குறுங்காலக் கடனை (வழிவகைக் கடன்கள்— Ways and means advances) அவ்வப்போது மைய வங்கி அளிக் கின்றது. அரசு வெளியிடும் கருவூலச் சீட்டுகளைக் (Treasury Bills) கழிவு செய்து முன்பணம் அளிக்கின்றது. அரசுக்காக அரசின் பணக் கொள்கையைச் செயல்படுத்துகின்ற பணி மைய வங்கி யிடமே இருக்கின்றது. நாட்டின் பொருளாதார நலனை முன்னிட்டு அரசுக்குத் தேவையானபோது ஆலோசனை கூறுகின்றது.

உறுப்பு வங்கிகளின் ரொக்க இருப்புப் பாதுகாவலன்

வங்கிகளின் வங்கியாக இருக்கும் மைய வங்கி வேறு பல பணிகளையும் செய்கின்றது. வணிக வங்கிகளின் ரொக்க இருப்பில் ஒரு பகுதியைக் காப்பாகத் தன்னிடம் மைய வங்கி வைத்திருக் கின்றது. தொடக்கத்தில் வழக்கத்தின் காரணமாகவும், பின்னர்ச் சட்டத்தின் காரணமாகவும் அவ் வங்கிகள் மைய வங்கியிடம் ஒரு பகுதி ரொக்கத்தைக் கொடுத்து வைத்திருக்கின்றன. ஒரு வங்கி தன்னிடம் கொடுத்து வைத்திருக்கும் ரொக்க இருப்பு அடிப் படையில்தான் அவ் வங்கி கொண்டு வரும் மாற்றுச் சீட்டு களை மறுகழிவு செய்து மைய வங்கி பணம் அளிக்கின்றது. வங்கிகளுக்கெல்லாம் ஒரு வழிகாட்டியாகவும் அமைகின்றது. மைய வங்கியின் ஆணைகளுக்கேற்பவும், அறிவுரைகளுக் கேற் பவும் கொள்கைகளை ஏனைய வங்கிகள் பின்பற்றுகின்றன. நாட்டின் பணப் பொருளாதாரச் சூழ்நிலை ஒருங்கே நெறியாக அமை வதற்கு வணிக வங்கிகளிடம் உள்ள இருப்பில் ஒரு பகுதி மைய வங்கியிடம் இருப்பது பெருமளவுக்குத் துணை புரிகிறது. ரொக்கக் காப்பு வணிக வங்கிகளிடம் சிதறிய நிலையில் இருப்பதைவிட அவை குவிந்த நிலையில் மைய வங்கியிடம் வைத்திருக்கப் பெறு வதால் நாட்டின் கடன் அமைப்பு முறை பெருமளவிலும், நெகிழ் வுடையதாகவும் அமைகின்றது. மேலும், ரொக்க இருப்பு குவிந்த நிலையில் மைய வங்கியிடம் இருந்தால் அது நாட்டின் வங்கி முறைக்கே ஒரு பக்க பலமாக இருக்கும்; நெருக்கடி காலங்களில் நாட்டின் நன்மைக்காக அந்த ரொக்கக் காப்புகளைப்

பயன்படுத்த ஏதுவாக இருக்கும். வணிக வங்கிகளின் கடனளவைக் கட்டுப்படுத்த ரொக்க இருப்பு ஒரு கருவியாகப் பயன்படுத்தப்படுகின்றது. ரொக்க இருப்பு வீதத்தை மாற்றி, வணிக வங்கிகள் உண்டாக்குகின்ற கடன் அளவைக் கட்டுப்படுத்தலாம்.

நாட்டின் அன்னியச் செலாவணி இருப்புப் பாதுகாவலன் (Custodian of Nation's Foreign Currency Reserves)

பண வெளியீட்டுப் பணியையும், உறுப்பு வங்கிகளின் ரொக்க இருப்பை வைத்திருக்கும் பணியையும் மேற்கொண்டுள்ள மைய வங்கி அன்னியச் செலாவணி இருப்பிற்குப் பாதுகாவலனுகவும் இருப்பது அவசியமாகிறது. பணத்தின் புற மதிப்பை (External value) நிலைப்படுத்தவும், செலுத்து நிலையில் பாதகமான சூழ்நிலை ஏற்படின் அதனைச் சமாளிக்கவும், மைய வங்கியிடம் அன்னியச் செலாவணி இருப்பு இருக்க வேண்டியுள்ளது. பொன் திட்டம் கையாளப்பட்டபோது, பண வெளியீட்டிற்கு அடிப்படையாகப் பொன் இருப்பு, நாட்டில் வைக்கப்பட வேண்டும். உலகப் போருக்குப் பின்னர் எல்லா நாடுகளிலுமே மைய வங்கிகள் பண வெளியீட்டிற்கு அடிப்படையாகப் பொன்னையும் அன்னியச் செலாவணியையும் இருப்பாகக் கொள்கின்றன. இவ் விதிப்படி பார்த்தால் அன்னியச் செலாவணியைக் கட்டாயமாக ஒரு மைய வங்கி வைத்துக் கொள்ள வேண்டியிருக்கிறது. ஆனல் தாள் பணம் வெளியிடுவதற்கு ஈடாக வைத்திருக்கின்ற பொன்னையோ, அன்னியச் செலாவணியையோ வெளிநாட்டுக் கடனைத் தீர்க்க மைய வங்கி பயன்படுத்த இயலாதென்பதை அறிய வேண்டும்.

இறுதிநிலைக் கடன் ஈவோன் (Lender of the last resort)

'இறுதிநிலைக் கடன் ஈவோன்' என்ற சொற்களை உருவாக்கித் தந்த பெருமை வால்டர் பேகாட் (Walter Bagehot) என்பவரையே சாரும். மைய வங்கி இப் பணியையும் ஏற்றுக் கொள்ளும்படி வேண்டி முதன் முதலில் இங்கிலாந்து வங்கியில் அவர் இதனை புகுத்தினர். எனவே, ஏனைய பணிகளுள் 'இறுதி நிலைக் கடன் ஈவோன்' பணியையும் ஏற்றுக்கொண்டு நடைமுறையாக்கிய முதல் வங்கி (உலகிலேயே) இங்கிலாந்து வங்கியாகும். வணிக வங்கிகள், தங்கள் நிதி முழுவதையும் செலவு செய்துவிட்டு வெளியிலிருந்து நிதி கிடைக்காதபோது, நெருக்கடி நேரங்களில் மைய வங்கியை அணுகுகின்றன. வணிக வங்கிகள் கழிவு செய்த உண்மையான வாணிக மாற்றுச் சீட்டுக்களையும், அரசுப் பத்திரங்களையும் மைய வங்கி மறு கழிவு செய்து வணிக வங்கிகளுக்கு நிதி உதவி அளிக்கின்றது. மறு கழிவு

செய்கின்ற பணி, மைய வங்கி தாள் பணத்தை வெளியிடுவ தோடும், வணிக வங்கிகளின் ரொக்க இருப்பில் ஒரு பகுதியை வைத்திருப்பதோடும் மிக நெருங்கிய தொடர்புடையதாக இருக் கின்றது. மைய வங்கி, தாள் பணம் வெளியிடும் முற்றுரிமை அல்லது எச்சமான முற்றுரிமை பெற்றிருப்பதால், இக்கட்டான நேரங்களில், வணிக வங்கிகளின் தேவைக்கேற்பப் பணத்தை அளிக்க முடியும். மேலும், வணிக வங்கிகளின் ரொக்கம் அதனிடம் உள்ள தால் கூடுதலான அளவுக்குக் கடன் அளிக்கவும் முடி கின்றது. நெருக்கடி காலத்தில் வணிக வங்கிகளுக்கு உதவ மைய வங்கி இருக்கின்றதென்ற உண்மை, பொது மக்க ளுக்கு வணிக வங்கிகளிடம் அதிகமான நம்பிக்கையை ஏற்படுத்து கின்றது.

வங்கிகளின் தீர்வகம் (Bankers' Clearing House) :

1854-ல் இங்கிலாந்து வங்கியால் முதன் முதலில் இப்பணி மேற்கொள்ளப்பட்டது. எல்லா வங்கிகளும் இங்கிலாந்து வங்கி யில் கணக்குகள் வைத்திருக்கும். வங்கிகளுக்கிடையே உள்ள கணக்குப் பாக்கிகள் கணக்கு ஏடுகளில் பதிவு செய்வதன் மூலம் தீர்க்கப்படும் திட்டம் அவ்வங்கியால் உருவாக்கப்பட்டது. பின்னர், அத் திட்டம் மற்ற நாடுகளின் மைய வங்கிகளுக்குப் பரவியது. நாளடைவில், வங்கிகளுக்கிடையே உள்ள கணக்குள் தீர்வகமான, மைய வங்கி மூலம் தீர்க்கப்படும் பணி மைய வங்கி யின் பணிகளுள் ஒன்றாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. எல்லா வங்கிகளும் மைய வங்கியிடம் ரொக்கஇருப்பு வைத்திருக்கின்றன. இதனால் வங்கிகள் அவைகளுக்கிடையே தரவேண்டிய கடனை ரொக்கமாகத் தரவேண்டும் என்ற அவசியமில்லை. அவை மைய வங்கியின்மேல் காசோலைகளைக் கொடுத்து, கொடுக்க வேண்டிய கடனைத் தீர்த்துக்கொள்ளலாம். இதன் பயன் என்ன வென்றால், வங்கிகளுக்கிடையில் கொடுக்கல் வாங்கல்கள் ரொக்க மின்றி நடைபெறுவதாகும். மைய வங்கி நாடு முழுவதும் தீர் வகங்களை அமைத்திருக்கின்றது. பொதுவாக, அத் தீர்வகங்கள் இந்திய ஸ்டேட் வங்கியாகத்தானிருக்கும். இத்தீர்வகங்களில் வங்கிகளின் சார்பாளர் ஒன்றுகூடி, ஒரு வங்கி மற்றைய வங்கி களிடமிருந்து பணம் பெறவேண்டிய காசோலைகளைக் கொடுத்தும், பணம் தரவேண்டிய காசோலைகளைப் பெற்றும் கணக்கைத் தீர்த் துக்கொள்வர்.

இந்த முறையால்—மைய வங்கி தீர்வக வசதியளிப்பதால்—வணிக வங்கிகள் குறைந்த அளவு ரொக்கத்தை வைத்துக்

கொண்டு தங்கள் தொழிலைச் சிறந்த முறையில் நடத்தி முடிக்கின்றன.

கடன் கட்டுப்படுத்துநர் (Controller of Credit)·

கடன் அளவைக் கட்டுப்படுத்துவது மைய வங்கியின் தலையாய பணிகளுள் ஒன்று என்று கூறலாம். பண வெளியீட்டு உரிமை மைய வங்கியிடமே உள்ளதால் பணத்தின் அளிப்பை இலகுவாக அதனால் கட்டுப்படுத்த முடிகிறது. வணிக வங்கிகளுக்குப் பணத்தை உற்பத்தி செய்ய உரிமை இல்லாவிட்டாலும், பணத்தின் பணிகளைச் செய்யக்கூடிய கடன் பணத்தை உற்பத்தி செய்யமுடிகிறது. வங்கிகள் தாங்கள் பெறக்கூடிய முதனிலை வைப்புகளின் அடிப்படையில் பிறப்பிக்கப்பெற்ற வைப்புகளை உண்டாக்க முடியும். அதாவது, கடனுக்கம் செய்ய முடியும். இக் கடன் தொகை காசோலை வடிவில் புழக்கத்தில் இருக்கின்றது. பணமாகப் புழங்கினாலும், காசோலையாகப் புழங்கினாலும் நோக்கம் ஒன்றுதானே! எனவே, கடன் பணம் புழங்கப்படுவதற்கும் ஒரு எல்லை நிர்ணயிக்கப்பட வேண்டும். அன்றேல் நாட்டில் பண அளிப்பு அதிகரித்துப் பணவீக்கம் ஏற்படும். வங்கிகள் எப்படிக் கடனுக்கம் செய்தனவோ, அப்படியே கடன் குறைப்பும் செய்யலாம். அந் நிலை உருவாயின் நாட்டில் பண வாட்டம் ஏற்படும். ஒரு பொருளாதாரத்திற்குக் கடன் பெருக்கமோ, கடன் சுருக்கமோ உகந்ததல்ல. எனவே, கடனுக்கம் மிகையாகாமலும், மிகவும் குறையாமலும் கட்டுப்படுத்த வேண்டியது மைய வங்கியின் பணியாகும்.

உலகின் பொன்திட்டம் நடைமுறையில் இருக்கும் வரை நாணய மாற்றுவீதத்தை நிலைப்படுத்துதல்தான் கடன் கட்டுப்பாட்டிற்கான தலையான நோக்கமாகும். பொன்திட்டம் கைவிடப்பட்டபின், மாற்றுவீதத்தை நிலைப்படுத்துதல், விலை மட்டம், பொருளாதார நடவடிக்கைகள், மற்றும் வேலை வாய்ப்பு ஆகியவற்றை நிலைப்படுத்துதல் கடன் அளவுக் கட்டுப்பாட்டின் நோக்கங்களாகும். கடன் அளவைக் கட்டுப்படுத்தாமல் விலைகளை நிலைபேருக்கம் செய்வதென்பது இயலாததொன்றாகும். 'கடனைக் கட்டுப்படுத்துவதும், சீராக்குவதும் மைய வங்கியின் முதன்மைப் பணியெனப் பெரும்பாலான பொருளியலறிஞர்களும், வங்கியர்களும் ஏற்றுக்கொள்கின்றனர். இந்தப் பணி மைய வங்கியின் கொள்கைபற்றிய மிகவும் முக்கியமான கேள்வியை உள்ளடக்கிக் கொண்டிருக்கின்றது. இதன் மூலமாகத்தான் செயல் முறையில் மற்றைய எல்லாப் பணிகளும் இணைக்கப்படுகின்றன. இதன்

மூலமாகவே பொது நோக்கிற்குப் பணிசெய்ய இயல்கின்றது' என்று டிகாக் கூறுகின்ருர்.

'வங்கிகளின் வங்கி' என்ற முறையிலும், நாட்டின் நலம் பேணும் 'அரசின் வங்கி' என்ற முறையிலும் கடன் அளவைக் கட்டுப்படுத்த வங்கிக் கடனைக் கட்டுப்படுத்துவது மைய வங்கியின் கடமையாக இருக்கின்றது.

கடன் கட்டுப்பாட்டு முறைகள் (Methods of Credit Control):

வணிக வங்கிகளின் கடனளவைக் கட்டுப்படுத்த பல முறைகள் கையாளப்படுகின்றன. வங்கி வீதம் அல்லது கழிவு வீதக் கொள்கை மற்றும் வெளிச்சந்தை நடவடிக்கைகள் போன்ற முறைகள் மறைமுகமானவையும், மரபு வழியானவையுமாகும். கடன் பங்கீட்டு முறை போன்றவை நேர்முகமானவையாகும். டிகாக் கீழ்க்கண்ட ஒன்பது முறைகளைக் குறிப்பிடுகின்ருர்:

(1) கடன் விரிவாக்கம் அல்லது கடன் ஒடுக்கம் ஊக்குவிப்பதற்காகவும், பொதுவாக, பணத்தின் அளவு வீதத்தை அதிகரிப்பதற்காகவும் அல்லது குறைப்பதற்காகவும், கழிவு மற்றும் வட்டி வீதங்களை உயர்த்துதல் அல்லது குறைத்தல்;

(2) சந்தையில் கூடுதலான பணம் அளிப்பதற்கோ, சந்தையிலிருந்து எடுப்பதற்கோ, வெளிச்சந்தையில் பிணையங்கள் அல்லது மாற்றுச் சீட்டுகளை வாங்குதல் அல்லது விற்றல், அதாவது, வெளிச்சந்தை நடவடிக்கையின் மூலம், கடனை விரிவாக்குதல் அல்லது சுருக்குதல்;

(3) கழிவு மற்றும் வட்டி வீதங்களுக்குத் துணையாகவோ பதிலியாகவோ (alternative) கடன் பங்கீட்டு முறை கையாளப்படுதல்;

(4) கடன் பங்கீடு செய்வதிலும், கடனளவுக் கட்டுப்பாட்டினை மேற்கொள்ளுவதிலும் மைய வங்கிக்கு உதவுமாறு, மற்ற வங்கிகளையோ, நிதி நிறுவனங்களையோ அதனதன் கடன் அளிப்பு மற்றும் முதலீட்டு நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்திக் கொள்ளுமாறு ஆணையிடுதல், அல்லது தவறு செய்யும் வங்கி அல்லது நிதி நிறுவனத்தின்மேல் வலுக்கட்டாயமாக நேரடி நடவடிக்கை (Direct Action) எடுத்தல்;

(5) மைய வங்கியின் கடன் ஆக்கம், கடன் சுருக்கம் செய்யும் சக்திக்கு மற்றுமொரு வழியான மைய வங்கியிடம்

உள்ள வணிக வங்கிகளின் ரொக்க இருப்பு வீதத்தைக் குறைத்தல் அல்லது கூட்டுதல்;

(6) பொதுத் தொழில் நோக்கத்திற்காக வணிக வங்கிகளின் கடன் அளிப்புச் செய்வதை வரையறை செய்வதற்காக ஒரு குறிப்பிட்ட அளவு அரசுப் பிணையங்களும், ஏனைய குறிப்பிடப்பட்ட சொத்துகளும் அவ்வங்கிகளிடம் காப்பாக இருத்தல் வேண்டுமென நிபந்தனையிடல்;

(7) நுகர்வோர் கடன் தொகையை நேரடியாகக் கட்டுப்படுத்த, நுகர்வோர் தவணை முறையில் கடனுக்குப் பொருள் வாங்கி அக்கடனைத் திருப்பிச் செலுத்துவதற்கான நிபந்தனைகளைக் கடுமையாக்கி நெறிப்படுத்துதல்;

(8) பிணையச் சந்தையில் பயன்படுத்திய கடன் அளவை நேரடியாகக் கட்டுப்படுத்த பங்கு மாற்றுச் சந்தைப் பிணையங்களை வாங்குவதிலுள்ள வரம்புத் தேவைகளைக் (Margin requirements) குறித்தல்;

(9) தேவையான நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக அறிவுரையும், விளம்பரமும் செய்தல்.

இதுவரை குறிப்பிட்ட முறைகள் ஒவ்வொன்றைப்பற்றியும் இனி விளக்கமாக ஆய்வு செய்வோம்.

கடன் அளவுக் கட்டுப்பாட்டு முறைகள் (Quantitative Credit Control Methods):

(1) வங்கி வீத (அல்லது கழிவு வீதக்) கொள்கை: (Bank Rate or Discount Rate policy):

தொடக்க காலத்திலிருந்தே வங்கி வீதக் கொள்கை மைய வங்கிகளின் கருவியாக விளங்குகிறது. வங்கி வீதத்தை மாற்றுவதன்மூலம் கடன் அளவை மறைமுகமாக மைய வங்கி கட்டுப்படுத்துகிறது. வங்கி வீதம் மாறினால் வட்டி வீதமும் மாறுகிறது. கடன்களையும் முதலீட்டையும் நிர்ணயிப்பது வட்டியேயாகும் என்பதை யாவரும் அறிவர். இவ் வங்கி வீதக் கொள்கை முதன் முதலில் இங்கிலாந்து வங்கியால் பயன்படுத்தப்பட்டது.

'வங்கி வீதம்' என்பது, தகுதியான மாற்றுச் சீட்டுகளை மறு கழிவு செய்வதற்கும், தக்க கடன் பத்திரங்களின்மீது முன் பணம் கொடுப்பதற்கும் மைய வங்கி கையாளுகின்ற வீதம் ஆகும். இவ் வங்கி வீதம் அலுவலக அடிப்படையில் மிகவும் குறைந்த வீதமாக இருக்கும். இதற்கும் குறைந்த வீதத்தில்

வேறு எங்கும் வணிக வங்கிகள் பணம் பெற முடியாது. 'வங்கி வீதம்', 'கழிவு வீதம்' (Discount Rate) எனவும் அழைக்கப் படுகிறது. பணச்சந்தை மூலமாக நேரிடையாகவோ, மறைமுக மாகவோ எடுத்துச் செல்லப்பட்ட வணிக வங்கிகளின் தகுதி யான மாற்றுச் சீட்டுகளும் அல்லது அங்கீகரிக்கப்பட்ட பிணையங் களும் மைய வங்கியால் மறுகழிவு செய்யப்பெற்று வணிக வங்கி களுக்குக் கடன் உதவி அளிக்கப்படுகின்றது. வங்கி வீதம் உயர்த்தப்பட்டால் வணிக வங்கிகள் அதிகமான செலவில் கடன் பெறவேண்டிய நிலை ஏற்படுகிறது. இதன் விளைவாக, பணச் சந்தையிலும் வட்டி வீதம் அதிகமாகிறது. கடன் வாங்குவோர் கடன் தொகையைக் குறைப்பர். அல்லது கடன் வாங்குவதை நிறுத்திவிடுவர். சில வகையான மாற்றுச் சீட்டுகளை மறு கழிவு செய்வதற்கு மைய வங்கி மறுத்துவிடலாம். இப்படிச் செய்வ தால் கடன் அளிப்பு அதிகமாகிறது. பொருளாதாரத்தில் வீக்க நிலை இருக்கும்போது வங்கி வீதம் உயர்த்தப்பட்டதுபோல், மந்த காலத்தில் வங்கி முறையை ஊக்குவிப்பதற்காக வங்கி வீதம் குறைக்கப்படுகின்றது. அதாவது, அங்கீகரிக்கப்பட்ட மாற்றுச் சீட்டுகளை வெகு இலகுவாக மறுகழிவு செய்து வணிக வங்கிகள் கடன் பெறுதலைத் தாராளப்படுத்துதலாகும். மைய வங்கி, வங்கி வீதத்தை உயர்த்தினால் 'அபாய அறிவிப்பை'க் குறிக்கும்; மாறாக, குறைத்தால் 'நல்வழி'யைக் குறிக்கும்.

வரையறைகள் :

வங்கி வீதம் கூட்டி, குறைக்கப்பட்டால் பணத்துறையில் ஏற்படுகின்ற விளைவுகள் எல்லாக் காலங்களிலும் எதிர்பார்த்த படி இருக்காது. கீழ்க்கண்ட சூழ்நிலைகளில் வங்கி வீதம் திறனற் றிருக்கும்.

முதலாவதாக, வணிக வங்கிகளிடம் நிதி மிகையான அளவுக்கு இருந்தால், வங்கிவீத மாற்றத்தால் எதிர்பார்க்கின்ற பலன் கிடைக்காது. வங்கிகளிடம் ரொக்க இருப்பு அதிகமாக இருக்குமானால், மைய வங்கியிடமிருந்து கடன் பெற வேண்டிய அவசியமில்லை. இந்நிலையில் வங்கி வீதத்தை உயர்த்தினால் கடன் விரிவாக்க அளவு பாதிக்கப்போவதில்லை. வீக்க நிலை கட்டுப்படுத்தாமற்போகலாம்.

இரண்டாவதாக, வங்கிவீதக் கொள்கை வெற்றி பெறுவது, வங்கி வீதத்திற்கும் வட்டி வீதத்திற்கும் உள்ள தொடர்பைப் பொறுத்து இருக்கிறது. உறவு நெருக்கமாக இருந்தால் கொள்கை நிறைவேறும். வங்கி வீதத்தைக் கூட்டியபோது வணிக வங்கிகள்

வேறு இடங்களிலிருந்து பழைய வட்டி வீதத்திற்கே கடன் பெற்றால், மைய வங்கியின் நோக்கம் வெற்றியடையாது. எனவே, இச் சூழ்நிலைகளில் வங்கி வீதம் ஆற்றலற்றதாக இருக்கிறது.

மூன்றாவதாக, வட்டிவீத மாறுதல்களால் நாட்டின் சேமிப்பு-முதலீடு—பாதிக்கப்படுகின்ற நிலையிலிருந்தால்தான் வங்கிவீதம் பலன் அளிக்கும். வாணிபத்தில் மிகையான இலாபம் கிடைக்கின்ற சூழ்நிலை இருந்தால், வங்கிவீதம் உயர்ந்தாலும் முதலீடு குறையாது. வங்கிவீத உயர்வால் கடன் செலவு கூடும் என்பதில் ஐயமில்லை. ஆனால், அச் செலவு உற்பத்திச் செலவுகளோடு சேர்க்கப்பட்டு நுகர்வோர் ஏற்கும்படி செய்யப்படுகிறது. மேலும், வணிகர்கள் பொருள்களை இருப்பு வைப்பதை வட்டிவீதத்தின் அளவைக்கொண்டு முடிவுசெய்யாமல், எதிர்கால வாணிப நிலையை ஒட்டியே முடிவு செய்கின்றனர். இதே கருத்து ரேட்கிளிப் குழுவினரால் (Radcliffe committee) வெளியிடப்பட்டது கவனிக்கத்தக்கதாகும்.

நான்காவதாக, தகுதியான பிணையங்கள் மறுகழிவு செய்வதற்கு இருந்தால்தான் வங்கிவீதத்தால் எதிர்பார்க்கின்ற பலன் கிடைக்கும். அவை இல்லாவிட்டால் வங்கிவீதத்தால் எவ்வித நன்மையும் கிடைக்காது.

ஐந்தாவதாக, பொருளாதார வீக்கத்தை வேண்டுமானால் கடனளவுக் கட்டுப்பாட்டின்மூலம் தணிக்கலாம். ஆனால், வாட்டத்திலிருந்து (வங்கிவீதத்தைக் குறைப்பதன்மூலம்) பொருளாதாரத்தை மீட்சியுறச் செய்வதென்பது கேள்விக்குறியாகத்தான் இருக்கும்.

ஆறாவதாக, பணச்சந்தை நன்கு வளர்ந்திருந்தால்தான் வங்கிவீதத்திற்கும் ஏனைய வட்டிவீதங்களுக்கும் தொடர்பு ஏற்படும்.

ஏழாவதாக, மைய வங்கியின் கொள்கைகளுக்கேற்ப வணிக வங்கிகள் ஒத்துழைத்தால்தான், வங்கிவீதக் கொள்கை வெற்றி நடைபோடும்.

2. வெளிச்சந்தை நடவடிக்கைகள் (Open Market Operations) :

கடன் கட்டுப்பாட்டு முறைகளில் மற்றுமொரு பழமையான முறை வெளிச்சந்தை நடவடிக்கைகளாகும் வங்கிவீதக் கொள்கை பலவகையான வரையறைகளுக்குட்பட்டுச்செயலாற்று

கின்றது. எனவே, மாற்றுக வேறு ஒரு முறையைப்பற்றியும்— வெளிச்சந்தை நடவடிக்கைகள்– அறியவேண்டியுள்ளது. அதன் கோட்பாட்டைக் கீழ்க்கண்டபடி விவரிக்கலாம்; பூரிப்புக் காலத்தில்—பொருளாதாரக் கட்டுக்கோப்பிற்குக் குந்தகம் விளைவிக்கும் காலம்—மைய வங்கி தன்னிடமுள்ள தகுதியான பிணையங்களைச் சந்தையில் விற்றுப் பணத்தைப் பெறும். அப்படிச் செய்வதால் நாட்டில் பணப்புழக்கம் குறையும். அப்பிணையங்களை வாங்குநர்கள் — வணிக வங்கிகள் அல்லது தனிநபர்கள் — வணிக வங்கிகளில் கணக்குகள் வைத்திருக்கும் வைப்புகளின் மேல் காசோலையை விடுத்து மைய வங்கியிடம் அளிப்பர். வணிக வங்கிகள் மைய வங்கியிடம் ரொக்க இருப்பு வைத்திருப்பதால், காசோலைக்குரிய பணம் கழிக்கப்பட்டு ரொக்க இருப்பு குறைக்கப்படும். இப்படியாக, உறுப்பு வங்கிகளின் ரொக்க இருப்பு மைய வங்கியிடம் குறையும். ரொக்க இருப்புக் குறைந்தால் கடன் அளிப்பும், கடன் ஆக்கமும் குறையும். அதேபோல, புதிதாகக் கடன் அளிப்புச் செய்வதும் நிறுத்தப்படும். இதனால் முதலீடு நாட்டில் குறையும்; முதலீடு குறைந்தால் உற்பத்தி பாதிக்கப்படும். பூரிப்புக்குக் குந்தகம் விளைவிக்கப்படும்.

நாட்டில் மந்தநிலையை எதிர்த்துப் போராடுவதற்காக மைய வங்கி காசோலையை விடுத்துத் தகுந்த பிணையங்களைச் சந்தையில் வாங்கத் தொடங்குகிறது. காசோலையைப் பெற்ற நபர்கள் தங்கள் வங்கிகளின் வைப்புக் கணக்குகளில் அவைகளை அளிப்பர். பின்னர், தாமாகவே மைய வங்கியிலுள்ள வணிக வங்கிகளின் கணக்குகள் கூடும். இதன் அடிப்படையில் கடனுக்கம் அதிகமாகச் செய்யமுடியும். அப்படியென்றால், முதலீடு பெருகும்; வேலைவாய்ப்பு மிகுதியாகும்; உற்பத்தி கூடுதலாகும்; விலை மட்டமும் உயரும். இப்படியாக, பிணையங்களை மைய வங்கி வாங்கி விற்பதன்மூலம் வணிக வங்கிகளின் கடனுக்கச் சக்தி வரையறுக்கப்படுகிறது. இறுதியில், நாட்டின் பொருளாதார நிலை நெறிப்படுத்தப்படுகிறது. வெளி அங்காடி நடவடிக்கைகள் சமுதாயத்தில் புழக்கத்திலுள்ள பண அளவைக் கூட்டுவதையோ குறைப்பதையோ பொன்று, பிணையங்களின் விலைகளைப் பாதித்து, அதன்மூலமாக வட்டிவீதத்தையும் பாதிப்பதைக் காணலாம்.

வரையறைகள்:

வெளி அங்காடி நடவடிக்கைகள் வெற்றி தேடித் தருவதற்குக் கீழ்க்கண்ட சூழ்நிலைகள் இருந்தாகவேண்டும்:

(1) வெளி அங்காடி நடவடிக்கைகளால் பயன் கிடைக்க வேண்டுமென்றால் வணிக வங்கிகளிடம் ரொக்க இருப்பு அதிக

மாகும்போது கடன் அளிப்பும் அதிகமாக வேண்டும். அதே போல், ரொக்க இருப்பு குறைகின்றபோது கடன் அளவும் குறையவேண்டும். ஆனால், நடைமுறையில் இச் செயல் நடை பெறுமா என்றால், ஐயந்தான்? ஏனென்றால், கடன் விரிவாக்கமும், கடன் சுருக்கமும் வணிகர்களின் விருப்பத்தைப் பொறுத்தும், வியாபாரச் சூழ்நிலைகளை ஒட்டியும் அமைகின்றன. வங்கிகளிடம் கடன் அளிப்பு மலிவாகவும், இலகுவாகவும் கிடைக்கிறதென்பதற் காக முதலீடு செய்வோர் கடன் பெற முன்வருவர் எனக் கூற முடியாது.

(2) (விலைகள் குறைந்து செல்லும்) மந்த காலத்தில் வணிக வங்கிகளிடமிருந்து பத்திரங்களை மைய வங்கி வாங்கும்போது ரொக்க இருப்பு அவைகளிடம் கூடும். ரொக்க இருப்பு பிரை யாக இருந்தாலும், மந்த காலம் நிலவுவதால், வணிக வங்கிகள் கடன் விரிவாக்கம் செய்வதற்குத் தயங்கும். வைப்பாளர்களின் கணக்குகளுக்கு வணிக வங்கிகள் பாதுகாவலனாக இருப்பதால், மைய வங்கியும் வணிக வங்கிகளைக் கடன் விரிவாக்கம் செய்யும்படி ஆணையிட முடியாது. மேலும், மந்த காலத்தில் எவரும் கடன் பெறுவதற்கு வங்கிகளை அணுகமாட்டார்கள். மைய வங்கி கூடு தலான அளவுக்கு ரொக்கத்தை வெளியே விட்டாலும் கடன் பெருகாது என்பதற்கு ஓர் எடுத்துக்காட்டு கூறலாம். 1932, சூனுக்கும், 1933, சூனுக்கும் இடையில் இங்கிலாந்தில் தீர்வு வங்கிகளின் (Clearing Banks) மொத்த வைப்புகள் £ 214 மில்லி யன் கூடியபோது, கடன்களும் முன்பணங்களும் £77 மில்லியன் குறைந்தன. எனவே, மந்த காலத்தில் வெளி அங்காடி நடவடிக் கைகளால் எதிர்பார்த்த பயன் கிடைக்காது எனக் கூறலாம்.

(3) மைய வங்கி பிணையங்களை வாங்கி விற்கக்கூடிய அளவுக்குப் பரந்த அளவில் சந்தை இருத்தல் வேண்டும். அன்றேல் வெளிச்சந்தை நடவடிக்கைகள் எதிர்நோக்கும் விளைவுகளைத் தாரா. மேலும், மைய வங்கியிடம் போதுமான அளவில் ரொக்கமும், பிணையங்களும் இருத்தல் வேண்டும். ஒரே தொகுப்பைச் சேர்ந்த பிணையங்களை மட்டும் வாங்கவோ விற்கவோ செய்யாமல், பல வகையான பிணையங்களையும் வாங்கி விற்றால்தான் மிகுதியான பலன் கிடைக்கும்.

(4) வெளிச்சந்தை நடவடிக்கைகளால் நேரடியாகச் சமுதாயத்திலுள்ள பணத்தின் மொத்த அளவும், வங்கிகளின் ரொக்க அளவும் மாறுபடவேண்டும். அப்படி மாறுமல், மைய வங்கி கூட்டுகின்ற பணம் வெளியேறிவிட்டாலோ, குறைகின்ற

பணம் வேறு வழியில் ஈடு செய்யப்பட்டுவிட்டாலோ வெளிச் சந்தை நடவடிக்கைகளால் நல்ல விளைவுகள் இரா.

வெளிச்சந்தை நடவடிக்கைகள் சில வரையறைகளுக்குட் பட்டு இயங்குவதால் கடன் அளவைக் கட்டுப்படுத்துவதில் அதன் முக்கியத்துவம் நடைமுறையில் குறைகின்றது எனக் கூற லாம். தற்காலத்திய ஆய்வுகளிலிருந்து அறிவதென்ன வென்றால், வாணிபச் சுழலுக்குக் (Business cycle) கடன் விரிவாக் கமோ, சுருக்கமோ தலையான காரணங்கள் அல்ல என்றும், அவைகள் துணைக்காரணங்கள்தாம் என்றும் புலப்படுகின்றன. எனவே, வியாபார நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்துவதற்கு வேறு ஏதேனும் நேரடி நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமே தவிர வெளிச்சந்தை நடவடிக்கைகளை நம்பி இருத்தல் கூடாது. ஆனால், நாட்டில் வட்டி வீதத்தை நிர்ணயம் செய்வதற்கும், பணச்சந்தையில் அரசுப் பிணையங்களின் விலையை நிர்ணயம் செய்வதற்கும் வேண்டுமானால் வெளிச்சந்தை நடவடிக்கைகளைப் பயன்படுத்தலாம். பருவ காலங்களில் பணப்பற்றுக்குறை ஏற்படுகின்றபோது இம் முறை பயன்படுத்தப்படுகின்றது. வேளாண்மை நாடுகளில் வேளாண்மை நடவடிக்கைகள் அதிக மாகும்போது பணப்பற்றுக்குறை ஏற்படலாம். அச் சூழ்நிலை களில் வெளிச்சந்தை நடவடிக்கைகள் பெரிதும் உறுதுணை செய் கின்றன. வங்கி வீதத்திற்கு இதுதுணை செய்கின்ற வழி முறை யாக விளங்குகிறது.

(3) ரொக்க இருப்புவித மாறுதல் (Variation of Cash reserve Ratio):

வங்கி வீதக் கொள்கையும், வெளிச்சந்தை நடவடிக்கை களும் விளைபயன் அளிப்பதற்கு உறுதுணையாக விளங்குவது ரொக்க இருப்பு முறையாகும். தற்பொழுது ஒவ்வொரு வணிக வங்கியும் மைய வங்கியிடம் அதனதன் மொத்த வைப்புகளில் ஒரு குறிப்பிட்ட சதவீதம் சட்டப்படியோ, மரபுவழிப்படியோ இருப்பாக வைத்தல் வேண்டும். இத்தகைய ரொக்க இருப்பை முதலில் ஏற்படுத்தியதன் முக்கிய நோக்கம், வங்கிகளின் நீர்மைத் தன்மையைக் காப்பாற்ற வேண்டுமென்பதாகவே இருந்தது. பின்னர், இந்த ரொக்க இருப்பு வீதத்தில் மாறுதல்களை ஏற்படுத்து வதன் மூலம், மைய வங்கி மற்ற வங்கிகளின் கடனளிக்கும் சக்தியைக் கட்டுப்படுத்தத் தொடங்கிற்று. எடுத்துக்காட்டாக, நாட்டில் வங்கி வைப்புகள் மிகையாக இருந்து அவைகளைக் கட்டுப்படுத்த மைய வங்கி எண்ணினால், வணிக வங்கிகளின் ரொக்க இருப்பு வீதத்தை உயர்த்தும். இதன் விளைவு என்ன வென்றால், வணிக வங்கிகளிடம் உபரி ரொக்க இருப்பு குறையும்.

முன்னர் போலவே மொத்த வைப்புகளின் தொகையை வைத்திருக்க வேண்டுமானால் கூடுதலான ரொக்கத்தை மைய வங்கிக்கு அனுப்பி வைக்க வேண்டும், அல்லது கடன்களை வசூல் செய்து மொத்த வைப்புகளின் தொகையைக் குறைக்கவேண்டும். இப்படியாகக் கடன் அளவு குறைக்கப்படுகிறது. இச் செயற் பாட்டிற்கு மாறுக, ரொக்க இருப்பு வீதம் குறைக்கப்பட்டால் கடன் அளவு பெருகும்.

வணிக வங்கிகளின் குறும அளவு (சட்ட முறை) ரொக்க இருப்பு வீதமுறை முதன் முதலில் அமெரிக்காவில், 1933-ல், அறிமுகப்படுத்தப்பட்டது. கெடுதல் விளைவிக்கக்கூடிய அள வுக்குக் கடன் விரிவாக்கமோ, கடன் சுருக்கமோ செய்யப்படு வதைத் தவிர்ப்பதற்காக உறுப்பு வங்கிகளின் ரொக்க இருப்பு வீதத்தை மாற்றுமளவுக்குக் கூட்டரசுக் காப்பு முறையின் (Federal Reserve System) ஆளுநர்களுக்கு அதிகாரம் வழங்கப் பட்டது. ரொக்க இருப்பு வீதத்தை மாற்றுவதற்காக வழங்கப் பட்ட அதிகாரம் பணச்சந்தையை நெறிப்படுத்துவதற்கு மற்று மொரு கருவியாக விளங்கியது. அமெரிக்காவில் 1936, ஆகஸ்டுத் திங்களில் முதன்முறையாக அவ்வதிகாரம் கையாளப்பட்ட போது, மிகையான அளவு கடன்விரிவாக்கம் செய்யப்பட்டதைத் தொடர்ந்து ரொக்க இருப்பு வீதம் 50 சதவீதம் உயர்த்தப் பட்டது.

வரையறைகள் :

இம் முறையிலும் சில குறைகள் உள்ளன. அவை கீழ் வருமாறு :

(1) மைய வங்கி ரொக்க இருப்பு வீதத்தை மாற்றுகின்ற போது, வணிக வங்கிகள் எந்த அளவுக்கு மைய வங்கிக்கு ஒத்துழைப்பு அளிக்கின்றது என்பதைப் பொறுத்துத்தான் விரும் பயன் எதிர்நோக்க முடியும். எடுத்துக்காட்டாக, வீக்க நிலையைக் கட்டுப்படுத்த ரொக்க இருப்பு வீதம் உயர்த்தப்படும் போது, வணிக வங்கிகள் அவைகளின் சொந்த நிதியைக்கொண்டு கடன் ஆக்கம் வழக்கம் போல் செய்தால் எதிர்நோக்கிய பலன் கிடைக் காமல் போகும். இதே நிலை மந்த காலத்திலும் ஏற்படலாம்.

(2) ரொக்க இருப்பு வீதம் அடிக்கடி மாற்றப்படுவதை வணிக வங்கிகள், பொதுவாக, விரும்புவதில்லையாதலால் அம் முறை ஒரு சிறந்ததெனக் கூற முடியாது.

(3) இம் முறையால் கடன் அளவில் ஒரு நெகிழ்ச்சியைக் காண முடிவதில்லை. வணிக வங்கிகளின் கடன் விரிவாக்கச்

சுதந்திரம் குறைகின்றதெனக் கூறலாம். எந்த நேரத்திலும் ரொக்க இருப்பு வீதம் உயருமென்று எதிர்பார்க்கப்படுவதால் வணிக வங்கிகள் தேவைக்கு மேலாகவே ரொக்க இருப்பு வைத்திருக்க வேண்டியிருக்கிறது.

கடன் தன்மைக் கட்டுப்பாட்டு முறைகள் (Qualitative Credit Control Methods) :

(4) கடன் பங்கீடு (Rationing of Credit)

கடன் அளவைக் கட்டுப்படுத்துவதற்காக இங்கிலாந்து வங்கியால் பதினெட்டாம் நூற்றாண்டின் இறுதியில் கடன் பங்கீட்டு முறை கையாளப்பட்டது. வணிக வங்கிகளால் கடன் அளிப்புச் செய்கின்ற நோக்கங்களைக் கட்டுப்படுத்தி நெறிப்படுத்தும் முறைதான் கடன் பங்கீட்டு முறையாகும். அம்முறை இரண்டு பொருள்களை அடக்கியுள்ளது. ஒன்று, ஒவ்வொரு வணிக வங்கியும் எந்த அளவு வரைக்கும் கடன் அளிப்புச் செய்யமுடியும் என மைய வங்கி வரையறை செய்வது. இதற்கு 'மாறுந்துறை உச்ச வரம்புகள்' (Variable portfolio ceilings) எனப் பெயர். மற்றொன்று, வணிக வங்கியின் மொத்தச் சொத்துகளுக்கு எவ்வளவு மூலதனம் இருக்கவேண்டுமென்ற வீதத்தை மைய வங்கி நிர்ணயிப்பது. இதற்கு 'மாறும் மூலதனச் சொத்துகள் வீதம்' (Variable capital assets ratio) எனப் பெயர்.

முதல் உலகப் போருக்குப் பின்னர்தான் கடன் பங்கீட்டு முறை தீவிரமாக இங்கிலாந்து, ஜெர்மெனி, ருஷ்யா போன்ற நாடுகளால் கையாளப்பட்டது. ஜெர்மெனியில் 1931-ல் "பல வங்கிகள் கலைக்கப்படுவதைத் தவிர்ப்பதற்காக ரிஷ் வங்கி (Reichs Bank) கடன் ஒதுக்களவு (Credit Quotas) முறையை அமுலாக்கியது." கடன் தேவை மிகுதியாகக் கோரப்பட்டதால் இருக்கக்கூடிய நிதியை எல்லா வங்கிகளுக்கும் ருஷ்ய ஸ்டேட் வங்கி (State Bank of Russia) பங்கீடு செய்து அளித்தது.

(5) நேரடி நடவடிக்கை (Direct Action)

வணிக வங்கிகள் கடன் அளிப்புச் செய்வதில் மைய வங்கி நேரிடையாகத் தலையிடுகின்றது. வங்கி வீதக் கொள்கைக்கும், வெளிச்சந்தை நடவடிக்கைகளுக்கும் மாற்றுச் சாதனமாக இம்முறை அமைந்திருக்கின்றது. வணிக வங்கிகள் சில துறைகளுக்குக் கடன் கொடுப்பதை மைய வங்கி தடை செய்கின்றது. இதேபோல், ஒரு வங்கி கட்டுப்பாடில்லாமல் அளிக்கின்ற கடன் ஊக வாணிபத்திற்குப் பயன்படுத்தப்பட்டதால், அவ்வங்கியின்

மீது நேரிடையாக மையவங்கி நடவடிக்கை எடுக்கின்றது. மேலும் மைய வங்கியின் ஆணைகளை மீறிக் கடன் அளிக்கின்ற வங்கிகள், கடனுதவி பெறுவதற்காக மைய வங்கியிடம் வந்தால் அது அதிக வட்டி விதிக்கலாம்; அல்லது மாற்றுச் சீட்டுகளையும், அரசுப் பிணையங்களையும் மறுகழிவு செய்வதற்கு மறுக்கலாம். 1928-29-ஆம் ஆண்டின் மந்த காலத்தில் இம் முறையை அமெரிக்க அவில் 'கூட்டரசுக்காப்பு முறை' பின்பற்றியது.

நேரடி நடவடிக்கை முறையிலும் சில குறைகள் உள்ளன. இம் முறையின் கீழ் வணிக வங்கிகளின் விருப்பத்திற்கு மாறுக மையவங்கி, ஆணைகள் பிறப்பிக்க வேண்டியிருக்கின்றது. கடன் அளிப்புத் தொடர்பாக எந்தத் துறை முக்கியம் எது முக்கியமன்று, உற்பத்தித் துறையா உற்பத்தி செய்யாத துறையா, ஊதலீடா ஊக வாணிபமா எனப் பகுத்துக் கூறுவது கடினம் என டிகார்க் கூறுகிறார். மேலும், இம் முறையில் மைய வங்கிக்கும் வணிக வங்கிகளுக்குமிடையில் பொறுப்புகள் பிரிக்கப்படுவதால், மைய வங்கி நடவடிக்கை எடுக்கின்ற வரை, வணிக வங்கிகள் தம் போக்கில் செயலாற்றிக்கொண்டிருக்கலாம்.

(6) குறும அளவு துணைக்காப்பு வைத்தல் (Maximum Secondary Reserve Requirements)

சட்டப்படி ரொக்க இருப்பு வைத்திருப்பதற்கும் அதிகமாகத் துணைக்காப்பாக ஒரு குறிப்பிட்ட அளவு ரொக்கம் வைத்திருக்க வேண்டிய அவசியத்தைக் கூட்டரசு காப்பு முறையின் ஆளுநர் வாரியம் 1945-ல் வலியுறுத்தியது. வணிக வங்கிகள் குறும அளவு துணைக்காப்பு வைத்திருப்பதன் நோக்கம், அவைகளின் கடன் விரிவாக்கச் சக்தியைக் குறைப்பதற்காகும். அதாவது, அரசுப் பிணையங்களையும், உபரி ரொக்க இருப்பையும் 'கடன்கள்' என்ற சொத்தாக மாற்றப்படுவது தடுக்கப்படுவதற்காம். பொருளாதாரத்தில் வீக்க நிலையைக் கட்டுப்படுத்துவதற்காக பெல்ஜியம், மெக்ஸிகோ, இந்தியா, சுவீடன், நார்வே, ஹாலண்டு மற்றும் பிலிப்பைன்சு நாடுகள் இந்த முறையைக் கையாண்டிருக்கின்றன.

(7) நுகர்வோர் கடன் நெறிப்படுத்தப்படுதல் (Regulation of Consumer Credit) :

நுகர்வோர் தாங்கள் வாங்கும் பொருளுக்கு முழுத் தொகையையும் கட்ட முடியாததால் வங்கியில் கடன் பெறுவர். அக்கடன் தவணை முறையில் செலுத்தப்படுவதற்கான உடன்பாட்டை அவ்வங்கியிடம் மேற்கொள்வர். இத்தகைய கடன்களைப் பேதங்

காட்டாமல் மிகையான அளவுக்கு வங்கிகள் கொடுக்கத் தொடங்கினால், போதிய அளவு நாட்டில் அளிப்பு இல்லாமல் பணவீக்கம் ஏற்படத் தொடங்கி, விலை மட்டம் உயர ஆரம்பிக்கும். இதனால் கடனளவைக் கட்டுப்படுத்த வேண்டிய சூழ்நிலை உருவாகிறது.

எத்தகைய பொருள்களை வாங்குவதற்குமட்டும் வங்கிகள் கடன் கொடுக்கலாமென மைய வங்கி வரையறுக்கலாம்; அல்லது நுகர்வோர் பெறுவதற்கான கடன் உச்சவரம்பை வரையறை செய்யலாம்; அல்லது தவணை முறையில் கடனுக்கு வாங்கப் பெறும் பொருளுக்கு முதன் முதலில் கட்டவேண்டிய ரொக்கப் பணத்தின் அளவைக் கூட்டலாம்; அல்லது நுகர்வோர் திரும்பச் செலுத்தும் தவணைக் காலத்தின் எண்ணிக்கையைக் குறைக்கலாம். தவணைக்கடன் தொகைக்கான பெரும அளவையும் வரையறுக்கலாம். இதன் விளைவாக, தவணைக் கடனில் பொருள்களை வாங்குபவர்கள் தயங்குவார்கள். இப்படிச் செய்வதனாலும் கடன் அளவு குறையும்.

மந்த காலத்தில் கடனின் கால அளவு, தவணைகளின் எண்ணிக்கை ஆகியவற்றைக் கூட்ட, நேர் எதிர்மாறான விளைவுகள் ஏற்படுவதைக் காணலாம்.

கடன் கட்டுப்பாட்டுக் கருவியான இம் முறை 1941-ல் அமெரிக்காவில் முதன் முதலில் அறிமுகப்படுத்தப்பட்டது. தொழிற்நுறையில் நன்கு வளர்ச்சி பெற்ற அமெரிக்கா போன்ற நாடுகளில், உற்பத்தி குறைவாக உள்ள பொருள்களின் தேவை உயர்வைக் குறைப்பதற்காக வேண்டுமானால் இம்முறை பின்பற்றப்படலாம். ஆனால், வளர்ச்சியற்ற அல்லது வளரும் நாடுகளில், நுகர்வோர் கடன்பற்றிய வாதத்திற்கே இடமில்லாதிருக்கும் போது இம் முறையினால் எவ்விதப் பயனுமில்லை.

(8) வரம்புத் தேவைகளை நெறிப்படுத்துதல் (Regulation of Marginal Requirements)

'வரம்பு' என்பது, பிணையங்களின் சந்தை மதிப்பிற்கும் அப்பிணையங்களை ஈடாகக்கொண்டு வணிக வங்கிகள் உண்மையில் அளிக்கின்ற கடன் தொகைக்கும் உள்ள வேறுபாடாகும். பங்கு மாற்றுச் சந்தையில் ஊக வாணிபம் பெருகுவதைத் தடுக்க வரம்புத் தேவை முறை பின்பற்றப்படுகிறது. மைய வங்கியின் ஆணைப்படி வணிக வங்கிகள் வரம்பு வீதத்தைக் கூட்டினால் கடன் அளவு குறைகிறது. எனவே, ஊக வாணிபத்

திற்காகக் கடன் பெறுதல் குறைக்கப்படுகிறது. எடுத்துக் காட்டாக, வரம்பு 15 சதவீதம் என்றால் ரூ. 100 மதிப்புள்ள பிணைய ஈட்டின்மீது ரூ. 85 வரை கடன் அளிக்கலாம். வரம்பு 20 சதவீதமென்றால் ரூ. 80தான் கடன் அளிக்க முடியும். வணிக வங்கிகளின் கடன் அளவைக் கூட்டவேண்டுமென்றால் மைய வங்கி வரம்பின் அளவைக் குறைக்கும்; கடன் அளவைக் குறைக்கவேண்டுமென்றால் வரம்பின் அளவை உயர்த்தும்.

வரம்பளவு அதிகமாக இருக்குமானால் பணத்தேவை ஏற்படுகின்றபோது பிணையங்களை ஈடுவைத்துப் பணம் பெறுவதைவிட அவற்றை விற்றுவிடவே பங்கு வணிகர்கள் விரும்புவார்கள். இதனால் பிணையங்களின் விலையேற்றம் தடுக்கப்படும். அதேபோல், இந்த வகைக் கட்டுப்பாடு ஊக வாணிபத்தை ஓரளவு கட்டுப்படுத்தித் தொழிற்றுறையில் முதலீடு செய்யத் தூண்டுகின்றது. முதன் முதலில், 1934-ல், இம் முறையை அமெரிக்கா பின்பற்றியது. அதே ஆண்டில் 'பிணையங்கள் மாற்றுச் சட்டம் (Securities Exchange Act) நிறைவேற்றப்பட்டது. இச் சட்டம் கூட்டரசுக் காப்பு முறையின் ஆளுநர் வாரியத்திற்கு, பிணையங்கள்மீதான கடன் வரம்புகளைக் குறிப்பிடும் அதிகாரத்தை வழங்கியிருக்கின்றது. அமெரிக்காவில் பங்கு வாணிபத்தைக் கட்டுப்படுத்தி நெறிபடுத்த இம்முறை மிகவும் பயன்படுத்தப் பட்டிருக்கின்றது.

(9) அறிவுறுத்தல் (Moral Suasion)

கடன் அளவைக் கட்டுப்படுத்துவதற்காக 'அறிவுறுத்தல்' முறையையும் பல நாடுகள் மேற்கொண்டுள்ளன. இங்கிலாந்து, பிரான்சு, சுவீடன், மற்றும் ஹாலண்டு ஆகிய நாடுகளில் வணிக வங்கிகளுக்கு அறிவுறுத்தி வேண்டுகோள் விடுத்தலின் மூலமாகக் கடன் கட்டுப்படுத்தலில் மைய வங்கிகள் வெற்றி கண்டுள்ளன. இம்முறைப்படி வெற்றி காண்பது மைய வங்கிக்கும், வணிக வங்கிகளுக்கும் இடையிலுள்ள தொடர்பைச் சார்ந்து இருக்கிறது. இந்தியாவில் ரிசர்வ் வங்கி அறிவுறுத்தல் மூலம் நல்ல பயன் அடைந்திருக்கிறது. குறிப்பாகச் செல்லப்போனால், 1949-லும் 1965-லும் நாணய மதிப்பிறக்கம் செய்யப்பட்டபோது ரிசர்வ் வங்கி கோரிக்கைப்படியே வணிக வங்கிகள் ஊக வாணிபத்திற்குக் கடன் அளிப்பதை நிறுத்தி வைத்து, முடிந்த அளவு ஒத்துழைப்பையும் அளித்தன.

வீக்க நிலை நாட்டில் இருக்கும் போது கடனளவைக் கட்டுப்படுத்தும்படியும், வாட்ட நிலை நிலவும் போது கடனளவைக்

கூட்டும்படியும் வணிக வங்கிகளுக்கும் மைய வங்கி ஆலோசனை கூறலாம்.

(10) பொது விளம்பரம் (Publicity)

'அறிவுறுத்தல்' என்ற சாதனத்தோடு 'பொது விளம்பரத்தை'யும் மைய வங்கி கடைப்பிடிக்கின்றது. அரசியல், நிதியம் மற்றும் வாணிபப் போக்குகள் நாட்டின் பொருளாதாரத்திற்கு உகந்தனவாக இல்லாமலிருந்தால், மைய வங்கி தன் கொள்கைகளையும் கோட்பாடுகளையும், செய்தித்தாள், வாராந்திர மாதாந்திர வெளியீடுபோன்றவற்றின் மூலம், பொதுமக்களுக்கும் வங்கிகளுக்கும் தெரியப்படுத்துகின்றது. அறிக்கை விடும்போது தேவையான புள்ளி விவரங்களையும் அளிக்கின்றது. கொள்கைகளை மீறி நடப்பவர்களுக்கு எச்சரிக்கையும் விடுக்கின்றது.


இம் முறையில் வெற்றி காண்பதென்பது அரிதாகும். எடுத்துக்காட்டாக, அமெரிக்காவில் 1920-லும், 1929-லும் 'கூட்டரசுக் காப்பு முறையின்' அறிவிப்புகளை உறுப்பு வங்கிகள் புறக்கணித்தன.

இதுவரை கண்ட மைய வங்கியின் பணிகளைத் தொகுத்து ஒரு விளக்க அட்டவணை மூலம் (பக்கங்கள் 336-337-ல்) அளிக்கப்படுகின்றது.

மதிப்பீடு (Evaluation)

பணவாக்க முறையை, குறிப்பாகக் கடனுக்க முறையைக் கட்டுப்படுத்தி நெறிப்படுத்த பல்வகைக் கருவிகள் மைய வங்கியிடம் இருந்தாலும், அத் துறையில் அது முழு வெற்றி அடையவில்லை என்று கூறலாம். அதனால்தான், பொருளாதாரத்தில் பூரிப்பும் மந்தமும் மாறிமாறி இடம் பெறுகின்றன; வீக்க நிலையும் வாட்ட நிலையும் நிலவுகின்றன. மைய வங்கி வாட்ட நிலை அல்லது விலைகளின் இறக்கத்தைத் தடுத்து நிறுத்துவதைக்காட்டிலும், வீக்க நிலையைக் கட்டுப்படுத்துவதன் மூலம் விலைகளின் அதிகரிப்பை நிறுத்துவதில் அதிக சக்திவாய்ந்ததெனக் கூறலாம். இற்குப் பல காரணங்கள் உண்டு. பொது மக்கள் திடீரெனத் தங்களின் சேமிப்பை அதிகரிப்பதையோ, முதலீட்டைக் குறைப்பதையோ (இரண்டும் பணவாட்டத்தை உண்டுபண்ணும்) யாரும் தடுக்க முடியாது. ஆனால், முதலீட்டை அதிகரிப்பதென்பது வங்கிகளிடமிருந்து கடன் வாங்குவதை ஏற்படுத்துகின்றது. இதற்கு வங்கிகளின் ஒப்புதல் அவசியமாகிறது. பண அளிப்பு அதிகரிப்பிற்கு முட்டுக்கட்டை போடுவதன்மூலமும்,

இதுவரை கண்ட மைய வங்கியின் பணிகளைத் தொகுத்து ஒரு விளக்க அட்டவணைமூலம் கீழ்க்கண்டவாறு அளிக்கலாம்



அந்நியச் செலாவணி இருப்புப் பாது காவலன்
இறுதித்நிலைக் கடன் ஈடேவாளன்
வங்கிகளின் சீர்வகம்
கடன் கட்டுப்படுத்துந்
கடன் கட்டுப்பாட்டு முறைகள்
ரொக்க இருப்பு வீத மாறுதல்
கடன் பங்கீடு
தேநடி நட வடிக்கை
குறுய அளவு துணைக் காப்பு வைத்தல்
நுகர்வோர் கடன் நெறிப் படுத்தப் படுதல்
வரம்புத் தேவை கடுமை நெறிப் படுத்து தல்
அறிவுறுத் துதல்
பொது வினம் பரம்
டுனிப்புத் தடுக் கப்படுவதற் குக் காப்பு வீதம் உயர்த் தப்படுதல்
மந்த காலம் தடுக்கப்படு வதற்குக் காப்பு வீதம் குறைக்கப் படுதல்
வங்கிக் கடன் நுகர்வோருக் குத் தேவைப் பட்டதான் இம்முறை பலன் கிடைக்கும்.
மைய வங்கி யின் செல் வாக்கைப் பொறுத்து அமைகிறது
உறுப்பு வங்கி களிடம் உபரி இருப்பு இருந் தால் அவ் வியாபல் னில் லாமற் போகலாம்.

வட்டி வீதங்களை உயர்த்துவதன் மூலமும் அவைகளின் வீக்க நிலைக்கு ஒரு முடிவு கட்ட முடியும். ஆனால், இதற்கு எதிரிடையான சூழ்நிலைகளில் வங்கிகள் புதிதாகப் பணத்தைப் படைக்கவும், வட்டிவீதத்தைக் குறைக்கவும் சம்மதிக்கின்றனவென்பது மட்டுமே, புதிய பணம் முதலீடு செய்யப்படும் என்பதாகும். போதுமான அளவிற்கு அதிகரித்துள்ள வட்டிவீதமானது முதலீட்டை இலாபமற்றதாகச் செய்வதுடன் அதற்கு விரைவில் முற்றுப்புள்ளியும் வைத்துவிடுகின்றது. ஆனால், வட்டிவீதத்தில் ஏற்படும் இறக்கமானது முதலீட்டில் இலாபங்களை அடையும் வாய்ப்புகளையே அதிகரிக்கும். சுருங்கக்கூறினால், முதலீடு இலாபந்தரத்தக்கதல்ல என்று பொது மக்களைப் பயமுறுத்துவது எளிது; அப்பயத்தை ஓட்டுவதென்பது எளிதான காரியமல்ல.

பணவாக்க முறையில் மைய வங்கி வெற்றி அடைய விரும்பினால் தொடக்கத்திலேயே திருத்த முறைகளைக் கையாள வேண்டும் என கிரௌதர் கூறுகிறார். வீக்க நிலையாயினும் சரி, வாட்டநிலையாயினும் சரி அவைகள் தம்மிச்சையாக விடப்பட்டால் விரைவில் நன்கு வளர்ச்சியடையும். அதன் பின் அவைகளை நசுக்கி அடக்குவது என்பது மிகவும் கடினமான செயலேயாகும். இளமையிற் களைந்தெறிவது மிகவும் எளிதாகும். மைய வங்கி, அதனிடம் எவ்விதத் தடையுமில்லாமலிருக்க, வீக்கநிலை ஆரம்பமாகும் போதே கவனமுடனிருந்து அதனை முளையிலேயே கிள்ளியெறிய வேண்டும். நடைமுறையில் அரசியல் தலையீடு போன்ற பல்வேறு இடர்ப்பாடுகள் மைய வங்கிக்கு இருந்த போதிலும், இதனை அது உறுதியுடன் செய்து முடிக்கவேண்டும். பூரிப்பையோ, மந்தத்தையோ நிடிக்க விடாமல், மைய வங்கி தனது கருவிகளை உடனடியாகப் பயன்படுத்த வேண்டும். எவ்விதத்திலும் காலந்தாழ்த்துதல் ஆபத்தையே விளைவிக்கும். பூரிப்பை நீடித்திருக்கச் செய்வதானது, அதனிடம் உள்ள குறைகளைப் போக்கும் வாய்ப்புகளைக் குறைத்து விடும். 'மைய வங்கியின் கைக்கோள் பெரும்பகுதி வெற்றியைத் தரவல்லதாக இருப்பது வாணிபச் சுழலில் ஒரு குறிப்பிட்ட நிலை (Stage)யின் போதுதான். இந்நிலையில் உறுதியான நடவடிக்கையை எடுக்க, மைய வங்கிக்கு, அதன் மனிதப்பண்பாலும், அரசாலும் சொல்லவொணா இடர்ப்பாடுகள் ஏற்படும். பணவரலாற்றை ஆய்வு செய்தால், பூரிப்புகள்—அல்லது மந்தங்கள்—ஆரம்ப நிலையிலேயே தடுக்கப்படுவதில்லையென்பது புலனாகும்' எனக் கிரௌதர் கூறுகிறார்.

பொதுமக்களின், குறிப்பாக, முதலீடு செய்வோரின் உளப்பாங்கு (psychology) அறியப்பட்டால்தான் பணத்துறையில்

மைய வங்கி வெற்றியடையும். ஆனால், உளப்பாங்கை அறிவ தென்பது இயலாததாகும். நிகழ்த்ததை நிறைவேற்ற வேண்டு மென்றால் மக்கள் போக்கிற்கு மைய வங்கி எதிர்நீச்சல் போட்டுத் தான் ஆகவேண்டும். வங்கிக் கைக்கோளின் கோட்பாட்டிலும் நடைமுறையிலும் பேரளவு முன்னேற்றம் காண்பதற்கு நிறைய இடமுள்ளது. சில மைய வங்கிகளே மக்கள் நலனில் அக்கறை கொண்டுள்ளன எனப் பெரும்படியாகக் குறை கூறப்படு கின்றது. அதிலும் வெகு சில மைய வங்கிகளே அறிவுக்கூர்மை யான முடிவுகளைத்தக்க நேரத்தில் எடுத்து, அவைகளைத் தங்களா லியன்ற மட்டும் நிறைவேற்றுகின்றன. மைய வங்கியின் பொறுப்பை அதிகப்படுத்துவது உடனடியாகச்செய்ய வேண்டிய வற்றுள் ஒன்றாகும். பொருளாதாரச் சமன்பாட்டை (equi-librium) நிலைநிறுத்தும் விருப்பத்தை நிறைவேற்றுவதற்குத் தனது முழு அதிகாரங்களையும் பயன்படுத்தும்படி அது தூண்டப்பட வேண்டும். "நெருக்கடி காலங்களில் மட்டும் தம் கடமையைச் செய்வதோடன்றி இன்னும் எதிர் காலங்களிலும் அத்துமீறிச் செல்லும் பொருளாதார முறையின் கட்டுப்படுத்தியாகவும் (governor), காப்பு வாயிலாகவும் (Safety value) இருக்க வேண்டும்". இப் பண்புகள் யாவும் மைய வங்கிக்குப் பட்டறிவு வாயிலாக வரவேண்டுமே தவிர, சட்டத்தினால் திணிக்கப்பட்டு விட முடியாது. மைய வங்கியின் கைக்கோள் குடியரசு நீதியில் இருக்க வேண்டுமென்று அரசு தன் அதிகாரத்தின் மூலம் வலியுறுத்துமானால், அது பேராபத்தில் முடியும் !

மைய வங்கி நாட்டுடைமையாதல் :

வெகு அண்மையில்தான் மைய வங்கிகள் அரசுடைமை யாக்கப்படுவதுபற்றிய வாதம் ஆங்காங்கே இடம் பெற்றிருக் கின்றது. நடைமுறையில் மைய வங்கிகள் நாட்டுடைமையாக் கப்பட்டால்தான் நல்லதெனப் பரவலாகக் கருத்து தெரிவிக்கப் பட்டு, இரண்டாம் உலகப் போருக்குப் பின் பல நாடுகளில் மைய வங்கிகள் நாட்டுடைமையாக்கப்படுதல் தீவிரமடைந்தன. எடுத்துக் காட்டாக, ஆஸ்திரேலியா, நியூஸிலாந்து, கனடா, டென்மார்க் மற்றும் இந்தியா ஆகிய நாடுகளில் முறையே 1945, 1936, 1938, 1936 மற்றும் 1949 ஆகிய ஆண்டுகளில் மைய வங்கிகள் அரசுடைமையாக்கப்பட்டன. பொருளாதாரக் கொள்கைகளை நன்கு வகுத்து அதன்படி செயலாற்றவேண்டு மென்றால் மைய வங்கிகள் அரசுடைமையாக்கப்படல் வேண்டும் என்பதில் ஐயமில்லை. வங்கிக் கொள்கையும், அரசுக் கொள்கை யும் தனித்தனியாகச் செயல்படுமேயானால் பொருளாதாரத்தில்

ஒரு சமநிலையைக் காண முடியாது. இரண்டும் ஒரு மேலாண்மையின்கீழ் இருந்தால் பணத்துறையை நெறிப்படுத்துவது மிகவும் எளிதாகும். ஆனால், வங்கிக் கொள்கைக்குப் புறம்பாக அரசுத்தலையீடு இல்லாமல் கவனிக்க வேண்டியது இன்றியமையாததாகும்.

இந்திய ரிசர்வ் வங்கி
(Reserve Bank of India)

இந்தியாவிற்கு ஒரு மைய வங்கி (Central Bank) எப்போது தொடங்கப்பெறவேண்டுமென்று உணரப்பட்டதோ அக்காலமே 'இந்திய ரிசர்வ் வங்கியின்' வரலாற்றுக்காலமெனலாம். மைய வங்கியை ஏற்படுத்துவதற்காக அவ்வப்போது வரையப்பட்ட திட்டங்களின் பிரதிபலிப்புத்தான் மற்ற நாடுகளில் மைய வங்கி நிறுவப்பட்டதற்குக் காரணமாகும். மைய வங்கியின் தொடக்க காலத்தை ஒரு குறிப்பிட்ட தேதியிட்டுக் கூற முடியாவிட்டாலும் மைய வங்கியின் பழம்பெரும் இரண்டு பணிகளான 'பணவெளியிடுதல்' (Note issue) மற்றும் 'அரசின் வங்கி' (Banker to the Govt.) ஆகியவை ஒரு தனி வங்கியாலோ, சாதாரண வங்கியாலோ ஆற்றப்பட்டிருக்கிறதென்பதாக வரலாறு கூறுகிறது. இவ்வகை வங்கிகள் ஏனைய பணிகளைச் செய்தாலும் அவைகள் 'வெளியீட்டு வங்கிகள்' எனவே அழைக்கப்பட்டன. வணிக வங்கிகளின் ரொக்கக் காப்பிருப்பை வைத்திருத்தல், மாற்றுச் சீட்டுகளை மறுகழிவு செய்தல், தீர்வகங்களை மேலாண்மை செய்தல் போன்ற பணிகளையும் காலப்போக்கில் அவ்வங்கிகள் மேற் கொள்ளத்தொடங்கின.

1773 ஆம் ஆண்டு சனவரித் திங்களில் இந்தியாவில் 'வாரன் ஹேஸ்டிங்ஸ்' (Warren Hastings) என்பவர் ஆளுநராக இருந்தபோது மைய வங்கி தொடங்குவதற்கான முயற்சி எடுத்துக்கொள்ளப்பட்டது. 'வங்காளத்திற்கும் பீஹாருக்கும் பொது வங்கி' (General Bank of Bengal and Bihar) என்ற ஒரு திட்டத்தை அவர் 'வருவாய் வாரியத்தின்' (Board of Revenue) முன்வைத்தார். ஆனால், அவரது திட்டம் என்னும் 'காய்' 19-ஆம் நூற்றாண்டின் இறுதியிலும், 20-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலுந்தான் கனிய ஆரம்பித்தது. பணவெளியீடு செய்தல், அரசின் வங்கியாக இருத்தல், பொன் திட்டத்தை அமுலாக்குதல் பன்னாட்டு வணிகத்திற்கு அந்நியச் செலாவணி அளித்தல் போன்ற பணிகளைச் செய்துகொண்டிருந்த மூன்று மாநில வங்கிகளை 'ஒன்றிணைப்பு' (Amalgamation) செய்யத் திட்டங்கள்

வகுக்கப்பட்டன. அப்படியே 1921-ல் ஒன்றிணைப்புச் செய்யப் பட்டு 'இந்திய இம்பீரியல் வங்கி' (Imperial Bank of India) ஒன்று உருவாக்கப்பெற்றது. ஆனால், இவ்வங்கியிடம் மைய வங்கியின் பணிகள் சிலதான் ஒப்படைக்கப்பட்டன. 1926-ல் ஹில்டன் யங் குழு, இந்திய ரிசர்வ் வங்கி மைய வங்கியாகத் தோற்றுவிக்கப்பட வேண்டுமென்று பரிந்துரைத்தது. மைய வங்கிகளின் பணிகளில் ஏதேனும் இம்பீரியல் வங்கி மேற்கொண் டிருந்தால் அவைகள் அவற்றிடமிருந்து எடுக்கப்பட்டு இந்திய ரிசர்வ் வங்கிகளிடமே ஒப்படைக்க வேண்டுமென்றும் அக்குழு பரிந்துரை செய்தது. ரிசர்வ் வங்கியின் மசோதாவைப் பரிசீலனை செய்வதற்காக இலண்டனில் 'துறைக்குழு' (Departmental committee) ஒன்று அமைக்கப்பட்டது. இவ்வங்கி ஒரு 'பங்குநர் களின் வங்கியாக' இருத்தல் வேண்டுமென அக்குழு பரிந் துரைத்தது. இக்குழுவை அடுத்து மற்றுமொரு குழு அமைக்கப் பட்டு, அக்குழு 1933, ஜூலையில் கூடியது. ரிசர்வ் வங்கியில் எந்த வித அரசியல் தலையீடும் இருக்கக்கூடாதென்றும், முற்றிலும் தனி நபர்களைக்கொண்ட பங்குநர்களின் மூலதனமே அதில் இருத்தல் வேண்டுமென்றும் அக்குழு மேலும் பரிந்துரைத்தது.

ரிசர்வ் வங்கி அமைத்தல் :

இலண்டன் குழுவின் பரிந்துரைப்படி 'இந்திய ரிசர்வ் வங்கி மசோதா' ஒன்று தயாரிக்கப்பட்டு, அம்மசோதா 1933ஆம் ஆண்டு, செப்டம்பர் 8-ல் சட்ட மன்றத்தில், நிதி உறுப்பினர் ஜார்ஜ் ஸஷ்டர் (George Schuster) என்பவரால் சமர்ப்பிக்கப் பட்டது. சில திருத்தங்களுடன் மீண்டும் அம் மசோதா 1933, நவம்பரில் சட்டமன்றப் பேரவையின் முன் வைக்கப் பட்டது. இவ் வங்கி தனியார் துறையிடம் இருப்பதா அல்லது அரசுத்துறையிடமிருப்பதா என்ற முக்கியமான வாதம் சட்ட மன்றத்தில் இடம் பெற்று, முடிவில் தனியார் துறையிடமே இருப்பதுதான் நன்று என முடிவு செய்தனர். 1933, டிசம்பர் 22-ல் சட்டமன்றப் பேரவையினாலும் ரிசர்வ் வங்கி மசோதா நிறைவேற்றப்பட்டது. 1934, மார்ச் 6-ல் தலைமை ஆளுநரின் (Governor General) ஒப்புதல் கிடைக்கப்பெற்றது. இருந்தாலும் ரிசர்வ் வங்கி தொடங்கப்பெறுவதற்கு மேலும் ஒரு ஆண்டுக் காலம் பிடித்தது. ரூ. 5 கோடி செலுத்தப்பட்ட மூலதனத்தைக் கொண்டு பங்குநர்களின் வங்கியாக 1935ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் முதல் நாள் 'இந்திய ரிசர்வ் வங்கி' தொடங்கப்பெற்றது. ஒவ்வொரு வங்கியின் மதிப்பும் ரூ. 100 ஆகும். அவ் வங்கியின்

காப்பு நிதிக்காக, இந்திய அரசு ரூ. 5 கோடிக்கு ரூபாய் பிணையங்கள் (Rupee securities) அளித்தது. ஒரு நாட்டின் மைய வங்கி நாட்டுடைமையாவதால் ஏற்படும் நன்மைகளைக் கருதி ரிசர்வ் வங்கி 1949-ல் நாட்டுடைமையாக்கப்பட்டது. நாட்டுடைமையாக்கப்பட்ட பின் அனைத்துப் பங்குகளுமே அரசுக்குச் சொந்தமாக உள்ளன. 'ரிசர்வ் வங்கி வெளியிடும் செலாவணியைக் கட்டுப்படுத்தி நெறிப்படுத்தவும், ரூபாயின் உள்நாட்டு வெளிநாட்டு மதிப்பை நிலைநிறுத்தப் போதிய காப்புகள் வைத்திருக்கவும், பணவியல் மற்றும் கடனுக்க முறை நன்மை பயக்கத்தக்க அளவில் நாட்டில் இயங்க வழி வகைகள் செய்யவுந்தான்' இந்திய ரிசர்வ் வங்கி நிறுவப்பட்டது. இந் நோக்கங்களின் அடிப்படையில், செலாவணிக்கு அதிகாரியாகவும், அரசின் வங்கியாகவும், ஏனைய வங்கிகளுக்கு வங்கியாகவும், நாணய மாற்று நடவடிக்கைகளை மேலாண்மை செய்யவும், நிதிபற்றிய புள்ளி விவரங்களைச் சேகரித்து வெளியீடு செய்யவும் ஆன பணிகள் ரிசர்வ் வங்கியிடம் ஒப்படைக்கப்பட்டன.

ரிசர்வ் வங்கியிடம் பல துறைகள் உள்ளன. துறைக்கு ஏற்றவாறு பணிகள் பிரித்துக் கொடுக்கப்பட்டுள்ளன. பொற்காசு மற்றும் பொற்கட்டி, அந்நியப் பிணையங்கள் (Foreign Securities), ரூபாய் நாணயம், இந்திய அரசு ரூபாய், மற்றும் ஸ்டெர்லிங் பிணையங்கள் ஆகியவை வங்கி வெளியீட்டுத் துறையின் (Issue department) சொத்துகளாகும். இச் சொத்துகள் 1955-ல் ரூ. 193.2 கோடியாக இருந்தது. 1973—74-ல் ரூ. 6159·68 கோடிக்கு உயர்ந்துள்ளது. செலாவணியிப் புழக்கம் 1955-ல் ரூ.171.78 கோடியாக இருந்தது. 1973-74-ல் ரூ. 6128-54 கோடியாக அதிகரித்துள்ளது. சொத்துகள் மற்றும் பொறுப்புகளின் வளர்ச்சியைப் பின்வரும் (1), (2) அட்டவணைகளால் காணலாம்.

ரிசர்வ் வங்கியின் வங்கியப்பணிகள்யாவும் வங்கித்துறையால் நடத்தப்படுகின்றன. தாள்பணம், நாணயம், அயல் நாடுகளில் வைக்கப்பட்டுள்ள இருப்பு (Balances held abroad), மாற்றுச் சீட்டுகள் வாங்கப்பெற்றவைகளும், மறுகழிவு செய்யப்பெற்றவைகளும்,அரசுக்கு அளிக்கப்பட்ட கடன்களும் முன்பணங்களும், ஏனைய துறைகளுக்கு அளிக்கப்பெற்ற கடன்களும் மற்றும் முதலீடுகளும் வங்கித்துறையின் சொத்துகளாகும். அரசுத்துறை மற்றும் வங்கிகளின் வைப்புகள், பிற இனங்களின் வைப்புகள் ஆகியவை பொறுப்புகளாகும். சொத்துகள் மற்றும் பொறுப்பு

இந்திய ரிசர்வ் வங்கியின் இருப்பு நிலைக் குறிப்பு 1935-74

வெளியீட்டுத் துறை (சொத்துகள்)

அட்டவணை 1. (ரூபாய் கோடியில்)

வ. எண்	ஆண்டு	பொற்காசு மற்றும் பொற்கட்டி	அந்நியப் பிணையங்கள்	ரூபாய் நாணயம்	இந்திய அரசு ரூபாய்ப் பிணையங்கள்	மொத்தம்
1	2	3	4	5	6	7
1	1935 ...	44·42	66·19	57·12	25·54	193·27
2	1939 ...	44·42	107·50	64 04	38 34	254·30
3	1944-45 ...	44 41	1034·33	15 20	57 84	1151·79
4	1946-47 ...	44·41	1135·33	27·73	57·84	1265 31
5	1950-51 ...	40 02	678·15	57·52	516·63	1292·32
6	1960-61 ...	117·76	123·01	119·62	1632·20	1992·59
7	1965-66	115·89	95·05	94·00	2586·27	2891·21
8	1969-70 ...	182·53	331·42	64 63	3287·35	3865·93
9	1970-71 ...	182·53	278 42	51·67	3713·73	4221 36
10	1971-72 ...	182·53	238.65	36·28	4197·85	4655.31
11	1972-73 ...	182·53	171·65	8 63	4909·35	5272·20
12	1973-74 ...	182·53	141·74	5·07	5830·34	6159·68

இந்திய ரிசர்வ் வங்கியின் இருப்பு நிலைக் குறிப்பு-1935-74
வெளியீட்டுத் துறை (பொறுப்புகள்)

அட்டவணை 2. (ரூபாய் கோடியில்)

வரிசை எண்	ஆண்டு	செலாவணிப் புழக்கம்	வங்கித் துறையில் காகிதச் செலாவணி	மொத்தம்
1	2	3	4	5
1	1935	171·78	21·49	193 27
2	1939	23 ·63	17·87	254·30
3	1944-45	1137 47	14·32	1151·79
4	1946-47	1223 55	41·76	1265·31
5	1950-51	1257 48	34·84	1292·32
6	1960-61	1984·74	7·85	1992.59
7	1965-66	2866·36	24·85	2891·21
8	1969-70	3842 56	23 38	3865·93
9	1970-71	4211 77	9 59	4221·36
10	1971-72	4 37·18	18 13	4655·31
11	1972-73	5253·45	18·75	5272·20
12	1973-74	61 6 54	33 14	6159·68

களின் வளர்ச்சியைப் பின்வரும் (3) & (4) அட்டவணைகளின் மூலமாகக் காணலாம் :

மைய வங்கியாக ரிசர்வ் வங்கி விளங்குவதால், நாட்டில் பணமுறை மற்றும் கடன்முறையை நெறிப்படுத்திச் செயல் படுத்துவது அவ்வங்கியின் பொறுப்பாகும். அட்டவணையில் இடப்பட்ட வங்கிகள் (Scheduled), அட்டவணையில் இடப்படாத வங்கிகள் (Non-Scheduled), வங்கித் தொழில், நிதித் தொழில் மேற்கொள்ளாத ஆனால், வைப்புகளை மக்களிடமிருந்து பெறும் நிறுவனங்கள் (Non banking non financial companies accepting deposit from the public) மற்றும் வங்கித் தொழில் மேற்கொள் ளாத ஆனால், வைப்புகளை மட்டும் ஏற்கும் நிதி நிறுவனங்கள் (Non-banking financial companies accepting deposits from the public), ஒருமுகப்படுத்தப்படாத உள்நாட்டு வங்கிகள் போன்றவைகளைச் சட்டப்படி ரிசர்வ் வங்கி மேலாண்மை செய்து வருகிறது.

வங்கிகளுக்கு வங்கியாக விளங்கும் ரிசர்வ் வங்கி, வங்கிகளின் செயல் முறைகளை ஒழுங்குபடுத்துவதற்குச் சட்டப்படி முழு உரிமை

இந்திய ரிசர்வ் வங்கியின் இருப்புநிலைக் குறிப்பு — 1935-74

அட்டவணை 3. (வங்கித் துறைச் சொத்துகள்) (ரூபாய் கோடியில்)

வ. எண்	ஆண்டு	தாள் பணமும் நாணயங்களும்	அயல் நாடுகளில் வைக்கப்பட்டுள்ள இருப்பு	மாற்றுச்சீட்டுகள் வழங்கப்பட்டவைகளும் மறுகழிவு செய்யப்பட்டவைகளும்			மைய, மாநில அரசுகளுக்குக் கடன்களும் முன்பணங்களும்	ஏனைய கடன்களும் முன்பணங்களும்	முதலீடுகள்	பிற சொத்துகள்	மொத்தம்
				உள்நாடு & வெளிநாடு	அரசுக் கருவூலம்	மொத்தம்					
1	2	3	4	5	6	7	8	9	10	11	12
1	1935	21 57	17·39	—	—	—	1·00	—	5·29	0 22	45·47
2	1939	17·75	6·97	—	10·11	10·11	1·20	—	6 42	1·06	43·51
3	1944-45	14·48	388·13	—	—	—	0·70	—	21·45	1·13	425·89
4	1946-47	41·86	430.82	—	2.44	2·44	5·11	0·03	66 94	1·21	548·41
5	1950-51	34 98	178·35	0·37	1·72	2·09	7·50	18·71	88·12	2 44	332·19
6	1960-61	7 94	13·24	—	39·17	39·17	39·02	185·50	180·95	19·82	485·64
7	1965-66	24·93	14·87	—	53·02	53·02	211·21	244·57	132·25	43·34	724·19
8	1969-70	23·51	135·14	—	61 92	61.92	211·98	522·31	118·87	44·17	1117·90
9	1970-71	9·67	77·00	6·71	31 38	38·09	249·51	708·79	113·15	45·50	1241·71
10	1971-72	18·26	182·17	41 80	69 36	111 16	625 20	618·94	87·32	46·22	1689·17
11	1972-73	18·84	204·37	35·40	96 92	132·31	134 68	591·09	513·96	56·46	1651·71
12	1973-74	33·21	388·14	256·79	141·75	398·54	237·56	922·76	294·17	92·46	2466·82

இந்திய ரிசர்வ் வங்கியின் இருப்பு நிலைக் குறிப்பு-1935-1974

வங்கித்துறை (பொறுப்புகள்)

அட்டவணை 4. (ரூபாய் கோடியில்)

வ. எண்	ஆண்டு	வைப்புகள்		மொத்தம்	வங்கி	ஏனைய பொறுப்புகள்	மொத்தம்
		மைய அரசு	மாநில அரசு				
1	2	3	4	5	6	7	8
1	1935	6·05	—	6·05	28·34	11 08	45·47
2	1939	6·73	6·12	12·85	18 87	11·79	43 51
3	1944-45	277·97	23 67	301·64	80·19	44 06	425·89
4	1946-47	390·70	18·00	408·70	88·91	50·80	548 41
5	1950-51	162·78	17·05	179·84	58·78	93·62	332·19
6	1960-61	76·46	28·99	105 45	70·84	309·35	485·64
7	1965-66	51·44	25·76	77 20	103 86	543·13	724·19
8	1969-70	167·64	8 21	175·85	172 92	769·13	1117·90
9	1970-71	250·55	13 37	263·92	217·47	760·32	1241·71
10	1971-72	214·86	4 96	219·82	295·70	1173·77	1689 27
11	1972 73	53 83	16·79	70 62	297·44	1283 65	1651·71
12	1973-74	140 47	19 39	159 86	629·50	1577·46	2366·82

அடைந்திருக்கிறது. ஒரு வங்கியோ, கிளையோ புதிதாகத் தொடங்கப்பட்டாலும், அல்லது பல வங்கிகள் ஒன்றிணைப்புச் செய்யப்பட்டாலும், அல்லது பல கிளைகள் ஒன்றுடன் ஒன்று சேர்க்கப்பட்டாலும் ரிசர்வ் வங்கியின் அனுமதியை முன்னதாகவே பெற வேண்டும். வங்கிகளில் வைப்பாளர்களின் நலன் பாதுகாக்கப்படுகிறதா என அவ்வப்போது ரிசர்வ் வங்கி பார்வையிடுகிறது.

செலாவணியின் புறமதிப்பு நிலைப்படுத்துதல் (EXTERNAL STABILITY OF CURRENCY) :

இந்தியச் செலாவணியின் புறமதிப்பை நிலைப்படுத்துவதும் ரிசர்வ் வங்கியின் கடமையாகும். ரூபாயின் புறமதிப்பில் அலைவுகள் இல்லாதிருந்தால்தான் நாட்டில் பணவாக்க முறை நெறியுடன் இருக்கும். ஈங்கு அந்நியச் செலாவணி ஒழுங்காற்றுச் சட்டம், 1973 (Foreign Exchange Regulation Act, 1973) ரிசர்வ் வங்கியால் நடைமுறையாக்கப்படுவது குறிப்பிடத்தக்கதாகும். இச் சட்டப்படி, இந்தியாவில் உள்ள அயல் நாட்டு நிறுவனங்கள் நெறியாகச் செயலாற்றி வருகின்றனவா என்றும், அயல் நாட்டுத் தொழில் நுட்ப வல்லுநர்கள் மற்றும் மேலாளர்கள் செவ்வனே செயலாற்றி வருகின்றனரா என்றும் கண்காணித்து வருவது ரிசர்வ் வங்கியின் பொறுப்பாகும். இந்தியக் குடிமகன் அயல் நாடுகளில் சொத்துகளை வைத்திருப்பதற்கோ வாங்குவதற்கோ விற்பதற்கோ வங்கியிடம் அனுமதி கோர வேண்டும்.

கடன் கட்டுப்பாட்டுக் கருவிகளுள் மிக முக்கியமானது வங்கி வீதமாகும். வங்கி வீதத்தைப் பொருளாதாரச் சூழ்நிலைக்கேற்றபடி அவ்வப்போது ரிசர்வ் வங்கி மாற்றுகிறது. தற்போது வங்கி வீதம் 9 சதவீதமாக உள்ளது. அவ்வீதத்தில்தான் அட்டவணையில் கண்ட வங்கிகள் ரிசர்வ் வங்கியிடமிருந்து கடனுதவி பெறுகின்றன. வீக்க நிலையைத் தணிப்பதற்காக வங்கி வீதம் உயர்த்தப்படுகிறது. மாறாக, மந்தம் நிலவினால் கடன் விரிவாக்கம் செய்வதற்காக வங்கி வீதம் குறைக்கப்படுகிறது.

கடன் அளவுக் கட்டுப்பாட்டு முறைகள் (Quantitative credit control methods) வணிக வங்கிகளின் மொத்தக் கடனைக் கட்டுப்படுத்துகின்றன. இதன் விளைவாக, எல்லாத் துறைகளும், பொதுவாகப் பாதிக்கப்படும். ஆதலால், எந்தெந்தத் துறைகளுக்கு அல்லது தொழில்களுக்குக் கொடுக்கின்ற கடன்களால் நாட்டில் வீக்க நிலை ஏற்படுகின்றது என்று இனங்கண்டு, அந்தத் துறை-

களுக்குக் கடன் அளிக்கப்பெருமல் கடன் தன்மைக் கட்டுப் பாட்டு முறைகளை மைய வங்கி பின்பற்றுகிறது. அதே போல், கடன் ஒடுக்க நடவடிக்கைகளால் பாதிக்கப்பட்ட துறைகளைத் தெரிந்தெடுத்து, அவைகளுக்கு மலிவான வீலையில் கடன் கிடைக்கச் செய்வது மைய வங்கியின் பொறுப்பாகும். இதன்படி எந்தெந்தத் துறைகளுக்குச் சலுகைகள் காட்டப்பட வேண்டும், எந்த அளவுக்குக் கடன் கொடுக்கப்பட வேண்டும் என்று அவ்வப் போது வணிக வங்கிகளுக்கு ரிசர்வ் வங்கி ஆணைகளும், அறிவுரை களும் பிறப்பிக்கின்றது. எந்தெந்தப் பகுதிகளில் கடன் அளிப்பு மிகையாக இருக்கின்றதோ அதைத் தடுத்து நிறுத்துவதற்காகத் தான் தேர்ந்தெடுக்கப்பட்ட கடன் கட்டுப்பாட்டு முறை கையாளப்படுகிறது; அதே போழ்து, சலுகை காட்டப்பட்ட துறை பாதிக்கப்படாமல் இருப்பதற்கும் வழிவகை செய்யப்படுகிறது. காலத்திற்கும் சூழ்நிலைகளுக்கும் ஏற்றாற்போல், தேர்ந்தெடுக்கப் பெற்ற கடன் கட்டுப்பாட்டு முறை கடைப்பிடிக்கப்படுகிறது. 1972–73ல் உணவுப்பொருள், எண்ணெய் வித்து மற்றும் எண்ணெய்ப் பொருள்களின் அளிப்பும் விலையும் கிராக்கியாக இருந்தபோது அவைகளை ஈடாகப் பெற்றுக்கொண்டு கடன் அளிப்புச் செய்தல் கூடாது என்று வணிக வங்கிகளுக்கு ரிசர்வ் வங்கி ஆணை பிறப்பித்தது. அதே சமயத்தில், பருத்திப் பொருள் களின்மீதிருந்த கடன் கட்டுப்பாட்டு விதிகள் அப்பொருள்களின் அளிப்பு மிகையானதால் தளர்த்தப்பட்டன.

வளர்ச்சி நிதி நிறுவனங்கள் (Devolopement financing agencies):

கடன் அளிப்புச் செய்வதில் வணிக வங்கிகளோடு கூட்டுறவு வங்கிகளும், பிற நிதி நிறுவனங்களும் பங்குவகிக்கின்றன. தொழிற் துறைக்காக (Industrial Section) நாடு அளவிலும், மாநில அளவிலும் நிதிக் கூட்டுறுக்கள் (Finance Corporation) நிறுவப் பட்டுள்ளன. ரிசர்வ் வங்கியின் துணை வங்கியான 'தொழில் வளர்ச்சி வங்கி' (Industrial devolopement Bank) ஏனைய தொழில் வங்கிகளுக்கும், நிறுவனங்களுக்கும் தலைமை (apex) வங்கியாகச் செயற்படுகிறது. தொழில் வளர்ச்சி வங்கியை வளப்படுத்துவதற் காகவும், ரிசர்வ் வங்கியின் சுமைப்பளுவைக் குறைப்பதற் காகவும் தொழில் வளர்ச்சி வங்கி தனித்தியங்க இந்திய அரசு அனுமதி கொடுக்க முடிவு செய்துள்ளது. தொழில் நிறுவனங் களுக்கு நிதிவசதி அளிப்பதும், நிதி நிறுவனங்களை ஒருங்கிணைச் செய்வதும் அவ்வங்கியின் தலையான பணியாகும் வேளாண் மையை எடுத்துக்கொண்டால், மாநிலக் கூட்டுறவு வங்கிகளும், தேசிய வேளாண்மைக் கடன் நடவடிக்கை நிதியும் (National Agricultural credit operation Fund) உள்ளன.

தொழில் நிதிக் கூட்டுரு (Industrial Finance corporation) மாநில நிதிக் கூட்டுருக்கள் (State Finance corporations) மற்றும் இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கி (Industrial Devolopement Bank of India) ஆகியவைகளுக்கு ரிசர்வ் வங்கி அளித்த நெடுங்கால, மத்தியகால (Medium term) மற்றும் குறுங்காலக் கடன்கள் அட்டவணை 5-ல் கொடுக்கப்பட்டுள்ளன.

மாநிலக் கூட்டுறவு வங்கிகளுக்கு அளிக்கப்பட்ட குறுங்காலக் கடனும், தேசிய வேளாண்மைக் கடன் நிதிக்கு அளிக்கப்பட்ட மற்றும் நெடுங்காலக் கடனும் அட்டவணையில் 6, 7-ல் கொடுக்கப்பட்டுள்ளன :—

அரசு மற்றும் வணிகத் துறைகளுக்குக் கடன் அளித்தல் :

அரசுத் துறைக்குப், வாணிகத் துறைக்கும், வங்கியின் அந்நியச் செலாவணிச் சொத்துகளுக்கும் (Foreign Exchange assets of the banking) இந்திய ரிசர்வ் வங்கி கடனுதவி அளித்து வருகிறது. 1961ஆம் ஆண்டு மார்ச் 31-ல் ரிசர்வ் வங்கி அரசுத் துறைக்கு அளித்த கடன் ரூ 1897 கோடியாக இருந்தது; இந்தத் தொகை 1966-ல் ரூ. 2958 கோடிக்கும், 1973-ல் ரூ. 5·494 கோடிக்கும் உயர்ந்துள்ளது. இதிலிருந்து அறிவ தென்னவென்றால் ரிசர்வ் வங்கி அரசுக்கு அளித்த கடன் படிப்படியாக உயர்ந்துள்ளது என்பதாகும். அரசு பெற்ற நிகர வங்கிக் கடனை ஒட்டுமொத்தமாக ஏற்றுக்கொண்டால் ரிசர்வ் வங்கியின் பங்குமட்டும் 1961-ல் 76·2 சத வீதமும், 1966-ல் 77·6 சத வீதமும், 1973-ல் 70·9 சத வீதமுமாகும்.

1961-ல் வாணிகத்துறைக்கு ரிசர்வ் வங்கி ரூ. 9 கோடி கடன் அளித்துள்ளது. இது மொத்த வங்கிக் கடனில் 2·2 சத வீதமாகும். 1966-ல் ரூ. 47 கோடியும் (4·5%), 1973-ல் ரூ. 5·494 கோடியும் (10·5%) கடன் அளிக்கப்பட்டுள்ளன

1966-ல் நிகர அந்நியச் செலாவணிச் சொத்துகள் மதிப்பு ரூ. 59 கோடியாகும். இந்தத் தொகை வங்கித்துறையின் நிகர அந்நியச் செலாவணிச் சொத்துகளின் மதிப்பில் 83 சதவீத மாகும். 1973-ல் அச் சொத்துகளின் மதிப்பு ரூ. 551 கோடி யாகும். சதவீதப் பங்கு 97·8 ஆகும்.

மேற்கண்டவைகளை முழுமையாக நோக்கினால், அரசுக் கடன், வணிகக் கடன் மற்றும் அந்நியச் செலாவணிச் சொத்து களைச் சேர்த்தல் ஆகியவைகளுக்கு ரிசர்வ் வங்கியின் கைங்கரியம் (contribution) குறிப்பிடத்தக்க அளவுக்கு மிகுந்துள்ளது தெரியவரும்.

இந்திய ரிசர்வ் வங்கியும் தொழில் நிதி அளிப்பும்

அட்டவணை 5.

(ரூபாய் இலட்சத்தில்)

ஆண்டு முடிவில்	தொழில்நிதிக்கூட்டுறுவுக்கு அளித்த கடன்			மாதில நிதிக் கூட்டுருக்களுக்கு அளித்த கடன்				இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கிக்கு அளித்த கடன்		
	நெடுங்காலம்		மத்திய காலம்	நெடுங்காலம்		மத்திய காலம்	குறுங் காலம்	பங்குகள்	பத்திரங்கள்	மற்றவைகள்
	பங்குகள்	பத்திரங்கள்		பங்குகள்	பத்திரங்கள்					
1960—61	103	200	51	235	—	—	13	—	—	—
1965—66	—	220	82	243	21	77	52	1000	—	309
1969—70	—	220	—	243	18	222	29	2000	—	627
1970—71	—	220	166	243	18	172	71	3000	—	2984
1971 - 72	—	220	205	243	2	443	42	4000	—	7833
1972—73	—	220	—	243	—	388	42	5000	—	9527
March 1972	—	—	205	—	—	443	42	—	—	—
April 1972	—	—	295	—	—	496	50	—	—	—
May 1972	—	—	9	—	—	517	69	—	—	—
June 1972	—	—	168	—	—	529	53	—	—	—
July 1972	—	—	3	—	—	537	54	—	—	—
August 1972	—	—	—	—	—	488	70	—	—	—
Sep. 1972	—	—	62	—	—	242	42	—	—	—
Oct. 1972	—	—	—	—	—	267	61	—	—	—
Nov. 1972	—	—	57	—	—	264	37	—	—	—
Dec. 1972	—	—	—	—	—	341	56	—	—	—
Jan. 1973	—	—	—	—	—	406	58	—	—	—
Feb. 1973	—	—	—	—	—	265	20	—	—	—
Mar. 1973	—	—	—	—	—	388	42	—	—	—

இந்திய ரிசர்வ் வங்கியும் கூட்டுறவுக் கடனும்

அட்டவணை 6. (ரூபாய் இலட்சத்தில்)

மாநிலக் கூட்டுறவு வங்கிகளுக்குக் குறுங்காலக் கடன்

ஆண்டு	பருவ வேளாண்மை நடவடிக்கைகள்		கைத்தறி நெசவாளர்களின் சங்கங்கள்				வேளாண்மை சாரா நோக்கங்களுக்காக								
			பருத்தி உட்பட தானியங்கள்		இரசாயன உரம் வாங்கி வழங்கப் பட்டவை		தறிநூல் கொள்முதல்		உற்பத்தி மற்றும் சந்தையிடல் தொழிலக ஏஜென்சித் தொகுதிகள்		பொதுவான வங்கிய நோக்கங்கள்		(சர்க்கரைக்கு ஈடாக) கூட்டுறவுக் கரும்பாலைகளுக்கு	
	தொகை எடுக்கப் பட்டவை	நிலுவைகள்	தொகை எடுக்கப் பட்டவை	நிலுவைகள்	தொகை எடுக்கப் பட்டவை	நிலுவைகள்	தொகை எடுக்கப் பட்டவை	நிலுவைகள்	தொகை எடுக்கப் பட்டவை	நிலுவைகள்	தொகை எடுக்கப் பட்டவை	நிலுவைகள்	தொகை எடுக்கப் பட்டவை	நிலுவைகள்	தொகை எடுக்கப் பட்டவை	நிலுவைகள்
	1	2	3	4	5	6	7	8	9	10	11	12	13	14	15	16
1960-61	13166	7914	—	—	—	—	42	12	240	241	—	—	319	9	—	—
1965-66	24937	14472	—	—	—	—	311	39	555	557	—	—	3723	—	—	—
1969-70	41667	23482	710	490	3752	959	11	6	949	642	—	—	2130	33	—	—
1970-71	41320	26538	779	344	1127	172	4	3	1236	783	2	2	2024	—	—	—
1971-72	48267	25106	1279	734	2304	286	14	—	1491	952	59	33	1413	58	792	—
1972-73	54984	23728	9538	1220	750	—	8	3	913	773	30	11	1281	—	—	—

தேசிய வேளாண்மைக் கடன் (நெடுங்கால நடவடிக்கைகள்) நிதி

அட்டவணை 7.

(ரூபாய் இலட்சத்தில்)

ஆண்டு	மாநிலக் கூட்டுறவு வங்கிகளுக்குக் குறுங்காலக் கடனை மத்திய காலக் கடனுக மாற்றுதல்				மாநிலக் கூட்டுறவு வங்கிகளுக்கு மத்திய காலக் கடன்				கூட்டுறவுச் சங்கங்களில் பங்கு மூல தனத்தில் டங்கு பெற மாநிலங்களுக்கு நெடுங்காலக் கடன்		நில அடைமான வங்கிகளின் கிராமியக் கடன் பத்திரங்கள்		நில அடைமான வங்கிகளின் சாதாரணக் கடன் பத்திரங்கள்	
	அரசு மற்றும் ஏனைய நம்பகப் பத்திரங்களின் அடைமானம் பேரில்		தேசிய வேளாண்மைக் கடன் (நிலை பேராக்க) நிதி யிலிருந்து		வேளாண்மைக்காக		கூட்டுறவு கரும்பாலைகளில் பங்குகள் வாங்க							
	தொகை எடுக்கப் பட்டவை	நிலுவைகள்	தொகை எடுக்கப் பட்டவை	நிலுவைகள்	தொகை எடுக்கப் பட்டவை	நிலுவைகள்	தொகை எடுக்கப் பட்டவை	நிலுவைகள்	தொகை எடுக்கப் பட்டவை	நிலுவைகள்	கொள் முதல்	நிலுவைகள்	கொள் முதல்	நிலுவைகள்
1960-61	—	—	—	—	468	763	—	—	275	1995	33	107	3	67
1965-66	—	—	—	—	706	1165	—	—	253	2941	129	548	450	1545
1969-70	152	19	448	521	952	1410	—	8	680	3383	94	950	420	2784
1970-71	253	170	365	435	1483	1948	37	43	1249	4193	18	959	419	3192
1971-72	754	705	2602	2145	1415	2291	25	68	1414	5134	133	1064	441	3626
1972-73	648	905	2075	2845	832	2134	79	120	1869	6555	88	1125	276	3261

18. வணிக வங்கியும் பண அளிப்பும்

'வங்கி' என்ற சொல் 'பாங்கோ' (Bango) எனும் இத்தாலியச் சொல்லிலிருந்து வந்திருக்கலாமென்று கூறப்படுகிறது. 'பாங்கோ' என்றால் 'நீண்ட மர இருக்கை' (Bench) எனப் பொருள்படும். லாம்பார்டில் (Lombardy) தொடக்கத்தில், கடும் வட்டி வாங்கும் யூத வங்கியர்கள் (Jews) நீண்ட மர இருக்கைகளில் அமர்ந்து லேவாதேவி நடத்தியிருக்கிறார்கள். ஒரு வங்கியர் நொடிப்பு நிலையை அடைந்தால் (Bankruptey) அவரது மர இருக்கை உடைக்கப்படும்.

'பொதுக் கடன்' அல்லது 'மான்டே' (Monte) நடவடிக்கை களே மேலாண்மையிட இத்தாலிய வங்கிகளில் முதன் முதலில் 'வெனிஸ் வங்கி' (Bank of Venice) உருவாகியது.[1] பாபிலோனி யர்கள் கி.மு. 2000 ஆண்டுகளுக்கு முன்னமேயே கோவில்களில் கடன் கொடுத்தல், வாங்கல் பேரங்களில் ஈடுபட்டிருக்கின்றனர். வட்டிக்குக் கடன் கொடுக்கின்ற தொழிலைக் கிரேக்கர்களும், உரோமர்களும் மேற்கொண்டிருந்ததற்குச் சான்றுகள் உள்ளன.

வங்கி முறைக்கு முன்னோடிகளாக வணிகர்கள், வட்டிக்குக் கடன் கொடுப்போர், பொற்கொல்லர்கள் ஆகிய மூவகையினரும் விளங்கினர் என கிரெளதர் கருதுகின்றார். முதலாவதாக, வணிகர்கள் வாணிபத்திற்கு ஏதுவாகப் பணத்தை ஓரிடத்திலிருந்து வேறிடத்திற்குக் கொண்டுசெல்ல நன்மதிப்புள்ள செல்வந்தர்கள் அளித்த ரசீதுகளையோ, சான்றிதழ்களையோ எடுத்துச் சென்றனர். பணம் கொண்டுசெல்வோர் செல்வந்தர் களிடம் அப் பணத்தைக் கொடுத்துவிட்டு இரசீதுகளைப் பெற்றுக் கொண்டனர். இந்த இரசீதுகள் பணத்தின் பணிகளைச் செய்தன. இரசீதோ, சான்றிதழோ அளித்தவர்கள்தான் ஆரம்ப வங்கியாளர்களாவர். இரண்டாவதாக, கடன் கொடுக்கும் லேவாதேவிக்காரர்கள் இன்றைய நாளில் வணிக வங்கிகள் செய்யும் பணிகளைப் பழங்காலத்திலேயே செய்திருக்கிறார்கள். மூன்றாவதாக, பொற்கொல்லர்கள் வங்கி முறை அமைப்புக்கு முன்னோடியாக விளங்கியிருக்கின்றனர். பொற்கொல்லர்கள்

[1] R. W. JONES, 'Thomson's Dictionary of Banking', London, P. 53.

செல்வந்தர்களாக இருந்ததால் பாதுகாப்பிற்காக மக்கள் தங்களின் பொன், அணிகலன்கள் போன்றவைகளை அவர்களிடம் கொடுத்து வைத்தனர். பொற்கொல்லர்கள், தாங்கள் அவைகளைப் பெற்றுக்கொண்டதற்கு இரசீது அளித்து வந்தனர். இத்தகைய இரசீதுகள் நாளடைவில் பணம் போல் புழங்கப்பட்டன. மேலும் பொன், வெள்ளியைப் பொற்கொல்லரிடம் ஒப்படைத்தவர் வேறொருவருக்குப் பணம் தரவேண்டியிருந்தால் அவருக்குப் பொற்கொல்லர் கொடுத்த இரசீதையும், பொற்கொல்லருக்கு ஒரு கடிதத்தையும் கொடுத்தால், மற்றவர் நேரில் சென்று பொற்கொல்லரிடம் கடிதத்தையும் இரசீதையும் கொடுத்துப் பணத்தையோ, பொன் வெள்ளியையோ பெற்றுக் கொள்ளலாம்.

இன்றைய காசோலை முறைக்கு முன்னோடியாக இருந்தது பொற்கொல்லர்கள் கொடுத்த இரசீதுதான். பொன் வெள்ளியைப் பெற்றுக்கொண்டது போல் பணத்தையும் அப்பொற்கொல்லர்கள் பெற்றுக்கொண்டு இரசீது வழங்கினர். இந்த இரசீதுகளும் மாற்றுமுறைத் தன்மை (Negotiable) கொண்டவைகளாகும். பணம் கொடுத்தவர்களில் பெரும்பாலோர் அடிக்கடி பணத்தை தரும்படி கோரிக்கை விடமாட்டார்கள். எனவே, பொற்கொல்லர்கள் தங்களிடம் எப்போதும் மிகுதியாகப் பணம் இருந்ததைக் கண்டு, அவ்வப்போது கடன் வேண்டுவோருக்கு ஒரு குறிப்பிட்ட தொகையை அளித்தும் திரும்பப் பெற்றும் வட்டி என்ற வீதத்தில் இலாபம் ஈட்டி வந்தனர். இப்படியாக, பொற்கொல்லர்கள் உபரி ரொக்க இருப்பின் அடிப்படையில் கடன் அளித்து வந்திருக்கிறார்கள். இன்று வங்கிகள் தங்களிடமுள்ள முதனிலை வைப்புகளுக்கும் (Primary desposits) அதிகமாகக் கடன் ஆக்கம் (credit creation) செய்வதற்கும் முன்னோடியாகப் பொற்கொல்லர்களின் பணி இருந்தது குறிப்பிடத்தக்கதாகும்.

ஒவ்வொரு நாட்டின் தேவைகளுக்கும், சூழ்நிலைகளுக்கும் ஏற்றாற்போல் வங்கி முறை படிப்படியாக வளர்ந்திருக்கின்றது. வங்கிகளின் பணிகளும் விரிவடைந்திருக்கின்றன. வங்கிகள் செய்யும் பணிகளைக்கொண்டு 'வங்கி' என்ற சொல்லுக்குப் பல அறிஞர்கள் இலக்கணம் கூறியுள்ளனர். பல அறிஞர்களின் விளக்கத்தைப்பற்றியும், இறுதியில் (இந்திய) 'வங்கிய ஒழுங்காற்றுச் சட்டம்' (Banking Regulation Act) தந்தளித்த இலக்கணத்தைப்பற்றியும் இங்கு அறிவோம். 'பணத்தை வைத்திருப்பதற்காகவும், வாடிக்கையாளரின் ஆணைக்கேற்ப அதைத் திருப்பிக் கொடுப்பதற்காகவும் உள்ள நிறுவனமே (Establishment) வங்கியாகும்,' என ஆக்ஸ்ஃபோர்டு அகராதி, விளக்கம்

தருகிறது. வால்டர் லீஃப் (Walter Leaf) என்பார், வங்கியை, 'காசோலை மூலம் கேட்கின்ற பொழுது செலுத்த வேண்டிய வைப்புகளைப் பொதுமக்களிடமிருந்து பெறுவதற்காக இருக்கின்ற ஒரு மனிதர் அல்லது நிறுவனம்' என்று விளக்குகின்றார். பெரும்பாலும் அனைத்து நடவடிக்கைகளுமே காசோலை மூலம் நடைபெறும் அமெரிக்கா, இங்கிலாந்து போன்ற நாடுகளுக்கு வேண்டுமானால் இந்த விளக்கம் பொருத்தமானதாக இருக்கும். நம் நாடு போன்ற பின்தங்கிய நாடுகளில் பல காரணங்களால் காசோலை இன்னும் மிகுதியான அளவிற்குப் புழக்கத்திற்கு வரவில்லையாதலால் அவ்விளக்கம் பொருத்தமானதாக அமையவில்லை.

'(1) வைப்புக் கணக்குகளைப் பெறுதல்; (2) நடப்புக்கணக்குகளை வைத்தல்; (3) காசோலைகளைக் கொடுத்தல், செலுத்தல் மற்றும் (4) வாடிக்கைக்காரர்களுக்காகக் கீறலிட்ட (crossed), கீறலிடாத, காசோலைகளுக்குப் பணம் வசூலித்தல் ஆகியவற்றைச் செய்யாத ஆளோ, நிறுவனமோ, மற்றவையோ வங்கியாளராக முடியாதென்பது சரியாக உய்த்துணர்தலாகும்,'' என்று ஸர் ஜான் பேஜட் (Sir John Paget) கூறுகின்றார். இவ்விளக்கத்தில் ஒரு வங்கியின் தலையான பணிகள் குறிப்பிடப்பட்டிருந்தாலும், துணைப்பணிகள் குறிப்பிடப்படவில்லை. 'பணத்தில் வாணிபம் செய்வது ஒன்றே வங்கிகளின் தொழில் அன்று; வங்கிகள் பணத்தை உற்பத்தி செய்யும் நிறுவனங்களாகவும் திகழ்கின்றன' என்று ஆர். எஸ். சேயர்ஸ் (R. S. Sayers) குறிப்பிடுகின்றார். இவ்விளக்கமும் ஒரு நிறைவற்ற விளக்கமாகும்.

'வங்கிய ஒழுங்காற்றுச் சட்டம், 1949' வங்கித் தொழிலைப் 'பொது மக்களிடமிருந்து வைப்புகளைக் கடன் கொடுப்பதற்காகவும் அல்லது முதலீடு செய்வதற்காகவும் ஏற்றுக்கொள்ளுதலும், கேட்டவுடன் அல்லது வேறு முறையில் திருப்பிக் கொடுத்தலும் காசோலை, ஆணைச்சீட்டு (Draft), ஆணை அல்லது வேறு வழி மூலமோ எடுக்கக்கூடியதாகவும் இருத்தல் ஆகும்' என்று விளக்குகிறது. இவ்விளக்கத்தில் அவ்வளவு நிறைவு இல்லையென்றாலும், நாம் இன்றுவரை அதைத்தான் ஏற்றுக்கொண்டுள்ளோம்.

இதுவரை கண்ட வங்கிய வரலாறு, வங்கிய இலக்கணம் ஆகியவற்றிலிருந்து வங்கிகளின், குறிப்பாக, வணிக வங்கிகளின் பணிகளைப் பின் வருமாறு தொகுத்துக் கூறலாம் :—

வணிக வங்கிகளின் பணிகளை இரு வகைகளாகப் பிரிக்கலாம். ஒன்று, முதன்மைப் பணிகள் (Primary Functions); மற்

. ருென்று, துணைப்பணிகள் (Subsidiary Functions). ஒவ்வொன்றைப்பற்றியும் சுருக்கமாக விவரிக்கலாம் :

முதன்மைப் பணிகள் :

பொதுமக்களிடமிருந்தும், நிறுவனங்களிடமிருந்தும் வைப்புகளைப் பெறுவதும் நிதியினைக் கடன் வடிவில் வழங்குவதும் வணிக வங்கிகளின் முதன்மைப் பணிகளில் அடங்கும்.

வைப்புகள் என்பன சேமிப்புகளிலிருந்து உருவானவையாகும். மக்கள் தாங்கள் சேமித்த பணத்தை வங்கியில் இடுவதால் வட்டி என்ற வடிவில் இலாபம் அடைகின்றனர். வங்கியும், பெற்ற பணத்தை அப்படியே வைத்திராமல் வேண்டுவோருக்கு வட்டிக்காகக் கடன் அளித்து வருகின்றது. வைப்பின் வட்டிவீதம் கடன் அளிப்பு வட்டி வீதத்தைவிடக் குறைவாகவே இருக்கும். அப்போதுதான் வங்கிக்கு இலாபம் கிடைக்கும். வைப்புக் கணக்குகளில் பல வகைகள் உண்டு. அவை 'நடப்புக் கணக்கு' (Current Account)அல்லது 'தேவை வைப்பு' (Demand Deposit), சேமிப்புக் கணக்கு (Savings Account), 'நிலை' அல்லது 'தவணை வைப்பு' (Fixed Deposit), 'தொடர்' (Recurring) அல்லது 'வளர் வைப்பு' (cumulative Deposit) போன்றவைகளாகும். ஏனைய வைப்புக் கணக்குகளில் அளிக்கப்படும் வட்டி வீதத்தைவிட நடப்புக் கணக்கின் வட்டி வீதம் மிகமிகக் குறைவே. வணிகர்களுக்கு மிகவும் உகந்தது நடப்புக் கணக்கேயாகும். தேவையுள்ளபோது தேவையான பணத்தை (கணக்கில் 'வரவு' இருப்பு இருந்தால்) வாடிக்கையாளர்கள் வங்கியிலிருந்து எடுத்துக்கொள்ளலாம்.

இரண்டாவதாக, வங்கியின் முக்கியப்பணி, தொழில் வாணிப நிறுவனங்களுக்கும், வேளாண்மைக்கும் கடன் கொடுப்பதாகும். வைப்புகள் முழுவதும் வைப்பாளர்களால் ஒரே நேரத்தில் எடுக்கப்படமாட்டாதாதலால் ஒரு குறிப்பிட்ட பகுதியைக் கடனுக்குக் கடன் வேண்டுவோருக்கு அளிக்கின்றது. அப்படிச் செய்வதால் கடனுளியின் தேவையும் நிறைவு செய்யப்படுகிறது; வங்கிக்கு வட்டியும் கிடைக்கின்றது. கடன் பெற்றோர் கடன் தொகை முழுவதையும் எடுத்துச் செல்லாமல் வங்கியிலேயே அவரவர் கணக்கில் எஞ்சிய தொகையை விட்டு வைக்கின்றனர். காசோலையின் மூலமே தங்கள் பேரங்களை நடத்துகின்றனர். இவ்வாறு கடன் அளிப்பின் மூலம் வைப்புகளை வங்கியர்கள் பெருக்குகின்றனர். இதைத்தான் வங்கிகளின் 'கடனுக்கம்' அல்லது 'பண உற்பத்தி' (Credit (money) creation) என்றழைக்கிறோம். (இதைப்பற்றிப் பின் விரிவாகக் காண்போம்.)

பொதுவாகக் கடன்கள் இருவகைகளில் வழங்கப்படுகின்றன. நிறுவனம் அல்லது தனி மனிதனின் நம்பிக்கையின்மீது எந்த விதப் பிணையுமில்லாமல் கடன் வழங்கப்படுவது முதல் வகையாகும். இதற்குப் 'பிணையமற்ற கடன்' (unsecured Loan) எனப் பெயர். இரண்டாவது வகையில், ஒரு பொருளின் அடிப்படையில் சரக்கு, பொன், வெள்ளி போன்றவைமீது—கடன் அளிக்கப்படுவதாகும். இதற்குப் 'பிணையக்கடன்கள்' (Secured Loans) எனப் பெயர். கடன்கள் மேலும் இரு முறைகளில் அளிக்கப்படுகின்றன. ஒன்று, 'மேல்வரைப்பற்று' (overdraft) முறை. மற்றொன்று, 'ரொக்கக் கடன்' (cash-credit) முறை. 'மேல்வரைப்பற்று' முறையில் வாடிக்கையாளரின் கணக்கில் உள்ள தொகைக்கு (வரவு) மேல் ஒரு குறிப்பிட்ட அளவு வரை தொகையை எடுக்க அனுமதிக்கப்படுவதாகும். அந்தக் குறிப்பிட்ட தொகைக்குள் எவ்வளவு தொகை உண்மையிலேயே வாடிக்கையாளரால் பயன்படுத்தப்படுகிறதோ அந்தத் தொகைக்கு மட்டுந்தான் வங்கி வட்டியை வசூலிக்கும். 'ரொக்கக்கடன்' முறையிலும் ஒரு குறிப்பிட்ட அளவு கடன் பெற அனுமதிக்கப்படுகிறது. ஆனால், ஒரு தடவை அத்தொகை முழுவதும் பயன்படுத்தப்பட்டுத் திரும்ப அத்தொகை செலுத்தப்பட்டாலும், மீண்டும் அக்குறிப்பிட்ட தொகையைக் கடனாக அடைய முடியாது. திரும்பவும் அக்கடன்வசதி பெறவேண்டுமானால் மீண்டும் வங்கியருக்கும், வாடிக்கையாளருக்கும் ஒப்பந்தம் ஏற்படவேண்டும். கடன் வசதி அளிக்கப்பெற்ற தொகை முழுவதும் பயன்படுத்தப்பட்டாலும், பயன்படுத்தப்படாவிட்டாலும் வட்டி முழுத் தொகைக்கும் செலுத்தப்பட வேண்டும்.

வணிக வங்கியின் மூன்றாவது முக்கியப் பணி, மாற்றுச் சீட்டுக்குக் கழிவு செய்து பணம் தருவதாகும். (இதைப்பற்றி 'பணச்சந்தை' என்ற அத்தியாயத்தில் விரிவாக விளக்கப்பட்டுள்ளது.)

நான்காவதாக, பணத்தைக் கைமாற்றுகின்ற பணியையும் வணிக வங்கி செய்கின்றது. குறைந்த செலவில், பணத்தை ஓரிடத்திலிருந்து வேறு இடத்திற்கு அனுப்ப 'வங்கிப் பணவிடை' (Bank draft) அளிக்கப்படுகின்றது.

ஐந்தாவதாக, 'காசோலை முறை' (Cheque System) நன்கு பின்பற்றப்படுவதற்கு வங்கிகள் பெரிதும் துணைபுரிகின்றன. காசோலை முறையின் வளர்ச்சி வாணிப வளர்ச்சிக்கு வித்தாகும்.

துணைப்பணிகள் :— முதன்மைப் பணிகள் மட்டுமல்லாமல் வேறு பல துணைப்பணிகளையும் வாடிக்கையாளர்களுக்காக வணிக வங்கிகள் மேற்கொண்டிருக்கின்றன. அத் துணைப்பணிகளையும் இருவகையாகப் பிரிக்கலாம். ஒன்று, முகமைப் பணிகள் (Agency Services). மற்றொன்று, 'பொதுப் பயன்பாட்டுப் பணிகள்' (General utility Services.) இவைகளைப் பின் வருமாறு விளக்கலாம்.

முகமைப்பணிகள் :- வங்கியரின் முகமைப்பணிகள் பின் வருவன வாகும் :—

(1) பிற துறைகளிலிருந்து வாடிக்கையாளர்களுக்கு வர வேண்டிய 'பங்காதாயம்' (Dividend), வட்டி ஆகியவற்றை வசூலித்தல். இதேபோல், வாடிக்கையாளர்களின் பங்கு, கடன் பத்திரங்களை உரிய காலத்தில் கொடுத்து, அவற்றிற்கு வர வேண்டிய பணத்தை வசூலித்தல். இப்பணிகளைச் செய்வதற்கு வங்கியர்கள் சிறிதளவு கட்டணம்(Commission) வாடிக்கையாளர் களிடமிருந்து பெறுகின்றனர்.

(2) வாடிக்கையாளர்களின் கோரிக்கைக்கிணங்க, அவர் களுக்காக 'ஆயுள் காப்பீட்டுத் தவணைப்பணம்,' சங்கங்களுக்கான கட்டணம் போன்றவற்றை அவ்வப்போது செலுத்துதல்.

(3) 'தபால் மூல மாற்றம்' அல்லது 'தந்தி வழி மாற்றம்' முறைப்படி, பணம் ஓரிடத்திலிருந்து வேறிடத்திற்கு வாடிக்கை யாளர்களுக்காக அனுப்புதல். 'பண விடை' வசதிகளையும் அளித்தல்.

(4) வாடிக்கையாளர்கள் கோரினால், அவர்கள் சொத்து களுக்குப் 'பொறுப்பாளராக' (Trustee) இருத்தல்; நிலம் குத்தகைக்கு விடுதல், சொத்துகளைக் கவனித்துக்கொள்ளுதல் போன்ற பணிகளை மேற்கொள்ளுதல்; வாடிக்கையாளர்களின் விருப்பப்படி அவர்களின் உயிலை நிறைவேற்றுபவர்களாகச் (Execution) செயற்படுதல்.

பொதுப் பயன்பாட்டுப் பணிகள் :

(1) விலையுயர்ந்த பொருள்களையும் பத்திரங்களையும் பாது காப்புக்காகப் பெற்று வைத்திருத்தல்;

(2) இரு வணிகர்களுக்கிடையே வாணிப உறவு ஏற்படவும், வாணிப வளர்ச்சியடையவும் துணைபுரிதல். சரக்கு விற்போர் இடாப்புகளையும் ஏனைய ஆவணங்களையும் வங்கிமூலம் அனுப்பு

கின்றனர். சரக்கு வாங்குவோர் தேவையான தொகையை வங்கியில் செலுத்தி, அந்த ஆவணங்களைப் பெற்று, சரக்குகளைப் போக்குவரத்து நிறுவனங்களிலிருந்து அடைகின்றனர். மேலும், மாற்றுச் சீட்டுகள் கழிவு செய்யப்படுவதன் மூலம் தேவையான பணம் வணிகர்களுக்குக் கிடைப்பதால் வாணிபம் தடையின்றி வளர முடியும்.

(3) வாணிப நிறுவனங்கள் பற்றியும், அங்காடி நிலவரங்கள் பற்றியும் செய்திகளையும் புள்ளி விவரங்களையும் சேகரித்து அவ்வப்போது வாடிக்கையாளர்களுக்கு அளித்தல்;

(4) வாடிக்கையாளர்களின் வாணிபத் தொடர்பு வளர்ச்சி பெற அவர்களின் நிதிநிலைமை போன்றவற்றை உறுதிப்படுத்தித் தேவையுள்ளோருக்குச் சான்றுக் கடிதம் வழங்குதல்.

(5) பல நிறுவனங்களின் பங்குகள் மற்றும் கடன் பத்திரங்கள் விற்பதற்கு 'ஒப்புறுதியாளர்களாக' (underwriters) விளங்குதல்.

இப்படியாகப் பல பணிகளை வணிக வங்கிகள் செய்வதனால் நாட்டின் பொருளாதார வளர்ச்சி மேம்பட்டு ஓங்குகின்றது.

வங்கிய முறை (Banking system)[2] :

நமது நாட்டின் வங்கி முறையைப்பற்றிச் சிறிது காண்போம். 1974-க்கு முன் உள்ள ஆண்டுகளை ஒப்பிடும்போது, 1974-ல் கடன் தேவை மிகுதியாகவும், வைப்புகளின் வளர்ச்சி குறைவாகவும் இருந்தன. கடன் தேவை அவ்வாண்டு முழுவதும் மிகுதியாக இருந்தாலும் கடன் கட்டுப்பாட்டு முறைகள் தீவிரப்படுத்தப்பட்டதால் போதுமான அளவு கடன் அளிக்கப்படவில்லை. அட்டவணையில் கண்ட வணிக வங்கிகளின் (Scheduled Commercial Banks) வைப்பின் குவிப்பு (Deposit accretion) 1973-ல் 20 சதவீதமாக இருந்தது. 1974-ல் 12·8 சதவீதமாகக் குறைந்தது. 1973-ல் கடன் விரிவாக்கம் 26·8 சதவீதமாக இருந்தது. 1974-ல் 12·1 சதவீதத்திற்கு வந்துவிட்டது. 1974-ல் அரசுப் பிணையங்களில் அதிகமாக முதலீடு செய்தது ரூ. 314 கோடியாகும். ஆனால், அவ்வதிகம் 1973-ல் ரூ. 228 கோடியாக இருந்தது.

வைப்புகளின் வளர்ச்சி :

1973-ல் அட்டவணையில் கண்ட வங்கிகளின் மொத்த வைப்புகள் ரூ. 1760 கோடி அதிகரித்துள்ளது. ஆனால், 1974-ல்

[2] State Bank of India, Annual report, 1974.

ரூ. 1299 கோடிதான் அதிகரித்திருக்கிறது. (1974, டிசம்பர் முடிய மொத்த வைப்புகள் ரூ. 11440 கோடியாக இருந்தன என்பது கவனிக்கத்தக்கதாகும்.) பண அளிப்பு அதிகரிப்புக் குறைந்ததாலும், பொருளாதாரத்தில் வீக்கநிலை ஏற்பட்டதால் மக்களின் சேமிப்புச் சக்தி குறைந்ததாலும், கூலி மற்றும் கிராக்கிப்படி உயர்வு தடுத்து நிறுத்தப்பட்டதாலும், நிறுமங்களுக்கிடையே போட்டி மனப்பான்மை வளர்ந்ததாலும் வைப்பின் குவிப்பில் அதிவேகம் காணமுடியவில்லை. 1973-ஐவிட 1974-ல் இரண்டு வகையான வைப்புகளின் வளர்ச்சி குறைவுதான். 1973-ல் தேவை வைப்புகள் மற்றும் கால வைப்புகளின் (Demand and Time Deposites) அதிகரிப்பு முறையே ரூ. 647 கோடி மற்றும் ரூ. 1113 கோடியாக இருந்தவை, 1974-ல் முறையே ரூ. 469 கோடி மற்றும் ரூ. 890 கோடியாகக் குறைந்துள்ளன.

கடன் விரிவாக்கம் :

1973ஆம் ஆண்டில் ரூ. 1492 கோடி கடன் விரிவாக்கம் செய்யப்பட்டது; நடப்பு ஆண்டில் ரூ. 852 கோடிதான் கடன் விரிவாக்கம் செய்யப்பட்டிருக்கிறது. கடன் அளிப்பில் குறைவு ஏற்பட்டதற்கு முக்கிய காரணங்கள், ரிசர்வ் வங்கியின் கடன் கட்டுப்பாட்டுமுறைகள் தீவிரமாக்கப்பட்டதும், குறுவைச் சாகுபடி பாதகமாக இருந்ததால் உணவு—தானியக் கொள்முதலுக்கான கடன் அளிப்பு 1973-ல் ரூ. 192 கோடி உயர்ந்திருப்பதுந்தான்; ஆனால், 1974-ல் ரூ. 138 கோடி குறைந்திருக்கிறது. உணவு தானிய மற்ற வேறு வகைத் தானியத்திற்கான கடன் 1973-ல் ரூ. 1300 கோடி அதிகமானது. 1974-ல் ரூ. 900 கோடிதான் அதிகமாகியிருக்கிறது.

கடனுக்கக் கொள்கை (Credit policy) :

பொருளாதாரத்தில் வீக்க நிலை தொடர்ந்து அதிகமாகிக் கொண்டும் உற்பத்தியில் குறைவான வளர்ச்சியும் காணப்படுகிற இச் சூழ்நிலையில், ரிசர்வ் வங்கி வீக்கவாசி மட்டத்தை நிலை பேராக்கம் செய்யும்பொருட்டுக் கடன் கட்டுப்பாட்டு முறைகளைக் கடுமையாக்கியிருக்கிறது. இலகுவாகக் கடன் பெறுவது ஆங்காங்கே கட்டுப்படுத்தப்பட்டிருக்கிறது. கடன் விரிவாக்கம் குறைக்கப்படவேண்டும் என்பதற்காக, மறு நிதி அளிப்பு மற்றும் மறு கழிவு செய்யும் வசதிகள் தெரிந்தெடுக்கப்பட்டவையாகத் தொடர்ந்து இருக்கவேண்டுமென்று, ரிசர்வ் வங்கி, வணிக வங்கிகளுக்கு அறிவிக்கை விடுத்திருக்கிறது. ரிசர்வ் வங்கியிடமிருந்து பற்ற கடன்களைக் குறிப்பிட்ட காலத்திற்குள் திரும்பச் செலுத்தி

விடவேண்டுமென்றும் ரிசர்வ் வங்கி கோரியிருக்கிறது. மேலும், கீழ்க்கண்ட கடனுக்கக் கட்டுப்பாட்டு விதிமுறைகளுக்கு உட்பட்டு நடக்குமாறும் வணிக வங்கிகள் கேட்டுக்கொள்ளப் பட்டிருக்கின்றன.

(1) 1974-ன் மந்த பருவத்தில் (Slack Season) அதிகப் படியான வைப்புகளில் 33-35 சதவீதத்திற்கு மேற்படாமல் கடனளிப்புச் செய்யப்படவேண்டும்; (2) 1974, மேத்திங்கள் முதல் 1975 ஏப்ரல் திங்கள் வரை, அதிகப்படியான வைப்பு களில் பெரும் அளவு 63-65 சதவீதத்திற்குள் கடன் விரிவாக்கம் வரையறை செய்யப்படவேண்டும்; (3) 1975, ஏப்ரல் முடிவில் கடனுக்கத்திற்கும், வைப்புகளுக்கும் உள்ள விகிதம் 71 சதவீதத் திற்கு மேற்படாமல் இருத்தல் வேண்டும்.

வீக்க நிலையைக் கட்டுப்படுத்துவதற்காக 'வங்கிவீதத்தை' (Bank rate) இந்திய ரிசர்வ் வங்கி 7 சதவீதத்திலிருந்து 9 சதவீதத் திற்கு உயர்த்தியிருக்கிறது. இவ்வுயர்வு 1974, ஜூலை 23-லிருந்து நடைமுறையாக்கப்பட்டுள்ளது. சேமிப்பை ஊக்குவிப்பதற் காகவும், கடன் பெறுதலைக் குறைப்பதற்காகவும் வைப்புகளின் வட்டி வீதத்தையும் கடன் அளிப்புக்கான வட்டி வீதத்தையும் வங்கிகள் அவ்வப்போது உயர்த்தியிருக்கின்றன. குறும அளவுக் கடன் அளிப்பு வட்டி வீதம் 11—12·5 சதவீதத்தில் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. ரொக்கக்காப்பு வீதம் 7 சதவீதத் திலிருந்து 4 சதவீதமாகக் குறைக்கப்பட்ட போது, சட்டமுறை நீர்மை வீதம் (Statutary liquidity ratio) 32 சதவீதத்திலிருந்து 33 சதவீதத்திற்கு உயர்த்தப்பட்டுள்ளது. ரிசர்வ் வங்கியிட மிருந்து பெறப்படும் கடன்களுக்கும் வட்டிவீதம் 15 சதவீதத்தி லிருந்து 18 சதவீதத்திற்கு அதிகரிக்கப்பட்டுள்ளது. வணிக வங்கிகள் முதலீடு செய்யும்போது வேளாண்மைத்துறைக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டுமென்றும் ரிசர்வ் வங்கி அறிவுரை வழங்கியுள்ளது. வாணிபம் கூடுதலாக இருக்கும் காலங்களில் (Busy Season) தேவைப்படும் பணத்தை அளிப்பதற் காக மறுநிதி அளிப்பு, மாற்றுச் சீட்டுகளை மறுகழிவு செய்தல், மற்றும் கூடுதலாக்கப்பட்ட ரொக்கக் காப்புகளிலிருந்து ஒரு பகுதியைக் கடனுக அளித்தல் போன்ற உதவிகளை ரிசர்வ் வங்கி அளிக்கிறது.

கிளைகள் விரிவாக்கம் (Branch Expansion) :

1973-ல் வணிக வங்கிகள் 1782 கிளை வங்கிகளைத் திறந்தன; 1974-ல் 1693 கிளைகள் தொடங்கப்பட்டன. இவ் எண்ணிக்கையில் 526 அலுவலகங்கள் (அல்லது 31·1 சதவீதம்)

வங்கிகளே இல்லாத இடங்களில் தொடங்கப்பட்டன. வங்கித் துறையில் வளர்ச்சி குன்றிய மாநிலங்களான அஸ்ஸாம், பீஹார், நாகாலாந்து மற்றும் ஓரிஸ்ஸாவில் வங்கிகளை மேலும் தொடங்குவதற்குக் கவனம் செலுத்தப்பட்டு, வங்கிகளும் தொடங்கப்பட்டு வருகின்றன. பதினான்கு பெரிய வங்கிகள் நாட்டுடைமையாக்கப் பட்டபின், 1969, ஜூனிலிருந்து 1974 முடிய வணிக வங்கிகளின் எண்ணிக்கை முறையே 8262 லிருந்து 18180-க்கு உயர்ந்து இருமடங்காகியுள்ளது. இதன் விளைவாக, மக்கள் தொகையில் 65,000 நபர்களுக்கு ஒரு வங்கி என இருந்தது 30,000 நபர்களுக்கு ஒரு வங்கி என தற்போது இருக்கிறது.

கடனுக்கம் (Credit creation) :

வைப்புகளைப் (Deposits) பெறுவதும், கடன் அளிப்பதும் வணிக வங்கிகளின் தலையான பணிகளாகும். ஆனால், கடன் அளிப்பதில் வணிக வங்கிகளுக்கும் ஏனைய நிதி நிறுவனங்களுக்கும் வேறுபாடு உண்டு. எடுத்துக்காட்டாக, ஒரு காப்பீட்டு நிறுவனம் காப்பீடு பெறுபவர்களிடமிருந்து (Insured) காப்பீட்டு முனைமம் (Insured premium) ரூ. 50,000 பெற்றால், அந்தத் தொகை அளவுக்கோ அதற்குக் குறைவாகவோதான் கடன் வேண்டுவோருக்குக் கடன் அளிக்க முடியும். ஆனால், வணிக வங்கிகள் பெறுவது வைப்புகளாக இருப்பதால் அவைகளைப் பெறக் கூடிய தொகைக்குக் கூடுதலாகவே கடன் ஆக்கம் செய்து கடன் அளிக்க முடிகிறது. கடனுக்கம் செய்யும் சக்தி வணிக வங்கிகளுக்கே உரித்தானதாகையால் அவைகள் ஏனைய நிதி நிறுவனங்களினின்றும் மாறுபடுகின்றன. பெறக்கூடிய வைப்புத் தொகை முழுவதும் வாடிக்கையாளர்களால் ஒரே காலத்தில் திரும்பக் கேட்கப்படமாட்டாதாகையால் மொத்த வைப்புத் தொகையினின்றும் ஒரு குறிப்பிட்ட பகுதியைக் கடனாக ஏட்டளவில் அவ்வங்கிகள் கடன் வேண்டுவோருக்கு அளித்துதவுகின்றன. கடன் பெறுவோரின் கணக்கு வரவு வைக்கப்பட்டாலும், வேண்டும்போது கடனாளி, அத்தொகை அளவுக்குப் பணமாக மாற்றிக்கொள்ளலாம். ஆனால், கடன் அளிக்கப்பெற்ற முழுத் தொகை அளவுக்கும் தேவை ஒரே காலத்தில் ஏற்படாதாதலால் வங்கியர்கள், அவ்வப்போது வைப்பாளர்களின் (Depositors) கோரிக்கையையும், கடனாளிகளின் கோரிக்கையையும் நிறைவு செய்து நிலைமையைச் சமாளிக்கின்றனர். எனவேதான், 'வங்கிகள் பண உற்பத்தி நிலையங்கள்' எனக் கூறப்படுகின்றன. இதனை சேயர்ஸ், 'பணத்தில் வாணிபம் செய்வது ஒன்றே வங்கிகளின் தொழில் அன்று; வங்கிகள் பணத்தை உற்பத்தி செய்யும் நிறுவனங்களாகவும் திகழ்கின்றன' என்று கூறுகின்றார். இனி,

புள்ளி விவரச் சுருக்கம்

அட்டவணையில் கண்ட அனைத்து வணிக வங்கிகளின் தொழில் (ஆண்டு முடிவில்)

(ரூபாய் கோடியில்)

		இந்திய ஸ்டேட் வங்கி (1)	துணை வங்கிகள் (2)	ஸ்டேட் வங்கித் தொகுப்பு (1)+(2)	அட்டவணையில் கண்ட ஏனைய வணிக வங்கிகள் (4)	அட்டவணையில் கண்ட அனைத்து வணிக வங்கிகள் (3)+(4)
அ. ஒட்டு மொத்த வைப்புகள்	1972	1,861	471	2,332	6,049	8,381
	1973	2,212	554	2,766	7,375	10,141
	1974	2,705	628	3,333	8,107	11,440
சதவீத உயர்வு	1973 over 1972	18·9	17·6	18·6	21·9	21·0
	1974 over 1973	22·3	13·4	20·5	9·9	12·8
ஆ. கடன் அளிப்பு	1972	1,238	381	1619	3951	5570
	1973	1,582	421	2003	5059	7062
	1974	1,764	466	2230	5684	7914
சதவீத உயர்வு	1973 over 1972	27.8	10·5	23·7	28·0	26·5
	1974 over 1973	11 5	10·7	11·3	12·4	12·1
இ. அரசுப் பிணையங்களில் முதலீடு	1972	561	102	663	1512	2175
	1973	543	117	660	1743	2403
	1974	683	126	809	1908	2717
சதவீத உயர்வு	1973 over 1972	—3·2	14·7	—0·5	15·3	10·5
	1974 over 1973	26·3	5·1	22·6	9·5	13·1
ஈ. ரிசர்வ் வங்கியிடமிருந்து பெற்ற கடன்கள்	1972		3	3	6	9
	1973	35	11	46	165	211
	1974	10	16	26	137	163

அட்டவணையில் கண்ட அனைத்து வணிக வங்கிகளின் ஒட்டுமொத்த வைப்புகளும், கடன் அளிப்பும் (ஆண்டுச் சராசரிகள்)

(ரூபாய் கோடியில்)

		இந்திய ஸ்டேட் வங்கி (1)	துணை வங்கிகள் (2)	ஸ்டேட் வங்கித் தொகுப்பு [(1) + (2)] (3)	அட்டவணையில் கண்ட ஏனைய வணிக வங்கிகள் (4)	அட்டவணையில் கண்ட அனைத்து வணிக வங்கிகள் [(3) + (4)]
அ. ஒட்டுமொத்த வைப்புகள்	1972	1,678	436	2,114	5.392	7,506
	1973	2,038	517	2,555	6.584	9,139
	1974	2,446	595	3,041	7,645	10,686
சதவீத உயர்வு	1973 over 1972	21·5	18·6	20·9	22·1	21 8
	1974 over 1973	20 0	15·1	19·0	16·1	16·9
ஆ. கடன் அளிப்பு	1972	1,166	339	1,505	3,750	5,255
	1973	1,406	399	1,805	4,430	6,235
	1974	1,718	438	2,156	5,392	7,548
சதவீத உயர்வு	1973 over 1972	20·6	17·7	19·9	18·1	18·6
	1974 over 1973	22·2	9·8	19·4	21·7	21·1

எவ்வாறு வங்கிகள் கடனுக்கம் செய்கின்றன எனப் பார்ப்போம். கடனுக்கக் கோட்பாட்டிற்கு ஏதுவாக நாம் ஏனைய வைப்புகளை விட்டுவிட்டு, தேவை வைப்புகளை (Demand deposits) மட்டும் கணக்கெடுத்துக்கொள்ள வேண்டும்.

ரொக்க ஓட்டமும், வைப்பு மாற்றமும் :

வணிக வங்கி முறையில் (System) தேவை வைப்புகளை மூன்று முறைகளில் அதிகரிக்கச் செய்யலாம். முதல் முறைப்படி, மக்கள் ரொக்கமாக வங்கியில் செலுத்துவதன் மூலம் தேவை வைப்புகள் கூடுதலாகின்றன. இரண்டாவது முறைப்படி, கருவூலமோ மைய வங்கியோ புதிதாகப் பணங்கோருரிமைகளை வணிக வங்கியில் செலுத்தும் போது தேவை வைப்புகள் அதிகமாகின்றன. மூன்றுவது முறைப்படி, பெறப்பெற்ற வைப்புகளைக்கொண்டு வணிக வங்கி தன் முயற்சியால் ஈட்டச் சொத்துகளை வாங்குவதன் மூலம் தேவை வைப்புகள் கூடுதலாக உண்டாகின்றன. முன் இரண்டு முறைகளிலும் 'ரொக்கம்' உள் வருவதால் தேவை வைப்புகள் அதிகமாகின்றன. இத்தேவை வைப்புகளுக்கு 'முதனிலை வைப்புகள்' (primary deposits) எனப் பெயர். மூன்றுவது முறையில், உண்மையிலேயே 'ரொக்கம்' கூடுவதில்லை; கடன் அளிப்பு நடவடிக்கைகளால் தேவை வைப்புகள் ஏற்படுவதாகும். எனவே, இவ்வாறு உண்டாக்கப்பட்ட வைப்புகளுக்குப் 'பிறப்பிக்கப்பெற்ற வைப்புகள்' (Derivative deposits) எனப் பெயர்.

மேற்கூறிய மூன்று முறைகளையும் எடுத்துக்காட்டு மூலம் விளக்குவோம்:

முதனிலை வைப்புகளுக்கான எடுத்துக்காட்டை விளக்கும் போது, முதலில் திரு. நளன் என்பவர் 'இந்தியன் வங்கி'யில் ரூ. 2000-00 ரொக்கமாகத் தேவை வைப்பில் செலுத்துகிறார் எனக் கொள்வோம். பணம் செலுத்திய பிறகு வங்கியின் இருப்பு நிலைக் குறிப்பைப் பார்த்தால் ரொக்க இருப்பும் தேவை வைப்புத் தொகையும், முறையே சொத்துகள் பகுதியிலும், பொறுப்புகள் பகுதியிலும் அதிகரிப்பது தெரிய வரும்.

இந்தியன் வங்கி இருப்புநிலைக் குறிப்பு

பொறுப்புகள்	ரூ.	சொத்துகள்	ரூ.
தேவை வைப்புகள்	+ 2000	ரொக்கம்	+ 2000

இவ்வெடுத்துக்காட்டில் ரொக்க இருப்பும், தேவை வைப்புத் தொகையும் சமமான அளவுக்கு அதிகரித்துள்ளன. ஆனால், மொத்த வைப்புத் தொகையில் ஒரு குறிப்பிட்ட சதவீதம் ரொக்க இருப்பு வைத்திருந்தால் மட்டுமே போதுமானதாகும். அக்கோட்பாட்டின்படி பார்த்தால் நமது எடுத்துக்காட்டில் இன்னும் கடனுக்கம் செய்ய வழிவகை உண்டு என்பது தெரிய வருகின்றது.

இரண்டாவதாக, பத்திரங்களை வாங்குவதன் மூலம் (வெளி அங்காடி நடவடிக்கைகள்) மைய வங்கிகள், பணமாக மாற்றுந் தன்மை கொண்ட கோருரிமைகளை (Money claims) விடுக்கின்றன. நாம் முன்னமேயே எடுத்துக்காட்டிய திரு. நளன் ரூ. 2000 மதிப்புக்கொண்ட அரசுப் பத்திரங்களை மைய வங்கியிடம் விற்கிறார் என்றால், மைய வங்கி அத்தொகைக்குச் சமமான காசோலையை அவருக்கு அளிக்கும். இக் காசோலையைப் பணமாகவும் மாற்றிக்கொள்ளலாம் அல்லது இந்தியன் வங்கியில் வைப்பாகவும் இடலாம். இந்தியன் வங்கியில் வைப்பாக இட்டால், அது மைய வங்கியிடமிருந்து ரூ. 2000-ஐப் பெற்றுக் கொள்ளலாம் அல்லது மைய வங்கியிடமுள்ள தன் வைப்புக் கணக்கின் இருப்பை அதிகரிக்கச் செய்யலாம். ரொக்கமாக மாற்றப்படாமல் வைப்புகள் அதிகரிக்கப்படுவதாகக் கொண்டால் இரு வங்கிகளின் இருப்பு நிலைக் குறிப்புகள் பின்வருமாறு தோன்றும் :

மைய வங்கியின் இருப்பு நிலைக் குறிப்பு

பொறுப்புகள்	ரூ.	சொத்துகள்	ரூ.
இந்தியன் வங்கியின் வைப்புகள்	+ 2000	அரசுப் பத்திரங்கள்	+ 2000

இந்தியன் வங்கியின் இருப்பு நிலைக் குறிப்பு

பொறுப்புகள்	ரூ.	சொத்துகள்	ரூ.
தேவை வைப்புகள்	+ 2000	மைய வங்கியில் வைப்புகள்	+ 2000

வணிக வங்கியை எடுத்துக்கொண்டால், தேவை வைப்புகள் ரூ. 2000 அதிகரித்துள்ளது. இவ் வதிகரிப்பு மைய வங்கியினால் ஏற்பட்டிருக்கிறது; வணிக வங்கியின் முயற்சியினால் அல்ல. ரொக்கச் சொத்துகள் மைய வங்கியிடமிருந்து பெறப்பட்டதால், அவ் வைப்புகள் முதனிலை வைப்புகளாகும்.

மூன்றாவதாக, பிறப்பிக்கப்பெற்ற வைப்புகள் உருவாக்கப் படுவதைப்பற்றிப் பார்ப்போம். ஒரு வணிகர், வங்கியில் ரூ. 10,000 கடன் கேட்பதாகக் கொள்வோம். அக்கடன் தொகையை அவ்வங்கி அளித்த பின் அதனுடைய இருப்பு நிலைக் குறிப்பின் சொத்துப்பக்கத்தில் 'கடன்களும்' பொறுப்புப் பக்கத்தில் 'தேவை வைப்புகளும்' அந்தத் தொகை அளவுக்கு அதிகரித்திருக்கும்.

இந்தியன் வங்கி இருப்பு நிலைக் குறிப்பு

பொறுப்புகள்		சொத்துகள்	
	ரூ.		ரூ.
தேவை வைப்புகள்	+ 10,000	கடன்கள்	+ 10,000

கடன் அளிக்கப்பெற்றபின், கடனாளி, தேவையுள்ளபோது காசோலைகளை விடுத்து, அவ்வேட்டுக் கடன் அளிப்பை ரொக்க மாக மாற்றிக்கொள்ளலாம். கடனுக்கம் செய்து கடன் வேண்டு வோருக்கு இவ்வாறு உதவுவதால் வங்கிகள் வட்டி என்ற வடிவில் இலாபம் அடைகின்றன. வங்கிகள் இவ்வாறு கடனுக்கம் செய்வதால் நாட்டில் பண அளிப்பு அளவு அதிகரிக்கிறது என்பது கவனிக்கத்தக்கதாகும். இப்படியாக வங்கி கொடுக்கின்ற கடன், வைப்பாக உருவம் பெறுவதனை, 'ஒவ்வொரு கடனும் ஒரு வைப்பைத் தோற்றுவிக்கிறது' (Every loans creats a deposit) என வங்கி முறைப்படி கூறப்படுகிறது. கடன் அளிப்புச் செய்வ தோடு மட்டுமல்லாமல், பத்திரங்களை வாங்குவதன் மூலம் முதலீடு செய்யும்போதும் வங்கிகள் தேவை வைப்புகளைக் கூடுதலாக்கின்றன எனலாம். இது எவ்வாறெனில், பத்திரங்களை விற்பவர் 'வாங்கும் வங்கியிலேயே' கணக்கு வைத்திருந்தால் அவர் கணக்கு வரவு செய்யப்படும். அப்படிச் செய்தாலும் வைப் புத் தொகை மிகுதியடையும் அல்லவா? அதாவது, வங்கியின்

இருப்புநிலைக் குறிப்பு சொத்துப்பக்கத்தில் 'பத்திரங்கள்' என்ற இனமும், பொறுப்புப்பக்கத்தில் தேவை வைப்புகளும் ரூ. 10000-க்கு அதிகமாகும்.

இதுவரை கடனுக்கம் செய்வதுபற்றி மிக எளிய முறையில் விளக்கி வந்தோம். இனி, கடன் பெருக்கம் (Credit Expansion) எந்த அளவு வரைக்கும் செய்ய முடியும், அதற்கு ஏதேனும் வரம்புகள் இருக்கின்றனவா எனப் பார்ப்போம். கீழ்க்கண்ட மூன்று முக்கிய காரணங்கள் கடன் பெருக்கத்திற்கு வரம்புகளாக உள்ளன.

(1) வணிக வங்கிகள் வைத்திருக்கும் ரொக்க இருப்பின் அளவு;

(2) மொத்த வைப்புகளின் தொகைக்கு ஏற்பச் சட்டப்படியான குறும அளவு ரொக்க இருப்பு வீதம்;

(3) ஒரு வங்கியிலிருந்து மறு வங்கிக்கு ரொக்கம் மாறுதல் (Drain of Cash) அல்லது வங்கித்துறையை விட்டே ரொக்கம் வேறு துறைக்கு இடம் பெயர்தல்.

முதலில், வங்கிகளின் கடன் பெருக்கத்திறன் அவற்றில் மிருக்கிற ரொக்க இருப்பையும், வேறு வங்கிகளிடமும் ரிசர்வ் வங்கிகளிடமும் போட்டு வைத்திருக்கின்ற ரொக்க இருப்பையும் ஒட்டி அமைகின்றது. முதனிலை வைப்புகள் கூடிக்கொண்டே போனால் வங்கியின் ரொக்க இருப்புக் கூடுகிறது எனப் பொருள். இதனால் வங்கியின் கடன் அளிக்கும் திறன் மிகுதிப்படும்.

இரண்டாவதாக, வங்கிகள் செம்மையாகச் செயல்படுவதற்காக ஒவ்வொரு நாட்டுச் சட்டமும், வங்கிகள் அவற்றின் வைப்புகளில் ஒரு குறிப்பிட்ட சதவீதத்தை ரொக்கமாக வைத்திருக்க வேண்டுமென்பதைக் கட்டாயமாக்கியிருக்கின்றது. ரொக்கமாக இருப்பு வைக்கவேண்டிய பணத்திலும் ஒரு குறிப்பிட்ட அளவு மைய வங்கியிடம் வைத்திருக்க வேண்டுமென்பது சட்டமாகும். ரொக்க வீதம் குறைவாக நிர்ணயிக்கப்பெற்றால் வங்கிகளின் கடன் கொடுக்குந்திறன் மிகுதியாக இருக்கும். மாறாக, ரொக்க இருப்பு விகிதம் அதிகமாக நிர்ணயிக்கப்பெற்றால் கடனளிக்கும் திறன் குறையும்.

மூன்றாவதாக, ரொக்கம் ஒரு வங்கியிலிருந்து மறு வங்கிக்குச் சென்றால், ரொக்க இருப்பு குறைந்துள்ள வங்கியின் கடன் பெருக்கம் செய்யும் திறன் குறையும். இதேபோல், வங்கித் துறையை விட்டே பணம் வெளிச் சென்றாலும் கடன் பெருக்கம் செய்வது குறையும்.

கடன் (வைப்புகள்) பெருக்க எல்லைகள் (Expansion Limits)

முற்றுரிமை வங்கியில் ரொக்கம் வெளிச் செல்லா நிலையில் கடன் பெருக்க எல்லைகள் (Expansion limits of a Monopoly Bank (on Banking system) with No External Drain) :

வங்கி வைப்புகள் பெருக்கத்திற்கு மேற்கூறிய காரணிகளின் பங்கை அறிந்தவுடன், அக் காரணிகளின் கூட்டு விளைபயனைப் (Joint effects) பற்றி இனி அறிவோம். முதலில், கீழ்க்கண்ட அனுமானங்களை அடிப்படையாகக்கொண்டு, வணிக வங்கிகளின் கடனுக்கத்தின் எல்லையைப்பற்றிக் காண்போம்.

(1) பொருளாதாரத்தில் ஒரே ஒரு வங்கிதான் உள்ளது. ஒரு வங்கியும், வங்கித்துறையும் ஒன்றே ; அனைத்து நடவடிக்கைகளும் ஒரே வங்கியில்தான் நடைபெறுகின்றன ;

(2) வைப்புகள் மிகுதியானாலும் ரொக்கம் வங்கியை விட்டு செல்வதில்லை ;

(3) எல்லா வைப்புகளும் தேவை வைப்புகளே ;

(4) வைப்புகளுக்கு ஏற்றாற்போல் சட்டப்படி ஈட்டச் சொத்துகளைச் (Earning assets) சரிசெய்தல் [(தகு அளவு உபரிக் காப்புகள் பூஜ்யமாகும்) (Optimum excess reserves are Zero)] அதாவது, பெரும அளவுக்குக் கடன் அளிக்கப்படுதல் (Monopoly Bank is in a "Loaned up" position).

சில இடுகுறிகள் (Symbols) கீழ்க்கண்டவாறு, பொதுவாக, உபயோகப்படுத்தப்படுகின்றன :

D = பெரும அளவு தேவை வைப்புகள் (பண அலகில்)

R = மொத்த சட்டமுறைக் காப்புகள் (Total legal reserves)

R_e = உபரிச் சட்ட முறைக் காப்புகள்.

r = குறும அளவுச் சட்ட முறைக் காப்பு விகிதம் (Minimum reserve ratio).

மேற்கண்ட அனுமானங்களையும், இடுகுறிகளையும் எடுத்துக் கொண்டு பார்த்தால், ஒரு ரூபாய் இருப்பு 1/r ரூபாய் வைப்புகளுக்குப் போதுமானதாகும். அப்படியென்றால், 'R' ரூபாய் காப்பிருப்புகள் பெருக அளவு R/r ரூபாய் வைப்புகளுக்குப் போதுமானது எனலாம்.

அதாவது, $D = R\left(\frac{1}{r}\right) = \frac{R}{r}$ .....(சமன்பாடு 1)

இப்படியாக, R என்பது ரூ. 10 லட்சம் எனவும், r என்பது 20 சதவீதமெனவும் கொண்டால்,

$D = \text{ரூ. } 10 \text{ லட்சம்} \left(\frac{1}{0{\cdot}20} \right) = \text{ரூ. } 50 \text{ லட்சம்}$ எனக் கிடைக்கும். அதாவது, குறும அளவுக் காப்பு விகிதம் 20 சதவீதமாக இருக்கும்போது, ரூ. 10 லட்சம் காப்பில் ஒவ்வொரு ரூபாயும் 5 மடங்கு வைப்புகளை (முதனிலை மற்றும் பிறப்பிக்கப்பெற்ற) விரிவாக்கும் அல்லது ரூ. 10 லட்சம் காப்பு இருப்பு, ரூ. 50 லட்சம் வரைக்கும் மொத்தத் தேவை வைப்புகளை விரிவாக்கும்.

இத்தொகைகளை அடிப்படையாகக்கொண்டு ஒரு மாதிரி இருப்பு நிலைக் குறிப்பைத் தயாரிப்போம். (முற்றுரிமை வங்கி) :

பொறுப்புகள்		சொத்துகள்	
	(ரூபாய் இலட்சத்தில்)		(ரூபாய் இலட்சத்தில்)
தேவை வைப்புகள் ...	50	ரொக்கம்	10
ஏனைய பொறுப்புகள்	2	கடன்களும், முதலீடுகளும்	42
மூலதனம்	4	ஏனைய சொத்துகள் ...	4
மொத்தம்	56		56

வங்கிகள் முழு அளவிற்குக் குறைவாகக் கடன் அளித்திருந்தாலும் அல்லது காப்பிருப்பில் சேர்க்கையையோ, குறைவையோ கண்டாலும், போக்கு என்னவென்றால், தேவை வைப்புகளையோ, வங்கிக்கடனையோ மாற்றம் செய்து புதுச் சமநிலை ஏற்படுத்துவதாகும். இந்நோக்கத்திற்காகச் சமன்பாடு (1) கீழ்க் கண்டபடி சமன்பாடு (2)-ஆக மாற்றப்படுகிறது :—

$$\Delta D = \frac{R_e}{r} \quad \text{..... (சமன்பாடு 2)}$$

இதில், ΔD என்பது, தேவை வைப்புகளில் ஏற்படும் மாற்றத்தையும், R_e என்பது உபரிக் காப்புகளின் தொகையையும், மற்றும் r என்பது தேவையான காப்பு விகிதத்தையும் குறிக்கின்றன.

மேற்குறிப்பிட்ட இருப்புநிலைக் குறிப்பில் 'முழு அளவுக் கடன் அளிப்பு நிலை' காட்டப்பட்டுள்ளது. அந்நிலையில் அந்த முற்றுரிமை வங்கி புதிதாக ரூ. 1 இலட்சத்திற்கு முதனிலை வைப்பு களைப் பெறுகிறது எனக் கொள்வோம். இப்போது, எந்த அளவுக்கு அவ் வங்கி கடன்களையும் வைப்புகளையும் பெருக்க முடியும்?

அந்த ரூ. 1 இலட்சத்தில் சட்டப்படியான ரொக்க இருப்பு ரூ. 20,000 இருக்க வேண்டும்; எஞ்சிய ரூ. 80,000 உபரி இருப்பாகும். உபரிக் காப்பில் ஒவ்வொரு ஒரு ரூபாயும் ரூ. 5-க்குப் 'பிறப்பிக்கப்பெற்ற வைப்புத் தொகையை' உண்டாக்குமாதலால் மொத்த வங்கிக் கடன் ரூ. 4 இலட்சத்திற்குப் பெருக்கமுடியும். இவ் விடையைச் சமன்பாடு 2-ஐப் பயன்படுத்தி அடையலாம்:

$$\triangle D = \frac{R_e}{r} = \frac{\text{ரூ. 80 ஆயிரம்}}{0{\cdot}20} = \text{ரூ. 4 இலட்சம்.}$$

இம் மேற்கோள்படி கடனுக்கம் செய்யும் முன்பும், கடனுக்கம் செய்த பின்னரும் முற்றுரிமை வங்கியின் இருப்புநிலைக் குறிப்புகள் பின்வருமாறு இருக்கும்.

கடனுக்கத்திற்கு முன்பு:

பொறுப்புகள்		சொத்துகள்	
	ரூபாய்		ரூபாய்
தேவை வைப்புகள்	1,00,000	ரொக்கம்	1,00,000

கடனுக்கத்திற்குப் பின்பு:

பொறுப்புகள்		சொத்துகள்	
	ரூ.		ரூ.
தேவை வைப்புகள்	5,00,000	ரொக்கம்	1,00,000
		கடன்கள்	4,00,000
	5,00,000		5,00,000

நாம் முன்னமே கொண்ட அனுமானப்படி 'ரொக்கம்' வங்கியை விட்டு வெளிச்செல்வதில்லை என்பதைக் கைவிட்டு

ரூ. 5000 வெளிச் செல்வதாக இப்போது கொள்வோம். ரூ. 5000 ரொக்கம் வெளிச் செல்கிறது என்றால் முதனிலை வைப்புகள் அந்தத் தொகை அளவிற்கு வங்கியில குறைந்துவிட்டது எனப் பொருள். இத்தொகைக்கு ஏற்றாற்போல் 'கடன்களும்' குறைக்க வேண்டும். நாம் கையாண்ட சமன்பாடு 2-ஐ இங்கு உபயோகப் படுத்தினால் ரூ. 20,000 மொத்தக் கடன்களின் தொகையி லிருந்து (ரூ. 4,00,000) குறைக்கப்பட வேண்டும். அப்படி என்றால் அதே தொகைக்குச் சமமாகப் பிறப்பிக்கப்பெற்ற வைப்புகளும் குறைக்கப்படும். இந்த வழியில் கடன் ஒடுக்கம் செய்யப்படவில்லையென்றால் 'மொத்த வைப்புகளுக்கேற்ப ரொக்கக் காப்பிருப்பு விகிதம் அமைய வேண்டு'மென்ற சட்டப் படியான விதிமுறைகள் மீறப்படுவதாகும். பெரும அளவை மீறிக் கடனுக்கம் செய்வதும் வங்கிகளுக்கு நல்லதல்ல.

முற்றுரிமை வங்கியில் கடன் பெருக்க எல்லைகள் — ரொக்கம் வெளிச் செல்லுதல்: (Expansion limits of a Monopoly Bank (or Banking system) with an external Drain):

ரொக்க இருப்புகள் மாறுபடுகின்றன என்ற அனுமானத் தில், தேவை வைப்புகளை எந்த அளவுக்கு முற்றுரிமை வங்கி உண்டாக்குகிறது என்று இதுவரை பார்த்தோம். ஆனால், மக்கள் தங்கள் அன்றாட வாழ்க்கைக்குச் சிறிது ரொக்கம் வைத்துக்கொள்ள விரும்புவர். அதன் விளைவாக வங்கியில் ரொக்க இருப்பு மாறுபடும். பணம் வெளிச்சென்றால் தேவை வைப்புகளும் அதற்கேற்றாற்போல் குறைக்கப்படும் அல்லது குறையும். அதே போல், பணம் உள் வந்தாலும் வைப்புகள் மிகுதியாகும்.

மக்கள் தங்கள் வசம் வைத்துக்கொள்ள விரும்பும் ரொக்க மாறுதல்களுக்கும் (currency changes) ($\triangle C$), வைப்புகளின் மாறு தல்களுக்கும் ($\triangle D$) நெருங்கிய தொடர்பு இருப்பதாகக் கொள் வோம். $\triangle C$-க்கும், $\triangle D$-க்கும் உள்ள விகிதத்தை C என்ற இடுகுறிமூலம் விளக்குவோம். C என்பது 5 சதவீதமென்றால், தொடக்கத்தில் உண்டாக்கப்பட்ட ஒவ்வொரு ரூ. 100 கடன் களுக்கும் வைப்புகளுக்கும் முற்றுரிமை வங்கி ஏறத்தாழ கைப்பணம் (hand - to hand money) ரூ. 5-ஐ இழக்கும். ஏனென்றால், மக்கள் வைப்புகளைப் பணமாக மாற்றி வைத்துக் கொள்ள விரும்புவர். வைப்புப் பணத்தைக்கொண்டு பார்க்கும் போது, மக்கள் கையில் உபரியாகப் பணம் இருப்பதால், தேவை

வைப்புகள் ரூ. 100 குறைக்கப்படும் போது, ஏறத்தாழ ரூ 5 வங்கிக்குள் செலுத்தப்படும்.[1]

கடன் விரிவாக்கம் வாய்பாடுகளில் C-ஐ இப்போது அறிமுகப் படுத்திப் பார்ப்போம். ஒரு வங்கி 'கடன் விரிவாக்கம்' பெரும அளவு நிலையை அடையும் காலத்தில், உபரி ரொக்க இருப்பு (R_e) வங்கித்துறையை விட்டு வெளிச்சென்ற ரொக்கத்திற்கும் ($C \times \triangle D$) புதிய தேவை வைப்புகளுக்காக ($r \times \triangle D$) ஈர்க்கப் பட்ட தேவையான ரொக்கக் காப்பிற்கும் (Distribution) செய்யப் படுகிறது.

இப்படியாக $R_e = r \times \triangle D + C \times \triangle D$

$$R_e = \triangle D\,(r + C)$$

$$\triangle D = R_e \left(\frac{1}{r+C}\right) = \text{or } \frac{R_e}{+C} \quad \text{...(சமன்பாடு 3)}$$

முற்றுரிமை வங்கியின் உபரிக்காப்பு ரூ. 1,000 என்றும் குறும அளவு சட்டமுறைக் காப்பு 20 சதவீதமென்றும், ரொக்க வெளி யோட்ட வீதம் (c) 5 சதவீதமெனவும் அனுமானம் கொண்டால்,

$$\triangle D = \text{ரூ. } 1{,}000 \left(\frac{1}{0{\cdot}25}\right)$$

$$= \text{ரூ. } 1{,}000 \times 4 = \text{ரூ. } 4000 \text{ எனக் கிடைக்கும்.}$$

பண வெளியோட்டம் இல்லையென்றால் வைப்புகள் ரூ. 5000-க்கு விரிவாகியிருக்கும். அதாவது, உபரிக்காப்பி னின்றும் 5 மடங்கு; பண வெளியோட்டமிருந்தால் வைப்புகள் 4 மடங்குதான் பெருகும். வைப்புகள் விரிவாக்க காலத்தில் ரூ. 200 (0·05 × ரூ. 4,000) வங்கித் துறையை விட்டு வெளிச் சென்றதால் (exodus) அந்தத் தேவை வைப்புகளில் சிறிய அளவில் அதிகரிப்புக் காணப்படுகிறது.

கடன் விரிவாக்கம் இப்படியாக, முடிவுற்றவுடன் (Comple-ted), ரூ. 1,000 முன்னமே உள்ள உபரிக் காப்பில், ரூ. 200 மக்களிடம் கைப்பணமாகச் சென்றிருக்கும். எஞ்சியுள்ள ரூ. 800

---

[1] $\triangle D$ (நிகர) $= \frac{\text{ரூ. } 100}{1+C} = \frac{\text{ரூ. } 100}{1{\cdot}05} = \text{ரூ. } 95{\cdot}24$, மற்றும்

$$\triangle C = C\left(\frac{\text{ரூ. } 100}{1+C}\right) = \frac{\text{ரூ. } 5}{1{\cdot}05} = \text{ரூ. } 4{\cdot}76.$$

மீண்டும் மறுபகுப்பு (Reclassification) செய்யப்பட்டு உபரிக் காப்பாக இருந்தது. ரூ. 4000 தேவை வைப்புகளுக்காண 'தேவைக் காப்பாக' மாற்றப்பட்டது.

மேற்கண்டவைகளை இருப்பு நிலைக்குறிப்பு மூலம் உணர்த்துவோம். முற்றுரிமை வங்கி தன் வசமுள்ள பத்திரங்களை விற்று ரூ. 1000 ரொக்கம் பெறுவதாகக் கொள்வோம். இது உபரிக் காப்பாகும். இந்த ரொக்கத்திற்கு அத்தொகையைப் போல் 5 மடங்கு தேவை வைப்புகளை உண்டாக்கலாம். இந்த ரொக்கத்தில் 1/20 பங்கு வெளிச்செல்கிறது என்றால் கடனுக்கச் சக்தி குறைந்து ரூ. 4000-க்குத்தான் தேவை வைப்புகளை விரிவாக்க முடியும். தேவை வைப்புகள் விரிவாக்க நிலையின்போது கீழ்க் கண்ட மாற்றங்கள் இருப்பு நிலைக் குறிப்பில் இடம் பெற்றிருக்கும்:

பொறுப்புகள்		சொத்துகள்	
	(ரூபாய்)		(ரூபாய்)
தேவை வைப்புகள்	+ 4,200	ரொக்கம்	— 200
தேவை வைப்புகள்	— 200	கடன்களும், முதலீடுகளும்	+ 4,200
தேவை வைப்புகள் (நிகரம்)	4,000		4,000

தேவை வைப்புகள் விரிவாக்கம் பண வெளியாக்கத்தால் பாதிக்கப்படும் போது, தேவை வைப்புகளின் நிகர விரிவாக்கத்திற்கும் பண அளிப்பில் ஏற்படும் மாற்றத்திற்கும் இடையேயுள்ள வேறுபாட்டை மேற்கண்ட எடுத்துக்காட்டு சுட்டிக் காட்டுகிறது. நமது எடுத்துக்காட்டில் முற்றுரிமை வங்கி ரூ. 4,200-க்கு ஈட்டச் சொத்துகளை அடைந்தும், அதே தொகைக்கு ஆரம்பத்தில் தேவை வைப்புகளை உண்டாக்கியும் இருக்கிறது. ஆனால், ரூ. 200-க்குத் தேவை வைப்புகள் ரொக்கமாக மாற்றப்பட்டதால் (Conversion) தேவை வைப்புகளில் கூடுதலாக (நிகர) ரூ. 4,000 மட்டும் காணப்படுகிறது. பணப் பெருக்க விரிவாக்கத்தின் விளைபயனைப் பண அளிப்பில் காணும் போது ரொக்கமாக மாற்றப்பெற்ற ரூ. 200-ஐயும் சேர்த்துக் கொள்ள வேண்டும். பணவாக்கமுறையில் நிகர வைப்புகள் ரூ. 4,000 அதிகரித்திருக்கும் போது, உண்மையில் பண அளிப்பு ரூ. 4,200 அதிகரித்துள்ளது இக் கருத்தைக் கீழ்க் கண்டபடி விவரிக்கலாம்: ரொக்க வெளியோட்டத்தின்போது,

பண அளிப்பில் ஏற்படுகின்ற அதிகரிப்பு, ரொக்க வெளியோட்ட அளவுக்கு அதிகரிக்கின்ற தேவை வைப்புகளைவிடக் கூடுதலாகும். (C × ΔD). அது வங்கிக் கடன்கள் மற்றும் முதலீடுகளின் அதிகரிப்புக்குச் சமமாகும். (When there is an external drain, the increase in the money supply is larger than the increase in demand deposits by the amount of the external drain (C × ΔD). It will equal the increase tn Bank loans and investments).

பல வங்கிகள் கொண்ட முறையில் ஒரு வங்கியின் கடன் விரிவாக்க எல்லை (Expansion limits of an individual Bank with in a system of many Banks) :

இதுவரை, கடனுக்கம் மற்றும் கடன் பெருக்கத்தில் முற்றுரிமை வங்கியின் சக்தியையும், வரம்பையும் பற்றிப் பார்த்தோம். முற்றுரிமை வங்கியில் கடன் பெருக்கத்திற்கு ஒரு அளவு இருப்பது போல், பல முக வங்கி (Multi-Bank) முறையிலும் ஒரு வங்கிக்கு எல்லை இருக்கிறது. 'பாதகத் தீர்வு இருப்புகள்' (Adverse Clearing Balances) ஏற்பட வாய்ப்பு இருப்பதால், பல முக வங்கி முறையிலும் கடன் பெருக்கத்திற்கு வரம்பு உண்டாகிறது. ஏனைய வரம்புகளிலெல்லாம் இவ் வரம்புதான் மிக முக்கியமானதாகும்.

பல முக வங்கி முறையில் ஒரு வங்கியின் நடவடிக்கைகளைப் பற்றிப் பார்ப்போம். மொத்த வங்கித் தொழிலில் ஒவ்வொரு வங்கியும் ஒரு சிறு பகுதியையே மேற்கொண்டு நடத்துகின்றது. அனைத்து வங்கிகளிடமும் உபரிக் காப்புகள் இல்லை என்று அனுமானம் செய்வோம். அதாவது, ஒவ்வொரு வங்கியும் பெரும அளவு வரைக்கும் கடனுக்கம் செய்திருக்கின்றது எனப் பொருள்படும். ஒவ்வொரு வங்கியும் 20 சத வீதம் சட்டமுறைக் காப்பு வைத்திருப்பதாகவும், இந் நிலையில் முதல் வங்கி முதனிலை வைப்பாக ரூ. 1000 பெறுவதாகவும் கொள்வோம். இந் நடவடிக்கையால் இருப்பு நிலைக் குறிப்பு கீழ்வருமாறு தோன்றும்.

முதல் வங்கி

பொறுப்புகள்	(ரூபாய்)	சொத்துகள்	(ரூபாய்)
புதிய வைப்புகள்	1,000	புதிய ரொக்கம்	1,000

சட்ட முறைக் காப்பு 20 சதவீதமென்றால், இம்மேற்கோள்படி வங்கியிடம் ரூ. 800 உபரிக் காப்பிருப்பது தெளிவாக விளங்கும்.

இந்தத் தொகையைக் கடனுகப் பிறருக்கு அளிக்கலாம். ஆனுல், இந்தத் தொகைக்குக் கூடுதலாக, எடுத்துக் கட்டாக, ரூ. 2000, கடனுக்கம் அவ்வங்கி செய்கிறதென்றும், கடன் பெற்ருர் அந்த ரூ 2000-க்கு ஒரு காசோலையை விடுக்கிருர் என்றும், காசோலையைப் பெற்றவர் அந்த வங்கிக்குச் சென்ருரு, அவரது வங்கியின் மூலமாகவோ (வசூலிக்கும் வங்கியர்) பணம் கோரினுல் முதலாவது வங்கி அந்தக் காசோலைக்குரிய பணத்தை அளிக்க முடியாது. ஏனென்ருல், போதிய அளவு அதனிடம் பணமில்லை. ஆதலால், அவ்வங்கி ரூ. 800-க்கு மேல் கடன் அளிக்க முடியா தென்று உணருகிறது. இந் நிலையில் வங்கியின் இருப்புநிலைக் குறிப்பு கீழ் வருமாறு அமைந்திருக்கும்:—

முதல் வங்கி

பொறுப்புகள்		சொத்துகள்	
	(ரூபாய்)		ரூபாய்
வைப்புகள்	+ 1,800	ரொக்கம்	+ 1,000
	1,800	கடன்கள்	+ 800
			+ 1,800

புதிதாக உண்டாக்கப்பட்ட வைப்பைக் கடனுளி பயன் படுத்திய பிறகு இருப்புநிலைக் குறிப்பு கீழ்வருமாறு அமையும் :

முதல் வங்கி

பொறுப்புகள்		சொத்துகள்		
	(ரூபாய்)			ரூபாய்
வைப்புகள்	+ 1,000	ரொக்கம்	...	+ 200
		கடன்கள்	...	+ 800
	+ 1,000			+ 1,000

இந்த இருப்பு நிலைக் குறிப்பின்படி தேவையான அளவுதான் ரொக்கக் காப்பு இருக்கிறது. கடன்கள் இன்னும் மிகுதியாக்கப் பட்டால் வங்கிக்கு இன்னல்கள்தான். இக் கோட்பாட்டின்

அடிப்படையில்தான் வங்கிகள் உபரிக் காப்புத் தொகைக்கு மேல் கடனுக்கம் செய்ய முடியாது எனச் சிலர் வாதாடுகின்றனர். ஆனால், அவ்வாதம் ஒரு தனி வங்கிக்கு மட்டுந்தான் பொருந்தும். நமது இன்றைய பொருளாதாரத்தில் பல முக வங்கிகளல்லவா இருக்கின்றன ? அனைத்து வங்கிகளையும் ஒட்டு மொத்தமாக எடுத்துக்கொண்டு பார்த்தால், உபரிக் காப்பிருப்புக்கு மேல் கடனுக்கம் செய்ய முடியுமென்று நன்கு புலப்படும்.

மீண்டும் நமது எடுத்துக்காட்டிற்கு வருவோம். முதல் வங்கியின் கடனுளி இரண்டாவது வங்கியின் வாடிக்கையாளருக்கு ரூ. 800-க்கு ஒரு காசோலையை அளிக்கிறார் என்றும், அவ் வாடிக்கையாளர் அக் காசோலையை அவரது வங்கியில் வசூலிப்பதற்காகச் செலுத்துகிறார் என்றும் கொள்வோம். இரண்டாவது வங்கி, முதல் வங்கியிடமிருந்து பணத்தை வசூலித்த பின்பு அதன் இருப்பு நிலைக் குறிப்பு பின் வருமாறு இருக்கும் :

இரண்டாவது வங்கி

பொறுப்புகள்	(ரூபாய்)	சொத்துகள்	(ரூபாய்)
வைப்புகள்	+ 800	ரொக்கம்	+ 800

இரண்டாவது வங்கியில் உபரி ரொக்கம் ரூ. 640 இருக்கிறது (ரூ. 800-ல் 20 சதவீதம் ரூ. 160 ஆகும்). இந்தத் தொகைக்குச் சமமாக இவ் வங்கி கடனுக்கம் செய்யலாம். ரூ. 640 கடன் அளித்த பின் இரண்டாவது வங்கியின் இருப்பு நிலைக் குறிப்பு பின் வருமாறு அமையும் :

இரண்டாவது வங்கி

பொறுப்புகள்	(ரூபாய்)	சொத்துகள்	(ரூபாய்)
வைப்புகள்	+ 1,440	ரொக்கம்	+ 800
		கடன்கள்	+ 640
	+ 1,440		+ 1,440

ரூ. 640 கடன் பெற்ற நபர் அப் பணம் முழுவதும் செலவழிப் பாராதலால், அத் தொகைக்குச் சமமாக ஒரு காசோலையை விடுப்பார். காசோலையைப் பெற்ற நபர் மூன்றாவது வங்கியில் வசூலிப்பதற்காகச் செலுத்துகிறார் என்று கொள்வோம். முன்பு இரண்டாவது வங்கி செய்தது போலவே, இப்போது மூன்றாவது வங்கியும் அந்த ரூ. 640-ஐ இரண்டாவது வங்கியிடமிருந்து பெற்று, அந்த நபரின் கணக்கில் வரவு செய்கிறது. இரண்டாவது வங்கியில் காசோலைக்குப் பணம் அளித்த பின் ரொக்க இருப்பு ரூ. 160-தான் இருக்கும். மூன்றாவது வங்கியின் இருப்பு நிலைக் குறிப்பு பின் வருமாறு இருக்கும் :

மூன்றாவது வங்கி

பொறுப்புகள்	(ரூபாய்)	சொத்துகள்	(ரூபாய்)
வைப்புகள்	+ 640	ரொக்கம்	640

இவ் வங்கியில் உபரி ரொக்கம் ரூ. 512 இருக்கிறது. (ரூபாய் 640-ல் 20 சதவீதம் ரூ. 128 ஆகும்). இந்தத் தொகைக்குச் சமமாக மூன்றாவது வங்கி கடன் அளிக்கலாம். ரூ. 512 கடன் அளிப்புக்குப் பின் அதன் இருப்பு நிலைக் குறிப்பு கீழ்வருமாறு இருக்கும் :

மூன்றாவது வங்கி

பொறுப்புகள்	(ரூபாய்)	சொத்துகள்	(ரூபாய்)
வைப்புகள் ...	+ 1,152	ரொக்கம்	+ 640
		கடன்கள்	+ 512
	+ 1,152		+ 1,152

கடனுக அளிக்கப்பெற்ற ரூ. 512-ம் ரொக்கமாக மாற்றப் பட்டுக் கடனாளியால் செலவழிக்கப்பட்டாலும் அல்லது கடனாளியின் வங்கியினால் வசூலிக்கப்பட்டு அவர் கணக்கு வரவு செய்யப் பட்டாலும் மூன்றாவது வங்கியில் ரொக்க இருப்பு ரூ. 128 ஆகக் குறைந்துவிடும். அதாவது, 640 வைப்புகளுக்கு 20 சதவீதம் ரொக்கக் காப்பிருப்பு வைக்கப்பட்டிருப்பதாகும்.

நான்காவது வங்கியிடம் ரொக்கம் ரூ. 512 அதிகரித்துள்ளது. தேவையான சட்டமுறை ரொக்க இருப்புக்கு மேல் உபரியாக இருப்பு உள்ளது. இவ் வங்கியும் உபரிக் காப்புக்குச் சரியாகக் கடனுக்கம் செய்யலாம். இப்படியாக, அடுத்தடுத்து வங்கிகள் உபரிக்காப்பிருப்பு இல்லாத வரைக்கும் கடனுக்கம் செய்து கொண்டே போகலாம். இறுதியில் அனைத்து வங்கிகளின் கடனுக்கத்தைக் கூட்டிப்பார்த்தால் ரூ. 4000 கிடைக்கும். இதே விடைதான் முற்றுரிமை வங்கியிலும் கிடைத்தது. பலமுக வங்கி முறையில் ஒரு வங்கி ஒரு குறிப்பிட்ட தொகை ரொக்கத்தை இழந்தால் அது மற்ற வங்கிகளுக்கு வரவாக அமைகிறது. இங்கு ரொக்க ஓட்டமென்றால் அது வங்கித்துறையை விட்டு வெளிச் சென்றதென்று பொருள் கொள்ளக் கூடாது; ஒரு வங்கியிலிருந்து வேறு வங்கிக்குச் செல்வதாகப் பொருள் கொள்ள வேண்டும்.

வரையறைகள் (Limitations):

1. கோட்பாட்டளவில் முற்றுரிமை வங்கி கடனுக்கம் செய்யும் அளவுக்குப் பலமுக வங்கி முறையிலும் கடனுக்கம் செய்ய முடிந்தாலும் நடைமுறையில் பெரும அளவுக்குக் கடனுக்கம் செய்ய முடிவதில்லை. மக்கள் தங்கள் கைவசம் ரொக்கம் வைத்துக்கொள்ள விரும்புதல் கடன் விரிவாக்கத்திற்கு ஒரு வரையறையாக உள்ளது. தேவைவைப்புகள் அதிகரிக்கும்போது மக்கள் எப்போது, எவ்வளவு பணம் வங்கியிலிருந்து எடுப்பார்களென்று துல்லிதமாகக் கூறமுடியாது. வைப்புகளின் அளவு குறைந்துகொண்டே போனால் பொதுவாக, மக்கள் கையில் ரொக்க இருப்பு அதிகரிக்கிறது எனக் கூறலாம் 1930-ல் மந்த காலத்தில் இந்நிலை உண்டாகியது.

(2) வணிகர்கள் வங்கியிலிருந்து கடன் பெறுவதற்குத் தயங்கினாலும் தயங்கலாம். அச் சமயங்களில் வைப்புகளும் கடன்களும் பெரும அளவு நிலையை அடையாமற் போகலாம்.

(3) கடனுக்கம் செய்யப்படுவது உபரிக் காப்பைப் பொறுத்திருக்கிறது. உபரிக்காப்பு அதிகமானால் கடனுக்கச் சக்தியும் அதிகமாகும். ஆனால், அடுத்த நாளிலேயே அல்லது அடுத்த வாரத்திலேயே எவ்வளவு பணம் வங்கியிலிருந்து மக்களால் எடுக்கப்படும் என்று ஊகம் செய்ய முடியாது. எடுப்புகள் எதிர்பாராமல் எந்த நேரத்திலும் நடைபெறுமாதலால், வங்கிகள் கூடுதலாகவே ரொக்க இருப்பை வைத்திருக்கின்றன.

19. செலுத்து நிலை

(Balance of Payments)

ஒரு நாட்டின் செலுத்து நிலை என்பது 'ஒரு குறிப்பிட்ட காலத்தில் அந்த நாட்டின் குடியிருப்பாளர்களுக்கும் (Residents) அயல்நாடுகளின் குடியிருப்பாளர்களுக்கும் இடையே ஏற்படும் பொருளாதார நடவடிக்கைகளை (Economic transactions) முறைப்படி பதிவு செய்வதாகும்.' இவ் விலக்கணத்தில் முக்கியமாகத் தெளிவுபடுத்தப்பட வேண்டியவை இரண்டு. ஒன்று, ''குடியிருப்பாளர்'' என்பது; மற்றொன்று, 'பொருளாதார நடவடிக்கை' என்பது. சாதாரணமாக, அந்த நாட்டில் தங்கியிருப்போர் அந்த நாட்டின் குடியிருப்பாளராகக் கருதப்படுவர். எடுத்துக்காட்டாகச் சுற்றுலாவாளர்களை அவர்கள் எந்த நாட்டிலிருந்து புறப்பட்டிருக்கிறார்களோ அந்த நாட்டுக் குடியிருப்பாளர்கள் எனக் கொள்ள வேண்டும். பார்வையிடப்படும் நாட்டின் குடியிருப்பாளர்கள் எனக் கொள்ளக் கூடாது. இதே போல்தான் பிற நாடுகளிலிருக்கும் முகவர்கள், மாணவர்கள், விற்குநர்கள் (Salesmen), தூதுவர்கள் அந்தந்த நாடுகளின் குடியிருப்பாளர்களாகக் கருதப்படார். இவர்கள் அனைவரும் இந்திய நாட்டைச் சேர்ந்தவர்கள் எனக் கொண்டால், அவர்கள் வெளிநாடுகளில் செய்யும் நடவடிக்கைகள் எல்லாம் இந்தியாவின் அயல்நாட்டு நடவடிக்கைகள் எனக் கருதப்படும். இந்தியன் ஒருவன் அமெரிக்காவில் பேருந்து வாங்கினாலும் அல்லது வாடகை வீட்டில் குடியிருந்தாலும் அவனால் செலவு செய்யப்பட்ட பணம் இந்திய நாட்டின் இறக்குமதியாகவும், அமெரிக்க நாட்டின் ஏற்றுமதியாகவும் பதிவு செய்யப்படும். ஒரு நாட்டில் நிறுவப்பட்டிருக்கும் பன்னாட்டு நிறுவனங்களை (International organisations) அந்த நாட்டின் 'புறக் குடியிருப்பாளர்களாக'க் (nonresidents) கொள்ளவேண்டும். ஏனென்றால், அந் நிறுவனங்களோடு கொண்டிருக்கும் நடவடிக்கைகள் பன்னாட்டுத் தன்மையைக் கொண்டவையாகும்.

அடுத்து, பொருளாதார நடவடிக்கைகள் பற்றிச் சிறிது விரிவாகக் காணலாம். 'மதிப்பு பரிமாற்றம்' செய்யப்படுவது (Exchange of value) பொருளாதார நடவடிக்கை எனப்படும்.

விலை பொருளை உரிமை மாற்றம் செய்தாலோ விலை மதிப்புள்ள பணியைச் செய்தாலோ, ஒருவரிடமிருந்து மற்றொருவருக்குச் சொத்துகள் உரிமை மாற்றம் செய்யப்பட்டாலோ பொருளாதார நடவடிக்கை நடைபெறுகிறது எனக் கூறலாம். (An economic transaction is an exchange of value, typically an act in which there is transfer of title to an economic good the rendering of an Economic Service, or the transfer of title to assets from one party to another) இவ்வகை உரிமை மாற்றங்கள் அல்லது பணிசெய்தல் ஒரு நாட்டின் குடியிருப்பாளர்களுக்கும் அயல்நாட்டுக் குடியிருப்பாளர்களுக்கும் இடையே இடம் பெற்றால் பன்னாட்டுப் பொருளாதார நடவடிக்கைகள் நடைபெறுகின்றன எனக் குறிப்பிடலாம்.

விலைபொருள், பணி அல்லது சொத்துக்காகப் பணத்தைச் செலுத்துதலும் பெறுதலும் பொருளாதார நடவடிக்கைகளில் பொதுவாக இடம் பெறும். ஆனால், அப்படி நடைபெற வேண்டுமென்ற அவசியமில்லை. பண்ட மாற்று முறையில் (Barter) பொருள்களுக்காகப் பொருள்களும், தனிப்பட்ட இழப்பீட்டுகளில் (private compensation) சொத்துகளுக்காகச் சொத்துகளும் மாற்றம் (Exchange) செய்யப்படுகின்றன. மேலும், சிலருக்குப் பொருள்கள் கொடையாக (Gifts), எவ்விதப் பணமும் பெறாமல் அளிக்கப்படுகின்றன. இவ்வகைப் பேரங்கள் ஒவ்வொன்றும் பன்னாட்டு அளவில் நடைபெற்றால் அவைகள் செலுத்துநிலையில் பதிவு செய்யப்பட வேண்டிவரும். இன்னும் சில பேரங்கள் பன்னாட்டு அளவில் நடைபெறாமலிருக்கும் போதுகூட செலுத்துநிலையில் பதிவு செய்யப்பட வேண்டிவரும். எடுத்துக்காட்டாக, அயல்நாட்டில் இயங்கிவரும் இந்தியத் துணை நிறுவனம் (Subsidary company) தான் ஈட்டும் இலாபத்தைத் தன் மூல நிறுவனத்திற்குச் (Parent company) (இந்தியா) செலுத்தாமல் அங்கேயே மீண்டும் முதலீடு செய்தால் அந்த நடவடிக்கையையும் செலுத்துநிலையில் பதிவு செய்யவேண்டுமென்று பரவலாகப் பொருளியல் வல்லுநர்கள் கருத்துத் தெரிவிக்கின்றனர். பன்னாட்டு அளவில் செலுத்துதல் நடைபெறாவிட்டாலும் இலாப வரவை (Receipts of profits) நடப்புக் கணக்கில் (Current Account) வரவு வைத்தும் புது முதலீட்டை மூலதனக் கணக்கில் பற்று வைத்தும் செலுத்துநிலையில் பதிவுசெய்ய வேண்டுமெனச் சிலர் குறிப்பிடுகின்றனர். இனி, பேரங்கள் எவ்வாறு, எந்த நிலையில் செலுத்துநிலையில் பதிவு செய்யப்படுகின்றன என்று காண்போம்:

செலுத்துநிலைக் கணக்குப் பதிவு செய்தல் (Balance of payments Accounting)

இருநிலைப் பதிவு முறையில் (Double Entry Book-keeping) வாணிப நடவடிக்கைகள் ஒரு நிறுவனத்தின் ஏடுகளில் எவ்வாறு பதிவு செய்யப்படுகின்றனவோ அதே அடிப்படையில்தான் ஒரு நாட்டின் பன்னாட்டுப் பேரங்களும் பதிவு செய்யப்படுகின்றன. ஒவ்வொரு 'பற்று' (Debit) நடவடிக்கைக்கும் சரிநிகராக 'வரவு' (Credit) நடவடிக்கை உண்டு என்பதுதான் இருநிலைப் பதிவு முறையின் தத்துவமாகும். எடுத்துக்காட்டாக, இந்தியாவிலிருந்து ரூ. 100 மதிப்புள்ள பொருள்கள் இங்கிலாந்திற்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது எனக் கொள்வோம். இந்த நடவடிக்கைக்கு இரண்டு பதிவுகள் ஒவ்வொரு நாட்டிலும் செலுத்துநிலையில் பதிவு செய்யப்பட வேண்டும். இந்தியாவில் ஏற்றுமதி ரூ. 100 வரவு செய்யப்படும். எதைப் பற்று செய்வதென்பது அடுத்து எழும் வினாவாகும். ரூ. 100 மதிப்புள்ள ஏற்றுமதிப் பொருளுக்குப் பல வகைகளில் இங்கிலாந்திலிருந்து கைம்மாறு பெறலாம்: இங்கிலாந்து நாட்டு நிறுமத்தில் இந்திய நாட்டுக் கணக்கை (வரவை) (Credit) அதிகரிக்கலாம்; அந்நாட்டு நிறுமத்திற்கு முன்னமேயே கொடுக்கவேண்டிய பொறுப்புத் தொகையைக் குறைக்கலாம்; லண்டன் வங்கியில் ஸ்டெர்லிங் இருப்பை அதிகரிக்கச் செய்யலாம்; இங்கிலாந்து நிறுவனத்தின் ரூபாய் இருப்பிலிருந்து குறிப்பிட்ட தொகையை எடுத்து ரூபாயாகப் பெறலாம்; அல்லது கைம்மாறு பெருமலேயே கொடையாக அப் பொருள்களை இங்கிலாந்திற்குக் கொடுக்கலாம். இவை எல்லாவற்றிற்கும், கொடையைத் (Gift) தவிர பற்றுப்பதிவு 'வெளிச்செல் மூலதனம்' ஆகும் (capital outflow) கொடையாகக் கொடுத்த பொருள்களுக்குப் பற்றுப்பதிவு 'நன்கொடைகள்' என்பதாகும். இதிலிருந்து அறிவதென்னவென்றால், கோருரிமைக்குக் (claim) காரணமான நடவடிக்கை 'வரவு' செய்யப்பட வேண்டும். மிகையாகும் கோருரிமை (அல்லது பொறுப்புகள் குறைதல்) 'பற்று'ச் செய்யப்பட வேண்டும் என்பதாகும். அப்படி வாணிகத்தில் ரொக்க விற்பனையில், 'ரொக்கத்தை'ப் (Cash) பற்று வைத்தும் 'விற்பனையை' (Sales) வரவு வைத்தும் கணக்குப் பதிவு (இருநிலை முறைப்படி) செய்யப்படுகிறதோ அப்படியே இங்கேயும் 'வெளிச்செல் மூலதனம்' பற்று வைக்கப்படுகிறது; 'ஏற்றுமதி' வரவு வைக்கப்படுகிறது. ஏற்றுமதி செய்யப்பட்ட ரூ. 100 பொருள்களுக்கு இங்கிலாந்து நாட்டு இறக்குமதியாளர் இந்திய வங்கியில் தான் வைத்துள்ள கணக்கிலிருந்து எடுத்துச் செலுத்துகிறார் எனக் கொண்டால், செலுத்துநிலை அந்த நடவடிக்கைக்குப் பின் பின்வருமாறு தோன்றும்:

இந்தியாவின் செலுத்து நிலை

	பற்று	வரவு
வெளிச்செல் மூலதனம்	ரூ. 100	
ஏற்றுமதி		ரூ. 100

அடுத்து, இந்திய நாடு இங்கிலாந்து நாட்டிலிருந்து ரூ. 100 பொருள்கள் இறக்குமதி செய்கிறதென்றும், இறக்குமதியாளர், இங்கிலாந்து நாட்டின் ஏற்றுமதியாளருக்கு அவர் இந்திய வங்கியில் வைத்துள்ள கணக்கில் அத் தொகையைச் செலுத்தி விடுகிறார் எனவும் கொள்வோம். இந்தியாவில் இங்கிலாந்துக் கணக்கு அதிகரித்துள்ளதென்றால், இந்தியாவின் பொறுப்புகள் மிகையாக உள்ளன என்று பொருள். அதாவது, 'உள்வரு மூலதனம்' (Capital inflow) வரவு செய்யப்படுகிறது என அறிய வேண்டும். இந்த நடவடிக்கை செலுத்துநிலையில் கீழ்க்கண்டபடி பதிவு செய்யப்படும்:

இந்தியாவின் செலுத்து நிலை

	பற்று	வரவு
இறக்குமதி	ரூ. 100	
உள்வரு மூலதனம்		ரூ. 100

இரு நடவடிக்கைகளையும் (ஏற்றுமதி, இறக்குமதி) ஒன்றுக இணைத்தால் மூலதனக் கணக்குகள் ஒன்றுக்கொன்று ரத்தாகி விடும். எஞ்சியிருப்பது ஏற்றுமதியும் இறக்குமதியும். அவையும் ஒன்றுக்கொன்று சமமாக இருத்தலைச் செலுத்துநிலையில் பதிவு செய்யப்படுகிறது.

இந்தியாவின் செலுத்து நிலை

	பற்று	வரவு
இறக்குமதி	ரூ. 100	
ஏற்றுமதி		ரூ. 100

இந்தியக் குடிமகன் ஒருவன் இங்கிலாந்து நாட்டுக் குடிமகனுக்குக் குறிப்பிட்ட பணம் கொடையாக அளிக்கிறான் என்றால், இந்தியக் கணக்கில் (அல்லது, அவனுடைய வங்கிக் கணக்கு) அவன் பணம் செலுத்துகிறான் எனப் பொருள். இதனால் இந்தியப் பொறுப்புகள் அதிகரிக்கின்றன. அதாவது, உள்வரு மூலதனம் ஏற்படுகிறது. எனவே, 'வரவு' செய்யப்பட வேண்டும். அதே போன்று, இங்கிலாந்திலிருந்து ஏற்றுமதியோ பணமோ வருவ

தில்லை. ஆகவே, பற்று செய்யப்பட வேண்டியவை, 'கொடைக்கள்' ஆகும்.

செலுத்து நிலை எப்போதும் சமமாக இருக்கும் (The balance of payments always balances) :

இருநிலைப் பதிவு முறைப்படி செலுத்து நிலையில் கணக்குப் பதிவு செய்யப்படுவதால் பற்றும், வரவும் சமமாகவே இருத்தல் வேண்டும். ஆனால், மதிப்பிட்டாளர்கள் ஒவ்வொரு வகையையும் தனித்தனியாக மதிப்பிடு செய்து (செலுத்து நிலை தயாரிக்கும் போது) பற்றுக்கூறுகளையும், வரவுக்கூறுகளையும் தனித்தனியாகக் கூட்டிப் பார்த்து, இரண்டும் சமமாக இல்லாவிட்டால், வேறுபாடு காட்டும் தொகையைப் 'பிழையும் விடுதலும்' (Errors and omissions) என்ற தலைப்பில் குறித்துவிடுகின்றனர். பிழை ஏற்படுவதற்கு வாய்ப்புண்டு; தவிர்க்க முடியாது. ஏனென்றால், ஏற்றுமதியையும், இறக்குமதியையும் மதிப்பிடும் போது அவ்வளவு துல்லியமாக மதிப்பிட முடியாது. குடியிருப்பாளர்களின் அடுத்தடுத்த இடப் பெயர்வு காரணமாக மூலதனக் கணக்குகளில் (Capital Accounts) குழப்பமேற்பட்டுவிடும். எடுத்துக்காட்டாக, இந்தியாவில் வங்கிக் கணக்கு வைத்திருக்கும் ஒரு இலண்டன் நபர், தமது குடியிருப்பை இந்தியாவிற்கு மாற்றுகிறார் எனக் கொள்வோம். உடனே, இந்திய வங்கிப் புத்தகத்தில், "வெளி நாட்டுக் குடியிருப்பாளர்களுக்குக் கொடுக்கப்பட வேண்டியவை" என்ற தலைப்பிலிருந்து, "உள் நாட்டு வைப்பாளர்களுக்கு" என்ற தலைப்பிற்கு அவர் கணக்கை மாற்றம் செய்ய வேண்டும். இக் கணக்கு மாற்றத்தால் வெளி நாட்டவருக்கான பொறுப்புகள் குறைவதால் 'வெளிச்செல் மூலதனம்' இடம் பெறுகிறது. (அதாவது, பற்று). ஆனால், எந்தவிதப் பன்னாட்டு நடவடிக்கைகளும் இங்கு இடம் பெறவில்லை என்பதை மாணவர்கள் கவனிக்க வேண்டும். வேறு எல்லா வகை நடவடிக்கைகளும் சரியாக மதிப்பிடப்பட்டுச் செலுத்து நிலை தயாரித்தால், அந்தப் பற்றுக் கூற்றுக்கு (Debit entry) ஒரு வரவு கூற்று (Credit entry) தோற்றுவித்துச் சரி செய்ய வேண்டும்.

செலுத்து நிலை சமமாக இருந்தால் நாடு செலுத்து நிலைக் கஷ்டங்களிலிருந்து விடுபட்டிருக்கிறது என்று எப்போதும் பொருள் கொள்ளக் கூடாது, அல்லது அந்நியச் செலாவணியின் தேவை, அளிப்புக்குச் சமமாக இருக்கிறதென்றும் எடுத்துக் கொள்ளக்கூடாது. மொத்தப் பற்றும், மொத்த வரவும் சமமாக இருந்தால்தான் செலுத்துநிலை சமநிலையில் இருக்கும் என்று பொருளல்ல. சிலவகைப் பற்று இனங்களும் (Debit items),

வரவு இனங்களும் சமமாக இருந்தாலே போதுமானதாகும். அல்லது நடப்புக் கணக்கிலுள்ள (Current Account) கூடுதல் குறைவு, மூலதனக் கணக்குப் பதிவுமூலம் சரிப்படுத்தப்படுமே யானால் நடப்புக் கணக்கு சமநிலையில் இருக்கவேண்டுமென்ற அவசியமில்லை. இனி, செலுத்து நிலையிலுள்ள நடப்புக் கணக்கு, மூலதனக் கணக்கு, பொன் கணக்கு மற்றும் 'பிழையும் விடுதலும்' போன்ற பல்வகைக் கணக்குகளைப்பற்றி விரிவாகக் காண்போம்:

நடப்புக் கணக்கு (Current Account):

நாட்டு வருமானத்தைச் சார்ந்தோ, நாட்டு வருமானத் திற்குக் காரணமாகவோ உள்ள நடவடிக்கைகள் நடப்புக் கணக்கில் அடங்கும். அதாவது, ஏற்றுமதி, இறக்குமதிப் பொருள்கள் மற்றும் புலனுகா வகைகள் (Invisibles) — கப்பல் போக்குவரத்துக் கட்டணம், முதலீட்டின் வருமானம், வாட கைகள், உரிமைத் தொகைகள் (Royalties), காப்பீட்டுக் கட்ட ணங்கள் மற்றும் கொடைகள் ஆகியவையாகும். இவை எல்லா இனங்களிலும் பன்னாட்டுக்கான வாணிகச் சரக்கு அல்லது புலனுகும் வாணிகப்பேர இனந்தான் மிகவும் முக்கியமானதாகும். பற்றுக்கும் வரவுக்கும் (இறக்குமதி, ஏற்றுமதி) உள்ள வேறுபாடு தான் வாணிக நிலை (Balance of trade) எனப்படும். இறக்கு மதியைவிட ஏற்றுமதி கூடுதலாக இருந்தால், 'சாதக வாணிக நிலை' (Favourable Balance of trade) என்றும், ஏற்றுமதியைவிட இறக்குமதி கூடுதலாக இருந்தால், 'பாதக வாணிக நிலை' (Unfavourable balance of trade) என்றும் கூறப்படுகிறது. நடப்புக் கணக்கைப்பற்றி ஓரளவுக்கு அறியவேண்டுமென்றால் 'வாணிக நிலை' பெரிதும் துணைபுரிகின்றது.

பணிகள் (Services):

நடப்புக் கணக்கில் 'பணி' இனங்களோ, புலனுகா ஏற்றுமதி இறக்குமதி என்று சில சமயங்களில் கூறுவதுண்டு. காப்பீடு, வங்கிப்பணி, கட்டணம் (Freight), உரிமைத் தொகைகள், சுற்றுலாச்செலவுகள் போன்றவை பணி செய்வதற்காகச் செலுத்தப்படுபவைகள். முதலீட்டிற்கான வட்டி (Interest on investment), கடன் கொடுத்த பணிக்காகச் செலுத்தப்படுவதாகும். தொழில் முனைவோன் (Entrepreneurs) உழைப்புக்காகக் கிடைப் பதுதான் இலாபம் எனப்படுவதாகும். இவ்வினங்கள் நடப்புக் கணக்கில் சேர்க்கப்படுபவையாகும்.

அரசு நடவடிக்கைகள் அனைத்தும் நட்புக் கணக்கில் சேர்க் கப்பட வேண்டுமா என்றால் சிறிது ஐயம் எழத்தான் செய்யும்.

அரசுச் செலவுகள் நாட்டு வருமானத்தின் ஒரு பகுதி எனப்படுவ தால் அவைகள் நிச்சயமாகச் சேர்த்துக்கொள்ளப்படவேண்டும். போர்க்கருவிகளுக்காக அயல் நாடுகளுக்குச் செலுத்தப்படும் தொகை அல்லது அயல் நாட்டவருக்குக் கொடுக்கப்படும் விமான தளவாடகை, நடப்புக்கணக்கில் சேர்க்கப்படவேண்டும். ஆனால், அயல் நாடுகளுக்கு அரசு உபரிச் சொத்துகளை விற்றல், இழப் பீட்டுத்தொகை செலுத்துதல் (Reparation payments), உதவித் தொகை அளித்தல் (Grants) போன்ற இனங்கள் நடப்புக் கணக்கில் சேர்க்கப்படாமல் வேறு கணக்குகளின்கீழ்ச் சேர்க்கப் பட வேண்டும். தனிநபர்களின் வருமான மாற்றங்கள் (Transfer of Income) போன்ற நடவடிக்கைகள் நடப்புக்கணக்கில் பொது வாகச் சேர்க்கப்படலாம். அரசின் நடவடிக்கைகள், எடுத்துக் காட்டாக, இழப்பீட்டுத்தொகை மாற்றம் மூலதனக் கணக்கில் சேர்க்கப்படவேண்டும் எனப் பழங்கருத்துக்கொண்ட பொரு ளியல் வல்லுநர்கள் கூறுகின்றனர். ஆனால், பன்னாட்டுப் பண நிதியும் (International Monetary fund), அமெரிக்க வணிகத் துறையும் அந்நடவடிக்கை நடப்புக்கணக்கிலோ, மூதலனக் கணக்கிலோ சேர்க்கப்படாமல் தனியான ஒரு தலைப்பின்கீழ், அதாவது 'மாற்றுகைகள்' (Transfer) என்ற தலைப்பின்கீழ் சேர்க் கப்படவேண்டுமென்று கூறுகின்றன.

புலனாகும் நடவடிக்கைகளை மதிப்பீடு செய்வதைவிட இம் மாதிரியான புலனாகா நடவடிக்கைகளை மதிப்பீடு செய்வது மிகவும் சிக்கலானதாகும். பிழைகளும் விடுதல்களும் ஏற்படுவது தவிர்க்க முடியாததாகும்.

மூலதனக் கணக்கு (Capital Account) :

பிற நாட்டவர் கொடுக்கவேண்டிய தொகைகளும், பிற நாட்டவர்கட்குக் கொடுக்கப்பட வேண்டிய பொறுப்புகளும் மூலதனக் கணக்கில் குறிக்கப்படுகின்றன. மூலதனம் உள் வந்தால், வரவு செய்தல் வேண்டும்; வெளிச்சென்றால் பற்று செய்தல் வேண்டும். இவ்விதி, மூலதனக் கணக்கு நடவடிக்கை களுக்கு மட்டுந்தான் பொருந்தும். அதே போழ்து, வணிகப் பொருள்கள் ஏற்றுமதி, பிணையங்கள் ஏற்றுமதி நடவடிக்கைகள் வரவுப் பதிவாகும்; பொருள்கள், பிணையங்கள் இறக்குமதி நட வடிக்கைகள் (மூலதனம் வெளிச்செல்லுதல் அல்லது ஏற்றுமதி செய்தல்) பற்றுப் பதிவாகும். மிகவும் உன்னிப்பாகக் கூறப் போனால் மூலதன ஏற்றுமதியும், பொருள்கள் இறக்குமதியும் அந்நியச் செலாவணிச் சந்தையில் (Foreign Exchange Market) அந்த நாட்டின் செலாவணி அளிப்பை (Supply) அதிகரிக்கச்

செய்கின்றன; மூலதன இறக்குமதியும் பொருள்கள் ஏற்றுமதியும் செலாவணித் தேவையைக் கூடுதலாக்குகின்றன.

மூலதனக் கணக்கைப் பற்று, வரவு என்று இரு பிரிவுகளாகப் பிரிப்பதுடன், குறுங்கால, நெடுங்காலக் (Short term and Long term) கணக்குகளாகவும் பிரிக்கலாம். கால அடிப்படையில் பிரிக்கப்படுவது கடன் ஆவணங்களைச் (Credit instruments) சார்ந்து அமைகிறது. ஒரு ஆண்டுக் காலத்திற்குள் முதிர்வடையக் கூடிய ஆவணங்களைக் குறுங்கால மூலதனம் எனலாம். அதாவது, வங்கி வைப்புகள், பணவிடைகள் (Drafts), மாற்றுச் சீட்டுகள் (Bills of exchange), பேரேட்டுக் கணக்குகள் போன்றவை. ஒரு ஆண்டுக் காலத்திற்குமேல் முதிர்வடையும் ஆவணங்கள் நெடுங்கால மூலதனத்தின் கீழ் வருகின்றன. எடுத்துக்காட்டாக, நிறுமங்களில் சாதாரண பங்குகள் பெறல், நீண்ட காலக் கடன் அளித்தல், ஓர் ஆண்டிற்கு மேலுள்ள அடைமானங்கள் (Mortgages), பிணைமுறிகள் (Bonds) போன்றவை.

நடப்புக் கணக்கில் தனியார் துறை, அரசுத்துறை என்று பிரிக்கப்படுவதுபோல் மூலதனக் கணக்கிலும் நடவடிக்கைகள் இரண்டாகப் பிரிக்கப்படுகின்றன. இப்படியாக, பற்பல வகைகளில் மூலதனக் கணக்கு பிரிக்கப்படுகின்றது. எந்த நோக்கத்திற்காகச் செலுத்துநிலை தயாரிக்கப்படுகின்றதோ அதைப் பொறுத்துக் கணக்குகள் பிரித்து எழுதப்படுகின்றன.

செலாவணிப் பொற்கணக்கு (Monetary Gold Account) :

செலாவணிக்கில்லாத பொன், நடப்புக் கணக்கு இனங்களுடன் வாணிகச் சரக்காகச் சேர்க்கப்படுகிறது. செலுத்து நிலையிலுள்ள பொன்கணக்கு செலாவணிக்கான பொன்னைக் குறிக்கும். செலாவணிப் பொன், ஏற்றுமதி வரவு இனமாகச் செலுத்து நிலையில் குறிக்கப்படுகிறது; இறக்குமதி பற்று இனமாகப் பதிவு செய்யப்படுகிறது. சரக்குகள் ஏற்றுமதி இறக்குமதிக்கு என்ன விதியோ அதே விதிதான் இங்கும் பின்பற்றப்படுகிறது. பொற்சுரங்கங்களிலிருந்து பொன் உற்பத்தியை மைய வங்கி கொள்முதல் செய்தால், இதை ஒரு ஏற்றுமதி நடவடிக்கை எனக்கொண்டு செலுத்து நிலையில் பதிவு செய்ய வேண்டும். மைய வங்கியின் செலாவணிப் பொன் கொள்முதலைப் பற்று இனத்தில் பதிய வேண்டும். அதாவது, இறக்குமதிபோல் கருதவேண்டும். அந்த இரண்டு பதிவுகளும் ஒன்றுக்கொன்று சரிசெய்யப்பட்டுவிடும். இதில் குறிப்பிடத்தக்கது என்னவென்றால், எந்த விதப் பன்னாட்டு

நடவடிக்கையும் இங்கு நடைபெறவில்லை என்பதாகும். செலாவணிப் பொன், பின் உண்மையிலே ஏற்றுமதி செய்யப்பட்டால், மைய வங்கியினுல் பதியப்பட்ட பற்றுக்கூறு வரவுப்புதிவால் ரத்து செய்யப்படும். முன்னமே பதிவு செய்யப்பட்ட செலாவணியற்ற பொன் ஏற்றுமதிக்கான வரவுப்பதிவு அப்படியே நிறுத்தி வைக்கப்படும்.

*இந்தியாவின் செலுத்து நிலை (India's Balance of Payments), 1972–73:

வணிகச் சரக்குக் கணக்கில், 1971-72-ஐவிட 1972-73-ல் ஏற்றுமதி 22 சதவீதம் உயர்ந்ததால் ரூ. 340 கோடி உயர்ந்து, சென்ற ஆண்டைவிட நடப்பு ஆண்டில் பற்றுக்குறை ரூ. 438 கோடியிலிருந்து ரூ. 251 கோடிக்கு வந்தது. [இவ் வத்தியாய இடையில் அட்டவணை கொடுக்கப்பட்டுள்ளது.] இறக்குமதிக்கான செலுத்து நிலையில் 8 சதவீதந்தான் (ரூ. 153 கோடி) கூடியுள்ளது. நடப்புக் கணக்கில் வாணிபச் சரக்குகள் இல்லாத ஏனைய இனங்களில் ரூ. 87 கோடி குறைந்திருக்கிறது. இதற்குக் காரணம் 'அரசு மாற்று செலுத்தல்களின்' நிகர வரவில் (Net receipts on official transfer payments) குறைவு ஏற்பட்டதுதான். இதன் விளைவு, நடப்புக் கணக்கில் தொகை ரூ. 150 கோடி குறைந்து ரூ. 258 கோடிக்கு வந்துவிட்டது. கண்ணுக்குப் புலனுகா நடவடிக்கைகளினுல் வெளிச் சென்ற நிகரத் தொகை (covered under errors and omissions) பாதியாகி ரூ. 32 கோடிக்கு வந்துவிட்டபடியால், பிழைகளும் விடுதல்களும் சேர்ந்து நடப்புக் கணக்கில் ரூ. 184 கோடி குறைந்து, ரூ. 283 கோடிக்கு வந்துள்ளது. ஆனுல், மூலதன நடவடிக்கைகளில் வரவுகள் ரூ. 240 கோடி குறைந்து அது ரூ. 250 கோடிக்கு வந்துள்ளது. இப்படியாக 1971-72-ல் உபரி ரூ. 24 கோடி காட்டிய செலுத்து நிலை 1972—73-ல் ரூ. 33 கோடி பற்றுக்குறையைக் காட்டுகிறது. இதுதான் செலுத்துநிலையின் மேலெழுந்த (over all positions) வாரியான நிலையாகும். இனி, இனங்கள் ஒவ்வொன்றையும் தனித்தனியாக ஆய்வு செய்து நிலைமையைக் காண்போம் :

இறக்குமதிகள் :

1971—72-ல் மொத்த இறக்குமதிக்காகச் செலுத்துப்படும் தொகை (Import Payments) ரூ. 1994 கோடியிலிருந்து 1972—73-ல் ரூ. 2147 கோடிக்கு உயர்ந்துள்ளது. செலுத்தும் தொகை

* Reserve Bank of India Bulletin, December 1974, pp. 2269–2276.

உயர்வுக்கு முக்கிய காரணம், பொருள்களின் விலை, குறிப்பாக உரம், எண்ணெய், இரும்பு எஃகுப் பொருள்களின் விலை அதிகரித்ததுதான். பருத்தியின் உள்நாட்டு உற்பத்தி 20 சதவீதம் அதிகரித்ததால் அந்த அளவுக்கு நடப்பு ஆண்டில் இறக்குமதி குறைக்கப்பட்டது; அதேபோல்தான், உணவுப்பொருள்களின் இறக்குமதியும் 9 சதவீதம் குறைக்கப்பட்டது.

அரசுக் கணக்கில் இறக்குமதி 12 சதவீதம் அதிகரித்து ரூ. 1867 கோடியை எட்டியுள்ளது. ஆனால், தனியார் துறை (Private Account) கணக்கில் இறக்குமதி 1 சதவீதந்தான் கூடியிருக்கிறது. அதாவது, ரூ 779 கோடிக்கு வந்துள்ளது. கடைசிக் காலாண்டுக் காலத்தில் மிகையான அளவு அரசுக் கணக்கில் உணவுப் பண்டங்கள் இறக்குமதி செய்யப்பட்டதுதான் அரசுக் கணக்கு இறக்குமதியின் உயர்வுக்கு முக்கிய மான் காரணமாகும். தனியார் துறையில் எந்திரங்களின் இறக்குமதி 23 சதவீதமும், உரங்களின் இறக்குமதி 18 சதவீதமும் சென்ற ஆண்டைவிட நடப்பு ஆண்டில் அதிகரித்துள்ளது; ஆனால், இவ்வுயர்வு இரும்பு-எஃகுப் பொருள்களை 34 சதவீதம் குறைவாக இறக்குமதி செய்ததன் மூலம் சரிசெய்யப் பட்டது. இதுபோன்று இன்னும் பல பொருள்களின் இறக்கு மதியில் உயர்வும் தாழ்வும் ஏற்பட்டிருக்கின்றன.

ஏற்றுமதிகள் :

சென்ற ஆண்டைவிட (1971—72) நடப்பு ஆண்டில் ஏற்றுமதி 22 சதவீதம் உயர்ந்து ரூ. 1896 கோடிக்கு வந்துள்ளது. பொருள்களின் பன்னாட்டு விலை பரவலாக அதிகரித்ததாலும், ரூபாயின் மதிப்புக் குறைப்பாலும் இவ்வுயர்வு ஏற்பட்டிருக்கிறது எனக் கூறலாம். தோல் பொருள்களும், பின்னைக்குந்தான் குறிப்பாக, விலை உயர்வில் பெரிதும் பங்கு கொண்டன. புகையிலை ஏற்றுமதியிலும்-ருஷ்யாவுக்கும் வங்காள நாட்டிற்கும்—50 சதவீத உயர்வு ஏற்பட்டிருக்கிறது. பருத்தி, கம்பளி போன்ற பல பொருள்களின் ஏற்றுமதியிலும் கணிசமான அளவு உயர்வு காணப்படுகிறது.

கட்புலனாகா இனங்கள் (Invisibles) :

1971—72-ல் கட்புலனாகா இனங்களில் நிகர உபரியாக இருந்த ரூ. 37 கோடி 1972—73-ல் அடியோடு மறைந்து விட்டது. கொழும்புத் திட்டத்தின்கீழ் (Colombo Plan) கனடா அளித்துவந்த உதவித்தொகையில் ரூ 18 கோடி குறைக்கப் பட்டு ரூ. 10 கோடிதான் இந்தியாவுக்கு அளிக்கப்பட்டது.

இந்தியாவின் செலுத்துநிலை (முன்னணியான) (Preliminary)

(ரூபாய் கோடியில்)

(இனங்கள் (Items)	ஏப்ரல்-சூன் 1972	சூலை—செப் 1972	அக்-டிசம்பர் 1972	சனவரி, மார்ச் 1973	1972-73	1971-72	1970-71	1969-70
(அ) நடப்புக் கணக்கு :								
இறக்குமதிகள்:வி.கா.க.(CIF) *								
1. தனியார் துறை (Private)	181·2	211·8	182·0	204·1	779·1	773·8	646·2	628·6
2. அரசுத் துறை(Government)	249·5	295·4	322·9	499·6	1367·4	1219·8	1074·2	953·7
மொத்த இறக்குமதி (1+2) ..	430·7	507·2	504·9	703·7	2146·5	1993·6	1720·4	1582·3
ஏற்றுமதிகள்,க.வ.இ.(F.O.B.)§	443·7	474·8	451·2	525·3	1895·5	1555·4	1402·7	1403·9
வாணிப நிலை (Trade Balance)	+13·0	—32·4	—53·7	—177·4	—251·0	—438·2	—317·7	—178·4
செலாவணிக்கில்லாத பொன் இடப்பெயர்ச்சி (நிகர) .	—	—	—	—	—	—	+13·1	—
அரசுமாற்றுசெலுத்தல்கள்(நிகர) (Official Transfer Payments)	—1·8	— 2·3	+42·1	+ 5·2	+ 43·2	+ 74·5	+53·1	+ 18·8
ஏனைய கட்புலனுகா இனங்கள் (நிகர)	—12·7	— 9·8	+ 2·4	— 23·7	— 43·8	— 37·8	— 79·9	— 57·4
நடப்புக்கணக்கு (நிகர)	— 1·5	—44·5	— 9·2	—196·4	—251·6	—401·5	—331·4	—217·0

(ஆ) பிழைகளும் விடுதல்களும்	−52·7	−49·9	−51·0	+122·0	−31·6	−65·2	−78·7	−14·4
(இ) மூலதனக் கணக்கு :	−0·9	−2·5	+3·8	−7·9	−7·5	−4·3	−30·4	−34·2
தனியார் மூலதனம் (நிகர)	−0·7	−2·4	+3·9	−7·7	−6·9	−2·8	−29·4	−35·5
1. நெடுங்காலம்								
2. குறுங்காலம்	−0·2	−0·1	−0·1	−0·2	−0·6	−1·5	−1·0	+1·3
வங்கி மூலதனம் (நிகர)	+2·1	−4·6	−5·7	−9·3	−17·5	+9·4	−7·7	+14·6
அரசு மூலதனம் (நிகர)								
(Official Capital, Net)	+49·4	+39·9	+57·9	+127·6	+274	+560·1	+359·5	+488·9
1. கடன்கள் (Loans)	+116·0	+85·3	+169·0	+215·3	+585·6	+615·9	+655·7	+656·2
2. ப.ப. நி. யிலிருந்து எடுப்பு								
(I.M.F Drawings Net)	—	—	—	—	—	—	−154·0	−125·4
3. கடன் தீர் நிதி (Amortization)	−51·2	−55.2	−76 1	−62 6	−245·4	−210·1	−188·2	−178·5
4. பல்வகை (Miscellaneous)	−15·4	+10.1	−35·0	−25·1	−65·4	+154·3	+46 0	+136·6
மூலதனக் கணக்கு (நிகர)	+50·6	+32.8	+56·0	+110·4	+249·8	+565·2	+321·4	+469·3
ஈ. இருப்பு நிலை மாற்றம் : (அ+ஆ+இ) கூடுதல் (+)/ குறைத்தல் (—) .. [Movement in Reserves Increase (+)/Decrease (—)]	−3·6	−61.6	−4·2	+36·0	−33·4	+98·5	−88·7	+237·9

* வி. கா. க. (விலை, காப்பீடு, கட்டணம்) (Cost, Insurance, Freight)

§ க. வ. இ. (கப்பல் வரை இலவசம்) (Free on Board).

இங்கிலாந்து, ஆஸ்திரேலியா நாடுகள் 1971—72-ல் ரூ. 4 கோடிக்கு உணவுப் பொருள்கள் கொடையாக அளித்து வந்தன. ஆனால், நடப்பு ஆண்டில் அவ்வாறு எந்தவித உதவியும் இந்தியா பெறவில்லை.

'அரசு மாற்று செலுத்தல்களின்' உபரித்தொகை 42 சதவீதம் குறைந்து ரூ. 43 கோடிக்கு வந்துள்ளது. இந்த உபரித் தொகையும் வேறு கட்புலனாக இனங்களின் பற்றுக்குறையினால் சரிசெய்யப்பட்டுவிட்டது. சென்ற ஆண்டில் மொத்தம் செலுத்தப்பட வேண்டிய ரூ. 485 கோடி நடப்பு ஆண்டில் ரூ. 506 கோடியாக மாறியுள்ளது. இதற்குக் காரணம், கடனுக்குக் கட்டவேண்டிய வட்டி 10 சதவீதம் உயர்ந்து ரூ. 218 கோடிக்கு வந்துள்ளது. தனியார் துறை நிகர வரவுகளிலும் (Net private transfer receipts) 5 சதவீதம் குறைந்து ரூ. 154 கோடிக்கு வந்துள்ளது. சுற்றுலாவாளர்களின் செலவில் எந்தவித மாற்றமுமில்லை. ஆனால், வரவில் 20 சதவீதம் உயர்வு காணப்படுகிறது.

மூலதன நடவடிக்கைகள் :

சென்ற ஆண்டைவிட நடப்பு ஆண்டில் (1972—73) நிகர உள் வரு மூலதனம் பாதியாகி ரூ. 250 கோடியாக உள்ளது. எண்ணெய் நிறுமங்களினால் சென்ற ஆண்டு உள்வந்த மூலதனம் ரூ. 3 கோடி, நடப்பு ஆண்டில் செலுத்த வேண்டியதாயிற்று (capital out flow). கடன் தீர்த்தலுக்காக (amortization) தனியார் செலுத்தப்படுபவை 14 சதவீதம் அதிகரித்து ரூ. 41 கோடியாக உள்ளது. இதன் விளைவாக, நிகர மூலதன வெளியேற்றம் இருமடங்காகி ரூ. 8 கோடித் தொகையாகியது. வங்கித் துறையை (Banking Section) எடுத்துக்கொண்டால், ரூ. 9 கோடி நிகர உள்வரு மூலதனமாக இருந்தது ரூ. 18 கோடி நிகர வெளிச்செல் மூலதனமாக மாறியுள்ளது. கடன்தீர் செலுத்துபவைகள் ரூ. 32 கோடி சென்ற ஆண்டைவிட அதிகமாக அமெரிக்காவுக்கும், ருஷ்யாவுக்கும் கொடுக்கப்பட வேண்டியிருந்தது. பல்வகை மூலதன நடவடிக்கைகளில் (Miscellaneous Capital Transactions) 1971-72-ல் ரூ. 154 கோடி உள்வரு மூலதனமாக இருந்தது 1972-73-ல் ரூ. 65 கோடி வெளிச்செல் மூலதனமாக மாறியுள்ளது. இதற்குக் காரணம், 1972, சனவரி 1 முதல் 'சிறப்பு எடுப்பு உரிமை' (Special drawing Rights) இரத்து செய்யப்பட்டதாகும். கிழக்கு ஐரோப்பிய நாடுகளுக்குக் கொடுக்க வேண்டிய ரூபாய்ப் பொறுப்புகள் (Rupee Liabilities) குறைந்ததுந்தான். 'பொதுச்சட்டம்', 480 (Public Law 480) எண் 1 நடவடிக்கைகளின்படி வங்காள நாடு மற்றும் அமெரிக்க நாட்டிற்குக் கொடுக்க வேண்டிய ரூபாய்ப் பொறுப்புகள் குறைந்தது மற்றுமொரு காரணமாகும்.

செலுத்து நிலையில் சமநிலைக்கேட்டை திருத்தம் செய்தல் (Adjustment of Disequilibrium in Balance of Payments) :


சமநிலைக்கேடு என்றால், ஒரு நாட்டின் பன்னாட்டு நிலுவையில் பற்றுக்குறை அல்லது உபரி இருக்கிறது எனப் பொருள். பற்றுக் குறை என்பது ஒரு நாடு, பொருள்கள், பணிகள் மற்றும் முதலீட்டுச் சொத்துகளை விற்பதைவிட அதிகம் வாங்குகிறது என்றும், பொன், பணம் அல்லது அந்நியச் செலாவணியை இழக்கிறது என்றும் பொருள்படும். உபரி என்பது இதற்கு நேர்மாறான செயலாகும். உலகம் முழுவதையும் எடுத்துக்கொண்டு, சில நாடுகள் பற்றுக்குறையில் மூழ்கி இருக்கின்றன என்றால், மற்றவைகள் அதே தொகைக்கு உபரியில் இருக்கின்றன என்பது விதியாகும்.

சமநிலைக் கேடு ஏற்படுவதற்கு முக்கிய காரணம் ஏற்றுமதியும், இறக்குமதியும் சமமாக இல்லாததுதான். ஒரு நாட்டிற்குப் பற்றுக் குறை இரு வழிகளில் நேரிடலாம். ஒன்று, இறக்குமதி அதிகரிக்கலாம்; இரண்டாவது, ஏற்றுமதி குறையலாம். மக்களின் தேவை அதிகரிப்பால் இறக்குமதி கூடுதலாகலாம். மக்களின் தேவை மிகையாவதற்கு நாட்டின் மொத்த வருமான உயர்வு காரணமாகலாம். அல்லது ஒரு குறிப்பிட்ட வகைப் பொருள்களுக்கு 'இறக்குமதி நாட்டம்' (Propensity to import) மக்களிடையே உண்டாகலாம். இதேபோல், ஏற்றுமதி குறைவதற்கு அயல்நாட்டுத் தேவை குறைவானதே காரணமாகலாம். இவ்வாறு, ஏற்றுமதியினால் கிடைக்கப்பெற்ற அந்நியச் செலாவணியின் அளவு இறக்குமதிக்குச் செலுத்த வேண்டிய அளவுக்குக் குறைவாக இருந்தால் சமநிலைக் கேடு ஏற்படுகிறது. இச்சமநிலைக் கேடு எவ்வகையிலும் சரி செய்யப்படவேண்டும். இதனை சரி செய்வதற்கு மூன்று முக்கிய முறைகள் இருக்கின்றன. இவைகள் நாணய மாற்றுச் சந்தையை ஒழுங்குபடுத்திக் கட்டுப்படுத்துவதில் ஈடுபாடு கொண்டுள்ளன. அம்மூன்று முறைகளில் இரண்டு, பன்னாட்டு அளவிலும், ஒன்று, உள்நாட்டு அளவிலும் பங்கு பெறுகின்றன. அவை பின்வருமாறு:

1. 'நிலையான நாணய மாற்று வீதம்' (பொன்திட்டம்) (Fixed exchange rate) 2. 'மாறும் நாணய மாற்று வீதம்' (காகிதச் செலாவணித்திட்டம்) (Fluctuating exchange rate) 3. 'நாணய மாற்றுக் கட்டுப்பாடு' (Exchange control).

முதலாவது, நிலையான மாற்று வீத முறை, நாணய மாற்று வீதத்தை மாறுமல் இருக்கச்செய்கிறது. உள்நாட்டு மூலக் கூறுகளான (elements) பண அளவு, நாட்டு வருமானம், விலை மட்டம் வங்கி மற்றும் அரசுக் கொள்கை ஆகியவைகளும்

பன்னாட்டு அளவில் சமமாக இருக்க வைக்கமுடிகிறது. நிலையான மாற்று வீதத் திட்டத்திற்கு உகந்தது பொன் திட்டம் எனக் கூறலாம். இரண்டாவதான மாறும் மாற்று வீதத் திட்டத்தில் நிலையான மாற்றுவீத முறையிலுள்ள விலைவுகளுக்கு நேர்மாறுக விலைவுகள் இருக்கும். நாட்டு வருமானம், விலைமட்டம், வங்கி மற்றும் அரசுக் கொள்கை போன்றவை எந்நிலையில் இருந்தனவோ அப்படியே விடப்பட்டு, நாணய மாற்று வீதத்தைச் சரி செய்வதன் மூலம் பன்னாட்டு அளவில் அவைகள் சீரமைவு செய்யப்படுகின்றன (International adjustment). எடுத்துக்காட்டாக, காகிதச் செலாவணித் திட்டத்தைக்கொண்ட நாட்டில்



படம் 7. நிலையான மாற்று வீதம், மாறும் வீதம் மற்றும் மாற்றுக் கட்டுப்பாட்டு முறைகளில் சீரமைவு (Adjustment under F.E.R., Fluctuating Exchanges and E.c)

இவ்வாறு நாணய மாற்று வீதத்தைத் திருத்துவதன் மூலம் நாட்டின் பொருளாதாரக் கூறுகள் பன்னாட்டு அளவில் சீரமைப்புச் செய்யப்படுகின்றன. மூன்றாவது முறையான நாணய மாற்றுக் கட்டுப்பாட்டு முறை மேலே குறிப்பிட்ட இரண்டு முறைகளையும் கலந்த முறையாகும். இம்முறையில் நாட்டு வருமானம், பணத்தின் அளவு போன்றவை மாற்றம் செய்யப்படாமல், நாணய மாற்று வீதம் நிலைப்படுத்தப்படுகிறது. இதை அடைய இறக்கு மதிக்குத் தகுந்தாற்போல் ஏற்றுமதி கொண்டுவரப்படுகின்றது; அல்லது ஏற்றுமதிக்குத் தகுந்தாற்போல் இறக்குமதி கட்டுப்படுத்தப்படுகிறது.

இம்மூன்று முறைகளையும் சித்திரிக்கும் வகையில் மேலே உள்ள படம் 7 வரையப்பட்டுள்ளது.

அம்மூன்று முறைகளுக்குமுள்ள வேறுபாடுகள் சாதாரண தேவை அளிப்புக் கோடுகளின் மூலம் காட்டப்பட்டுள்ளன. படம் 7-ல் A—B அளவுக்கு F X என்ற நடைமுறையிலுள்ள (existing) நாணய மாற்று வீதத்தில் அந்நியச் செலாவணியின் தேவை (D—D) அளிப்பைவிட (S—S) அதிகரிக்கிறது. நிலையான மாற்றுவீத முறையில் FX மாற்று வீதத்தில் இறக்குமதி மற்றும் ஏற்றுமதியினுல் ஏற்பட்ட அந்நியச் செலாவணியின் தேவையும் அளிப்பும் சமமாக இருக்கும்படி அரசுக் கொள்கை (National Policy) அவ்வப்போது திருத்திக்கொள்ளப் படுகிறது. மாறும் மாற்று வீத முறையில் மாற்று வீதம் தடையில்லாமல் மாறுபடுவதற்கு (எடுத்துக்காட்டாக FX^1-க்கு) அனுமதிக்கப்படுகிறது. மாற்றுக் கட்டுப்பாட்டு முறையில் XB அளவுக்கு அந்நியச் செலாவணித் தேவை கோருவோருக்கு XA அளவு அளிப்புதான் கட்டுப்படுத்தப்பட்டு அளிக்கப்படுகிறது.

நிலையான மாற்று வீதம்: Fixed Exchange Rate

ஒரு நல்ல திட்டத்தின்கீழ் நாணய மாற்று வீதம் மாறுவிருக்கிறது என்றுல் அத்திட்டம் 'பொன் திட்டமே' யாகும். பொன் னைப்போன்ற ஒரு பொதுவான மதிப்பளவையோடு ஒவ்வொரு நாட்டுச் செலாவணியும் தொடர்பு கொண்டுள்ளது. அப்படியானுல் பல்வேறு நாடுகளின் செலாவணி முறைகளும் ஒன்றையொன்று சார்ந்திருக்கின்றன எனலாம். நிலையான தொடர்பு கொண்டிருந்தால் செலாவணி மாற்று வீதமும் நிலையாகவே இருக்க வேண்டும். அதாவது, ஒவ்வொரு நாட்டிலும் பொன்னின் வாங்கும் விலையும் விற்கும் விலையும் சமமாக இருந்து, நாட்டுக்கு நாடு செலவு இல்லாமல் (புறக்கணிக்கத்தக்க செலவு இருக்கலாம்) பொன்னின் இடப்பெயர்ச்சி இருந்தால் நாணய மாற்றுவீதம் சமமாகத்தான் இருக்க வேண்டும். இத்தத்துவம் 1914-க்கு முன்னர் இருந்த பொன் திட்டத்தின்கீழ் இருந்து வந்தது.

ஓர் எடுத்துக்காட்டு மூலம் பவுன்—டாலர் மாற்று இணைப்பைப்பற்றி (1931-க்குமுன்) பார்ப்போம். ஒரு டாலரில் பொன் அடக்கம் 23·22 குன்றிமணி எடை என்றும் (Grains), ஒரு அவுன்சு (=480 குன்றிமணி) பொன் விலை $ 20·67 என்றும் கொள்வோம். பிரிட்டனின் பவுன் ஸ்டெர்லிங்கின் பொன் னடக்கம் (Gold content) 113 குன்றிமணிகள் என்றுல் ஓர் அவுன்சு பொன் விலை $ 4·4s. 11d அல்லது ஏறக்குறைய £ $4\frac{1}{4}$ ஆகும். பொன்-டாலர் வீதப்பாட்டிலிருந்து (Ratio) இரு செலாவணி


களின் நாணய அச்சகச் சமன்பாட்டை (Mint-par) £ 1 = $ 4·87 என விவரிக்கலாம். இதே வீதம் மாறுமலிருக்கும் வரை எந்தக் காலத்திலும் இங்கிலாந்தில் £ 100 மதிப்புடைய பொன் அமெரிக்காவில் $ 487 மதிப்பாகும்.

நாணய மாற்று வீதம் பொன் விலைகளின் வீதப்பாட்டிற்கு வெகு நெருக்கமாகவே இருக்கும் (The exchange rate would stay very close to the ratio of Gold values) அமெரிக்க டாலரை ஒப்பிடும் போது பவுனின் மதிப்பு அதிகரிக்கிறது என்றால் பவுன் ஸ்டெர்லிங்குகளை வாங்க விரும்புவோர் அமெரிக்காவில் டாலரைக் கொடுத்துப் பொன்னை அடைந்து, அப் பொன்னை இங்கிலாந்திற்கு அனுப்பி, அங்கு பவுன் ஸ்டெர்லிங்குகளுக்காக விற்றுவிடுவர். இருந்தாலும், பொன்னை இங்கிலாந்திற்கு அனுப்பும் செலவுகளை—சத்தம், காப்பீடு, வட்டி போன்றவை—ஈடு கட்டும் அளவுக்கு நாணய மாற்று வீதம் சாதகமாக இருந்தால்தான் அவ்வாறு பவுன் ஸ்டெர்லிங்குகளை அடைவது இலாபகரமாக இருக்க முடியும். எடுத்துக்காட்டாக, பொன்னை எடுத்துச் செல்லும் செலவு அதன் மதிப்பில் 1 சதவீதம் என்று கொள்வோம். 100 அவுன்சு பொன்னை அமெரிக்காவில் $ 2067-க்கு வாங்கி $ 20·7 செலவில் இங்கிலாந்திற்கு அனுப்பினால், அதை £ 425-க்கு விற்க முடியும். இந்த வகையில் அடையப்பெற்ற ஒவ்வொரு பவுனின் விலையும் $ 4·92 ஆகும். $\left(= \frac{\$\ 2088}{£\ 425} \right)$. இந்த விலைதான் ஒரு பவுனின் 'பெரும அளவு' (Maximum) விலையாகும். இதற்குமேல் எவரும் விலை கொடுத்து வாங்க மாட்டார்கள்.

மறு புறமான இங்கிலாந்தை எடுத்துக்கொண்டால் ஆங்கிலேயர்கள் £ 1 = $ 4·82 என்ற வீதத்தில் டாலர்களை வாங்கி அமெரிக்காவிற்கு அனுப்பச் செய்வர். இதன் விளைவாக, அவர்களும் ஒரு பவுனுக்கு $ 4·82-க்குக் குறைவாக எந்தக் காலத்திலும் பெற்றுக்கொள்ள மாட்டார்கள். அதாவது, அவ்வீதத்திற்குக் குறைவாகப் பவுன் விற்காது.

இதிலிருந்து அறிவதென்னவெனில் பவுனின் மதிப்பு $ 4·82 மற்றும் $ 4·92 ஆகியவைகளின் வீச்சுக்குள் (Range) அடங்கி இருக்கும். இவ்வீச்சு (எல்லை) மதிப்புகள் "பொன் எல்லைகள்" (Gold-points) எனப்படும். இங்கிலாந்திற்கு £ 1 = $ 4·92 என்பது 'பொன்—இறக்குமதி எல்லை' (GolD-Import point) யாகும். £ 1 = $ 4·82 என்பது 'பொன்-ஏற்றுமதி எல்லை' யாகும் (Gold-Export point) பொன்னை எடுத்துச் செல்லும் செலவுகளைப்

பொறுத்து 'எல்லைகள்' மாறுபடும். சந்தையில் பொன் இறக்கு மதி மதிப்பிற்கு மேல் பவுன்களுக்குத் தேவை இருக்காது; பொன் ஏற்றுமதி மதிப்பிற்குக்கீழ் பவுன்களின் அளிப்பு இருக்காது. (There would be no demand for Pounds above the Gold import value, and no supply of them in the market below the Gold-Export value).



படம் 8. பொன் எல்லைகளுக்குள் நாணய மாற்று வீதம் நிர்ணயித்தல் (Establishing an Exchange rate between the Gold-points)

பொன் ஏற்றுமதி எல்லைக்கும் இறக்குமதி எல்லைக்கும் இடையில் தேவை மற்றும் அளிப்பால் நாணய மாற்று வீதம் நிர்ணயிக்கப்படுவது, படம் 8-ல் காட்டப்பட்டுள்ளது. தேவைக்கோடு எதிராகவும் (Negative) அளிப்புக்கோடு நேராகவும் (Positive) வகுந்து செல்வதால் ஊக நாணய மாற்று நடவடிக்கைகளைப் பொன் திட்டத்தின்கீழ் நிலைப்படுத்தமுடிகிறது. (Gold Standard conditions tended to create a stabilishing pattern of exchange speculation since the demand curve is negatively sloped and the supply curve positively). பவுன்களின் விலை நாணய அச்சகச் சமனுக்குக் கீழே சென்றால் ஊக வணிகர்கள் அப்பவுன்களை வாங்கி, அச்சகச் சமன் விலைக்கு மேலே செல்லும் போது விற்பனை செய்வர். இவ்வகை ஊக வணிகம் தேவை, அளிப்பின் நெகிழ்ச்சியை அதிகரிக்கச் செய்யும்; உண்மையிலேயே ஏற்பட வேண்டிய பொன்னின் இடப்பெயர்வைக் குறைக்கும். படத்தில், நாணய மாற்றுவீதம் நாணய அச்சகச்

சமனுக்குக் கீழாக இருப்பதாகக் காண்பிக்கப்பட்டுள்ளது. ஆனால், அம்மாற்றுவீதம் இரண்டு எல்லைகளுக்குள்—பொன் ஏற்றுமதி எல்லை, பொன் இறக்குமதி எல்லை—எங்கு வேண்டு மானாலும் இருக்கலாம்.

விலை—பொன்—இடப்பெயர்வுக் கோட்பாடு (Price—specie—Flow Theory)

பொன் இடப்பெயர்ச்சியால் அந்நியச் செலாவணிக்கான தேவையும் அளிப்பும் சமமாக்கப்படுதல் (Balancing) ஒரு குறுகிய கால நிகழ்ச்சியேயாகும். ஒரு நாடு பொன்னை ஏற்றுமதி செய்து கொண்டே இருக்கமுடியாது; ஒரு சமயத்தில் பொன் இருப்பு இல்லாமல் போய்விடும். அதே போழ்து, பொன் இறக்குமதி செய்வதற்கு எவ்வித வரையறையும் இருக்கமுடியாது. ஆனால், அதிலும் அளிக்கும் நாடு அளிக்கும் வரைதான் இறக்குமதி செய்ய முடியும். குறுகிய கால நாணய மாற்றுவீதத் திருத்து முறை நிரந்தரமான தில்லை என்றும் நெடுங்கால நாணய மாற்று வீதத் திருத்து முறை என்ன என்று பார்ப்போம் :—

விலை—பொன்—இடப்பெயர்வு கோட்பாடு என்பது தொன்மைப் பொருளியல் வல்லுநர்களின் கருத்தாகும். அவர்கள் கருத்துப்படி பொன் ஓட்டத்தின் விளைவாக விலை மாறுகிறது. அவ் விலை மட்டம் மாறுவதால் நாணய மாற்றுவீத வேறுபாடு திருத்தம் செய்யப்படுகிறது. தற்காலத்திய பொருளாதார வல்லுநர்கள், விலைமட்ட காரணியை அடியோடு மறுக்காமல் வருமான மாற்றந்தான் திருத்தத்திற்கு முக்கிய காரணம் என உரைக்கின்றனர்.

விலை—பொன்—இடப்பெயர்வு கோட்பாடு எப்படிச் செயல் படுகிறது எனப் பார்ப்போம். இறக்குமதி அதிகரித்தால் நாட்டை விட்டுப் பொன் வெளிச்செல்கிறது எனலாம். ஆனால், இவ்விடப் பெயர்ச்சி குறுங்கால நிகழ்ச்சியேயாகும். பொன் வெளியே சென்றால் உள்நாட்டில் பண அளிப்பு குறையும். ஏனென்றால், பொன்னே செலாவணியாக இருக்கலாம் அல்லது செலாவணிக்கு அடிப்படையாகவும் இருக்கலாம். பண அளிப்புக் குறைந்தால் வாங்குந்திறன் குறையும் எனவே, விலை மட்டமும் குறையும். இப்படியாக, பொன் வெளிச் செல்கையால் குறைவடையும் விலை மட்டம் நெடுங்காலத் திருத்த முறைக்கு ஒரு அடிப்படையாக விளங்கும்.

பொருள்கள் விலை குறைந்தால் ஏற்றுமதி உந்தப்படும். இதனால் படம் 7-ல் அளிப்புப் பட்டியல் வலப்புறமாக நகரும்.

அதாவது, ஒவ்வொரு நாணய மாற்று வீதத்திலும், பொருள்களின் விலை மலிவானதால், அதிகமான அளவுக்கு அந்நியச் செலாவணி கிடைக்கும். விலைக்குறைவால் இறக்குமதியும் குறையும். உள்நாட்டில் நுகர்வோர்களும் தாயகப் பொருள்களையே வாங்க முனைவர். இச் செயலினால் படம் 7-ல் அந்நியச் செலாவணியின் தேவை இடப்புறம் நகர்ந்து கீழ்நோக்கிச் செல்லும். ஒவ்வொரு நாணய மாற்று வீதத்திலும் தாயகப் பொருள்களின் விலை குறைவானதால், அந்நியச் செலாவணியின் தேவை குறைகிறது. இப்படியாக, பொன் ஓட்டம், ஒரு நாட்டின் பன்னாட்டு வாணிப நிலையைத் திருத்தம் செய்வதுடன் நாணய மாற்றுச் சந்தையையும் சரி செய்கிறது.

நிலையான மாற்றுவீதத்தில் வருமான மாற்றங்கள்:

பொருள்கள் ஏற்றுமதியினால் ஏற்றுமதியாளர்களுக்குக் கூடுதலான வருமானம் கிடைக்கிறது. இக் கூடுதல் வருமானம் உள்நாட்டிலேயே செலவு செய்யப்படும் அல்லது சேமிக்கப்படும். கூலி, சம்பளம், நுகர்ச்சிப் பொருள்கள் போன்றவைகளின் மூலம் செலவு செய்யப்படலாம். இப்படியாகச்செலவு செய்யப்பட்டவை ஆங்காங்கே வருமானமாக உருவெடுக்கும். நாட்டு வருமானம் அதிகமாகும். நாட்டு வருமானம் அதிகரிக்க வேண்டுமானால் உள்நாட்டுப் பொருள்கள், பணிகள் மேல் செலவு செய்யப்பட வேண்டும். ஆனால், அச் செலவு இறக்குமதிக்காகச் செய்யப்பட்டால் சங்கிலித்தொடர் போன்று செய்யப்பட்ட செலவீட்டில் விடுபாடு காணப்படும். அதே சமயத்தில் ஏற்றுமதியில் எவ்வித மாற்றமுமில்லை. ஏற்றுமதியினால் கிடைக்கக்கூடிய வருமானம் இறக்குமதியினால் குறைக்கப்படுகிறது. இறக்குமதியும் ஏற்றுமதியும் மாறினால் வருமானமும் மாறும். எடுத்துக்காட்டாக, ஒரு நாட்டில் இறக்குமதி குறைந்து, அதற்குச் செலவழிக்கப்பட வேண்டியவை உள்நாட்டுப் பொருள்களின்மேல் திருப்பிவிடப்பட்டால் நாட்டு வருமானம் உயரும். அவ்வாறு உயர்ந்த நாட்டு வருமானத்தில் ஒரு பகுதிகூடச் சேமிக்கப்படவில்லையெனில், வருமானம் கூடிக்கொண்டே செல்லும் ஆனால், முன்னமே இறக்குமதி எவ்வளவு குறைக்கப்பட்டதோ அந்த அளவுக்குப் புதிதாக இறக்குமதி செய்யப்படும்வரை அவ் வருமானம் அதிகரிக்கும். அதைத் தாண்டி அதிகரிக்காது. இப்படியாக ஏற்றுமதி, இறக்குமதியினால் ஏற்பட்ட வருமான மாற்றங்கள், பொன் இடப்பெயர்வுமூலம் செலுத்துநிலைச் சமநிலைக் கோட்டைச் சரி செய்கின்றன.

மாறும் நாணய—மாற்று வீதங்கள்

பொன் திட்டத்தில் நிலையான மாற்று வீதம் அடைய முடிந்த தால் செலுத்துநிலைச் சமநிலைக் கேடு தானுகவே சரி செய்யப் பட்டது. ஆனல், பொன் திட்டமின்றி வேறு திட்டங்களைக் கையாளும்போது நாணய மாற்று வீதம் மாறுபடுவதால், அதை நிலைப்படுத்தச் சில முறைகள் கையாளப்படவேண்டும். அம்முறை களுள் விலைவாசிகளை மாற்றம் செய்தல் ஒரு முறையாகும். விலை மட்டத்தை உயர்த்தியோ குறைத்தோ மாற்றுவீத மாற்றங் களைத் திருத்திச் சமநிலையை அடையலாம்.

மாற்று விலையைத் திருத்துவதன் மூலம் அந்நியச் செலா வணியின் தேவையையும், அளிப்பையும் சமநிலைக்குக் கொண்டு வரலாம். ஒரு குறிப்பிட்ட மாற்று விலையில் அளிப்பைவிட அந்நியச் செலாவணியின் தேவை அதிகமானுல் (படம் – 7) மாற்று விலையும் அதிகமாகும். இவ் விலை உயர்வு, புதிதாக அளிப்பு வரும்வரை அல்லது தேவை குறையும்வரை ஏற்படும். இப்படி மாற்றுவீத மாற்றத்தால் பன்னுட்டு வணிகத்திற்குரிய பொருள்களின் விலையும், உள்நாட்டுத் தேவைக்கான பொருள் களின் விலையும் மாறுபடுகிறது. பன்னுட்டு வாணிகப் பொருள் களின் விலை அதிகமானுல் உற்பத்தியாளர்கள் கூடுதலான அள வுக்கு, இலாப நோக்கைக் கருதி, உற்பத்தி செய்து, ஏற்றுமதி யைப் பெருக்குவர். இறக்குமதிப் பொருள்களுக்குப் போட்டியாக உள்நாட்டிலேயே அப் பொருள்களை உற்பத்தி செய்ய முனைவர் அல்லது முன்னமே போதாத காரணத்தால் இறக்குமதி செய்யப் பட்டவைகளின் உற்பத்தியை அதிகரிப்பர். இச் செயல்களால் இறக்குமதிகளின் மேலுள்ள செலவு குறையும். மாருக, பன் னுட்டுப் பொருள்களின் விலை குறைந்து, அதனுல் உள்நாட்டு நுகர்வுக்கான பொருள்களின் விலை குறைந்தால் இறக்குமதி கூடும்; ஏற்றுமதி குறையும்.

நாணய மதிப்பிறக்கம் செய்யப்பட்டால் பன்னுட்டுப் பொருள்களின் உள்நாட்டு விலை அதிகமாகும். ஆனல் இங்கு, ஏனைய நாடுகளில் (உலகில்) விலை மட்டம் மாறவில்லை எனக் கொள்ள வேண்டும். எடுத்துக்காட்டாக, இந்தியாவில் ஒரு மீட்டர் பருத்தித்துணி ரூ. 1½ ஆகவும், ஒரு கிலோ பிஸ்கட்டின் விலை ரூ. 10 ஆகவும் இருக்கிறதெனக் கொள்வோம். இங்கிலாந் திற்கும், இந்தியாவிற்கும் இடையே நாணய மாற்று வீதம் £ 1 = ரூ. 20/- என்றுல், அதே துணியின் விலை இங்கிலாந்தில் 1½ S. ஆகவும், பிஸ்கட்டின் விலை 10S. ஆகவும் இருக்கும். (போக்கு வரத்துச் செலவைப் புறக்கணிக்க வேண்டும்). நாணய மாற்றுச்

சந்தையில் பவுன் ஸ்டெர்லிங்கின் மதிப்பு இறங்கிவிட்டதெனக் கொண்டால் பொருள்களின் ஸ்டெர்லிங் விலையும் மாறுபடும். ஒரு பவுனின் மதிப்பு ரூ. 14-க்கு வந்துவிட்டது என்றால், துணி, பிஸ்கட்டின் மதிப்பு முறையே 2S 2d-க்கும், 14S 4d-க்கும் (ஏறக்குறைய) வந்துவிடும். இந்தியப் பருத்தி உற்பத்தியாளர்கள் உற்பத்தியை அதிகரித்து ஏற்றுமதியின்மேல் முழுக்கவனமும் செலுத்துவர். பிஸ்கட் உற்பத்தியாளர்கள் இறக்குமதியைக் குறைத்து உள்நாட்டு உற்பத்தியைப் பெருக்குவர்.

ஒரு பவுனின் மதிப்பு ரூ. 20-லிருந்து ரூ. 25-க்கு உயர்ந்தால் அப்பொருள்களின் விலை முறையே 1S 2d ஆகவும் 8S ஆகவும் குறையும். இதன் விளைவு, ஏற்றுமதிக்கு ஊக்கம் கெடும்; இறக்குமதிக்கு ஊக்கம் ஏற்படும்.

உலக விலை (World Price) அப்பொருள்களுக்கு மாறுகிறது எனக் கொண்டாலும், நாணய மதிப்பிறக்கம் செய்தவுடன் முதலில் ஏற்றுமதி கூடும், இறக்குமதி குறையும். மதிப்பு உயர்ந்தாலும் அதற்கு மாறுன விளைவுகள் ஏற்படும். ஸ்டெர்லிங்கின் மதிப்பு ரூ. 20லிருந்து ரூ. 14-க்குக் குறைகிறது எனக் கொள்வோம். துணி, பிஸ்கட்டின் விலை முறையே 2S·2d மற்றும் 14S·4d-க்கு உயராமல், இந்தியாவில் உலக விலை ரூ. 1·05 ஆகவும், ரூ. 7 ஆகவும் குறைந்துவிட்டது என்போம். இங்கிலாந்தில் இன்னமும் துணியின் விலை 1S·6d ஆகவும், பிஸ்கட்டின் விலை 10S ஆகவும் இருக்கிறது. ஆனால் உலகச் சந்தையில் விலை மாறிவிட்டது. இந்நிலையில் இந்தியாவிலிருந்து பிஸ்கட் ஏற்றுமதி செய்வது இலாபகரமாக இருக்காது. இங்கிலாந்துப் பொருள்கள் அந்நாட்டு மக்களுக்கு மலிவானவையாதலால் அவர்கள் இறக்குமதி செய்ய மாட்டார்கள். அதே சமயத்தில், ஏனைய நாடுகளும் இங்கிலாந்திலிருந்து இறக்குமதி செய்யப்படுவது இலாபகரமான தெனக் கருதுவதால், இங்கிலாந்தின் ஏற்றுமதி அதிகரிக்கும்.

இவ்வகை நாணய மாற்றுவீத மாறுபாட்டால் பன்னாட்டு வாணிபப் பொருள்களின் விலை திருத்தப்படுகிறது. விலை திருத்தப்படுவதால் ஏற்றுமதி, இறக்குமதி சரி செய்யப்பட்டு செலுத்துநிலை சமநிலையில் இருக்கமுடிகிறது.

வாங்குந்திறன் சமநிலைக் கோட்பாடு (Purchasing Power Parity Theory) :

பொன் திட்டம் முறிவடைந்தபின் நாணய மாற்று வீதத்தில் ஒரு நிலையில்லாமல் போய்விட்டது. ஏற்ற இறக்கங்கள் கட்டுக்

கடங்காமல் நிகழ்ந்தன. ஜெர்மெனியின் மார்க் மதிப்பு படுவீழ்ச்சி யடைந்ததோடல்லாமல், பவுன் ஸ்டெர்லிங்கின் உள்நாட்டு மதிப்பும், வெளிநாட்டு மதிப்பும் ஆட்டம் காணத் தொடங்கின. அதனால்தான், இங்கிலாந்து 1931-ல் கடைசியாகப் பொன் திட்டத்தைக் கைவிட்டது. அச் சமயத்தில்தான் சுவீடன் நாட்டுப் பொருளாதாரப் பேராசிரியர் கஸ்டவ் காஸ்ஸல் (Professor Gustav Cassel) என்பவர் 'வாங்குந்திறன் சமநிலைக் கோட்பாட்டை' வடித்தருளினார். ''இரு நாடுகளை எடுத்துக்கொண்டால், எந்த ஒரு நிலையில் ஒவ்வொரு நாட்டுச் செலாவணியும் அந்தந்த நாட்டில் வாங்கும் பொருள்கள் அளவுக்கு மாற்று நாட்டில் வாங்குகிறதோ, அந்த நிலையில் இரு நாடுகளுக்கிடையே தடையேதும் இல்லாமல் மாறுகிற நாணய மாற்றுவீதம் நிர்ணயிக்கப்படுகிறதென்பதை'' வாங்குந்திறன் சமநிலைக் கோட்பாடு விவரிக்கிறது. (It states that where the exchange rate between two countries is free to move without limit, it tends to approximate to the point where each currency will buy as many goods in the other country's market as in its own home market). சுருக்கமாகக் கூறினால், ஒரு செலாவணியின் வாங்குந்திறன் மற்றொரு செலாவணியின் வாங்குந்திறனுக்குச் சமமாகும். ஒரு நாணய மாற்று வீதத்தைக் குறிப்பதுதான் அக் கோட்பாட்டின் கூற்றாகும். ஒரு எடுத்துக்காட்டு மூலம் இதை விளக்குவோம் : ஒரு பொருள் இங்கிலாந்தில் ஒரு பவுன் என்றும், அமெரிக்காவில் $ 4·75 என்றும் இருந்தால் நாணய மாற்றுவீதம், எந்த நிலையில் இருந்தாலும், £ 1 = $. 4·75 என்ற வீதத்திற்கு வந்துவிடும். இந்த விதமான (Rate) $. 4·75 தான் 'வாங்குந்திறன் சமநிலை'யாகும்.

வாங்குந்திறன் சமநிலையை இரு நாடுகளுக்கிடையே கண்டறிவதென்பது மிகவும் கடினமான செயலாகும். பன்னூட்டு வாணிபத்தில் இரண்டுவகைப் பொருள்கள் மட்டும் இடம் பெறுவதில்லை. பல பொருள்கள் இடம் பெறுகின்றன. ஒவ்வொரு பொருளின் முக்கியத்துவம் உணரப்படவேண்டும். ஒரு சாராருக்கு முக்கியமான ஒரு பொருள் வேறொருவருக்கு முக்கியமாக இல்லாமல் போகலாம். இவ் விடர்ப்பாடுகளுக்கிடையே செலாவணிகளின் வாங்குந்திறன் கணக்கிடப்படவேண்டும். அவ்வாறு கணக்கிடப்படும் முறைதான் குறியீட்டெண் முறையாகும் (Index Numbers). வாங்குந்திறனும், நாணய மாற்று வீதமும் ஏறத்தாழ சமமாக இருந்திருக்கக்கூடிய ஏதாவதொரு ஆண்டைத் 'தள ஆண்டாக' (Base Year) எடுத்துக்கொண்டு, பின்வரும் ஏதாவதொரு ஆண்டோடு நிலைமையை ஒப்பிட்டு வாங்குந்திறன்

கூடியுள்ளதா குறைந்துள்ளதா என அறியலாம். விலை மட்டப் புள்ளி விவரம் சேகரிக்கும்போது மொத்த விற்பனை விலைகள் அல்லது சில்லறை விற்பனை விலைகள் அல்லது கூலிகள் அல்லது உற்பத்தி செலவுகளைக் கணக்கிற்கு எடுத்துக்கொள்வதா என்ற பிரச்சினை எழும். எந்த நோக்கத்திற்காகக் குறியீட்டெண் தயாரித்தாலும் முடிந்தவரை பிழைகளும் விடுதல்களும் தவிர்க்கப் படுதல் வேண்டும். குறியீட்டெண்ணைப் பயன்படுத்தி வாங்குந் திறனை இரு காலங்களுக்கிடையே ஒப்பிட்டு அதன் மாற்றத்தைக் கணக்கிடுவதை இனிக் காண்போம்: தள ஆண்டில் லண்டன்—நியூயார்க் நாணய மாற்றுவீதம் £ 1 = $ 4·866 ஆகவும், நாணயங்களின் வாங்குந்திறன் அதற்குச் சமமாகவும் இருந்ததாகக் கொள்வோம். 5 ஆண்டுகள் கழித்துப் பிரிட்டன் விலை வாசிகள் 100-லிருந்து 160-க்கும், அமெரிக்காவின் விலைவாசிகள் 100-லிருந்து 140-க்கும் உயர்ந்துள்ளன என்றும் அனுமானம் செய்வோம். ஐந்து ஆண்டுகள் கழித்து வாங்குந்திறன் சமன் நிலை என்னவாக இருந்தது எனப் பார்ப்போம்:

வாய்பாடு : $\frac{\text{அமெரிக்கக் குறியீட்டெண்}}{\text{பிரிட்டிஷ் குறியீட்டெண்}} \times$ தள ஆண்டின் நாணய மாற்றுவீதம்.

நமது எடுத்துக்காட்டுப்படி,

வாங்குந்திறன் சமநிலை $\frac{140}{160} \times \$\ 4{\cdot}866 = \$\ 4{\cdot}25$

(ஒரு பவுனுக்கு)

மேற்கோளில் பிரிட்டன் விலை 160-க்கும், அமெரிக்காவில் 140-க்கும், ஒரே நேராக (சமமாக) இராமல் அதிகரித்துள்ளதால், நாணய மாற்றுவீதம், நிச்சயமாக வாங்குந்திறன் சம நிலையை ஒட்டி இருக்காமல், சற்று விலகித்தான் (Divergence) இருக்கவேண்டும். அது, அச் சமநிலைக்கு மேலாகவோ, கீழாகவோ இருக்கலாம். அப்படி விலகி இருத்தலைச் சதவீதத்தில் (percentage) அளக்கலாம்:

(1) வாங்குந்திறன் சமநிலை $ 4·25 என்றும், நாணய மாற்று வீதம் $ 4·10 என்றும் எடுத்துக்கொண்டால், விலகல் —3·7 சதவீதமாகும்.

$$\left(\frac{\$\ 4{\cdot}10}{\$\ 4{\cdot}25} = 96{\cdot}3 = 100 - 3{\cdot}7\right)$$

(2) சம நிலை $ 4·25 எனவும், மாற்றுவீதம் $ 4·40 எனவும் கொண்டால் விலகல் — 3·4 சதவீதமாகும்.

$$\left(\frac{\$\ 4{\cdot}40}{\$\ 4{\cdot}25} = 103{\cdot}4 = 100 + 3{\cdot}4\right)$$

விலகல் நேராக (positive) இருந்தால் டாலரைவிடப் பவுனின் மதிப்பு அதிகம் எனப் பொருள். விலகல் எதிராக (Negative) இருந்தால் டாலரைவிடப் பவுனின் மதிப்பு குறைவு எனப் பொருள்.

பல்வேறு நாணய மாற்று வீதங்களில், தன ஆண்டில் வாங்குந்திறன் சமநிலையும், மாற்று வீதமுமான £ 1 = $ 4·866-ல், ஐந்தாவது ஆண்டில் ஒரு பொருளின் விலை இரு நாடுகளிலும் என்னவென்பதைக் கணக்கீடு செய்து கீழ்க்கண்ட அட்டவணையில் காண்பிக்கப்பட்டுள்ளது :

நாணய மாற்று வீதம்	ஸ்டெர்லிங் விலையில்		டாலர் விலையில்	
	பிரிட்டன் பொருள்	அமெரிக்கப் பொருள்	பிரிட்டன் பொருள்	அமெரிக்கப் பொருள்
$	£ . s . d	£ . s . d	$	$
4·40	1 12 0	1 10 10	7·04	6·80
4·25	1 12 0	1 12 0	6·80	6·80
4·10	1 12 0	1 13 2	6·56	6·80

மாற்றுவீதம் $ 4·40-ல் பவுனின் மதிப்பு அதிகரித்துள்ளது. அட்டவணைப்படி அமெரிக்கப் பொருள்கள் இரு நாடுகளிலுமே மலிவாக இருக்கின்றன. எனவே, அமெரிக்க ஏற்றுமதி அதிகரிக்கும்; இறக்குமதி குறையும். அதனால் இங்கிலாந்தின் செலுத்துநிலை பாதகமாக இருக்கும். டாலரின் தேவை மிகுதியாகும்; பவுனின் தேவை குறையும்.

மாற்றுவீதம் $ 4·10-ல் பவுனின் மதிப்பு வீழ்ந்திருப்பதால் பிரிட்டன் பொருள்கள் இரு நாடுகளிலுமே மலிவானவையாகும். இதன் விளைவாக அமெரிக்காவிலிருந்து இறக்குமதி செய்யப்படுவது குறையும். இங்கிலாந்து ஏற்றுமதி அதிகரிக்கும். இப்போது இங்கிலாந்தின் செலுத்துநிலை அதிகமாக இருக்கும்; டாலரின் தேவையைவிடப் பவுனின் தேவை கூடும்.

நடைமுறையிலிருக்கும் குறிப்பிட்ட நாணய மாற்று வீதத்தில், ஒரு நாட்டின் செலாவணி மிகைமதிப்பு செய்யப்பட்டால், அந்நாட்டின் விலைவாசிகள் உலக விலைமட்டத்திற்கு மேல் இருக்கும். செலாவணி மதிப்பிறக்கம் செய்யப்பட்டால், விலைவாசிகள் உலக விலை மட்டத்திற்குக் குறைவாகவே இருக்கும்.

நாணய மாற்று வீதங்கள் கட்டுப்பாடின்றி மாறினால் நாணய மதிப்பை மிகைப்படுத்தியோ குறைத்தோ அவைகளைத் திருத்தி ஒரு நிலையில் கொண்டுவர முடியும் என மேலே பார்த்ததிலிருந்து தெரிய வருகிறது. ஒரு நாட்டுச் செலாவணி மிகை மதிப்புச் செய்யப்பட்டால் பாதகமான வாணிப நிலையை அந்நாடு கொண்டுள்ளதென்று அறியலாம். அதாவது, ஏற்றுமதியைவிட இறக்குமதி அதிகம். இதனால் இரு விளைவுகள் ஏற்படுகின்றன: முதலில், உண்மையான நாணய மாற்றுவீதம் குறைகிறது (Depriciation). அதாவது, வாங்குந்திறன் சமநிலையை நோக்கி நகருகிறது என்பதாகும். இரண்டாவது, மிகையான இறக்குமதியினால் உள்நாட்டுப் பொருள்களின் அளிப்பு, அளவு கடந்து காணப்படும். இதன் விளைவாக உள்நாட்டுப் பொருள்களின் விலை சரியத் தொடங்கும். இச்செயல், வாங்குந்திறன், சமநிலையைத் தானாகவே நாணய மாற்றுவீத அளவிற்குக் கொண்டு செல்கிறது. இந் நிலையை ஒரு மேற்கோள்மூலம் விளக்குவோம். முன்னமே எடுத்துக்கொண்டபடி, நாணய மாற்றுவீதம் $ 4·40 ஆகவும், வாங்குந்திறன் சமநிலை $ 4·25 ஆகவும் கொள்வோம். இந்நிலையில் பவுனின் மதிப்பு மிகையானதாகும். இறக்குமதி உபரி பிரிட்டன் பொருள்களின் விலையை 160லிருந்து 157-க்குக் கொண்டுவந்து பாதகமான வாணிப நிலை உண்மை மாற்று வீதத்தை $ 4·35-க்குக் கொண்டுசெல்வதாகக் கொள்வோம். பின், வாங்குந்திறன் சமநிலையைக் கணக்கிட்டால் ஒரு பவுனுக்கு $ 4·35 கிடைக்கும். $\left(\frac{140}{157} \times \$\ 4{\cdot}866\right)$. ஆகவே, சமநிலை இப்போது $ 4·25-ல் இருக்காமல் புதிதாக $ 4·35-க்கு வந்து விட்டது.

இப்படியாக, இரு செலாவணிகளின் வாங்குந்திறனை ஒப்பிட்டு, இரண்டுக்கும் உள்ள மாற்று வீதத்தை நிர்ணயிக்க முடிகிறது.

திறனாய்வு (Criticism) :

(1) வாங்குந்திறன் சமநிலைக் கோட்பாட்டின்படி வாங்குந்திறனுக்கும், நாணய மாற்றுவீதத்திற்கும் நேரடித் தொடர்பு

இருக்கிறது. ஆனால், நடைமுறையில் அப்படியில்லை. வரி இடும் கொள்கை, ஊக வாணிகம் மாற்று மூலதன இடப்பெயர்ச்சி போன்ற காரணிகளால் நாணய மாற்று வீதம் மாறுபடுகிறது.

(2) பொருள்களின் விலையைக் கணக்கிடும்போது உள் நாட்டுக்கான பொருள்கள், பன்னாட்டுக்கான பொருள்கள் எனப் பாகுபடுத்தி அக் கோட்பாடு கூறவில்லை. நிச்சயமாக, ஒரு நாட்டில் உள்நாட்டுக்கான பொருள்களின் விலையும், பன்னாட்டுக் கான பொருள்களின் விலையும் வேறுபடும். மேலும், எவ்வகைக் குறியீட்டெண்ணை எடுத்துக்கொள்வதென்பதைக் குறிப்பிட்டுக் கூறவில்லை. பொதுவான விலைகள் அடங்கிய குறியீட்டெண்ணைப் பற்றித்தான் அக்கோட்பாடு கூறுகிறது.

(3) குறியீட்டெண் விலைகளைக்கொண்டு இரு நாடுகளின் செலாவணி மதிப்பை ஒப்பீடு செய்தால் உண்மை நிலை கிடைப்ப தென்பது ஐயத்திற்குரிய பொருளாகும். ஏனென்றால், குறியீட் டெண் கணக்கு செய்யும்போது பற்பல இடர்ப்பாடுகள் ஏற்படும். எடுத்துக்காட்டாக, பற்பல வகைப் பொருள்கள் தேவையில்லாமல் இடையிடையே குறுக்கிடலாம்; உள்நாட்டுக்கான பொருள்கள் பல பன்னாட்டுக்கான பொருள்களில் இடம் பெறலாம் அல்லது இடம் பெறுமலும் போகலாம். மொத்தத்தில், எந்த நோக்கத்திற் காகக் கணக்கீடு செய்கிறோமோ அது நிறைவேறுமல் போகலாம்; போக்குவரத்துச் செலவு காரணமாகப் பன்னாட்டுக்கான பொருள் களின் விலைகள் எல்லாச் சந்தைகளிலும் (நாடுகளில்) ஒரே அளவில் இரா.

(4) விலை மாற்றங்கள் மாற்றுவீத மாற்றத்திற்குக் காரண மாக அமைகின்றன என்றும், மாற்றுவீத மாற்றத்தால் விலை மட்டம் மாறுவதில்லையென்றும் அக்கோட்பாடு விவரிக்கிறது. ஆனால், நடைமுறையில் மாற்றுவீதம் மாறினால் இரு நாடுகளிலுமே பொருள்களின் விலை மாறுகிறது எடுத்துக்காட்டாக, மாற்று வீதம் 1 பவுனுக்கு $ 5 எனக் கொள்வோம் (அல்லது $ 1 = 4S) இங்கிலாந்திலிருந்து மூலதனம் அமெரிக்காவிற்கு வருகிறது எனக் கொண்டால் அமெரிக்க டாலருக்குத் தேவை அதிகரிக்கும். அதாவது, டாலரை நோக்கி மாற்று வீதம் உயரும். எடுத்துக் காட்டாக, $ = 5 S. இப்போது அமெரிக்க நாணயம் இங்கிலாந் திற்குக் கிராக்கியாகிவிடும். ஆகையால், அமெரிக்கப்பொருள் களும் கிராக்கியாகிவிடும். அமெரிக்காவிலிருந்து இங்கிலாந்திற்கு இறக்குமதி குறையும். இதனால் அமெரிக்கப் பொருள்களுக்குத் தேவை குறைவதால் விலையும் குறையத் தொடங்கும். அதே

சமயத்தில் பவுனின் விலை மலிவாகிவிட்டதால் (45 லிருந்து 55க்கு வந்தது) இங்கிலாந்துப் பொருள்கள் அமெரிக்கர்களுக்கு மலிவாகக் கிடைக்கும். இதன் பலனாக இங்கிலாந்துப் பொருள்களுக்குத் தேவை மிகும், விலையும் கூடும். இப்படியாக நாணய மாற்று வீத மாற்றத்தைத் தொடர்ந்து விலைவாசியும் மாறுகிறது.

(5) பொருள்கள், பணிகள் போன்ற நடவடிக்கைகள் பன்னாட்டு அளவில் நடைபெறுவதால் அந்நியச் செலாவணியின் தேவையும் அளிப்பும் ஏற்படுகின்றன என அச்சமநிலைக் கோட்பாடு எடுத்துரைக்கிறது. ஆனால், மூலதனம் ஒரு நாட்டிலிருந்து வேற்று நாட்டிற்கு இடம் பெயர்ந்தாலும் அந்நியச் செலாவணி தேவை - அளிப்பு இடம் பெறுகிறது.

(6) வாங்குந்திறன் சமநிலையினின்றுப் மாற்றுவீதம் தற்காலத்தில் சற்று விலகியே இருக்கும். அதற்குக் காரணம் தடையிலா பன்னாட்டு வாணிபம் நாடுகளுக்கிடையே இருப்பதேயாகும். உயர் வரி விதிப்பு, இறக்குமதித் தடை, இறக்குமதி ஒதுக்களவு (Quota), இறக்குமதி அனுமதி வழங்கல் போன்ற காரணிகளால் மாற்றுவீதம் மாறியிருக்கும்.

என்னதான் குறைபாடுகள் இருந்தாலும், வாங்குந்திறன் சமநிலைக் கோட்பாட்டின் மதிப்பு என்றும் வீண் போகாது. தடையில்லாமல் மாறக்கூடிய மாற்றுவீத காலத்தில், ஏறத்தாழ எந்த அளவுக்குச் சமநிலையினின்றும் மாற்றுவீதம் விலகிச் சென்றுள்ளது எனக் கண்டறிய இக்கோட்பாடு பெரிதும் துணைபுரிகிறது. மாற்று வீதத்தை நிலைபேருக்கம் செய்யும்போது, செலாவணிகளின் வாங்குந்திறனைக் கணக்கீடு செய்துதான் ஆகவேண்டும். ஒரு நாட்டில் வீக்க நிலை (Inflation) நிலவும்போது மாற்றுவீதம் ஒரு நிலையில் இருக்காது.

3.

நாணய மாற்றுக் கட்டுப்பாடு (Exchange Control) :

சமநிலைக்கேடு திருத்த முறைகளில் மூன்றாவது முறை நாணய மாற்றுக் கட்டுப்பாடாகும். பொன் திட்டம், மாறும் நாணய மாற்று வீதங்கள் ஆகிய முக்கியமான இருவகைத் திருத்த முறைகளைப் பார்த்தோம். நாணய மாற்றுச் சந்தையின் இயக்கத்தில் நேரிடையான குறுக்கீடு ஏதும் இல்லாதது அவ்விரு முறைகளுக்கும் பொதுவான ஒரு அம்சமாகும். "விலை மலிவான இடத்தில் பொருள்களை வாங்கிக் கிராக்கியாக உள்ள இடத்தில் விற்கலாம். மேலும், பன்னாட்டுச் செலுத்தல்களை எந்தச் செலாவணியிலும் செய்யலாம், எந்த அளவிலும் செய்யலாம், எந்தக் காரணத்

துக்கும் செய்யலாம்.'' மாறும் நாணய மாற்று வீதங்களால் திருத்தம் ஏற்பட்டாலும் சரி, மாறுத வீதங்களோடு பணச்சுருக்கத்தினால் திருத்தம் ஏற்பட்டாலும் சரி, (அல்லது இவை இரண்டின் கலவையினால் ஏற்பட்டாலும் சரி) செலாவணிகள் முழு அளவுக்கு மாற்றுரிமை பெற்றுள்ளன. அந்நியச் செலாவணியை விற்றுத் தன் நாட்டுப்பணத்தின் மதிப்புக்கு அரசு ஆதரவு தருவதுபோன்று ஏதாவது குறுக்கீடு ஏற்பட்டாலும், அது மறைமுகமான குறுக்கீடாகும். இதனால் சந்தைச் சக்திகளின் விளைவுகள் பாதிக்கப்படுமேயன்றி அச் சக்திகள் பாதிக்கப்படுவதில்லை. அவை தடையின்றி என்றும்போல் இயங்கலாம்

ஆனால், செலுத்துநிலை சமன் கேட்டிற்கு மற்றுமொரு எஞ்சிய திருத்தமுறை நாணயக் கட்டுப்பாடாகும். முதலில் கண்ட இரு முறைகளுக்கும் இதற்கும் அடிப்படையான வேறுபாடு ஒன்று உண்டு. சந்தை இயக்கச் சக்திகளை இது பொருட்படுத்துவதில்லை. அவ்விடத்தை அரசுக் கொள்கை பற்றிக்கொள்கிறது. பன்னாட்டு விலை ஒப்பீடுகளால் மட்டும் இறக்குமதிகளும் பிற நாட்டுச் செலுத்தல்களும் நிர்ணயிக்கப்படுவதில்லை நாட்டுக்கு எவை அவசியம் எனக் கருதப்படுகின்றனவோ, அவற்றாலும் நிர்ணயிக்கப்படுகின்றன. அரசுத் தலையீடு மறைமுகமாக இராமல் நேரிடையாக இருக்கிறது. ஆனால், பன்னாட்டுச் செலுத்தல்கள்மீது ஒரு கட்டுப்பாட்டுத் தொகுதியை விதிப்பதுதான் நாணய மாற்றுக் கட்டுப்பாட்டின் முக்கிய பணியாதலின், மாற்றுரிமையும் கைவிடப்படுகிறது.

முழுமையான நாணய மாற்றுக் கட்டுப்பாட்டு முறையில் அந்நியச் செலாவணிச் சந்தைமீது அரசின் முழு ஆதிக்கம் ஏற்படுகிறது. கீழ்க்கண்ட நேரிடையான நடவடிக்கைகள் போன்றவைகளை அரசு மேற்கொள்கிறது :–

1) இறக்குமதிகளின் மேல் காப்பு வரியை (Tariff) அதிகரித்தல் : இறக்குமதியைக் குறைத்து அந்நியச் செலாவணித் தேவையைக் குறைப்பதற்காகக் காப்பு வரிப் பளுவை அரசு சுமத்துதல் ;

(2) இறக்குமதிப் பொருள்களின் அளவை வரையறுத்தல் : ஒதுக்களவு முறை மூலம் குறிப்பிட்ட சில பொருள்களை மட்டும் இறக்குமதி செய்வதற்கு ஒரு நாடு அனுமதி வழங்குதல் ;

(3) ஏற்றுமதிகளின்மேல் வரி இடல், ஏற்றுமதிக்கு ஒதுக்களவு செய்தல், ஏற்றுமதிக்கான மான்யம் செய்தல் போன்றவை;

(4) நாணய மாற்று நடவடிக்கைகளுக்குத் தடை விதித்தல்.

நாணய மாற்றுத் தடைகள் (Exchange Restrictions) :

நாணய மாற்றுச் சந்தையில் தடையின்றி நடக்கும் நடவடிக்கைகளுக்கு எல்லா விதத் தடைகளும் அரசால் விதிக்கப்படுதலை அச்சொற்கள் குறிக்கின்றன. 1930-ல் பொருளாதார மந்தம் நிலவியபோது முதன் முதலில் அம்மாற்றுத் தடைகள் ஜெர்மெனி, டென்மார்க் மற்றும் அர்ஜெண்டினு நாடுகளால் வலியுறுத்தப் பட்டன. பல நாடுகளில் உலக வாணிகம் சுருங்கியது; மூலதன இடப்பெயர்வு ஒழுங்கற்று ஏற்பட்டது; செலுத்துநிலைப் பிரச்சினைகள் தலைதூக்கின; நாணய மாற்றுவீதத்தில் ஒரு நிலை இல்லை. இரண்டாம் உலகப் போர்க் காலத்தில் நிலைமை இன்னும் மோசமானதால் பெரும்நாடுகள் மாற்றுத் தடைகளை மேன்மேலும் அமுலாக்கின. வெளி நாட்டுச் செலுத்தல்கள் நேரடியாக மைய வங்கியிடந்தான் வர வேண்டும் என்றும், வெளி நாட்டுக்குச் செலுத்த வேண்டியவைகள் அரசு அனுமதி பெற்றுத்தான் செய்யப்பட வேண்டுமென்றும் அரசுகள் ஆணை பிறப்பித்தன. உலகப் போர் ஓய்ந்த பின்னும் பல நாடுகள் மாற்றுக் கட்டுப்பாடுகளை மேலும் வலியுறுத்தி நாணய மாற்று வீதத்தை 'முளையடிக்கவும்' (pegging) செய்தன. அதாவது, ஒரு குறிப்பிட்ட வீதத்தில்தான் நாணய மாற்று நடவடிக்கைகள் இடம் பெற வேண்டும்.

1930-ன் தொடக்க காலத்தில் 'மூலதன ஓட்டம்' அளவு கடந்து (Abnormal capital flows) நாடுகளை விட்டு வெளிச் சென்றதைத் தடுப்பதற்காகத்தான் கடுமையான மாற்றுத் தடைகள் விதிக்கப்பட்டன. கடுமையான தடைகள் போடப் பட்டதன் முக்கிய காரணம், பற்பல வழிகளில் மூலதனம் ஒரு நாட்டை விட்டு மாற்று நாட்டிற்குச் சென்றிருந்ததுதான். எடுத்துக்காட்டாக, ஜெர்மெனியிலிருந்து தானியக்கி உருப்படிகளை (Automobil eparts) பொன்னாலும், வெள்ளியாலும் செய்து 'வண்ணக்கூழ்' (paint) பூசி கார்களாகவும், பேருந்துகளாகவும் சுவிட்சர்லாந்திற்கு ஓட்டிச் சென்றிருக்கிறார்கள். பொன் ஆபரணங்கள் ஜெர்மெனியிலிருந்து கள்ளக்கடத்தலாக வேறு நாடுகளுக்கு எடுத்துச் செல்லப்பட்டிருக்கின்றன. ஏற்றுமதிப் பொருள்களுக்கு இடாப்பில் விலையைக் குறைத்துப் போட்டு (under invoicing), வேறுபடும் தொகை இறக்குமதி நாடுகளில் (ஏற்றுமதியாளர்களின்) வங்கிக் கணக்குகளில் வரவு வைக்கப் பட்டிருக்கின்றது. இதே போல், ஜெர்மென் இறக்குமதியாளர்கள் உண்மைத் தொகையைச் செலுத்தாமல் கூடுதலாகவே செலுத்தி, வேறுபடும் தொகையை அந்தந்த ஏற்றுமதியாளர்களின் நாடுகளி

லேயே கணக்குகளில் வரவு வைக்கும்படி செய்திருக்கிறார்கள். இது போன்று இன்னும் பற்பல வழிகளில் ஜெர்மெனியின் மூலதனம் வெளிச்சென்றிருக்கிறது. ஜெர்மெனியைப் போலவே மேலும் பல நாடுகளில் இது போன்ற பிரச்சினைகள் இருந்து வந்ததால் ஆங்காங்கே நாணய மாற்றுக் கட்டுப்பாடுகள் வலியுறுத்தப் பட்டன.

ஒரு முழுமையான நாணய மாற்றுக் கட்டுப்பாட்டுமுறை என்பது கீழ்க்கண்டவைகளைக் கொண்டதாகும். (1) செலாவணி யின் நாணய மாற்று விதத்தை, நாணய மாற்றுச்சந்தை விலைக்கு மேல் அரசு நிர்ணயித்தல்; (2) நாணய மாற்றுப் பேரங்கள் அனைத்தும் அரசின்கீழ் அல்லது அதன் பதிலாண்மை (Agency) மூலம் நடைபெறுதல்; (3) அயல் நாடுகளிலிருந்து அந்நியச் செலாவணியைப் பெறுவோர் அவைகளை அரசிடம் நிர்ணயிக்கப் பட்ட மாற்று விதத்தில் (official rate) விற்றல்; (4) அரசு அனுமதி யின்றி எவ்விதமான செலுத்தல்களையும் அயல் நாட்டுக்குச் செய்யக்கூடாது.

அந்நியச் செலாவணி பங்கீடு செய்யப்படுதல் (Exchange Rationing):

செலாவணி மாற்றுக் கட்டுப்பாட்டில், அந்நியச் செலாவணியின் அளிப்பைவிட தேவை அதிகமானால், இருக்கக்கூடிய அளிப்பை எந்தெந்த இனங்களுக்கு எவ்வளவு பங்கீடு செய்ய வேண்டுமென்ற பிரச்சினை கட்டுப்பாட்டு அதிகாரிகளுக்கு எழும். அப் பிரச்சினையை அவர்கள் எந்தவித பேதமும் காட்டாமல், நேர்மையாக இருந்து, தேவையான துறைகளுக்குப் பங்கீடு செய்ய வேண்டும். பொதுவாக, அயல்நாடுகளுக்குச் செலுத்தவேண்டிய கடன், பங்கு ஆதாயம் (Dividend) போன்றவைகளுக்குச் சற்றுத் தள்ளிப் போடலாம். பொருள்கள் இறக்குமதியிலும், 'அவசியப் பொருள்கள்', 'அவசியமற்ற பொருள்கள்' என இரண்டாகப் பிரித்து, 'அவசியப் பொருள்களுக்கு' முக்கியத்துவம் கொடுத்து அந்நியச் செலாவணி ஒதுக்கீடு செய்யவேண்டும்.

இரு முக வாணிப நிலுவைகளுக்குச் (Biltateral trade Balances) செலுத்துவதற்காகப் பங்கீட்டு முறை பெரிதும் உதவுகிறது. இரு நாடுகளின் நிலுவைகள் தீர்வக முறைப்படி (Clearing system) தேவையான செலாவணியைக்கொண்டு தீர்க்கப்படுகின்றன. அர்ஜெண்டினாவுக்கும் இங்கிலாந்திற்கும் இருமுக வாணிப உறவு ஏற்பட்டும், அர்ஜெண்டினாவுக்கும் அமெரிக்காவுக்கும் ஒருமுக வாணிப உறவு ஏற்பட்டும், இரு நாடுகளுக்குமே அர்ஜெண்டினா நிலுவை கொடுக்கவேண்டியிருந்தால், முதலிடம் இங்கிலாந் திற்குத்தான் கொடுக்கப்படும். ஏனென்றால், அது அர்ஜெண்

டினுவுக்கு ஒரு வாடிக்கை நாடாகிவிட்டது. இவ்விடத்தில்தான் இருக்கக்கூடிய அந்நியச் செலாவணி பங்கீட்டு முறைப்படி பேதங்காட்டி செலுத்தப்படுகிறது. மேலும், பேதங் காட்டுகை, தேவைப்படும் செலாவணியைப் பொறுத்தும் அமைகிறது. எடுத்துக்காட்டாக, டாலரின் அளிப்பு மிகையாகவும், பவுனின் அளிப்பு குறைவாகவும் இருக்கும்போது, டாலரைப் பெறக்கூடிய நாடுகளிடமிருந்து இறக்குமதி செய்வதற்குக் கோரிக்கைகள் அரசிடம் வந்தால் உடனடியாக அனுமதி வழங்கப்படும். ஆனால், பவுனைச் செலுத்தவேண்டிய பேரங்களுக்குத் தடை விதிக்கப்படும்.

பல நாணய மாற்று வீதங்கள் (Multiple Exchange Rates) :

நாணய மாற்றுக் கட்டுப்பாடுகளைப்பற்றி ஆய்வு செய்தபோது மிகை மதிப்புடைய நாணய மாற்றுவீதம் காரணமாக ஏற்று மதிகள் மந்தப்படுகின்றன என்றும், இறக்குமதிகளைக் கட்டுப்படுத்த வேண்டிய கட்டாயம் ஏற்படுகிறது என்றும் கண்டோம். வியாபாரச் சுருக்கத்திலிருந்து மீளும்பொருட்டு 1930 ஆம் ஆண்டு மந்த காலத்திற்குப்பின் பத்தாண்டுகளில் ஜெர்மெனி இருமுக வாணிக ஏற்பாடுகளைத் தொடங்கியது. இதன்விளைவாக, அந்நியச் செலாவணி செலுத்தல்கள் சிக்கனமாக்கப்பட்டன. இதே நோக்குடன் பல நாணய மாற்று வீதங்கள் முறை கையாளப்பட்டது. இம்முறையும் ஜெர்மெனியில்தான் முதன் முதலில் தோன்றியது. தடையிலா நாணய மாற்றுவீதம் அனுமதிக்கப்பட்டபோது ஒரே மாற்றுவீதக் கொள்கை கடைப்பிடிக்கப்பட்டால் போதுமானதாகும். ஆனால், கட்டுப்பாடுகள் கொண்ட மாற்றுவீத முறையில் ஒன்றுக்கு மேற்பட்ட வீதங்களைக் கையாளவேண்டியிருக்கிறது. அதாவது, நடவடிக்கையைப் பொறுத்துப் பேதங் காட்டப்படுகிறது. 1931-ல் ஹூவர் கடன் ஒத்தி வைப்புக்குப்பின் (Hoover Moratarium of 1931)[1]. அந்நிய நாட்டவருக்கான பொறுப்புகளை ஜெர்மென் மார்க் (Mark) அந்நியச் செலாவணி வீதப் பாட்டை ஜெர்மென் நாட்டுக்குச் சாதகமான ஒரு வீதத்தில் அந்நாடு செலுத்தியது. பற்பல தேவைகளுக்காகப் பற்பல வீதங்களை ஜெர்மென் நாடு கையாண்டது. இப் பல நாணய மாற்றுவீதக் கொள்கையின் நன்மைகளைக் கருத்தில் கொண்டு முக்கியமாக இலத்தீன் அமெரிக்க நாடுகள் அதைப் பயன்படுத்தின. இரண்

[1] Hoover Moratarium—A plan agreed upon in 1931 at the suggestion of President House of United States that for a period of one year all payments between the Allies of the first world-war, arising out of that war, and all reparations payments by the powers defeated in that war, should be suspended.

டுக்கு மேற்பட்ட வீதங்கள் பல நாடுகளால் காலப்போக்கில் பயன்படுத்தப்பட்டாலும் இரு வீத நாணய முறையயே பெரும்பா லான நாடுகள் பின்பற்றின.

இருவீத முறை :

இம் முறையில் இரண்டு நாணய மாற்று வீதங்கள் பயன்படு கின்றன. ஒன்று, அதிகாரபூர்வமானது. இதன் மதிப்பு எப்போ துமே மிகையாக இருக்கும். அனுமதிக்கப்பட்ட நடவடிக்கை களுக்கு மட்டும் பயன்படுவதாகும். மற்றது, பிற எல்லா நடவடிக்கைகளுக்குமான கட்டுப்பாடற்ற வீதமாகும். அளிப்பைப் பொறுத்தவரையில் மிகைமதிப்பான வீதத்தில்கூட விற்கூ யாகக்கூடிய ஏற்றுமதிகளுக்காக மட்டும் சாதாரணமாக அதிகார பூர்வமான வீதம் பயன்படும். இவ்வேற்றுமதிகளுக்கு, எடுத்துக் காட்டாக, பிரேசிலின் காப்பியையும், சிலியின் செம்பையும் கூறலாம். இவைகளின் அளிப்பு நிலைமை அந் நாடுகளில் மிகவும் சக்தி வாய்ந்தது. இத்தகைய ஏற்றுமதிகளினின்றும் கிடைக்கும் அந்நியச் செலாவணி முழுவதுமோ அதில் ஒரு பகுதியோ அதிகாரபூர்வமான வீதத்தில் அதிகாரிகளிடம் கொடுத்துவிட வேண்டும். எடுத்துக்காட்டாக, தாய்லாந்து உலகப் போருக்குப் பின் கையாண்ட நாணய மாற்றுக் கட்டுப்பாட்டு முறைப்படி அரிசி விற்றதனால் கிடைப்பதில் 100 சதவீதம் அரசிடம் கொடுத்துவிட வேண்டும். இரப்பர் விற்றதில் 20 சதவீதம் கொடுத்துவிடவேண்டும். வெள்ளீயம் விற்றதில் கொடுக்கவேண் டிய பங்கு அடுத்தடுத்து 50, 40, 20 சதவீதமாக இருந்தது.

தேவையைப் பொறுத்தவரையில் மிக அவசியமான இறக்கு மதிகளுக்கு மட்டுமே அதிகாரபூர்வமான விதத்தில் பணம் செலுத்த அனுமதிக்கப்பட்டது. அதிகாரபூர்வமான விதத்தில் அனுமதிக்கப்படாத நடவடிக்கைகளெல்லாம் தன்னிச்சையான வீதத்தில் நடக்கும். அவசியமற்ற பொருள்கள், போகப் பொருள்கள் ஆகியவற்றின் இறக்குமதிகள், அநேகமாக எல்லாக் கட்புலனாகா வாணிப நடவடிக்கைகள் மற்றும் மூலதன ஏற்றுமதி இறக்குமதிகள் ஆகியவை இவற்றைச் சேர்ந்தவை. இவ்வீதம் உண்மையாகவே தானாக மாறக்கூடியதாக இருப்பின், இப் பல்வேறு தேவைகளும் அளிப்புகளும் இடும் போட்டியில் இவை அனைத்தையும் தீர்க்கும் ஒரு வீதம் ஏற்படும். தன்னிச்சையான வீதம் கடுமையாக ஏறி இறங்கினால் சந்தையில் வாங்குநராகவோ விற்குநராகவோ நுழைந்து அதை நிலைப்படுத்த அரசு முயல லாம். இதன் அவசியம் ஏற்படாதிருக்கவோ மிகையாகக் கருதப் படும் அளவிற்கு மதிப்பிறக்கம் ஏற்படாது தடுக்கவோ தன்

னிச்சை வீதத்தில் அனுமதிக்கப்படும் நடவடிக்கைகளுக்கு அரசு வரம்பு குறிக்கலாம். அப்படியாயின் கள்ளச்சந்தை (Black-Market) ஏற்பட வாய்ப்புண்டு. பிற சந்தைகளின் அனுமதிக்கப் படாத நடவடிக்கைகள் இதில் இடம் பெறும். இவற்றைக் கண்டுபிடிப்பது மிகவும் கடினம். எனவே, சுற்றுலாவாணர்களின் செலவுகள், இலாபங்கள் அனுப்புவது, மூலதன மாற்று வகைகள் போன்ற கட்புலனுக இனங்களில்தான் இத்தகைய நடவடிக்கை கள் சாதாரணமாக நடக்கும்.

பல நாணய மாற்று வீதங்களின் தத்துவத்தையும் செயற் பாட்டையும் சில எடுத்துக்காட்டு மூலம் விளக்குவோம். தென் அமெரிக்க நாடு $ 1 = 5$ பீஸோக்கள் (pesos) என 'அதிகாரபூர்வ' வீதம் (official rate) கொண்டுள்ளது எனவும், மேலும் 2 வீதங்கள் "ஏற்றுமதி வீதம்" (Export rate) $ 1 = 7$ பீஸோக்கள், மற்றும் 'தடையிலா வீதம்' (Free rate) $ 1 = 10$ பீஸோக்கள் கொண்டுள்ளது எனவும் கொள்வோம். இவ்வீத விலைகளில் தேவையான டாலர்கள் அளிப்பு இல்லையெனில் மேலும் ஒரு மிகை வீதம் கொண்ட கள்ளச்சந்தை ஏற்படலாம். பிறகு, எந்த வகை டாலர் வரவுகள் மற்றும் செலுத்துதல்களுக்கு ஒவ்வொரு அதிகாரபூர்வ வீதங்கள் பொருந்தும் என நாணய மாற்று அதிகாரிகள் அறிவிப்பர். பல மாற்று வீதங்கள் மிகவும் சக்தி வாய்ந்த கருவியாகும்.

டாலருக்கான 'பல வாங்கும் வீதங்கள்' எவ்வாறு நாட்டி னுடைய டாலர் வரவுகளையும், ஏற்றுமதிகளையும் விளைபயன் (Influence) உண்டுபண்ணுகிறதெனப் பார்ப்போம் : உள் நாட்டினர் மேலை நாடுகளிலிருந்து கடன் பெறுவதை ஊக்கக் கேடு (Discourage) செய்யவேண்டுமென்று நாணய மாற்று அதிகாரிகள் கருதினால், கடன் வாங்கிய டாலர்களை 5 பீஸோக்கள் என்ற அதிகாரபூர்வமான வீதத்தில் விற்கவேண்டுமென அவர்கள் கட்டாயப்படுத்தப்படலாம்; மூலதன உள் ஓட்டத்தை ஊக்கு விக்க விரும்பினால் அந்த டாலர்களை ஏற்றுமதி வீதமான 7 பீஸோக்களுக்கோ, தடையிலா வீதமான 10 பீஸோக்களுக்கோ மாற்றுத்துறை அதிகாரிகள் வாங்க முனைவர். ஏற்றுமதிகளுக்காகப் பெறப்பட்ட டாலர்களுக்குச் செலுத்தும் விலை வீதங்கள், ஏற்றுமதி செய்யப்படும் பொருள்களின் வகைகளைப் பொறுத்து அமை கின்றன. சிலவகை ஏற்றுமதிகளுக்குப் பெறப்பட்ட டாலர்கள் அதிகாரபூர்வமான குறைந்த விலையாகிய 5 பீஸோக்களுக்கு ஒப்படைக்கப்பட வேண்டும். (The rates paid for dollars received for exports usually depend on the type of export in-

volved. Dollars received for some types of exports must be surrendered at the relatively low official price of pesos.)

பல மாற்று வீதங்கள் 'ஒரு நாட்டினுடைய செலுத்துதல் களையும் இறக்குமதிகளையுங்கூடப் பாதிக்கும். அதிகாரிகள் ஒரு குறிப்பிட்ட செலாவணியைக்கொண்டு செலுத்தப்படுவதை ஊக்குவிக்க நினைத்தால், அச் செலாவணியைக் குறைந்த விலையில் அளிக்க முன்வருவர்; ஒரு குறிப்பிட்ட வகை செலுத்து தலை ஊக்கங்குறைப்பு செய்யச் விரும்பினால் அந்நியச் செலா வணியை அதிக விலைக்கு விற்பர். எடுத்துக்காட்டாக, அந்நிய நாட்டுக் கடனுக்குச் செலுத்தவேண்டியவைகள் மற்றும் வட்டி, இலாப ஈவு மாற்றல் ஆகியவைகளைக் குறைக்க வேண்டு மென்றால், மிகையான தடையற்ற வீதமாகிய 10 பீஸோக் களுக்குத்தான் டாலர்களை விற்க அதிகாரிகள் முன்வருவர். இப்படியாக, பீஸோக்கள் கடன் பொறுப்புகளைக் குறைந்த அளவு டாலர்களில் தீர்த்துவிடுகின்றனர். சில முக்கியமான இன்றி யமையாத இறக்குமதிகளை ஊக்குவிக்கவும், பீஸோ விலை வீதத் தைக் குறைக்கவும், அதிகாரபூர்வ வீதமாகிய 5 பீஸோக்களுக்கு டாலர்களை விற்பர்.

செலுத்து நிலை சீர்குலைந்த நாடு, மதிப்பிறக்கம், பணச் சுருக்கம், நாணய மாற்றுக் கட்டுப்பாடுகள் ஆகியவற்றுக்குள் ஒரு சிறந்த வழியைத் தேர்ந்தெடுக்கும் கட்டாயம் இருந்தால், ஒவ் வொன்றின் நன்மை தீமைகளை நன்கு ஆய்வு செய்யவேண்டும். அடிப்படைப் பிரச்சினையை நாணய மாற்றுக் கட்டுப்பாடு தீர்ப்ப தில்லை. பற்றுக்குறையை மட்டும் அது சமாளிக்குமே தவிர, அதன் காரணங்களையல்ல. மாறாக, அவற்றை மேலும் மோச மாக்கிச் சமநிலைக் கேட்டை இன்னும் சற்று ஆழ்ந்ததாகச் செய்து விடும்.

நாணய மாற்றுத் தடைகள் மிதமாக இருக்கவேண்டும்; வேறு அடிப்படையான திருத்தங்கள் செய்யப்படும் வரை தற்காலிகமாக இருக்கவேண்டும்; இல்லாவிட்டால் நாணய மாற்றுக் கட்டுப்பாட்டினால் நட்டம் அதிகம் ஏற்படும்; அது விரும்பின பலனையும் தராது.

20. அந்நியச் செலாவணி
(Foreign Exchange)

'அந்நியச் செலாவணி' அல்லது 'நாணய மாற்று' என்பது பன்னாட்டு (வாணிப) நடவடிக்கைகளின் கொடுக்கல், வாங்கலுக்காகக் கையாளப்படுகிற 'முறை' அல்லது 'கருவி' யாகும். ஏற்றுமதியாளர் தம்மால் ஏற்றுமதி செய்யப்பட்ட நாட்டிலிருந்து பெறக்கூடிய செலாவணியைக்கொண்டு தம் நாட்டில் பேரங்கள் செய்ய முடியாது. இதேபோல், இறக்குமதியாளர் தம் நாட்டுச் செலாவணியை ஏற்றுமதி செய்த அயல் நாட்டவருக்கு அளிக்க முடியாது. இவ்விடர்ப்பாடுகளைக் களையும்பொருட்டுதான் நாணய மாற்றுச் சந்தை' (Foreign Exchange) உருவாகியுள்ளது. இச்சந்தை, 'பங்குமாற்றுச் சந்தை' (Stock Exchange Market) ஒரு குறிப்பிட்ட இடத்தில் இயங்குவது போல், இயங்குவதில்லை. நாணய மாற்றுச் சந்தை என்பது பல வங்கிகளையும், நிதி நிறுவனங்களையும் கொண்டதாகும். இச்சந்தையில் அயல் நாட்டுச் செலாவணிகள் வாங்கி விற்கப்படும். அப்போதுதான் ஏற்றுமதியும் இறக்குமதியும், கொடுக்கல் வாங்கலும் தடையில்லாமல் நடைபெறும்.


நாணய மாற்று நடவடிக்கைகளின் வகைகள்:

நாணய மாற்று நடவடிக்கைகளில் பல வகைகள் உண்டு. அந்நியச் செலாவணியைப் பெற விரும்புவர் 'ரொக்கத்திற்கு ரொக்கம்' (Cash for Cash) மாற்ற விரும்பலாம். உள்நாட்டுச் செலாவணியையோ, காசோலையையோ தம் வங்கியில் கொடுத்து அந்நியச் செலாவணியை அல்லது அயல் நாட்டு வங்கியில் செலாவணி பெறக்கூடிய ஏதாவது கோருரிமைகளை அவர் பெறலாம். அக் கோருரிமை (demand claim) தந்தி வழி மாற்றமாக (Cable transfer) இருக்கலாம். வெகு விரைவில் அயல் நாட்டவருக்குத் தந்தி வழி மூலம் செலாவணி மாற்றம் செய்யப்படும்; அல்லது பணம் செலுத்துபவர் தம் வங்கியிலிருந்து அயல் நாட்டவர் பெயருக்குப் பணவிடை எடுத்து (drafts) அப் பண

விடையைத் தபால்மூலம் பணம் பெறுவோருக்கு அனுப்பச் செய்யலாம். அப் பணவிடையைப் பெற்ற அயல் நாட்டவர், அங்குள்ள குறிப்பிடப்பட்ட வங்கியில் அப் பண விடையைச் செலுத்திக் குறிப்பிட்ட செலாவணித் தொகையைப் பெறுவர். சுற்றுலாவாணர்கள் 'பயணர் காசோலைகளை' (Traveller's Cheques) வாங்கி எடுத்துச் செல்கின்றனர்.

நாணய மாற்று நடவடிக்கைக்கான அவசியம் :

ஒரு வகைச் செலாவணியைக்கொண்டு வேறொரு வகைச் செலாவணியை அடைய விரும்பும் போதுதான் நாணய மாற்று நடவடிக்கையே ஏற்படுகிறது என முன்பே பார்த்தோம். நாணய மாற்றுச் சந்தை எவ்வாறு ஏனைய பொருளாதார நடவடிக்கைகளுடன் இணைந்து செயல்படுகிறது என்பதை மிக எளிமையான ஒரு வரைபடத்தின் மூலம் காணலாம்.



நாணயமாற்று நடவடிக்கைகள்: எளிமையான மேற்கோள் (Simplified View)

இங்கிலாந்திலிருந்து கனடாவுக்கு இறக்குமதியாகும் சரக்குகள், கனடா இறக்குமதி நிறுவனங்கள் மூலம் கையாளப்படுகின்றன என்றும், அந் நிறுவனங்கள் பவுன் ஸ்டெர்லிங்குகளை அளிக்கின்றன என்றும் கொள்வோம். இதே போல், இங்கிலாந்திற்கு ஏற்றுமதியாகும் சரக்குகள் கனடா ஏற்றுமதி நிறுவனங்கள் மூலம் செல்கின்றன என்றும், அந் நிறுவனங்கள் ஸ்டெர்லிங்குகளைப் பெறுகின்றன என்றும் அனுமானம் செய்வோம். இதைச் செயல்படுத்தத்தான் செலாவணி மாற்றம் நடைபெறுகிறது என மேலேயுள்ள படத்தில் விளக்கப்பட்டுள்ளது.

கனடா ஏற்றுமதி நிறுவனங்கள் ஸ்டெர்லிங்குகளைப் பெறுகின்றன. ஆனால், அதே ஸ்டெர்லிங்குகளைக்கொண்டு கனடாவில் ஏற்றுமதிச் சரக்குகளை வாங்க முடியாது. எனவே, ஏற்றுமதியாளர்கள், நாணயமாற்றுச் சந்தையில் தங்கள் வசமுள்ள ஸ்டெர்லிங்குகளைக் கொடுத்துவிட்டு டாலர்களைப் பெறுகின்றனர். இதற்கு மாறுகக் கனடா இறக்குமதியாளர்கள், கனடாக்காரர்களிடம் சரக்குகளை விற்று டாலர்களைப் பெறுகின்றனர். பெற்ற டாலர்களை நாணயமாற்றுச் சந்தையில் ஸ்டெர்லிங்குகளாக மாற்றுகின்றனர். மாற்றிய ஸ்டெர்லிங்குகளை இங்கிலாந்து ஏற்றுமதியாளர்களுக்கு அனுப்பி வைக்கின்றனர். இப்படியாக அந்நியச் செலாவணி ஒட்டம் ஏற்றுமதி, இறக்குமதியோடு ஒட்டி அமைந்துள்ளது. கனடாவின் ஏற்றுமதியால், கனடாக்காரர்களுக்குத் தேவையான இறக்குமதியைப் பெற அந்நியச் செலாவணி பெரிதும் துணை புரிகிறது.

இவ்விரண்டு நாடுகள் மட்டுமன்றி பிற நாடுகளுடன் வாணிபத் தொடர்பு ஏற்பட்டாலும், டாலரும், பவுன் ஸ்டெர்லிங்கும் தொடர்புபடுத்தப்படுகின்றன. இதன் விளைவாக, இங்கிலாந்து தவிர வேற்று நாடுகளுடன், கனடா வாணிகத் தொடர்பு கொண்டாலும், பவுன் ஸ்டெர்லிங்கை மறைமுகமாகப் பெற முடிகிறது. இங்கிலாந்துடன் நேரடி வாணிபத் தொடர்பு கொண்டும் ஸ்டெர்லிங்குகளைப் பெறுகிறது. பிற நாடுகளில் முதலீடு செய்தாலும் அந்நியச் செலாவணி தேவைப்படுகிறது. 'பணத்திற்குப் பணம்' என்பதற்கு மட்டுமல்லாமல், கடன் நடவடிக்கைகளுக்கும் அந்நியச் செலாவணி உதவி புரிகிறது. பொதுவாக, ஏற்றுமதியாளர் உடனடியாகப் பணத்தைப் பெற விரும்புவர். ஆனால், இறக்குமதியாளர் சிறிது காலந்தாழ்த்தித் தொகையைச் செலுத்த விரும்புவர். அவ்வாறு காலந்தாழ்த்திச் செலுத்தப்படும் போது தான் 'கடன் கருவிகள்' (Credit Instruments) அந்நியச் செலாவணி நடவடிக்கைகளில் பங்கு கொள்கின்றன. அக்கடன் கருவிகளாவன :—மாற்றுச் சீட்டுகள் (Bills of Exchange), கடனுறுதிச் சீட்டுகள் (Promissory Notes) போன்றவை. மேற்கூறிய சீட்டுகளை ஏற்றுமதியாளர் தம் வங்கியில் கொடுத்துக் கழிவு செய்து (Discount) பணத்தைப் பெறுவர். வங்கியர்கள் அச்சீட்டுகள் முதிர்வடையும்வரை வைத்திருந்து, முதிர்வடைந்தவுடன் ஏற்றுக்கொண்டவர்களிடமிருந்து (acceptors) பணத்தைப் பெற்றுக்கொள்வர். இதனால் அறிவதென்னவென்றால், ஏற்றுமதியாளர்களுக்கு உடனடியாகச் செலாவணி கிடைக்கிறது. அதே போது, இறக்குமதியாளர்கள் குறிப்பிட்ட காலங்கழித்துத்தான் பணத்தைச் செலுத்துகின்றனர். இருவரின் விருப்பமும் நிறைவு

செய்யப்படுகிறது. ஆனால், ஒவ்வொரு சீட்டையும் கழிவு செய்யும் போது வங்கியர் கழிவுத் தொகையை (Discount Charge)ப் பணம் பெறுபவரிடமிருந்து வசூலிப்பர்.

நட்டத் தடைப் பேரம் (Hedging) :

நாணய மாற்று வீதம் (Exchange rate) எப்போதும் ஒரே அளவில் இருக்காது. அதுவும் மாற்றுவீதக் கட்டுப்பாடுகள் இல்லையெனில் மாற்று வீதத்தில் அலைவு கூடுதலாக இருக்கும். ஒரு வகைச் செலாவணியில் சொத்துகளையும் பொறுப்புகளையும் கொண்ட ஒரு நிறுவனம், வேறு நாட்டிற்கு அந்நாட்டுச்செலாவணி மூலம் கொடுக்க வேண்டியிருந்தாலும் அல்லது அச் செலாவணியைப் பெற வேண்டியிருந்தாலும், மாற்று வீதம் மாறுபட்டால் அந் நிறுவனம் பெரும் இழப்புக்குள்ளாகலாம்; அல்லது இலாபமும் அடையலாம்.

நாணய மாற்று வீதத்தால் ஏற்படும் நட்டப் பொறுப்பைத் தவிர்ப்பதற்கு நாணய மாற்றுச் சந்தையில் உடன்பாடு செய்து கொள்ளலாம். இப்படியும் ஒரு வகைப் பணியை வணிகர்களுக்கு அச் சந்தை செய்கிறது. நட்டத் தடைப் பேரத்திற்கு 'முன்னேக்கிய பேரம்' (Forward dealing) எனப் பெயர். கீடுத்துக்காட்டாக, ஒருவர் மிக அருகாமையில் (near future) £5,000 பெறப்போவதாகவும், ஆனால், அப்போது நாணய மாற்று வீதம் அவருக்குச் சாதகமாக இருக்காது எனவும் வைத்துக் கொள்வோம். எதிர்காலத்திய நட்டத்தைத் தவிர்த்து டாலரை அடைய விரும்பும் அவர் வேண்டுமானால் முன்கூட்டியே £5,000-ஐயும் விற்றுவிடலாம். இப்படி விற்பதால் முன்னேக்கிய பேரப்படி எந்தவிதச் செலாவணியும் கைக்கு வராது; அதேபோல், எவ்விதச் செலாவணியும் கொடுக்க வேண்டியதில்லை. ஒரு குறிப்பிட்ட நாளில் இத்தனை டாலர்கள் அந்த £5,000-க்குத் தர வேண்டுமென ஒரு ஒப்பந்தம் மட்டும் தற்போது செய்யப்படுகிறது. அந்த நாளில் மாற்றுவீதம் நிலையாக இருந்தாலும் கூடினாலும் குறைந்தாலும் ஒப்பந்தப்படி £5,000-ஐக் கொடுத்துவிட்டு உரிய டாலர்களைப் பெற்றுக்கொள்ளலாம். முன்னேக்கிப் பவுன் ஸ்டெர்லிங்குகளை விற்பது போல், ஒரு குறிப்பிட்ட நாளில் தேவைப்பட்டோர் முன்னேக்கியே பவுன் ஸ்டெர்லிங்குகளை ஒப்பந்தத்தின் மூலம் வாங்கியும் கொள்ளலாம். இவ்வாறு எந்தச் செலாவணி விற்கப்பட வேண்டுமோ, வாங்கப்பட வேண்டுமோ முன்கூட்டியே முன்னேக்கிய பேரச் (நாணய மாற்றுச்) சந்தையில் ஒப்பந்தம் செய்துகொள்ளலாம். முன்னேக்கிய பேர ஒப்பந்

தங்கள், பொதுவாக, மூன்று தினங்கள்கள் காலத்திற்கு மேற் படாமல் இருக்க வேண்டும்.

முன்னேக்கிய நாணய மாற்றுச் சந்தை (Forward Exchange Market) என்பது நாணய மாற்றுச் சந்தையினின்றும் தனித்துச் செயல்படும் ஒருவகைச் சந்தையல்ல. முன்னேக்கிய பேரங்களே மட்டும் இவ்வகைச் சந்தை கையாண்டாலும் நாணயமாற்றுச் சந்தையின் ஒரு பகுதியே (Segment) யாகும் என்பது குறிப்பிடத் தக்கதாகும். முன்னேக்கிய நாணய மாற்று வீதத்திற்கும் உடனடி நாணயமாற்று வீதத்திற்கும் (Spot exchange rate) உள்ள பிணைப்பு அவ்விரண்டு சந்தைகளில் நிலவும் 'வட்டி வீதத்தை'ப் (rate of interest) பொறுத்துத்தான் அமைகிறது. இதற்குப் பெயர் 'வட்டி ஆர்பிட்ரேஜ்' (interest arbitrage) எனப்படும். இரு சந்தைகளிலும் வட்டி வீதம் ஒரே மாதிரியாக இருந்து, நாணய மாற்று வீதத்திலும் (எப்போதும்) வேறுபாடுகள் இல்லை என்றால் முன்னேக்கிய வீதமும், உடனடி வீதமும் ஒன்றாக இருக்கும். மூன்று திங்கள்களுக்கு வட்டி வீதம் லண்டனில் ஆண்டொன்றுக்கு 3 சதவீதமாகவும், நியூயார்க்கில் (New york) 1 சதவீதமாகவும் இருந்தால், மூன்று திங்கள்களுக்குரிய ஸ்டெர்லிங் ஆண்டொன்றுக்கு 2 சதவீதக்கழிவு (discount) வீதத்தில் விற்கப்படவேண்டும். உடனடி விலை ஒரு பவுன் ஸ்டெர்லிங் = $ 2·80 என்றால் கழிவு $ 0·014 ஆகும். $\left[\frac{2}{100} \times \frac{2{\cdot}80}{4} = 0{\cdot}014\right]$. எனவே, முன்னேக்கிய விலை $ 2·786 ஆகும். (சாதாரணமாகக் கழிவும், முனை மமும் (Premium) சதவீதத்தில்தான் குறிப்பிடப்படும்.)

முன்னேக்கு ஸ்டெர்லிங் அதிக விலைக்கு விற்கிறது என்றால் நியூயார்க்கிலுள்ள வங்கிகள் மிகுதியான அளவு உடனடிப் பணத்தை லண்டனில் செலுத்தும் முன்னேக்கு ஸ்டெர்லிங்குகளை விற்கத் தொடங்கும். இப்படிச் செய்வதால் அவைகளுக்கு ஒரு சதவீதத்திற்குமேல் இலாபம் கிடைக்கும். பவுனின் கழிவு வீதம் அதிகமானாலும், அல்லது டாலரின் முனைம வீதம் அதிகமானாலும், லண்டன் வங்கிகளிலிருந்து பணம் நியூயார்க்கிற்கு மாற்றப்படும். அங்கே ஒரு சதவீதம் இலாபம் கிடைப்பதுடன், முன்னேக்கு டாலர்களின் முனைமம் 2 சதவீதத்திற்கும் மேலாகக் கிடைக்க ஏதுவாகும். இப்படிச் செய்வது சொந்த நாட்டில் கிடைக்கும் 3 சதவீதத்திற்கும் மேலானதாகும். ஆர்பிட்ரேஜ் வட்டி, அதாவது, அந்நியச் செலாவணி முன்னேக்கு விற்பனைக்காக அயல் நாட்டுப் பணச்சந்தையில் வட்டிக்காகக் கடன் வழங்குதல், முன்னேக்குச் சந்தைக்கும் உடனடிச் சந்தைக்கும் இடையே

யுள்ள ஒரு இணைப்பாகும். நடைமுறையில் கழிவோ, முனைமமோ (முன்னேக்குச் சந்தையில்) வட்டிவீதத்தில் $\frac{1}{8}$ சதவீதம் வேறுபாடு கொண்டே இருக்கும், இந்த $\frac{1}{8}$ சதவீதம் வங்கியர்கள் ஆர்பிட் ரேஜை மேற்கொள்வதற்கான குறும அளவு ஊதியமாகும். இவ் வேறுபாடு $\frac{1}{8}$ சதவீதத்திற்கும் மேலாகச் சென்றால் ஆர்பிட்ரேஜ் வட்டி எவ்வகையிலும் கட்டுப்படுத்தப்படும்.

வட்டி வீதம் நாட்டிற்கு நாடு பல காரணங்களால் வேறுபடும். பணத்துறை மற்றும் வங்கித்துறை அதிகாரிகள் கடனுக்கமும் கடன் ஒடுக்கமும் செய்யலாம். அதன் விளைவாக வட்டி வீதம் அவ்வப்போது மாறுபடும். மேலைநாட்டுப் பணத்தை ஈர்க்கவோ, தடை செய்யவோ அவ்வப்போது வட்டி வீதம் மாற்றப்படலாம். அரசுப் பிணையங்கள (bonds) வெளியிடுவதன் மூலம் வட்டி வீதம் வரையறுக்கப்படலாம்.

நாணயமாற்று அங்காடியில் ஒரு பகுதியாக இருந்து முன்னேக்கு அங்காடி, கடன் நடவடிக்கைகளையும், நட்டத்தடைப் பேரங்களையும் செயல்படுத்தி வருகிறது. அமெரிக்கநாட்டு இறக்கு மதியாளர் ஒருவர் விரைவில் ஸ்டெர்லிங்கின் தேவையை எதிர் பார்க்கிறார் என அனுமானிப்போம். வட்டி வீதம் லண்டனைவிட நியூயார்க்கில் அதிகமாக இருப்பதாகவும், அதனால் முன்னேக்கு டாலருக்குக் கழிவு இருப்பதாகவும், ஸ்டெர்லிங்குக்கு முனைமம் இருப்பதாகவும் கொள்வோம். இறக்குமதியாளர் முன்னேக்கு ஸ்டெர்லிங்கை வாங்கினால் அதன் முனைமம் இன்னும் உயரும். இதனால் நியூயார்க்கிலுள்ள வங்கியர் உடனடி ஸ்டெர்லிங்கை வாங்கி முன்னேக்கு ஸ்டெர்லிங்காக முனைமத்துடன் இறக்குமதி யாளருக்கு விற்க மிகவும் ஆர்வம் கொள்வர். இதே விளைவுகளை, இறக்குமதியாளர் நியூயார்க் வங்கியில் கடன் பெற்று, உடனடி ஸ்டெர்லிங்கை வாங்கி, லண்டனில் 1 சதவீத வட்டிக்கு முதலீடு செய்திருந்தாலும் அடைந்திருக்கலாம். அதாவது, மூன்று திங்கள் கழித்துத் தேவையான ஸ்டெர்லிங்கை அடைந்திருக்கலாம். நியூயார்க்கில் உடனடி ஸ்டெர்லிங் வாங்கிய செலவை லண்டனில் முதலீடு செய்வதால் கிடைக்கும் இலாபத்திலிருந்து கழித்தால் கிடைக்கும் தொகைதான் நாணய மாற்றினால் எதிர்பார்க்கக் கூடும். நட்டவச்சத்தைத் (risk of exchange) தவிர்க்கும் நிகரத் தொகையாகும். (The net cost of covering the exchange risk in this case is the cost of funds in New York possible return in London). இதே நிலைதான் முன்னேக்குச் சந்தையிலுள்ள முனைமங்கொண்ட ஸ்டெர்லிங்குக்கும். நியூயார்க் வங்கிகளுக்கும், இறக்குமதியாளர்களுக்கும் பேரங்கள் செய்வதில் அவ்வளவாக

வேறுபாடு இருக்க முடியாது. லண்டனில் பேரங்கள் நடத்திச் செல்ல நியூயார்க்இறக்குமதியாளரைவிட நியூயார்க் வங்கிகளிடம் போதிய அளவு நிதி இருக்கிறது என வேண்டுமானால் கூறலாம். இப்படியாக இறக்குமதியாளர்களுக்கு முன்னேற்றச் சந்தை கடன் வழங்கவும், நட்டத்தடைப் பேரம் செய்யவும் வழி வகுக்கிறது.


சமமாக்கிய நடை இருப்புகள் (Covered Working Balances)

அந்நியச் செலாவணி பொறுப்புகளுக்கேற்பச் சொத்துகள் எவ்வாறு நியூயார்க் வங்கிகளில் சமமாக வைத்திருக்க முடிகிறது? சமநிலைக்கு மேலும் அந்நியச் செலாவணியை, வாடிக்கைக்காரர் களுக்குத் தேவைப்பட்டபோது, வங்கிகளால் கொடுக்கவும் முடிகிறது! சமமான நிலை என்பது உபரி கோருரிமைகளோ (claims). பொறுப்புகளோ இல்லை என்பதாகும். இருந்தாலும் தந்தி வழி மாற்றுகைகள் (telegraphic transfers) வாங்க விரும்பும் வாடிக்கைக்காரர்களுக்காகப் போதுமான ஸ்டெர்லிங்குகள் இருப் பாகக் கொண்டிருக்க வேண்டும்.


பொறுப்புகளுக்கேற்ப சொத்துகள் (அந்நியச் செலாவணி) எப்படி வைத்திருக்க முடிகிறது என்ற வினவுக்கு முன்னேக்குச் சந்தையும், நாணய மாற்றுச் சந்தையில் லண்டனும், நியூ யார்க்கும் இருப்பதுதான் என்ற விடை கிடைக்கிறது. நியூ யார்க்கிலுள்ள அனைத்து வங்கிகளுக்கும் சேர்த்துக் குறும அளவு (minimum) நடை இருப்புகள் £ 10,000,000 இருத்தல் வேண்டும் என அனுமானம் செய்வோம். வங்கிகளின் வாடிக் கைக்காரர்கள் £ 10,000,000-க்குக் கூடுதலாக முன்னேக்கு வாங்கலைச் செய்தால், அந்த நடை இருப்பு முழுவதையும் நியூ யார்க் முன்னேக்குச் சந்தையில் நட்டத்தடைப் பேரம் (Hedge) செய்யலாம். ஆனால், அந்தக் குறிப்பிட்டதொகைக்கு வாடிக்கைக் காரர்கள் முன்னேக்குச் சந்தையில் பேரங்கள் செய்ய எவ்விதக் காரணமுமில்லை. ஏனென்றால், உடனடி மற்றும் முன்னேக்குக் கோருரிமைகள் உடனடி மற்றும் முன்னேக்கு நிகரப் பொறுப்பு களுக்குச் சமமாக இருத்தல் வேண்டும், என அவர்களும் எதிர் பார்ப்பர். இச்சூழ்நிலைகளில் £ 10,000,000 முழுமைக்கும் வங்கிகளிடமிருந்து முன்னேக்கு வாங்கல் பேரம் செய்ய அவர் களால் முடியாது.

வாடிக்கைக்காரர்கள் அப்படியான வாங்கலில்லை என்றால், பிறகு வங்கிகள் லண்டனில் £ 10,000,000-களையும் முன் னேக்குச் சந்தையில் விற்கின்றன. இம்முன்னேக்கு ஸ்டெர்

லிங்குகளை வாங்குவதற்காக லண்டன் வங்கிகள் அதற்குச் சம மான தொகைக்கு டாலர்களை ($ 28,000,000; 1 £ = $ 2·80) உடனடிச் சந்தையில் வாங்குதல் வேண்டும். இப்படியாக, லண்டன் மற்றும் நியூயார்க் நாணய மாற்றுச் சந்தைகள் மாற்றுச் செலாவணிகளை (each other's currencies) அதனதன் நடை இருப்பாக வைத்துக்கொள்கின்றன. இங்கு எவ்வித அந்நியச் செலாவணி மாற்றமும் இடம் பெயரவில்லை. ஒவ்வொரு சந்தையும் மற்றவையில் உடனடி விற்பனையை முன்னேக்கு விற்பனையாக மாற்றுவதற்கு ஒப்பந்தம் செய்துகொள்கிறது. நியூயார்க், இப் போது உடனடி இருப்பாகிய £ 10,000,000-ஐ லண்டனி



படம் 1. உடனடிச் சந்தை (Spot Market)



படம் 2. முன்னேக்குச் சந்தை (உடனடிச் சந்தையின் இடையீடு இல்லை.) (Forward Market. Added without Disturbing Spot Market.)

விளக்கம் :—
— கழிவு வீதம் மாறுபடுமுன்
... கழிவுவீதம் மாறுபட்ட பின்

அதே தொகைக்கு முன்னேக்கு விற்பனை செய்கிறது. லண்டன், நியூயார்க் வங்கிகளிடம் முன்னேக்கு விற்பனை செய்த $ 28,000,000 நியூயார்க்கில், லண்டனின் இருப்பாகவே இருக்கும். ஒரு நாடுகூட அந்நியச் செலாவணியை மாற்றம் செய்யவில்லை. ஒவ்வொன்றும் வாடிக்கையாளர்களுக்குத் தேவை யான அளவு அந்நியச் செலாவணி இருப்பு வைத்திருக்கிறது. (Neither country has an open exchange position. Each has an inventory of exchange for sale to customers desiring it.)


சாதாரண நாணயமாற்று அங்காடியுடன் முன்னேக்கு அங்காடி வசதிகளும் பெருகுவதால், நாணயமாற்று அங்காடியின்

இயல்பு (character) மாறுமா என்ற வினை அடிக்கடி எழுப்பப்படுகிறது. ஒரு சாரார் மாறும் என்றும் மறுசாரார் மாறாது என்றும் கூறுகின்றனர். மாறினாலும் மாறவில்லை என்றாலும் அதைப் பற்றிய ஆய்வு (analysis), முன்னேக்கு மற்றும் உடனடி மாற்றத்தின் தேவை, அளிப்பு நெகிழ்ச்சிகளின் வடிவில் (elasticities of demand and supply for forward and spot exchange) உணர்த்தப்படலாம்.

முன்னேக்குச்சந்தை சேர்க்கைக்குமுன் டாலர்களில் உணர்த்தப்படும் ஸ்டெர்லிங்கின் உடனடிச் சந்தைப் படம் 1-ல் காட்டப்பட்டுள்ளது. உடனடிச் சந்தையில் எவ்விதத் தலையீடுமில்லாமல் முன்னேக்குச் சந்தை சேர்க்கப்பட்டிருப்பதைப் படம் 2-ல் காண்பிக்கப்படுகிறது. லண்டனிலும், நியூயார்க்கிலும் வட்டி வீதங்கள் ஒன்றாக இருப்பதாகவும், முன்னேக்கு வீதமும் உடனடி வீதமும் (Forward rate and Spot rate) சமமாக இருப்பதாகவும் அனுமானம் செய்வோம். இந்நிலையில் லண்டனில் கழிவு வீதம் உயர்த்தப்படுகிறது என்றால், ஸ்டெர்லிங் தேவையாளர்கள் முன்னேக்குச் சந்தையை விட்டுவிட்டு உடனடிச் சந்தைக்குச் செல்வர். முன்னேக்குச் சந்தையில் ஸ்டெர்லிங் தேவை குறைவதும், உடனடிச் சந்தையில் கூடுவதும் புள்ளிகளான கோடுகள் (dotted lines) மூலம் படத்தில் காட்டப்பட்டுள்ளது. இதனால் உடனடி விலைவீதம் உயரும்; முன்னேக்கு விலைவீதம் குறையும். இந்நிகழ்வு, முன்னேக்கு ஸ்டெர்லிங் கழிவு வீதம் (OP_1—OP_3) வட்டிவீத வேறுபாட்டிற்குச் சமமாக ஆகும் வரைக்கும் இடம் பெறும். முன்னேக்குச் சந்தையின் சேர்க்கையினால் $C—C_1$ அளவுக்கு குறுங்கால மூலதனம் இடப்பெயர்வு ஏற்பட்டிருக்கிறது. ஆனால், ஊக வாணிபப் பேரங்களில் எவ்வித மாற்றமுமில்லை. தேவைக்கோடும் (D—D), அளிப்புக்கோடும் (S—S) எவ்வளவுக்கெவ்வளவு தாழ்வாக இருக்கின்றனவோ, அவ்வளவுக்கவ்வளவு குறுங்கால மூலதன இடப்பெயர்ச்சி அதிகமாகும்.

முன்னேக்குச் சந்தை உடனடிச் சந்தையில் சேர்க்கப்பட்டதால், அந்நியச் செலாவணி தேவையுள்ளோர்களும், அளிப்போர்களும் புதிதாக உடனடிச் சந்தையில் சேர்க்கப்பட்டனர். ஆனால், ஒருவர்கூட கழிக்கப்படவில்லை (Subtracted). முன்னேக்குச் சந்தையின் நெகிழ்வு உடனடிச் சந்தையில் சேர்க்கப்பட்டுள்ளது. தேவையாளர்களும், அளிப்பவர்களும் மிகையாக இருந்தால் சந்தையில் நிலையாக்கம் (Stable) இருக்கும்.

முன்னேக்குச் சந்தையின் சேர்க்கையினால் குறிப்பிட்ட சில தேவையாளர்களும், அளிப்பாளர்களும் உடனடிச் சந்தையை விட்டு முன்னேக்குச் சந்தையில் பேரம் செய்கிறார்கள் எனக் கொள்வோம். இந்த நிலையில், முன்னேக்குச் சந்தையின் சேர்க்கையினால் உடனடிச் சந்தையில் பேரங்கள் குறைந்து சுருங்கி




படம் 3. உடனடிச் சந்தை

விளக்கம் :—

— முன்னேக்குச் சந்தை வசதிகளுக்கு முன்

– – முன்னேக்குச் சந்தை வசதிகளுக்குப் பின்

... லண்டன் வட்டிவீதம் உயர்வுக்குப் பின்



படம் 4. முன்னேக்குச் சந்தை (உடனடிச் சந்தையுடன் தேவை, அளிப்புமாற்றப்பட்டு உண்டாக்கப்பட்டது)
(Forward Market created by Transferring Demand and supply from spot market.)

இருப்பதைப் படம் 3-ல் தெளிவாகக் காணலாம். முன்னேக்குச் சந்தையில் சேர்க்கப்பட்ட நெகிழ்ச்சி உடனடிச் சந்தையில் கழிக்கப்பட்டிருப்பதைப் புள்ளிகளாலான கோடுகள்மூலம் உணரலாம். இப்போது லண்டனில் கழிவு வீதத்தை உணர்த்தினால் $C—C_1$ அளவு மூலதனத்திற்குஆர்பிட்ரேஜ் வட்டி உயர்த்தப்படவேண்டிவரும். இது வட்டி வீத வேறு பாட்டிற்குச் சமமாக இருக்கும். இப்படியாகப் பல்வேறு வீதங்களில் மூலதனம் இடப்பெயர்ச்சி நடைபெறுகிறது. கூடுதலான முன்னேக்கு வசதிகளும், ஊக வாணிபமும் இருக்கிற வரைக்கும் மூலதன இடப்பெயர்ச்சி இருக்கும். இடப்பெயர்ச்சி இருக்கும் வரைக்கும் வட்டி வீதம், கழிவு வீதம் மாறுபடத்தான் செய்யும்.

நாணய மாற்று வீதம் (Exchange Rate) :

ஒரு நாட்டை மட்டும் எடுத்துக்கொண்டால் அதன் பணம் அந்நாட்டிலேயேதான் தடையின்றிப் புழக்கத்திலிருக்கும். ஆனால்


வேற்று நாடுகளுடன் வாணிபத்தொடர்பு கொள்ளும் போது அந்த நாடுகளில் அச்செலாவணி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. இறக்குமதியாளர்கள் செலுத்த வேண்டிய தொகையை வேறு பணங்களில் செலுத்த வேண்டியிருப்பதால் அந்நியச்செலாவணிப் பிரச்சினை எழுகிறது. ஏற்றுமதியாளர்கள் தாங்கள் கொடுக்க வேண்டிய ஊதியங்களையும் பிற செலவுகளையும் அவர்கள் நாட்டுச் செலாவணியிலேயே கொடுக்க வேண்டியிருக்கிறது. எனவே, வாணிபம் மற்றும் பல நடவடிக்கைகள் பன்னாட்டு அளவில் நடை பெறுவதால் செலாவணி மாற்றுப் பேரங்கள் இடம் பெற வேண்டி யிருக்கின்றது.

ஒரு நாட்டு நாணயத்தைப் பிற நாட்டு நாணயத்துடன் மாற்றும் போது ஒரு குறிப்பிட்ட வீதம் கடைப்பிடிக்கப்பட வேண்டும். ஒரு நாணயத்தின் விலையை மற்றொரு நாணயத்தில் கூறுவதே நாணய மாற்று வீதம் எனப்படும். மாறுக, நாணய மாற்று வீதம் என்பது, ஒரு நாட்டு நாணயத்தின் புற மதிப்பு உணர்த்தப்படுவதாகும்.

மாற்று வீதம் நிர்ணயிக்கப்படுதல் :

தேவையும் அளிப்பும் : தேவை, அளிப்புக் கோட்பாட்டின் விதிப்படி நாணய மாற்று வீதம் நிர்ணயிக்கப்படுகிறது. செலுத்து நிலைப் பட்டியலிலுள்ள நடவடிக்கைகளை ஒரு கண்ணோட்டம் விட்டால், அந்நியச் செலாவணியின் தேவையும், பிற நாடுகளின் அளிப்பும் எவ்வளவு என்று அறிய முடியும். பொருள்கள், பணிகள் ஆகியவைகளின் கொடுக்கப்பட்ட உள் நாட்டு விலையில், அயல் நாடுகளுக்கு எவ்வளவு முனைவு செய்தல் (offer) என்பது நாணய மாற்று வீதத்தைப் பொறுத்து இருக்கிறது. (ஒரு நாட்டுச் செலா வணியின் மதிப்பு, நாணய மாற்று மதிப்புப்படி குறைவாக உள்ளது என்றால் இறக்குமதி கிராக்கியாகவும், ஏற்றுமதி இலாப கரமாகவும் இருக்கிறது எனப் பொருள்படும். ஒரு பவுனின் மதிப்பு $ 4·03 டாலரிடமிருந்து $ 2·80 ஆகச் சரிந்துள்ளது என்றும், அந்த அளவுக்குக் கனடா டாலர் மதிப்பு உயர்ந்துள்ளது எனவும் கொள்வோம். அதாவது, கனடாவில் $2000-க்கு மதிப்பிட்ட ஒரு காகித உற்பத்தி எந்திரம் £ 484-லிருந்து £ 714-க்கு உயர்த்தப் பட்டிருக்கிறது என்று பொருள். 'ஒரு நாட்டுச் செலாவணியின் நாணய மாற்று மதிப்புக்கு நேராக அந்நாட்டு இறக்குமதி அளவு மாறுகிறது; தலைகீழாக ஏற்றுமதி அளவு மாறுகிறது'. (The quantity of a country's imports will stand to vary directly and the quantity of its exports inversely with the foreign exchange value of its currency).

இருந்தாலும், அந்நியச் செலாவணியின் தேவையும் அளிப்பும் பேரங்களின் மதிப்பைப் பொறுத்துத்தான் அமைகின்றனஃ அளவைப் (quantity) பொறுத்து அமைவதில்லை. தேவை, அளிப்பு நெகிழ்ச்சிகள் அடியோடு குறையாமலிருந்தால், மதிப்பும் அளவும் ஒரே விதத்தில் செல்லும்.




படம் 5. அந்நியச் செலாவணியின் தேவை மற்றும் அளிப்புஃ சாதாரண எடுத்துக்காட்டு. (Normal case).

தேவைப்பட்டியலும், அளிப்புப்பட்டியலும் படம் 5-ல் காண்பிக்கப்பட்டுள்ளன. பவுனின் விலை மலிவாக இருக்கிறதென்றால் கனடா நாட்டினர் அதை மிகையான அளவுக்குப் பெறவிரும்புவர். அப்போதுதான் இங்கிலாந்து நாட்டுப் பொருள்களின்மேல் கூடுதலாகச் செலவு செய்ய முடியும். அதற்குக் காரணம், பொருள்கள் மலிவாகக் கிடைப்பதுதான். ஆனால், கனடா நாட்டுப் பொருள்கள் இங்கிலாந்து நாட்டினர்களுக்குக் கிராக்கியானமையால் அவர்கள் தேவையான அளவு பவுன்களை அளிக்கமாட்டார்கள். அதாவது, பவுன் மலிவாக இருக்கும் போது தேவை மிகுதியாகும்ஃ ஆனால் அளிப்பு குறையும். கனடா டாலரின் அளிப்பைச் சார்ந்து பவுனின் அளிப்பு இருக்கிறது. இதேபோல், பவுனின் அளிப்பைப் பொறுத்து டாலரின் அளிப்பு அமைகிறது. எங்கு தேவையும் அளிப்பும் ஒன்றையொன்று வெட்டுகின்றனவோ அந்த விதத்தில்தான் நாணய மாற்று விதம் நிர்ணயமாகிறது. அதாவது, தேவையும் அளிப்பும் சமமாக இருக்கும் நிலையில் மாற்றுவிதம் நிர்ணயிக்கப்படுகிறது. பிரிட்டன் இறக்குமதி செய்த பொருள்களுக்கு அளிக்கப்படும் பவுன், பிரிட்டனின் ஏற்றுமதிப் பொருளுக்காகத் தேவைப்

படும் பவுனைவிட அதிகமானால் நாணய மாற்றுச் சந்தையில் பவுனின் அளிப்பு மிகையாகவும், ஏனைய நாட்டுச் செலாவணிகளின் அளிப்பு குறைவாகவும் இருக்கும். இச்சமநிலைக்கேட்டைச் சரி செய்வதற்காக அச்சந்தை, பவுனின் விலையைக் குறைக்கச் செய்யும். தேவையும் அளிப்பும் சமமாக இருந்தால்தான் நாணய மாற்றுவிதத்தில் வேறுபாடு இருக்காது.

இருந்தாலும், தேவை நெகிழ்ச்சி குறைவாக இருந்தால் வாணிபச் சரக்குகளின் மதிப்பு அவைகளின் அளவு போகிற போக்கில் செல்லாது. பவுனின் விலை குறைந்தால் (மதிப்பு) கனடாவிலிருந்து இறக்குமதி செய்வதைப் பிரிட்டன் குறைத்துக் கொள்ளும். ஆனால், ஒவ்வொரு இறக்குமதிக்கும் முன்னைவிடக் கூடுதலான அளவில் பவுன் செலுத்தவேண்டி வரும். இப்படியாகப் பவுனின் விலை மலிவாக இருந்தால் அளிப்பு கூடுதலாகிறது. பவுனுக்கான தேவைக்கோடு இன்னமும் கீழ் நோக்கி வளைந்துதான் இருக்கிறது. ஆனால், பிரிட்டனின் பொருள்களுக்குக் கனடாவின் தேவை நெகிழ்ச்சியற்று (inelastic) இருந்தால், பவுனின் விலை மலிவாக இருக்கும் போது கனடா நாட்டினர் சிறிதளவுதான் கூடுதலாகப் பவுனை விரும்புவர். இந்நிலை படம் 6-ல் காட்டப்பட்டுள்ளது :



படம் 6. நாணய மாற்றுச் சந்தை : நெகிழ்ச்சியுற்ற இறக்குமதித் தேவை.

6-வது படத்திலுள்ளபடி தாழ்வான அளிப்புக் கோட்டின் வளைவு பின்புறமாகச் செல்வதால் (sloped backward) சந்தையில்

நிலைபேருக்கம் காண முடியாது. அளிப்புக்கோடும் தேவைக் கோடும் ஒன்றையொன்று வெட்டுமிடத்தில் (£ 1 = $ 2·80) மாற்று வீதம் நிர்ணயம் செய்யப்படுகிறது. ஆனால், அப்புள்ளியி லிருந்து எந்தப் பக்கம் விலகினாலும் அவைகளைச் சரி செய்ய முடியாது. மாற்று வீதம் £ 1 = $ 2·50 என்றால் பவுனின் அளிப்பு, தேவையைவிட மிகுதியாகிறது. இதன் விளைவு, பவுனின் விலை இன்னும் குறைக்கப்படுகிறது. மாற்று வீதம் $ 3 என்றால் பவுனின் தேவை, அளிப்பைவிட அதிகரிக்கிறது. இதனால் விலை இன்னும் உயருகிறது. இவ்வளிப்பும் தேவையும் விலகிப் போவதற்கு ஒரு எல்லையுண்டு. ஆனால், அவைகளை எந்த விதத் திலும் கட்டுப்படுத்தாவிட்டால் மாற்று வீதத்தில் ஆடலவுகள் பெருமளவுக்கு ஏற்படும்.

ஆர்பிட்ரேஜ் (Arbitrage) :

நாணய மாற்றுச் சந்தைகள் கட்டுப்பாடின்றிச் செயல் பட்டால், இரண்டு நாடுகளின் அயல் நாட்டு வாணிபப் பேரங்கள் அதனதன் செலாவணி மாற்றத்தால் தீர்த்துக்கொள்ளப்படும். எடுத்துக்காட்டாக, லண்டனிலும் நியூயார்க்கிலும் உள்ள ஏற்றுமதியாளர்கள் அவரவர்களின் செலாவணியையே கைம் மாறுகப் பெற விரும்புகின்றனர் என்றும், வேறு எதையும் பெற மறுக்கிறார்கள் என்றும் கொள்வோம். இவர்களின் பிடிவாதத்தால் நாணய மாற்றுவீதம் அதிகரிக்கும். நியூயார்க்கில் ஸ்டெர்லிங் மாற்றுச் சீட்டுகள் (Sterling Drafts) $ 2·85 வீதத்திலும், லண்ட னில் டாலர் மாற்றுச் சீட்டுகள் (dollar drafts) $ 2·80 வீதத் திலும் (ஒரு பவுன் ஸ்டெர்லிங்குக்கு) விற்றால் ஆர்பிட்ரேஜ் பேரங்கள் மூலம் இலாபமடைவதற்கு வாய்ப்புகள் இருக்கின்றன. நியூயார்க் வணிகர் செய்தித் தொடர்பு மூலம் (communication) லண்டனிலுள்ள தம் முகவருக்கு ஒரு பவுனுக்கு $ 2·80 வீதம் செலுத்தக்கூடிய தந்தி வழி மாற்றுகைகளை (telegraphic transfers) விற்று அவருடைய கணக்கில் வரவு செய்யும்படி ஆணையிடுவார். இப்படியாக, நியூயார்க் வணிகர் நியூயார்க்கில் $ 2·80 செலுத்தி லண்டனில் ஒரு பவுன் அடைகிறார். இதற்குப்பின் தம் கணக்கி லுள்ள தந்தி வழி பவுன் ஸ்டெர்லிங்குகளை $ 2·85 வீதத்தில் நியூயார்க்கில் விற்று 5 செண்டு (cent) இலாபமடைகிறார். இந்த இலாபத்தில் சிறு செலவுகள் கழிக்கப்படும். இவ் வார்பிட்ரேஜ் நடவடிக்கை, நியூயார்க்கிலுள்ள ஸ்டெர்லிங் மாற்று விலை லண்டனிலுள்ள டாலர் மாற்று விலைக்குச் சமமாகவோ, அருகா மையிலோ இருக்கும் வரைக்கும் நடைபெறும். அதாவது, முடிவில் ஆர்பிட்ரேஜ் நடவடிக்கையால் இரு நாடுகளுக்கிடையே நாணய

மாற்றுவீத வேறுபாடு நீங்கிவிடுகிறது. நியூயார்க்கில் $ 2·80 வீதம் என்ருல் லண்டனிலும் $ 2·80தான் இருக்கும். (புறக் கணிக்கத்தக்க வேறுபாடு இருக்கும். அது மாற்றுச் செலவால் ஏற்படும்.)

'ஆர்பிட்ரேஜ்' என்பது, 'கொடுக்கப்பட்ட ஒரு செலா வணியின் மதிப்பை உலகமெங்கும் ஒரே மாதிரியாக இருக்க வைக்கும் சக்தி' எனலாம். (The force that keeps the market for a given currency unified all over the world is called "arbitrage".)

மும்முனைச் செலாவணி மாற்றம் (Three-cornered Exchange)

இருவகைச் செலாவணிகளுக்கிடையே மட்டும் ஆர்பிட்ரேஜ் நடவடிக்கைகள் இடம் பெற்ருல் அது இருமுனை ஆர்பிட்ரேஜ் (Two-point arbitrage) எனப்படும். பன்னாட்டு வாணிகம் இரு நாடுகளுக்கிடையே மட்டுமல்லாமல் பல நாடுகளுக்கிடையேயும் நடைபெறுகிறபடியால், ஆர்பிட்ரேஜ் இரு செலாவணிகளோடு மட்டும் நிற்பதில்லை. எடுத்துக்காட்டாக, மூன்று நாடுகளை எடுத் துக்கொள்வோம். இதற்கிடையே நடைபெறும் ஆர்பிட்ரேஜ், 'மும்முனை ஆர்பிட்ரேஜ்' (Three-point arbitrage) எனப்படும். டாலர்/ஸ்டெர்லிங் வீதம் $ 2·80 ஆகவும், பிராங்கு/டாலர் (frank - dollar) வீதம் டாலருக்கு 4·90 பிராங்கு ஆகவும், பவுனுக்கும் பிராங்குக்குமான எதிரின வீதம் (cross rate) £1 = 13·97 பிராங்கு ஆகவும் இருப்பதாகக் கொள்வோம். ஆர்பிட்ரேஜ் வணிகர்கள் டாலர்களுக்குப் பவுனை வாங்கி, ஒவ் வொரு பவுனையும் லண்டனில் பிராங்காக மாற்றி, அவ்வாறு பெற்ற பிராங்குகள் அனைத்தையும் நியூயார்க்கில் விற்று டாலர்களைப் பெறுவர். $ 2·80 முதலீடு செய்தால் அவர்களுக்கு $ 2·85 $\left(\frac{13·97}{4·9} = 2.85\right)$ கிடைக்கும். டாலர் / பவுன் வீதமும், பிராங்கு/டாலர் வீதமும் மாருமல் இருப்பதாகக் கொள்வோம். அப்போது பிராங்கின் பவுன் மதிப்பு, பிராங்கின் டாலர் மதிப்புக்கு ஏற்றவாறு மாறும்வரை ஆர்பிட்ரேஜ் நடவடிக்கைகள்தொடர்ந்து நடைபெறும். அதாவது, பிராங்கு/பவுன் வீதம் பவுனுக்கு 13·72 பிராங்குகளாகும்வரை ஆர்பிட்ரேஜ் நடைபெறும். லண்டனில் தொடர்ந்து பிராங்குகள் வாங்கப்படுவதால் அதன் மதிப்பு உயரும். அதாவது, ஒரு பவுனுக்குக் கிடைக்கக்கூடிய பிராங்குகளின் எண் ணிக்கை குறையும். இப்படியாக, ஆர்பிட்ரேஜ் நடவடிக்கைகளின்

விகிதவால் மூன்று செலாவணி-மாற்றுச்சந்தைகள் ஒன்றுக இணைகின்றன. எதிரின வீதங்கள் ஒன்றுக்கொன்று ஒத்துப்போகின்றன. நாணய மாற்று அங்காடிகள்மேல் எவ்விதக் கட்டுப்பாடும் இல்லை என்றால், நாணய மாற்று வீதம், ஆர்பிட்ரேஜ் நடவடிக்கைகளால் ஒரே அளவாக இருக்க முடிகிறது.

அந்நியச் செலாவணியை வாங்குதல் விற்பதன்மீது அரசு கட்டுப்பாடுகளை விதித்தால் ஆர்பிட்ரேஜ் நடவடிக்கைகள் நடைபெற முடியாது. எனவே, தற்காலத்திய பொருளாதார உலகிற்கு ஆர்பிட்ரேஜ் பேரங்கள் பொருந்தா எனக் கூறலாம்.

21. பன்னாட்டுப் பண நிதி
(International Monetary Fund)

இரண்டாம் உலகப் போரினால் பொருளாதாரச் சிதைவு காரணமாகப் போரில் ஈடுபட்ட நாடுகளும், நடுநிலையாக இருந்த நாடுகளும் பன்னாட்டு வாணிபப் பேரங்களில் கண்டிப்பான கட்டுப்பாடுகளை அமுலாக்கின. எந்த வகைப் பொருள்கள் எந்த அளவுக்கு இறக்குமதி, ஏற்றுமதி செய்யப்பட வேண்டுமென்றும், பெறப்படும் செலுத்தப்படும் செலாவணித் தொகை எவ்வளவு இருக்க வேண்டுமென்றும் நிர்ணயித்தன. பாதிக்கப்பட்ட நாடுகள் நாணய மாற்று வீதத்தைப் போருக்கு முந்திய வீதத்தில் மூன அடித்தன (Pegging). அவ்வாறு அவ்வீதத்தைக் கட்டுப்படுத்தி நிலைப்படுத்தினாலும் செலுத்து நிலையில் சமநிலைக் கேட்டைத் திருத்த முடியவில்லை. சமநிலைக்கேடு அடக்கி ஒடுக்கப்பட்டதே தவிர திருத்தப்படவில்லை. பற்பல நாடுகளில் பல வகைகளில் சமநிலைக் கேடுகள் இருந்தன. (1) வெளிப்படையான வீக்க நிலையிலிருந்து அழுக்கப்பட்ட வீக்க நிலை வரை பரவியிருந்தது. (Differences in the extent of open and repressed inflation). அமெரிக்க நாடுகளில் நிலவும் விலை மட்ட அளவுக்குச் சில நாடுகளில் விலைகள் உயரவிடப்பட்டன. இன்னும் சில நாடுகள் அளவு கடந்து விலைமட்டம் உயர்ந்திருப்பதை உணர்ந்தன. அழுக்கப்பட்ட வீக்கத்தை எடுத்துக்கொண்டால், அமெரிக்க நாட்டைவிடச் சில நாடுகளில் மக்கள் கையில் பண இருப்பு மிகையாகக் காணப்பட்டது. அவர்கள் அப்பண இருப்பைச் செலவிட அனுமதிக்கப்படவில்லை. அனுமதிக்கப்பட்டால் அதிக அளவுக்கு இறக்குமதிப் பொருள்களின் தேவை கூடியிருக்கும். (2) நாடுகளுக்கிடையே உற்பத்திச் சக்தி பெருமளவுக்கு வேறுபட்டது. போருக்குப்பின் அமெரிக்கப் பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணப்பட்டது. படைத் தாக்குதலினால் உண்டாகும் நட்டத்திலிருந்து அமெரிக்கா தப்பித்துக் கொண்டது. ஆனால், வேறு நாடுகளில் உற்பத்திச் சக்தி பல காரணங்களால்—படை அழிவு, இறப்பு, நோய், உற்பத்திக் காரணிகளின் பற்றாக்குறை, எந்திரத் தொகுப்பு பழுதடைதல் போன்றவை-மிகவும் குறைந்து காணப்பட்டது. உற்பத்தி இல்லை

அல்லது குறைவு என்ருல் நாட்டின் செலுத்து நிலையில் சமநிலைக் கேடுதானே? (3) பன்னாட்டுக் காப்பிருப்புகளிலும், நீர்மைத் தன்மையிலும் (liquidity) நாடுகளுக்கிடையே வேறுபாடு இருந்தது. அமெரிக்காவின் பொன் இருப்பு, இறக்குமதியினுல் $ 2·5 பில்லியன் (Billion) குறைந்தது. ஆனுல், போரினுல் பொருள்கள் ஏற்றுமதி செய்யப்பட்டமையால் அதன் பொன் இருப்பு $ 20 பில்லியன் அதிகரித்தது. வேறு நாடுகளை எடுத்துக் கொண்டால் அவைகளின் பொன் இருப்பு மிகவும் குறைந்தது; அதோடு மட்டுமல்லாமல் அவைகளின் கடன் பளுவும் தாங்க முடியாத அளவுக்கு இருந்தது. பிரிட்டன், பில்லியன் கணக்கில் அயல் நாடுகளுக்குக் கடன் கொடுக்க வேண்டியிருந்தது. இக் கடனுக்குக் காரணம், போர்த்துறைக் கருவிகளையும், குடி மக்களுக்கு அவசியமான பண்டங்களையும் இறக்குமதி செய்ததுதான்.

போர் ஓய்வின் போது சீர் குலைவும் சிதைவும் ஏற்படும் என்பது நிச்சயமாதலின், உலகமெங்கும் தடைகள் விதிக்கப் பட்டிருக்கும் குழப்ப நிலையிலிருந்து ஓரளவுக்கு ஒழுங்கினை ஏற் படுத்த எல்லா நாடுகளும் முழு எண்ணத்தோடு கடுமையான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்று போர் நடந்துகொண் டிருக்கும் போதே முடிவு செய்தன. இதே எண்ணம் அமெரிக்கா விலும் பிரிட்டனிலும் இருந்த பொருளாதார வல்லுநர்களுக்கு இருந்ததால் போருக்குப்பின் செலாவணித்துறையில் பன்னாட்டுக் கூட்டுறவுக்கான விவரமான திட்டங்களைப் போர் நடக்கும் போதே அவர்கள் வகுத்தனர். முன்னர் அவர்கள் தனியாக உழைத்தனர். பின்னர் பிற நாடுகளின் பதிலாள்களுடன் (Representatives) சேர்ந்து உழைத்தனர். எல்லோரும் ஏற்றுக் கொள்ளக்கூடிய பன்னாட்டு நாணயத்தை உருவாக்குதல், நாணய மாற்று வீதத்தை நிலையாக நிர்ணயித்தல், உலக நெருக் கடி தோன்றுகின்ற போது கை கொடுத்து உதவும் உலக நிறு வனத்தைத் தோற்றுவித்தல் ஆகியவற்றின் தேவையை உணர்ந்து உலக நாடுகள் சிந்திக்கலாயின. இந்தச் சிந்தனையின் விளைவாகப் "பன்னாட்டுப் பண நிதியும் (I. M. F.) புனரமைப்பும், வளர்ச்சிக்குமான பன்னாட்டு வங்கியும்" (International Bank for Reconstruction and Development) உருவாகின. இவ்விரு நிறு வனங்களும் தோன்றுவதற்கான சிந்தனையின் அடிப்படையை விளக்குவோம்:

அவ்விரு நிறுவனங்களும், இங்கிலாந்து மற்றும் அமெரிக்கா வகுத்த இரண்டு திட்டங்களின் விளைவாகத் தோற்றுவிக்கப் பட்டன என்பதை எல்லோரும் அறிவோம். இங்கிலாந்துக் கரு

ஆலம் வகுத்தளித்த திட்டத்திற்குக் 'கோமகன் கீன்ஸ்' பொறுப் பாவார். எனவே, அதற்குக் 'கீன்ஸ் திட்டம்' (Keyne's Plan) எனப் பெயர். அமெரிக்கக் கருவூலம் வகுத்தளித்த திட்டத் திற்கு "திரு. ஹாரி ஒயிட்" (Mr. Harry D. White) பொறுப் பாவார். எனவே, அதற்கு 'ஒயிட் திட்டம்' (White's Plan) எனப் பெயர். இரண்டு திட்டங்களும் அடுத்தடுத்து 1943-ல் வெளியீடு செய்யப்பட்டன (Published). இவைகளின் சிறப்புக் கூறுகளைப்பற்றிச் சிறிது விவரிக்கலாம். 'கீன்ஸ் திட்டம்: 'பாங்கர்' (Bancor) என்ற புதிய பண அலகைக்கொண்ட 'பன் னுட்டுத் தீர்வக ஒன்றியத்தை' (International Clearing Union) உருவாக்க வேண்டும். பாங்கருடைய மதிப்பு பொன்னின் மூலம் உணர்த்தப்பட வேண்டும். பன்னுட்டுப் பேரங்களின் நிலுவை களைத் தீர்த்துக்கொள்ள ஒன்றியத்தின் உறுப்பினர்கள் பொன் னுக்குச் சமமான பாங்கர்களை ஏற்றுக்கொள்ள வேண்டும். உறுப்பு நாடுகளின் மைய வங்கிகள், ஒன்றியத்தின் பாங்கரில் (In terms of bancor) கணக்குகளை வைத்துக்கொள்ள வேண்டும். சாதகமான செலுத்து நிலையையுடைய நாடுகளின் கணக்குகள் பாங்கரில் வரவு செய்யப்படும். பாதகமான நிலையையுடைய நாடுகள் தங்கள் பாங்கர் கணக்குகளை 'மேல்வரைப் பற்று' (over-drawn) செய்ய அனுமதிக்கப்படும். இப்படியாக, அந்தத் தீர்வக ஒன்றியம் உலக வங்கியாகவும், தீர்வகமாகவும் செயல்படும்.

கீன்சுத் திட்டத்தில் குறிப்பிடப்படுவதென்னவென்றால் ஒன் றியத்தில் உறுப்பு நாடுகள் ஏதும் தொகை செலுத்த வேண்டு மென்ற (Contributions) அவசியமில்லை. நாடுகளுக்கிடையே ஏற்படும் நிலுவைகள் ஒன்றியத்திலுள்ள புத்தகத்தில் ஒரு கணக் கிலிருந்து தேவையான மறு கணக்கிற்குப் பேங்கரில் மாற்றம் செய்யப்படும். (mere transfer of entries in terms of bancor). மேலும், நாடுகளின் செலுத்து நிலை எந்த அளவுக்குச் சாதகமாக இருக்க விடப்படுகிறதோ அந்த அளவுக்குப் பாதகமாக இருக்கவும் விடப்படுகிறது. இது அவ்வளவாக, உலக நலனை முன்னிட்டுப் பார்த்தால், சரி இல்லை எனவே கூறலாம். ஒவ்வொரு உறுப்பு நாட்டிற்கும் 'ஒதுக்களவு' (Quota) உண்டு. இந்த ஒதுக்களவைத் தாண்டி வரவு இருப்போ, மேல்வரைப் பற்றோ இருந்தால் அந்த வேறுபாட்டுத் தொகைக்கு அந்நாடு ஒரு குறிப்பிட்ட கட்டணம் (charge) செலுத்தல் வேண்டும். ஒதுக்களவையும் தாண்டிப் போவதற்கு ஒரு எல்லை நிர்ணயிக்கப்பட்டது. மேல்வரைப் பற்று, அந்த எல்லையைத் தாண்டி எக்காரணத்தைக்கொண்டும் செய்ய முடியாது. அந்த எல்லையைத் தாண்டி வரவு இருப்பு செல்வ தற்கும் ஒன்றியத்துடன் ஆலோசிக்கப்பட வேண்டும்.

ஒயிட் திட்டம் :

இத்திட்டப்படி ஒவ்வொரு உறுப்பு நாடும் மைய நிதிக்குத் (Central Fund) தொடக்கத்தில் ஒரு குறிப்பிட்ட தொகையைச் செலுத்துதல் வேண்டும். அத் தொகையின் ஒரு பகுதி பொன்னாகவும் மறு பகுதி அந்த நாட்டின் செலாவணியாகவும் இருத்தல் வேண்டும். அந் நிதி ஒரு நாணய மாற்றுச் சந்தையாக இயங்கும். நிதியின் விதிகளின்படி, குறிப்பிட்ட எல்லைகளுக்குள் பொன்னையும் அந்நியச் செலாவணியையும் அது வாங்கி விற்கும். 'யூனிட் டாக்கள்' (Unitas) என்ற புதிய பண அலகின் மூலம் கணக்குகள் வைக்கப்படும். இது போன்ற பல கருத்துகள் இத் திட்டத்தில் இடம் பெற்றன.

பிரிட்டன் திட்டத்திற்கும், அமெரிக்கத் திட்டத்திற்கும் நோக்கம் ஒன்றுதான். முக்கிய வேறுபாடு என்னவென்றால், பிரிட்டன் திட்டம் உலக மைய வங்கியை உண்டாக்க வலியுறுத்தியது; அமெரிக்கத் திட்டம் நாணயமாற்றுச் சந்தையை உண்டாக்கப் பரிந்துரைத்தது.

அமெரிக்காவும், இங்கிலாந்தும் அதனதன் திட்டத்தைச் செயல்படுத்தத் தீவிரமாக முனைந்தன. இரண்டு நாட்டுச் சார்பாளர்களும் சந்தித்து விவாதித்தனர். இறுதியில், 1944 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்களில் பன்னாட்டுப் பண நிதியை உருவாக்குவதற்கான கூட்டறிக்கை ஒன்றை வெளியிட்டனர். 1944 ஆம் ஆண்டு மேத் திங்களில் ஜனாதிபதி ரூஸ்வெல்ட், 44 ஐக்கிய மற்றும் இணைந்த நாடுகளுக்கு (United and Associated Nations) பிரெட்டன் வுட்ஸில் (Bretten Woods. New Hampstire, U S.A.) நடைபெற இருந்த மாநாட்டிற்கு வரும்படி அழைப்பு விடுத்தார். அந்த மாநாட்டில் பன்னாட்டுப் பண நிதி, பன்னாட்டு வங்கி ஆகிய இரண்டு நிறுவனங்களை நிறுவுவதுபற்றி ஆய்வு செய்யப்போவதாகக் குறிக்கப்பட்டிருந்தார்.

ஐக்கிய நாடுகளின் பணமும் நிதியும் பற்றிய மாநாடு (The United Nations Monetary and Financial Conference) குறிப்பிட்டபடி பிரெட்டன் வுட்ஸில், 44 நாடுகளின் ஏற்றத்தாழ 400 சார்பாளர்களைக்கொண்டு 1944 ஜூலைத்திங்கள் முதல் நாள் தொடங்கி ஜூலை 22 ஆம் நாள்வரை நடைபெற்றது. மாநாட்டின் நற்பயன் என்னவென்றால், 'பிரெட்டன் வுட்ஸ் முடிவுச் சட்டம்' (Bretton Woods Final Act) மாநாடு முடிவில் இயற்றப்பட்டதுதான். இச் சட்டம் என்ற கருவியைக்கொண்டுதான் பன்னாட்டுப் பண நிதியும் 'உலக வங்கியும்' (I.B,R.D.) நிறுவப்பட்டன.

பன்னாட்டுப் பண நிதி — தொடக்கமும், செயல்முறையும்:

1945 ஆம் ஆண்டு டிசம்பர் 27 ஆம் நாள் வாஷிங்டனில் 29 அரசுகள் பன்னாட்டுப் பண நிதியின் உடன்பாட்டு விதிகளில் (Articles of Agreement) கையெழுத்திட்டன. பன்னாட்டுப் பண நிதியின் முதல் கூட்டம் 1946 ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்களில் நடைபெற்றது. 1947 ஆம் ஆண்டு மார்ச்சில் அது தன் பணிகளைத் தொடங்கியது. தொடக்கத்தில் இந்த நிறுவனத்தில் 44 உறுப்பு நாடுகள் இருந்தன. தற்போது (1974 அதில் 126 உறுப்பு நாடுகள் உள்ளன.

பணநிதியின் நோக்கங்கள்:

(1) பன்னாட்டுப் பணமுறைப் பிரச்சினைகளைக் கலந்தாலோசித்து ஒருமித்த கருத்தை அடையும் அமைப்பைத்தரும். (Providing machinery) ஒரு நிலையான நிறுவனத்தின் மூலம் பன்னாட்டுப் பணமுறைக் கூட்டுறவை (International moneltary co-operation) வளர்ப்பது.

(2) பன்னாட்டு வாணிபத்தின் சமநிலை வளர்ச்சிக்கும், விரிவாக்கத்திற்கும் வழிவகுப்பது. அதன் மூலம் எல்லா உறுப்பு நாடுகளும் வேலை வாய்ப்பு, உண்மை வருமானம் ஆகியவற்றை உயர் நிலையில் நிறுத்தவும், உற்பத்திச் சாதனங்களை வளர்க்கவும் உதவுவது;

(3) நாணய மாற்று மதிப்பை நிலைபேறுக்கம் செய்வது; உறுப்பு நாடுகளுக்கிடையே நெறியான செலாவணி மாற்று ஏற்பாடுகளைச் செய்வது; போட்டியிட்டு நாணய மதிப்பைக் குறைப்பதைத் தவிர்ப்பது;

(4) உறுப்பு நாடுகளுக்கிடையில் நடப்புப் பரிவர்த்தனைச் சார்ந்த பலமுகச் செலுத்துதல்களை உருவாக்கவும் உலக வாணிப வளர்ச்சிக்குத் தடையாக இருக்கும் அந்நியச் செலாவணிக் கட்டுப்பாடுகளை நீக்கவும் உதவுவது;

(5) உறுப்பு நாடுகளுக்கிடையில் நம்பிக்கையை ஏற்படுத்தும் வகையில் தக்க காப்பு ஏற்பாடுகளுடன் நிதியின் பணத்தைக் கடன் கொடுப்பது. ஒரு நாட்டிற்கு அல்லது பன்னாட்டு அளவில் செழிப்பு (prosperity) குந்தகம் விளைவிக்காதபடி ஒவ்வொரு உறுப்பு நாடும் அதனதன் செலுத்து நிலையில் சமநிலைக்கேட்டைத் திருத்திக்கொள்ளச் சந்தர்ப்பம் கொடுப்பது;

(6) மேற்கண்ட நடவடிக்கைகளின் செலுத்து நிலையிலுள்ள சமன்பாட்டின் காலத்தையும், அளவையும் குறைப்பது.

மேலாண்மை: பன்னாட்டுப் பணநிதியை ஆளுநர் குழு (Board of Governors) மேலாண்மை செய்கிறது. உறுப்பு நாடுகள் ஒவ்வொன்றும் ஒரு ஆளுநரை நியமிக்கின்றன. இக்குழு ஆண்டுக்கொரு முறையாவது கூடவேண்டும். பொதுக் குழுவிற்காக இயக்குநர் செயற்குழு (Board of Executive Directors) ஒன்று அன்றாட அலுவல்களைக் கவனிக்கிறது. இச் செயற்குழுவில் 20 உறுப்பினர்கள் உள்ளனர். இவர்களில் ஐவரை அதிகமாக நிதி ஒதுக்களவு (Fund quota) தருகின்ற அமெரிக்கா, இங்கிலாந்து, மேற்கு ஜெர்மனி, பிரான்சு, இந்தியா ஆகிய நாடுகள் நியமிக்கின்றன ஏனைய இயக்குநர்களைப் பிற நாடுகள் தேர்ந்தெடுக்கின்றன. ஒவ்வொரு உறுப்பு நாட்டிற்கும் அடிப்படை உறுப்பினர் வாக்குரிமை 250, மேலும், ஒவ்வொரு இலட்சம் ஒதுக்களவுக்கும் ஒரு வாக்குரிமை உண்டு. பண நிதியின் இயக்குநர் செயற்குழுவில் மேலாண்மை இயக்குநர் தலைவராகப் பணியாற்றுகிறார். ஒரு அலுவலகச் செயலாளரும் உண்டு.

பண நிதியின் கடன் அளிப்பு நடவடிக்கைகள்

நாட்டின் வருமானம், பன்னாட்டு வாணிப நடவடிக்கைகள் ஆகியவைகளின் அடிப்படையில் ஒவ்வொரு உறுப்பு நாட்டிற்கும் ஒதுக்களவு நிர்ணயிக்கப்படுகிறது. அந்த ஒதுக்களவில் 25 சத வீதத்திற்குப் பொன்னாகவும், எஞ்சிய 75 சதவீதத்திற்கு அதனதன் செலாவணியிலும் உறுப்பு நாடுகள் பண நிதிக்குக் கட்டவேண்டும். பன்னாட்டு நடவடிக்கைகளின் பொருட்டு ஒரு நாடு அந்நியச் செலாவணியைப் பெற விரும்பினால் தேவையான அளவு தன்னுடைய செலாவணியைப் பண நிதியிடம் கொடுத்து விட்டு அதனைப் பெறலாம். இப்படியாக, பன்னாட்டுப் பணநிதியிடம் பலவகைச் செலாவணிகள் குவிந்து காணப்படும். அந்நியச் செலாவணியை வாங்கிய ஒரு நாடு, திருப்பவும் மாற்றும் தன்மையுள்ள அந்நியச் செலாவணியைக் (Convertible foreign currency) கொடுத்துவிட்டுத் தனது நாட்டுச் செலாவணியைப் பெற்றுக் கொள்ளலாம். கடன் வாங்கும் நாட்டின் செலாவணியைக் கடனுக்குத் துணையாக (collateral for the loan) வைத்து மாற்றுத் தன்மையுள்ள அந்நியச் செலாவணியைப் பெறுவதால் பன்னாட்டுப் பணநிதி கடன் கொடுத்து உதவுகிறது எனக் கூற வேண்டும்.

பண நிதியிடமிருந்து அப்படி அந்நியச் செலாவணிகளைக் கடனாக வாங்குதல் அந்த நாட்டிற்கான ஒதுக்களவில் 25 சத வீதத்திற்கு மேல் ஏதாவது ஒரு ஆண்டில் போகக்கூடாது. மொத்தமாகப் பார்த்தால், பண நிதியிடம் கடன் வாங்கும் நாட்டின் செலாவணித் தொகை அந் நாட்டு ஒதுக்களவுத் தொகையின் இரு மடங்குக்கு மேல் இருக்கக்கூடாது. அந்நியச் செலாவணியை விற்றல் பண நிதியிடம் உறுப்பு நாட்டின் செலாவணி அதிகரிக்கும். இதற்குக் 'கடன் ட்ரான்சுகள்' (Credit tranches) எனப் பெயர். 25 சதவீதத்திற்குக் கடன் அளிப்பதை 'பொன் ட்ராஞ்சுகள்' (Gold Tranches)[1] எனலாம். கடன் பெறும் நாடு அந் நாட்டுச் செலுத்துநிலைப் பற்றாக்குறையை உள்நாட்டுக் கொள்கை மூலம் திருத்திக்கொள்கிறது எனப் பணநிதிக்குத் தெரியவந்தால்தான் கடன் உதவி அளிக்கப்படும். இந்த நிபந்தனைக்கு உட்பட்டுத்தான் ஒவ்வொரு நாடும் உறுப்பு நாடாகிறது. ஒரு நாடு செலுத்துநிலைப் பற்றாக்குறையில் சிக்கித் தவிக்கிறது என்றால் எப்படியாவது நாணயமாற்று வீதத்தை நிலைப்படுத்துதல் வேண்டும். தன்வசம் உள்ள பன்னாட்டுச் செலாவணி இருப்பை உபயோகிக்கலாம்; விலை நிலை பேராக்கக் கொள்கையைக் கடைபிடிக்கலாம். அந்நியச் செலாவணித் தேவையைக் கட்டுப்படுத்தி வீக்கநிலையைக் குறைக்கலாம். இது போன்ற பற்பல கொள்கைகளை மேற்கொண்டு செலுத்து நிலைப் பற்றாக்குறையைச் சரிசெய்யலாம். உள்நாட்டு அளவில் எல்லா வகை நடவடிக்கைகளையும் கையாண்டு, போதுமான அளவு பன்னாட்டுச் செலாவணிக் காப்பு இருப்பு (International Monetary Reserve) இல்லை என்றால், அந்த நாடு பன்னாட்டுப் பண நிதியிடமிருந்து கடன் வாங்கலாம். இவ்வளவும் செய்து ஒரு நாட்டின் செலுத்து நிலையில் பற்றாக்குறை காணப்பட்டால், அடிப்படை சமநிலைக் கேடு (Fundamental in balance) நிலவுகிறது எனக்கொண்டு அதனுடைய நாணய மாற்று வீதத்தையே மாற்றி அமைக்க வேண்டி வரும்.

நிபந்தனையுடன் கடன் வாங்க முடியுமென்றாலும், கடன் வாங்கும் நாடு முழு நம்பிக்கையுடன் இருக்கமுடியாது. மேலும், அப்படிப் பன்னாட்டு நிதியிடமிருந்து கடன் பெறும் உரிமைகளைப் பன்னாட்டு நீர்மை சொத்தில் (International liquidity) ஒரு பகுதியாகவோ, பன்னாட்டுச் செலாவணிக் காப்பிருப்பில் ஒரு பகுதி

[1] Gold Tranche means that part of the subscription of a member of the International Monetary Fund to be paid in gold

யாகவோ கொள்ளக்கூடாது. 25 சதவீதத்திற்குள் பெரும் பொன் ட்ராஞ்சுகளை வேண்டுமானால் எவ்வித நிபந்தனையுமின்றி பன்னாட்டு நிதியிடமிருந்து பெறலாம். ஏனென்றால், இக் கடன் அளிப்புக்குத்தான் 25 சதவீத ஒதுக்கீடாவான பொன் இருப்பு அந்த நிதியிடம் இருக்கிறது. இதன் விளைவாகப் பொன் ட்ராஞ்ச் நிலைமை, பல நாடுகளின் பன்னாட்டுச் செலாவணி காப்பிருப்புகளின் ஒரு பகுதியாகக் கணக்கிடப்படும்.

துணை நிற்கும் உடன்பாடுகள் (Stand by agreements) :

பன்னாட்டுப் பண நிதியின் நிபந்தனைகளை முன்கூட்டியே நிறைவேற்றி தேவையான கடன் தொகையையும் முன்கூட்டியே தெரிவிப்பதற்கு ஒரு உறுப்பு நாட்டுடன் அப் பண நிதி துணை நிற்கும் உடன்பாடு செய்துகொள்கிறது. அதாவது, சாதாரணமாக வாங்கும் உரிமைகளுக்கு மிகையாக நிதிவசதியை உறுப்பு நாடுகளுக்கு அளிக்க அந் நிதி ஒப்புக்கொள்கிறது மிகையான தேவையை நிறைவு செய்ய நிதியிடம் போதுமான நிதி இல்லையென்றால் உறுப்பு நாடுகளிடமிருந்து அந் நிதி 'கடன்' வாங்குகிறது. எடுத்துக்காட்டாக, 1962-ல், துணை நிற்கும் உடன்பாட்டின்படி, 10 பெரும் நாடுகள் $ 6 பில்லியன் (Billion) வரை பண நிதிக்கு நிதி கொடுத்து (கடன்) உதவின, சில குறிப்பிட்ட நோக்கங்களுக்கு மட்டுமே இக் கடன் தொகை உபயோகப்படுத்தப்படலாம்.

1974, இரண்டாவது காலாண்டில் பன்னாட்டுப் பண நிதி ஐந்து துணை நிற்கும் ஏற்பாடுகளுக்கு (Arrangements) ஒப்புதல் அளித்துள்ளது :— ஏப்ரல் 10-ல் SDR 1000 மில்லியனுக்குச் (சிறப்பு எடுப்பு உரிமைகள் — Special Drawing Rights) சமமாக செலாவணிகளை வாங்கிக்கொள்ள இத்தாலிக்கு (Italy) அனுமதி கொடுக்கப்பட்டிருக்கிறது. இதேபோல் ஏப்ரல் 29-ல் SDR 24·5 மில்லியனுக்கு ஸ்ரீலங்காவுக்கும், மே 15-ல் SDR 5 மில்லியனுக்கு குயானாவுக்கும் (Guyna), மே 17-ல் $DR 20 மில்லியனுக்கு கொரியாவுக்கும் (Korea) மற்றும் ஜூன் 14-ல் SDR 31·25 மில்லியனுக்கு வங்காள நாட்டிற்கும் (Bangala Desh) அனுமதி கொடுக்கப்பட்டிருக்கிறது. அடுத்துவரும் அட்டவணை துணை நிற்கும் ஏற்பாடுகளின் நிலையைப்பற்றி (ஜூன் 30, 1974) விளக்குகிறது.

அதே காலத்தில் மே, 1-ல் SDR 235 மில்லியனுக்கு இந்தியாவும், மே, 29-ல் SDR 2·8 மில்லியனுக்கு "சாட்"-ம் (Chad) வாங்கின.

துணைநிற்கும் ஏற்பாடுகளின் நிலைமை (1974, ஜூலை 30-ல்)
(Status of stand by arrangements)[2]

உறுப்பு நாடு	உடன்பாட்டுத் தொகை (Amount Agreed)	வாங்கிய தொகை (Amount purchased) (SDR மில்லியன்கள்)	எடுக்கப்படாத மீதி (Undrawn balance)
வங்காள நாடு	31·3	29·2	2·1
சிலி (Chile)	79·0	39·5	39·5
கானா (Guyana)	5·0	—	5·0
ஹாதி (Haiti)	4·0	—	4·0
இத்தாலி (Italy)	1000·0	—	1000·0
கொரியா (Korea)	20·0	—	20·0
பாகிஸ்தான்	75·0	75·0	—
பனாமா	9·0	—	9·0
ஸ்ரீலங்கா	24·5	7·0	17·5
சூடான்	24·0	19·0	5·0
	1271·8	169·7	1102·1

செலுத்து நிலையில் உபரியைக்கொண்ட நாடுகளிடம் பன்னாட்டுப் பண நிதி வேறு வகைகளில் நடவடிக்கைகளை மேற் கொள்கிறது. ஒரு நாட்டின் செலுத்து நிலையில் உபரி இருக்கிற தென்றால் பண நிதியிடமுள்ள அந்நாட்டுச் செலாவணித் தொகை குறைந்து அருமையாகிறது (Scarce) எனப் பொருள்.

அச் சமயங்களில் அவ்வகைச் செலாவணியை 'அருஞ் செலாவணி' எனப் பண நிதி அறிவிக்கும் பின், அந்நாட்டுச் செலாவணியை அது கடனாகப் பெறக் கோரும். கடனாக அளிப்ப தற்கு அந்நாடு இணங்கவில்லையென்றால் பொன்னைக் கொடுத்து

2. Finanee and Developement, I.M.F. Publication, Sep. 1974/Vol. 11/ Number 3 Page 48.

அந்த நாட்டுச் செலாவணியை விலைக்கு வாங்குகிறது. அப்படி வாங்கிய செலாவணியை வேறு உறுப்பு நாடுகளுக்குக் கடனாக அளிக்கிறது. அருஞ்செலாவணிக்கு மிகையான தேவை இருந்தால் செலாவணி அளிப்பு வரையறுத்துப் பங்கீடு செய்யப்படும்.

பன்னாட்டுச் செலாவணிக் காப்பிருப்புகள் (International monetary reserves) :

உலகப் பொன் இருப்பு அதிகரித்ததாலும், செலாவணிக் காப்புகளாக நாடுகளின் செலாவணிகளை அயல் நாட்டு மைய வங்கிகள் கையாண்டதாலும் உலகப் போருக்குப் பின் 1965 வரை உலகச் செலாவணிக் காப்பு அதிகரித்தது. ஆனால், உலக வருமானங்கள் மற்றும் வாணிகம் ஆகியவைகளின் வளர்ச்சியை ஒப்பிடும்போது செலாவணிக் காப்பின் அதிகரிப்பு சற்றுக் குறைவு தான். 1965-க்குப் பின்னர் உலகச் செலாவணியின் காப்புத் தொகை குறைந்திருக்கிறது. உலகப் பொன் இருப்பில் முன்னேற்றம் ஏதுமில்லை; குறைவு காணப்பட்டுள்ளது. இதற்குக் காரணம் உலகில் வீக்கநிலை (inflation) பரவலாகக் காணப் பட்டதுதான் வீக்க நிலையின் விளைவாகப் பொன்னின் வாங்குந் திறன் குறைந்தது. அதனால் உற்பத்தி பாதிக்கப்பட்டது. இதைச் சரிசெய்வதற்காகப் பன்னாட்டுப் பணநிதியும், மற்ற நாடுகளின் அரசுகளும் செலாவணிகளை மதிப்பிறக்கம் செய்யத் தொடங்கின அல்லது பொன்னின் உலக விலையை அதிகரிக்க அனுமதித்தன. இச் செயலின் காரணமாக விலை உயர்வை எதிர்பார்த்துப் பொன்னுக்கு ஊக வாணிகம் ஏற்படத் தொடங் கியது. ஊக வாணிகத்தால் பொன் இருப்பு, மைய வங்கிகளை விட்டு வெளியேறி ஆங்காங்கே முடக்கி வைக்கப்பட்டது. அதனால் உலகச் செலாவணிக் காப்பு இருப்பிலிருந்தும் பொன்னின் அளவு குறைந்தது.

1960-ல் உலகப் பொருளாதாரக் கொள்கையில் நெருக்கடி ஏற்பட்டது. எந்த வகையிலும் உலகச் செலாவணிகளின் இருப்பைக் கூடுதலாக்க இரு முயற்சிகள் எடுக்கவேண்டிய தாயிற்று. ஒன்று, பொன் இருப்பை அதிகரித்தல். அது அதிகரிக் கப்பட வேண்டுமானால் உலக அளவில் நாடுகளின் செலா வணிகளின் மூலம் (in terms of national currencies) பொன்னின் விலைமதிப்பு உயர்த்தப்பட வேண்டும். அப்போதுதான் பொன் உற்பத்திக்கு ஊக்கம் உண்டாகும். இவ்வேற்பாடு அவ்வப் போது பன்னாட்டுப் பண நிதியால் பலநாடுகளின் இசைவுகேட்டு

பொன்னின் மதிப்பு மாற்றியமைக்கப்பட்டது. மற்றொன்று, பன்னாட்டுச் செலாவணிக் காப்பை அதிகரிப்பதற்காக 'அடையாளச் சொத்தை' (Token asset) உண்டாக்குவது. இம் முறை மிகவும் முக்கியமானதொன்றாகும். அதற்குச் 'சிறப்பு எடுப்பு உரிமை' எனப் பெயர்,

சிறப்பு எடுப்பு உரிமைகள் (SDR) (Special Drawing Rights)*

1967-ஆம் ஆண்டு, செப்டம்பரில் 'ரியோடி ஜானிரோ'வில் (Rio de Janeiro) பன்னாட்டுப் பண நிதியின் ஆண்டுக்கூட்டம் (Annual Meeting) நடைபெற்ற போது, செயல் இயக்குநர்கள் (Executive Directors) பண நிதியில், சிறப்பு எடுப்பு உரிமைகளை அடிப்படையாகக்கொண்ட ஒரு திட்டத்தை ஏற்படுத்தப் பரிந்துரைகளை ஆளுநர் குழுவின் முன் வைத்தார்கள். இந்த உரிமைகளை ஏற்படுத்துவதன் முக்கிய நோக்கம் பன்னாட்டுக் காப்பில் ஒரு புது வகையான சொத்தை (asset) ஏற்படுத்துவதாகும். பொன்னும், பல அந்நியச் செலாவணிகளும் தொடர்ந்து சொத்தாக இருக்கும். அதாவது, பன்னாட்டுப் பண நிதியில், உலகச் செலாவணிக் காப்பானது பொன், அர்நியச் செலாவணிகள் மற்றும் சிறப்பு எடுப்பு உரிமைகள் ஆகியவைகளைக் கொண்டு இருக்கும். இந்தத் திட்டம் ஆளுநர் குழுவால் ஏற்றுக்கொள்ளப்பட்டு, 1969-ல் பண நிதியின் உடன்பாட்டு விதிகளில் சேர்க்கப்பட்டது. அப்படியே, 1969ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 8ஆம் நாள் பண நிதியில் சிறப்பு எடுப்புக் கணக்கு (Spectal drawing account) உண்டாக்கப்பட்டது. அந்த நாளிலிருந்து சிறப்பு எடுப்புக் கணக்கில் பங்கு பெற விரும்பும் உறுப்பு நாடுகளுக்குப் பன்னாட்டுக் காப்புச் சொத்து ஒதுக்கீடு செய்யப்படுகிறது. அவ்வுரிமைகள் 'அலகுகளாக'க் (Units) 'SDRs' கொடுக்கப்படுகிறது. இந்த SDRs ஒதுக்கீடுகளுக்காக எவ்விதமான செலாவணியோ, சொத்தோ உறுப்பு நாடுகள் பண நிதிக்கு மாற்றம் (transfer) செய்யவேண்டியதில்லை. உறுப்பு நாடுகளின் ஒதுக்களவுக்கேற்ப ஒதுக்கீடு செய்யப்பட்ட நாளிலேயே பங்கு பெற விரும்பும் நாடுகளின் கணக்குகளில் SDRs வரவு வைக்கப்படும். பின்னர் பண நிதியின் விதிகளுக்குட்பட்டு, அந்தந்த நாடுகள் SDRs கணக்கிலிருந்து எடுத்துக்கொள்ள அனுமதிக்கப்படும். எப்போது SDRs ஒதுக்கீடு செய்யப்படுகிறதோ அப்போதே பன்னாட்டுக் காப்புகளின் இருப்பு அதிகரிக்கிறது.

* Under the "International Monetary Fund's' existing Articles of Agreement, tfie unitt of value of the SDRis fixed as equivalent to 0·888761 grams of the fine gold.

இதுவரை (1970-72) மூன்று ஒதுக்கீடுகள் SDRs செய்யப் பட்டுள்ளன. இவைகளின் கூட்டுத் தொகை SDRs 9·3 பில்லியனாகும். அதாவது பன்னாட்டுக் காப்புகளில் 5 சதவீதமாகும். பண நிதியின் மொத்த உறுப்பு நாடுகளான 126-ல் 9 நாடுகள் மட்டும் சிறப்பு எடுப்புக் கணக்கில் பங்கு பெறவில்லை.

SDR மாற்றங்கள் (SDR transfers):

SDR 5 பில்லியன் அளவுக்கு 1978-ஆம் ஆண்டு டிசம்பர் 31 முடிய நான்கு ஆண்டுகளில் ஏறத்தாழ SDRs 1000 நடவடிக்கைகள் இடம் பெற்றிருக்கின்றன மூன்று முக்கிய வழிகளில் பங்குபெறும் நாடுகள் (Participants) SDRs வசதிகளை உபயோகப்படுத்திக்கொள்கின்றன: (1) SDRs பெறுவதற்காகப் பண நிதியால் பெயர் குறிப்பிடப்பட்ட (designated)[3] பங்கு கொள்ளும் நாடுகளிடமிருந்து (Participant Countries) அந்நியச் செலாவணியை அடைதல் (2) பங்கு கொள்ளும் நாடுகளுக்கிடையே ஏற்பட்ட உடன்பாடுகளின் நடவடிக்கைகளால் மற்ற நாடுகள் கொண்டிருக்கும் தங்கள் நாடுகளின் செலாவணிகளைத் திரும்ப மீட்டுதல் (redeemable); (3) பண நிதியில் பொதுக் கணக்கு மூலம் (General Account) பெரும்பாலான உறுப்பு நாடுகளின் நடவடிக்கைகள் நடத்தப்படுதல்.

ஒவ்வொரு வகையான SDR மாற்றத்தின் மொத்தத் தொகையும், இடம்பெற்ற நடவடிக்கைகளின் எண்ணிக்கையும் அடுத்த பக்கத்தில் உள்ள அட்டவணையில் கொடுக்கப்

பெயர்க் குறிப்பிட்ட நடவடிக்கைகளில் அந்நியச் செலாவணியைப் பெற விரும்பும் ஒரு உறுப்பு நாடு தனக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட SDRs-ஐ தேவையான அளவுக்கு அந்நியச் செலாவணியாக மாற்றும்படி பண நிதியைக் கோரும், அக் கோரிக்கைக் கிணங்க பங்குபெறும் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட சாதகமான செலுத்து நிலையைக் கொண்ட நாடுகளைத் தேவையான அளவு குறிப்பிட்ட அந்நியச் செலாவணியை (SDRsஐப் பெற்றுக் கொண்டபின்) அளிக்கும்படி அப் பணநிதி ஆணையிடும்.

---

[3] Since Jan. 1, 1970 Participants have been able to use their SDRs to acquire needed foreign exchange through transactions which are variously reerred to as "transactions with designation", "the disignation process" or simply "designation". According to Articles XXV, section 5, of Fund's Articles of Agreement, "The Fund shall ensure that a participant will ebable to use its special drawing rights by designating participants to provide currency forspecified amountsof special drawing rights....."

1970—73 (SDRs மில்லியன்களில்)[4]

விவரம்	மொத்தத் தொகை	மொத்தத்தில் சதவீதம்	நடவடிக்கைகளின் எண்ணிக்கை	மொத்தத்தில் சதவீதம்
பங்கு பெறும் நாடுகளிடையே மாற்றங்கள்				
(1) பெயர்க் குறிப்பிடப்பட்டவைகளுடன் நடவடிக்கைகள் (Transactions with designation) ...	927	19	113	10
(2) உடன்பாட்டினுல் நடவடிக்கைகள் (Transactions by Agreement) ...	1845	37	33	3
மொத்தம் ...	2772	56	146	13
பங்கு பெறுவோர்களிடையே மாற்றங்களும் பொதுக் கணக்கும்				
SDRs உபயோகிப்போர்				
(1) மனு வாங்குதல்கள் (SDRs-ல்) ...	1134	23	222	20
(2) கட்டணம் (SDRs-ல்) ...	176	4	508	45
(3) பிற ...	26	1	—	—
மொத்தம் ...	1336	28	730	65
பங்கு பெறுவோர் SDRs பெறுதல்				
(1) SDRs வாங்குதல்கள் ...	299	6	6	—
(2) SDR இருப்புகளைத் திருத்தியமைத்தல் (Reconstitution of SDR holdings) ...	282	6	104	9
(3) பொதுக் கணக்கில் பங்கு பெறுவோர்களின் செலாவணி கூடுதலாக்கப்படுதல் ...	145	3	9	1
(4) பிற ...	102	2	139	12
மொத்தம் ...	828	17	258	22
ஆக மொத்தம் ...	4936	100	1134	100

[4] 'Finance And Development', I. M. F. Publication, June 1974, Vol. 11, Number 2, page 7.

இவ்வாறு பங்குபெறும் நாடுகளுக்குள் உதவிகள் பணநிதியின் மூலம் பரிமாற்றம் செய்யப்படுகின்றன. இவ்வகை வசதிகள் பொதுவாக வளர்ச்சியடையா நாடுகளுக்கு அளிக்கப்படுகின்றன.

வேறு சில நடவடிக்கைகள் பணநிதியின் ஆணையில்லாமலேயே நாடுகளுக்கிடையே உடன்பாடு மூலம் நடைபெறுகின்றன. இந்த உடன்பாட்டில் முக்கியமாகக் குறிப்பிடப்படுவதென்னவென்றால், ஒரு நாடு தன்னுடைய செலாவணியையே மீண்டும் அதை அடைந்திருக்கும் நாட்டிலிருந்து திரும்பப் பெறுவது ஆகும். பெயர்க் குறியீட்டு நடவடிக்கைகளை ஒப்பிடும் போது இவ்வகைப் பேரங்கள் பெரும்பாலும் (90%) தொழில் சார்ந்த நாடுகளுக்குள்ளே (Industrial countries) நடைபெறுகின்றன.

பொதுக் கணக்கு மூலம் இயக்கப்படும் நடவடிக்கைகளுக்காக எந்த அளவுக்கு SDRs பணநிதியால் சேர்க்கப்பட்டு உபயோகப்படுத்தப்படுகிறதோ (to acquire and use SDRs) அந்த அளவுக்கு அவைகளின் சிறப்பியல்பு அமைகிறது. பொதுக் கணக்கிலுள்ள செலாவணிகளை மனுக் கொள்முதல் செய்வதற்காகவும், பணநிதியின் வள வாய்ப்புகளை (Fund's resources) (எடுத்துக்காட்டாக, துணைநிற்கும் ஏற்பாடுகளின்கீழ் எடுப்புச் செய்தல்) பயன்படுத்துவதற்காகப் பொதுக் கணக்குக்குக் கட்டணம் (charges) செலுத்துவதற்காகவும் பங்கு பெறுவோர் SDRs பயன்படுத்தவேண்டுமென முதன் முதலிலேயே அப் பணநிதி தீர்மானித்தது; மேலும், எந்த வகையில் மேற்படி உரிமைகள் பயன்படுத்தப்பட வேண்டுமெனவும் விளக்கம் கொடுத்தது. மேலே கொடுக்கப்பட்ட அட்டவணைப்படி, SDR 1184 மில்லியனுக்கு மனுக்கொள்முதல்களைப் பங்குபெறும் நாடுகள் செய்திருக்கின்றன, அதில் SDR 650 மில்லியன் ஐக்கிய அரசிடமிருந்து (U.K.) மனுக் கொள்முதல்கள் நடந்திருக்கின்றன.

1974-ன் இரண்டாவது காலாண்டில் பொதுக் கணக்கிலிருந்து வாங்கப்பட்ட செலாவணிகளின் மதிப்பு SDR 485·6 மில்லியனுக்குச் சமமாகும் மனு வாங்குதல்களின் மதிப்பு SDR 119·6 மில்லியனுக்குச் சமமாகும். பன்னாட்டுப் பணநிதியின் நடவடிக்கைகளின் தொடக்கத்திலிருந்து 1974ஆம் ஆண்டு ஜூன் முடிய பொதுக் கணக்கிலிருந்து வாங்கப்பட்டவைகளின் மதிப்பு SDR 27011·1 மில்லியனுக்குச் சமமாகும்; எடுப்புகளின் மதிப்பு SDR 8505·2 மில்லியனுக்குச் சமமாகும். பணநிதியிடமுள்ள தெரிந்தெடுக்கப்பட்ட செலாவணிகளின் மதிப்பைக் பின்காணும் அட்டவணையில் அறியலாம்:

பண நிதியிடம் உள்ள தெரிந்தெடுக்கப்பட்ட செலாவணிகள் (1974 ஜூன் முடிய[5]—Fund holdings of selected currencies)

செலாவணி	தொகை (SDR மில்லியனில்)	ஒதுக்களவில் சதவீதம்
ஆஸ்திரேலிய டாலர்கள்	481·0	72·3
ஆஸ்திரிய ஷில்லிங்குகள் (Schillings)	134·8	49·9
பெல்ஜிய பிராங்குகள் (Belgium francs) ...	188·1	28·9
கனடா டாலர்கள் ...	816·0	74·2
டென்மார்க் க்கோனர் (Danish knoner) ...	191·7	73·7
டட்ஸிய மார்க் (Deutsche mark) ...	313·9	19·6
பிரான்சு பிராங்குகள் ...	1117·7	74·5
அயர்லாந்துப் பவுன்கள் (Irish pounds) ...	77·7	64·2
இத்தாலிய லியர் (Italian lire) ...	730·0	73·0
ஜப்பான் யென் (Japanese yen) ...	663·3	55·3
குவெய்த் தினர்கள் (Kuwaiti dinars)	45·2	69·5
மெக்ஸிகோ பீஸோக்கள் (Pesos) ...	272·2	73·6
நெதர்லாந்து கில்டர்ஸ் (Netherland guilders) ...	448·1	64·0
நார்வேஜிய க்ரோனர் (Norweighan kroner) ...	173·8	72·4
பவுன்ஸ் டெர்லிங் ...	2683·3	95·8
ஸ்வீடன் க்ரோனர் (Swedish kroner) ...	231·5	71·2
அமெரிக்க டாலர்கள் ...	5866·5	87·6

[5] Ibid. page 48.

மேற்கோள் நூற்பட்டியல்

(BIBLIOGRAPHY)

1. Raymond P. Kent, 'Money and Banking',—*1949*.
2. Paul B. Trescott, 'Money, Banking and Economic Welfare' (Second edition).
3. George N. Halm, 'Economics of Money and Banking',—*1956*.
4. George N. Halm, 'Monetary Theory',—*1960*.
5. Geoffrey Crowther, 'An Outline of Money',—*1962*.
6. Charles R. Whittlesey, Arthur M. Freedman, Edward S. Herman, 'Money and Banking: Analysis and Policy',—*1969*.
7. M. C. Vaish, 'Monetary Theory',—*1968*.
8. Charles P. Kindlebrger, 'International Economics',—*1966*.
9. P. T. Ellsworth, 'The International Economy',—*1964*.
10. R. W. Clower (Editor), 'Monetary Theory, Selected Readings',—*1969*.
11. Honor Croome, 'Introduction to Money',—*1956*.
12. Paul Einzig, 'Monetary Policy—Ends and Means',—*1964*.
13. F. S. Brooman, 'Macro Economics',—*1970*.
14. Harry G. Johnson, 'Essays in Monetary Economics',—*1970*.
15. R. G. Hawtrey, 'Currency and Credit',—*1950*.
16. Kenneth K. Kurihara, 'Monetary Theory and Public Policy',—*1967*.

17. Lester V. Chandler, 'An Introduction to Monetary Theory',—*1966*.

18. Lester V. Chandler, 'The Economics of Money and Banking',—*1963*.

19. Alvin H. Hansen, 'Monetary Theory and Fiscal Policy',—*1949*.

20. Alvin H. Hansen, 'Fiscal Policy and Business Cycle',—*1941*.

21. J. L. Hanson, 'Monetary Theory and Practice',—*1968*.

22. A. C. L. Day, 'Outline of Monetary Economics',—*1967*.

23. John M. Culbertson, 'Money and Banking',—*1972*.

24. Reserve Bank of India (Bombay) 'History of the Reserve Bank of India',—*1970*.

25. R. J. Ball, 'Inflation and the Theory of Money',—*1966*.

26. D. H. Robertson, 'Money',—*1948*.

27. Norman Crump, 'The A B C of the Foreign Exchanges',—*1963*.

28. The Reserve Bank of India, 'Functions and Working',—*1970*.

29. Don Patinkin, 'Money, Interest and Prices', (Second Edition).

30. Rollin G. Thomas, 'Our Modern Banking and Monetary System', (Fourth Edition).

31. Paul. M. Horvitz, 'Monetary Policy and the Financial System'.

32. J. M. Keynes, 'A Treatise on Money'.

33. ,, 'Tract on Monetary Reform',—*1923*.

34. ,, 'General Theory of Employment, Interest, and Money'.

35. W. E. L. Coulborn, 'An Introduction to Money'.

36. Estey, 'Business Cycles',— *1956*.

37. J. R. Hicks, ' A Contribution to the Theory of the Trade Cycle '.

38. Dudley Dillard, ' The Economics of John Maynard Keynes '.

Various Issues of

(a) Reserve Bank of India Bulletin.

(b) Commerce.

(c) Indian Finance.

(d) Finance and Development (I. M. F. and World Bank Group).

(e) State Bank of India, Monthly Review.

கலைச்சொற்கள்

A

Accelerator	—	வேகப்படுத்தி, முடுக்கி
Acceptance house	—	ஏற்பகம்
Acceptance market	—	ஏற்புச் சந்தை
Accommodation bills	—	கடனுதவி மாற்றுச் சீட்டுகள்
Accumulation	—	சேர்க்கை, குவிவு
Agency services	—	முகமைப் பணிகள்
Aggregate demand	—	மொத்தத் தேவை
Amalgamation	—	ஒன்றிணைப்பு
Arbitrage	—	ஆர்பிட்ரேஜ் (நிரவல் பேரம்)
Assignats	—	அசைநட்டுகள்
Average propensity to consume	—	சராசரி நுகர்வு நாட்டம்
Average propensity to save	—	சராசரிச் சேமிப்பு நாட்டம்
Autonomous investment	—	சார்பற்ற முதலீடு

B

Balance of payments	—	செலுத்து நிலை
Balance of trade	—	வாணிக நிலை
Bank Charter Act	—	இங்கிலாந்து வங்கிச் சாசனச் சட்டம்
Bank demand deposits	—	வங்கித் தேவை வைப்புகள்
Banker	—	வங்கியர்
Banking Enquiry Committee	—	வங்கி முறை விசாரணைக் குழு
Banking Regulation Act	—	வங்கிய ஒழுங்காற்றுச் சட்டம்
Bank notes	—	வங்கித் தாள்கள்
Bank rate	—	வங்கி வீதம்
Barter system	—	பண்டமாற்று முறை
Base year	—	தள ஆண்டு
Bilateral trade balances	—	இருமுக வாணிக நிலுவைகள்
Bill market	—	மாற்றுச் சீட்டுச் சந்தை
Bill of exchange	—	மாற்றுச் சீட்டு

Bimetallic Standards	—	இரு உலோகச் செலாவணித் திட்டங்கள்
Bimetallism	—	இரு உலோக முறை
Board of Governors	—	ஆளுநர் குழு
Bonus deposit system	—	மேலுதிய வைப்பு முறை
Bottleneck inflation	—	உற்பத்தித் தடை வீக்கம்
Buyer	—	வாங்குநர்
Budget	—	வரவு-செலவுத் திட்டம்

C

Call money market	—	அழைப்புப் பணச்சந்தை
Capital goods	—	மூலதனப் பொருள்கள்
Capital inflow	—	உள்வரு மூலதனம்
Capital market	—	மூலதனச் சந்தை
Capital outflow	—	வெளிச்செல் மூலதனம்
Cartels	—	கார்டெல்கள்
Cash-Balance Theory	—	ரொக்க-இருப்புக் கோட்பாடு
Cash-credit	—	ரொக்கக் கடன்
Central Bank	—	மைய வங்கி
Chain Index Number	—	தொடர் குறியீட்டெண்
Circular flow	—	சுழற் ஓட்டம்
Civil	—	குடிமை
Claim	—	கோருரிமை
Clean bill	—	தூய மாற்றுச் சீட்டு
Clearing house	—	தீர்வகம்
Coinage Act	—	நாணயமாக்கச் சட்டம்
Collateral security	—	துணைப் பிணையம்
Commodity money	—	பண்டப் பணம்
Commodity Standards	—	பண்டத் திட்டங்கள்
Conference	—	மாநாடு
Consumers	—	நுகர்வோர்
Consumption expenditure	—	நுகர்வுச் செலவு
Consumption function	—	நுகர்வுச் சார்பு
Contribution	—	பங்களிப்பு
Controller of credit	—	கடன் கட்டுப்படுத்துநர்
Cooperative Credit Institutions	—	கூட்டுறவுக் கடன் சங்கங்கள்
Corporation	—	கூட்டுரு
Cost of living index	—	வாழ்க்கைச் செலவுக் குறியீடு
Cost-push inflation	—	செலவு-உந்து வீக்கம்

Council bills — மன்ற மாற்றுச் சீட்டுகள்
Credit control — கடன் கட்டுப்பாடு
Credit creation — கடனாக்கம்
Credit market — கடன் சந்தை
Credit money — கடன் பணம்
Creeping inflation — தவழும் வீக்கம்
Cumulative excess — குவிவுக் கூடுதல்
Currency — பணவியல், செலாவணி
Current account — நடப்புக் கணக்கு

D

Debasement — மதிப்புக் குறைப்பு
Debentures — கடனீட்டுப் பத்திரங்கள்
Decimal coinage system — பதின்மான நாணயமாக்கு முறை
De-facto — நிகழ்வு நிலை
Deficit — பற்றுக்குறை
Deflation — வாட்டம்
De-jure — சட்ட நிலை
Demand-pull inflation — தேவை-இழுப்பு வீக்கம்
Demonetization — பணஞ் செல்லாப்படுத்துகை
Depositor — வைப்பாளர், வைப்புநர்
Deposits — வைப்புகள்
Depression — மந்தம்
Derivative deposits — பிறப்பிக்கப்பெற்ற வைப்புகள்
Desuetude — வழக்காற்றொழிவு
Devaluation — மதிப்புக் குறைப்பு
Discount — கழிவு, வட்டம்
Discount house — கழிவகம்
Discount market — கழிவுச் சந்தை
Disequilibrium — சமநிலைக் கேடு
Dis-inflation — வீக்கக் குறைப்பு
Disguising unemployment — மறைவு வேலையின்மை
Disposable income — செலவழிப்பு வருமானம்
Dividend — பங்காதாயம்
Documents of title to goods — சரக்குரிமை ஆவணங்கள்
Double-Entry Book-Keeping — இருநிலைப் பதிவு முறை
Downswing — கீழ்வீச்சு
Durable goods — உறுதிப் பொருள்கள்

E

Elasticity	—	நெகிழ்ச்சி
Employment multiplier	—	வேலைப் பெருக்கி
Endorsement	—	மேலெழுத்து
Entrepreneur	—	தொழில் முயல்வோர்
Equation	—	சமன்பாடு
Equation of exchange	—	மாற்றுச் சமன்பாடு
Equilibrium	—	சமநிலை
Exchange control	—	நாணயமாற்றுக் கட்டுப்பாடு
Exchange rate	—	நாணய மாற்று வீதம்
Exchange ratio	—	மாற்று விகிதம், வீதம்
Exchequer orders	—	கருவூல ஆணைச் சீட்டுகள்
External value	—	புற மதிப்பு

F

Face value	—	முகமதிப்பு
Factor cost	—	காரணி விலை
Factors of production	—	உற்பத்திக் காரணிகள்
Fair-weather Standard	—	விரும்பத்தக்க காலத் திட்டம்
Favourable balance of trade	—	சாதக வாணிக நிலை
Federal funds	—	கூட்டு நிதிகள்
Federal Reserve Banks	—	கூட்டரசுக் காப்பு வங்கிகள்
Federal reserve system	—	கூட்டரசுக் காப்பு முறை
Feudal lord	—	நிலமானியக் கோமகன்
Fiat standards	—	ஆணைத் திட்டங்கள்
Fiscal policy	—	அரசிறைக் கைக்கோள்
Fixed deposit	—	தவணை வைப்பு
Fixed Fiduciary System	—	நிலைபெறா நம்பக முறை
Fluctuations	—	ஏற்ற இறக்கங்கள், அலைவுகள்
Foreign exchange	—	அன்னியச் செலாவணி, நாணய மாற்று
Formula	—	வாய்பாடு
Forward dealing	—	முன்னேக்கிய பேரம்
Forward exchange market	—	முன்னேக்கிய நாணயமாற்றுச் சந்தை
Frictional unemployment	—	தொழில் அமைவுமாற்ற வேலையின்மை
Full-bodied coins	—	நிறை உரு நாணயங்கள்
Full employment level	—	முழு வேலைவாய்ப்பு மட்டம்
Functions of money	—	பணத்தின் பணிகள்

G

Galloping inflation	—	தாவும் வீக்கம்
General price level	—	பொதுவிலை மட்டம்
General utility services	—	பொதுப் பயன்பாட்டுப் பணிகள்
Gift	—	கொடை
Gold Bullion Standard	—	பெற்கட்டித் திட்டம்
Gold Coin Standard	—	பொற்காசுத் திட்டம்
Gold Exchange Standard	—	பொன் மாற்றுத் திட்டம்
Gold export point	—	பொன் ஏற்றுமதி எல்லை
Gold import point	—	பொன் இறக்குமதி எல்லை
Gold Mohur	—	பொன் மோகரா
Gold point	—	பொன் நிலை
Gold Standard reserve	—	பொன் திட்டக் காப்பு
Gold Tranches	—	பொன் ட்ராஞ்சுகள்
Governor-General	—	ஆட்சித் தலைவர்
Grains	—	குன்றிமணிகள்
Greenbacks	—	பச்சைப்புறத் தாள்கள்
Gross National Product	—	நாட்டு மொத்த உற்பத்தி

H

Hedging	—	நட்டத் தடை பேரம்
Holding companies	—	பிடிப்பு நிறுமங்கள்
Home charges	—	உள்நாட்டுப் பொறுப்புகள்
Horizontal axis	—	படுகிடை அச்சு
Hundis	—	உண்டியல்கள்
Hyper inflation	—	மிகையான வீக்கம்

I

Ideal Index Number	—	நிறைவுக் குறியீட்டெண்
Identity	—	முற்றொருமை
Inconvertible paper money	—	மாற்றுரிமையற்ற தாள்பணம்
Index Number	—	குறியீட்டெண்
Index of consumer prices	—	நுகர்வோர் விலைவாசிக்குறியீடு
Indian Constitutional Reforms	—	இந்திய அரசியலமைப்புச் சீர்திருத்தங்கள்
Indigenous banker	—	நாட்டு வங்கியர்
Industrial Revolution	—	தொழிற் புரட்சி
Inflation	—	வீக்கம்
Inflationary gap	—	வீக்க இடைவெளி

Inflationary-spiral	—	வீக்கச் சுழலேறி
Insurance	—	காப்பீடு
Insurance premium	—	காப்பீட்டு முனைமம்
Interaction	—	பின்னிய செயல்
Interest arbitrage	—	வட்டி நிரவல்
International Bank for Reconstruction and Development	—	புனரமைப்பும், வளர்ச்சிக்குமான பன்னாட்டு வங்கி
International Monetary Fund	—	பன்னாட்டுப் பண நிதி
International Monetary Reserves	—	பன்னாட்டுச் செலாவணி காப்பிருப்புகள்
Investment expenditure	—	முதலீட்டுச் செலவு
Investment function	—	முதலீட்டுச் சார்பு
Investment multiplier	—	முதலீட்டுப் பெருக்கி
Invisible items	—	கட்புலனாகா இனங்கள்
Issue Department	—	(பண) வெளியீட்டுத் துறை

L

Labourer	—	வேலையர்
Laissezfaire policy	—	தலையிடாக் கொள்கை
Legal tender	—	சட்ட நாணயம்
Legislative Council	—	சட்ட மன்றம்
Lender of the Last Resort	—	இறுதிநிலைக் கடன் ஈவோன்
Licence	—	உரிமம்
Liquidity	—	நீர்மைத் தன்மை
Long-run	—	நெடுங்காலம்

M

Marginal efficiency of capital	—	மூலதனத்தில் இறுதிநிலைத் திறன்
Marginal propensity to consume	—	இறுதிநிலை நுகர்வு நாட்டம்
Marginal propensity to save	—	இறுதிநிலை சேமிப்பு நாட்டம்
Maximum	—	பெருமம்
Maximum fiduciary system	—	பெரும நம்பக முறை
Measure of value	—	மதிப்பளவை
Medium of Exchange	—	பரிவர்த்தனைச் சாதனம்
Mercantalism	—	வாணிகத் தத்துவம்
Minimum	—	குறுமம்
Minimum reserve system	—	குறுமக் காப்பு முறை
Mint-per value	—	நாணய அச்சக மதிப்பு

Monetary policy — பணவாக்கக் கைக்கோள்
Monetary Standards — பணத் திட்டங்கள்
Monetary system — பணவாக்க முறை
Money — பணம்
Money inflation — பணவீக்கம்
Money lender — லேவாதேவிக்காரர்
Money market — பணச் சந்தை
Money on the wing — பறக்கும் பணம்
Money sitting — அமர்ந்த பணம்
Mono-metallism — ஓர் உலோக முறை
Moral suasion — நயக் கண்டிப்பு
Moratorium — கடன் ஒத்திவைப்பு
Mortgage — அடைமானம்
Multi-Bank — பலமுக வங்கி
Multiple Exchange Rates — பல நாணய மாற்று வீதங்கள்
Multiplier — பெருக்கி

N

National Income — நாட்டு வருமானம்
National Income Accounts — நாட்டு வருமானக் கணக்குகள்
Negative — எதிர்
Negotiable instrument — மாற்று முறையாவணம்
Negotiation — ஆவண மாற்றுதல்
Neutrality of money — நடுநிலையான பணக்கொள்கை
Note-issue — தாள்பண வெளியீடு
Notification — அறிக்கை

O

Open inflation — வெளிப்படை வீக்கம்
Open market operations — வெளிச்சந்தை நடவடிக்கைகள்
Order — அனுப்பாணை
Out put — உற்பத்தி
Overdraft — மேல்வரை பற்று
Over valuation — மிகை மதிப்பு

P

Paper Currency Act — காகிதச் செலாவணிச் சட்டம்
Paper Standard — தாள்பணத் திட்டம்
Parent Company — மூல நிறுமம்

Pegging	—	நிலைப்படுத்துதல், மூலை அடித்தல்
Pension	—	ஓய்வூதியம்
Personal income	—	ஆள்சார் வருமானம்
Positive	—	நேர்
Premium	—	முனைமம்
Price-Specie-Flow	—	விலை–பொன் இடப்பெயர்ச்சி
Primary deposits	—	முதனிலை வைப்புகள்
Primary functions	—	முதன்மைப் பணிகள்
Production function	—	உற்பத்திச் சார்பு
Promissory note	—	கடனுறுதிச் சீட்டு
Propensity to consume	—	நுகர்வு நாட்டம்
Proportional reserve system	—	வீத அளவுக் காப்பு முறை
Prosperity	—	செழிப்பு
Psychclogical Theory	—	உளக் கோட்பாடு
Psychological factors	—	உளக் காரணிகள்
Public Debt	—	பொதுக் கடன்
Public Law, *480*	—	பொதுச் சட்டம், 480
Purchasing Power Parity Theory	—	வாங்குந்திறன் சமநிலைக் கோட்பாடு

Q

Qualitative Credit Control Method	—	கடன்தன்மைக் கட்டுப்பாட்டு முறை
Qnantitative Credit Control Method	—	கடன் அளவுக் கட்டுப்பாட்டு முறை
Quantity Theory of Money	—	பண அளவுக் கோட்பாடு
Quota	—	ஒதுக்களவு

R

Rate of interest	—	வட்டி வீதம்
Rate of return	—	விளைவு வீதம்
Rationing of credit	—	கடன் பங்கீடு
Real Income	—	மெய் வருமானம்
Recession	—	சரிவு
Recovery	—	மீட்சி
Recurring Deposit	—	தொடர் வைப்பு
Rediscount rate	—	மறு கழிவு வீதம்
Reflation	—	மீட்சிநிலை வீக்கம்
Relative prices	—	விலைகளின் தாரம்பிரியம்
Relative value	—	இணை மதிப்பு

Renaissance	—	மறுமலர்ச்சி
Reparations	—	இழப்பீடுகள்
Repressed inflation	—	ஒடுக்கப்பட்ட விக்கம்
Retail Price Index	—	சில்லறை விலைக் குறியீடு
Reverse Council Drafts	—	மறுதலை மன்ற மாற்றுச் சீட்டுகள்
Royal Commission on Indian Currency and Finance	—	இந்தியச் செலாவணி மற்றும் நிதிபற்றிய அரசுக் குழு
Royalty	—	உரிமைத் தொகை
Running inflation	—	ஓடும் வீக்கம்

S

Saving	—	சேமிப்பு
Savings Account	—	சேமிப்புக் கணக்கு
Scheduled Banks	—	அட்டவணையில் கண்ட வங்கிகள்
Securities	—	பிணையங்கள், பத்திரங்கள்
Securities Exchange Act	—	பிணையங்கள் மாற்றுச் சட்டம்
Selective Credit Control	—	தேர்வுக் கடன் கட்டுப்பாடு
Seller	—	விற்குநர்
Shareholder	—	பங்குநர்
Short-run	—	குறுங்காலம்
Silver Certificates	—	வெள்ளிச் சான்றிதழ்கள்
Silver Coin Standard	—	வெள்ளி நாணயத் திட்டம்
Simple Deposit System	—	எளிய வைப்பு முறை
Special drawing rights	—	சிறப்பு எடுப்பு உரிமைகள்
Specialisation	—	சிறப்புத் தேர்ச்சி
Speculative motive	—	ஊக இலாப நோக்கம்
Spot exchange rate	—	உடனடி நாணய மாற்று வீதம்
Socialistic economy	—	பொதுவுடைப் பொருளாதாரம்
Stabilisation	—	நிலைபேருக்கம்
Standard Money	—	திட்டப் பணம்
Standard of Deferred Payment	—	பின் செலுத்தும் திட்ட அளவை
Standard of value	—	திட்ட மதிப்பு
Stock exchange	—	பங்கு மாற்றுச் சந்தை
Store of value	—	மதிப்பின் வைப்பு
Structural balance	—	அமைப்புச் சமநிலை
Subsidiary coins	—	துணை நாணயங்கள்
Subsidiary functions	—	துணைப் பணிகள்

T

Tariff	—	காப்பு வரி
Token coin	—	அடையாளப் பணம்
Trade Cycle	—	வாணிபச் சுழல்
Transactions	—	பேரங்கள், நடவடிக்கைகள்
Transfers	—	மாற்றுகைகள்
Transitional period	—	இடப்பெயர்வு காலம்
Travellers cheque	—	பயணர் காசோலை
Treasures	—	அரும்பொருள்கள்
Treasury Bill	—	கருவூல மாற்றுச் சீட்டு
Treasury notes	—	கருவூல நோட்டுகள்
True inflation	—	மெய் வீக்கம்
Trustee	—	பொறுப்பாளர்

U

Underwriter	—	ஒப்புறுதியாளர்
Unfavourable balance of trade	—	பாதக வாணிக நிலை
Unitas	—	யூனிட்டாக்கள்
Unit of Account	—	கணக்கலகு
Unweighted Index Number	—	நிறையிடாத குறியீட்டெண்
Upswing	—	மேல் வீச்சு

V

Value of money	—	பணத்தின் மதிப்பு
Varying reserve ratio	—	காப்பு வீதத்தை மாற்றுதல்
Velocity	—	சுழல் வேகம்
Vertical axis	—	செங்குத்தச்சு
Visible items	—	காண்புறு இனங்கள்
Volume of trade	—	வாணிக அளவு
Voluntary unemployment	—	விருப்ப வேலையின்மை

W

Walking inflation	—	நடக்கும் வீக்கம்
Weighted Index Number	—	நிறையிட்ட குறியீட்டெண்
White paper	—	வெள்ளை அறிக்கை
While-sale price index	—	மொத்த விற்பனை விலை குறியீடு
World Bank	—	உலக வங்கி